
# மருதநிலா




வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் 96'

வவுனியா

# மருதநிலா

## வடக்கு - கிழக்கு மாகாண
## தமிழ் இலக்கிய விழா மலர்
## *1996*

*4 - 11 - 1996*

**வவுனியா**

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மருதநிலா |
| வெளியீடு | : | வடக்கு - கிழக்கு மாகாண<br>கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு |
| அச்செழுத்து | : | கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்... |
| வெளியிட்ட ஆண்டு | : | கார்த்திகை 1996 |
| நூல் அளவு | : | A 4 |
| அட்டைப்படம் | : | ஞானி |
| வடிவமைப்பு | : | எம். கே. எம். ஷகீப்<br>விஜய - கிருபா<br>பு. கண்ணன்<br>மொஹமட் ஆஷிப் |
| ஓவியங்கள் | : | எம். கே. எம். ஷகீப்<br>ஏ. எம். றஸ்மி<br>எஸ். சுமன்<br>ஞானி |
| பக்கங்கள் | : | 310 |
| படப்பக்கங்கள் | : | 03 |
| பயன்படுத்திய தாள் | : | 80 கிறாம் (வெள்ளை) |
| லேசர் ஒளிப்பதிவும்<br>அச்சுப்பதிவும் | : | கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட்<br>501/2 காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.<br>தொலைபேசி : 595875 |

***கிளை :***

இல : 62, பஸ் நிலைய காம்ப்லெக்ஸ்
வவுனியா.

## வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்

## மாண்புமிகு

# காமினி பொன்சேகா

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டு ஏழாவது தடவையாக நடைபெறும் மாகாண தமிழ் இலக்கிய விழாவின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

பண்பாடு என்பது மனித வாழ்வின் ஒழுக்கமைந்த சாரமாகும். இது மனிதர்களை வழிப்படுத்தும் வல்லமையைக் கொண்டுள்ளது. சக மனிதர்களை நேசிக்கவும் அவர்களுடன், பாவனையின்றி உறவாடவும் அவர்களின் உளப்பாங்கினைப் புரிந்து கொள்ளவும் இப்பண்பாடே நமக்குத் துணை புரிகின்றது. பண்பாட்டைப் பேணும், பண்பாட்டால் நெறிப்படுத்தப்படும் மனிதர்கள் ஒரு போதும் இன, மத, பிரதேச வேறுபாடுகளுடன் சிந்திப்பதில்லை. எனவே எமது பண்பாட்டு அடையாளங்களையும் அம்சங்களையும் பாதுகாத்துப் பேணுவதனூடாக எமது வருங்கால சந்ததிகளை மனித நேயமிக்கவர்களாக்கும் கடப்பாட்டை நாம் பொறுப்பேற்க, இம் மலர் வெளியீட்டு நாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

வெவ்வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளில் ஈடுபாடுடைய கலைஞர்களின் இவ்வாறான ஒன்று கூடல் தொடர்ச்சியாக இடம் பெறுவது ஆழ்ந்து வரவேற்கத்தக்கது. இம்மாகாண இலக்கிய விழா அடுத்து வரும் ஆண்டுகளிலும் இது போன்று சிறப்பாக அமைய வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர்

கௌரவ

# அல்ஹாஜ். எஸ். எஸ். எம். அபூபக்கர்

## விஞ்ஞான, தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி பிரதி அமைச்சர்

## வாழ்த்துச் செய்தி

*வடக்கு கிழக்கு மாகாண மக்கள் மிகுந்த நெருக்கடி மிக்க வாழ்க்கையை எதிர்நோக்கி அமைதி தேடி ஏங்கும் வேளையில் இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இலக்கிய விழா வெறும் பொழுது போக்கு களியாட்ட விழாவாக அமையாது அமைதி தேடி ஏங்கும் வடக்கு கிழக்கு வாழ் சகல மக்களிடையேயும் சமத்துவமிக்க, சமாதான வாழ்வு மலர வழிகாட்டும் அறிவியல் ரீதியான இலக்கிய விழாவாக நடைபெற வேண்டும் என்னும் எனது எதிர்பார்ப்புடன் இலக்கிய விழா வெற்றிகரமாக நடைபெற எனது நல்வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.*

## வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்

## கௌரவ

# த. சித்தார்த்தன்

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாடு விளையாட்டுத்துறை அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் ஐந்தாவது தமிழ் இலக்கிய விழா வன்னி மாவட்டத்தில் இவ்வாண்டு நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கலை, இலக்கியம் சமுதாயத்தை பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி. புராதன இலக்கியங்கள் பாரம்பரியத்தை எமக்கு கற்பிக்கின்றன. கலை, இலக்கியம் சமுதாயத்திற்காக என்கிறபோது அவை சாகாவரம் பெறுகின்றன. இக் கலை, இலக்கியமானது சமுதாய உணர்வுடன் படைக்கப்பட்டு சமுதாய முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாக பயன்படும்போது உயிர்ப்புடையதாகின்றது. சமகால பிரச்சனைகளை மையமாக வைத்து படைக்கப்படும் ஆக்கங்கள் வரலாற்றுச் சான்றுகளாக அமைவ தோடு, சமூக முரண்பாடுகளை பல்வேறு கோணங்களில் நின்று ஆய்வதற்கும் உதவுகின்றன. இன்றைய நெருக்கடிமிக்க சூழ்நிலையிலும் தங்களை கலை, இலக்கியத் துறையில் ஈடுபடுத்தி அதன் வளர்ச்சிக்காக பங்காற்றிவரும் கலை, இலக்கிய கர்த்தாக்கள் கௌரவிக்கப்படவும் ஊக்குவிக்கப்படவும் வேண்டியவர்கள்.

இம்மண்ணின், எமது மக்களின் கலை இலக்கியங்களைப் பேணவும், புதியனவற்றை உருவாக்கவும், வளர்க்கவும் இதுபோன்ற விழாக்கள் உறுதுணையாயிருக்கின்றன. அந்த வகையில் இவ்விழாவின் நோக்கங்கள் வெற்றியாயமைய எனது உளப்பூர்வமான வாழ்த்துக்கள்.

## வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்

## கௌரவ

# பிரேமரத்ன சுமதிபால

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நடாத்தப்படவுள்ள இலக்கிய விழாவுக்கு ஆசிச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தகைய இலக்கிய விழாக்கள் மனித உளவளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் சிறந்த பங்களிப்பை நல்குகின்றன. மனச் சஞ்சலத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண சகல இன மக்களின் உள்ளங்களைக் கணப்பொழுதேனும் பூரிப்படையச் செய்யவும், இலைமறைகாயாக இருக்கும் அவர்களது ஆக்கங்களை வெளிக்கொணரச் செய்யவும் இது ஒரு நல்ல வாய்ப்பாகும். யுத்த சூழலில் உருவாக்கப்படும் படைப்புக்கள், வருங்காலத் தலைமுறையினருக்கு மிகவும் பயனளிப்பதாக அமையும். அத்தோடு வரலாற்றுடன் தொடர்புடைய முக்கிய சம்பவங்களை நிகழ்காலத்தில் இலக்கியப் படைப்புக்களாக வெளியிடுவது இன்றைய இலக்கிய கர்த்தாக்களின் பொறுப்பாகும். மேலும், சமகாலத்தேவையான சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட படைப்புக்கள் மனித சமுதாயத்திற்கு விலைமதிப்பற்ற பங்களிப்பை ஆற்றுகின்றன. எனவே, வடக்கு கிழக்கு மாகாண சபை இவ்வேளையில் இலக்கிய வளர்ச்சிக்குக் காட்டும் ஆர்வம் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இவ் இலக்கிய விழாவை ஒழுங்கு செய்த விழாக்குழுவுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ்விழா சிறப்பாக அமைய வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

## வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்

கௌரவ

# திருமதி. இராசமனோகரி புலந்திரன்

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

*வடக்கென்ன! கிழக்கென்ன! தாயுள்ளம் வேதனையில் வதங்கிய வேளைகளிலும், இலக்கியச் சுவைபருக ஒருங்கிணைந்த இவ்வேளையில், கசியும் குருதியிலும் தமிழ் பண்பு பிறக்குதடா!!*

*இலக்கியச் சோலையாய் அமைய வன்னிமண் பெற்ற பாக்கியமே பெரும் சொர்க்கமடா. வடக்குக் கிழக்கு மாகாண மக்களின் இலக்கிய தாகமதின் பொக்கிஷங்கள், அணிகலனாய் வன்னி மண்ணில் மலரட்டும்.*

*ஆசிகூற வந்த இவ்வேளையில் தென்றலில் தவழ்ந்து வரும் தனி மனித பண்பினை பக்குவமாய் வருட்டியே தமிழ் தாயில் கசியும் குருதியை பூவையரும், இளஞ் சிங்கங்களான இலக்கிய கர்த்தாக்களும் துணிந்து நின்று தூசாகத் துடைக்கட்டும் என்று கூறி!*

*மலரட்டும் தாய் உள்ளம்!*

*சிறக்கட்டும் தமிழ் அன்னை!*

*வளரட்டும் நல் இலக்கியப்பண்பு!!*

*என அன்பு நல் ஆசிகளை வழங்குகிறேன்.*

## வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்

## கௌரவ

# ச. சண்முகநாதன்

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

*வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் வன்னி வள நாட்டின் வவுனியா நகரில் வடக்கு-கிழக்கு மாகாண சாகித்திய விழா நடைபெறுவதனையிட்டு பெருமிதமடைகி றேன்.*

*இவ்வருடத்தின் நடுப்பகுதியில் சிறப்பாக நடந்தேறிய மாகாண தமிழ் மொழி தின விழா, மாகாண விளையாட்டு விழாவினைத் தொடர்ந்து மாகாண இலக்கிய விழா நடாத்தப்படுவது பின் தங்கிய பிரதேசமான வன்னிப் பிரதேசத்தில் சிதைந்து சீரழிந்து போயுள்ள கலை கலாசார விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாக அமைகிறது.*

*எமது தமிழ் பேசும் மக்களின் கலைகலாசார விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்கும், பாதுகாத்துக் கொள்வதற்கும் இதுபோன்ற விழாக்கள் துணைபுரிகின்றன.*

*இன்றைய யுத்த சூழ்நிலையில் அகதிக் கலாசாரம் உருவாகி எமது பாரம்பரிய கலை கலாசாரம் அழிந்து போகின்ற அபாயகரமான நிலை தோன்றியுள்ளது. இதனை மீட்டெடுத்து புதிய படிநிலைக்கு கொண்டுபோக வேண்டிய பொறுப்பு இன்றைய அறிஞர்கள், கலைஞர்கள், மற்றும் மாகாண அமைச்சினதும் முன்னால் உள்ளது. இவ் அமைச்சிகனளால் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் முழு அளவிலான ஆதரவினை வழங்குவதுடன், இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்

கௌரவ

# திரு. வை. பாலச்சந்திரன்

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வடகிழக்கு மாகாண இலக்கிய விழா இம்முறை வன்னி நகரில் கொண்டாடப்படு வதையிட்டும் இம்மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டும் பெருமகிழ்ச்சி அடைகின் றேன். பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் வன்னி வாழ் தமிழ் மக்கள் இலக்கியத் துறைக்கு வழங்கிவரும் பங்களிப்புக்கு மகுடம் வைத்தாற்போல் இவ்விலக்கிய விழா அமைகின்றது. இக்காலகட்டத்தில் எமது கலை கலாசாரங்கள், இலக்கிய வரலாறுகள் வளர்வதற்கும் உலகறியச் செய்தற்கும் இவ்வாறான இலக்கிய விழாக்கள் உறுதுணையாக அமையுமென நம்புகிறேன்.

இம்முறை இவ்விழாவை வன்னி நகரில் கொண்டாடுவதற்கு உறுதுணையாக நின்ற வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சைச் சார்ந்த அனைவருக்கும், மாகாண சபையில் ஏனைய உயர் வாசிகளுக்கும் இவ்விழாக் குழுவினருக்கும் எனது சார்பாகவும், வன்னிமக்கள் சார்பாகவும் நன்றி கூறுவதோடு இவ்விழா சிறப்புற அமையவும் இம்மலர் சிறப்புறவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## வடக்கு - கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர்,

# திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஐந்தாவது இலக்கிய விழா வவுனியாவில் நடைபெறுவதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்; விழா சிறப்புற அமைவதற்கு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதல் நான்கு இலக்கிய விழாக்களும் வடக்கு கிழக்கு மாகாணத்தின் கலை இலக்கியப் பாரம்பரியங்களைச் செழுமைப்படுத்தும் நோக்குடன் ஒழுங்கமைக்கப்பட்டவையாகும். வவுனியாவில் நடைபெறும் ஐந்தாவது இலக்கிய விழா இந்நோக்கங்களுக்கு அப்பால் தமிழ்மொழியை நிருவாக மொழியாக பயன்படுத்துவது பற்றிய கருதுகோள்களையும் ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்திருப்பது கண்டு உண்மையில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதுவரை காலமும் இவ்வாறான ஒரு முயற்சி மேற்கொள்ளப்படாதிருந்தமை துரதிர்ஷ்டவசமானதாகும். எதிர்காலத்தில் நிருவாக மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளைக் களைவதற்கு இவ்விழா கால்கோளாக அமையுமென்பது எனது நம்பிக்கையாகும்.

வடக்கு கிழக்கு மாகாண எழுத்தாளர்கள் இவ்விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன் அவர்களால் எழுதப் பெற்ற சிறுகதை, நாவல், கவிதை நூல்களை அச்சிட்டு வெளியிட்டு வைப்பது இவ்விழாவின் இன்னோர் சிறப்பம்சமாகும். தமது ஆக்கங்களை வெளிக்கொணர முடியாது தவிக்கும் எழுத்தாளர்களுக்கு இம்முயற்சி நம்பிக்கையூட்டிப் படைப்பிலக்கிய முயற்சியில் புதியதோர் உத்வேகத்தை ஊட்டும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

மலரப் போகும் இருபத்தோராம் நூற்றாண்டு அரசியல், சமூக, பொருளாதார, அறிவியல், விஞ்ஞானத் துறைகளில் புதிய பரிமாணங்களை எதிர்நோக்கியுள்ளது.

இச்சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையிலே வடக்கு கிழக்கு மாகாண மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும். மொழி, கலை இலக்கிய விழுமியங்களையும் எமது இலக்குகளையும் மேன்மையுறச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப்பணிகளை வினைத்திறனுடன் ஆற்றுவதற்கு இத்தகைய விழாக்கள் உந்துசக்தியாக விளங்கும் என எதிர்பார்க்கின்றேன்.

இலக்கிய விழா இனிது நிறைவெய்வதற்கும் சிறப்பு மலர் காத்திரமானதாக வெளிவருவதற்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர்

# சுந்தரம் டிவகலாலா

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

எமது அமைச்சினால் வருடாந்தம் எடுக்கப்பட்டு வரும் தமிழ் இலக்கிய விழா இவ்வருடம் வவுனியா மாவட்டத்தில் நவம்பர் மாதம் 2ம் திகதியில் இருந்து 4ம் திகதி வரை இடம் பெறவிருக்கின்றது.

இவ்விழாவினையொட்டி வெளியிட இருக்கும் மலருக்கு இச் செய்தியை அனுப்புவதில் பேருவகையடைகின்றேன். எமது மொழி மிகப் பழமை வாய்ந்த செழுமையுடைய மொழியாகும். இதனை இனிமையான மொழி என்றும், அமிழ்தென்றும், எமது மூச்சு என்றும் பொதுவாக கூறி வருகின்றோம். இவ்வாறாக இம்மொழியைப் பற்றி நாம் கூறுவதற்கும் பெருமைப்படுவதற்கும் வித்திட்டவர்கள் இம்மொழியினை வலுப்படுத்திய எமது மூதாதையோர் ஆவர். அவர்கள் தாம் வாழ்ந்த காலத்திற்குரிய மொழியாக எமது மொழியை வளர்த்துச் சென்றுள்ளனர்.

அவர்களுக்கு பின்னர் வேற்று மொழி பேசுபவர்களும் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் எம்மொழிக்கு செய்த அரும் சேவைகள் எம்மால் போற்றப்பட வேண்டியவை. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக உலகம் சுருங்கி வருகின்றது என கூறுவர். அது மட்டுமன்றி பல்வேறு புதிய கருத்துக்கள், சிந்தனைகள் வளர்ந்து வருகின்றன. மக்களுடைய நாளாந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் நவீன பொருட்கள் பெரும் செல்வாக்கினை செலுத்துகின்றன. ஆராய்ச்சிகளின் விளைவாக பல்வேறு புதிய விடயங்கள் மக்களுக்கு அறிமுகமாகின்றன. அதே போன்று விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பெரும்பாலான மக்கள் பொதுநல நோக்கின்றியும், இவ் உலகம் எதிர்கால சந்ததியினருக்கு உரித்துடையது என்ற கருத்தின்றியும் செயல்படுவதால் பல்வேறு புதிய பிரச்சனைகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது.

சுருங்கக் கூறின் உலகம் வளர்ச்சியின் ஊடாக மாற்றமடைந்து வருகின்ற அதே சமயம் பல்வேறு புதிய பிரச்சனைகளுக்கும் ஆளாகியுள்ளது. இதனால் மக்களது வாழ்க்கையில் பல்வகைத்தாக்கங்கள் ஏற்படுகின்றது. புதிய சூழ்நிலை உருவாகின்றது.

எமது மொழி, இன சூழலுக்கு ஏற்ற வகையிலே வளர்ச்சியடைய வேண்டியது அவசியமாகின்றது. ஆகவே எமது மொழியின் செழுமையைப் பற்றி பெருமைப்படும் நாம் அம்மொழியினைத் தற்காலத் தேவைக்கு ஏற்ற வளங்கொண்ட ஒரு மொழியாக வளர்க்க வேண்டிய கடமைப்பாட்டினை கொண்டவர்கள் ஆகின்றோம். இக் கடமையில் நாம் என்ன செய்யலாம் என்ற அடிப்படையிலேயே இவ்விழாவினை ஒட்டிய ஆய்வரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அந்த ஆய்வரங்கின் கருப்பொருளாக தமிழ் மொழி பிரயோகமும் கணக்கெடுப்பும் பிரச்சனைகளும் அமைந்துள்ளன.

இந்த விழாவின் மற்றுமோர் புதிய அங்கமாக வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மூதாதையோர் உபயோகித்த வாழ்க்கைப் பொருட்களின் கண்காட்சியாகும்.

இக் கண்காட்சியின் ஊடாக எமது மூதாதையர்கள் இருந்த சிறப்பு நிலையை எமது புதிய தலைமுறையினருக்கு தெரியப்படுத்தலாம் எனக் கருதுகின்றோம். மொத்தத்தில் இவ்வருடம் எம்மால் வவுனியா மாவட்டத்தில் எடுக்கப்படும் தமிழ் இலக்கிய விழா ஒரு நோக்கம் கொண்ட விழாவாக அமைந்துள்ளது என்று கூறலாம். இவ்விழாவில் பங்காளர்களாகவும் பார்வையாளர்களாகவும் பங்கு கொள்வோர் இவ்விழாவின் பின்னர் எம்மோடும் ஒத்துழைத்து எமது நோக்கினை அடைவதற்கு ஆலோசனைகளும் உதவிகளும் வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் எமது அமைச்சினால் மேற்கொள்ளப்படும் இவ்விழாவினை வவுனியா மாவட்டத்தில் நடாத்துவதற்கு பேருதவி செய்யமுன்வந்திருக்கும் சகலருக்கும் நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

## வவுனியா நகரசபைத் தலைவர்

# திரு. ஜி. ரி. லிங்கநாதன்

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

எமது முன்னோர்கள் கட்டிக்காத்த வன்னி மாநிலத்தின் வளர்ச்சிக்கு வழியமைக்கும் எந்தவொரு நிகழ்வும் நிலைபெறக்கூடியதே. அந்த வகையில் வட கிழக்கு மாகாண இலக்கியவிழா வவுனியா நகரில் நடைபெறுவது பெருமைக்குரியதே.

"கண்ணுடையர் என்போர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்று வள்ளுவரே கற்றவர்களின் உயர்வைப் புகழ்ந்து கூறியுள்ளார். கல்விமான்கள் பலர் கலந்து கொள்ளும் இவ் இலக்கிய விழா சிறப்புற நடைபெற வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திகட்டாத மொழியான தமிழ் மொழியின் தனிச்சிறப்பே இலக்கியம். அதை வளர்க்கும் முகமாக இலக்கிய விழா போன்ற பலவிழாக்கள் நடைபெற வேண்டியது மிக அவசியம். நவீன முறைகளில், உலகில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டு எமது பாரம்பரிய பண்பாடுகள் மருவிவரும் இக்கால கட்டத்தில் இவ் விழா போன்ற நிகழ்ச்சிகளால் தமிழின் பெருமை தட்டியெழுப்பப்பட்டு வளரும் சமுதாயமும் அறியக் கூடியதாக அமைகின்றது.

வவுனியாவில் இலக்கிய விழா நடைபெற வழிவகுத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இதையிட்டு நிச்சயம் வன்னி மாதாவும் மனம் குளிர்வாள். இவ்விழா சிறப்புறவும், விழாவையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலர் சிறப்புறவும் மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

## வவுனியா அரசாங்க அதிபர்

# திரு. க. கணேஷ்

## அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வடகிழக்கு மாகாணசபை இதுவரை நான்கு இலக்கிய விழாக்களைச் சிறப்பாக நடத்தியுள்ளது. ஐந்தாவது இலக்கிய விழா வன்னி மாவட்டத்தின் தலைநகராம் வவுனியாவில் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இவ்விழா இனிதே நடந்தேறுவதற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடபகுதித் தமிழர்களின் பிரதான தளமாக வவுனியா மாவட்டம் இன்று மாற்றம் பெற்றுள்ளது. இடம் பெயர்ந்த தமிழர்கள் இங்கு கணிசமானளவு வாழ்ந்து வருகின்றனர். இந்தவகையில் தமிழ் இலக்கிய விழாவை இங்கு நடத்துவது மேலும் ஒருபடி சிறப்பைக் கொடுக்கிறது என்றால் மிகையாகாது.

எமது பிரதேசமக்கள் சொல்லண்ணா துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உளரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையினால் எமது கலை, கலாசாரம், மற்றும் பண்பாட்டம்சங்கள் சீரழிந்து சிதைந்து போய் விடக்கூடிய அபாயகரமான நிலை தோற்றம் பெற்றுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் பண்பாட்டைப் பேணி வெளிக்காட்டும் இலக்கிய விழாக்கள் நடை பெறுவது வரவேற்கக் கூடியது. இவ்விழாவினால் தமிழ் மொழியும், தமிழர் பண்பாடும் புதிய வளர்ச்சியினையும் புத்துணர்வினையும் பெற்றுக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் பேசும் மக்களே, தமது தாய் மொழியைப் பயன்படுத்த பின் நிற்கின்றனர். இந்த நாட்டின் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தமிழ் மொழியை நிர்வாக ரீதியாக பிரயோகிப்பதில் ஏற்பட்டுள்ள பின்னடைவிற்கு மேற்படி நிலையும் ஒரு காரணமாகும். தமிழ் மொழியின் பிரயோகத்திற்கு முதன்மையளிப்பதாக இவ்விழா அமைந்துள்ளமை மிகச்சிறப்பானதொரு அம்சமாகும். ஆய்வரங்கின் முக்கிய தொனிப்பொருளாக தமிழ் நிருவாக மொழியாக பாவிப்பதற்கு உரிய இடையூறுகளை அடையாளம் காண விளைவது மெச்சக் கூடியதாகும்.

மேலும் இவ்விலக்கிய விழாவின் சிறப்பம்சங்களில் ஒன்று அரும் பொருட் கண்காட்சி. பழம் பெரும் இலக்கியங்களினூடாக தமிழர் பண்பாட்டம்சங்களை வெளி உலகிற்கு எடுத்துக்கூறுவதாக இக்கண்காட்சி அமையும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையில் சகோதர மொழி எழுத்தாளர்களுக்கும், எழுத்தாக்கங்களுக்கும் கொடுக்கப்படும், ஒத்துழைப்பும், ஊக்கமும் தமிழ் மொழிசார்ந்த படைப்பிலக்கிய படைப்பாளிகளுக்கு கொடுக்கப்படுவதில்லை அல்லது கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்றுவதாக வவுனியா இலக்கிய விழா அமைய வேண்டும். அத்தோடு தளிர் விட்டெழும் எழுத்தாளர்களுக்கு ஊக்கத்தையும் உத்வேகத்தையும் கொடுப்பதோடு எங்கள் மத்தியில் மறைந்திருக்கும் இலக்கிய கர்த்தாக்களை ஊக்குவித்து வெளிக்கொணர வேண்டும். அதுமட்டுமல்ல தமிழ்மொழியும், பண்பாடும் பேணப்பட்டு பாதுகாக்கப்படவும் இவ்விழா வழியிட்டுக் கொடுக்கும் என நம்புகிறேன். சுருங்கக்கூறின், படைப்பிலக்கியத்துறையில் ஒரு திருப்புமுனையை இந்த கலை இலக்கிய விழா ஏற்படுத்தி, புதிய பரிமாணத்தை தொடக்கி வைக்க உதவும் என நான் முழுமையாக நம்புகிறேன்.

எதிர்வரும் நூற்றாண்டில் ஏற்படப்போகும் சமூகம், பொருளாதாரம், அரசியல், கலாசாரம், விஞ்ஞானம் போன்ற துறைகள் தொடர்பான சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் படைப்பிலக்கியங்கள் ஆக்கம் பெறவேண்டும். இந்த சவால்களுக்கு இலக்கிய கர்த்தாக்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வதற்கு இவ்விழா உதவும் என்பதில் சந்தேகமில்லை.

கலை இலக்கிய விழா, சகல பொலிவுடன் இனிது நிறைவு பெற்று இவ் விழாவின் நிகழ்வுகள் எல்லோர் மனதிலும் நின்று நிழலாட வேண்டும் என்றும் உயர்ந்த தரத்தில் சிறப்புமலர் மலர்வதற்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

# மாகாண மட்ட தமிழ் இலக்கிய விழா ஏற்பாட்டுக் குழு

**விழாக் குழுத் தலைவர்**

திரு. சுந்தரம் டிவகலாலா

**விழாக்குழுச் செயலாளர்**

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்

**விழாக்குழுப் பொருளாளர்**

திரு. எஸ். கிருஷ்ணானந்தன்

**உறுப்பினர்கள்**

செல்வி.ரி. பெரியதம்பி - மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

திரு.எஸ். நவரட்ணராஜா - மேலதிகக் கல்விப்பணிப்பாளர்.

திரு. க. கந்தசாமி - திட்டமிடல் பணிப்பாளர், கல்வி அமைச்சு.

திரு. எஸ். வரதசீலன் - உதவிப் பணிப்பாளர், கல்வி அமைச்சு.

ஜனாப் எம்.பி. எச் முகமட் - கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு.

ஜனாப் மு.இ.அ. ஜபார் - திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்.

திரு. எஸ். கமலநாதன் - கல்விப்பணிப்பாளர், கல்வி அமைச்சு.

திரு. பி. சுந்தரலிங்கம் - திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்.

திருமதி. எஸ். சூரியமூர்த்தி - உதவிக் கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி.

திருமதி. ஆர். பிள்ளை - உதவிச் செயலாளர், கல்வி அமைச்சு.

திரு. ம. அ. பிரான்சிஸ் - பாடசாலை வேலைகள் பணிப்பாளர்.

திரு. ப. பேராசிரியர் - பொறியியலாளர், கல்வி அமைச்சு.

திரு. க. நடராசா - நிர்வாக உத்தியோகஸ்தர்.

திரு. பி. திருமுகம் - உதவிப்பணிப்பாளர், உடற்கல்வி.

திரு. ச. அருளானந்தம் - பிரதிக்கல்விப்பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம்.

திரு. பெ. சித்திரவேல் - பிரதிக்கல்விப்பணிப்பாளர், கல்வித் திணைக்களம், திருகோணமலை.

ஜனாப் ஐ. எம். ஸ்சடீன் - வலய கல்விப் பணிப்பாளர், கல்முனை.

திரு. எஸ்.எஸ். மனோகரன் - மாகாணக் கல்விப்பணிப்பாளர், கல்முனை.

திரு. எ.ரி. சந்திரதாச - மாகாணக் கல்விப்பணிப்பாளர், மட்டக்களப்பு.

திரு. துரை தியாகராசா - பிரதேசக் கல்விப்பணிப்பாளர், வவுனியா

ஜனாப்.எ.சி. அப்துல்ஹக் - பிரதேசக் கல்விப்பணிப்பாளர், மன்னார்.

# தமிழ் இலக்கிய விழா - 1996

### ஆலோசனைக்குழு

கௌரவ ச.சண்முகநாதன்
வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்
திரு. மிகு. ஜீ.ரீ. லிங்கநாதன்
வவுனியா நகரபிதா

### செயற்குழு

தலைவர் : திரு.க.கணேஷ்
அரச அதிபர், வவுனியா

### இணைப்பாளர்கள்

திரு.சி. இரகுநாதபிள்ளை
மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா.
திருமதி.எம். அற்புதராசா
பிரதேச செயலாளர், வவுனியா.
திருமதி. செ. தி.ஜெ. தேவேந்திரன்
கலாசார உத்தியோகஸ்தர்

### அரும் பொருட்கண்காட்சிக்குழு

திருமதி. எம். அற்புதராசா
பிரதேச செயலாளர், வவுனியா.
திரு.க. ஐயம்பிள்ளை
பிரதேச செயலாளர், நெடுங்கேணி.
செல்வி.த.துரைச்சாமி
பிரதேச செயலாளர், வெங்கலச் செட்டிகுளம்.

### நிதிக்குழு

ஜனாப். பி. எஸ். அப்துல்லா
தலைவர்.வர்த்தக சங்கம், வவுனியா.
திரு. நா. சேனாதிராஜா
தலைவர், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
திரு.சி.ஏ. இராமசுவாமி
தலைவர், இந்துமா மன்றம்
செல்வி.த. துரைச்சாமி
பிரதேச செயலாளர், வெங்கலச் செட்டிகுளம்
திரு.எஸ். தயாகுணரட்ணசிங்கம்
திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்

### தங்குமிட ஒழுங்கமைப்புக் குழு

திரு. எஸ். சத்தியசீலன்
உதவிப் பிரதேச செயலாளர், வவுனியா.
திரு. எஸ். சிவகுமார்
அதிபர், வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
அருட்சகோதரி. எம். எம். மருடுதீன்
அதிபர், வ/ இறம்பைக்குளம் மத்திய மகா வித்தியாலயம்
திருமதி. நா. மாணிக்கவாசகம்
அதிபர், சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம்.
திரு.சி. வையாபுரிநாதன்
அதிபர், இலங்கைத்திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை.

### உபசரணைக்குழு

திரு. ஆர்.கே. பாலசுப்பிரமணியம்
பொறியியலாளர், தொலைத்தொடர்பு

திரு.எஸ். பார்த்தீபன்
திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், வெங்கலச்செட்டிகுளம்.
திரு.எஸ். இராமச்சந்திரன்
பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை
திருமதி.தே. பாஜிபா
சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**விளம்பரக் குழு**

திரு.எஸ். மூக்கையா
பணிப்பாளர், இணைக்கப்பட்ட பல்கலைக் கழகம், வவுனியா.
திரு.பி. மாணிக்கவாசகம்
பத்திரிகையாளர்
திரு. த. விவேகராசா
பத்திரிகையாளர்
திரு.எஸ். சந்திரகுலசிங்கம்
உபதலைவர், நகரசபை, வவுனியா.
திரு.எஸ். உதயகுமார்
தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகரசபை

**நகர மண்டப திறந்த வெளி அரங்கு ஒழுங்கு அமைப்புக்குழு**

திரு.ஜி.ரி. லிங்கநாதன்
நகர பிதா, வவுனியா.
நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்

**போக்குவரத்துக் குழு**

திரு.மு. பராபரசிங்கம்
முகாமைத்துவப் பணிப்பாளர்.
திரு.பே. பத்மநாதன்
திட்ட உதவிப் பணிப்பாளர்.
திரு. வி. குமாரசிங்கம்
மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**ஆரம்ப நிகழ்ச்சிப் பொறுப்புக்குழு**

திரு. என். பேரானந்தம்
உதவிப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவை மன்றம்.
திரு.ஏ. பொன்னையா
கோட்டக்கல்வி அதிகாரி
திரு.ச. பரமகுலசிங்கம்
திட்டப்பணிப்பாளர்.
திரு. என். இரவீந்திரன்
விரிவுரையாளர், கல்வியியல் கல்லூரி.

**நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு குழு**

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்
உதவிப்பணிப்பாளர், பண்பாட்டு அலுவல்கள்.
திரு. எஸ். இராமமூர்த்தி
திட்ட உதவிப் பணிப்பாளர்.

**ஆய்வரங்கு ஒழுங்கமைப்புக் குழு**

திரு.செ. அழகரெத்தினம்
பீடாதிபதி, கல்வியியல் கல்லூரி, வவுனியா.
திரு. துரை தியாகராசா
பிரதேச கல்விப் பணிப்பாளர், வவுனியா

## மலர்க்குழு

தமிழ்மணி அகளங்கன்

பி. மாணிக்கவாசகம்

ஓ. கே. குணநாதன்

எஸ். சுமந்திரன்

எஸ். இராமமூர்த்தி

ஆக்கங்களுக்குப் பொறுப்பு ஆக்கியோரே

**_இலக்கிய விழா 1996 - வவுனியா_**
**(1994ம் ஆண்டுக்குரிய பரிசுகள்)**

| | | |
|---|---|---|
| நாவல் | : | **'மரக்கொக்கு'**<br>திரு. தெணியான் |
| சிறுகதை | : | **'காலச்சாரளம்'**<br>திரு. இராஜசிறீகாந்தன் |
| கவிதை | : | பரிசு இல்லை |
| நாடகம் | : | 1) **இலக்கிய நாடகங்கள்**<br>நா. தர்மராஜா (அகளங்கன்)<br>2) **காதலே நீ வாழி**<br>திரு. கே. கே. மதிவதனன் |
| சிறுவர் இலக்கியம் | : | **'அன்பு தந்த பரிசு'**<br>மாஸ்டர் சிவலிங்கம் |
| சமய இலக்கியம் | : | **'சைவ சித்தாந்த தெளிவு'**<br>கலாநிதி நா. ஞானகுமாரன் |
| ஆய்வு இலக்கியம் | : | **'இந்துநாகரீகத்தில் கலை'**<br>கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை |
| பல்துறை | : | **'தீவகம் வளமும் வாழ்வும்'**<br>கலாநிதி கா. குகபாலன் |

## இலக்கிய விழா 1995 - மட்டக்களப்பு

இவ்விழாவில் 1993ம் ஆண்டுகாலப்பகுதியில் வெளிவந்த இலக்கியங்களுக்கான பரிசு வழங்கப்பட்டது. மட்டக்களப்பில் இவ்விழா நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| நாவல் | : | **'பஞ்சகோலங்கள்'**<br>திரு.கே. டானியல் |
| சிறுகதை | : | **'யாழ்ப்பாணத்து ராத்திரிகள்'**<br>திரு.க.குணராசா (செங்கையாழியான்) |
| கவிதை | : | **'நாகரிகத்தின் நிறம்'**<br>திரு. க. சண்முகலிங்கன் |
| நாடகம் | : | **'பாலசுகுமார் நாடகங்கள்'**<br>திரு. பாலசுகுமார் |
| சமய இலக்கியம் | : | **'கோணேசர் கல்வெட்டு'**<br>பண்டிதர் இ. வடிவேல் |
| சிறுவர் இலக்கியம் | : | **'அணில்வால்'**<br>கவிமணி திமிலைத்துமிலன் |
| ஆய்வு இலக்கியம் | : | **'யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு'**<br>கலாநிதி சி.க. சிற்றம்பலம் |

## இலக்கிய விழா 1991 - திருகோணமலை

இவ்விழாவில் 1988 - 1989 காலப்பகுதிகளில் வெளிவந்த வடக்கு கிழக்கு எழுத்தாளர்களது இலக்கியங்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 01) | நாடகம் | : | **'முதலாம் பிள்ளை'**<br>அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை |
| 02) | சிறுகதை | : | **'உள்மன யாத்திரை'**<br>உமா வரதராஜன் |
| 03) | கவிதை மரபு | : | **'திருக்கேதீச்சர மான்மியம்'**<br>பண்டிதர் மு. கந்தையா |
| 04) | புதுக்கவிதை | : | **'எட்டாவது நரகம்'**<br>ஜனாப் ஏ.எம்.எம். அதிக் (சோலைக்கிளி) |
| 05) | ஆக்க இலக்கியம் | : | **'இலங்கையிற் தொல்லியல் ஆய்வும் திராவிட கலாசாரமும்'**<br>திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம். |

***1995ம் ஆண்டு வெளியான இலக்கிய நூல்களுக்கான பரிசு பெற்றோர்கள்.***

| | | | |
|---|---|---|---|
| 1) | சிறுகதை இலக்கியம் | : | **"இரவுநேரப் பயணிகள்"**<br>திரு. க. குணராசா செங்கை ஆழியான் |
| 2) | கவிதை இலக்கியம் | : | **"முற்றுப்பெறாத காவியம்"**<br>கவிஞர் எஸ். கோபாலசிங்கம் |
| 3) | சமய இலக்கியம் | : | **"சிவயோகசுவாமிகள் ஏற்றிய ஞானவிளக்கு"**<br>வித்துவான் க. ந. வேலன் |
| 4) | சிறுவர் இலக்கியம் | : | **"சுதந்திரம் - வீர ஆனந்தன்"**<br>திரு. ஒ. கே. குணநாதன் |
| 5) | ஆய்வு இலக்கியம் | : | **"மாகோன் வரலாறு"**<br>செல்வி. தங்கேஸ்வரி கதிராமன் |
| 6) | பல்துறை இலக்கியம் | : | **"கிராமத்து இதயம்"**<br>ஜனாப் எஸ். எச். எம். ஜமீல்<br>**"இலக்கிய நினைவுகள்"**<br>தமிழ் ஒளி - வ. அ. இராஜரட்ணம்<br>**"முகாமைத்துவத்துக்கோர் அறிமுகம்"**<br>திரு. க. ரகுராகவன்<br>**"மனித விழுமியங்கள்"**<br>திரு. கு. சோமசுந்தரம் |

## *இலக்கிய விழா 1994 – கல்முனை*

இவ்விழாவில் 1992ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வெளிவந்த இலக்கியங்களுக்கான பரிசு கல்முனையில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

நாவல் : **'பாதை மாறிய பயணங்கள்'**
மண்டூர் அசோகா

சிறுகதை : **'உலா'**
திரு. க. சட்டநாதன்

கவிதை : **'கீறல்கள்'**
கவிஞர் தாமரைத்தீவான்

சிறுவர் இலக்கியம் : **'சண்டியன் ஓநாய்'**
திரு. வ. இராசையா

சமய இலக்கியம் : **'மதீனாவின் மாண்புகள்'**
மௌலவி. எஸ். எச். ஆதம்பாவா

ஆய்வு இலக்கியம் : **'பழையதும் புதியதும்'**
கலாநிதி. சி. மௌனகுரு

**இலக்கிய விழா 1992 - திருகோணமலை**

இவ்விழாவில் 1990- 1991ம் ஆண்டு காலப்பகுதிகளில் வெளிவந்த இலக்கியங்களுக்கான பரிசு வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1) | சிறுகதை | : | **'கிராமத்து மண்கள் சிவக்கின்றன'**<br>சித்திரா நாகநாதன் |
| 2) | கவிதை | : | **'கவிதைக் கனவுகள்'**<br>கவிஞர் பாரதிபாலன் (க.ஜெயக்குமார்) |
| 3) | சிறுவர் இலக்கியம் | : | **'புள்ளிப் புள்ளி மானே'**<br>கவிஞர் திமிலை மகாலிங்கம் |
| 4) | சமய இலக்கியம் | : | **'யோகர் சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்'**<br>சிவதொண்டர் |
| 5) | நாவல் இலக்கியம் | : | **'குவேனி' வரலாற்று நவீனம்**<br>செங்கையாழியான் (க.குணராசா) |
| 6) | ஆய்வு இலக்கியம் | : | **'சைவ சித்தாந்தமும் விஞ்ஞான உலக்மும்'**<br>தனபாக்கியம் குணபாலசிங்கம். |

# நுழைவாயிலில்,.....

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஐந்தாவது இலக்கிய விழாவிற்கான மலர் உங்கள் கைகளில் மணம் பரப்பிக் கொண்டிருப்பதை நினைத்து மனம் மிக மகிழ்கிறோம்.

இவ்விழாவில் வெளியிடப்பெற்ற மருதநிலா தண் ணொளி பரப்பி உள்ளொளி பெருக்கித் தமிழிலக்கிய வானில் என்றும் நிலைத்திருக்குமென்று உறுதியாக நம்புகிறோம்.

இதற்கு முன் வடக்கு-கிழக்கு மாகாண இலக்கிய விழாக்களில் இத்தகையதொரு உயர்ந்த சிறந்த மலர் வெளி யிடப்படவில்லை.

இம்முறை வவுனியாவில் இவ்விழா மிகச் சிறப்புடன் நடைபெறுவதால் இம்மலரை உருவாக்கும் பொறுப்பு எங்களிடம் விடப்பட்டது.

குறுகிய காலத்துக்குள் இத்தகையதொரு மலரை வெளியடுவது சாதாரணமானதொரு காரியமல்ல. இரவு பகல் பாராது பசிதூக்கம் பாராது எமது சொந்த வேலைகளுக் கெல்லாம் ஓய்வு கொடுத்துவிட்டு, ஓயாது அரும்பாடுபட்டு இம்மலரை அழகுற ஆக்கிமுடித்திருக்கிறோம். இதன் தரங் கண்டு பயன்கொண்டு மகிழ்வது உங்கள் கடன்.

இம் மருதநிலா அழகோடும் பிரகாசத்தோடும் பயன்பாடு மிக்க பெறுமதியோடும் வரவேண்டு மென்று அல்லும் பகலும் அனவரதமும் உழைத்த உழைப்பின் வேதனை, இன்ப வேதனையாகவே இப்போது தெரிகிறது.

இம் மருதநிலாவிலே தவறுகள் இருந்தால் மன்னியுங்கள். இது உங்கள் மருத நிலா. நிலாவிலே களங்கம் இருப்பது இயற்கைதானே. அப்படித்தான் இங்கேயும் எனச் சமாதான மடையுங்கள்.

# பண்பாட்டு அலுவல்களும் செயற்பாடுகளும்

எஸ். எதிர்மன்னசிங்கம்,
பண்பாட்டு அலுவல்கள் உதவிப்பணிப்பாளரும், விழாக்குழு இணைப்பாளரும்

வடக்கு-கிழக்கு மாகாண சபை 1989ல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு இயங்கத் தொடங்கியது. அக்காலகட்டத்தில் கலாசார அலுவல்களுக்குப் பொறுப்பாக மட்டக்களப்புக் கச்சேரியில் கலாசார உத்தியோகத்தராகப் பணிபுரிந்த நான் நியமிக்கப்பட்டேன். கல்வி, விளையாட்டுத் துறைகள் அதிகாரப் பரவலாக்கல் மூலம் மாகாணசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டது போல கலாசார அலுவல்கள் கையளிக்கப்படவில்லை. இதன் காரணமாக பாரிய செயற்திட்டங்கள் எதையும் முன்னெடுத்துச் செல்லவும், செலவு செய்யவும் நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை. பௌதிக வளங்களும், ஆளணியும் கூட கலாசார அலுவல்கள் பகுதிக்கு வழங்கப்படாத நிலையில் கல்வி அமைச்சிற்குள் சங்கமித்துச் செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

கலாசார அலுவல்கள் பிரிவு 1989ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து ஒரு உதவிப்பணிப்பாளருடனேயே இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இருந்தபோதும் மாகாண சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்திய அங்கத்தவர்கள் வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி உதவி அளிக்க வேண்டுமெனும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். இதற்கமைவாக சில செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

1. வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களது நூல்களைக் கொள்வனவு செய்தல்
2. நூல்களை (வசதி குறைந்த எழுத்தாளர்கள்) அச்சிட்டு வெளியிடல்.
3. இலக்கிய நூல்களுக்கான (சாகித்திய) பரிசுத்திட்டத்தை நடைமுறைப் படுத்தல்.
4. நுண்கலை மன்றங்களுக்கு உதவிவழங்கல்.
5. மாவட்ட கலாசாரப் பேரவைகளைப் புனரமைத்தல்.

என்பவை குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில செயற்பாடுகளாகும். வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களுடைய புதிய ஆக்கங்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ் 1989ம் ஆண்டில் ரூபா ஒரு லட்சம் பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அத்திட்டம் இன்று விரிவாக்கப்பட்டு ரூபா ஐந்து லட்சம் பெறுமதியுள்ள நூல்கள் இவ்வாண்டில் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு எழுத்தாளனிடம் இருந்து ரூபா 3000/= ற்கான பிரதிகள் தொடக்கத்தில் வாங்கப்பட்டுத் தற்போது ரூபா 8000/= பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

கொள்வனவு செய்யப்படும் நூல்கள் வடக்கு கிழக்கிலுள்ள பாடசாலை நூலகங்களுக்கும், பொது நூலகங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. அடுத்து நூல் வெளியீட்டுத்திட்டத்தின் கீழ் எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டன. இதற்கு குறிப்பிடத்தக்க பலன் கிடைக்கவில்லை. பின்னர் பல எழுத்தாளர்களுடைய பரிசு பெற்ற கதைகளைத் தொகுத்து பரிசுக் கதைகள் என்ற பெயரில் நூல் ஒன்றினை 1995ம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற இலக்கிய விழாவில் வெளியிடமுடிந்தது. தற்போது தனிப்பட்ட எழுத்தாளர்களுடைய ஆக்கங்கள் வெளியீட்டிற்காகக் கிடைத்துவருகின்றன. அந்தவகையில் வவுனியாவில் நடைபெறும் இலக்கிய விழாவில் திருமலை சுந்தா எழுதிய ''விழியோரக் கனவுகள்'' என்னும் சிறுகதைத் தொகுதியும், திரு. செ. குணரத்தினம் (அமிர்தகழியான்) எழுதிய '' இதயப்பூக்கள்'' கவிதைத் தொகுதியும், தமிழ் மணி திமிலை மகாலிங்கம் எழுதிய ''அவனுக்குத்தான் தெரியும்'' நாவலும் வெளியிடப்படுகின்றது. மேலும் அச்சிட்டு வெளியிடுதற்காக கவிஞர் கௌரிதாசனுடைய ''களம் தந்த ஏடு'' என்னும் கவிதைத் தொகுதியும் ஜனாப் அ.மு. அப்துல் கஹ்ஹார் என்பவரின் கவிதைத் தொகுதியும் ஜனாப் எம். வை. எம். சாஜ்கபூரின் 'வானொலிப் பெட்டி' என்னும் சிறுகதைத் தொகுதியும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1988 - 89ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த நூல்களுக்கு முதலில் தேர்வு நடாத்தப்பட்டு சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது. பின்னர் 1990 - 91 ஆண்டு காலப்பகுதி இலக்கியங்களும் அதன் பின்னர் 1992ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த நூல்களுக்கும் அடுத்து 1993, 94, 95 எனப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள். தொடக்கத்தில் மூவாயிரமாகவிருந்த பரிசுத்தொகை தற்போது ஐயாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது விழா வவுனியாவில் நடைபெறுகிறது. இவ்விழாவில் 1994ம் ஆண்டுக்குரிய நூல்களுக்கும் 1995ம் ஆண்டுக்குரிய நூல்களுக்கும் வேறுவேறாகப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. பல்துறை என்ற வகைக்குள் கூடுதலான இலக்கியங்களையும், பலதுறைசார் இலக்கியங்களையும் அடக்க வேண்டியுள்ளது. நிதிவசதி கூடுதலாக இருக்குமிடத்து பல்துறைக்குள்ளேயே, அரசியல், வரலாறு பொருளியல், சமூகவியல் எனப் பலவாக வகுத்துப் பரிசில்கள் வழங்கலாம். பரிசுத் தொகையினைக் கூட்டுவதற்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர்களுக்கான பரிசுத்திட்டமும், நூல் கொள்வனவும் கூடுதலாக எழுதத் தூண்டியுள்ளது. ஏனெனில் கொள்வனவிற்காக அதிக அளவிலான நூல்கள் கிடைத்துவருகின்றன. நூல் வெளியீட்டுத்திட்டத்திற்கும் முன்னர் இருந்ததைவிட ஆதரவு தற்போது கிடைத்து வருகின்றது.

பண்பாட்டு அலுவல்கள் பிரிவின் செயற்பாடுகள் தற்பொழுது புதிய செயலரின் வருகையின்பின் மேலும் விரிவாக்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம். கலாசார ஆலோசனைச் சபை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழ் இசைபான்ட் உருவாக்குவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற மாவட்டங்களில் நாடகப்பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்பட்டறைகளில் நாடகக் கலைஞர்கள் மிக்க ஆர்வத்தோடு பங்கு பற்றி வருகின்றனர். இளம் கலைஞர்களை ஊக்குவித்து வளர்க்கும் நோக்கோடு இசை நடன இலவசவகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அமைச்சினால் ''வித்தியா'' எனத் தமிழிலும், 'வித்தியாவ' என்று சிங்கள மொழியிலும் காலாண்டு சஞ்சிகை ஒன்று வெளிவரவுள்ளது. பண்பாட்டு அலுவல்கள் பிரிவிற்குப் போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் கூடுதலான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தமுடியும்.

*வெடிக்கவைத்தால் உடலழிக்குங் குண்டு கூட*
*வேற்றுமையைக் காட்டுவதே இல்லை அ:தை*
*வெடிக்கவைக்கும் மனிதர்கள் அறிதல் வேண்டும்*
*வேற்றுமையை மனத்திருந்தே ஒழிக்க வேண்டும்*
*அடுத்தவனை அழிப்பதொன்றே கருத்தாய்க் கொண்டால்*
*ஆவதென்ன அவனுமதைத் தொடர்வான் ஆனால்*
*தடுப்பதெளி தாகாதே உலகமென்றுநீ*
*தாங்காத கொடுமையிது சேர்ந்தே வாழ்வோம்.*

**- ஜின்னாஜ் -**

# வன்னி நாட்டின் வரலாறு - சிறு அவதானங்கள்

கலாகீர்த்தி, பேராசிரியர், கலாநிதி
**பொ. பூலோகசிங்கம்**

பன்னெடுங் காலத் திருத்தத்தின் பின்பு, இன்று வரலாறு, அறிவியல் அடிப்படையினை வேண்டியதாக மதிப்பிடப்படுகின்றது. அறிவியல் அடிப்படை என்னும்போதே ஆதாரங்கள், அளவுகோல்கள் ஆதியனவற்றின் பெறுமானங்கள் எத்தன்மையன என்பது தெளிவாகின்றது. தகுதிவாய்ந்த ஆதாரங்களை அளந்து நிறுவ முடியாதவை வரலாற்றுண்மைகளாகப் பேணப்பட மாட்டாதவை.

பண்டைய வரலாற்றிலே ஈடுபடும்போது முன்பு கூறிய உண்மைகள் மலைப்பினை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலான பண்டைய வரலாற்று வெளியீடுகள் பழங்கதைகளாகச் சோபிதம் இழந்து நிற்கின்றன. பண்டைய பாரம்பரியங்கள் முறையாகப் போற்றப்படாமை இந்நிலைமைக்குரிய முக்கிய காரணங்களிலே ஒன்றாகும். மூலாதாரங்களின் பற்றாக்குறையோடு, கிடைக்கக் கூடிய மூலாதாரங்களைத் தேடிப்பெற்று பாதுகாக்க முடியாமல் இருப்பதும் அந்நிலைமையை மோசமாக்குகின்றது. கிடைக்கும் ஆதாரங்களைக்கூட, அரசியல் முதலாம் பாதிப்புகளாலே தவறாகப் பயன்படுத்தி விடுகிறார்கள்.

இலங்கையிலே தமிழர் வாழ் பிரதேசங்களை இந்தியத்தமிழகம் தன் எல்லைகளுக்கு உட்படாத பிரதேசங்களாகவே பழைய காலத்தில் இருந்து கருதி வந்துள்ளது. தமிழ் நாட்டின் எல்லைகளைக் கூறும் பழைய பாடல்கள் இவ்வுண்மைக்குச்சான்று. இதனைத்திரிவுபடவைத்து, பழைய தமிழ் இலக்கியங்கள் தோன்றிய காலத்திலே இலங்கையிலே தமிழ் வழங்கவில்லை என்று வரலாறு எழுதியிருக்கிறார்கள்.[1]

இலங்கையில் வரலாற்றுச் சார்புடைய பாளிநூல்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டு முதலாக எழுந்துள்ள போதும், அவை வரலாறு கூறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதை மறந்து வரலாறு திரிப்பது விசனிக்கத்தக்கது. தத்தம் விகாரைகளையும் அவற்றோடு தொடர்புடையோரையும் பற்றிய செய்திகளைத் தருவதையே அவை இலக்காகக்கொண்டிருந்தன. தீபவம்மிசம், மகாவம்மிசம், சூளவம்மிசம் முதலானவற்றிலே தெளிந்த பயிற்சியுடையோர் இவ்வுண்மையை உணர்வர். இதனை மறந்து இவற்றிலே தமிழர் பற்றி அறியப்பெறும் உறுதியான செய்திகளை ஆதாரமாகக் கொண்டு இலங்கைத்தமிழர் இலங்கைக்கு வந்து குடியேறிய காலத்தினை வரையறுத்துப் பட்டம் பெற்றவர்களும் இருக்கிறார்கள்.

பண்டைய வரலாறுகளிலே, பொதுவாகப் பேணப்படும் தொல்பொருள் ஆய்வுகள் கூட அதிகம் உதவியிருப்பதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் அவை ஆமை வேகத்திலேயே நடை பெற்றுவந்துள்ளன. மேலும், அவை மேற்றரை ஆய்வுகளாக நிகழ்த்தப் பெற்றுள்ளன. போர்த்துக்கேயர்-ஒல்லாந்தர் காலங்களில் பெரும் அழிவுக்குள்ளான தமிழர் வாழ் பிரதேசங்கள் பெரும்பாலும் மேற்றரை ஆய்வுகளுக்குப் பலன் அளிக்கக்கூடியனவாக அமையவில்லை. நடந்த ஆய்வுகளும் பொதுவாகப்பௌத்தச்சின்னங்களைத் தேடும் வேட்டையாகவே காணப்படு கின்றன. ஆயினும் பொசிந்து வந்த சான்றுகள் இலங்கையிலே தமிழ் இனத்திற்குப் பழைய வரலாறு ஒன்றுள்ளது என்பதை ஆதரிக்கின்றன.

தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் பொதுவாகக் காணப்படும் நடுகற் சமாதிகள் மாந்தை, மாமடு முதலிய வன்னிப் பிரதேசங்கள் உட்பட ஏனைய பிரதேசங்களிலும் ஆங்காங்கே காணப்படுவதாற் கிறிஸ்தாப்தத்திற்கு முன்பிலிருந்தே தமிழ் மக்கள் வன்னி முதலாம் பிரதேசங்களில் வாழ்ந்துவந்தமை புலனாகின்றது. தமிழனைச் சுட்டும் பாளிமொழி அடைகொண்ட பெயர்களையுடைய பிராமிச்சாசனங்களும் ''வேலு'' என்ற பெயர் கொண்ட பிராமிச்சாசனங்களும் வவுனியா உட்பட்ட பல இடங்களிலே கிடைத்திருக்கின்றன.[2]

கௌதம புத்தரின் பரிநிர்வாண ஆண்டாகச் சிங்கள பௌத்தர் கூறும் கி.மு. 543 இலே விஜயன் வருகை நிகழ்ந்ததாகக் கூறப்பெறும் மரபுக்குக்காத்திரமான சான்றுகள் எவையும் இதுவரை, காட்டுவது சாத்தியமாகவில்லை. மேலும் பௌத்தத்தினை மகிந்ததேரர் இலங்கைக்கு கொண்டு வந்ததாகக்கூறப்படும் ஆண்டான கி.மு. 246 இனை உறுதிப்படுத்தும் ஆதாரங்களும் வலுவற்றன. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கு உரிய மிகிந்தலைக்கல்வெட்டு ஒன்றிலேயே மகிந்ததேரர் ஒருவருடைய படிமம் பற்றி முதன் முதலாகக்குறிப்பிடப்பட்டுள்ளது.[3]

துட்டகைமுனு (கி.மு.161-137) காலம்வரை அநுராதபுர அரசின் ஆட்சி வடமத்திய மாகாணத்திற்கும், ஓரளவுக்கு, வடமேற்குமாகாணத்திற்கும் அப்பால் நீண்டிருக்கவில்லை; துட்டகைமுனுவின் ஆட்சியில் அது தென்பிரதேசங்களுக்கும் நீண்டுசென்றது.[4] திரிசிங்களராச்சியத்தின் முதற்பிரிவாகிய ராஜரட்டை அப்பெயருடன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு பாளிநூல்களிலே குறிப்பிடப் பெறவில்லை.[5] மிகிந்தலை சாசனம் குறிப்பிடும் தீபராஜனை, இலங்கைத்தீவின் ராஜன் என்று கொள்ளாமல்,சாசனம் எழுந்தகாலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு பின்பு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலே வாழ்ந்த புத்தகோசரின் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் சம்மோக விநோதனி எனும் உரைநூலின் கதைப்படி நாகதீவின் அரசனாக வலிந்து பொருள் தந்ததோடு அமையாது அத்தீவு யாழ்ப்பாணம் என்று துணிந்திருப்பது அளவு கோல்களுக்கு அப்பாற்பட்ட ஆய்வு. வல்லிபுரம் பொன்னேடு இனவாதத்தினால் முக்கியத்துவம் பெற்றதே அல்லாமல் அதன் உண்மையாலோ அல்லது அது கூறும் உண்மையாலோ இல்லை. நாகதீவு யாதென மகாவம்மிசம் விவரிக்காமல் விட்டது பலருக்குப் பலவாறு கூற இடமளித்துவிட்டது. நயினாதீவுக்கு அப்பெயர் கர்ணபரம்பரைக்கதைகளிலே உள்ளமை கோவலனார் கதை முதலானவற்றிலே அறியப்படுகின்றது. யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு அப்பெயர் வழங்கியமைக்குச் சான்றில்லை.

தேவாரம் பெற்ற புனிதத்தலங்கள் இரண்டு இலங்கையிலே உள. அவை இரண்டும் வன்னியிலேயே உள. அவை திருக்கேதீஸ்வரமும் திரிகோணமலையுமாம். ஸ்ரீமேகவர்ண ஆட்சியின்போது (352-379) மஹாதித்த எனும் இடத்திலே இந்துக்கோயில் ஒன்றிருந்ததை தாடாவம்சமிசம் கூறுகின்றது.[7] மஹாதித்த எனப் பாளிநூல்கள் சிறப்பிக்கும் துறைமுகம் மாந்தை எனப்பெறும் மாதோட்டம். மாதோட்டத்திலே போர்த்துக்கேயர் காலம்வரை நின்று நிலவியது திருக்கேதீஸ்வரம். வாயுபுராணத்திலே கோகர்ணம் கோயில் குறிப்பிடப்படுகின்றது. வாயுபுராணம் தரும் தகவல்களின் அடிப்படையிலே அக்கோயில் திருக்கேதீஸ்வரம் என்று துணிவர்.[8] வாயுபுராணம் கி.பி. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டிலே எழுந்ததாதல் வேண்டும்.

மும்முடிச் சோழ மண்டலமாக இலங்கையைச் சோழப் பேரரசின் கீழ் 992/3 முதல் 1070 வரை சோழர் ஆட்சிபுரிந்த காலத்திலே வன்னிப் பிரதேசமும் அவர்களுடைய பராமரிப்பிலே நின்று நிலவியது. திரிகோணமலைப் பிரதேசத்திலும் மாதோட்டப்பிரதேசத்திலும் சோழராதிக்கத்தினை உணர்த்தும் சின்னங்களின் எண்ணிக்கை போன்று யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. வவுனியாப்பிரதேசத்திலே தொல்பொருள் ஆய்வுகள் நடைபெற்றால் சோழர் ஆதிக்கம் மட்டுமன்றி அதற்கு முற்பட்ட பல்லவர் செல்வாக்கும் அறியப்பெறலாம்.

செட்டிகுளம் கிராமத்தினை அடுத்த முதலியார் குளத்திலிருந்து சிப்பிக்குளம் செல்லும் பாதையூடாக 'கப்பாச்சி' எனும் இடத்தை அடையும் போது பெரிய கேணியொன்றும் கோயில் அழிபாடுகளும் காணப்படுவன. ஜே.பி. லூயிஸ் இக்கேணியை 'வல்வாலை' என்றும் கோயிலைச் 'சந்திரசேகரர் கோயில்' என்றும் தமிழ் ஏடுகளின் ஆதாரத்தோடு கூறுவர். நாற்பதுகளின் கடைக்கூறிலே வவுனியாப் பிரதேசங்களிலே குடியேற்றத் திட்டங்களுக்காக காடழித்த போது எத்தனையோ அழிபாடுகளும் கலைச்சின்னங்களுங் கண்டெடுக்கப் பெற்றன. அவற்றைப்பற்றி யாரும் அப்பொழுது அக்கறை கொள்ளவில்லை!

கி.பி. 1266 இலே முற்றுவிக்கப்பெற்றதாகக் கருதப்படும் 'பூஜாவளீ' எனும் நூலிலே வன்னி பற்றிய குறிப்புகள் முதன் முதலாக இடம் பெறுகின்றன. அது ராசரட்டையை மாகன் கைப்பற்றிய போது மகாவன்னிப்பிரதேசங்களில் வாழும் தலைவர்கள் மாகனுக்குப் பயந்து வாழ்வதாகக் கூறுகின்றது. மேலும் மூன்றாம் விஜயபாகு மகாவன்னியில் வாழும் சிங்களவரை அடக்கிய பின்பு மாயரட்டையை தனக்குட்படுத்தியதையும் அது கூறுகின்றது.

மகாவன்னிகளைப் பூஜாவளீ ''சிங்கள மகாவன்னிகள்'' என்றழைத்தல் கவனிக்கத்தக்கது. ''மகாவன்னிகள்'' என்ற சொல்லாட்சி நூலெழுந்தபோது 'சிறுவன்னிகள்' என்ற ஆட்சியும் நிலவியதைச் சுட்டலாம். மேலும் ''சிங்கள'' எனும் அடைமொழி சிங்களம் அல்லாத வன்னிகள் இருந்ததைக் குறிப்பதாகவும் கொள்ள இடமுண்டு.

சூளவம்மிசத்தின் இரண்டாம் பகுதி பொலநறுவையரசன் இரண்டாம் விஜயபாகு முதல் குருநாகல் அரசன் நான்காம் பராக்கிரமபாகு காலம் வரையிலான செய்திகளைக் கூறுவது; நான்காம் பராக்கிரமபாகு காலத்திலே (1302-1326) எழுந்தது. இப்பகுதியிலும் வன்னி பற்றிய பல செய்திகள் இடம் பெறுகின்றன.

பூஜாவளீக்கு முன்பு வன்னிகள் இலங்கையில் இருக்கவில்லை எனல் தவறு. ஏனெனில் சமய விடயங்களுக்கு முக்கியத்துவம் தரும் பூஜாவளீ முதலிய நூல்கள், அரசியற்பிரிவுகள் குறிப்பிடத்தக்க அந்தஸ்தினை பெற்று தவிர்க்க முடியாதனவாகத் திகழும் போதே தம்மிடத்திலே அவற்றிற்கு இடம் கொடுப்பன.

''வன்னி'' எனும் பெயர் தமிழ்நாட்டு ஆவணங்களிலே பதினோராம் நூற்றாண்டுமுதற் காணப்படுகின்றது. மேலும் வன்னியர் தோற்றம் பற்றிய மரபுகளும் தமிழ் நாட்டிலேயே இடம் பெறுகின்றன. எனவே 'வன்னி' எனும் பெயர் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்ததாகவே கொள்ளத்தக்கது. தமிழகத்திலே 'வன்னியர்' என்பது ஒரு சமூகத்தினையும், அச்சமூகத்தின் தலைவனையும் குறித்த சாசனங்கள் உணர்த்துவன; அச்சமூகத்தின் வாழிடத்தையும் குறித்திருக்கவேண்டும் என்பதை இலங்கையின் வன்னிப் பிரதேசம் காட்டுகின்றது. ஆனால் 'சிங்கள மளவன்னிகள்' என்னும் ஆட்சி 'வன்னி' பொதுப்பெயராக மாறிவிட்டதன்மையை சுட்டுகின்றது. சிறப்புப் பெயர் பொதுப்பெயராக 13ஆம் நூற்றாண்டின் பிற்கூறிலே மாற்றம் உற்றிருக்கும் தன்மையை நோக்கும்போது அந்நிலை தோன்றுவதற்குச் சில பல காலத்திற்கு முன்பு வன்னியர் இலங்கையில் நிலை கொண்டிருக்கவேண்டும் என்று கருத முடியும்.

மாகன் ஆட்சியிலே (1215-1255) மகாவன்னிகள் இருந்தனவாயின், அவனுக்கு முற்பட்ட பொலநறுவை அரசர் காலத்திலே (1070-1215) வன்னியர் குடியேற்றங்கள் உருவாகினவோ என்று ஐயுற வேண்டியுள்ளது. பொலநறுவை அரசரிலே முதலாம் விஜயபாகுவும் முதலாம் பராக்கிரமபாகுவும் ஒழிந்து, வலிமை குறைந்து, ஆதரவு இழந்து திடமற்ற ஆட்சிசெலுத்தியவர்கள். அவர்கள் ஆட்சியிலே தன்னிச்சையான அதிகார வட்டங்கள் தவிர்க்க முடியாதது. வன்னியரசுகள் உருவாகுவதற்கான சூழல் பொலநறுவைக்காலத்திலே காணப்படுகின்றது.

பொலநறுவை அரசர் காலத்தினூடாகக் காலிங்கமாகன் ஆட்சி (1215-1255), சாவகர் ஆட்சி (1247-1262), பாண்டியர் மேலாதிக்கம் (1262-1310), ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சி (1310-1619) வழியாகப் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரின் காலனித்துவ அதிகாரத்தினைத்தாண்டி, (1620-1795) ஆங்கிலேயரின் ஆட்சியின் போது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் தசாப்த முடிவினிலே, பண்டாரவன்னியனுடைய மறைவோடு வன்னிய ஆட்சி முடிவடைகின்றது. ஏழு நூற்றாண்டுகளுக்கு மேலாக வன்னியர் அதிகாரம் செலுத்தியுள்ளபோதும் அவர்களுடைய வரலாறோ அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களின் வரலாறோ இருண்டே காணப்படுகின்றது. காலனித்துவ ஆட்சியாளர் காலத்திய நிலைமைகள் மட்டும் ஓரளவுக்கு அவர்களுடைய குறிப்புகளிலிருந்து புலப்படுகின்றது.

வன்னியர் வரலாற்றுக்கு முக்கியத்துவம் அளித்த முதல் இலங்கைத் தமிழ் நூல் வையாபாடல். கல்யாணகிரிசுவாமிகள் சமாதியடைந்து முத்துலிங்கசுவாமிகள் எனப் போற்றப்பட்ட காலத்திலே-பறங்கியர் செட்டிகுளத்தை ஆண்டமையும், பறங்கியர் பாஷையான போத்துக்கேயமொழியின் பிரயோகங்கள் வழங்கியமையும் தெரிந்த காலத்திலே அடங்காப்பற்று ஐந்து பற்றுகளாகப்பகுக்கப்பெற்ற நிலைமையை உணர்ந்த காலத்திலே வையாபாடல் இயற்றப்பட்டுள்ளது. அக்காலம் பதினேழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகாது. வன்னி நாட்டின் மூலை முடுக்குக்களைக்கூட வையாபாடல் ஆசிரியர் அறிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் வெளிவந்த மூன்று பதிப்புகளும் (1921,1922,1980) சுத்தப்பதிப்புகளாகத் தெரியவில்லை. ஏனெனில், நூற்போக்கு ஆங்காங்கே காணப்படும் இடையீடுகளாலே வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நூற்போக்கினை மட்டிட்டு மதிப்பிடுதல் அரிதாகின்றது. இதுவரை காலமும் வெளிவராத ஏடுகள் கிடைத்தால் அன்றி வையாபாடலின் பயன்பாடு குன்றியே காணப்படும்.

வையாபாடல் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் வன்னியரசருக்கும் போட்ட முடிச்சு காலவழு. பொலநறுவையரசர் காலத்திலே (1070-1215) வன்னியரசுகள் தோற்றம் பெற்று விட்டன. யாழ்ப்பாணத்திலே ஆரியச்சக்கரவர்த்திகள் அப்போது இல்லை. இலங்கை வரலாற்றிலே முதன்முதலாக அறியப்படும் ஆரியச்சக்கவர்த்தி 1284 இலே யப்பாகுவை எனும் சிங்களக் கோட்டையைச் சூறையாடிய ஆரியச்சக்கவர்த்தி. அவன் பாண்டியனின் தளபதியாகப் படை எடுத்துவந்தவன். அவனோ அல்லது அவன் முன்பின் உள்ள மரபினனோ பாண்டியர் பிரதிநிதியாகச் சாவகன் சந்திரபானுவின் மகனுக்குப் பின்பு யாழ்ப்பாணத்திலே நிலைகொண்டிருக்கவேண்டும். அக்காலம் 1262-1284 வரையிலான கட்டத்தினை உட்படுத்தியதாதல் தகும். வரலாறு இவ்வாறு அமைய வையாபாடல் ஆரியச்சக்கரவர்த்திகளோடுதான் வன்னியர் இலங்கைக்கு அறிமுகமாயினர் என்று கருத வைக்கின்றது. பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலி எனும் மூவரையும் சகோதரராக்கி செகராசசேகரனை யாழ்ப்பாணத்திலும் சங்கிலியை வல்வெட்டியிலும் ஆட்சிபுரிய வைத்து பரராசசேகரனை முள்ளியவளையில் அரசோச்ச வைத்திருக்கும் வையாபாடல் ஆசிரியர் தவறுகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் வாழ்ந்த மாதகல் மயில்வாகனப்புலவர் யாழ்ப்பாண வைபவமாலையிலே வன்னியரை ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆணைக்குட்பட்டவராகவே கூறிச்செல்கிறார். இந்நிலை வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், சங்கிலி போன்ற சில ஆரியச்சக்கரவர்த்திகள் காலகட்டங்களுக்குப் பொருத்தமாகலாம். வன்னியர் பலம்மிக்க பக்கம் சாயவும் பலம் இல்லாத பக்கம் சாயாமல் இருக்கவும் வடக்கிலிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் அரசும், தெற்கிலிருந்த சிங்கள அரசும் இடமளித்தன. இந்நிலைமை காலனித்துவ ஆட்சிக்காலம்வரை நீடித்திருக்கிறது. இதனாலே வன்னி ''அடங்காப்பற்று'' என்ற பெயரையும் பெற்றுக் கொண்டது.

யாழ்ப்பாண வைபவமாலைக்காரர் முதன்முதலாக ஒரு ''காக்கை வன்னியனை'' உருவாக்கியிருக்கிறார். இப்பெயர் அண்மைக்காலம்வரை அரசியல் மேடைகளிலே கேட்கப்பட்டதொன்று. நம்பிக்கைத் துரோகம் செய்த ஒருவனாகக் காக்கை வன்னியன் வைபவமாலையில் இடம் பெறுகின்றான். எட்டப்பன் போல, இதனையும் பொதுப்பெயராக விட்டு விடலாம். ஆனால் ஒரு இனத்தோடு தொடர்புடையதாக இப்பெயர் ஆளப்பட்டு வந்தமை விசனிக்கத்தக்கது.

சங்கிலிக்கும் பரநிருபசிங்கத்திற்கும் இடையே வைபவமாலைக்காரர் தரும் காக்கைவன்னியன் (குல சபாநாதன் பதிப்பு, 1953,பக் 66-78) பிரமா படையாதபடைப்பு; பெற்றோர் இடாதபெயர் GAGO (காகோ) என்ற போர்த்துக்கேய மொழிச்சொல்லுக்குக் ''கொன்னையன்'' என்பது பொருள். போர்த்துக்கேய வரலாற்றுக் குறிப்புகள் இரண்டு GAGO மாரைக் குறிப்பிடுகின்றன. ஒருவன் புவிராசபண்டாரத்தின் (1582-1591) மாப்பிள்ளையும் தளபதியும் ஆவான்; மற்றவன் எதிர்மன்னசிங்கன் (1591 1617) அரசகேசரியின் சகோதரன். வன்னியன் அல்லாதவனை வன்னியனாக்கி, GAGO என்ற பெயரைக் ''காக்கை'' என விளங்கிக்கொண்டு, மயில் வாகனப்புலவர் தோற்றுவித்த சிருஷ்டியை என்னவென்று கூறுவது! நல்லூர்சா ஞானப்பிரகாசர் சுவாமிகள் யாழ்ப்பாண வைபவ விமரிசனத்திலும் (1928) THE KINGS OF JAFFNA DURING THE PORTUGESE PERIOD OF CEYLON HISTORY (1920) எனும் ஆங்கில நூலிலும் விளக்கியும் அறியாதர் போல நடந்துகொள்பவரை என்னவென்று அழைப்பது!

காலனித்துவ ஆட்சிக்காலத்து வன்னியர் பற்றிப் பல பாடல்களும் கதைப்பாடல்களும் வன்னி நாட்டிலே வழங்குவன. காலஞ்சென்ற த.சண்முகசுந்தரம் (1986) வன்னி நாய்ச்சிமார் மான்மியம் குருவிநாய்ச்சி சலிப்பு முதலியனவற்றை வெளியிட்டு இவை தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதினார். செமெற்றாஸ் மயில் வேலப்பணிக்கன் ஒப்பாரிக்கு வன்னிவளநாட்டுப் பாடல்களிற் புத்துயிர்தந்தார். முல்லைமணி வே. சுப்பிரமணியம் முதலானோர் புதிய இலக்கிய வடிவங்களுக்கும் இக்கர்ணபாரம்பரியக்கதைகளையும் பாடல்களையும் பயன்படுத்தி யுள்ளனர்.

இலங்கையிலே எழுந்த பள்ளுப்பிரபந்தங்களிலே காலத்தால் முற்பட்ட கதிரைமலைப்பள்ளு முல்லைத்தீவுப் பிரதேசத்திலே தோன்றியாதாகும். முல்லை மக்கள் பயிர்த்தொழிலுக்குப் பயன்படுத்திய பள்ளுப்பாடல் மரபும் வைகாசிப் பொங்கலை அடுத்து வற்றாப்பளை அம்மாள் கதிர்கமத்திற்குக் கரையாத்திரை செய்யும் மரபும் கதிரை மலைப்பள்ளின் தோற்றத்திற்குக் காரணங்கள். இதனுள் போற்றப்படும் ''தியாகசூரியன்'' யார் என்று தெரியவில்லை கதிரை மலைப்பள்ளு 1644-1658 க்கு இடையே யாழ்ப்பாணத்திலே தோன்றிய ஞானப்பள்ளுக்கு முன்பு எழுந்தது.

வடக்கிலும் தெற்கிலும் இருந்து அலையாகப்புகுந்த படையெடுப்புகளாலும் உள்நாட்டுப் பூசல்களாலும் வன்னியரசுகள் சிதைந்தது போதாதென்று இயற்கைச்சக்திகளும் வஞ்சகம் செய்தன. புயலாலும் வெள்ளத்தாலும் குளங்கள் சீரழிந்து வெறிச்சோடின; தொற்றுநோய்கள் ஆயிரக்கணக்கிலே பலிகொண்டன. தோட்டவேலைக்கு கால்நடையாக வன்னியை ஊடறுத்துச்சென்ற அப்பாவித்தமிழரிடையே உண்டுபட்ட காலறாவால் எத்தனையோ வன்னிக் கிராமங்கள் மயானபூமியாகின; கால்நடைகளும் நோயால் அழிந்து போயின. போதாததற்குக்கொள்ளையர் கூட்டங்களும் அடிக்கடி அறுவடை செய்தன. இலங்கை சுதந்திரம் அடைந்த போது வன்னிப் பிரதேசம் குக்கிராமங்களையுடைய காட்டுப்பிரதேசமாகக் காட்சியளித்தது.

சுதந்திரம் அடைந்து சில தசாப்தங்களுக்குப் பின்னே வன்னிநாட்டிலே உயர்பள்ளிகள் கால்கொள்ளத் தொடங்கின. குடியேற்றத்திட்டங்களால் ஆங்காங்கே காடுகளை அழித்து கழனிகள் உருவாகின. வன்னி மக்களி டையே நடுத்தரவகுப்பொன்று உருவாகத்தொடங்கியது. அவ்வகுப்பினரிடையே அரசியல் உணர்வலைகள் வீசத்தொடங்கியது. திருடனாகவும் கொள்ளைக்காரனாகவும் காலனித்துவ ஆட்சியாளர் காட்டிவந்த பண்டாரவன்னியன் சுதேசிய தலைவனாகச் சிறப்பிடம் பெற்றான். கற்சிலைமடுவிலே வெள்ளையன் தன்னைத்தான் பெருமைப்படுத்த கற்றூண் எடுத்தான். வன்னி மக்கள் தங்களைப் பெருமைப்படுத்த வவுனியா நகரிலே பண்டார வன்னியனுக்குச் சிலை எடுத்தனர். வன்னி மக்கள் தம் கனவை நனவாக்கக் கால்வைத்த கட்டம் அது!

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனிசிறந்தனவே''

*காரேற ஏரேற கழுநீர் மலரேற*
*சீரேறத் திருவேறச் சிவநினைவு தாமேற*
*தேரேறி ஊரேறச் தேவார ஒலியேற*
*நேரேறும் சிலைநுதலார் நேத்திரத்தில் நீர்பனிப்ப*
*பாரேறித் தாள்பரவிப் பணிந்தேத்திப் பக்தியொடு*
*பேரேறி ஊரேறும் பெய்வளையார் தமதிருக்கை*
*போரேறப் பொலியேறப் புலிவாணர் நாவேற*
*காரேறி வளங்கொழிக்கும் காரேறு மூதூரே.*

சிவசம்பு தட்சணாமூர்த்தி
காரைதீவு

# வன்னியரும் வன்னிப்பிரதேசமும்

க. தங்கேஸ்வரி பி. ஏ (தொல்) சிறப்பு

1. **ஈழத்தில் வன்னியர்:-**

ராஜராஜசோழன் (985-1015) காலத்தில் இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்த போது வன்னியர் இலங்கைக்கு வந்தனர்.

முதலாம் விஜயபாகு (1059 - 1114) சோழரை இலங்கையிலிருந்து வெளியேற்று வதில் வெற்றி கண்டபோதும், வேளைக்காரப் படைத்தலைவரான சில வன்னித்தலை வர்கள் இலங்கையிலேயே தங்கிவிட்டனர். அவர்களது சேவை சிங்கள மன்னர்களுக்கும் தேவைப்பட்டது தான் அதற்கு முக்கிய காரணம். மேலும் இவ்வன்னித்தலைவர்கள் சிங்கள மன்னர்களை எதிர்க்கும் அளவு வலிமை பெற்றிருந்தனர், என்பது மற்றொரு காரணம். (சூளவம்சம் அத் LX குறிப்பு 36 - 44) சில சான்றுகள் வருமாறு.

1. பொலன்னறுவையில் இருந்த தந்ததாது மாளிகையைப் பாதுகாப்பதற்கு வன்னியர் தலைமையிலான வேளைக்காரப் படையினர் அமர்த்தப்பட்டனர்.

2. இரண்டாம் கஜபாகு (1137 - 1153) பொலன்னறுவையில் ஆட்சி செய்த போது, 1ம் விஜயபாகுவின் மருமகனான மானாபரணனும் அவனது தம்பிக ளாகிய, கிர்த்தி ஸ்ரீமேவன், ஸ்ரீவல்லபன் ஆகியோரும், பொலன்னறுவை யிலிருந்த வேளைக்காரப் படையினரின் துணை கொண்டு, 2ம் கஜபாகுவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். (சூளவம்சம் : அத்:LXIII குறிப்பு - 24, 29)

3. லோகநாதன் என்ற தளபதி ஒரு விகாரை அமைத்து, அதற்கு ''வேளைக்கார விகாரை'' எனப்பெயரிட்டு, அவ்விகாரையைப் பாதுகாக்கும் பொறுப்பை வேளைக்காரப் படையிடம் ஒப்படைத்ததாக, பதவியாவில் கண்டெடுக்கப் பட்ட ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. (Journal of Riyal asiatic Society, Ceylon Branch. Vol III. Part II பக்:261)

4. சேதரையன் என்ற வேளைக்காரப் படைத்தலைவன், மாகோனின் உபராஜனான குளக்கோட்டன் என்னும் ஜயபாகுவுக்கு உதவியமை பற்றி, பொலன்னறுவை ரங்கோத் விகாரைக் கல்வெட்டுக் கூறுகிறது. (Ceylon Tamil Inscriptions Vol.I. பக்: 24 - 26)

இக்குறிப்புகள் மாகோன் வருகைக்கு முன், ஈழத்தில் வன்னியர் பெற்றிருந்த செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறே மாகோன் காலத்திலும், மாகோனுக்குப் பின்னும் ஈழத்தில் வன்னியர் ஆட்சியும் செல்வாக்கும் சிங்களமன்னர் ஆட்சியுடன் பின்னிப் பிணைந்திருந்தன.

கி.பி. 12ம் நூற்றாண்டுக்குப்பின்னர், மாகோன் ஆட்சி பொலன்னறுவையில் நிலைபெற்றது. இக்காலப் பகுதியில், சிங்கள மன்னர் தெற்கே, தம்பதெனியா, கம்பளை, கோட்டை, குருநாகல் முதலிய இடங்களில் ராசதானி அமைத்து ஆட்சி செய்தனர்.ஆங்காங்கே சில வன்னிச் சிற்றரசுகள் இருந்தன. இவர்களை அடக்கியாண்ட 3ம் விஜயபாகு (1232-1256) வன்னிராசன் என்ற விருதுப் பெயருடன் மாயரட்டையில் அதிகாரம் செலுத்தினான் (சூளவம்சம் **LXXXI** - குறிப்பு.2)

2ம் பராக்கிரமபாகு (1236-1272), வன்னியரசர்கள் மீது அதிகாரம் செலுத்தினான் என்பதையும் சூளவம் சக்குறிப்புகள் கூறுகின்றன. சூளவம்சம் (**LXXXIII**, குறிப்பு .10)

2ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இளவரசனான விஜயபாகு (iv) அனுராதபுரம் சென்றபோது வன்னியர்கள் அவனை வரவேற்று கௌரவித்து திறை கொடுத்தனர் என்ற ஒரு குறிப்பும் சூளவம்சத்தில் காணப்படுகிறது. (சூளவம்சம் **LXXXVIII**- குறிப்பு 87-89)

இக்குறிப்புகளிலிருந்து சில உண்மைகள் பெறப்படுகின்றன

1) சோழர் காலத்தில் பொலன்னறுவையில் நிலைத்திருந்த வன்னியர்கள் படிப்படியாக, இலங்கையின், ஏனைய பகுதிகளுக்கும் பரவினர்.

2) மாயரட்டை, ரோஹண முதலிய பிரதேசங்களில் பல வன்னிச் சிற்றரசுகள் உருவாகின.

3) இவர்கள் சிங்கள மன்னர்களுடன் பரஸ்பரம் நல்லுறவை வைத்திருந்தனர்.

4) வன்னியரை வெளியேற்ற முடியாத காரணத்தினாலேயே இவ்வன்னிச் சிற்றர சுகளை சிங்கள மன்னர்கள் ஏற்றுக் கொண்டனர்.

5) இவ்வன்னிச் சிற்றரசுகள் சிங்கள மன்னர்களின் அதிகாரத்தின் கீழ் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அவைகள் சுதந்திரமாகவே இயங்கின.

## 2. மாகோன் வருகை :-

கி.பி 13ம் நூற்றாண்டில், கலிங்கமாகன் (1215-1255) பெரும்படையுடன் இலங்கைக்கு வந்தான். பொலன்னறுவையைக் கைப்பற்றி, அங்கிருந்து ராஜரட்டை முழுவதையும் ஆட்சி செய்தான். இலங்கையின் வேறு சில பகுதிகளையும் தன் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்தான்.

இவனுக்கு உதவியாக இவனது உபராஜனான குளக்கோட்டன் இவனுடன் இணைந்து செயற்பட்டான். இவர்கள் இருவரும் தென்னிந்தியாவில், புத்தூர், மருங்கூர், காளிகட்டம், காரைக்கால் தொண்டைமண்டலம், திருச்சிராப்பள்ளி, மதுரை முதலிய இடங்களிலிருந்து பலவீரர்களை அழைத்து வந்து அவர்களின் தலைவர்களுக்கு வன்னிமைபட்டம் அளித்து, தமது ஆட்சிக்குட்பட்ட பல பிரதேசங்களில் அவர்களை வன்னித்தலைவர்களாக நியமித்தான். (க.தங்கேஸ்வரி, குளக்கோட்டன் தரிசனம் பக்:63)

இவ்வகையில் மாகோனின் இலங்கை வருகை (1215) இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஆட்சி முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு ராஜரட்டை முழுவதும் மாகோனின் ஆட்சிக்குட்பட்டது. சிங்கள அரசின் ராசதானிகள், தெற்கு நோக்கி நகர்ந்தன. அவை, தம்பதெனியா, கம்பளை, குருநாகல், கோட்டை என இடம் பெயர்ந்தன. (க. தங்கேஸ்வரி, மாகோன் வரலாறு, பக்:74)

மாகோன் ஆட்சிக்காலத்திலும் அதற்குப் பின்னரும், இலங்கையில் பல பிரதேசங்கள் வன்னியரின் ஆட்சிக்குட்பட்டன. இவர்கள் திருகோணமலை வன்னிமைகள், புத்தளத்து வன்னிமைகள், மட்டக்களப்பு



வன்னிமைகள் என அழைக்கப்பட்டனர். இவ்வன்னித் தலைவர்கள் மூலம், மாகோன், அதிகாரப் பரவலாக்கம் செய்து கட்டுக்கோப்பான ஆட்சிமுறை ஒன்றை நிறுவினான். அதனால் அவன் 40 வருடங்களுக்கு மேல் நிலையான ஆட்சியை மேற்கொள்ள முடிந்தது.

மாகோன் உருவாக்கிய வன்னிப்பிரதேசங்களே பின்னால் வன்னிப்பற்றுக்களாக மாறின. அவை அந்நியரான போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் நிலைத்து நின்று பின்னர் மங்கி மறைந்தன.

## 3. வன்னிப்பிரதேசத்து வன்னிமைகள்:-

வன்னியர்கள் யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்பு வரை குறுநில மன்னர்களாக ஆட்சி செய்தபோதும் வன்னிப்பிரதேசம் என நாம் இப்போது அழைக்கும் அடங்காப்பற்று பிரதேசத்திலேயே அவர்களுடைய ஆட்சி சுதந்திரத்துடனும் இறைமையுடனும் திகழ்ந்தது. மன்னார் முதல் திருகோணமலை வரை நீண்டு மிகப்பரந்த நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய 7 வன்னியரசர்களும் அரசர்களுக்குரிய இறைமாட்சியுடன் ஆட்சி செலுத்தியதை வரலாறு கூறுகிறது. பிற்காலத்தில், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகியோரை எதிர்க்கும் அளவு அவர்கள் வீரமும் தீரமும் கொண்டிருந்தனர்.

தற்போதைய மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இவ்வன்னிப் பிரதேசத்தில் அன்று பின்வரும் 7 வன்னியர் ஆட்சிப் பிரதேசங்கள் அடங்கியிருந்தன:- (i) பனங்காமம் (ii) முள்ளியவளை (iii) கருநாவல்பற்று (iv) தென்னமரவாடி(v) மேல்பற்று (vi) கரிக்கட்டுமூலை (vii) செட்டிகுளம்பற்று.

இவ்வன்னிப்பிரதேசத்தை அடங்காப்பற்று என அழைக்கப்பட்டதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. இவ்வன்னியர்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களுக்குத் திறைகொடுக்கமறுத்தனர். அவ்வாறே பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆளுநர்களுக்கும் திறை கொடுக்கமறுத்தனர்.

மேற்படி வன்னியர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம் வரை சுதந்திரமாகச் செயற்பட்டு அதற்குப்பின்னர் படிப்படியாகத் தமது நிலையில் தளர்ந்து, போர்த்துக்கேயரின் பீரங்கிகளுக்கும், துவக்குகளுக்கும் அடிபணியும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர். ஆனாலும் கைலாய வன்னியன் (பனங்காமம்) பண்டாரவன்னியன் (பனங்காமம்) முதலிய வன்னியர்கள் இறுதிவரை தமது இறைமையைப் பாதுகாத்தனர். உயிரைத்துச்சமாக மதித்து, அந்நியருக்கு அடிபணிய மறுத்தனர். வரலாறு உருவாக்கினர். அவ்வகையில் பனங்காம வன்னியனான கைலைவன்னியனைப் பற்றிய பின்வரும் செய்தி கவனத்திற் கொள்ளத்தக்கது.

''போர்த்துக்கேயர் இலங்கையின் பலபகுதிகளையும் கைப்பற்றி ஆட்சி செலுத்தினார்கள். ஆனால் வன்னிப் பகுதியைச் சுலபமாகக் கைப்பற்ற முடியவில்லை. டச்சுக்காலத்தில், வன்னியர்களின் ராசதானியாக விளங்கிய பனங்கா மத்தை ஆண்ட வன்னிமன்னன் கைலைவன்னியன் அஞ்சா நெஞ்சத்துடன் ஆண்டு வந்தான். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், நீர்கொழும்பு, கோட்டை, திருகோணமலையாவும் டச்சு ஆட்சிக்கு அடிபணிந்து, வரி செலுத்திக் கொண்டிருந்தன.பனங்காம வன்னியனும் திறை செலுத்தவேண்டுமென, யாழ்ப்பாணத்தை ஆண்ட டச்சுக் கவர்னர், 12 ஆண்டுகள் தொடர்ந்து ஓலை அனுப்பிக் கொண்டே இருந்தான். கைலை வன்னியன் கவர்னரின் ஆணையை மீறி 12 ஆண்டுகள் வரி செலுத்த மறுத்து, நாட்டின் சுதந்திரத்தைப் பேணிப்பாது காத்திருக்கிறான்'' (சி.நவரத்தினம், Vanni and Vanniyars).

இதேவிடயம் டச்சு கவர்னரான தோமஸ் வான்றீ (1692-1697) அறிக்கை யிலும் இடம் பெற்றுள்ளது. அவர் கூற்று வருமாறு:-

"They were a constant source of irritation to the Dutch as they had been to the Portuguese. The chiefs would not pay their tribute of elephants and their land rents, and some even would not appear at the annual Durbar, when they were summoned by the Governors. This was specially the case with Kayla Vanniya of Panakamam, who failed to appear before the Dutch Governor for Twevle Consective Years (Report of Dutch Governor Thomas Van Rhee (1692-1697) (கரவைக்கிழார் கட்டுரை ''மலர்'' மார்ச் 1970) தொடர்ந்து 12 வருடம் திறைகட்டாது தீரத்ததுடன் ஆட்சிசெய்த மேற்படி கைலை வன்னியன் 1678ல் இறந்தபின் அவனது பேரனான காசியனார் என்னும் வன்னியன் டச்சு கவர்னருக்கு திறை செலுத்த ஒத்துக்கொண்டான். இச் செய்தியைப் பெருமகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாக அப்போதைய ஒல்லாந்த தேசாதிபதி தன் மேலதிகாரிகளுக்கு அறிக்கை செய்துள்ளான்.

## 4. பண்டார வன்னியன்:-

கைலை வன்னியனைப் போலவே, ஆங்கிலேயர் காலத்தில், அவர்களுக்கு அடிபணிய மறுத்து, தற்றுணியாக ஆட்சி செலுத்தியவன் பண்டாரவன்னியன், இவனுடைய வீரவரலாறு, கிட்டத்தட்ட, தமிழகத்தின் பாஞ்சாலங் குறிச்சிமன்னனான வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாறை ஒத்திருக்கிறது. பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் ஆட்சிக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தான். ஆங்கிலேயரைப் பகிரங்கமாக எதிர்த்தான். இருமுறை அவர்களுடன் போர் செய்தான். ஈற்றில் தனது 34ம் வயதில் வீரமரணம் எய்தினான்.

அவன் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

பண்டாரவன்னியனின் முழுப்பெயர், குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன். இவன் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பனங்காமத்து வன்னியனாகப் பொறுப்பேற்றான். பனங்காமம் வன்னிப்பற்று அடங்காப்பற்று பிரதேசத்தில் உள்ளன. 7 வன்னிமைப்பற்றுக்களில் ஒன்று. ஆனால் அப்பிரதேசத்தின் அரைவாசிக்கு மேற்பட்ட நிலப் பரப்பைக் கொண்டது. இதனால் அடங்காப்பற்று வன்னியர்களுள் பனங்காமத்து வன்னியன் தலைவனாக மதிக்கப்பட்டான். இம்மரபு பண்டார வன்னியன் காலத்திலும் தொடர்ந்தது.

இயல்பாகவே அந்நியர் ஆட்சியிலும், அடக்கு முறையிலும் வெறுப்புக் கொண்டிருந்த அடங்காப்பற்று வன்னியர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான நிலைப் பாடு கொண்ட கண்டிராச்சியத்துக்கு சார்பாக இருந்தனர். அந்நியரை எதிர்ப்பதில் கண்டி மன்னரும், அடங்காப்பற்று வன்னியர்களும் பரஸ்பரம் உதவி செய்தனர். இந்த நட்புறவு பண்டார வன்னியன் காலத்தில் மேலும் வலுவடைந்தது.

ஆங்கிலேயர்கள் முதல்முறை கண்டியைக் கைப்பற்றுவதற்காக படை எடுத்தபோது, பண்டார வன்னியன், தனது படைவீரர்களைத் திரட்டி கண்டி மன்னனுக்கு உதவியாக அனுப்பினான். இப்போரில் பண்டாரவன்னியனின் படைவீரர்கள் காட்டிய வீரம் ஆங்கிலேயரை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. இப்போரில் கண்டி மன்னன் வெற்றிபெற ஆங்கிலேயப் படைகள் பின்வாங்க நேர்ந்தது. இப்போது அவர்கள் கவனம் பண்டார வன்னியன் மீது திரும்பியது. வன்னிப் பிரதேசத்தைக் கைப்பற்றினால், வன்னியர்களை அடக்குவதுடன் கண்டி மன்னனுக்குப் படை உதவி கிடைப்பதையும் தடுக்கலாம் என அவர்கள் எண்ணினர். அதற்காக ஒரு சூழ்ச்சி செய்தனர்.

கரிக்கட்டு மூலை வன்னியனான காக்கை வன்னியனைக் கைக்குள் போட்டுக் கொண்டு, அவன் ஆட்சிப் பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவில் ஒரு கோட்டையை அவசரமாகக் கட்டி முடித்தனர். இரகசியமாக இவ்வேலை மேற்கொள்ளப்பட்டதால் காலம் தாழ்த்தியே இச் செய்தி பண்டாரவன்னியனுக்கு எட்டியது. உடனே அவன் தனது யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகளுடன் அக்கோட்டையைத் தகர்ப்பதற்காகப் புறப்பட்டான். முல்லைத்தீவுக் கோட்டையில் இருந்த ஆங்கிலப் படைவீரர்களுக்கு இது ஒரு அதிர்ச்சிவைத்தியம்.

காப்டன் வொன் டறிபேர்க் **(Von Drieberg)** தலைமையிலான ஆங்கிலப்படை, பீரங்கிகள், துப்பாக்கிகள் கொண்டு போராடினர். ஆனாலும் பண்டாரவன்னியன், முல்லைத்தீவுக் கோட்டையைத் தரைமட்டமாக்கினான். காப்டன் வொன் ட்றிபேர்க், தன்படை வீரர்களுடன் பின்வாங்கி மன்னார் திரும்பினான். இது நடந்தது 1803ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி. இத்தோல்வியை ஆங்கிலேயரால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எனவே பண்டாரவன்னியனைத் தோற்கடிக்கப் பலமான ஏற்பாடுகளைச் செய்தனர். மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து படைகளைத் திரட்டினர்.

### 5. ஆங்கிலேயரின் சூழ்ச்சி

பண்டாரவன்னியனைத் தோற்கடிப்பதற்காக ஆங்கிலேயர் பின்வரும் முப்படைகளையும் திரட்டினர்.

1) திருகோணமலையிலிருந்து காப்டன் எட்வார்ட் மட்ஜ் **(Edward Madge)** தலைமையிலான படை.

2) யாழ்ப்பாணத்திலிருந்து லெப்டினன் ஜோன் ஜுவல் **(lieutunent John Jewell)** தலைமையிலான படை.

3) மன்னாரிலிருந்து காப்டன் வொன் ட்பறிபேர்க் **(Van Drieberg)** தலைமை யிலான படை.

இந்த ஏற்பாடு, பண்டாரவன்னியனால் தோற்கடிக்கப்பட்ட காப்டன் வொன் ட்ரிபேர்க்கின் ஏற்பாடுதான் என்பதை இலகுவாக நாம் ஊகிக்கலாம். சென்றமுறை அவன் மேற்கொண்ட படையெடுப்பின் போது கரிக்கட்டுமூலை வன்னியனான காக்கைவன்னியனைக் கைக்குள் போட்டுக் கொண்டு, முல்லைத்தீவில் கோட்டை அமைக்கச் சூழ்ச்சி செய்ததுபோல, இம்முறையும் அதே காக்கைவன்னியனைப் பயன்படுத்தி மற்றொரு சூழ்ச்சியை அவன் மேற் கொண்டான்.

அவனுடைய ஏற்பாட்டின்படி மேற்படி மூன்று படைகளும் மூன்று திக்குக ளிலுமிருந்து பண்டாரவன்னியனைச் சுற்றி வளைத்துத் தாக்க வேண்டும் என்பது காப்டன் வொன் ட்ரிபேர்க்கின் திட்டம். ஆனால் மன்னாரிலிருந்து படைகள் வரும் செய்தி பண்டாரவன்னியனை எட்டாதவாறு காக்கை வன்னியன் மூலம், தடை செய்துவிட்டான், ட்ரிபேர்க். ஆகவே, மன்னாரிலிருந்து படைகள் வருவதை அறியாத பண்டாரவன்னியன், யாழ்ப்பாணத்திலிருந்து வரும் படைகளையும் திருகோணமலையிலிருந்து வரும் படைகளையும் எதிர்கொள்வதற்குத் தகுந்த முன்னேற்பாடு களைச் செய்யலானான். திருகோணமலையிலிருந்து வரும் படைகளை எதிர்ப்பதற்காகத் தனது மைத்துனன் (சகோதரியின் கணவன்) குமாரசிங்க வன்னியன் தலைமையிலான படையை ஏற்பாடு செய்தான்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் படையை எதிர்கொள்வதற்காகத் தனது தலைமையில் ஒரு படையை ஏற்பாடு செய்தான். இப்படை மாங்குளத்திற்கு அண்மையில் உள்ள கற்சிலைமடு என்னும் இடத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வரும் படையை எதிர்பார்த்து முகாமிட்டிருந்தது. திடீரென்று எதிர்பாராது அந்தப் பேரிடி விழுந்தது.

1803ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் தேதி அதிகாலை 5 மணி பண்டார வன்னியன் நித்திரையிலிருந்த சமயம், ஆங்கிலேயப்படைகள் அதாவது மன்னாரி லிருந்து காப்டன் வொன் ட்ரிபேர்க் தலைமையில் வந்த படைகள், அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டது. இரண்டுமுறை ஆங்கிலேயப் படைகளைத் திணறடித்து, அவர்கள் அமைத்த முல்லைத் தீவுக்கோட்டையைத் தரைமட்டமாக்கிய பண்டார வன்னியனை கப்டன் வொன்ட்ரிபேர்க் மிகச் சுலபமாகச் சிறைப்பிடித்து விட்டார்.

சூரியன் அஸ்தமிக்காத நாடு என்று புகழ்பாடும் ஆங்கில சாம்ராஜ்யம், ஆங்கிலத் தளபதிகள், பீரங்கிப்படை, துப்பாக்கி வீரர்படை அத்தனையும் சாதாரண ஈட்டியும் வாளும் கொண்டு போரிட்ட பண்டாரவன்னியனை நேருக்கு நேர் பொருதமுடியாமல் சூழ்ச்சியால் மடக்கிப்பிடித்த பெருமையை கற்சிலைமடுவில், ஒரு நடுகல்லில் இன்றும் நாம் பார்க்கிறோம். அந்த வாசகம் "Here Abouts Captain Van Drieberg Defeated Pandara Vanniya, 31st Oct 1803 (இவ்விடத்தில் காப்டன் வொன் ட்ரிபேர்க் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தார்,31 ஒக்டோபர் 1803) நூற்றுக் கணக்கான வன்னியர்களைச் சரண் அடையச் செய்த ஆங்கில ஏகாதிபத்தியம், ஒரு பண்டார வன்னியனை வெற்றி கொண்டதை நடுகல்லில் பொறித்ததன் மூலம் தனது பெருமையை விடப் பண்டார வன்னியன் பெருமையையே பிரகடனப்படுத்தி உள்ளது.

## 6. அடக்குமுறைக்கு எதிரான எழுச்சி:-

எதேச்சாதிகாரத்துக்கும் அடக்குமுறைக்கும் எதிரான எழுச்சி, உலகில் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலத்திலும் ஏற்பட்டிருப்பதை வரலாற்றில் நாம் பார்க்கிறோம். இன்றுகூட நம் கண்முன்னால் அதைப் பார்க்கிறோம். இந்தப் பின்னணியில் பண்டாரவன்னியனின் வீரவாழ்க்கை முடிவில்லாத நீண்டவரலாற்றில் ஒரு அத்தியாயம் என்றே கொள்ள வேண்டும். இந்தியாவில் வீர சாவர்க்கார், ஜான்சிராணி, நானாசாகேப், தாந்தியாதோபே, சுபாஷ் சந்திரபோஸ் - தமிழகத்தில் வீரபாண்டியகட்டபொம்மன், இலங்கையில் கெப்பட்டிப் பொல, வீரபுரான அப்பு போன்றவர்களின் வீரவாழ்க்கை ஒரே விதமாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

அந்தவகையில், சங்கிலியன், பண்டாரவன்னியன் ஆகியோரது வாழ்க்கை, காட்டிக் கொடுக்கும் துரோகிகளால் பாழாகிப் போனதை வரலாறு பதிவு செய்துள் ளது. அதுகூட ஒரு வரலாற்று நியதியாகவே தொடர்கிறது.


அடங்காப்பற்று வன்னியில், அடங்கிப்போன வன்னியர்கள் இருந்திருக்கி றார்கள். அடக்குமுறைக்கு அடிபணிந்துபோன வன்னியர்கள் இருந்திருக்கிறார்கள். ஏன் காட்டிக் கொடுக்கும் காக்கைவன்னியர்களும் இருந்திருக்கிறார்கள். ஆனாலும் என்ன? ஒரு கைலை வன்னியன், ஒரு பண்டார வன்னியன், ஒரு சங்கிலியன், தமது அஞ்சா நெஞ்சம் கொண்ட வீர வாழ்க்கையால் வன்னிப்பிரதேசத்தின் புகழை, குன்றில் விளக்காக ஏற்றி வைத்திருக்கிறார்கள் History Repeats Itself என்று சொல்வார்கள் (வரலாறு மீண்டும் வரும்) அதற்குக் காரணம் இத்தகைய வீர புருஷர்களின் ஆதர்சமும், உந்துசக்தியுமே என்றால் அதில் தவறு இருக்க முடியாது அல்லவா?

*நாம்*
*சேவல் கூவி எழும்பிய*
*நாட்களை விட*
*ஷெல் கூவி எழும்பிய*
*நாட்களே*
*அதிகம்*

**செ. தமிழ்ச்செல்வன்,**
**புசல்லாவ.**

# வன்னிவள நாட்டின் மாமன்னன் மாவீரன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன்

சொ. அமிர்தலிங்கம்



வன்னி என அழைக்கப்படும் பிரதேசமானது முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களையும் கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதியான ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள பகுதியையும் உள்ளடக்கியதாகும்.

ஜே.பி.லூயிஸ் என்பவரின் கருத்துப்படி ''வன்னியின் எல்லைகளாக வடக்கே யாழ்ப்பாண ஏரியும், தெற்கே அருவி ஆறும் நுவரகலாவிய மாவட்டமும், கிழக்கே திருகோணமலை மாவட்டமும், மேற்கே மன்னார் மாவட்டமும் அமைந்துள்ளன. வடக்குத் தெற்காக நீளம் 71மைலும், கிழக்கு மேற்காக அகலம் 60 மைலும் ஆகும்.'' சி. எஸ். நவரத்தினத்தின் கருத்துப்படி ''வடநாட்டில் யாழ்குடா நாட்டிற்கும் நுவரகலாவிய மாவட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இது வன்னி எனப் பெயர் பெறுமுன் அடங்காப்பற்று என்ற பெயரில் இருந்தது. இது கிழக்கில் திருகோணமலையையும் மேற்கில் மன்னாரையும் எல்லையாக உடையது. தென்னமர வாடி, முள்ளியவளை, கருணவால்பற்று, குதிரைமலை, செட்டிகுளத்தின் ஒரு பகுதியையும் இது அடக்குகின்றது. இதன் பரப்பு 3,000 சதுர மைல்''

எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை-நல்லதிரு
கோணமலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு.

லூயிஸ் என்பவருக்கு முன்பு வாழ்ந்த ரெனென்ற் என்பவரின் கருத்துப்படி வன்னிப்பிரதேசம் முன்னர் யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆட்சிக்கு அடங்காமல் இருந்த பிரதேசமாகையால் அடங்காப்பற்று எனப்பட்டது. ஜே.பி.லூயிஸ் என்பவரும் வன்னி என்ற பெயர் வருமுன் யாழ்ப்பாணம், அநுராதபுரத்தின்

தலையீடின்றி சுதந்திரமாக இருந்தமையினால் அடங்காப்பற்று எனப் பெயரிடப்பட்டது என்றார்.

வன்னி என்ற சொல்லிற்கு தமிழ் நாட்டின் வன்னியர் என்ற வீரமரபினரின் வழி வந்தவர் என்பார் ஜே.பி.லூ யிஸ். வன்னி என்ற சொல்லால் குறிப்பிடப்படும் அக்கினியின் மரபில் உதித்தவர்கள் என்பார் சிலர். வனம் சார்ந்த பகுதியாதலால் வன்னி என பலராலும் அழைக்கப்பட்டது. எனினும் வன்னி என்பது விளை நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது எனலாம். விளை நிலத்திற்கு அவசியம் நீர், இங்குள்ள கிராமங்கள் எல்லாம் நீரைத்தரும் குளங்கள், மடுக்கள், மோட்டைகள், கேணிகள், முறிப்புக்கள், வாய்க்கால்கள் என்பவற்றை பெயராகக் கொண்டுள்ளதை ஈண்டு நோக்கலாம்.

அடங்காப்பற்றான இந்த வன்னி நாட்டின் கடைசி மன்னன் குலசேகர வைரமுத்து பண்டாரவன்னியன் ஆவான். இவன் வாழ்ந்த காலம் அந்நிய ஆதிக்கத்தார் தமது ஆதிக்கத்தை ஈழத்தின் பல பகுதிகளில் நிறுவ முற்பட்ட காலம். இவனது காலத்தில் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப்பகுதியும் ஆங்கில ஆட்சியின் முற்பகுதியுமாக அமைகின்றது. இவனது இராசதானி பண்டாரி குளம் என்னுமிடத்தில் அமைந்திருந்தது. இது ஒட்டுசுட்டானிலிருந்து நான்கு மைல் தூரத்தில் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணிப்பாதையில் அமைந்துள்ளது. கட்டழகனாக இருந்தபோது குருவிச்சை வன்னிச்சி என்ற ஒரு அழகியைக் காதலித்தான். இக்காதலி, காதலியார் சமளங்குளத்தில் வாழ்ந்தாள். இதுவும் ஒட்டுசுட்டானிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஒட்டுசுட்டான் நெடுங்கேணிப்பாதையில் அமைந்துள்ளது. இவனது சகோதரியின் பெயர் நல்லாநாச்சான் வன்னிச்சி. இவள் கண்டியில் நுவர வன்னியனின் மூத்த மகனான குமாரசிங்க வன்னியனை மணமுடித்தாள். வன்னிப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களின் ஆட்சிக்கு அடிபணியாது அடங்காப் பற்றாக தலை நிமிர்ந்து இருந்த வேளை அன்னிய ஆட்சிக்கு அடங்க நேரிட்டபோது அதன் விடுதலைக்காக இறுதி மூச்சு வரை போராடிய மாமன்னன், மாவீரன் பண்டாரவன்னியனே.

இம்மன்னன் வன்னியில் வாழ்ந்த மக்களை உணவுற்பத்தியில் ஈடுபடுத்தி தனது முன்னோர்களிலும் பார்க்க உற்சாகமூட்டினான். விவசாயம், கடல்வளம் மிக்கதாக, வளம் பொருந்திய பிரதேசமாக வன்னிப் பிரதேசத்தை திகழச் செய்தான். குளங்கள் அருகே நெற்பரப்புக்களும், அடர்ந்த காடுகளிலே விலங்கினங்களும், கடலிலே மீன்களும் பொருளாதார வளத்திற்கு உரமூட்டின. இதனாலன்றோ அன்னியர் இப்பிரதேசத்தில் தமது நாட்டத்தைச் செலுத்தினர். மேலும் தேக்கு, யானைத்தந்தம், சாயவேர், கருங்காலி, பனைதரும் பொருட்கள், மரக்கறி, பால் தயிர், நெய், தேன், இறைச்சி, மீன், நெல் ஆகியவற்றை உற்பத்தி செய்ததனால் அன்னிய நாட்டார் வன்னியைச் கைப்பற்ற ஏவினர். இதனை உறுதி செய்யும் ஒரு நாட்டார் பாடல்

வன்னி நாடு வளர் சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர் சோலை நாடு
காராளர் வாழும் கன்னியர் நாடு

ஜே.பி.லூயிஸ் என்பவர் ''வன்னி மக்கள் சிறுபோகத்தின் போது ஒட்டை வாலன், சரளி, காடைக்களுத்தன், அழகியவண்ணன், பானன்கலியன், சிறுவெள்ளை, முப்பன்கள், சவரக்குரன், வட்டுப்பித்தன், கருன்குழவாலி, முருங்கன், மணல்வாரி, மலையழகன், முல்லைநெல்லு, அடுக்குவெள்ளை முதலான நெல்லு வகைகள் விதைக்கப்பட்டன. காலபோகத்தின் போது குளவாழை, வெள்ளை நெல்லு, கறுத்த இளங்கலையன், வெள்ளை இளங்கலையன், சீனட்டி, பச்சப்பெருமாள், வெள்ளைச்சீனட்டி முதலான நெல்லுவகைகள் விதைக்கப்பட்டன'' எனக் கூறியுள்ளார். இவ்வாறு உணவுக்களஞ்சியமாக போஷாக்குத்தரும் உணவு வகைகளாக, இன்று காணமுடியாத இவற்றை அன்று உற்பத்தி செய்தமையால் உணவுப்பஞ்சமின்றி வளமிக்க பிரதேசமாகத் திகழ்ந்தது.

இதனை அடிமை கொள்ள யாருக்குத்தான் ஆசைவராது? நாட்டைச் சூறையாட முற்பட்ட அன்னியருக்கு வன்னிப்பிரதேச வளத்தைச் சுகமாக செலவின்றி அனுபவிக்க வழிவகுத்தது. இதனாலன்றோ இதைக்கைப்பற்ற அந்நியர் ஆசைப்பட்டனர்.

வன்னி மன்னன் பண்டாரவன்னியரிடம் ஒல்லாந்தர் சாயவேரை திறையாகத் திரட்ட முற்பட்டபோது அதை முழுதாக எதிர்த்து திறை திரட்டி வழங்காத மன்னன் இவனே. இதை சி.எஸ். நவரத்தினம் என்பவர் ''இவனொரு திடகாத்திரமான, சுதந்திர இளவரசனெனவும் ஒரு முறை ஒல்லாந்தர் சாயவேர் விநியோகிக்கும்படி பணித்தபோது அவன் முழுமட்டமாக நிராகரித்தான்'' எனக் கூறினார். ஒல்லாந் தருக்கு ஏனைய பிரதேச மன்னர்கள் திறை சேர்த்துக் கொடுத்த போதும் அவர்களுக்கு திறை சேர்த்துக் கொடுக்காது, அடிபணியாது வணங்காமுடியாகத் திகழந்தவன் பண்டார வன்னியனே. இதற்கு இந்த நாட்டார் பாடல் நல்ல உதாரணமாகும்.

கறுவா வாங்க வந்தார் - இன்று
கப்பம் என்று கேட்டால்
உறவார் துன்பம் ஈனர் - துரை
உணர வேண்டும் இன்றே

இது பண்டாரவன்னியனின் எச்சரிக்கையை எடுத்து காட்டுகின்றது.

1803ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி முல்லைத்தீவிலிருந்து ஆங்கிலேயரின் அரசாங்க இல்லத்தைத் தாக்கி அங்கு கப்டன் வொன்டிறிபேக்கின் தலைமையில் இருந்த படைப்பிரிவைப் பின்வாங்கச் செய்தான். கப்டன் வொன்டிறிபேக் தனது படைகளுடன் வள்ளங்களில் ஏறி யாழ்ப்பாணத்திற்குத் தப்பிப் போனான். முல்லைத்தீவின் அருகேயுள்ள குதிரை சாய்ந்த இறக்கம் இதனை இன்றும் புலப்படுத்துகிறது. பண்டாரவன்னியனும் அவனது படைவீரர்களும் மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்றனர். இந்த அபார வெற்றியின் மூலம் பண்டார வன்னியன் வன்னி வரலாற்றில் ஒரு முத்திரை பொறித்துள்ளான். மேலும் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்கத் தனக்கு உதவியாக அயற் பிரதேசமான நுவரகலாவிய திசாவையின் ஆட்களையும் சேர்த்துக் கொண்டே இம்முற்றுகையில் ஈடுபட்டான். துப்பாக்கிகள், பீரங்கிகளுடன் படைவீரர்களையும் கைது செய்தான். அவனது இரங்கிய மனம் பின்னர் கைது செய்யப்பட்ட அந்நியருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து திருப்பி அனுப்பியது. இந்தவெற்றியில் முல்லைத்தீவு கோட்டை துண்டு துகளாகியது. இன்றும் இதன் எச்சத்தை காணக்கூடியதாகவுள்ளது. பின்னர் திருகோணமலையி லிருந்து எட்வேட் மெட்சின் தலைமையில் 19ம் படைப்பிரிவைச் சேர்ந்த படை முல்லைத்தீவை மீளக் கைப்பற்றியது. இந்தப்போரிலே பண்டார வன்னியனுக்கு உதவிய குற்றத்திற்காக, குமாரசேகர முதலியாரும் அவருடைய சில நண்பர்களும் இராசத்துரோக குற்றத்திற்காகத் தூக்கிலேற்றப்பட்ட வேதனை தரும் நிகழ்வும் இடம் பெற்றது. அவர்கள் தூக்கிலேற்றப்பட்ட இடம் ''தூக்கு மரத்தடி'' என அழைக்கப்படுகின்றது.

நேருக்குநேர் பண்டாரவன்னியனுடன் நின்று மோதமுடியாது தத்தளித்த ஆங்கிலேய படை மும்முனையில் தாக்குதலை நடத்த உத்தேசித்தது. இதற்கு உறுதுணையாக கரிக்கட்டுமூலை அரசன் காக்கைவன்னியனை நாடி பண்டார வன்னியனையும் அவன் படையினரையும் காட்டித்தரும்படி ஆசைவார்த்தை கூறினர். அந்நியரது செல்வாக்கைப் பிரயோகித்து முன்னணிக்கு வர உத்தேசித்திருந்த காக்கைவன்னியனுக்கு இது உற்சாகத்தை ஊட்டியது. 1803ம் ஆண்டு 19ம் படைபிரிவைச் சேர்ந்த படைப்பிரிவு ஒன்று தளபதி ஜோண் யுவெலின் தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு அனுப்பப்பட்டது. இப்படை வீடுகளைத் தீர்க்கிரையாக்கி, மாடுகளை கொள்ளையடித்து வன்னியில் பெருத்த அட்டகாசத்தை புரிந்தது. திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவிற்கு திரு.எட்வேட் மெட்சின் தலைமையில் ஏற்கெனவே ஒரு படை அனுப்பப்பட்டு இருந்தது. மன்னாரிலிருந்து கப்டன் வொன்றிபேக் தலைமையில் ஒரு படை தரைமார்க்கமாக அனுப்பப்பட்டு இருந்தது. இந்த மும்முனைத்தாக்குதலை எதிர் கொள்ள வேண்டிய அபாய நிலைக்கு பண்டாரவன்னியன் உந்தப்பட்டிருந்தான். எனினும் ஆங்கிலேயரது சூழ்ச்சி வலையில் வீழ்ந்த காக்கைவன்னியனுக்கு முன்கூட்டியே இந்த மும்முனைத் தாக்குதல் பற்றி தெரிந்திருந்தது. இருந்தும் மன்னாரிலிருந்து வரும் படைபற்றி பண்டாரவன்னியனுக்குத் தெரியாமல் இவன் மறைத்து வைத்திருந்தான். எனவே திருகோணமலையிலிருந்து வரும்படையை குமாரசிங்க வன்னியனின் தலைமையில் ஒரு படையை திரட்டி எதிர்க்க விட்டான், யாழ்ப்பாணத்திலிந்து வந்த படையை தானே தலைமைதாங்கி எதிர்த்தான். ஆனால் மன்னாரிலிருந்து வரும் படைபற்றி இவன் எதுவும் அறிந்திருக்காததால் அதை எதிர்க்கும் ஆயத்தங்களில் இவன் ஈடுபட்டிருக்கவில்லை. இப்படியாக முற்கூறிய இரண்டு படைப்பிரிவுகளிலும் எதிர்கொண்டு இருக்கும் வேளையில் மன்னாரிலிருந்து வந்த படை 1803ம் ஆண்டு ஒக்டோபர்

மாதம் 31ம் திகதி அதிகாலை 5மணியளவில் நித்திரையில் ஆழ்ந்திருந்த பண்டாரவன்னியயை தோற்கடித்தது. இதனை கற்சிலைமடுவில் உள்ள ஒரு நடுக்கல்லில் ''பண்டாரவன்னியன் வொன்றிபேக்கினால் தோற்கடிக்கப்பட்டது 31ம் திகதி ஒக்டோபர் 1803'' என பொறிக்கப்பட்டுள்ளது. பண்டாரவன்னியனிடமிருந்து கண்டி மன்னனின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கி ஒன்று ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. இதன் மூலம் ஆங்கிலேயரை எதிர்க்க கண்டி அரசனுடைய ஒத்துழைப்பையும் இவன் பெற்ற ஈண்டு நோக்கத்தக்கது. பண்டாரவன்னியனை தோற்கடித்தமைக்கு பரிசாக பண்டாரவன்னியனுக்கு சொந்தமான பண்டாரி குளம் கப்டன் றிபேக்கதிற்கு பரிசாக அளிக்கப்பட்டிருந்தது. 1865ம் ஆண்டு வரை றிபேக் சந்ததியினர் அச்சொத்துகளை பராமரித்து வந்துள்ளனர்.

பண்டாரவன்னியன் 1803ம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டு வன்னியை விட்டு விலகியபோதும் மீண்டும் வன்னியை கைப்பற்றும் நோக்கத்துடன் 1810ம் ஆண்டில் மே மாதத்தில் கண்டி பிரசைகளுடன் கிழக்கு மூலை, தெற்கு மூலைப் பகுதியில் தனது எதிர்ப்பை பலமாக தெரிவித்தான். இவன் அருகில் இருந்த ஒரு கிராமத்தை கொள்ளையடித்துச் சென்றதாக ஆங்கிலேயர் அறிக்கைகள் கூறுகின்றன. இப்படையெடுப்பில் பண்டாரவன்னியனிடம் 14 வீரர்களே இருந்தனர். எனினும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இப்படையின் வலிமை கண்டு கதிகலங்கினர். கண்டி இராச்சியத்தின் எல்லைப்பகுதிகளான வெடிவைத்தகல், வவுனியா ஆகிய இடங்களில் கடுமையான பாதுகாப்புக்கள் நிறுவப்பட்டு இருந்தன. 1810ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் தாக்க இருப்பதாக கலெக்டர் ரேணருக்கு மேற்பற்று கிழக்கு முதலியார் கதிர்காமநாயகத்திடம் இருந்து செய்தி கிடைத்தது. உடனே கலெக்டர் ரேணர் வன்னிப்பாதுகாப்பை அதிகரித்தார். ரேணரின் விண்ணப்பத்தின் பேரில் யாழ்ப்பாணம், திருகோணமலை முதலிய பிரதேசங்களிலிருந்து படைகள் அனுப்பப்பட்டன. மீண்டும் மும்முனைத் தாக்குதல்களாக திருகோணமலையில் எட்வேட் மெட்சின் தலைமையில் ஒரு படையும், மன்னாரிலிருந்து கப்டன் வொன்றிபேக் தலைமையில் இன்னொருபடையும், யாழ்ப்பானத்தில் இருந்து சேனாதிபதி யூபெல் தலைமையில் இன்னொரு படையும் அனுப்பப்பட்டன. இவர்களுக்கு வன்னியில் பலத்த எதிர்பாரா எதிர்ப்புக்கள் இருந்தன. திருகோணமலையில் இருந்து வந்த படையை நல்ல நாச்சான் வன்னிச்சியும், மன்னார் எல்லையில் பனங்காமம் பகுதியை பாதுகாத்த தங்கை உமாச்சியா வன்னிச்சியும், எதிர்த்துப் போராடினார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த படையை மாங்குளத்திற்கும் முருகண்டிக்கும் இடையில் 18ம் போர் என்னுமிடத்தில் முன்னேறிச் சென்று பண்டாரவன்னியன் எதிர்த்தான். இந்த முப்படைகளினதும் மும்முனைத்தாக்குதல் கடுமையாக இருந்ததனால் பண்டாரவன்னியனின் படைகளால் சமாளிக்க முடியாமல் போயிற்று. 1811ம் ஆண்டு உடையாவூர் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பண்டாரவன்னியன் படுகாயம் அடைந்தான். இவனது படைவீரர்கள் இவனை பனங்காமத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அடுத்த நாள் இவனது ஆவி பிரிந்தது. 34 வயதிலே தன்னிகரில்லாது போரிட்ட அம்மாமன்னன் இறக்க நேரிட்டது. இத்துடன் வன்னியரின் எதிர்ப்பும் மறையலாயிற்று. பண்டாரவன்னியன் ஆங்கிலேயரால் தோற்றகடிக்கப்பட்ட செய்தி கேட்டதும் இவனது காதலி குருவிச்சை வன்னிச்சியும், இவனது சகோதரி நல்லநாச்சான் வன்னிச்சியும் கார்த்திகைக்கிழங்கை உட்கொண்டு மரணமாயினர். இவர்களது பூதவுடல்கள் பன்னாடையில் வைத்து ஒட்டுசுட்டான் நெடுங்கேணி பாதையில் உள்ள குருவிச்சை ஆற்றில் இருக்கக் காணப்பட்டது. இப்படியாக தங்களுக்கு வேண்டியவர்கள் மரணிக்கும்போது உடன்கட்டை ஏறுவது வன்னியர்களின் இயல்பு. இறுதி மூச்சுவரை ஒல்லாந்தரையும், ஆங்கிலேயரையும் வன்னியைப்பிடிக்க விடாது, விரட்ட முற்பட்டவன் பண்டாரவன்னியன் என்னும் மாவீரனே. தனது நாட்டின் சுதந்திரத்திற்காகவும், அந்நிய ஏகாதிபத்திய ஒழிப்பிற்காகவும் இவன் வன்னிப்பிரதேசத்திலே தனித்தும் ஒருமித்தும் தலைமைபூண்டு போராடினான் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒப்பற்ற மாவீரனின் நினைவுத் சின்னங்களாக குமுழமுனையில் பண்டாரவன்னியன் கிணறும், பண்டாரவன்னியன் வளவும், அமைந்து இன்றும் பெருமை தருகிறது. இவன் புகழை ஒரு நாட்டார் பாடல் வருணிக்கிறது.

அன்னை பூமியெனும் அடங்காப்பற்றாம்
வன்னி மண்ணின் மானத்தைக் காத்திட
தன்னுயிர் கொடுத்து புகழ் கொண்ட மா
மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன்.

தனது இனத்திற்காக, நாட்டிற்காக தன்னுயிரைப் போக்கிய பண்டார வன்னியது வீரவரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. இன்று கூட பண்டார வன்னியன் மக்கள் இதயங்களில் வாழ்கிறான்.

**உசாத்துணை**


1. ஜே.பி. லூயிஸ் மனுவல் ஒப்த வன்னி டிஸ்றிக்ற்ஸ்
2. சி.எஸ். நவரத்தினம் வன்னியும் வன்னியரும்
3. குலசபாநாதன் வளமிகு வன்னி நாடு - கட்டுரை
4. கலாநிதி. சி. பத்மநாதன் - வன்னியர்
5. த. சிலோன் ஜேனல் ஒப்த ஹியுமானிற்றிஸ்
6. வீரகேசரியில் வெளிவந்த கட்டுரைகள்
7. புதுக்குடியிருப்பில் நான் காரியாதிகாரியாக இருந்த போது சேகரித்த தகவல்கள்
8. கற்சிலைமடுவில் காணப்படும் கல்வெட்டு.


***குருதிக் குழிகளுக்குள்***
***மனித விழுமியத்தை***
***மறைக்க முயலுவதும்***
***அஞ்சலித்து அழுகின்ற***
***அயலவர் சோகத்தை***
***இரசித்து மகிழுவதும்***
***மனிதமென்றால்***
***நானும் ஒரு மனிதனே!***

**கோ. கணேஸ்,**
**வவுனியா.**

***உழைத்து வாழும் எறும்பு - அட்டை***
***உறிஞ்சி வாழுமே!***
***பிழைத்திருப்ப துலகில் என்றும்***
***பெரிய வர்க்கமோ?***

**இ. தமிழரசி,**
**திருமலை.**

# வன்னிப் பிரதேச வயற்பண்பாடு

தமிழ்மணி அகளங்கன்

எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை-நல்லதிரு
கோணமலை கீழ்பால் கேதீச் சரம்மேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு,

என வன்னி நாட்டின் எல்லை ஒரு காலத்தில் வகுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இப்பொழுது இவ்வளவு பரந்த பிரதேசத்தை வன்னிப் பிரதேசம் என்று அழைப்பதில்லை.

வவுனியா, முல்லைத்தீவு மன்னார்,கிளிநொச்சிப் பிரதேசங்கள் ''வன்னிப் பிரதேசம்'' என்று இன்றும் அழைக்கப்படுகின்றன.

இவ் ஆய்வு வவுனியா அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுடன் அதிகம் சம்பந்தப்பட்டது. இருப்பினும் வன்னிப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளுக்கும் பெரும்பாலும் பொருந்தும்.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டில் வாழும் மக்களின் பண்பாட்டினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. சங்கப் புலவர் பெருந்தகையாம் ஔவையார் ஒரு நிலத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

எனக்குறிப்பிடுகின்றார்.

ஒரு நிலம் மனிதர்கள் வாழுகின்ற நாடாக இருக்கலாம். அல்லது மிருகங்கள் உலாவித்திரியும் காடாக இருக்கலாம். பள்ளமானதாக நீர் வளம் பொருந்தியதாக இருக்கலாம், அல்லது வளமற்ற மேடாக இருக்கலாம்.

இவற்றை வைத்து அந்நிலம் நல்ல நிலம் என்றும் தீய நிலம் என்றும் தீர்மானிக்க முடியாது. நிலத்திற்குப் பெருமை அங்கு வாழும் மக்களாலேயே ஏற்படுகின்றது.

எந்த நிலத்தில் நல்ல மனிதர் வாழ்கின்றாரோ அந்த நிலமே சிறந்த நிலம் என்பது ஔவையாரின் அறிவு பூர்வமான கருத்தாகும்.

இந்த அடிப்படையில் வன்னி நிலம், நல்ல மனிதர் வாழ்ந்த நிலமாக இருந்தது. அதனால் நல்ல நிலமாகத் திகழ்ந்தது.

''உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'' என்ற பழந்தமிழ் வாக்கியத்திற்கு ஏற்ப, பண்பாட்டில் உயர்ந்தோர் வாழ்ந்த நிலமாக வன்னி நிலம் இருந்தது.

கல்வியறிவு, பொருளாதாரக் காரணிகளில் வன்னி மக்கள் பின்தங்கி இருந்த காலத்திலும் உள்ளத்தால் உயர்ந்தோராக, மானுடப் பண்புகள் சிறந்து விளங்கும்

பண்பாட்டு நிலையில் உயர்ந்தோராகவே விளங்கினர்.

பண்பாடு என்ற சொல், வன்னிக்கே அதிகம் பொருந்தும். மண்ணை உழுது பண்படுத்தி விவசாயம் செய்பவர்களே முற்று முழுதாக வாழ்ந்ததனால் பண்படுத்துதல், பண்படுதல், பண்பட்டது என்ற பொருள்களைக் கொண்ட பண்பாடு என்ற சொல் வன்னிக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது

குளங்களுக்கு அருகில், வயல்கள் நிறைந்த பகுதிகளில் வன்னி மக்கள் வாழ்ந்தனர். இப்பகுதி மக்களின் ஒரே தொழில் வேளாண்மை எனப்படும் விவசாயமேயாகும்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்ற வள்ளுவரின் குறளில் வேளாண்மை என்ற சொல் உபகாரம் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

இவ்வுலகில் இருந்து, பொருளைத் தேடி, அதைப் பாதுகாத்து இல்வாழ்க்கை நடாத்துவதன் நோக்கம் விருந்தினரைப் போற்றி உபகாரஞ் செய்தற் பொருட்டேயாம் என்பது இக்குறளின் பொருளாகும்.

வேளாண்மை என்பதன் பொருள்களாக, ஈகை, உபகாரம், பயிர்செய்தல், என்பவற்றைக் கழகத் தமிழ் அகராதி குறிக்கின்றது.

பயிர்த்தொழில் செய்வோன் அதாவது வேளாண்மை செய்வோன் வேளாளன் எனப்பட்டான். பயிர் செய்தலால் மட்டுமன்றி,ஈகை, உபகாரம் முதலியவற்றைச் செய்கின்ற நற்குணம் பொருந்தியவனாக அவன் இருந்ததாலும் வேளாளன் என அழைக்கப்பட்டான் என்று கூறலாம்

மனிதர்களுக்கு மட்டுமன்றி, பூச்சி, புழுக்கள், பறவைகள் விலங்குகள் என எல்லா ஜீவராசிகளுக்கும் அறிந்தும் அறியாமலும் உபகாரஞ் செய்யும் தொழில் இவ் வேளாண்மைத் தொழிலே அன்றி வேறில்லை. அதனால் இத்தொழிலும் வேளாண்மை என்றே அழைக்கப்பட்டது. இப் பொருத்தப்பாடு நயந்து வியக்கத் தக்கது.

வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருத நிலப் பரப்புக்குள் விவசாயமாம் வேளாண்மை செய்து வாழ்ந்த வன்னி மக்களின் பாரம்பரியப் பண்பாட்டையும், வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வந்தாரை வாழவைக்கும் வன்னி**

வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். வன்னியர் வாழ்ந்த பிரதேசம் வன்னிப் பிரதேசமாகலாம் என்பாருமுளர்.

வன்னி என்பது காட்டைக் குறிக்கும் ஒரு சொல், வனம் சார்ந்தது வன்னி. எனவே காடுகள் பொருந்திய இப்பிரதேசம் வன்னிப் பிரதேசம் என அழைக்கப்பட்டு, வன்னியில் வாழ்ந்தவர் வன்னியர் என அழைக்கப்பட்டிருக்கலாம்.

வன்னி என்றால் நெருப்பு என்றும் பொருள் உண்டு. எனவே வன்னிக் குலத்தில் வந்தோர் வன்னியர் என அழைக்கப்பட்டு, வன்னியர் வாழ்ந்த பிரதேசம் வன்னிப் பிரதேசமாகியிருக்கலாம்.

நெருப்பைப் போன்றவர்களாக கோபமும், ரோசமும், தன்மானமும் மிக்கவர்களாக வன்னியர் வாழ்ந்ததனால் வன்னிப் பிரதேசம் பண்டார வன்னிய மன்னனின் ஆட்சிக்காலத்தில் அடங்காப்பற்று என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

மிகவும் தீரத்தோடு எதிரியை எதிர்த்துப் போராடும் ஆற்றல் மிக்கவர்களான வன்னியர், மன்னர்களின் படைப்பிரிவுகளில் முக்கிய பங்கு வகித்தனர் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

தென் இந்தியாவில் வன்னியர் குலம் என்று ஒரு குலம் இன்றும் இருக்கின்றது. அவர்களுக்கும் இவ்வன்னியில் வாழ்கின்ற வன்னியருக்கும் இடையே ஏதேனும் தொடர்பிருக்குமோ என்ற ஐயமும் எழாமல் இல்லை.

ஆனால் அது அர்த்தமில்லாத ஐயமே ஆகும். தென்னிந்திய வன்னியர் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்படுபவர். ஈழத்து வன்னியர் அப்படி இல்லை.

அத்தோடு இங்கு வாழ்கின்ற அத்தனை பேருமே வன்னியர் என்றே அழைக்கப்படுகின்றனர். எனவே வன்னி என்பது நிலம் சார்ந்த பெயரே அன்றிக் குலம் சார்ந்த பெயராக இருக்க முடியாது.


யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்தவர் என்று அழைக்கப்படுவது போல, வன்னியில்

வாழ்பவர் அனைவரும் வன்னியர் என்று அழைக்கப்படுகின்றார்கள் என்பதே மிகவும் பொருத்தமானதாகும்.

வன்னி (நெருப்பு) போன்ற குணங்கொண்டவர்களாகவும், வன்னி (வனம்) சார்ந்த வாழ்வுடையவர்களாகவும் இருந்ததனால் இப்பிரதேச மக்கள் வன்னியர் எனப்படுவது சாலப்பொருந்தும்.

இப்பிரதேச மக்கள், இப்பிரதேசத்திற்கு எப்போது வந்தார்கள், எங்கிருந்து வந்தார்கள், எப்படி வந்தார்கள், ஏன் வந்தார்கள் என்ற விபரங்கள் எதுவும் நம்பத் தகுந்த ஆதாரங்களோடு இதுவரை நிறுவப்படவில்லை.

அதனால் நெடுங்காலமாக வாழ்கின்றார்கள் என்றே கொள்ளலாம் தங்களுக்கென தனியரச மைத்துத் தனிச் சுதந்திர இராச்சியத்தைக் கட்டியாண்ட பெருமை இம்மண்ணின் மன்னர்களையும் மக்களையும் சாரும்.



உலகின் கடைசித் தமிழ் இராச்சியம் வன்னி இராச்சியமே என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட முடிபாகும். 1803ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் நாள் கப்டன் வொன் டிறிபேக்கினால் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்படும்வரை வன்னி இராச்சியம் யாருக்கும் அடிபணியாத, அடங்காப் பற்றாகத் தனியரசாகவே திகழ்ந்தது.

மக்களுக்கு மண்ணிலே இருந்த அடங்காப்பற்றும், மக்களும் மன்னனும் யாருக்கும் அடங்காமல் நாட்டுப் பற்றோடு வாழ்ந்ததுமே வன்னி மண்ணின் வீர வரலாற்றுக்கும், அடங்காப் பற்று என்ற பெயருக்கும் காரணமாயிற்று எனலாம்.

வன்னியிலே வாழ்ந்த மக்கள் தொழில் தேடியோ வாழ்வு தேடியோ வன்னியை விட்டு வேறு பிரதேசங்களுக்குச் சென்றதே இல்லை

அரசாங்க உத்தியோக நிமித்தமும், திருமண பந்தத்தாலும் அண்மைக் காலத்தில் வன்னியை விட்டு வேறு பிரதேசத்திற்கு வாழச் செல்லும் வழக்கம் சிறிதளவு காணப்பட்டாலும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் இவ்வழக்கம் இருக்கவே இல்லை என்று முதியோர்கள் பலர் கூறுகின்றார்கள்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்து ஆணோ, பெண்ணோ வன்னியில் திருமணஞ் செய்து வன்னியில் வாழும் வழக்கம் இருந்ததேயன்றி, அழைத்துச் சென்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வரலாறு இல்லை அதற்குக் காரணம் வன்னியின் வளம் மட்டுமல்ல வன்னியின் பண்பாடுமே என்று துணிந்து கூறலாம்.

பால், தயிர், நெய், தேன், இறைச்சி, பழவகைகள், நெல், மரக்கறி என சகல வகையிலும் பொருளாதார நிறைவு பெற்ற நிலமாக வன்னி நிலம் இருந்ததனாலேயே இங்கு வந்தவர்கள், இப்பிரதேசத்தைத் தம் வாழ்விடமாகக் கொண்டனர்.

வியாபாரக் காரணத்தாலும், அரசாங்க உத்தியோகக் காரணத்தாலும், வன்னிக்கு வந்தவர்கள் வன்னியிலேயே வாழ விரும்பினர். பெரும்பான்மையோர் வன்னியிலேயே வாழ்கின்றனர்.

வன்னிக்கு வந்து குடியேறியவர்களில் முக்கியமானவர் யாழ்ப்பாணத்தவரே. இவர்கள் பெருந்தொகையினராக பிற்காலத்தில் வந்து குடியேறினர். குடியேற்றத்திட்டங்கள் மூலமும், வியாபார, உத்தியோக வருகை மூலமும் யாழ்ப்பாணத்தவரின் வருகை மிகுதியாக இருந்தது

வளம் நிறைந்த தென் இந்தியத் தமிழ் நாட்டை நோக்கி, வடநாட்டு ஆரியர்கள் வந்து குடியேறியதை இதற்கு ஒப்பிடலாம்.

இந்தியாவிலிருந்து மன்னார்க் கடல்வழியாக வந்த பல இந்தியக் குடும்பங்களும் வன்னியைத் தம் வாழ்விடமாகக் கொண்டன. மலையகத்தில் தோட்டங்களில் வாழ்ந்த இந்திய வம்சாவழியினரும் வன்னியை நோக்கி வருகை தந்து வன்னியை வாழ்விடமாகக் கொண்டு வாழ்கின்றனர்.

வன்னிப்பிரதேச வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதாரத்திற்கு கல்வி அவசியமானதாக இல்லாதிருந்த தனால் கல்விகற்க வேண்டிய தேவையும் முற்காலத்தில் அதிகம் இருக்கவில்லை. அறிவுக்கு மட்டுமே கல்வி தேவைப்பட்டது. அதனாற்தான் கல்வியிலே வன்னி பின் தங்கியது.

எந்தப் பிரதேசத்திலிருந்து வந்து, எந்த நிலையில் குடியேறினாலும் அவர்களை வரவேற்று வாழ்வளித்து மகிழும் பண்பாடும் வளமும் வன்னியில் இருந்தமையால் ''வந்தாரை வாழவைக்கும் வன்னி நிலம்'' என்ற பெருமை இந்நிலத்திற்கு வந்து பொருந்தியது

வைத்திய வசதிகளற்ற முற்காலத்தில், கிராமங்களில் இருந்த பரியாரியார், அண்ணாவியார் என அழைக்கப்படுகின்ற வைத்தியர்களினால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நோய்கள் ஏதாவது கிராமங்களில் பரவி, பலர் இறந்து போனால், அவ்வூரைவிட்டு இன்னொரு ஊருக்கோ அல்லது புதிய ஊர் ஒன்றுக்கோ சென்று வாழும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது.

ஆனால் அதற்காக வன்னியை விட்டு வேறு பிரதேசங்களுக்குச் செல்வதில்லை. இந்த நிலத்திலே வாழ்ந்த மக்கள் பொருள்தேடி வேறுபிரதேசங்களுக்குச் சென்றதில்லை என்றும், வாழ்வதற்காக வேறு பிரதேசங்களுக்குச் சென்றதில்லை என்றும் பெருமையோடு பெரியவர்கள் இன்றும் கூறுகின்றனர்.

**கிராமத்தில் வாழ்க்கை வசதிகள்**

வன்னிக் கிராமங்களிலே வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. இயற்கையோடு இணைந்த புலநெறி வாழ்க்கையாக அவர்களின் வாழ்க்கையைக் குறிப்பிடலாம். சங்ககாலத் தமிழ் மக்களின் வாழ்க்கை இத்தகையதே.

தங்க நகைகள், உப்பு, புடைவை, மணிக்கடைப் பொருட்கள், புகையிலை, மண்ணெய் முதலான சில பொருட்களே விலைக்கு வாங்க வேண்டிய தேவை இருந்தது. இவைகளிலே நகை வாங்குவதற்காக மட்டுமே தான் அதிகமானோர் நகருக்கு வந்தனர்.

வவுனியா நகர் காடாகக் கிடந்த அந்தக் காலத்தில் வவுனியாவிற்கு வழங்கிய பெயர் விளாங்குளம் என்பதாகும்.

வவுனியா நகரில் வவுனியாவைச் சேர்ந்தவர்களின் கடைகள் எதுவும் அக்காலத்தில் இருக்கவில்லை. கடந்த முப்பது ஆண்டுகளுக்குள்ளே தான் சில கடைகள் ஊரவர்களால் நடாத்தப்படுகின்றன.

வட்டுக்கோட்டை, காரைநகர் வர்த்தகர்கள் சிலரும் மன்னார் முஸ்லிம்கள் சிலரும் சில கடைகளை வைத்திருந்தார்கள். நகரம் வெறிச்சோடிக் கிடந்த காலம் அது.

வண்டில் கட்டி நகருக்கு வருவோர் வண்டிலைத் தற்போதுள்ள கடை வீதியில் கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ள பழைய பேரூந்து நிலையத்தில் நிறுத்தி மாடுகளை அவிழ்த்துக் களைப்பாற மரத்தில் கட்டி விட்டு ஓரிருவர் காவல் நிற்பார். புலிகள் உலாவும் காடாக அவ்விடங்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள்.

புடைவைகளைப் பெரும் பொதியாகக் கட்டிக் கொண்டு குதிரைகளிலும் பின் சைக்கிள்களிலும் வியாபாரிகள் கிராமத்திற்குக் கொண்டு வருவார்கள்.

புடைவைப் பொதியைப் ''பொட்டளி'' என்றும், கொண்டு வருவோரைப் பொட்டளிக்காரர் என்றும் ஊரார் அழைத்தனர் பட்டாணிமார் சிலரும், வேறு வர்த்தகர்களும் கிராமங்களுக்குப் புடைவைகளைக் கொண்டுவந்து வீடு வீடாக விற்றனர். அதனால் புடைவைகள் வீட்டுக்கே வந்து சேர்ந்தன

திருமணச் சடங்கிற்கு மட்டும்,நகருக்குச் சென்று பட்டுச்சேலை, பட்டுவேட்டி, நகைகளை வாங்கி வந்தனர்.

சில கிராமங்களில் உடையார், முதலியார் முதலான சில வசதிபடைத்தவர்களின் வீடுகளில் நடைபெறும் திருமணங்களுக்கு விலையுயர்ந்த பட்டுச்சேலை, பட்டு வேட்டி, தாலிக்கொடி முதலானவற்றை வாங்கும் வழக்கம் இருந்தது.

அவ்வூரிலுள்ள வசதி குறைந்தவர்களின் திருமணச் சடங்கிற்கு, கூறைச் சேலை (பட்டுச்சேலை) கூறைவேட்டி (பட்டுவேட்டி) முதலானவற்றை முதலியார், உடையார் முதலானோரிடம் இரவலாகப் பெற்றுத் திருப்பிக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது. தாலியோடு, தாலிக்கொடி கூட இரவலாகப் பெற்றுத் தாலிகட்டித் திருமணஞ் செய்து விட்டுத் திருப்பிக் கொடுத்த நிகழ்ச்சியும் சில இடங்களில் நிகழ்ந்திருக்கிறது.

மனித நேயத்துக்குமேல்,பண்பாடு என்று எதுவும் இல்லை என்பது இவர்களின் கருத்தாக இருந்திருக்கலாம். நிலச் சுவாந்தர், பண்ணையார், போடியார் எனப்படும் முதலாளித்துவ அமைப்பெதுவும் வன்னியில் சிறிதளவும் காணப்படவில்லை. எல்லோரும் உழுதுண்டு வாழ்ந்தார்கள். ஒவ்வொரு தனிமனிதனது தேவையும் முக்கியத்துவமும் உணரப்பட்டது.

உடுபுடைவைகள் போல, மண்ணெய், மணிக்கடைப்பொருட்களான வளையல் கண்ணாடி, சீப்பு முதலான வையும், புகையிலையும் கிராமங்களுக்கு வீடு வீடாக விற்பனைக்கு வந்தன. புகையிலை யாழ்ப்பாணத்தவரால் கொண்டு வரப்பட்டது.

மரத்தளபாடங்களைச் செய்யும் தச்சுத் தொழிலாளிகள் கிராமங்களிலே வந்து தங்கியிருந்து, அங்குள்ள மரங்கள் மூலம் கதிரை மேசை கட்டில் முதலான தளபாடங்களைச் செய்து அங்குள்ளவர்களுக்கு விற்பார்கள்.

மட்பாண்டத் தொழிலாளிகள் கிராமங்களிலே வந்து தங்கியிருந்து மட்பாண்டங்களைச் செய்து அங்குள்ள வர்களுக்கு விற்பார்கள்.

கலப்பைகள், அலவாங்கு, கத்திகள், போன்றவற்றையும் இரும்புத் தொழில் (கொல்லர்) செய்வோர் கிராமங்களில் வந்து தங்கியிருந்து விவசாயிகளுக்கு வேண்டிய உபகரணங்களையும் செய்து கொடுத்தனர்.

மயிர் வினைஞர் மாதமொரு தடவை வீடுகளுக்கு வந்து முடிதிருத்திச் செல்வர். சலவைத் தொழிலாளிகள் வீடுகளுக்கு வந்து, ஆடைகளைப் பெற்றுச் சென்று சலவை செய்து கொண்டு வந்து கொடுத்தனர்.

இதனால் கிராமத்தவர் தமது மிகமுக்கியமான தேவைகளையெல்லாம் கிராமத்திலேயே நிறைவு செய்தனர். கிராமங்களில் கடைகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் தேவைகள் எல்லாம் நடமாடும் கடைகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டன.

மரக்கறிவகைகள் எதுவும் வாங்க வேண்டிய தேவை இருக்கவில்லை. மாரிகாலத்து உணவுத் தேவைக்காக ''இறைச்சி வத்தல்'' ''மீன் கருவாடு'', ''பண்டிக் கருக்கல்'' ''பாலைப் பழப்பாணி'' ''உலுவிந்தம் பழப்பாணி'' ''இலுப்பைப்பூப்பாணி'' என்பனவும், நெய், தேன், என்பனவும், சாத்துப் பூசணிக்காய், நீத்துப் பூசணிக்காய் என்பனவும் சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

போதிய அளவு நெல் வீடுகளில் இருந்தது. சீனட்டி, முத்துச் சம்பா முதலான சில வகை நெல்லரிசிகளையே தேர்ந்தெடுத்து உணவுக்குப் பயன்படுத்தினர்.

குரக்கன்மா, அரிசிமா, தினைமா முதலான மாவகைகள் பயன்படுத்தப்பட்டன. எள் எல்லோர் வீட்டிலும் இருக்கும். அதனால் நல்லெண்ணெய் அதிகம் கிடைத்தது.

கோதுமை மா 1970 இன் பின்பே வன்னிக் கிராமங்களில் உணவுக்காக நுழைந்தது. அதற்கு முன் மரணச் சடங்கில், பாடை கட்டும் போது அதில் கடதாசிகளை ஒட்டுவதற்காக, அரை இறாத்தல் வரை கோதுமை மா நகரத்திலிருந்து வாங்கி வரப்படும். சுடுநீர் விட்டுக் குழைத்துக் கழியாக்கி, கைபடாமல் தடியினால் எடுத்து தாள்களை ஒட்டுவதற்கு அது பயன்படுத்தப்படும். பின் அது கழியாக்கிக் கிண்டிய சட்டியுடன் மிகவும் பத்திரமாகக் காட்டிலே எறியப்படும்.

கோதுமை மா வயிற்றினுள் போனால் குடல்கள் ஒட்டிவிடும் என்று அக்காலத்தில் நினைத்துப் பயந்தனர். அதனால் கோதுமை மா பயன்படுத்தப்படுவதில்லை.

''எள்'' கிராமங்களிலே பயிரிடப்பட்டது. எள்ளை வீடுகளிலே இடித்து எண்ணெய் எடுத்தனர். எண்ணெய் எடுத்துவிட்டு சர்க்கரை, தேன் என்பனவற்றைக் கலந்து இடித்துக் குழைத்து எல்லோரும் உண்பர்.

எள்ளை கல்லுரலில் இடிக்கும் போது உலக்கையில் படும் எண்ணெய்யை ஆண்பிள்ளைகளின் நெஞ்சில் படும்படியாக உலக்கையால் நெஞ்சில் மெதுவாக இடிக்கும் வழக்கம் எல்லா வீடுகளிலும் உண்டு.

இதன் மூலம் ஆண்களுக்கு நல்ல வீரம் உண்டாகும் என்ற நம்பிக்கை தாய்மாருக்கு இருந்தது.

தேங்காய் குறைவாக இருந்த கிராமங்களில், தேங்காயெண்ணெய்க்குப் பதிலாக இலுப்பை எண்ணெய் பயன்பட்டது. இலுப்பை விதையிலிருந்து இலுப்பை எண்ணெய் எடுக்கப்பட்டது. இது வீடுகளில் சாதாரண தேவைகளுக்காகப் பெண்களால் செய்யப்பட்ட கருமமாகும்.

**தொழிலும் ஒற்றுமையும்**

வன்னிப் பிரதேசத்தில் முக்கியமான தொழிலாக நெல் வேளாண்மையே இருந்தது. காலபோகம், இடைப்போகம், சிறுபோகம் என மூன்று காலங்களில் அவற்றிற்குரிய கால அளவைக் கொண்ட நெல்வகைகள் விதைக்கப்பட்டன. ஒரே நிலத்தில் இருபோக வேளாண்மையே அதிகம் செய்யப்பட்டது. மூன்றாவது போகத்திற்கு நிலம் ஒதுக்கப்பட்டிருந்த வழக்கம் இருந்தது.

சேற்று விதைப்பே முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. புழுதி போடும் வழக்கம் குறைவு. புதியதாகக் காட்டை வெட்டி எரித்துக் காட்டு வேலி போட்டு, நெல்லுக் கொத்தும் வழக்கம் கிராமங்களில் அதிகம் இருந்தது. இப்புதிய நிலத்தில் வரம்புகள் போடப்படாமல் இருந்ததனாலும் மரவேர்கள் நிலத்தினுள் கிடந்ததனாலும் தண்ணீர் கட்டி உழவு செய்ய முடிவதில்லை. அதனால் நெல்லை விதைத்து விட்டு மண்வெட்டியினால் நிலத்தைக் கொத்தி விடுவார்கள். இது நெல்லுக்கொத்துதல் எனப்படும்.

இவ்வகை நிலத்தைப் பிலவு (புலவு) என்று அழைப்பர். இங்கு நீர்பாய்ச்ச முடியாததனால் மழையை நம்பியே நெற் செய்கை நடைபெறும். இதனை மானாவாரி (வானவாரி) என்பர்.

புழுதி விதைப்பும், வயலில் தண்ணீர் தேக்கி உழாமல் ஈரத்தில் அல்லது வறட்சியில் உழுது நெல்விதைக்கப்படும். இது ஈரப்புழுதி, காய்ச்சற் புழுதி எனப் பெயர் பெறும்.

புதுக்காட்டை வெட்டி இருதடவைகள் நெல்லுக்கொத்தியபின் வேர்கள் பிடுங்கப்பட்டு வரம்புகள் போடப்பட்டு வயல்களாக ஆக்கப்படும்.

வயல்வேலைகளுக்கு எருமை மாடுகளே முற்காலத்தில் முக்கிய பங்களிப்புச் செய்தன. எருத்து மாடுகள் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

எருமைமாடுகளில் ''சிறப்பை'' எனப்படும் மரத்தால் செய்யப்பட்ட நீள்சதுரப் பெட்டி போல அமைந்த மணி கட்டப்படும். கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட சிறப்பைகளின் ஒலியைக் கொண்டு மாடுகளை தூரத்தில் வைத்தே இனங்கண்டு கொள்வர்.

எருமை மாடுகளைச் சோடியாகப் பிணைத்து வயல் உழவும், பலகை அடிக்கவும், சூடடிக்கவும் என எல்லாத் தேவைகளுக்கும் பயன்படுத்துவர். உழவு, பலகை அடிப்பு முதலானவற்றுக்கு எருமைகளைச் சோடி சேர்க்கும் போது எருமைக் கடாவுடன் எருமையை (பெண்)ச்சோடி சேர்க்கும் வழக்கமும் உண்டு

எருத்து மாடுகளைப் பயன்படுத்தும் போது இவ்வழக்கம் இல்லை. பசுமாடுகளை எருத்து மாடுகளுடன் பிணைப்பதில்லை. சூடடிக்கும் போது ஐந்து, ஏழு எருமை மாடுகளை (கடா உட்பட) பிணைத்துச் சூடடிக்கும் வழக்கமும் உண்டு.

வயல் வேலைகள் எதற்கும் முற்காலத்தில் கூலி கொடுக்கப்படுவதில்லை. கூலியாட்களும் இல்லை. கூலிவேலை என்ற விடயமே அக்காலத்தில் தெரிந்திருக்கவில்லை.

ஒரு குளத்திற்குக் கீழே வயல்செய்பவர்கள் அநேகமாக நெருங்கிய உறவினர்களாகவே இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மாறி மாறி எல்லோரது வேலைகளையும் ஒற்றுமையாகச் செய்வார்கள்.

வீடு கட்டுதல், வீடுவேய்தல் முதலான வேலைகளும்,சேர்ந்தே செய்யப்படும் வயலாக்கப்பட்ட நிலங்களுக்கு வேலிபோடுவதற்கு காட்டுக் கதியால்கள் (தடிகள்) வரிச்சுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. கட்டுவதற்கு காட்டுக் கொடிகள் பயன்பட்டன.

எருமை மாடுகளைப் பிணைப்பதற்கும் மற்றும் தேவைகளுக்கும் ஆத்தி நார்க் கயிறுகள் மான்மரை முதலான மிருகங்களின் தோலினால் முறுக்கிப் பின்னப்பட்ட தோற்கயிறுகள் பயன்பட்டன.

சுரைக்காய் முற்றிய பின் அதைக் குடைந்தெடுத்த சுரைக்குடுவைகள் நீர் கொண்டு செல்லவும், தேன் எடுத்து வரவும் பயன்பட்டன.

பருவம் வந்த பெண்கள் (குமர்) வயலுக்குச் செல்லும் வழக்கம் இருக்கவில்லை. திருமணமான பெண்கள் தமது கணவருக்கு உணவு கொண்டு வயலுக்குச் செல்வர். தமது கணவருக்கு உதவியாகச் சிறிது நேரம் வேலை செய்து

கொடுப்பதுண்டு.

குறிப்பாக அரிவு வெட்டியபின் மழைக்குப் பயந்து அவசர அவசரமாக உப்பட்டி கூட்டிக் கட்டைக் கந்து வைக்க வேண்டியிருக்கும். உப்பட்டிகளைக் கூட்டி மாவக்கையாகச் சேர்க்கும் வேலையைப் பெண்கள் செய்வர்.

அரிவு வெட்டி காய்வதற்காகப் பரவிப் போடப்படும் பிடிகள் உப்பட்டி என்றழைக்கப்படும். பல உப்பட்டிகள் சேர்ந்தது மாவக்கை.

மாவக்கையை ஆண்கள் தூக்கிச் சென்று கட்டைக் கந்தாக மழை நெல்லில் படாத வண்ணமாக அமைப்பர். கட்டைக் கந்துகள் பல சேர்ந்து அதே அமைப்பில் வைக்கப்படுவதே சூடு எனப்படும். போர் என்றும் சிலர் இதைக் குறிப்பர்.

பிற்காலத்தில் ஆண்கள் கூலிவேலைக்குச் செல்லும் வழக்கம் வந்து விட்டது. இருப்பினும் பெண்கள் கூலி வேலைக்குச் செல்லும் வழக்கம் மிகவும் பிற்பட்ட அண்மைக் காலத்திலேயே ஏற்பட்ட வழக்கமாகும்.

பெண்கள் வயலில் நாற்று நடவும், அரிவு வெட்டுதல், உப்பட்டி கூட்டுதல் ஆகிய வேலைகளுக்கும் மட்டுமே முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டனர். வேறெந்த வயல் வேலைகளிலும் அவர்களின் பங்களிப்புப் பெறப்படவில்லை.

அரிவு வெட்டுக் காலத்தில் பக்கத்துப் பக்கத்துக் கமக்காரர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒருவரது வயல்மாறி மற்றவர் வயல் என்ற முறையில் அரிவு வெட்டுவார்கள். இதனைப் பரத்தை போட்டு வெட்டுதல் என்று கூறுவார்கள்.

இப்படி அரிவு வெட்டும்போது மத்தியான வெய்யில் நேரத்தில் தனித்தனியாக வயலில் இறங்கி போட்டிக்கு அரிவு வெட்டுவார்கள். அப்பொழுது அரிவு வெட்டுகின்ற வேகத்துக் கேற்ற ஓசையிலே அரிவு வெட்டுப் பாட்டுப் பாடுவார்கள்.

அப்பாடல்கள் அவர்கள் உடனுக்குடன் உள்ளத்து உணர்வின் உந்துதலால் பாடுகின்ற பாடல்களாக இருக்கும். ஒருவர் ஏதாவது உட்பொருளை வைத்துக் கேள்வி கேட்பது போலப் பாடுகின்ற பாடல்களுக்கு மற்றவர் மறைமுகமாகப் பதில் சொல்லுகின்ற பாடல்களாகவும் இருக்கும்.

சில வேளை போட்டிக்கு வயல்களிலே அரிவு வெட்ட இறங்கும் போதே, பரிசாகக் குறித்த பெண்ணைத் திருமணஞ் செய்து தருவதாகவும் சாடை மாடையாகச் சொல்லி வைப்பார்கள்

பெண்ணின் தந்தையும் அங்கு அரிவு வெட்டிக் கொண்டிருப்பார். அரிவு வெட்டும் இளைஞனது உள்ளத்தை முன்பே அறிந்த ஒருவரே இப்பரிசு பற்றிச் சொல்லி வைப்பார்.

அதனால் அரிவு வெட்டும் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். அறுவடை முடிந்த பின் திருமணமும் நடைபெறும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது.

அரிவு வெட்டி கதிர்ப்பிடிகளைக் காய்வதற்காக உப்பட்டியாகப் பரவிப் போட்டுக் காய்ந்தபின் தூக்கக் கூடிய, கைக்கு அடங்கும் அளவில் உப்பட்டிகளைக் கூட்டி மாவக்கையாக ஆக்குவர். மாவக்கைகளை அள்ளி வந்து வயல் வரப்பு மூட்டில் கட்டைக் கந்தாகத் தண்ணீர் உட்செல்லாதவாறு கவனமாக வைப்பர்.

பின் கட்டைக் கந்துகளைப் பிரித்து, மீண்டும் மாவக்கைகளை எடுத்து அடிதலை மாறி வைத்துக் கட்டிச் சுமந்து சென்று மேடான இடத்தில் சூடாக வைப்பர்.

கட்டைக் கந்து போன்ற தோற்றத்தில் 20,30 அடி உயரம் வரையில் சூடு வைக்கப்படும். சூடு வைக்கும் போது ஏணியில் ஏறிக்கதிர்க்கட்டுக்களைக் கொடுக்க அதை மேலே வைத்து அவிழ்த்து ஒழுங்காக அடுக்குவார்கள்.

திருமணமாகாத இளைஞர்களே சூடு முடி கூட்டுவதற்காக மேலே நிற்பர். ஒரு சூட்டுக்கு முடி கூட்ட ஒரு இளைஞனே நிற்பான் உயரத்தில் நின்று கவனமாக முடி கூட்ட வேண்டியிருக்கும். தவறிக் கீழே விழும் சந்தர்ப் பங்களும் உண்டு.

முடி கூட்டும் போது இளைஞன் தவறிக்கீழே விழுந்து விட்டால் அது அவனுக்கு அவமானமானதாகக் கருதப்படும். அவனை அவ்வூர்ப்பெண்கள் யாரும் திருமணஞ் செய்ய விரும்புவதில்லை. அந்த ஆணின் ஆண்மை பரிகசிக்கப்படும்.

தவறி விழுந்த குட்டியைத் தாய்க்குரங்கு ஏற்காதது போல விவசாயக் குடும்பத்திலே பிறந்தும் சூட்டுக்கு (போர்) முடி கூட்டத் தெரியாது தவறி விழுந்த இளைஞனைச் சமூகம் மதிப்பதில்லை.

முல்லை நிலமாகிய காடும் காடு சார்ந்த நிலத்தில் வாழ்ந்த ஆயர்களுக்கிடையே உள்ள ஒரு வழக்கத்தை இதனுடன் ஒப்பிடலாம்

கொல்லும் வல்லமை பொருந்திய காளை மாட்டின் கொம்புகளைக் கண்டு அஞ்சும் ஆண்மகனை ஆயர் குலப் பெண்கள் மணஞ் செய்வதில்லை, என்று சங்க இலக்கியம் பேசுகிறது. ''கொல் ஏற்றுக் கோடஞ்சு வானைப் புல்லாளே ஆய மகள்''. என்பது பழந்தமிழ்ப் பண்பாடு.

**வயற்பண்பாடு**

வன்னிக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்தால் மட்டும் போதாது எல்லோரும் வாழவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்களாக இருந்தனர்.

வியாபார நோக்கத்தோடு கிராமங்களுக்கு வந்தவர்களுக்கு உணவளித்ததோடு மட்டுமன்றித் தமது உணவுத் தேவைக்காக வைத்திருக்கும் நெய், தேன், பண்டிக் கருக்கல் ''இறைச்சிவத்தல்'' முதலானவற்றை இலவசமாகவே கொடுத்தனுப்பும் பண்பு கொண்டவர்களாக இருந்தனர்.

வியாபாரஞ் செய்ய வருபவர்கள் இதற்குக் கைமாறாகத் தமது பொருட்கள் எவற்றையும் கொடுப்பதுமில்லை. கொடுத்தாலும் இவர்கள் வாங்குவதுமில்லை.

பிற்காலத்தில் முதலை, வெங்கிணாந்திப்பாம்பு என்பவற்றைக் கொன்று அவற்றின் தோலை விற்றிருக்கிறார்கள். மான், மரை ஆகிய மிருகங்களைக் கொன்று உரித்து எடுத்த தோல் விற்கப்படுவதில்லை. மரைத்தோலில் தோல்ச் செருப்புச் செய்து காட்டிலே வேலை செய்யும் போது அதாவது புதுக்காடு வெட்டும் போது முள் குத்தாமல் இருப்பதற்காகக் காலிலே அணிந்தனர். மான்தோலைக் கோவில்களுக்கு இலவசமாக வழங்கினர். தோலை வார்ந்தெடுத்து வார்வடம் எனப்படும் வார்க்கயிறாகப் பின்னிப்பயன்படுத்தினர்.

வயலிலே பலகை அடித்துக் கொண்டு இருக்கும்போது, அக்கிராமத்திலுள்ள விதவைகள் கடகப்பெட்டியில் பிட்டு, அப்பம் முதலான உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம்.

அப்படிக் கொண்டு வந்து கொடுக்கும் பெண்களிடம், அவர்களுக்கு விருப்பமான ஒரு வயல் வரம்பில் ஒரு தடியை ஊன்றி விட்டுச் செல்லும்படி வயற்காரர் கூறுவார்.

அவர்களும் தங்களுக்குப் பிடித்தமான, வயலின் வரம்பில் தடியை ஊன்றிவிட்டுச் செல்வர். அந்த வயலில் விளையும் நெல் அப்பெண்ணுக்கே கொடுக்கப்படும்.

சில இடங்களில் எந்த வயலில் பலகை அடிக்கும்போது, உணவு கொண்டு வந்து கொடுத்தார்களோ அந்த வயலின் விளைச்சல் கொடுக்கப்படுகின்ற வழக்கமும் இருந்திருக்கிறது.

இதே போல சூடடிக்கும் போதும் களத்திற்குப் பெரிய கடகப் பெட்டியில் காலை உணவைக் கொண்டு வந்து கொடுத்தால் அப்பெட்டி நிறைய நெல்லை அள்ளிக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது.

சூடடிக்கும் களத்திற்கு யார் வந்தாலும், அவர்கள் வசதியற்றவர்களாக நெல்லைத் தானமாகப் பெற வந்திருந்தால், எத்தனை பேர் நின்றாலும் அத்தனை பேருக்கும் குறைந்தது ஒரு குல்லம் (சுளகு) நெல்லாவது கொடுத்துவிடும் வழக்கம் இன்றும் கிராமங்களில் உண்டு.

திருமணஞ் செய்து விருந்துக்காக வருபவர்களுக்கும் தமது வயலில் ஒரு வயலை ஒதுக்கி அதன் விளைச்சலைக் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

வயலில் அருவி வெட்டிக்கொண்டு நிற்கும் போது அவர்களுக்குக் குடிமை செய்யும் குடிமக்கள் என அழைக்கப்படும், சலவைத் தொழிலாளியோ, அல்லது மயிர் வினைஞரோ வந்தால் அவர்கள் விரும்பிய ஒவ்வொரு வயலை வெட்டி மிதித்து நெல்லைக் கொண்டு போகும்படி கூறுவார்கள். சில இடங்களில் தாங்கள் வெட்டிய வயலில் அவர்களால் சுமக்கக் கூடிய கதிர்க்கட்டைக் கட்டிக் கொண்டு போகும்படி கொடுப்பார்கள். கதிர்க் கட்டைக் கொண்டு போய் மிதித்து நெல்லை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

வழமையான வருடக் கூலி தனியாகப் பின்னர் கொடுக்கப்படும். வீட்டுக்கு வந்து தலை முடிவெட்டும் மயிர் வினைஞருக்கு உணவு கொடுக்கும் போது, வீட்டு முற்றத்தில் நிற்கும் வாழையடியில் அவர் சாப்பிட முன்னும், பின்னும் கைகழுவி நீர் ஊற்றுவார். அந்த வாழை போடும் குலை அவருக்கே வழங்கப்படும்.

வயல்கள் சேற்று விதைப்பு, விதைக்கப்பட்ட பின் வயலில் சிறிதளவும் நீர் இல்லாமற் செய்வதற்காக மறுநாள் அளை கொத்துவார்கள், வக்கடைக்கு வக்கடை பேரளை கொத்தி பள்ளங்களுடன் சிற்றளை கொத்தித் தொடுத்து விடுவார்கள்.

தண்ணீர் நின்றால் நெல் முளை அழுகிவிடும் என்பதற்காக நீர் வடியச் செய்யப்படும். பின்பு அரிவு வெட்டுக் காலத்தில் மழைபெய்தாலும் நீரை வெளியேற்ற இவ் அளைகள் உதவும்.

தனது வயலுக்கு, இன்னொருவரின் வயல் வரம்பினூடாகச் செல்லும் ஒருவர், வயலுக்குள் நீர் வடியாமல் இருப்பதைக் கண்டால் வயலில் இறங்கி அளை வைத்து நீரை வடியச் செய்து விட்டே தன் வயலுக்குச் செல்வார்.

தனது எதிரியின் வயலாக இருந்தாலும், இத்தொழில் குற்றம் பொறுக்காதவராக, வயலில் இறங்கி அளைவைத்து விட்டு, பின் வீட்டுக்கு வந்து எதிரியின் மனைவியை அழைத்து அவளது கணவனின் அக்கறை இன்மையைக் கூறிச் செல்வர்.

ஆண்களுக்கும் ஆண்களுக்கும் இடையேயும், பெண்களுக்கும் பெண்களுக்குமிடையேயும் சண்டை சச்சரவுகள் இருந்தாலும், ஒர் வீட்டு ஆணை மறு வீட்டுப் பெண்ணும், ஒரு வீட்டுப் பெண்ணை மறு வீட்டு ஆணும் மதிப்பார்கள். பிள்ளைகள் வேறுபாடு தெரியாதவர்களாக வீடுகளில் சென்று விளையாடி வருவார்கள். கோயிற் திருவிழா, வருடப்பிறப்பு தீபாவளி வைபவங்களோடு பகைமை மாறிக் கலந்துறவாடல் தொடங்கிவிடும்.

சிறு சிறு கோவில்கள் கட்டிடம் இல்லாத நிலையில் மரங்களுக்குக் கீழே அமைக்கப்பட்டிருக்கும். பரவணித் தெய்வங்கள் எனப் போற்றப்படும் ஐயனார், வைரவர் அம்மன் முதலான தெய்வங்களுக்கும், பிள்ளையார், முருகன், எனும் தெய்வங்களுக்கும் பூசைகளைச் செய்வார்கள்.

கிராமத்திலே இருக்கின்ற குறிப்பிட்ட ஒருவர் பரம்பரை காரணமாகப் பூசாரியாக இருப்பார். அதற்காக அவர் மற்றவர்களிலும் வேறானவர் ஆகார். அவ்வக் கோயில்களில் அவர் அவர் மட்டுமே தான் பூசை செய்வர். மந்திரம் சொல்லாத மரபு வழிப்பட்ட பூசை அங்கு நடைபெறும்.

பூசாரியாரோடு கடும்பகை கொண்ட ஒருவர் அக்கோயிலில் பூசை செய்ய விரும்பினால் இன்னொருவர் மூலம் பூசாரியாரோடு தொடர்பு கொள்வார். பூசாரியாரும் சம்மதிப்பார். பூசைக்குரிய பொருட்கள் கோவிலுக்குக் கொண்டு வரப்படும். பூசைகள் சிறப்பாக நடைபெறும்.

தனிப்பட்ட எந்தப் பகை இருந்தாலும் பூசை கட்டுவதற்குப் பூசாரியார் வீட்டுக்குச் சென்று பூசாரியார் என்ற வகையில் அழைப்பதும் உண்டு.பூசாரியார் என்று பார்க்கும் போது சாதாரண மனிதர் என்ற தன்மை மறைந்து விடுவதை அங்கு காணலாம்.

இதனை மீறிச் சிலர் தாமே பூசைசெய்யச் சென்று துண்பப்பட்டதும் உண்டு. தெருவோரங்களிலே, குளக்கட்டுக்களிலே வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையாருக்கு பூசாரியார் அல்லாதவர் பூசை செய்வதற்காகச் சென்று வெற்றிலைகளை வைத்து வாழைப்பழங்களைப் பரவி (மடைபரவி)யபின் மரத்திலே இருந்த நாகபாம்பு இறங்கிவந்து மடையின்மேல் படமெடுத்தபடி கிடந்து பூசைசெய்ய விடாமல் தடுத்த நிகழ்ச்சிகள் மிக அண்மைக்காலம் வரை நிகழ்ந்திருக்கிறது.

பின்னர் அதற்குரிய பூசாரியை அழைத்துவர, அவர் வந்து போகும்படி கூறப்பாம்பு மரத்தில் ஏறிய காட்சிகளைப் பலர் பார்த்திருக்கிறார்கள்.

புதூர் நாகதம்பிரான் கோவில் விசேடமான கோயிலாக வழிபடப்பட்டது. கொடிய நச்சுப்பாம்பினால் கடியுண்டு விஷகடி வைத்தியரினால் கைவிடப்பட்ட நோயாளியைப் புதூர் நாகதம்பிரான் சந்நிதியில் கொண்டுபோய் போட்டு விடுவார்கள்.

அங்குள்ள பூசாரியார் புதூர் மண்ணையே மருந்தாக வாயிலே போடுவார். விஷம் இறங்கி வீடு வந்து வாழ்ந்தவர் பலர் என்பது இன்று ஆச்சரியமானதாக இருக்கிறது.

வயல்களிலே நெல் கதிர் வீசி இருக்கும் போது கதிரிலே பால் ஏறுகின்ற பருவத்தில் 'ஈ' எனப்படும் பூச்சிகள் மிகுதியாகக் காணப்படும். இப்பொழுது ஈயைக் கட்டுப்படுத்த மருந்து உண்டு. கட்டுப்படுத்தாது போனால் ஒரு கொத்து நெல்லுக்கூட வெட்டி அடிக்கமுடியாமற் போகவும் கூடும், ஈக்கள் கதிரிலே ஏறுகின்ற பாலை உறிஞ்சிக் குடித்து விடும். பாலே பின்பு அரிசியாக மாறுகிறது.

முற்காலத்தில் வயலிலே ஈக்கள் மிகுதியாக மொய்த்தால் வயலுக்குரிய பிளளையாருக்குப் பொங்கல் வைத்து, பானை பொங்கும் போதுள்ள நீரை அள்ளி எடுப்பார்கள் இதனை ''மூட்டப்பால்'' என்பர்.

இந்த மூட்டப்பாலைக் கொண்டுபோய் வயல் எல்லையில் நாற்புறமும் தெளித்துவிட்டு, வயலுக்குச் செல்லும் கடப்பை (வழியை) வைக்கோற் புரியினால் கட்டி மறித்துவிட்டு வருவார்கள். மூன்று நாட்கள் வயற் பக்கமே செல்வதில்லை. மூன்று நாட்களின் பின் சென்று பார்க்கும் போது ஒரு ஈயும் இருப்பதில்லை என்று இன்றும் பலர் ஆச்சரியமாகக் குறிப்பிடுகிறார்கள்.

வயலுக்குள் மாடுகள் நுழைந்து பயிரை மேய்ந்து கொண்டு நிற்பதைக் கண்டால் அது எவரது வயலாக இருந்தாலும் அம்மாடுகளைக் கலைத்து கண்டாயத்தை (வழியை) அடைப்பது விவசாயிகளின் பண்பாடாக இருந்தது.

அந்த மாடுகள் தமது வயலுக்கும் வந்து விடும் என்பதற்காக மட்டுமல்ல, தமது வயல்கள் வேறிடத்தில் இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் மாடுகளைக் கலைத்து விடுவார்கள்.

வவுனியாவில் இருந்த கிராமக்கோட்டுக்கு (கிராம நீதிமன்றம்) வழக்கு விசாரணை ஒன்றுக்காக வந்து கொண்டிருந்தனர் சிலர். வழியிலே தெரு ஓரத்து வயலில் இரு நூறு இருநூற்றைம்பது மாடுகள் வேலியை உடைத்துக் கொண்டு உள்ளே நின்று நெற்பயிரை மேய்வதைப் பார்த்தார்கள்.

அம்மாடுகளைக் கலைக்காமல் செல்லவும் மனம் ஒப்பவில்லை. அதேவேளை காலந்தாழ்ந்து சென்றால் கிராமக்கோட்டார் பிடிவிறாந்து பிறப்பித்தும் விடுவார். பிடிவிறாந்து பிறப்பித்து விட்டால் பிடித்து சிறையில் போட்டு விடுவார்கள்

இந்தக் குழப்பத்திற்கு மத்தியிலும் ,அவர்கள் மாடுகளைக் கலைத்து விட்டு பக்கத்துக் காட்டில் கதியால் (தடி) வெட்டி, இடித்து, கொடி பிடுங்கி வேலிகட்டி, முள்ளுக்கொப்பும் வெட்டி வைத்துவிட்டு வந்தபோது நேரம் முடிந்து விட்டது. பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டு விட்டது.

அவர்களுக்குள்ளே சற்றுத்துணிச்சலான ஒருவர் கிராமக் கோட்டாரைச் சந்திக்க அனுமதி பெற்றுச் சந்தித்து உண்மையை எடுத்துச் சொன்னார். அவர் கேட்ட முக்கியமான கேள்வி ''அந்த வயலில் நின்ற மாடுகள் உங்கள் வயல்களுக்கும் செல்ல வாய்ப்புண்டா'' என்பதே

தங்கள் வயலுக்கும் இந்த வயல்களுக்கும் சம்பந்தமில்லை. இந்த வயற் சொந்தக்காரருக்கும் தமக்கும் எந்தவித உறவும் இல்லை என்று அவர் பதில் கூறினார்.

உடனே விதானையாரை அழைத்து மாடுமேய்ந்த வேலி அடைத்த தடயங்களைப் பார்த்து வரும்படி அனுப்பினார். விதானையார் சென்று திரும்பி வந்து உண்மையைக் கூறியதும் அவர்களை அழைத்து வழக்கையே தள்ளுபடி செய்தாராம் அந்த நீதிபதி.

தங்களோடு சம்பந்தமில்லாத ஒருவரின் வயல் அழிந்து போவதைப் பார்த்துப் பொறுக்க மாட்டாமல், தமக்கு வரும் துன்பத்தைப் பெரிதாகக் கருதாமல் செயற்பட்ட அவர்கள் மனித நேயம்மிக்க உயர்ந்த பண்பாடுகளைக் கொண்டவர்கள். அவர்கள் குற்றவாளிகளாக இருக்க முடியாது என்று நீதிபதி கருதியிருப்பார். அதனால் வழக்கைத் தள்ளுபடி செய்திருக்கிறார்.

**வாழ்க்கை நிலையும் கலையும்**

சாதிப்பாகுபாடு வன்னியில் இருந்திருக்கிறது. சாதி ஏற்றத்தாழ்வும் இருந்திருக்கிறது. திருமண உறவுகளை தாழ்த்தப்பட்டவருடன் செய்யாமல் தவிர்த்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்புக்கள் தனியாக அமைந்திருந்தன. அவர்களும் விவசாயஞ் செய்தனர். அத்தோடு தொழிலையுஞ் செய்தனர்.

நான்கைந்து சாதிப்பிரிவுகள் மட்டுமே மிகவும் தாழ்ந்ததாக இருந்தன. இருப்பினும் சாதி அடக்குமுறைக் கொடுமையோ, அதற்கெதிரான கிளர்ச்சிகளோ ஏற்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியாத சாதி அடக்கு முறைக் கொடுமையில் இருந்து விடுபடுவதற்காக வன்னிக்கு வந்து குடியேறிய பலரை வன்னி மக்கள் வேறுபாடு காட்டாது வரவேற்றிருக்கின்றனர்.

வவுனியா நகரில் முதன் முதல் கட்டப்பட்ட பாடசாலை வவுனியா, சீ.சீ.ரி. எம் .எஸ் பாடசாலையேயாகும். நகருக்கு வெளியே நான்கு ஐந்து மைல்களுக்கு அப்பால் கிராமங்கள் அதிகமாக அமைந்திருந்த காரணத்தினாலும், வாழ்வுக்குரிய அத்தியாவசிய தேவைகளுக்குக் கல்வி தேவைப்படாததனாலும் கிராமத்தோர் கல்வியில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை. சில வசதி படைத்தோரின் பிள்ளைகள் பிற்காலத்தில் யாழ் மத்திய கல்லூரியில் சென்று படித்திருக்கிறார்கள்.

கல்வி, ஆட்சி அதிகாரம், தொழில் வாய்ப்பு, சமூக அந்தஸ்து, சாதித் தாழ்ச்சியிலிருந்து விடுதலை, மற்றும் சில வசதிகள் வாய்ப்புக்களே மதமாற்றத்திற்கான சில முக்கிய காரணிகள் என்பர்.

வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக, இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பகுதியில் இத்தேவைகள் மக்களுக்குத் தேவைப்படாதிருந்த காரணத்தால் மதமாற்றம் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது.

கலைகளின் வளர்ச்சிக்குரிய நிலமாக மருத நிலத்தையே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இருப்பினும் வன்னிப்பிரதேசத்தில் கலைகள் பெரிதாக வளர்ச்சியடைந்ததாகப் பெருமை பேசமுடியாது.

முல்லைத்தீவு, மன்னார்ப் பகுதிகளில் சில தனித்துவங்கள் கலைகளிலே காணப்பட்டபோதும் வவுனியாப் பகுதிகளிலே காணமுடியவில்லை. இஸ்லாமியரின் கோலாட்டத்தை மட்டுமே வித்தியாசமானதாகக் குறிப்பிடலாம்.

நாட்டார் பாடல்கள் தோன்றியிருக்கின்றன. கூத்துக்கள் யாழ்ப்பாணத்தவரால் இங்கு மேடையேற றப்பட்டி ருக்கின்றன. யாழ்ப்பாணத்தவராலும் முல் லைத்தீவு அண்ணாவிமாராலும் இங்கு கூத்துக்கள் பழக்கப்பட்டு மேடையேற்றப்பட்டிருக்கின்றன. வன்னிக்கென தனித்துவமான கலைவடிவங்கள் எதையும் காணக்கிடைக்கவில்லை.

வன்னியில் இஸ்லாமியர் தமிழர்களோடு அருகருகே அமைந்த கிராமங்களில் நீண்ட காலமாக வாழ்கின்றனர். பிற்காலத்தில் மட்டக்களப்பிலிருந்து அரிவு வெட்டுவதற்காக இஸ்லாமியர் வந்து தங்கித் தமிழர்களோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள். இருப்பினும் இவை நட்புத் தொடர்பே அன்றித் திருமணத் தொடர்புகளாக இருக்கவில்லை. இரு சமூகத்தவருக்கும் இடையே பகைமையும் இருக்கவில்லை.

சிங்களவர்களும் வன்னியில் வாழ்ந்திருக்கிறார்கள். தமிழரோடு ஒற்றுமையாக அருகருகேயுள்ள கிராமங்களில் வாழ்ந்திருக்கிறார்கள். எனினும் திருமண உறவுகள் மிகமிகக் குறைவு. பகைமையும் முற்காலத்தில் இல்லை.

மூன்று சமூகத்தவரும் ஒற்றுமையாக வாழ்ந்த இவ்வன்னிப் பிரதேசத்தின் வரலாறும் வாழ்வும் பற்றிய ஆய்வுகள் முழுமையாகச் செய்யப்பட வேண்டும். அதற்கு இவ்வாய்வு சிறிய உந்துதலாக இருந்தாலும் போதும்.

**நன்றிகள்**

1) திரு. செ. கதிரேசு (நெளுக்குளம்)
2) திரு. மு. சா. மார்க்கண்டு (நெளுக்குளம்)
3) திரு. க. தில்லையம்பலம் (நொச்சிமோட்டை)
4) திரு. செ. பத்மநாதன் (சாஸ்திரி கூளாங்குளம்)
5) திரு.சே. நாகலிங்கம் (பம்பைமடு)
6) திரு. மா. பூலோகசிங்கம் (கள்ளிக்குளம்)
7) திரு.க. ஐயம்பிள்ளை (நாம்பன்குளம்)
8) திரு.சு. வீரசிங்கம் (நெளுக்குளம்)
9) திரு. பொன். தில்லையம்பலம் (கல்மடு)
10) திரு. எ. இராசலிங்கம் (தாண்டிக்குளம்)

## அகதிகள்

*இழப்பதற்கு*
*ஒன்றுமில்லை*
*என்ற*
*இறுதித் தீர்மானத்துடன்*
*உயிருடன்*
*உலாவும்*
*நடைப் பிணங்கள்!*
***

*எயிட்சைப் போல்*
*எங்கள் இனம்*
*வெகுவேகமாக*
*பரவி வருகின்றது!*
*எங்கள்*
*கிளை அமைப்புக்களை*
*ஒவ்வொரு நாட்டிலும்*
*நிறுவியுள்ளோம்!*
*உலகலாவிய*
*ரீதியில்*
*பதிவு செய்யப்பட்டதும்*
*எமது சங்கமேதான்*
***

*உயிர்கள்*
*விளையாட்டுப்*
*பொருட்களானதால்*
*உறவுகள்*
*துண்டிக்கப்பட்ட*
*கண்ணகிகள்!*
*ஆனால்*
*மாண்ட*
*கணவன் மாரை*
*மீண்டும்*
*எழுப்ப முடியாத*
*சாவித்திரிகள்*
***

*கடைசியாக*
*அறிய விரும்புவது*
*எங்கள்*
*உடன் பிறப்புக்கள்*
*எரிக்கப்பட்டார்களா?*
*அல்லது*
*உயிருடன்*
*போட்டுப்*
*புதைக்கப்பட்டார்களா?*
*என்பது!*

**மா. யோகராஜன்,**
**அக்கரைப்பற்று 08.**

# வன்னியரும் ஈழமும்

செல்வி க. தங்கேஸ்வரி,
*பி.ஏ. (தொல் சிறப்பு)*

1) அறிமுகம் :-

வன்னியர் என்போர், தமிழகத்தில் படைத்தலைவர்களாகவும், குறு நில மன்னர்களாகவும் வாழ்ந்தவர்கள். வன்னியர் பற்றிய குறிப்புகள் கி. பி. 2ம் நூற்றாண்டு முதல் இலக்கிய நூல்களில் இடம் பெறுகின்றன. ஆனாலும், பல்லவர் காலத்திலிருந்து தான் (கி.பி. 7ம் நூற்றாண்டு) அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன.

தென்னிந்தியாவில், சோழர் ஆட்சி கி.பி. 10ம் நூற்றாண்டு முதல் எழுச்சி பெற்றது. புகழ்பெற்ற சோழமன்னனான, ராஜாராஜன் (985-1015) காலத்தில் வன்னியர்கள் இலங்கைக்கு வந்தனர். ராஜராஜனின் தந்தையான சுந்தரசோழன் காலம் முதல் சோழர்களின் வெற்றிக்கும், சோழமன்னர்களின் பாதுகாப்புக்கும் உறுதுணையாக இருந்தவர்கள் விசேடபயிற்சி பெற்ற, வீரம் நிறைந்த படைவகுப்பினர் இவர்களை 'வேளைக்காரப் படையினர்' என அழைத்தனர். (ஆபத்துதவிகள், தெரிஞ்சகைக் கோளப் படை என்றும் இவர்களை அழைப்பதுண்டு)

இத்தகைய வேளைக்காரப் படைப்பிரிவுகளின் தலைவர்களாக வன்னியர்கள் பணிபுரிந்தனர். ராஜராஜ சோழன் காலத்தில் இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட்டது அக்காலத்தில் வன்னித்தலைவர்கள் இலங்கையில் நிலை கொண்டனர்.

இலங்கை மன்னனான 1ம் விஜயபாகு (1059-1114) சோழரை இலங்கையிலிருந்து விரட்டுவதற்குப் பெருமுயற்சி செய்தான். இதற்காக அவன் கதிரைமலைக் காடுகளில் ஒளிந்திருந்து படைதிரட்டினான். தன் வாழ்நாள் முழுவதும் தமிழருக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அவன், சோழர்களை இலங்கையிலிருந்து வெளியேற்று வதில் ஓரளவு வெற்றியும் கண்டான். ஆனால் அதற்குப் பின் சிங்கள மன்னர்கள் தமது படைகளில் வன்னித் தலைவர்களையும் வைத்திருந்தனர்.

காலக்கிரமத்தில் இவ்வன்னித் தலைவர்கள், ஈழத்தின் சில பகுதிகளில், ஆட்சி செய்தனர். இது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்ட சில ஆட்சிகள்.

கி.பி. 13ம் நூற்றாண்டில் கலிங்கமாகன் (1215-1255) இலங்கைக்கு வந்தான். மாகன் பொலன்னறுவையைக் கைப்பற்றி அங்கிருந்து ராஜரட்டை முழுவதையும், இங்கையின் வேறு சில பகுதிகளையும் ஆட்சி செய்தான். இவனுடைய ஆட்சி 40 வருடங்களுக்குமேல் நீடித்தது. இவனது உபராஜனான குளக்கோட்டன் (ஜயபாகு) இவனுடன் இணைந்து

செயற்பட்டான். இவர்களுடைய காலத்தில் தென்னிந்தியாவின் பல இடங்களிலிருந்து வன்னியர் வரவழைக்கப்பட்டு, இலங்கையில் ராஜரட்டையின் பல்வேறு பகுதிகளில் ஆட்சியாளர்களாக அமர்த்தப்பட்டனர்.

புத்தளம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, திருக்கோயில் முதலிய பல்வேறு இடங்களில் இவர்கள் ஆட்சி செய்தனர். புத்தளத்து வன்னியர், திருகோணமலை வன்னியர், மட்டக்களப்பு வன்னியர் என இவர்கள் அழைக்கப்பட்டனர்.

### 2) வன்னியர்களின் பூர்வீகம்

வன்னியர்கள் எனப்பெயர் பெற்ற இவர்கள் ஆதிகாலத்தில் காடு சார்ந்த இடங்களிலும், மலைசார்ந்த இடங்களிலும் வாழந்திருந்தனர். எனத் தெரியவருகிறது. இவர்கள் வலிமைமிக்கவர்கள். எனவே, பல்லவர் காலத்தில் இவர்களுக்கு படைக்கலப் பயிற்சி அளிக்கப்பட்டு, பல்லவர் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பிற்காலத்தில் இவர்கள் தமது பெருமையைப் பறைசாற்றும் வகையில், சில புராணங்களை இயற்றினர் என்பர். அவ்வகையில் வன்னியர் பெருமை கூறும், கல்லாடம், சிலை எழுபது, வன்னியர் புராணம், வன்னியர் குலநாடகம் முதலிய நூல்கள் எழுந்தன.

இந்நூல்களில், புராணங்களுக்கே உரித்தான முறையில் வன்னியர் பற்றிப் பல கற்பனைகளும் இடம் பெற்றுள்ளன அவற்றுள், வன்னியர்கள் அக்கினியிலிருந்து தோன்றியவர்கள் என்றும், பன்னிரண்டு பன்றிகளிலிருந்து தோன்றியவர்கள் என்றும் கதைகள் உள்ளன. இவை வெறும் கற்பனைகள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இக்கற்பனைகள் ''வன்னியர்'' பற்றிப் பல்வேறு எண்ணக்கருத்துகளைத் தோற்றுவித்துள்ளன.

அவை வருமாறு

அக்கினியைக் குறிக்கும் வடமொழிச் சொல் ''வஃநி'' என்பது எனவே ''வஃநி'' என்ற பதத்திலிருந்து ''வன்னியர்'' என்னும் சொல் தோன்றியிருக்கலாம் என கலாநிதி. க.செ. நடராசா கருதுகிறார்.

(வையாபாடல் பக்:15)

ஆனால் வன்னியர்கள் காடுகளில் வாழ்ந்தவர்கள் ''காடவர்'' என்ற பொருள்படும் வடமொழிச் சொல் வன்ய என்பது. எனவே ''வன்ய'' என்ற வடமொழிச்சொல்லில் இருந்து ''வன்னியர்'' என்னும் சொல் தோன்றியிருக்கலாம் என கலாநிதி சி.பத்மநாதன் கருதுகிறார்.

(வன்னியர் பக்: 19)

இவற்றுள் இரண்டாவது கூற்றே ஓரளவு பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

### 3. வன்னியரைப் பற்றிய இலக்கியக்குறிப்புகள்

வன்னியரைப் பற்றிய வரலாற்றுக்குறிப்புகள், கி.பி. 7ம் நூற்றாண்டு முதல் கிடைத்தபோதும், அவர்களைப்பற்றிய இலக்கியக் குறிப்புகள் கி.பி. 2ம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் வன்னியர் பற்றிய புராணக் குறிப்புகளும், இவற்றுள் இடம் பெறுகின்றன. அவை வருமாறு:-

**(1) வன்னியர் புராணம்:-** வடமொழி நூலான அக்கினி புராணத்தைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலில், வன்னியர்கள் அக்கினியில் இருந்து தோன்றியவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாடல்:-** ''பொங்கமா மகத்தி லாகுதி யியற்றிட
புனிதனுக்கு வகையீந்தார்
வங்கண் வீரவன்னிய பூமன்னர்
பரிமீது தோன்றினனே'' (பாடல்:2)

**(2) கல்லாடம் :-** இந்நூல், வன்னியர்கள் பன்னிரண்டு பன்றியிலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறுகிறது. இதன் உட்பொருளை நாம் வேறு விதமாகக் கொள்ளலாம். ஒரு காலத்தில் இவ்வன்னியர் பன்றிக்கொடியை உடைய சாளுக்கிய மன்னர்களிடம் படைத்தளபதிகளாகப் பணி புரிந்தனராம். அதன் காரணமாக இக்கருத்து எழுந்திருக்கலாம்.

**பாடல் :-** ''கருமுகிற் கணி நிறத் தழற்கட் பிறையெயிற்

றரிதரு குட்டியாய பன்னிரண்டினைச்

செங்கோல் முளையிட் டருணீர் தேக்கிக்

கொலை களவென்னும் படர்களைக் கட்டுத்

திக்குப் படரானை வேலி கோலித்

தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு

நாற்படைவன்னியராக்கிய பெருமான்'' (பாடல்:37)

**(3) சிலை எழுபது:-** இந்நூல், வன்னியர் சிறந்த படைத்தலைவர் என வர்ணிக்கிறது. அதன் காரணம் இவர்கள் அக்காலத்தில் சிறந்த படைக்கலப் பயிற்சி பெற்று, படைத்தளபதிகளாகவும் குறுநிலமன்னர்களாகவும் இருந்ததே.

அப்பாடல் வருமாறு:-

''படைத் துணைத் தலைவர் குலச்சிறப்பு

விடையுடையார் வரமுடையார், வேந்தர்க்கோ

வெனலுடையார் நடையிடையார்மிடியுடைய

நாவலர் மாட்டருள் கொடையார், குடையுடையார்...''

**(4) பதிற்றுப்பத்து :-** சேரமன்னர் வரலாறு கூறும், சங்க நூலான பதிற்றுப்பத்து, என்னும் நூல், வன்னியர்கள் மன்றம் என ஒன்று இருந்தமை பற்றிக் கூறுகிறது.

**பாடல் :-** மன்னர் மறைத்த தாழி

வன்னி மன்றத்து விளங்கிய காடே (பாடல் 44)

**(5) ஈழத்து இலக்கியங்கள்:-** ஈழத்தில் வன்னியர் ஆட்சிபற்றி, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் முதலிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. இந்நூல்களில் கற்பனைகள் விரவியிருந்தாலும் வேறு சான்றுகளுடன் ஒத்துப்போகும் பல வரலாற்றுத்தகவல்களும் உள்ளன.

**6) சிங்கள இலக்கியங்கள் :-** முக்கர கட்டன, பரக்கும்ப சிரிதகிராசந்தேய, ராஜாவலியர், ராஜரத்னாகாரய முதலிய சிங்கள நூல்கள் இலங்கை வன்னியர்கள் பற்றிக்குறிப்பிடுகின்றன. ஆனால் இவை சிங்கள மன்னர்கள், வன்னி மன்னர்களை வெற்றி கொண்டதை அல்லது அடக்கியாண்டதைக் கூறுகின்றன. இவற்றில் சிங்கள மன்னர்களின் வீரம் பற்றி மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்கள் மிகுந்த கற்பனையுடன் இடம் பெறுகின்றன.

### 4) வன்னியர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்

மேற்கூறிய குறிப்புக்களிலிருந்து, வன்னியர், மிகப்பழங்காலத்திலிருந்தே படைக்கலப் பயிற்சி பெற்று, பெருமன்னர்களின் மெய்க்காப்பாளர்களாகவும் படைத்தளபதிகளாகவும் குறுநில மன்னர்களாகவும் புகழ்பெற்றி ருந்தமை பெறப்படுகிறது. இப்பெருமை பின்னால் வரலாறுகளில் தொடர்வதைப் பார்க்கிறோம்.

**1) பல்லவர் ஆட்சியில்** கி.பி. 7ம் நூற்றாண்டு முதல் புகழ்பெற்றிருந்த பல்லவர்களுக்கு, சாளுக்கியரும், ராஷ்டிரகாட்டரும் எப்போதும் தொல்லை கொடுத்து வந்தனர். எனவே, காடவரான வன்னியரைத் தமது படைகளில் சேர்த்து பகைவரை முறியடிப்பதில் பல்லவர் வெற்றி கண்டனர். கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த 'ஐயடிகள்' என்னும் பல்லவமன்னன், காடவர்கோன் என அழைக்கப்பட்டதாக கலாநிதி க.செ. நடராசா குறிப்பிடுகிறார். (வையாபாடல் பக்:17) (அம்மன்னனின் உண்மைப்பெயர் பரமேச்சுரவன்மன் என்பதாம்).

**2) சோழர் ஆட்சியில்** கி.பி. 10ம் நூற்றாண்டு முதல் புகழ் பெற்றிருந்த சோழர் ஆட்சியில் 'வேளைக்காரப் படையினர்' என்ற விசேட பயிற்சி பெற்ற போர்வீரர்களின் தலைவர்களாகவும் மன்னர்களின் மெய்க்காப்பாளர்களாகவும் வன்னித்தலைவர்கள் விளங்கியிருக்கிறார்கள். இவர்களிற் பலர் மன்னருக்கு ஆதரவான குறுநில மன்னர்களாவார்கள். அவ்வகையில் சம்புவரையர், மலையமான் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**3) பாண்டியர் ஆட்சியில்** கி.பி. 13ம் நூற்றாண்டில் மேலெழுந்த பாண்டியப் பேரரசிலும் இவ்வன்னியர்கள், படைத்தலைவர்களாகவும், மெய்க்காப்பாளர்களாகவும் விளங்கினர். இவர்கள் காலத்தில் வன்னியர், ''பெரும்படையோர்'' எனப்புகழ் பெற்றிருந்தனர்.

**4) நாயக்கர் ஆட்சியில்** கி.பி 14ம் நூற்றாண்டில் மேலெழுந்த விஜய நகர சாம்ராஜ்யத்தில், நாயக்கர்கள் வன்னியர்களைப் புறக்கணித்து தெலுங்கர்களையும், கேரளர்களையும் தம் படைகளில் சேர்த்துக் கொண்டதால், வன்னியர்கள், தமது பெருமைகளை இழந்து, கால ஓட்டத்தில் விவசாயிகளாக மாறினர் என வரலாறு கூறுகிறது.

**5) தொண்டைமண்டலத்தில்**:- தொண்டை மண்டலத்தில் ஆதியில் குறும்பரும், வேடரும் வாழ்ந்திருந்தனர் என்றும், இவர்கள் வன்னியர் என அழைக்கப்பட்டனர் என்றும் தெரியவருகிறது. **(Analysis of the Mackenzie Manuscripts** பக்: 78-79) மாகோன், குளக்கோட்டன் காலத்தில் இலங்கைக்கு வந்த வன்னியரில் பெரும்பாலோர் தொண்டை மண்டலத்திலிருந்தே வரவழைக்கப்பட்டனர். இன்றும் தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் வன்னியர் பரம்பரையினர் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் தெற்கே பாண்டி மண்டலம், கிழக்கே சோழமண்டலம் முதலிய இடங்களில் வன்னியர் வாழ்ந்தபோதும், வடக்கே தொண்டை மண்டலத்தில்தான் அதிகமான வன்னியர் சிந்தரசுகள் இருந்தன.

**6) க்ஷத்திரிய வன்னியர்கள் :-** ஒரு அரசன் தனக்குப்பின் வாரிசு இன்றி இறந்தால், அவனுடைய படைத்தலைவனாக இருந்த வன்னி நாயகன் ஆட்சிப்பொறுப்பேற்று அரசனாவான். அத்தகையவர்கள் க்ஷத்திரிய வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். இத்தகையவர்கள், வன்னியராயர், பாளையப்பட்டு வன்னியர், பள்ளிராசன் என்ற விருதுப்பெயர்களைப் பெற்றனர். (க.செ.நடராசா, வையாபாடல் பக்:17) இவ்வாறே போரில் ஒரு வீரன் தீரச் செயல் புரிந்தால் அவனுக்கும் ''வன்னியர்'' என்ற விருது பெற்று வன்னியர் ஆகினான்.

**7) குறுநில மன்னர்கள் :-** ஏற்கனவே குறிப்பிட்டதுபோல பல வன்னியர்கள் குறுநில மன்னர்களாக இருந்தனர். அவ்வகையில் கிழியூர் மலையமான், ராஜராஜ சேதிராயன், வன்னியமாதேவன், பசோழேந்திர சிங்கன், செங்கேணி அம்மையப்பன், வரலாற்றில் இடம் பெறுகின்றனர். இவர்கள் சோழ மன்னர்களுக்கு விசுவாசமாக இருந்தனர். அதனால், சிலர், தமது சோழ மன்னர்களின் பெயர்களையும் தமது பெயருடன் இணைத்து தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினர், என்பதை அவர்கள் பெயர்களிலிருந்தே நாம் அறிந்து கொள்ளலாம்.

## 5. மாகோன் வருகை:-

கி.பி. 13ம் நூற்றாண்டில் கலிங்கமாகோன் (கி.பி. 1215-1255) பெரும்படையுடன் இலங்கைக்கு வந்தான். அவன் பொலன்னறுவையைக் கைப்பற்றி, ராஜரட்டை முழுவதையும் இலங்கையின் வேறு சில பகுதிகளையும் ஆட்சி செய்தான். இவனுக்கு உதவியாக இவனுடைய உபராஜன் குளக்கோட்டன் (ஜயபாகு) இவனுடன் இணைந்து செயற்பட்டான். இவர்களுடைய காலத்தில், தமிழ் நாட்டில் காரைக்கால், தொண்டைமண்டலம் காளிகட்டம், புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, மருங்கடர் முதலிய இடங்களிலிருந்து பல வன்னித்தலைவர்கள் வரவழைக்கப்பட்டு, மாகோனின் ஆட்சிப்பொறுப்பிலிருந்த ராஜரட்டைப் பிரதேசத்தில், மன்னார்,சிலாபம், திருக்கோணமலை, தம்பலகாமம் வெருகல், மட்டக்களப்பு, திருக்கோயில் முதலிய இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

திருகோணமலையில் திருக்கோணேஸ்வர ஆலயத்துக்குப் பொறுப்பாக 7 வரிப்பத்தர்களும் 21 தானத்தாங்களும் நியமிக்கப்பட்டு இவர்களுக்கு நிவந்தல்கள் (காணி) வழங்கப்பட்ட விபரம், கோணேசர் கல்வெட்டு என்ற நூலில் இடம் பெறுகிறது இவர்களுக்குத் தலைவனாக தனியுண்ணாப் பூபாலன் என்னும் வன்னியன் நியமிக்கப்பட்டான்.

இவ்வாறே, புத்தளத்திலும், பல வன்னியர்கள் நியமிக்கப்பட்டனர் இவர்கள் முக்குவ வன்னிமை என

அழைக்கப்பட்டனர். இவர்கள் மலையாளத்தைச் சேர்ந்தவர்கள். மகோனின் படையில் இருந்தவர்களும் இதில் அடங்குவர்.

மட்டக்களப்பிலும் முக்குவ வன்னிமைகள் நியமிக்கப்பட்டனர். இவர்கள், மாகோனின் படையிலிருந்த கேரளவீரர்கள். மாகோன் பொலன்னறுவையைக் கைப்பற்றியபின் மட்டக்களப்பில் தனது படைவீரர்களுக்கு நிலம் கொடுத்துக் குடியமர்த்தினான் என்ற செய்தி சூளவம்சத்திலும் இடம் பெறுகிறது. மேலும் விபரங்கள் 'மட்டக்களப்பு மான்மியம்' என்ற நூலில் இடம் பெறுகின்றன.

இவ்வகையில் மாகோனின் இலங்கை வருகை (கி.பி. 1215) இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஆட்சிமுறையிலும் மாற்றம் ஏற்பட்டது பொலன்னறுவை ராசதானியில் மாகோன் வசம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிங்கள அரசின் ராசதானி தெற்கு நோக்கி நகர்ந்தது. தம்பதேனியா, யாப்பகுவ, குருநாகல், கம்பளை கோட்டை என அது இடம் மாறியது (க.தங்கேஸ்வரி-மாகோன்வரலாறு பக்:74)

மாகோன் ஆட்சிக்காலத்திலும் அதன் பின்னரும் இலங்கையில் பல பிரதேசங்கள் வன்னியரின் ஆட்சிக்குட்பட்டன இவர்கள், திருமலை வன்னிமை, மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என அழைக்கப்பட்டனர் இவ்வன்னித்தலைவர்கள் மூலம் மாகோன் அதிகாரப்பரவலாக்கம் செய்து கட்டுக் கோப்பான ஆட்சிமுறை ஒன்றை நிறுவினான் அதனால் அவனுடைய ஆட்சி 40 வருடங்களுக்குமேல் நீடிக்கமுடிந்தது மாகோன் காலத்தில் வன்னியர் ஆட்சிப் பிரதேசங்களாக இருந்தவை பின்னால் வன்னிப் பற்றுக்கள் என அழைக்கப்பட்டன.

6. **வன்னியர் பிரிவுகள்:-** மாகோன் குடியமர்த்திய வன்னியர் விபரம் வருமாறு.

**1) திருகோணமலை வன்னிமை:-** மாகோன் காலத்தில் அவனது உபராஜனான குளக்கோட்டன் என்னும் ஜயபாகு திருகோணமலையில் ஆட்சிசெய்தான் மாகோன் பணிப்பின்பேரில் குளக்கோட்டன் இங்கு வன்னியரைக் குடியமர்த்தினான்.

கவிராஜவரோதயர் இயற்றிய ''கோணேசர் கல்வெட்டு'' என்னும் செய்யுள் நூலில் விபரங்கள் இடம் பெறுகின்றன.

குளக்கோட்டனால் தென்னிந்தியாவில்,மருங்கடரிலிருந்து அழைத்தவரப்பட்ட ஆறு சோழக்குடிகளும், இருபத்தியொரு கானத்தாரும் திருகோணமலையில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களிடம் கோயில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. மதுரையிலிருந்து அழைத்துவரப்பட்ட பூபால வன்னியன் (துனியுண்ணாப் பூபால வன்னியன்) தலைவனாக நியமிக்கப்பட்டான்.

இவ்வாறே திருநெல்வேலியிருந்து அழைத்து வரப்பட்ட காராள வன்னியன் கட்டுக்குளம் பற்றுக்குத் தலைவனாக்கப்பட்டான். (கட்டுக்குளம் பற்று பின்னால் வன்னிப்பிரதேசத்தில் முக்கிய இடம் பெறுகிறது)

**2) புத்தளத்து வன்னிமை:-** புத்தளத்தில் ஆட்சி செலுத்திய வன்னியர்கள் முக்குவ வன்னிமை என அழைக்கப்பட்டனர். இவர்களும் மாகோன் காலத்தில் வரவழைக்கப்பட்ட வன்னியர்களே இவர்கள் கேரளத்திலிருந்து வரவழைக்கப்பட்டனர். மாகோன் இலங்கைக்கு வந்தபோது அவன் படையில் மலையாள வீரர்களும் இருந்தனர் முக்குவர் என்னும் வம்சத்தினர் கேரளத்தில் (மலையாளம்) இன்றும் உள்ளனர், அவர்களுக்கும், மட்டக்களப்பு முக்குவ வன்னியர்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகக்கொள்ளமுடியும்.

6ம் பராக்கிரமபாகு புத்தளத்து முக்குவ வன்னியர்களுடன் 3மாதங்கள் கடும்போர் செய்து, அப்பிரதேசத்தைக் கைப்பற்றியதாக ''முக்கரகட்டன'' என்ற சிங்கள நூல் கூறுகின்றது ஆனால் அதற்குப் பின்னரும் அங்கு வன்னியர் ஆட்சி தொடர்ந்திருந்தது வரலாறு.

கல்வெட்டு என்ற நூலில் இடம்பெறுகின்றது. கி.பி. 16ம் நூற்றாண்டில் நவரெத்தின வன்னியன் புத்தள வன்னியனாக நியமிக்கப்பட்டான். இந்நியமன ம் புவனேகபாகுவினால் வழங்கப்பட்ட தென்பதை ஒரு செப்பேடு குறிப்பிடுகிறது.

**3) மட்டக்களப்பு வன்னிமை:-** மட்டக்களப்பு வன்னிமை பற்றிய செய்திகள் ''மட்டக்களப்பு மான்மியம்'' என்னும் நூலில் இடம் பெறுகின்றன. கலிங்கமாகன் காளி கட்டத்திலிருந்து முக்குவரை அழைத்துவந்து அவர்களின் படைத்தலைவர்களை மட்டக்களப்பின் வன்னியர்களாக நியமித்தான் என்பர். மாகோன் பொலன்னறுவையைக் கைப்பற்றியபின், தனது மலையாளவீரர்களை மட்டக்களப்புப்பகுதியில் குடியமர்த்தி, வன்னித்தலைவர்களை நியமித் திருக்க வேண்டும் சுகதிரன் முதலிய கலிங்க சிற்றரசர் பரம்பரை மட்டக்களப்பில் ஆட்சி செய்தமை பற்றி ''மட்டக்களப்பு மான்மியம்'' கூறுகிறது.

மாகோன் தோப்பாவையை (பொலன்னறுவையை) கைப்பற்றி அப்பிரதேசத்துக்கு படையாட்சி வன்னியருக்குக் கொடுத்தான் என்று மட். மான்மியம் (பக் 54) கூறுவதனால், மட்டக்களப்புப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட மலையாளப் படைவீரர்கள் 'படையாட்சி' என்ற குடிப்பெயர் பெற்றனர். மாகோன் தன் படைவீரர்களுக்கு நிலங்களையும் சன்மானங்களையும் வழங்கியமை பற்றி சூளவம்சத்திலும் குறிப்பு உள்ளது. (சூளவம்சம் அத் Lxxx- குறிப்பு 61-71,74-79)

சீதவாக்கையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற 7 வன்னியர்களைப் பற்றிய குறிப்பு நாடுகாடு பரவணிக் கல்வெட்டில் உள்ளது.

**4) அடங்காப்பற்று வன்னிமை**:- வட இலங்கையில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசம் முழுவதும் அடங்காப்பற்றில் அடங்கியிருந்தது. மன்னாரிலிருந்து திருகோணமலை வரை பரந்திருந்தது இப்பிரதேசம் என பாதர் குவேறோஸ் கூறுகிறார். 7 வன்னியர் பிரதேசங்கள் இதில் அடங்கியிருந்தன. இந்த 7 வன்னியர்கள் பற்றிவையா பாடலில் ஒரு கற்பனைக்கதை உள்ளது. அதை வரலாறாகக் கொள்வதில்லை.

நாம் ஏற்கனவே கூறியதுபோல், இப்பிரதேசம் முழுவதும் மாகோனின் ஆட்சியின் கீழிருந்தது. இப்பிரதேசத்தின் மேற்குக்கரையோரம் முழுவதும் மாகோனின் பாதுகாப்புப்படைத்தளங்கள் நிலை கொண்டிருந்தன. எனவே அவன் காலத்துக்கு முன் அவ்விடங்களில் வன்னி ஆட்சி ஏற்பட்டிருக்கும் என்று கூறமுடியாது. மாகோன் காலத்தில் யாழ்ப்பாணக்குடா தனியரசாக இருந்தது மாகோனுக்குப் பின்னரே யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. ஆகவே அடங்காப்பற்று வன்னிப்பிரதேசத்தில் மாகோன் காலத்து வன்னியர்களே ஆட்சி செய்தனர் எனக் கொள்ளலாம்.

## 7. வன்னியரின் வீழ்ச்சி:-

மாகோனின் ஆட்சிக்குப்பின் வன்னியர் ஆட்சிதளர்ந்தது. ஆனாலும் இலங்கையில் வட பகுதியில் உள்ள அடங்காப்பற்று வன்னிப் பற்றுக்கள் மட்டும் போத்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சிவரையும் நீடித்தன. இவ்வன்னிப்பற்றுக்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களின் கீழ் இருந்தபோதும் பல வன்னியர்கள் சுதந்திமாக இயங்கினர். யாழ். மன்னர்களுக்கு பலவன்னியர்களுக்கு திறைகொடுப்ப தையும் ஆண்டு தோறும் அவர்கள் தர்பாருக்குச் செல்வதையும் தவிர்த்தனர்.

யாழ்ப்பாண அரசு போத்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆட்சியில் இருந்தபோது, ஆட்சியிலிருந்த கவர்னர்களும் இவ்வன்னியர்களிடமிருந்து திறைபெற முயற்சி செய்தனர். ஆனால் பல வன்னியர்கள் இக்கட்டளை யைப் புறக்கணித்தனர்.

அடங்காப்பற்று வன்னிமையில் பின்வரும் ஏழு வன்னிப்பிரதேசங்கள் அடங்கியிருந்தன.

1) பனங்காமம், 2) முள்ளியவளை, 3) கருநாவல்பற்று, 4) தென்னமரவாடி, 5) மேல்பற்று, 6) கரிக்கட்டுமூலை, 7) செட்டிகுளம்பற்று. இவற்றுள் பனங்காமம் வன்னிப்பற்றே மிகப் பெரியது. எனவே இவ் வன்னிப்பற்றின் தலைவன், ஏனைய வன்னியர்களுக்கும் தலைவனாகச் செயற்பட்டான். பனங்காம வன்னியனான கைலை வன்னியன் பண்டாரவன்னியன் ஆகியோர் அன்னிய ஆட்சியை முழுமூச்சாக எதிர்த்தனர். ஆனால் இந்த எதிர்ப்பு நீடிக்க முடியவில்லை. ஈற்றில் (1803ல்) வன்னியர்களின் கடைசி மன்னனான பண்டார வன்னியனின் மறைவுடன், வன்னியர் ஆட்சி தளர்வுற்று, மங்கி மறைந்தது.

# வன்னி மண்ணில் சிதைவுறும் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள்

ந.ஞானவேல்,
கல்வியியற் கல்லூரி, வவுனியா.

ஈழத்து சைவ மக்களிடத்தில் பண்டு தொட்டு இருவகையான வழிபாட்டு மரபுகள் இருந்து வந்தன. ஒன்று ஆகம முறையில் அமைந்த பெருந்தெய்வ வழிபாட்டுமுறை, மற்றது ஆகம மரபுக்கு அப்பாற்பட்ட கிராமிய சிறுதெய்வ வழிபாட்டு முறை. வானுயர்ந்த கோபுரம், விமானம், கர்ப்பக்கிரகம் முதலானவற்றோடு ஆலயம் அமைத்து அதில் அழகிய விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து அந்தணர்களால் ஆகம விதிக்கமைய பூசை செய்து வழிபாடு ஆற்றப்படுவது ஆகமமுறையில் அமைந்த வழிபாடாகும். அந்தவகையில் சிவன், விஷ்ணு, விநாயகர், முருகன், அம்பாள் ஆகிய தெய்வங்களை இலங்கையில் பெருந் தெய்வங்களாகக் கணித்து ஆகம மரபில் பூஜிக்கின்றனர்.

இத்தகைய ஆகம மரபு எல்லா பிரதேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் பொதுவான ஒத்ததன்மை உடைய வழிபாட்டு அம்சங்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. ஆனால் கிராமிய வழிபாட்டு முறை அதாவது சிறு தெய்வ வழிபாட்டு முறை வழிபடப்படும் இடம், காலம், தேசம் என்பவற்றுக்கேற்ப வெவ்வேறுபட்ட வழிபாட்டு மரபுகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. இங்கு சாதாரண மக்களின் வழியில் வந்த பூசாரியாரே சமய நிகழ்வுகளை முன் நின்று நடாத்துவார்.

அந்த வகையில் ஈழத்து சிறு தெய்வ வழிபாட்டில் இடம் பெறும் தெய்வங்களாக, ஐயனார், நாகதம்பிரான், வல்லிக்கண்ணன், பெரியதம்பிரான், அண்ணமார், வீரபத்திரர், காடேறி, மாடன், சுடலைமாடன், கறுப்பன், பதினெட்டாம் கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், வீரமான், குறும்பன், பெத்தப்பர், வன்னியர், இராக்கியன், விறுமர், சந்நியாசி, முனி, காத்தவராசன், மதுரைவீரன், மாடசாமி, வைரவர், முனியப்பர் நரசிங்கர், சடாமுனி ஆகிய ஆண்தெய்வங்களும் கண்ணகி, திரௌபதை, மாரி, காளி, நீலி, பிடாரி, கொத்தி, சீதை, எல்லையம்மன், பேச்சி, வெக்காள், முண்டக்கன்னி, நாச்சிமார்முதலான பெண் தெய்வங்களும் வழிபடப்பட்டு வருகின்றன. விநாயகர் இருமரபினரும் வழிபட்டு வரும் பொதுத்தெய்வமாகக் காணப்படுகின்றது.

மேற்படி வழிபாட்டு மரபுகளில் சிறு தெய்வ அல்லது கிராமிய வழிபாட்டு மரபுகளே, தனித்துவம் மிக்க பல்வேறுபட்ட வழிபாட்டு மரபுகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய தனித்துவம் மிகு கிராமிய வழிபாட்டு மரபுகள் காலச்சக்கரத்தின் சுழற்சிக் கேற்ப அவை கைவிடப்பட்டு ஆகம மரபிற்குள் அடிபணிந்து செல்லவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் வன்னி மண்ணில் இதுவரைகாலமும் வழிபாடு ஆற்றப்பட்டு வந்த தனித்துவம் மிகு சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள் எவை என இனங்காண்பதும், அவை எதிர்நோக்கி உள்ள இடர்பாடுகள் எத்தகையவை என நோக்குவதும் இவ் ஆய்வின் இலக்காகும்.

வன்னி மண்ணில் ஆற்றப்படுகின்ற சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள் சார்பாக இதுவரை எந்தவொரு முளுமையான ஆய்வும் நிகழ்த்தப்படவில்லை. இதைக் கருத்தில்

கொண்டு, இச் சிறுதெய்வ வழிபாடு சார்பாக ஆங்காங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள், வையாபாடல் முதலான வரலாற்று நூல்கள், ஐவேர்ஸ்,சி.எஸ். நவரட்ணம் ஆகியோரது ஆய்வுக்குறிப்புக்கள், ஆலயங்களில் பேணப்பட்டு வரும் ஏட்டுச்சுவடிகள், கர்ணபரம்பரைக்கதைகள், பூசாரிகளிடத்தும் ஊர்மக்களிடமும் நேர்முகம் காணல் மூலம் பெறும் தகவல்கள் என்பனவற்றை மையமாகக் கொண்டு, வன்னியின் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள் பற்றி ஓரளவு எடுத்துக் கூறமுடிகின்றது.

மேற்குறித்த ஆய்வுக்கருவிகளை முழுமையாகக் கொண்டு வன்னி மண்ணில் ஆராய்ந்ததன் விளைவாக ஐயனர், நாகதம்பிரான், நரசிங்கர், அண்ணமார், பெரிய தம்பிரான், வைரவர், காத்தவராசன், வன்னியர், காடேறி, இராக்கியன், மாடசாமி, சடாமுனி, முனியப்பர், விநாயகர், முதலான ஆண்தெய்வங்களும், கண்ணகி, காளி, மாரி, பேச்சி, கொத்தி, நாச்சிமார் முதலான பெண்தெய்வங்களும் கிராமிய சிறுதெய்வங்களாக ஆற்றப்பட்டதை அறியமுடிகின்றது. மேற்படி தெய்வ வழிபாட்டை ஏற்றுக்கொள்வது போன்று அகளங்கன் கவிதைகளில் வன்னி நாட்டு தெய்வங்கள் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டு இருக்கும் கவிதைப் பகுதியை நோக்குவதும் இங்கு பொருத்தமானதே.

ஐயனார் காளி
அருள் நாக தம்பிரானும்
அண்ணமார் வைரவர்
முனி வீரபத்திரரும்
கண்ணகை முத்துமாரி
வன்னியர் சிவனாரும்
பிள்ளையார் முருகனொடு
நரசிங்கர் கோவில்களும்
பெருமைமிகு வன்னிக்குப்
பெருங்காவல் அளித்திடுமே

என்று கூறி வன்னி மண்ணின் காவல் தெய்வங்கள் எவை என விளக்குகின்றது. இதிலும் கணிசமான தெய்வங்கள் சிறு தெய்வ வழிபாட்டுத் தெய்வங்களாகவே காணப்படுவது கண்கூடு.

**ஐயனார் வழிபாடு**

ஈழத்தின் எந்தப்பகுதியிலும் இல்லாத அளவு வன்னிக்கே உரித்தான தனித்துவம் மிகு வழிபாட்டு மரபாக ஐயனார் வழிபாடு காணப்படுவதை வன்னி மண்ணில் அவதானிக்க முடிகின்றது.

சிவனும், விஷ்ணுவும் ஒன்று சேர்ந்தபோது இவர்களுக்கு மகனாகப் பிறந்தவராக ஐயனார் கருதப்படுகின்றார். இதனால் ஹரிஹரபுத்திரன் என்ற பெயரும் ஐயனாருக்குண்டு. சிவந்த சடை, கரியதிருமேனி, குதிரைவாகனம், கோழிக்கொடி, பன்னீராயிரம் படைக்கலன்கள், பூரணை, புட்பகலை என்ற இருதேவியர் என்பனவற்றை அம்சங்களாகக் கொண்டவரே ஐயனார் என கந்தபுராணம் ''மாசாத்தா படலம்'' கூறும். சுப்பிரபேதம், அம்சுமத்பேதம், பூர்வகாரணாகமம், முதலான ஆகமங்கள் ஐயனார் வழிபாடுபற்றி கூறியபோதிலும் ஆகம முறையில் ஆலயங்கள் அமைத்து இவரை வழிபடுவது வன்னிமண்ணில் குறைவாகவே காணப்படுகின்றது.

வன்னி மக்கள் ஐயனாரின் உறைவிடம் காடுகள் என்று கருதுகின்றனர். காட்டுக்குத் தேன் எடுக்கச் செல்வோரையும், வழிப்போக்கரையும், காப்பாற்றும் தெய்வமாகவும், நீர்ப்பாசனக்குளங்கள் உடையாவண்ணமும் கடும் வரட்சிக்காலத்தில் நோய்கள் பீடிக்காமல் இருப்பதற்கும், வரட்சிக்காலத்தில் மழை வேண்டி அருள் புரிவதற்கும் இவரை வழிபடுகின்றனர்.

இத்தகைய ஐயனார் வழிபாடானது நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாக வன்னி மண்ணில் காணப்படுகின்றது. வையாபாடல் கூற்றின்படி மதுரையில் இருந்து செட்டிகுளத்துக்கு வருகைதந்த வீரவராயன் செட்டி என்ற வணிகன், தான் கொண்டு வந்திருந்த செல்வங்களைப்பாதுகாக்க காவல்தெய்வங்களாக ஐயனாரையும் சடாசுமுனியையும் அமைத்து வழிபட்டதாக அறியமுடிகின்றது. அதாவது

அன்னதற்பின் கரையினிற்கள் எச்சிலாப
மாழ்ந்த கடற் சிலாபமென வமைத்தப் பின்னர்த்
தன்னிகரற் றிலங்குமெழி லைய னாரைத்
தாவுறுசீர்க் கடலதனுக் கருகு வைத்துப்....

என்ற வையாபாடலின் 32வது செய்யுள் இதற்குச் சான்றாகும். விடத்தல் தீவுக்கும் இலுப்பங்கடவைக்கும் இடையில் உள்ள வெள்ளாங்குளத்தில் ஐயனார் கோவில் ஒன்றின் அழிபாடுகள் காணப்படுகின்றன.

கோகிலசந்தோஸவில் குறிப்பிடப்படும் ஐயனார் ஆலயம் இதுவாக இருக்கலாம் என சி.எஸ். நவரத்தினம் கருதுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதேபோன்று பழமைமிக்க ஐயனார் கோயில் ஒன்று மாதம்பையிலும் காணப்படுகின்றது.

தமிழ் மக்கள் மட்டுமன்றி வன்னிச் சிங்கள மக்களும் ஐயனாரை வழிபடுவதை அவதானிக்க முடிகின்றது. இன்று அனுராதபுரத்தில் காணப்படும் இசுருமுனிய கற்கோயிலில் ஐயனாருக்குரிய புடைப்புச் சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. இதை ''போர்வீரன்'' என்று ஒரு சிலர் கூறினாலும் இந்த சிலை உயர்ந்த முழந்தாளில் முழங்கையை வைத்து வீற்றிருக்கும் பாவனையில் உள்ளது. அத்தோடு கையில் வளைந்த தடியையும் அருகில் குதிரை, யானைக்கூட்டங்களையும் கொண்டு அமைந்ததாகவும் காணப்படுகின்றது. இதற்கு அருகில் மற்றொரு கல்லில் மலர் ஏந்திய மங்கையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இது இவரது தேவியாக இருக்கலாம் என சி.எஸ். நவரத்தினம் குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

தமிழ் மக்களைப் போன்றே வன்னிச் சிங்கள மக்களும் ஐயனாரை தமது வேளாண்மை காவல் தெய்வமாகவே கருதி வழிபட்டுவந்தனர். குளம் நிரம்பித் தண்ணீர் கரைபுரண்டு ஓடும் போதும் நெல் அறுவடை செய்த பின்னரும் இத் தெய்வத்துக்கு ''முட்டிமங்கல்ய'' என்ற விழாவை வயல்கள் தோறும் எடுத்து வழிபடுவது வன்னி சிங்கள மக்கள் மத்தியில் ஒரு மரபாக இருந்து வருகின்றது. அதாவது பானைக்குள் தீபங்களை வைத்து வழிபடுவதே இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.

இன்று வன்னியில் உள்ள ஐயனார் ஆலயங்களாக ஆதிசடவன்குளம் ஐயனார் கோயில், முள்ளியவளை ஆண்டான்குளம் ஐயனார் கோயில், பொன்னாவெளிகாகம் கரைந்தான் ஐயனார் கோவில், வேரவில் ஐயனார்கோவில், கனகராயன் குளம் கலிங்குவான் இளந்தாரி ஐயனார் கோயில், நெடுங்கேணி ஐயனார்கோயில் ஆகியன காணப் படுகின்றன. இவற்றுள் கனகராயன் குளத்துக்கு அண்மையில் உள்ள ஆதிசடவன் குளம் ஐயனார் கோயிலும், முள்ளிய வளையில் உள்ள ஆண்டான் குளம் ஆதி ஐயனார் கோயிலுமே வன்னியில் பிரபலிக்கம் பெற்ற ஐயனார் ஆலயங்க ளாகும்.

இவ் ஐயனார் ஆலயங்களில் பரம்பரையாக வேளாளர் குலத்தைச் சேர்ந்த பூசாரியார் ஒருவரே பூசைவழி பாடுகளை தலைமைதாங்கி ஆற்றுகின்றார். இங்கு நடைபெறுகின்ற வழிபாட்டு மரபில் ஆண்டுக்கு ஒருமுறைவரும் பொங்கல் விழா முக்கியமானதாகும். பொங்கல் காலம் அண்மித்ததும் பொங்கலுக்குரிய அனுமதியை ஐயனார் பிரதம பூசகரின் கனவில் வந்து கூறியதன் பின்னரே பூசகரால் பொங்கல் நாள் அறிவிக்கப்படும். இதன் பின்னர் ஆலயத்தோடு தொடர்புபட்ட முக்கியமானவர்களின் கையில் கப்பணவேளையைக் கட்டுவர். இது ''நோற்புக்குத் துதல்'' என்று அழைக்கப்படும். இதன் பின்னர் பொங்கலுக்குரிய ஆயத்தங்கள் நடைபெறும் பொங்கலுக்கு முதல் நாள் சலவைத் தொழிலாளி, கோவியர், அம்பட்டர், பறையர் ஆகிய குலத்தவர்களில் ஒவ்வொருவர் ஆலயத்துக்கு வருவர். சலவைத் தொழிலாளி ஆலயத்தில் வெள்ளை கட்டுவதோடு பூசாரிக்கும் ஏனையோருக்கும் சுத்தமான ஆடைகளை வளங்குவர், பரியாரி என்று அழைக்கப்படும் அம்பட்ட குலத்தவர் பொங்கல் கிரியைகளுக்கு உதவுவர். சாம்பான் என்று அழைக்கப்படும் பறையர் குலத்தவர் பறை முளங்குவதற்கு ஆயத்தமாக பறையைக் கொண்டு வந்து இருப்பர்.

மேற்படி குலத்தவர்களுடன் பக்தர்கள் புடை சூழ பொங்கலுக்கு வேண்டிய பண்டங்கள் வைக்கப்பட்ட இடத்துக்கு பூசாரியார் செல்வார். பூசாரியார் பொருட்களை சரிபார்த்து ஐயனாரின் அருள் வேண்டி ஆடியபின்னர் பண்டங்களை ஒவ்வொருவரிடமும் கொடுப்பர். இது ''மடைப்பண்டம் எடுத்தல்'' என்று கிராம மக்களால் கூறப்படும். மடைப்பண்டங்கள் ஐயனாரின் ஆலயத்துக்கு வந்து சேர்ந்த பின்னர், பூசாரியார் ஐயனாரையும் அவரது பாரிவாரங்களையும் கும்பங்களில் ஆவாகனம் பண்ணி எழுந்தருளச்செய்வார். அதன் பின்னர், பொங்கல் பானையை பூசாரியார் தூக்கி அங்கு அழைக்கப்பட்ட தெய்வங்களாலும் தேவதைகளாலும் பிறசக்திகளாலும் இடையூறு வராது காக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்வர். அதாவது

''அந்தரம் சுவர்க்கம்,பூமி, மண்டலங்கள், எட்டுத்திக்கும்
பதினாறு கோணங்களையும் ஆளும் புட்கலையாள்
முதல் அறுபத்துநான்கு நூறாயிரம் மற்று மாக்களையும்
படைத்துக் காக்கும் தம்பிரானுக்கும் தம்பிராட்டிக்கும்
அபயம் அடைக்கலம்''

என்று கூறி அடுப்பில் பொங்கல் பானையை வைப்பார். இவ்வாறு பொங்கல் பொங்கியதன் பின்னர் மடை பரவப்படும். மடையானது ஐயனாருக்கும் அவரது பரிவாரத் தெய்வங்கள், படைத்தலைவர்கள், பதினென் வயிரவர்கள், பன்னீராயிரம் படைக்கலன்கள் ஆகியவற்றுக்கும் இடப்பட்டு இருக்கும். சடவன்குளம் ஐயனார் கோவிலில் முன்னர் பன்னீராயிரம் வெத்திலை,பாக்கு பரவி படைப்பது மரபாகக் காணப்பட்டது. இவ்வாறு படையல் முடிவுற்றதன் பின்னர் வரவழைக்கப்பட்ட தெய்வங்களை பூசாரியார் வாழ்த்தி வழி அனுப்புவார். இவ்வாறு தெய்வங்களை வழி அனுப்பியதன் பின்னர், பூசாரியார் முழுகி, உடைமாற்றி, ஐயனாருக்குத் தீபம் காட்டி, பொங்கல் கிரியைகளை நிறைவுக்குக் கொண்டுவருவார்.

சடவன் குளம் ஐயனார் கோயிலில் ஆறு அங்குல நீளமுள்ள நூலும், மஞ்சள் நிற உருண்டையான மருந்தும் பக்தர்களுக்கு வழங்குவது ஒரு மரபாகக் காணப்பட்டு வருகின்றது. இம் மருந்தானது தீராத நோய்களை எல்லாம் தீர்க்கும் என்ற நம்பிக்கையும் நூல்கட்டுவதனால் தேவதைகளின் தாக்குதல்களில் இருந்து தப்பிவிடலாம் என்ற நம்பிக்கையும் வன்னிமக்கள் மத்தியில் உண்டு. ஏழுவகையான மருந்துப் பொருட்களை இடித்து உருவாக்கப்படும் இம் மருந்தானது பலவகை நோய்களை எல்லாம் தீர்ப்பதாக நம்பப்படுகின்றது. குறிப்பாக பிரசவ வலியால் அவதியுறும் பெண்களுக்கு ஐயனாரின் மருந்தைக் கரைத்து குடிக்கக் கொடுத்தால் பிள்ளை சுகமாக பிறந்துவிடும் என நம்புகின்றனர்.

இன்று இத்தகைய ஐயனார் வழிபாட்டு மரபுகள் வன்னி மண்ணில் எந்தளவு தூரம் பேணப்பட்டு வருகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. மேலே கூறப்பட்ட பல்வேறு குலத்தவர்களும் இன்று தமக்குரிய கடமைகளின் தனித்துவத்தை பின்பற்றாது பின்நிற்க பூசாரியாரே அவற்றை எல்லாம் சிரமேல் கொண்டு ஆற்றுவதை அவதானிக்க முடிகின்றது. ஒரு சில ஐயனார் ஆலயங்கள் ஆகம மரபிற்குள் அமைந்து செல்வதையும் தடுத்து நிறுத்த முடியாமல் உள்ளது.

## கண்ணகி வழிபாடு

ஈழத்தில் மட்டக்களப்புக்கு அடுத்தபடியாக வன்னியிலேயே கண்ணகி வழிபாடு அதிகளவில் ஆற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது. சிலப்பதிகாரம் கூறும் காப்புடைத்தலைவியாகிய கண்ணகி சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டில் நீதிகேட்டு, சேரநாட்டில் கற்புடைத் தெய்வமாகக் கணிக்கப்பட்டாள். சேரநாட்டு அரசனான சேரன் செங்குட்டுவன் தான் எடுப்பித்த கண்ணகி விழாவில் கலந்து கொள்ள அண்டை நாடுகளின் அரசர்களுக்கும் அழைப்பிதழ் விடுத்து, அவர்கள் தம் நாடுகளிலும் கண்ணகி வழிபாடு பரவ அடிகோலினான். அந்தவகையில் இலங்கை வேந்தன் கஜபாகு,மேற்படி கண்ணகி விழாவில் கலந்து, ஈழம் திரும்பும் போது, கண்ணகியின் சிலைகளையும் காற்சிலம்புகளையும் கொண்டு வந்து அங்கணம்மைக் கடவை தொடக்கம் நாட்டின் பல பாகங்களில் கண்ணகி வழிபாட்டை நிலை நிறுத்தினான். இத்தகைய கண்ணகி வழிபாட்டின் தோற்றம் பற்றி ராஜாவலிய, ராஜரத்தினாகர, பத்தினிகத்தாவ முதலான சிங்கள இலக்கியங்கள் வாயிலாக மேலும் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இன்று வற்றாப்பளையில் சிறந்து விளங்கும் கண்ணகி அம்மன் கோயில் வன்னியின் கண்ணகி அம்மன் கோயில்களுக்குள் பிரபல்யம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. கண்ணகி மதுரையை எரித்துவிட்டு, தென்திசையாக ஈழம் வந்து, தனது சீற்றத்தைத்தணித்துக்கொண்டதாகவும், அவ்வாறு இறுதியாக அதாவது பத்தாவது இடமாகிய பத்தாப்பளை (வற்றாப்பளை) யில் தங்கியபோதே அவளது சீற்றம் முளுமையாகத் தணிந்து அவள் தெய்வ அம்சம் பெற்றதாகக் கர்ணபரம்பரைக்கதைகள் மூலமும் மேற்படி ஆலய வரலாற்றுச்சிந்து மூலமும் அறியமுடிகின்றது.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில் ஆகம மரபிற்கு ஏற்ப மாற்றம் பெற்றாலும் அங்கு நடைபெறும் வைகாசி பொங்கல் சடங்குகள் தனித்துவமான மரபுகளைக் கொண்டவை. இத்தகைய பொங்கல் சடங்கில் முதலாவது அம்சமாக ''பாக்குத் தெண்டல்'' என்று அழைக்கப்படும் பொங்கல் பற்றி அயற்கிராமங்களுக்கு அறிவிக்கும் நிகழ்வு இடம் பெறும். இதன் பின்னர் தீர்த்தம் எடுத்தல் என்னும் நிகழ்வுக்காக முல்லைத்தீவு சிலாவத்தைக்கடலுக்குச் செல்வர். அங்கு உவர்நீரை மண்முட்டிகளில் எடுத்து ஊர்வலமாகக் கொண்டு வருவர். இது ''தீர்த்தக்குடம் வருதல்'' என ஊர்மக்களால் அழைக்கப்படும். இவ்வாறு தீர்த்தக்குடம் எடுத்தபின்னர், அக்குடங்களை பக்திபூர்வமாக காட்டுவிநாயகர் ஆலயத்திற்குக்கொண்டு சென்று நெய்யில் தோய்க்கப்பட்ட திரிகளை குடங்களின் வாயில் வைத்து உவர் நீரில் விளக்கு எரிய விடுவர். இது இலங்கையில் வேறு எந்த ஆலயங்களுக்கும் இல்லாத தனித்துவம் மிகு வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. இவ்வாறு உவர் நீரில் விளக்கு எரிய விட்டு மடை பரவி ''சிலம்புகூறல்'' என்னும் ஏட்டுப் பிரதியை படித்த பின்னர் மேற்படி ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள பொங்கலுக்கு வேண்டிய மடைப்பண்டங்களை பறை, உடுக்கு முதலான வாத்தியங்களின் ஒலியுடன் ஊர்வலமாகக் கொண்டு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தை சென்றடைவர். கொண்டுவரப்பட்ட உவர் நீர் விளக்குகள் எரிய விடப்பட்ட பின்னர் கும்பம் வைத்தல் பூசாரியாரால் நிகழ்த்தப்படும். இக்கும்பத்துக்கு மாவிலை அல்லாது இளம் தென்னம்பாளை நெட்டுகளை வைத்து அம்பாளை கும்பத்தில் ஆவாகனம் செய்வர். இவ்வாறு கும்பம் வைத்த பின்னர் கச்சுநேரல், மடைபரவல், கட்டுச் சொல்லுதல் ஆகிய கிரியைகள் நடைபெறும். இத்தகைய கிரியைகள் நிறைவு பெற இரவு பத்துமணிக்கு மேலாகும். இதன் பின்னர் பூசாரியார் தேவதைகளின் ஆசிவேண்டி வானத்தை நோக்கி பச்சை அரிசிகளை வீசி பக்திப்பரவசநிலையில் பறை ஒலியில் ஆடுவார். இந் நிகழ்வு ''வளர்ந்து நேரல்'' என அழைக்கப்படும். இதனைத் தொடர்ந்து பொங்கல்பானை மங்களகரமாக ஏற்றிவைக்கப்பட்டு பொங்கல் பொங்கப்படும். ஆலய வீதிகள் தோறும் பல்லாயிரக்கணக்கான பொங்கல் பானைகள் பொங்கி வழிவது இவ்வாலயத்தின் தனித்துவம் மிகு சிறப்பம்சமாகும். இவ்வாறு பொங்கல் பொங்கி, தூளிபிடித்தல், திருக்குளிர்த்தி பாடுதல், அம்மானைபாடுதல் போன்ற நிகழ்வுகளோடு பொங்கல் கிரியைகள் நிறைவுபெறும். கட்டாடியார் மரபில் வந்த பக்தநானி என்பவருக்குரிய பொங்கல் ''பக்தஞானி பொங்கல்'' என்ற பெயரில் மறுநாள் இவ்வாலயத்தில் பொங்கப்படுகின்றது.

கட்டாடியாரே (பூசாரி) முன்னைய காலங்களில் ஆலயத்தின் அனைத்து சடங்குளையும் நிகழ்த்தி வந்தார். ஆனால் இன்று அம்மனுக்கு வேண்டிய அபிஷேகம், அலங்காரம், வேதபாராயணம் ஆகியவற்றை அந்தணர்களே தலையிட்டு ஆற்றுவதை அவதானிக்க முடிகின்றது. பொங்கல் கிரியைகளோடு சம்மந்தப்பட்ட குறித்த குலத்தவர்களது

பங்களிப்புக்களும் இன்று கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

வன்னி மண்ணில் வழிபாடு ஆற்றப்படுகின்ற ஏனைய கண்ணகி அம்மன் கோயில்களாக, குறிஞ்சாதீவு கண்ணகை அம்மன் கோயில், ஓமந்தை வண்ணாங்குளம் கண்ணகை அம்மன் கோயில், மாங்குளம் கண்ணகி அம்மன் கோயில், புதுக் குடியிருப்பு கண்ணகி அம்மன் கோயில், பொன்னாவெளி கண்ணகை அம்மன் கோயில் ஆகிய ஆலயங்களைக் கூறிக் கொள்ள முடிகின்றது.

வன்னி மண்ணில் கண்ணகி வழிபாட்டு மரபுகள் ஆகமமரபிற்கு மட்டுமன்றி அந்நிய மத மரபுகளுக்குட்பட்டு செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. இன்று மடுத்திருப்பதியில் விளங்கும் தூய மேரி மாதாவும் முன்னர் கண்ணகி அம்மனாகவே வழிபடப்பட்டதாக ஆர். டபிள்யூ. ஐவேர்ஸ் தனது வடமத்திய மாகாண கைநூலில் குறிப்பிடுகின்றார்.

## நாகதம்பிரான் வழிபாடு

ஈழத்தின் தொன்மையான வழிபாட்டுமரபுகளில் ஒன்றாக நாகதம்பிரான் வழிபாடு காணப்பட்டு வருகின்றது. ஈழத்தின் ஆதிக்குடிகளான நாகரினால் ஆற்றப்பட்ட இவ் வழிபாட்டுமுறை வன்னி மண்ணிலும் சிறப்பானதொரு சிறு தெய்வ வழிபாட்டு மரபாகப் பேணப்பட்டு வருகின்றது.

வன்னியில் இத்தகைய நாகதம்பிரான் வழிபாட்டின் தோற்றுவாய் பற்றி பல கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. அதாவது விவசாயி ஒருவனுக்கு பிள்ளைகள் இல்லை. எனினும் அவனுக்கு ஏழு பாம்புக்குட்டிகள் பிள்ளைகளாகக் கிடைத்தன. இத்தகைய பாம்புக்குட்டிகள் பெரிதாக வளர்ந்து வீட்டின் எல்லா இடங்களிலும் ஊர்ந்து திரிந்தன. இவற்றின் இச் செய்கைகளை கண்டு பொறுக்க முடியாத விவசாயியின் மனைவி விளக்குமாறால் ''போய்த் தொலையுங்கள் சனியங்களே!...'' என்று அடித்து விரட்டினாராம். அவ்வாறு விரட்டப்பட்ட பாம்புகள் வன்னி மண்ணின் வெவ்வேறு ஊர்களில் சென்று தங்கின. அவ்வாறு தங்கிய இடங்கள் காலப் போக்கில் நாகதம்பிரான் ஆலயங்களாக மாற்றம் பெற்றன. இவ்வாறு பாம்புகள் சென்ற பாதையை கார்க்கோடன் சென்ற பாதை எனக் கூறி அப்பாதைகளில் நெற்கள் விளைவதில்லை என ஊர்மக்கள் கருதுகின்றனர். இந்தவகையில் வன்னி மண்ணில் எழுச்சி பெற்ற நாகதம்பிரான் ஆலயங்களாக புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில், கிளிநொச்சி நாகதம்பிரான் கோவில், முள்ளியவளை நாகதம்பிரான் கோவில், புளியங்குளம் துவனாகேதி நாகதம்பிரான் கோவில், மாங்குளம் கொம்பெடுத்தகுளம் நாகதம்பிரான் கோவில், புதூர் நாகதம்பிரான் கோவில் ஆகியன காணப்படுகின்றன. இவற்றில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயிவிலும், புதூர் நாகதம்பிரான் கோயிவிலும் ஆற்றப்படும் தனித்துவம் மிகு வழிபாட்டு மரபுகள் முக்கியமானவை. இங்குள்ள புற்றில் நாகபாம்புகள் உறைவதாகவும் அவை மக்களுக்கு தீங்கு செய்வதில்லை என்றும் மக்கள் நம்புகின்றனர். அவ்வாறு வரும் பாம்புகளையும் (நாகையார் வராதேபோய் விடு) எனக் கூறியதும் அது கலைந்துவிடும் என்பர். வீடுகளில் நாகபாம்புகள் வந்தால் அதற்காக கோழிகளை நேர்ந்து வருகிற பொங்கல் தினத்தில் ஆலயத்தில் சமர்ப்பிப்பது ஒரு மரபாக இருந்து வருகின்றது.

வன்னிக் கிராமத்து மக்கள் பாம்பு தீண்டியதும் வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதில்லை. உடனே புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்கே கொண்டு செல்வர். அங்குள்ள புற்றில் உள்ள மண்ணை (மருந்து) எடுத்து. கடி உண்ட இடத்தில் கரைத்துப் பூசுவர். உடனே விஷம் இறங்கிவிடும் என நம்புகின்றனர். எனவே வன்னி மண்ணில் ஆலயங்களும் வைத்தியசாலைகளாக இயங்குகின்றன என்பதற்கு இம் மரபு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். மேற்படி மரபை புலப்படுத்தும் வகையில் நாகதம்பிரான் மீது பாடப்பட்ட பாடல் ஒன்றை நோக்குவதும் பொருத்தமானதே.

பருத்திபுலம் வாளவரு நாகதம்பிரானே
பாதமலர் ஒரு பொழுதும் நாவில் அயரோமே
பெருத்துவரு நோயையும் பேயையும் நீக்குவாய்
பேதையர்கள் கற்பநோய் பாங்காய் அகற்றுவாய்

யாழ்ப்பாண நாகதம்பிரான் ஆலயங்களைப் போன்று வன்னி நாகதம்பிரான் ஆலயங்கள் ஆகம மரபிற்குள் காலடி எடுத்து வைக்காவிட்டாலும் கால வெள்ளோட்டத்தில் இவற்றின் தனித்துவம்மிகு வழிபாட்டு மரபுகள் மங்கிக் கொண்டே செல்கின்றன.

## நரசிங்கர் வழிபாடு

மகா விஷ்ணு பக்தன் பிரகலாதனுக்காக இரணியனை வதம் செய்ய மிருகத் தலையும் (சிங்கம்) மனித உடலும் கொண்டு அவதரித்த அவதாரமே நரசிங்கர் அவதாரமாகும். வன்னியில் திருமாலை பெருந்தெய்வவழிபாட்டு மரபில் அல்லாது சிறு தெய்வ வழிபாட்டு மரபிலேயே அதுவும் நரசிங்க அவதாரத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வழிபடப்படுவதை அவதானிக்க முடிகின்றது. திருமாலின் நரசிங்க அவதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபடுவது ஈழத்தின் எந்த மண்ணுக்கும் இல்லாத தனிச் சிறப்பு வன்னி மண்ணுக்கு உண்டு. இந்த வகையில்

வன்னியில் உள்ள நரசிங்கர் ஆலயங்களாக நொச்சிமோட்டை நரசிங்கர் கோவில், பம்பைமடு நரசிங்கர் கோவில், பூந்தோட்டம் நரசிங்கர் கோவில் ஆகிய ஆலயங்களைக் கூறிக் கொள்ளலாம்.

இவ்வாலயங்களில் ஒரு கல்லையோ அல்லது நரசிங்கர் படத்தையோ அல்லது சீலையில் வரையப்பட்ட நரசிங்கர் ஓவியத்தையோ தொங்க விட்டு அதற்கு அவ் ஊர் பூசாரியார் தலைமையில் வழிபாடு ஆற்றப்படுகின்றது. இவ்வழிபாட்டு மரபிலும் ஆண்டுக்கொருமுறைவரும் பொங்கல் விழா முக்கியமானது. இப் பொங்கலும் ஏனைய வன்னிக் கிராமிய தெய்வங்களுக்கு ஆற்றப்படும் பொங்கலைப் போன்றே காணப்படுகின்றது. நொச்சிமோட்டை நரசிங்கர் ஆலயத்தில் மிருகங்களை பொங்கல் அன்று பலி இட்டு அவற்றின் இரத்தத்தை பொங்கல் படையலுக்கு மேல் ஊற்றி வழிபடுவது ஒரு மரபாகக் காணப்படுகின்றது. இவ்வாறு வழிபாடு ஆற்றுகையில் ஏட்டுப் பிரதியில் உள்ள நரசிங்கர் பாடலை பாடி எல்லோரையும் பரவசம் அடையச் செய்வர் பூசாரி, அதாவது

காகக் கணத்தோடு கடிநாய் தனக்கும்
கடிகாளி வெம்பூதம் கடையற்றுப் போக
வேகப்பிராந்திற்கும் வெள்வாய் நரிக்கும்
மேலே விளாமல் வழித் துணைசெய்ய வருவாய்
யோகப் பிரதாபன் ஒரு தம்பி
உலகாழ ஒரு தம்பியுடனே
நாகற் கருங்கோ நண்ணும் பிரானே
நரசிங்க தேவா நமஸ்தே! நமஸ்தே!

என்றவாறான பம்மைமடு நரசிங்கர் ஏட்டுப் பிரதி பாடல்களைப் படித்து பொங்கல் வழிபாட்டை நிறைவுக்குக் கொண்டுவருவர். பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தில் தமது பல்வேறு இன்னல்களை நீக்க நரசிங்கரை நேர்ந்தவர்கள் காவடி எடுப்பதும், தமது ஆடு, கோழி முதலானவற்றை ஆலயத்துக்கு வழங்குவதும் இங்கு மரபாகக் காணப்படு கின்றது.

இவ்வழிபாட்டிலும் தற்போது பம்பைமடு நொச்சிமோட்டை நரசிங்கர் ஆலயங்களில் மிருகங்களைப் பலியிடுவது விலக்கப்பட்டுள்ளது. பறை ஒலி எழுப்புதல் முதலான வாத்தியங்களை இசைத்தலும் இன்று நிறுத்தப் பட்டுள்ளது.

<u>நாச்சிமார் (சப்த கன்னிமார், வன்னிநாச்சியர்) வழிபாடு</u>

வன்னியின் சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக நாச்சிமார் வழிபாடும் காணப்படுகின்றது. ஐயனார் வழிபாட்டைப் போன்று இவ்வழிபாடும் நீண்டதொரு வரலாற்றுப்பின்னணியைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. வையா என்ற யாழ்நாட்டு வளப்ப நூலில் வரும் கதை ஒன்றின் வாயிலாக வன்னியின் நாச்சிமார் வழிபாட்டின் ஆரம்பம் பற்றி ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. அதாவது வன்னிப்பிரதேசக்காடுகளில் துன்பம் விளைவித்த இராட்சத அரக்கனை ஒழிக்க மதுரையில் இருந்து வருகைதந்த வன்னியர் அவனுடன் போரிட்டு இறையடி எய்தினர். இதை அறியாது தமது கணவர்களைத் தேடி ஈழம் வந்த வன்னி நாச்சிமார்கள் அவர்களது கணவர்களுக்கு நேர்ந்த முடிவினை அறிந்த மாத்திரத்திலேயே செல்லிச்சி வாய்க்காலிலே தீயில் விழுந்து மரணித்துப் போனார்கள். அப்போது அவர்களுக்கு நாச்சிமார் என்ற நாமம் சூட்டி கற்புடைய மங்கையராக போற்றி வழிபட ஆரம்பித்தனர். (1921-பக்கம்10) இத்தகைய நாச்சிமாரது கோயில் ஒன்று புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையில் உள்ள ''மன்னாக்கண்டல்'' என்ற இடத்தில் சிதைந்து கிடப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்று இந் நாச்சிமார் வழிபாடானது வன்னி மண்ணில் தனித்தும் ஏனைய சிறுதெய்வங்களோடு இணைந்தும் ஆற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு நாச்சிமாருக்கென தனித்து ஆலயம் எழுப்பி வழிபடப்படும் ஆலயமாக முல்லைத்தீவு வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலயம் திகழ்கின்றது.

''சீர் செறிநல் வாவி நன்னீர் சேரும் வட்டுவாகல்லியே
பார் நிறைந்த பாறைகளும் படரும் வட்டுவாகல்லியே
ஊர் விளங்கவேயுறைந்த உத்தமிகள் மீது தமிழ்
சார்புடனே ஆதியுறை சப்தகன்னிமீது தமிழ்
நாடுசுவைதேடறியா நாடியேன் பாடுதற்கு''

என்ற மேற்படி ஆலய கதைப்பாடல் மூலம் நாச்சிமார் வழிபாடு, வட்டுவாகலில் எந்தளவு தூரம் வேர் ஊன்றி உள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது. இவ் ஆலயத்தில் ஆண்டுக்கொருமுறை ஆனிமாத பௌர்ணமியை அடுத்து வரும் திங்கட்கிழமை பொங்கல் பொங்கி பெருவிழா எடுப்பது இவ்வாலய மரபாகக் காணப்படுகின்றது. இங்குள்ள மற்றுமொரு சிறப்பம்சம் யாது எனில் பூசாரியார் மஞ்சள் நிறக் காவி உடை உடுத்து தலையில் மஞ்சள் நிற சேலையால் தலைப்பாகை கட்டி பிரம்பை இடுப்பில் செருகி, அருள் வந்து ஆடி, அம்பிகைக்கு வேண்டிய பூசை

வழிபாடுகளை பயபக்தியுடன் ஆற்றுவதை அவதானிக்க முடிகின்றது.

ஏனைய தெய்வங்களுடன் நாச்சிமார் வழிபாட்டை நோக்குகையில் சடவன் குளம் ஐயனார் கோயிலிலும் நாச்சிமார் வழிபாடு ஆற்றப்பட்டு வருவது மரபாகக் காணப்படுகின்றது. இங்கு பொங்கல் பொங்கி மடை பரவும் போது நாச்சிமாருக்கென தனித்துவமான மடை ஒன்று இடப்பட்டு இருக்கும். இம் மடையில் சீப்பு, கண்ணாடி, காப்பு, காலணிகள், முடிமயிர் முதலியவையும் வைக்கப்பட்டு இருக்கும்.

நாச்சிமார் வழிபாடும் இன்று ஏனைய சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது வன்னி மண்ணில் விரைவில் அழிந்து கொண்டு இருக்கும் வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது.

## பிள்ளையார் வழிபாடு

விநாயகர் வழிபாடு பொதுவாக இந்துமதத்தில் ஆகம வழிபாட்டு மரபாகக் காணப்பட்ட போதிலும் வன்னி மண்ணில் பெரும்பாலான விநாயகர் ஆலயங்கள் கிராமிய வழிபாட்டு மரபிலேயே ஆற்றப்படுகின்றன. வன்னி மண்ணில் விநாயகர் வழிபாடு நீணடதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. வையாபாடல் மூலம் காட்டு விநாயகரை குலத்தெய்வமாக வன்னியில் போற்றப்பட்டதை அறிய முடிகின்றது.

..........கணங்கள் முதல்வன் காட்டு விநா
யகமூர்த் தியொன்றைக் கரத்தீந்து
குணங்க ளுடையீர் குல தெய்வம்
கொண்டே செல்லீ ரெனவுரைத்தார்.

என்ற வையாபாடல் செய்யுள் இதற்கு சான்றாகும்.

பிள்ளையாரையும் வன்னிமக்கள் தமது வேளாண்மை விருத்திக்கு வேண்டிய காவற் தெய்வமாக குளம், ஆற்றங்கரைகள் தோறும் நீண்டு வளர்ந்து நிழல் பரப்பும் மரத்தின் கீழ் ஒரு கல்லை வைத்து பிள்ளையார் என போற்றி வழிபட்டு வந்த மரபு காணப்படுகின்றது. வன்னி மண்ணில் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் தமது வேளாண்மை தெய்வமாக விநாயகரை வழிபட்டு வந்ததை அறிய முடிகின்றது. வவுனிக்குளம், செட்டிகுளம், பாவற்குளம் முதலான இடங்களில் விநாயகருக்குரிய ஆலயங்களின் அழிபாடுகள் தென்படுகின்றன. முறிகண்டிப்பிள்ளையார் ஆலயம் வன்னியில் பிரபலிக்கம் பெற்ற ஒரு விநாயகர் ஆலயமாகும். இவ்வாலயமும் அண்மைக்காலத்தில் ஆகமமரபின்பால் ஈர்க்கப்பட்ட ஆலயமாகும். ஆகமமரபில் ஆலயம் கட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள் இவ் விநாயகருக்கு விருப்பமின்மையால் தடைப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

வயலில் ஈக்கள் அதிகம் தென்பட்டால் விநாயகருக்கு பொங்கல் பொங்கி அப் பொங்கல் நீரை வயலில் தெளித்தால் ஈக்கள் கலைந்துவிடும் என வன்னி மக்கள் நம்புகின்றனர். யானைகள் அதிகமாகவந்து வயலை நாசம் செய்தால் காட்டு விநாயகருக்கு நேர்ந்து பொங்கல் பொங்கி வழிப்பட்டால் அவற்றின் அட்டகாசம் குறைந்து விடுவதாக எண்ணுகின்றனர். வயலில் நெல் அள்ளும் போது முதலாவது மூட்டையை அயலில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு எனக் கூறி கட்டிவைத்த பின்னரே ஏனைய மூட்டைகளைக் கட்டத் தொடங்குவது வன்னிக்கிராமிய மக்கள் மத்தியில் ஒரு பொது மரபாக இருந்து வருகின்றது.

இன்று ஆகம மரபிற்குள் விநாயகர் ஆலயங்கள் சென்று கொண்டு இருப்பதால் மேற்படி மரபுகளும் படிப்படியாக குறைந்து கொண்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது.

## மாரியம்மன் வழிபாடு

ஈழத்தில் இந்துமக்கள் வாழும் இடங்கள் எங்ஙனும் மாரியம்மன் வழிபாடு ஆற்றப்படுகின்றது. அந்தவகையில் வன்னி மண்ணிலும் வன்னிக்கு உரித்தான கிராமிய வழிபாட்டு மரபுகளோடு சிறப்பாக மாரியம்மன் வழிபாடு ஆற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது. பொதுவாக மாரியம்மன் மழையைத் தருவிக்கும் பெண் தெய்வமாகவும் பொக்கிளிப்பான், அம்மைநோய், சின்னமுத்து முதலான நோய்களை நீக்கும் அம்பிகையாகவும், சிறு குற்றங்களைக்கூட கண்டிக்கும் கொடூரத் தன்மை வாய்ந்த தெய்வமாகவும் கிராம மக்கள் போற்றி வருகின்றனர். வேப்ப மர நிழல் இத்தெய்வத்தின் உறைவிடம் எனக் கூறி வேப்பமரங்களின் கீழ் சிறுகல்லை வைத்து அதை மாரியம்மனாக எண்ணி உடுக்கு, பறை முதலிய வாத்திய ஒலிகளுடன் பூசாரியார் தெய்வம் வந்து ஆடி பூசை செய்வது இவ்வழி பாட்டின் தனித்துவம் மிகு அம்சங்களாகும்.

வன்னியில் புகழ் பெற்ற முத்துமாரியம்மன் கோவில்கள் வரிசையில், வன்னிவிளாங்குளம் முத்துமாரியம்மன் கோவில், குஞ்சுக்குளம் முத்துமாரியம்மன் கோவில், பண்டாரிகுளம் முத்துமாரியம்மன் கோவில்,புதுக்குடியிருப்பு முத்து மாரியம்மன் கோவில், சின்னடம்பன் முத்துமாரியம்மன் கோவில், நெடுங்கேணி திடாச்சூரி முத்துமாரியம்மன் கோவில் ஆகிய ஆலயங்கள் விளங்குகின்றன. வன்னியின் பழமைவாய்ந்த முத்துமாரி அம்மன் ஆலயம் ஒன்றின் அழிபாடுகள் ஓமந்தை நாம்பன் குளத்தில் காணப்படுகின்றது.

குஞ்சுக்குளம் மாரியம்மன் கோவிலில் நிகழும் சில சடங்குகள் தனித்துவம் மிக்கவை. இவ் அம்மனின் வருடாந்த பொங்கலை முன்னிட்டு அம்மனின் சின்னங்களாகிய திருநீறு, வேப்பமிலை, பிரம்பு,சிலம்பு என்பவற்றை ஒரு பெட்டியில் வைத்து,பெட்டியை வேப்பமிலைகளாலும் அழகிய மலர் மாலைகளாலும் அலங்கரித்து அயல் ஊர்கள் தோறும் கொண்டு செல்வர். இது ''கட்டுப் பெட்டி'' வருதல் என மக்களால் அழைக்கப்படுகின்றது. இக் கட்டுப்பெட்டி என்ன நாட்களில் எந்த எந்த ஊர்களுக்கு வரும் என்பதை திருமுகம் மூலம் முன்னரே அறிவிப்பர். அவ்வாறு அவ் அவ் ஊர் எல்லையை கட்டுப்பெட்டி அண்மித்ததும், அவ் ஊர் மக்கள் பறை, உடுக்கு முதலிய வாத்திய ஒலிகளுடன் சென்று வரவேற்பர். இவ்வாறு வரவேற்கும் போது பின்வரும் வரவேற்பு பாடலையும் பாடுவர்.

மாரிவாறாள் மாரிவாறாள்

குஞ்சுக்குளம் வாழும் மாரிவாறாள்

மனுக்குலம் தழைக்க

மாரிவாறாள் மாரிவாறாள்................

கட்டுப் பெட்டியை சுமந்து கொண்டு வருபவரின் கால்களுக்கு தமது ஊர் எல்லையைக் கடக்கும் வரையும் குடத்து நீர்களை ஒருவர் பின் ஒருவராக கொட்டிய வண்ணம் இருப்பர். இவ்வாறு கட்டுப்பெட்டி செல்கின்ற ஊர்கள் தோறும் பொங்கலுக்கு வேண்டிய பண்டங்களை சேகரித்த வண்ணம் பதினைந்தாம் நாள் குஞ்சுக்குளம் கிராம எல்லையை அடைவர். தமது ஊர் எல்லையை அடைந்ததும் பூசாரியார் மஞ்சள் கலந்த அரிசியால் ஊர் எல்லைகள் தோறும் வீசுவார். இது ''முத்துவிளையாடல்'' என கிராமமக்களால் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு கட்டுப்பெட்டி ஆலயத்தை வந்தடைந்த மறுநாள் பூசாரியார் தலைமையில் பொங்கல் நடைபெறும். இங்கு பெண் பூசாரிமார்களும் இடம் பெறுகின்றனர்.

இதேபோன்றும் பண்டாரிகுளம் முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெறுகின்ற நவராத்திரி கேள்வியும் முக்கியமானது. நவராத்திரி பூஜை ஆரம்பித்து ஏழாம் நாள் இவ்வாலயத்தில் கொடி ஏற்றும் வைபவம் இடம் பெறும். இக் கொடியேற்று வைபவத்திற்கு வேண்டிய கொடிமரம் ஆண்டு தோறும் காட்டில் வெட்டப்பட்டு கொண்டுவரப்படும் மரமே நாட்டப்படும். இத்தகைய மரம் தெரிய காட்டுக்குள் ஒன்பது பேர் மடைப் பண்டங்களுடன் செல்வர். இவ்வாறு சென்று ஒன்பது பேரும் மௌனமாக ஒருமரத்தைத் தெரிவு செய்வர். அவ்வாறு தெரிவு செய்ததன் பின்னர், கொண்டு வந்த மடை பண்டங்களை அம்மரத்துக்கு படைத்து! வழிபட்ட பின்னர், பூசாரியார் கோடாரியால் மரத்தை கொத்துவார். அதன் பின் ஏனையோரும் சேர்ந்து மரத்தைக் கொத்தித் தறிப்பர். இவ்வாறு தறித்த மரத்தை சீவி அயலில் உள்ள குளத்திலோ அல்லது கிணற்றிலோ மரத்தைக்கழுவி அதற்கு திருநீறு, சந்தணம் இட்டு பக்திபூர்வமாகக் கொண்டு வருவர். இவ்வாறு கொண்டு வந்த மரத்தை நாட்டுவதற்கு முன், நாட்ட வேண்டிய இடத்தில் பொங்கல் பொங்கி பொங்கல் பானைசரியும் வேளையில் மரத்தை பக்தி பூர்வமாக நட்டு மரத்துக்கு பட்டுச் சேலை, தர்ப்பை மாவிலை கட்டிய பின்னர் குறித்த சுபவேளையில் பூசாரியரால் கொடியேற்றப்படும். மானம்பூ திருவிழாவுக்கு மறுநாளுக்கு அடுத்தநாள் நடை பெறும் வேள்வியும் இங்கு முக்கியமான ஒரு வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. இங்கு நடைபெறுகின்ற பூசை ஒழுங்கும் சற்று மாறுபட்டு இவ்வாலயத்துக்குரிய மரபாகக் காணப்படுகின்றது. மாரியம்மன், பிள்ளையார், பத்திரகாளி, முருகன் ஆகிய தெய்வங்களுக்கு கதவை பூட்டிய நிலையிலேயே பூசாரியார் பூசை செய்வார். இதன் பின்னர் பரிவாரத்தெய்வங்களான காத்தவராசர், பேச்சி அம்மன், கொடிக்கால் வயிரவர், எட்டுத்திக்கு பாலகர், நாகதம்பிரான், சந்தானகோபாலர் ஆகியோருக்கு பூசை நடை பெறும். இதனைத் தொடர்ந்தே மீண்டும் முன்னர் பூசைசெய்யப்பட்ட தெய்வங்களுக்கு கதவை திறந்து அடியவர்கள் காண வழிபாடு ஆற்றப்படும்.

இன்று வன்னி மண்ணில் அரைவாசிக்கு மேற்பட்ட மாரியம்மன் ஆலயங்கள் ஆகம மரபில் கோயில்கட்டி அந்தணர்கள் பூசை செய்யும் ஆலயங்களாக மாறியுள்ளன. குஞ்சுக்குளம் மாரியம்மன் கோயிலால் ஆற்றப்படும் கட்டுப்பெட்டி ஊர்வலமும் நாட்டு நிலமைகளால் தடை செய்யப்பட்டுள்ளது.

## காடேறி வழிபாடு

காடுகளில் உறையும் தெய்வமாக வன்னிமக்கள் காடேறியை நம்புகின்றனர். இது கொடூரம் மிக்க தெய்வம் என்றும் காட்டுக்குள் நுளையும் போது இதை வழிபட்டு எதுவித மிருகங்களாலோ அல்லது வேறு தீய சக்திகளாலோ ஆபத்து ஏற்படாமல் இருப்பதற்கும் தாம் தேடிச் செல்லும் விலங்குகள் விரைவில் கிடைப்பதற்கும் அருள்புரிய வேண்டும் என காடேறியை வேண்டிய பின்னர் காட்டின் மத்திக்கு சென்று வேட்டையாடுவர். இவ்வாறு வேட்டையாடி மீளும் போது தாம் வேட்டையாடிக் கொண்டு வந்த மிருகத்தின் இரத்தத்தையும் தேனையும் இத் தெய்வத்துக்கு படைத்த வழிபடுவர். பொதுவாக இத்தெய்வத்தை செந்நிறப்பூக்களாலேயே வழிபடுவது மரபாகக் காணப்படுகின்றது.

பொதுவாகக் கிராமமட்டத்தில் மக்கள் இத்தெய்வம் நினைத்ததை சாதிக்க துணைபுரியும் தெய்வமாகக் கணிக்கின்றனர். அதாவது ''உவன் காடேறியை வாலாயப்படுத்தி இருக்கிறான் நினைத்ததை சாதிப்பான்'' என்று கூறி இத்தெய்வம் பற்றிய மேலான அச்சப்பாடுடையவர்களாக வன்னி மக்கள் விளங்குகின்றனர்.

நெளுக்குளம் பாலாமைக்கல் குளக்கரையில் பாலை மரத்தின் கீழ் ஒரு கல்லை வைத்து காடேறிசுவாமி என

இவ்வூர்மக்கள் வழிபட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இத் தெய்வத்துக்கு பன்னக் குழைகளின் மீதே பண்டங்களைப் படைப்பது மரபாகக் காணப்படுகின்றது.

காடேறி வழிபாட்டுமரபுகள் சிறிதளவு கூட ஆகம மரபிற்குள் உட்படாத போதிலும் இன்று வன்னி மண்ணில் அழிந்து கொண்டு இருக்கும் வழிபாட்டு மரபாக இது காணப்படுகின்றது.

**காளியம்மன் வழிபாடு**

அம்பிகையின் கொடூரவடிவமே காளி என்று கூறப்படுகின்றது. வன்னி மண்ணில் காளியம்மன் வழிபாடும் நீண்டதொரு வரலாற்று வழிபாடாகக் காணப்படுகின்றது.

அதாவது

வெம்மருந்து மம்மலையிலியற்றி யானை
யெழுபதினா யிரஞ்சுமந்த பொன்னுங் கூட்டி
யம்மலையி னிடைவைத்தே காளி யென்னுந்
தையல்தனை யிறைஞ்சியவண் சார வைத்தான்

என்ற வையாபாடல் செய்யுள் மூலம் வீரவராயன்செட்டி காளி வழிபாட்டை வன்னியில் ஆற்றியமை பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

குருமண்காடு சந்தியில் அமைந்துள்ள காளி அம்மன் கோயில் சின்னப்புதுக்குளம் காளியம்மன் கோயில் குழுமாட்டு சந்தி காளி அம்மன் கோவில், நெளுக்குளம் பத்திரகாளி அம்மன் கோயில் ஆகிய காளி அம்மன் கோயில்கள் குறிப்பிடத்தக்கனவாகும். பூசாரிமார்களோ வழிபாடு ஆற்றும் இவ் ஆலயங்களில் பூசாரியார் தெய்வம் வந்து ஆடி வந்திருக்கும் பக்தர்களுக்கு சங்கதி கூறுவதும், நூல்கட்டுதல், பேய், பெல்லி, சூனியத்தால் வருந்தியவர்களுக்கு பேய் ஓட்டல் என்னும் சடங்குகளை மேற்கொள்ளுதல் இவ்வாலயங்களின் மரபாகக் காணப்படு கின்றது.

வன்னியின் ஒரு சில மருத்துவிச்சிமார்களும் தமது தொழில்சார் தெய்வமாக பத்திரகாளியை வழிபடுவதை இவர்களோடு நேர்முகம் காணல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. நெளுக்குளம் நாகம்மா மருத்துவிச்சியின் கூற்றுப்படி மகப்பேற்றை பராமரிப்பதற்கு முன்னர் பத்திரகாளியின் அருள் வேண்டி பிறக்கப்போகும் குழந்தையும், தாயும் எதுவித மரணபயமுமின்றி இருக்க மருத்துவிச்சி பிரார்த்திப்பார். பின் குழந்தை பிறந்து தாயும் சேயும் நலத்துடன் இருப்பதைக் கண்டு மீண்டும் பத்திரகாளியின் ஆலயம் சென்று தேங்காய் உடைத்து நன்றி தெரிவிக்குமாப் போல் வழிபாடு ஆற்றுவர். மருத்துவிச்சி மட்டுமன்றி குழந்தையின் குடும்பத்தினரும் குழந்தை பிறந்து 40ம் நாள் பத்திரகாளி அம்மனுக்கு மடைபரவி வழிபாடு ஆற்றுதல் மரபாகக் காணப்படுகின்றது.

இன்று மேற்படி ஆலயங்கள் முழுக்கமுழுக்க ஆகமமரபோடு ஒட்டிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. மகப்பேற்றில் மருத்துவிச்சிமார்களின் பங்களிப்பு இன்று குறைவாதலால் பத்திரகாளியும் மருத்துவிச்சிமார்களின் தொழில்சார் தெய்வம் என்ற அந்தஸ்த்தை இளந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**அண்ணமார் வழிபாடு**

வீரபத்திரரால் ஏவப்பட்டு தமது கடமைகளை சரியாக செய்யாத பட்சத்தில் அவரால் அழித்தொழிக்கப்பட்ட சிறு தெய்வங்களில் ஒன்றாக அண்ணமார் கருதப்படுகின்றார்.இவ்வாறு வீரபத்ருக்கு அஞ்சி, பள்ளர் குறிச்சியில் சென்று ஒழிந்து, அவர்களால் பாதுகாக்கப்பட்டதாக அண்ணமார் பற்றிய புராணரீதியான ஐதீகம் கூறும். ஆனால் வன்னி மண்ணில் தோன்றிய அண்ணமார் வழிபாட்டின் ஆரம்பம் பற்றி வையா என்ற யாழ்நாட்டு வளப்ப நூலில் கூறப்படும் கதை ஒன்றின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. அதாவது முன்னர் நாச்சிமார் வழிபாட்டில் நோக்கியது போன்று வன்னியர்களது மனைவியரான வன்னி நாச்சியரோடு குதிரை கொண்டு வந்த 60 பள்ளர்களும் நாச்சிமார் தமது கணவன்மார் இறந்த செய்தியைக்கேட்டு செல்லிச்சி வாய்க்காலில் தீயில் விழுந்து இறக்க இவர்களும் அத்தீயில் வீழ்ந்து இறந்ததாகக் கூறப்படுகின்றது. அவ்வாறு இறந்த 60 பள்ளர்களையுமே அண்ணமார் என பன்மைப் பொருளில் கூறி வழிபட ஆரம்பித்ததாக அறிய முடிகின்றது. ***(1921- பக்கம் 10)***

அண்ணமார் ஆலயங்கள் வன்னியில் விரல் விட்டு எண்ணத்தக்க வகையிலேயே காணப்படுகின்றன. அந்தவகையில் கள்ளிக்குளத்தில் அமைந்துள்ள அண்ணமார் ஆலயம், முல்லைத்தீவு கொக்கிளாயில் அமைந்துள்ள அண்ணமார் ஆலயம் ஆகியவற்றை கூறிக் கொள்ளலாம். ஐயனாரைப்போன்று அண்ணமாரையும் வன்னிமக்கள் தமது காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். கொக்கிளாய் பகுதியில் வளங்கிவரும் அண்ணமார் சிந்து இதற்கு சான்றாகும். அதாவது.

''ஐயனார் தன்னுடைய திருவருளினாலும்
அலங்கார வைகாளி அப்பன் அருளாலும்

மெய்யாக வெற்றி தரும் மெய்கிட்ணராலும்

ஐயாவெனப் பெரிய வாளலகெடுத்து

அகல நின் உயிர்காக்கும் அண்ணமார்க்கபயம்''

என்ற பாடல் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. அண்ணமாருக்கு அசைவ உணவுவகைகளையே அதிகமாக படைப்பதை, வன்னி அண்ணமார் வழிபாட்டிலும் அவதானிக்க முடிகின்றது. அதாவது,

முட்டைப் பொரியலல்லோ அண்ணமாரே - உனக்கு

முருங்கைக்காய் தீயலல்லோ அண்ணமாரே

இறைச்சிப் பொரியலல்லோ அண்ணமாரே-உனக்கு

இனிதாக நாம்படைப்போம் அண்ணமாரே

என்ற காரைதீவு அண்ணமார் பாடலைப் போன்று பண்டி இறைச்சி, மான் இறைச்சி,மீன், முட்டை, சாராயம் முதலானவற்றை அண்ணமாருக்கு படைப்பது வன்னியில் மரபாகக் காணப்பட்டது.இன்றைய நாகரிகமுன்னேற்றம், சாதி ஒழிப்பு, ஆலயபிரவேசம் போன்றவற்றால் குறித்த வகுப்பினருக்கென இருந்த இவ்வழிபாட்டு மரபும் வன்னியில் கைவிடப்பட்டு நீண்டகாலங்களைக் கடந்த வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது.

## வன்னியர் வழிபாடு

வன்னிக்கே உரித்தான இவ்வழிபாடு ஆலயம் அமைத்து வழிபடும் மரபு அல்லாமல் வயல் வெளிகள் தோறும் ஆற்றப்பட்டு வரும் ஒரு வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. வயலில் நெல் விளைந்து சூடு அடித்து பொலிகொட்டிய பின்னர், பொலியை அள்ளுவதற்கு முன்னர், அப் பொலிக்கும்பிக்கு முன்னால் பொங்கல் பொங்குவர், இப்பொங்கல் பால் பொங்கலாக பொங்கப்படும். இவ்வாறு பொங்கப்பட்ட பொங்கலை முக்காலிகட்டி அதன் மேல் வன்னியருக்கென படைத்து வழிபடுவர். அந்நேரம் அரிவுவெட்டு, பொலிப்பாடல்களைப்பாடுவர். இவ்வாறு வன்னியர் வழிபாடு முடிந்ததும் வந்திருக்கும் அனைவருக்கும் பொங்கல் பரிமாறியதன் பின்னர் பொலிகளை அள்ளி மூட்டையாகக் கட்டுவர். அத்துடன் அவ்வயலில் உள்ள வேலைகள் அனைத்தும் நிறைவு பெறும்.

இவ்வழிபாடும் இன்று வன்னியில் அழிந்து கொண்டு இருக்கும் ஒரு சிறுதெய்வ வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது.

## காத்தவராயர் வழிபாடு

மாரியின் மகனாகப் பிறந்து பூமியைக் கொடிய ஆபத்தில் இருந்து காத்தவராக காத்தவராயர் சுவாமியைக் கருதி வழிபடுகின்றனர். அந்தவகையில் வன்னி மண்ணில் காத்தவராய சுவாமிக்கென தனியான ஆலயம் அமைத்து வழிபடாது, மாரியம்மன் ஆலயங்களில் இவரை பிரகாரத்தெய்வமாகக் கணித்து வழிபாடு ஆற்றுகின்றனர்.

அந்த வகையில் பண்டாரிகுளம் முத்துமாரி, வெடிவைத்தகல்லுமுத்துமாரி, நெடுங்கேணிபட்டிருப்பு முத்துமாரி, ஆகிய அம்மன் ஆலயங்களில் காத்தவராயர் வழிபாடு ஆற்றப்படுகின்றது. பொதுவாக இவரது வடிவமாக கழுமரத்தையே உருவகித்து மாரியம்மனை எதிர் நோக்கிய வண்ணம் இருப்பதாக அமைத்து வழிபாடு செய்கின்றனர்.

பண்டாரிகுளம் முத்துமாரியம்மன் கோயிலில் நடைபெறும் வேள்வி மாரியம்மனுக்கு அல்லாது காத்தவராச சுவாமிக்கே ஆற்றப்படுவதாகக் கூறப்படுகின்றது. இங்கு இவருக்கு படைக்கும் படையலும் தனித்துவமான மரபுகளைக் கொண்டது. கருவாடு, முட்டை,மீன், இறைச்சி என்பவற்றை சோற்றோடு படைப்பதோடு சுட்ட முழுக்கோழியையும் தடியில் குற்றி நடுவில் நிறுத்துவர். அத்தோடு இருமருங்கிலிலும் சாராயப் போத்தல்களையும் வைத்து பறை, உடுக்கு ஆகியவற்றின் ஒலியுடன் காத்தவராசருக்கு பூசை நடை பெறும். பூசாரியார் கலைவந்து ஆடத்தொடங்குவார். இவ்வாறு ஆடி அங்கு வந்திருந்தவர்களுக்கு சங்கதி கூறுவது மரபாகக் காணப்படுகின்றது.

## கொத்தி வழிபாடு

அண்ணமார், பெரிய தம்பிரான் போன்று வீரபத்திரரது கோபத்துக்கு அஞ்சி பிள்ளை பெறும் வீட்டில் ஒளித்து, மருந்துவிச்சியினால் போற்றப்பட்ட தெய்வமாக கொத்தித் தெய்வம் காணப்படுகின்றது.

எனினும் வன்னிமண்ணில் கொத்தித் தெய்வம் மருத்துவிச்சியின் தொழில்சார் தெய்வமாகப் போற்றப்படாது, பேய் என்ற நிலையில் கொத்திப்பேய் எனக்கூறி கணிக்கப்பட்டதை மருத்துவிச்சிமார்களுடன் நேர்முகம் காணல்வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. நெளுக்குளம் நாகம்மா மருத்துவிச்சியின் கூற்றுப்படி, குழந்தை பிறந்து முதல் நான்கு நாட்களும் பிரசவம் இடம் பெற்ற அறையையோ அல்லது இடத்தையோ கூட்டுவதில்லை, அவ்வாறு கூட்டினாலும் அவற்றை வெளியில் வீசாது பழைய சுளகு ஒன்றில் அள்ளி ஒரு மூலையில் வைப்பர். ஐந்தாம்நாள் பிரசவமாதுவுக்கு கொடுக்கும் உணவு, காயம் முதலியவற்றில் சிறிதளவு எடுத்து மேற்படி சுளகில் வைத்து

விளக்கும், கோடாரியும் கொண்டு சனநடமாட்டம் அற்ற நாவல் மரத்தடிக்கு சென்று சுளகில் கொண்டு வந்த பொருட்களை படைத்து விளக்கேற்றி கொத்தியை, மருத்துவிச்சி வழிபடுவர். இது கொத்திக்கு கழித்தல் என்று கூறப்படும். இதன் பின்னர் மூன்று முறை நாவல் மரத்தில் கோடாரியால் கொத்தி விட்டு திரும்பிபாராமல் வீடு வந்து சேருவர். இத்தகைய கொத்திக்குக் கழிக்கும் முறை 1976 ஆம் ஆண்டு வரையும் வன்னியில் இருந்தாக மேற்படி மருத்துவிச்சி கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்தைப்போன்று வன்னிமண்ணில் கொத்தியை தெய்வமாகக் கருதி ஆலயம் எழுப்பி வழிபடும் மரபு இருந்திருக்கவில்லை. இன்றைய நாகரிகயுகத்தில் வைத்தியசாலைகள் போன்ற மருத்துவ முன்னேற்றத்தால் மகப்பேற்றில் மருத்துவிச்சிமார்களின் பங்களிப்பு கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. அந்தவகையில் மருத்துவிச்சிமார்களால் ஆற்றப்படும் இக் கொத்தித் தெய்வ வழிபாட்டு மரபும் இன்று வன்னி மண்ணில் சிதைவுற்று நீண்ட காலங்களைக் கடந்து விட்ட ஒரு வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது.

## ஏனைய சிறு தெய்வ வழிபாடு

சலவைத் தொழிலாளர் தமது குல தெய்வமாகப் போற்றும் பெரியதம்பிரான் வழிபாடும் வன்னியில் காணப்படுகின்றது. பூநகரி கோவில் பெரிய தம்பிரான் ஆலயம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆண்டுதோறும் வருடாந்தப் பொங்கல் ஆனிமாதத்தில் நடைபெறுகின்றது. பொங்கலுக்கு வேண்டிய நெல்லை வேளாளர் குலத்தவரிடம் சலவைத்தொழிலாளர் மங்கலகரமாக சென்று பெறுவர். பறை ஒலியுடன் பொங்கல் கிரியைகள் இவர்களது வழியில் வந்த பரியாரியார் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றது.

வன்னியின் மற்றொரு வயற்காவற் தெய்வமான இராக்கியன் சுவாமிக்கும் ஆலயம் எழுப்பி வழிபடும் மரபு காணப்படுகின்றது. அத்தகைய இராக்கியன் சுவாமி ஆலயங்கள் வன்னியில் சாத்திரி கூளாங்குளம் ஐயன் கோயில் முதலான இடங்களில் அமைந்துள்ளன. புளியமரத்துக்குக் கீழ் கல் அல்லது சூலத்தை வைத்து ஆண்டுக்கொருமுறை பொங்கல் விழா எடுத்து வழிபடுவது இதன் தனித்துவம் மிகு வழிபாட்டு மரபாகும்.

கிராமத்தின் காவல் தெய்வமான முனி அல்லது முனியப்பருக்கும் வன்னி மண்ணில் நீண்ட காலமாக வழிபாடு ஆற்றப்பட்டு வருவதை அறிய முடிகின்றது. சடாசு முனி என்ற பெயரில் ஆற்றப்பட்ட தெய்வம் பற்றி வையாபாடலில் குறிப்புக்கள் வருகின்றன. பேயாடி கூளாங்குளம், பூநகரி நல்லதண்ணிக்கட்டு ஆகிய இடங்களில் இத்தெய்வத்துக்குரிய ஆலயங்கள் உண்டு. சூலம் அல்லது கல்லுவைத்து வழிபட்டு ஆண்டுக்கொருமுறை வருடாந்த பொங்கல் விழா எடுப்பர்.

வன்னியில் மற்றொரு பெண் தெய்வமான பேச்சி அம்மனுக்கும் வழிபாடு ஆற்றப்படுகின்றது. இத்தெய்வத்தை தனியான ஆலயத்தில் அமைத்து வழிபடாது ஏனைய தெய்வங்களின் ஆலயங்கள் வாயிலாகவே வழிபடுகின்றனர். பண்டாரிகுளம், நெடுங்கேணி, பட்டிக்குடியிருப்பு முதலான இடங்களில் அமைந்துள்ள மாரியம்மன் ஆலயங்களில் இத்தெய்வத்தையும் வழிபடுகின்றனர். பண்டாரிகுளம் முத்துமாரியம்மன் கோயிலில் வருடாந்தம் நடைபெறும் வேள்வியில் பலியிடப்படும் விலங்குகளின் இரத்தம், மீன், முட்டை, இறைச்சி என்பனவற்றை படைத்து பேச்சி அம்மனை வழிபடுவர்.

ஐரோப்பியர் காலத்தில் அழித்தொழிக்கப்பட்ட இந்துப்பாரம்பரிய மரபுகள் வயிரவர் ஆலயங்கள் வாயிலாகவே பேணப்பட்டுவந்தன. அந்த வகையில் வயிரவர் வழிபாடும் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கணும் பரந்து விரிந்து கிடப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஒரு சில ஆலயங்கள் பெரிதாகக் கட்டப்பட்டு ஆகமமரபிற்குள் சென்றாலும் ஏனையவை இன்றும் கிராமிய வழிபாட்டு மரபில் பயபக்தியுடன் ஆற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பூமியில் பல்வேறு வழிகளில் துன்பம் விளைவித்த மந்திரவாதியை அழித்து அடக்குவதற்காக மாரிதேவியின் மகனாக அவதரித்தவரே மாடசாமி எனக் கூறப்படுகின்றது. இத்தெய்வத்தின் ஆலயங்களும் வன்னியில் விரல் விட்டு எண்ணத்தக்க வகையில் ஆங்காங்கு உள்ளன. பண்டாரிகுளம், காத்தார் சின்னக்குளம் ஆகிய இடங்களில் ஒருகல்லை மரத்தடியில் வைத்து மாடசாமி எனப் போற்றி வழிபட்டு வருகின்றனர். இவ்வாலயத்தில் ஆண்டுக்கொரு முறை ஆடு,கோழி முதலானவற்றை பலியிடுவதோடு கள், சாராயம் முதலிய குடிவகைகளையும் வைத்து வழிபாடு ஆற்றுகின்றனர். நிறைமாதக் கர்ப்பிணிகள் இவ்வாலயத்துக்கு அண்மையில் கூட போவது விலக்கப்பட்டுள்ளது.

தக்கனது யாகத்தை அழிக்க உக்கிரவடிவம் கொண்டு வந்த வீரபத்திரரையும் வன்னிமக்கள் பொதுவாக வழிபடுகின்றனர். வன்னியில் பிரபல்யம் பெற்ற வீரபத்திரர் ஆலயங்கள் பேயாடிகூளாம்குளம், தாவடி ஊர் முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

வன்னியில் இந்திய வம்சாவழி மக்கள் வந்து குடியேறியதன் பின்னர் கொண்டு வரப்பட்ட சிறு தெய்வ வழிபாட்டு மரபாக மதுரைவீரன் வழிபாடு காணப்படுகின்றது. மகாறம்பைக்குளத்தில் கல், சூலம் மதரைவீரன் படம் என்பவற்றை வைத்து மதுரைவீரன் கோவில் எனப் போற்றி வழிபட்டு வருகின்றனர். இவ்வாலயத்தில் ஆண்டுக் கொருமுறை ஆடு, கோழி முதலானவற்றை பலியிட்டு அவற்றின் இரத்தத்தையும், பலியிடப்பட்ட விலங்குகளின்

இறைச்சியையும் சமைத்துப் படைப்பர். அத்தோடு கள்,சாராயம் முதலிய குடிவகைகளையும் வைத்துவழிபடுவர். பூசாரியார் உருவேறி பாரிய கத்தி ஒன்றை வைத்துக் கொண்டு ஆடி சங்கதி கூறுவார். இங்கு படைக்கப்பட்ட இத்தகைய மாமிச உணவுகள் அடியவர் அனைவருக்கும் பரிமாறப்படும்.

ஒருவர் இறந்தால் அவருக்காக எட்டாவது நாள் நடைபெறும் சடங்கில் சந்திமாடன் என்ற தெய்வம் முக்கியத்துவப்படுத்தப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது ஒருவர் இறந்து எட்டாவது நாள் சூரியன் மறைந்து இருள் சூழ ஆரம்பிக்கும் போது இறந்தவருக்கு விருப்பமான அனைத்துப் பொருட்களிலும் சிறிதளவை ஒரு கடகத்தில் இட்டு. கொள்ளி வைத்தவரும் பரியாரியாரும் (அம்பட்ட குலத்தவர்) சனநடமாட்டம் இல்லாத நேரம் பந்தம் ஒன்றை ஏந்திச் சென்று நடுச்சந்தியில் பந்தத்தை நாட்டி மேற்படி படையல் பொருட்களை வைத்து சந்திமாடனை வழிபடுவர். இவ்வாறு வழிபட்டதன் பின்னர் திரும்பிப்பாராது வீடுவந்து சேருவர். இவ்வழக்கு வன்னியின் சில பிரதேசங்களில் இன்றும் இருந்து வருகின்றது.

முடிவாக வன்னி மண்ணிலே நாகரிக முன்னேற்றம், அந்நியராட்சி, கிறிஸ்தவமத செல்வாக்கு, கல்வியில் உயர்வு, நவீன சுகாதார வசதிகளும் போக்குவரத்து வசதிகளும் ஏற்படுவதற்கு முன்னர் சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள் போற்றுவதற்குரியதாகக் காணப்பட்டன. ஆனால் இன்று சாதி ஒழிப்பு, ஆலயபிரவேசம், முதலான பல முன்னேற்றங்களால் இக்கிராமிய வழிபாட்டு மரபுகள் கைவிடப்பட்டு ஆகமமரபிற்குள் சென்று கொண்டு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வன்னி மண்ணினதும் மக்களதும் ஆதி சமய, சமூக, கலாசார, பாரம்பரியங்களை இனங்காட்டும் தரிசனங்களாக இச் சிறுதெய்வ வழிபாட்டுமரபுகள் காணப்படுகின்றன. இன்றும் வன்னி மண்ணின் ஏதோ ஒரு திக்கில் இச் சிறு தெய்வ வழிபாட்டு மரபுகள் பேணப்பட்டுக் கொண்டு இருப்பது போற்றுவதற்குரிய விடயமாகும்.

இந்தவகையில் வன்னி மண்ணின் சிறு தெய்வ வழிபாட்டு மரபுகளை மானுடவியல், சமூகவியல் ரீதியில் மேலும் ஆய்வுக்கு உட்படுத்தி சிதைந்து கொண்டு இருக்கும் இச் சிறு தெய்வ வழிபாட்டுத் தரிசனங்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஒவ்வொரு வன்னிமைந்தனதும் தலையாய கடமைப்பாடாகும்.

**உசாத்துணைகள்**


நடராசா, க. செ. - வையாபாடல், கொழும்புத் தமிழ்ச்சங்கம், வெளியீடு 1980.

Navaratnam, C.S. - A Short History of Hinduism in Ceylon - 1964.

கனகரத்தினம், இரா.வை. - வன்னி மக்களின் மரபும் பண்பாடும், ஓர் ஆய்வு பண்டார வன்னியன் விழா மலர் 1982

நவரத்தினம், சி. எஸ். - வன்னியும் வன்னியரும் திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் 1976.

இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள் - பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சு வெளியீடு - 1984.

தமிழரசி சந்திரசேகரம் - ஐயனார் வழிபாட்டில் வன்னியின் சடவங்குள ஐயனார் கோயில் பண்டாரவன்னியன் விழாமலர் - 1982.

பாலகிருஷ்ணன், சி. - வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் கிரியா கரும விளக்கம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் கருணை மலர் - 1978.

சன்முகலிங்கன், என். - யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு, பண்பாடு - 1993 புரட்டாதி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.

கனகரத்தினம், இரா.வை - நாட்டார் வழக்காற்றில் கொத்தித்தெய்வம், தேசிய தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர் -1991.

# பாரம்பரிய வன்னிப் பிரதேசத்தின் பொருளியல் வழக்காறுகள் - ஓர் ஆய்வு -

குமாரவேலு தம்பையா
(விரிவுரையாளர், பொருளியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

## அறிமுகம்

இன்று உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற தேசிய இனங்கள் ஒவ்வொன்றிற்கும் வரலாற்று பண்பாட்டியல் பாரம்பரியம் பின்னணியில் உள்ளமை கண்கூடு. இவ் அடிப்படையில் ஈழநாட்டின் நீண்ட நெடு வரலாற்றில் குறுநில மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட தனக்கென தனித்துவமான இயல்புகளையும், பண்பாட்டினையும் கொண்டிருந்த 'வன்னி' என்ற பாரம்பரிய தமிழ் பிரதேசம் பற்றி அறிதல் அவசியமான தாகும். இவ்வாறான ஆய்வு ஒன்றில் புவியியல், வரலாறு, பொருளாதாரம், சமூக பண்பாட்டியல் அம்சங்கள் என்பவற்றை நாட்டுப்புற பண்பாட்டியலின் அடிப்படையில் தொட்டும், துளாவியும் அறிவதற்கும், ஆய்வு செய்வதற்கும் நான் முனைகின்றேன். எனது இவ் ஆய்வுக் கட்டுரையானது பாரம்பரிய வன்னிப்பிரதேசத்தின் பொருளாதாரக் கட்டமைப்பு, பொருளியல்சார் நடத்தைகள் அதன் வழியான சமூகக் கட்டுமானம், சாதி அமைப்பு, தொழில் முறை என்பவற்றை தொட்டுக்காட்ட முற்படுகின்றது. 25 - 7- 93ல் இதே மண்டபத்தில் நடைபெற்ற வன்னிப்பிரதேச சாகித்திய விழாவின்போது என்னால் சமர்ப்பிக்கப்பட்ட வன்னிப்பிரதேசத்தின் வாழ்க்கைமுறையும் பண்பாட்டியல் அம்சங் களும்' என்ற கட்டுரையில் வன்னியில் காணப்பட்டதும் இன்றுவரை அழியாமல் காணப்படுவதுமான பல சமூகப் பெறுமானங்களை ஓரளவிற்கு எடுத்துக் காட்டியி ருந்தேன். ஆதலினால் கால வர்த்தமானம் பொறுத்து வன்னியின் பண்பாட்டியல் அம்சங்களை அதிகம் எடுத்து நோக்காது பொருளியல் ஆய்வு ஒன்றிற்கு அவசிய மானதும், இப்பிரதேசத்தின் தனித்துவத்தையும், சிறப்பியல்புகளையும் காட்டக்கூடிய துமான பொருளியல் கூறுகளை ஆய்வு செய்வதே பொருத்தமானதாகும்.

பல ஆய்வாளரது நோக்கில் வன்னிப்பிரதேசம் சிறந்த சமூகவியல் ஆய்வுக்களமாகக் கருதப்படுகின்றது. வன்னிப்பிரதேசம் தொடர்பாக இதுவரை பன்னோக்கில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில ஆய்வாளர்கள் வன்னியை ஆழமாகவும், சிலர் அகலமாகவும் நோக்கியுள்ளனர். எவ்வாறாயினும் பாரம்பரிய வன்னிப் பிரதேசத்தின் பொருளாதாரம் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்க வகையில் இடம் பெறவில்லை. குறிப்பாக அப் பிராந்தியம் கொண்டிருந்ததும் கொண்டுள்ளதுமான அம்மண்ணில் மண்டிக்கிடக்கும் பொருளாதாரப் பண்புகளையோ, இன்றுவரை தொன்றுதொட்டு அழியாமல் நிலைத்து நிற்கும் பண்புகளையோ எடுத்துக்காட்டவில்லை. எனது இம்முயற்சியானது அத்தகைய ஆய்வுமுறை ஒன்றிற்கு முடிவாக அன்றி அதற்கு ஒருகால்கோளாக அமையும் என்பது என் எண்ணம்.

எந்த ஒரு சமூகத்தினதோ அல்லது சமூகக் குழுவினதோ பரிணாம வளர்ச்சியும் அதனோடு இணைந்த அபிவிருத்திசார் பரிமாணமும் அச் சமூகம் வளர்ச்சியடைந்த பிரதேசத்தினது புவிசார் வரலாறு, பொருளாதாரம், மானிடவியல் பண்புகளால் நிர்ணயிக்கப்படுவதைக் காணலாம். இதனால் 'வன்னி' இப்பிராந்தியத்தினது பொருளா தாரப்பண்புகள், அதன் பொருளியல்சார் வரலாறு என்பவற்றை திட்டவட்டமாக அறிய அதன் புவிசார் வரலாறு பற்றி அறிதல் பலவகையிலும் பயனளிக்கும்.

## பிரதேசமும் அதன் வரலாறும்:-

'வன்னி' வன்னியர் பற்றிய பல புராதன தகவல்கள் வையாபாடல் கோணேசர்கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், யாழ்ப்பாணவைபவமாலை. 1940 களின் மத்திய பகுதியில் வெளியிடப்பட்ட 'வித்தியாபோதினி' என்ற சஞ்சிகையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட வன்னி பற்றிய வரலாற்று செப்பேடுகள் சி.எஸ். நவரத்தினம் என்பவரால் எழுதப்பட்ட **Vanni And The Vanniyas** என்ற நூல், கலாநிதி சி. பத்மநாதன் அவர்களது 'வன்னியர்' என்னும் நூல், கலாநிதி செ. குணசிங்கம் அவர்களது 'கல்வியங்காட்டுச் செப்பேடுகள்' என்ற நூல், பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்றோரது பல பயனுள்ள வன்னி பற்றிய ஆய்வுக்கட்டுரைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1979ம் ஆண்டில் நடாத்திய 'நாட்டாரியல் கருத்தரங்குக் கட்டுரைகள்' என்பவற்றில் இருந்து அறிய முடிகின்றது. இவற்றோடு வன்னியின் நிர்வாகம், பொருளாதாரம் பற்றிய உதிரியான பல தகவல்களை இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக இருந்த **J.P.** லூயிஸ் அவர்கள் 1895ல் பதிப்பித்த **"Manual of Vanni"** என்ற நூலில் இருந்தும் பெறக்கூடியதாய் உள்ளது.

இவ்வாய்வுகளில் வன்னிபற்றிய காலமுரண்பாடுகளும், இப்பிரதேச அளவு, இதன் எல்லை பற்றிய சில முரண்பாடான தகவல்களும் காணப்படுகின்றன. கலாநிதி சி.பத்மநாதன் தனது வன்னி பற்றிய ஆய்வுக்கட்டுரை யொன்றில்

> ''...ஈழநாட்டிலே பிரித்தானியரின் ஆட்சி ஏற்படுவதற்கு முன் பல நூற்றாண்டுகளாக நிலை பெற்ற அரசுகளே 'வன்னிமைகள்' என்ற சிற்றரசுகள் ஆகும். மானிய முறையிலான சமுதாய அமைப்பு நிலை பெற்ற காலத்தில் இலங்கையின் அரசியலிலும், பொருளாதார அமைப்பிலும் வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்று இருந்தன. பொதுவாக அவை வரட்சி வலயத்திலேயே அமைந்து இருந்தன. அடங்காப்பற்று, திருகோணமலை மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வன்னிநாடுகள் தமிழ் வன்னி அரசராலேயே ஆளப்பட்டு வந்தன''.

கலாநிதி சி. பத்மநாதன் அவர்களது இக்கூற்று வன்னியின் காலப்பகுதி 17ம் நூற்றாண்டு எனக் காட்டுவதுடன் அப்போது வன்னிமை கொண்டிருந்த பொருளதார அமைப்பு, அதன் புவியியல் பிரதேசம் என்பவற்றையும் காட்டுவதாய் உள்ளது. 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' என்ற நூல் 1236-1271 காலப்பகுதியில் 2ம் பராக்கிரமபாகு ஆட்சியில் வன்னிராட்சியம் பற்றிய தகவல்கள் சூளவம்சத்தில் இருப்பதாகக் கூறுகின்றது. இம் மண்ணின் மைந்தரான கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள் பண்டார வன்னியன் விழாமலருக்கு எழுதிய ஆசிச்செய்தியில் வன்னிராட்சியத்தின் கால எல்லை பற்றியும், அதன் மகிமை பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''....ஈழநாட்டினை சோழப்பெருமன்னர்களது சாம்ராட்சியத்தின் ஒரு அங்கமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த கால கட்டத்தினை ஒட்டி வன்னி ராட்சியங்கள் கால் கொள்ளத்தொடங்கி இருக்கலாம் என்று கருத சான்றுகள் உள்ளன. சோழப்பெருமன்னர் ஆட்சியினை அடுத்து பொலநறுவையில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர் ஆதிக்கம் நிலை தளர்ந்த போது வன்னி ராட்சியங்கள் மேலாதிக்கம் பெற்றன, வடக்கிலே ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி 14ம் நூற்றாண்டிலே ஆரம்பித்த போது வன்னி ராட்சியங்களை ஆரியச்சக் கரவர்த்திகள் தம் ஆணைக்குள் கொண்டு வர முற்பட்டனர். 17ம் நூற்றாண்டின் முன்பு தோன்றாத வையா பாடல் ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில்தான் வன்னி ராட்சியங்கள் தோன்றின என பிழைபடக்கூறுகின்றன. ஆரியச் சக்கரவர்த்திகளின் வட நாட்டு ராட்சியத்திற்கு முன்பே சிறப்புறத் தொடங்கிய வன்னி ராட்சியங்கள் வடக்கே ஆரியச்சக்கரவர்த்திக்கும், தெற்கே கண்டி அரசிற்கும் பின்பு மேல்நாட்டவருக்கும் ஈடுகொடுத்து அடங்காப்பற்றாகத் திகழ்ந்தது.''

எனக்குறிப்பிடுகின்றார். கலாநிதி பூலோகசிங்கம் அவர்களது கூற்று வன்னி நீண்ட நெடும் வரலாற்றைக் கொண்டிருந்ததோடு தனித்துவம் மிக்கதாகவும் காணப்பட்டது என்பதை வெள்ளிடைமலையாக்குகின்றது. இதே போன்று வன்னி பற்றிய எல்லை, பிரதேச அளவு பற்றிய வேறுபாடும் ஆய்வாளரிடையே வெவ்வேறுபட்டதாய் அமைகின்றது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களது **"Sri Lankan Tamil Societies and politics"** என்ற நூல் வன்னியின் எல்லையை தெளிவுபட பின்வருமாறு காட்டுகின்றது.

> **"In terms of geography of Sri Lanka the area referred to as the vanni districts fall between mankulam and Anuradhapura in the north covering Vavuniya and Mulaitivu among the tamil districts and Anuradhapura, Thaman kaduwa, Kekirawa of the sinhala areas going up to the nothern reaches of the Trincomalle district".**

பேராசிரியர் அவர்களது ஆய்வில் வன்னியின் எல்லை விரித்துக் காட்டப்படுவதுடன், சிங்கள வன்னி, தமிழ் வன்னி ஆகிய இருபிரிவுகள் இருந்ததையும் அறியக்கூடியதாய் உள்ளது. தற்போது நாம் வன்னி எனக் காண்கின்ற 'அடங்காப்பற்று' பிரதேசத்தில் உள்ள மடுக்கந்த, மாமடுவ, மகாமயிலங்குளம், கொரவப்பத்தானை, அலகல்லுவ ஆகிய பாரம்பரிய சிங்களக்கிராமங்கள் சிங்கள வன்னியின் ஒரு பகுதியாக கருதும் வழக்கமும் உள்ளது. இங்கு எனது ஆய்வுப் பிரதேசமானது 'வன்னி' என நாம் அழைக்கும் பாரம்பரிய தமிழ் பகுதியையும் நான் 'வன்னியன்' என பெருமையோடு கூறும் குழுவினரதும் பொருளாதார வெளிப்பாடுகளையும், நடவடிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

## வன்னிவளம்

வன்னிப் பிரதேசமானது இயற்கை அமைப்பிலும் அதன் அமைவிட சுற்றுச் சூழலிலும் முற்று முழுதான வளம் பொருந்திய பகுதியாகும். இதனை வன்னியின் பண்டைய நாட்டுப்பாடல் ஒன்று எடுத்துக்காட்ட முற்படுகின்றது.

''வன்னி வள நாடு வளர் சோலைநாடு
வாரியம் மூன்று விளைவுள்ளநாடு
கன்னிநாடு கதிர் சோலை நாடு
காராளர்வாழும் கன்னியர் நாடு''

என்றும் வளம் குன்றாத விவசாய விளை நிலத்தையும், கடல்வலயத்தையும் கொண்டு காணப்படுவதுடன் ஈழநாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற ஒரு உணவுக்களஞ்சியமாக திகழ்ந்தமையாலும் பராம்பரியமாகவே வன்னிப் பிரதேசம் 'வளநாடு' எனப் போற்றப்பட்டது. வன்னிப்பிரதேசம் தான் கொண்டிருந்த பல்வேறுபட்ட சமூக, பொருளாதாரப் பண்புகளின் நிமித்தம் இலங்கையின் ஏனைய பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து தனித்துவம் மிக்கதாகவும் வனத்தின் சூழலில் அமைந்திருப்பதாலும் தனித்தன்மை கொண்டதாய் விளங்கு கின்றது........''.

பேராசிரியர் அவர்களின் இக்கூற்று 'வன்னிமை' தனித்துவமான பொருளியல் பண்புகளையும், வாழ்க்கை முறையையும் கொண்டிருந்ததை சுட்டிக்காட்டுகின்றது.

இவ்விடத்தில் கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வன்னி வளம் பற்றி குறிப்பிட்ட ஒரு கருத்துநிலை பற்றி நோக்குவது பொருத்தமானதாகும். இவரது 'வன்னிப் பிரதேச சமூக ஒழுங்கமைப்பும் நாட்டார் வழக்கியலும்' என்ற கட்டுரையில் பின்வருமாறு உரைக்கின்றார்.

''...வன்னிப்பிரதேச சமூக அமைப்பின் நிலைக்களன் விவசாய விளைநிலம். வன்னியின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி கடற்றொழிலுக்குரிய கடற்கரையாக இருந்தாலும், வன்னிபற்றிய உணர்வு விளைநிலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. விளைநிலங்களின் ஒவ்வொரு பகுதியும், அல்லது ஒவ்வொன்றும் குளங்களைக் கொண்டு காணப்படுகின்றன. வன்னியின் பல கிராமங்கள் குளப்பெயரையும், நீர்நிலைகளையும் குறிக்கும் குளம், மோட்டை, மடு, கேணி, முறிப்பு, வாய்க்கால், கட்டு முதலிய பெயர் களைத் தாங்கியுள்ளன''.

வன்னிவளம் பற்றிக் குறிப்பிடும் போதே அன்றே ஆய்வு செய்ய முற்படும் ஒருவரோ வன்னியன்கள் சில நாட்டுப் புற பண்பாட்டியல் அம்சங்களையும் கொண்டு காணப்பட்டது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களது நூலான **"Sri Lankan Tamil Societies and politics'** என்ற நூலுக்கு திரு. **R.**பார்த்தசாரதி அவர்கள் எழுதிய அணிந்துரையில் பின்வருமாறு வன்னி பற்றிக் குறிப்பிடுகின்றார்:

"....Vanni district which has certain specific peculiarities receives special attention its agrarian system, marital relations, caste formations, eleplant noosing, oral potry, Koothu and natakam efc."

இக்கூற்றின் அடிப்படையானது தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்பவற்றில் இருந்து சிறப்பு மிக்க தனித்துவங்களைக் கொண்ட பகுதியாக இருந்தது என்பதை அறியமுடிகின்றது. மேலும் வன்னியின் தனித்துவம் பற்றி பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தமது வன்னி பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''...சமூகங்களை வேறுபடுத்திக் காட்டும் அம்சங்களில் பொருளியலும் அதன் அடிப்படையில் அமைந்த வாழ்க்கை முறையும் முக்கியமானவை எனக் கொண்டால் வன்னிப் பிரதேசம் விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டு காணப்படும் விவசாயவளம், குளங்களின் அமைப்பு, குளங்களுக்கும், குடும்பங்களுக்கும், கோவில்களுக்கும் இடையேயான தொடர்பு என்பன பற்றியும் வன்னிமையின் பெரும் செல்வமாகக் கருதி பேசப்படும் மாடுகள், பசுக்கள், எருமைகள் என்பன பற்றிப் பேசாதிருக்கவும் முடியாது.

## பொருளாதாரமும் - அதன் கட்டமைப்பும்

எந்த ஒரு பிரதேசத்தின் பண்பாட்டியல் அம்சங்கள் பற்றியும் ஆய்வு செய்கின்ற போது பொருளியல் வாழ்வும், அவற்றின் நடத்தையும், பொருளாதாரம் ஒன்று கொண்டுள்ள பண்புகளும் தவிர்க்க முடியாதவாறு ஆய்வு செய்யப்படவேண்டியவையாகும். மறுபுறத்தில் ஒரு பிரதேசத்தின் பொருளியல் அம்சங்களே அப்பிரதேசத்தின் வாழ்க்கைமுறை, தொழில், சமூகக்கட்டமைப்பு, சாதிமுறை, கலாசார பண்புகள் என்பவற்றை தீர்மானிப்பனவாக உள்ளன. இந்தத்தொடர்பு பற்றி 'மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத்தளம்' என்ற கட்டுரைத்தொகுப்பு நூலிற்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எழுதிய ஆய்வு முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''...பண்பாடு என்பது ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக பொருளாதார, வரலாற்று வளர்ச்சியினூடாக தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆன்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள் சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினது தொகுப்பாகும். பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழில் நுட்பவளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்''.

இந்தப் பின்னணியில் வன்னிப்பிரதேச பொருளாதாரக் கட்டமைப்பையும், அவற்றின் வெளிப்பாடுகளையும் உற்றுநோக்கும் போது இப்பிரதேசம் பண்பாட்டில் தனக்கென ஒரு தனித்துவத்தைப் பேணியதைப் போன்று சில பொருளியல் தனித்துவங்களையும் கொண்டிருந்தது. பொருளியல் அம்சங்களில் இப்பிரதேசத்தில் முதன்மைப்படுத்தக் கூடியதாக உள்ளவை விவசாய விளைநிலங்களும்,அவற்றில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திமுறைகளும், அதனோடு இணைந்த பொருளாதாரத் தொடர்புகளுமே ஆகும். நெல்விவசாயமே இப்பிரதேசத்தின் முழுமையான பயிர்செய்கை முறையாக தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. ஒவ்வொரு கிராமங்களும், தன்னிறைவு கொண்ட (Self sufficent) மானியமுறைக் கிராமங்களாகக் காணப்பட்டன. **விவசாய நிலங்களை அடிப்படையாகக் கொண்ட வன்னிமையின் பொருளாதாரத்தின் மையமாக குளம், குடும்பம், கோவில் ஆகியன காணப்பட்டன.** இவற்றுள்ளும் குடிகளே (குடும்பம்) முக்கிய நிறுவன அமைப்பாகக் காணப்பட்டன. வன்னிமையில் அன்று காணப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் தன்னளவில் அன்றைய நிலையில் முழுத் தேவையையும் பூர்த்தி செய்திருந்ததோடு இன்று பரவலாகப் பேசப்படும் **நிலைத்து நிற்கும் (Sustainability)** தன்மையை கொண்டவனவாகக் காணப்பட்டன. குளத்தைச் சுற்றியிருந்த பொருளாதார மையமானது ஆரம்பகாலத்தில் ஒவ்வொரு குளக்கட்டையும் சார்ந்து சில எண்ணிக்கை குறைவான குடும்பங்களே வாழ்ந்து வந்ததுடன் சுற்றுச் சூழலில் உள்ள கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு தமது குறைவான அல்லது மிகக்குறைவான தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். ஆனால் குடும்பங்களின் பருமன், எண்ணிக்கை பெருக விளைநிலத்தையும், குளக்கட்டையும் சார்ந்து வாழும் நிலை இல்லாமல் போக சில மைல் அல்லது அருகாமையில் இருந்த மேட்டு நிலத்தில் குடியேறி நிரந்தரமாக வாழத் தலைப்பட்டனர். இவ்வாறான குடியிருக்கும் மேட்டு நிலத்தில் கூட தமக்குத் தேவையான குறுங்கால, நீண்டகாலப் பயிர்களை செய்து வந்தனர். (உழுந்து, பயறு, நிலக்கடலை, தோடை, மா, பலா, வாழை, மரக்கறி வகைகள்) வன்னிமையில் தமது வயல் வெளி உற்பத்திகளுக்குப் புறம்பாக மேட்டுநிலப் பயிர்களோடு 'புலவு' என வன்னிமையில் அழைக்கப்பட்ட சேனைப்பயிர் செய்கையையும் தன்னிறைவுக் குடும்பங்கள் கொண்டிருந்தன. உற்பத்திகள் யாவும் வருமானம் ஈட்டுவதற்கோ அன்றி சந்தைப்படுத்துவதற்கோ அல்லாமல் சுய நுகர்விற்கும் சுயதேவைக்குமே பயன்படுத்தப்பட்டன. இச்சமூக குடும்பங்கள் மிகக் குறைந்த அளவிலேயே பண்டமாற்றினை கொண்டிருந்ததையும் காணமுடிகின்றது. அந்த அளவிற்கு சுயநிறைவு பேணப்பட்டமையை இது காட்டுகின்றது.

தமது பொருளாதாரத்தையும், பொருளாதார முயற்சிகளையும் நில உடைமையின் ஊடாகவும், விவசாயமுயற்சிகளின் ஊடாகவும் கட்டி எழுப்பும் போது குடும்பம் அல்லது குடி என்பதே பொருளாதாரத்தின் தனித்துவ நிறுவன அமைப்பாகக் காணப்பட்டதுடன், குடும்பங்களுக்கிடையிலும் அல்லது ஒரு கிராமத்திற்குள்ளேயே உற்பத்திகள் மீண்டும், மீண்டும் பரிமாறப்பட்ட ஒரு சுற்றுவட்ட பொருளாதாரத்தையும் காணமுடிகின்றது. இவ்வாறான வன்னியின் குடும்பம் ஒன்றானது தன்னளவில் அடிப்படைத் தேவைகள் முழுவதையும் பூர்த்தி செய்து இருந்ததுடன் எல்லாக்குடும்பங்களுமே உற்பத்திக்கு தேவையான மூல, இடைநிலைப் பொருட்களையும் கொண்டவையாகவும் மற்றவரில் தங்கி நிற்காத தன்மையைக் கொண்டவையாகவும் இருந்தன. கலப்பை, மண்வெட்டி, அலவாங்கு தொடக்கம் விதைநெல்வரையான உற்பத்திப்பொருட்களையும், தேன் முதல் விரால்கருவாடு வரையான உணவுப் பொருட்களையும் கொண்டிருந்ததுடன் இன்றுவரை இதன் எச்சசொச்சங்கள் அழியாத வன்னிக்கிராமங்களிற் கூட காணக்கூடியதாய் உள்ளது. 'வன்னிக்கிராமியம்' என்ற தலைப்பிலான 'அகளங்கன்' கவிதை ஒன்று வன்னிக்குடும்பம் ஒன்றை பின்வருமாறு காட்டுகின்றது.

''...பசுமாடு பால்பொழியப்
பாதையெல்லாம் தேன் வழிய
விசுவாசம் மிக்க நாய்கள்
வீடுகளில் நிறைந்திருக்க, என்றும்

மான் தோலும் கொம்பும்
மாட்டுவண்டில் நுகத்தடியும்
வைக்கோற் போர்
தோற் செருப்பு, கலப்பை
பலகையொடு, நெற்பட்டறையும்
நிறைவான காட்சி தரும், என்றும்

பண்டிக்கருக்கலொடு-பதமாக
வாட்டிவைத்த
இறைச்சி வற்றல் பரணினிலே
எப்போதும் மிகுந்து இருக்கும்
குட்டிச்சாக்குக்குள்
குவிந்து தலை நீட்டி
எட்டிப்பார்த்தபடி
இறப்பில் தொங்குகின்ற
விரால்க்கருவாடு
வீடெங்கும்மலிந்து இருக்கும்

என அழகாகக் கூறிச் செல்கின்றார். வன்னிப்பிரதேசத்தின் பண்டைய பொருளாதாரக் கட்டமைப்பில் காணக்கூடிய இன்னொரு பண்பு நிலஉடைமையும் நிலப்பங்கீடும் ஆகும். இவ்விரண்டும் வன்னிப்பிரதேசத்தை ஏனைய தமிழ் பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து தனித்துவப்படுத்திப்பார்க்க உதவுகின்றது. வன்னியின் பாரம்பரிய கிராமங்களில் காணப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் குடியிருப்புநிலமும், நீர்ப்பாசன வசதியுள்ள விவசாய விளைநிலங்களும் இருந்து வந்துள்ளன. ஒப்பீட்டு அடிப்படையில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்த உடைமை அடிப்படையிலான 'குடிமை' முறைமானிய சமூக அமைப்பைப் போன்றோ, அல்லது, கிழக்கு மாகாண மட்டக்களப்பில் காணப்பட்ட 'போடியார் முறை'யில் அமைந்த 'சிறைக்குடிகள்' என்ற மானியமுறை அடிப்படையிலான நில உடைமை முறையோ இல்லாத இவற்றிற்கு வேறுபட்ட வகையில் எல்லோருக்கும் நிலம் காணப்பட்ட ஓரளவிற்கு நில சமத்துவம் உள்ள குடும்ப அமைப்பையே வன்னியில் காணமுடிகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலும், மட்டக்களப்பிலும் காணப்பட்ட நில உடைமை முறையின் கீழ் சுரண்டல், உழைப்பை உறிஞ்சுதல், உழைப்பாளர், நில உடைமையாளர்கட்கிடையே பெரும் வர்க்கவேறுபாடு, சாதிவேறுபாடுகள் என்பவற்றைக் கொண்டிருந்தன அல்லது இவற்றிற்கு இடம் அளித்தன. ஆனால் வன்னியில் ஏனைய பிரதேசக் குடியேற்றங்கள் ஊடுருவதற்கு முன் மேற்காட்டிய பண்புகள் குறைந்த அளவிலேயே காணப்பட்டன. சில ஆய்வாளரின் நோக்கில் உடையார், கணக்கர் மணியகாறர் போன்றோர் நிலங்களைச் சேகரிப்பதிலும், சுரண்டுவதிலும் ஈடுபட்டதாகக் காட்ட முற்படுகின்றனர். ஆனால் வன்னியில் இவர்கள் தம்வசம் அதிகளவு நிலங்களைக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே ஆயினும் இதற்கும் மேலாக இவர்கள் நிர்வாக ரீதியான ஆதிக்கத்தையே அதிகம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். நிலப்பகிர்வைப் பொறுத்தவரையில் ஓர் அளவு அல்லது மிகக் குறைந்த ஏற்றத்தாழ்வான நிலப்பகிர்வு காணப்பட்ட போதிலும் பெரும்பாலான குடும்பங்கட்கு நிலங்கள் பள்ளக் காணி, மேட்டுக்காணி, புலவுக்காணி என்ற அடிப்படையில் முறையே நீர்பாய்ச்சல் காணி, குடியிருப்புக்காணி, சேனைப்பயிர்ச்செய்கைக்காணி என கொண்டிருந்தது. வன்னியில் உள்ள ஒவ்வொரு பாரம்பரிய குடும்பமும் இம் மூவகை நில உடைமையில் குறைந்தது இரண்டையேனும் கொண்டிருந்தமையைனைக் காணமுடிவதோடு காணி பற்றிய தகராறுகள் மிகக்குறைந்த அளவிலேயே காணப்பட்டன. எவ்வாறாயினும் மானியமுறை அல்லது அளவு முறைக்கு ஒப்பான நிலஉடைமை நிலப்பகிர்வு வன்னியில் காணப்பட்டதை மறுப்பதற்கில்லை. ஆனால் அம்முறைகள் கொண்டிருந்த சுரண்டல், ஊழிய மிகையை எடுத்துக் கொள்ளல், உழைப்பை உறிஞ்சுதல், உழைப்பை அடிமைக்கு ஒப்பாக பயன்படுத்துதல், குத்தகைமுறை அதிகம் பேணப்படல் போன்றன குறைந்த அளவிலேயே வன்னியில் காணப்பட்டது. இதனால் இப்பிரதேசத்தின் நில உடைமை, நிலப்பகிர்வு, நிலப்பயன்பாடு என்பன தொடர்பாக சுதந்திரமான தன்மையொன்றும் தலையீடு அற்றவிதத்தில் தீர்மானம் எடுக்கும் பொருளாதாரத் தொடர்புகளும் ஒருங்கே காணப்பட்டது. பொதுவாக ஒவ்வொரு வன்னிக்கிராமமும். பொருளாதாரக் கட்டுக்கோப்புள்ள நில உடைமையைக் கொண்டிருந்ததுடன் அக்கிராமம் ஏதோ ஒரு வகையில் பண்டமாற்றை ஓரளவிற்கு பின்பற்றிய தன்னிறைவுக் கிராமமாய் இருந்து வந்தது. இக்கருத்து நிலைக்கு சார்பாக பல வன்னிக்கிராமங்கள் அன்று காணப்பட்டன. சில சமயம் ஒரு கிராமத்தில் பல குடும்பங்கள் காணப்பட்ட சூழலில் ஒரு சமமற்ற வளர்ச்சி காணப்பட்டபோதிலும் அக்கிராமத்தின் உற்பத்திகள் முழுவதும் ஏதோ ஒரு வகையில் அக்கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியனவாக இருந்தது. இன்று பாரம்பரியமாக வன்னிக் கிராமங்களாக இருந்தவற்றின் பொருளாதாரக் கட்டமைப்பு சிதைவடைந்து நவீனம் புகுந்த போதிலும் அவை முற்று முழுதான அழிவிற்கு உட்படாது இருப்பதையும் காணமுடியும். அதாவது கிராமம், நகரம் என்பவற்றிற்கிடையிலான அடிப்படையில் இடம் பெற்றது. சிறப்பாக அருவி வெட்டுதல், வயல் உழுதல், வயல் விதைப்பு, காடுவெட்டுதல், சூடடிப்பு அல்லது **மந்து கொத்துதல்,** வீடுகட்டுதல், வீடு வேய்தல் இவை போன்ற வேலைகள் **'பரத்தை'** அடிப்படையிலேயே இடம்பெற்றது. இவ்வாறான கூட்டு முயற்சி வேலைகள் எல்லோரும்

ஒன்று சேர்தல், தமக்கிடையேயான பிரச்சினைகளை மனம்விட்டு பேசித்தீர்த்தல், உறவுகளைப் பலப்படுத்தல், மற்றவருக்கு உதவுதல், கூட்டாகச் சேர்ந்து உழைப்பை பகிர்தல் போன்ற மானிடப்பண்புகளைப் பேணமுடிகின்றது. தொழிலைப் பகிர்தல் என்ற அடிப்படையில் காணப்படும் மற்றொன்று விவசாயச் செய்கையில் **'வாரவிதைப்பு'** என்பதும் **'முறைக்காவல்'** என்பதும் வன்னியில் அதிகம் காணப்படுவதாகும். நில உடைமையாளன் ஒருவன் நிலம் அற்ற அல்லது நிலம் குறைவான இன்னொரு விவசாயியுடன் சேர்ந்து சகல உற்பத்தி முயற்சிகளிலும், அவற்றிற்கான செலவுகளிலும் சரிபாதியை பகிரும் முறையே இவ்வாரவிதைப்பு ஆகும். இதேபோன்று பரந்த விளைநிலங்களைக் கொண்ட பல விவசாயிகள் பயிர் நிலத்திற்கு பொதுவான ஒரு இடத்தில் 'காவல்குடில்' அமைத்து விளைநில உடைமையாளர்கள் முறையாக ஒருவர், ஒருவராக மாறி மாறி இரவுக்காவல் காப்பதைக் குறிப்பதாகும். இக்கூட்டு முயற்சியானது எந்தவிதமான முரண்பாடும் இன்றி சரிவரத்திட்டமிட்டவாறு நடந்து முடியும். விவசாய முயற்சிகளில் பெண் ஊழியம் நேரடியாகப் பயன்படுத்தாது விட்டாலும் மறைமுகமாக பலவகையிலும் விவசாய தொழில் முயற்சிகட்கு உதவி வந்துள்ளதை காணக்கூடியதாய் உள்ளது. சமமற்ற வளர்ச்சி காரணமாக சில வன்னிக்கிராமங்கள் ஒரு குறிப்பிட்டகால வரையிலும் ஒரு குறிப்பிட்ட சமூக பொருளாதார மட்டநிலையில் வாழ்ந்து வந்தனர். ஆயினும் பின்னர் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வுகள் துரித முன்னேற்றம் என்பன காரணமாக வாழ்வியல் பண்பாட்டில் புதிதாகப் பெற்றுக் கொண்ட அந்தஸ்தை பின்பற்றத் தொடங்கினர் - அதேசமயம் புதிய மாற்றங்களால் உள்வாங்க முடியாத பல வாழ்வியல், பொருளாதாரப் பண்புகள் இன்றுவரை உயிர்வாழ்வதையும் சில இடங்களில் காணமுடியும். உதாரணமாக பொருளாதாரக் கூட்டுமுயற்சியின் வெளிப்பாடாக வன்னியில் காணப்படும் 'பரத்தை போடுதல்' போன்றன. இன்றுவரை பல கிராமங்களில் காணப்படுகின்றன.

### ஊழியப்பயன்பாடும் கூட்டுமுயற்சியும்

பாரம்பரிய வன்னியின் ஊழியப்பயன்பாடு நேரடியாண வேதன ஊழியமாகப் பயன்படுத்தப்படாமல் பண்டமாற்றுமுறை ஊழியமாகவும் 'வேலைக்கு வேலை செய்தல்' என்ற அடிப்படையிலுமே அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எல்லோருக்கும் பயிர் செய்நிலங்கள் காணப்பட்டதனால் ஒவ்வொருவரிடையேயும் ஊழியப் பரிமாற்றம் வேலைப்பழுவைக் குறைக்க உதவியதுடன் துரிதமாக வேலைகள் நடைபெறவும் உதவியது. பல வன்னிக்கிராமங்களில் பெருமளவான ஊழியப் பயன்படுத்தலானது கூட்டு முயற்சியின் அடிப்படையிலேயும், தொழிலைப் பகிர்வதன் அடிப்படையிலுமே இடம் பெற்றதைக் காண அநேகமான தொழில் நடவடிக்கைகள் 'பரத்தைபோடுதல்' என்ற கூட்டுமுயற்சியின் உடையார், முதலியார், விதானைமார், கணக்கப்பிள்ளை, மணியகாறன் போன்ற வேறுபாடுகள் இருந்த போதிலும் இவை ஆண்டான், அடிமை, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டைக் காட்டக்கூடிய வர்க்கங்களாக தலைதூக்கவில்லை.

சாதியமைப்பைப்பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் காணப்படும் கட்டுப்பாடு மிக்கதும் இறுக்கமானதுமான சாதிமுறை வன்னிக்கிராமங்களில் காண்பது அரிது. அத்துடன் யாழ்ப்பாணத்தைப் போன்று சாதிப் பிரிவிற்கு பொருளாதாரக்காரணிகள் முதன்மையாய் இருந்தமை போன்று இங்கு காணப்படவில்லை. ஆயினும் வன்னியில் உள்ள ஒரு விசேட அம்சம் யாதெனில் நான் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று தன்னிறைவை அடிப்படையாகக் கொண்ட கிராமம் ஒன்றில் உள்ள சில அல்லது பல குடும்பங்களைப் பொறுத்தவரை ஒரே இனத்தவர், ஒரே சாதியினர் அல்லது ஒரே இரத்த உறவுமுறையைக் கொண்ட உறவினர் கொண்ட ஒரு கூட்டமே காணப்பட்டது. வேறு ஒரு சாதிக் குழுவினர், அல்லது இனத்தவர் அக்கிராமத்தில் குடியேறுதல், ஊடுருவுதல் கடினமானதாகும். இதன் காரணமாக சாதியை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் வன்னியில் காணப்படுவது அதன் மற்றொரு சிறப்பாகும். உ+ம் வண்ணான் புளியங்குளம், பறையர் சின்னக்குளம், கோவியர் மகிளங்குளம். வயலில் வேலை செய்யும் தனது கணவனுக்கும் ஏனையோருக்கும் உணவு சமைத்து கொண்டு செல்லுதல், அவர்கள் உணவருந்தி இளைப்பாறும் நேரம் சில வேலைகளை அவர்கட்கு செய்தல் (உ+ம்: உப்பட்டி கூட்டுதல், மாவக்கை கட்டுதல்) என்ற அடிப்படையில் பெண் ஊழியம் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது. தொழில் முயற்சி தொடர்பாக வன்னியில் காணப்பட்ட மற்றொரு சிறப்பு தொழில் அந்தஸ்தும், தொழிலாளர் அந்தஸ்தும் **(Labour diginity)** பேணப்பட்டமையாகும். தான் ஒரு விவசாயி என்பதிலும் தான் ஒரு கமக்காரன் என்று சொல்வதிலும் அவர்கள் தம்மளவில் மாத்திரம் அன்றி சமூக மட்டத்திலும் பெருமை பெற்றுக் காணப்பட்டனர். அத்துடன் பாரம்பரியமாக இவ்வாறான அந்தஸ்து பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதையும் அவதானிக்கலாம்.

### வர்க்கமும் சாதியும்

எந்த ஒரு சமூகக்கட்டமைப்பிலும் வர்க்கம், சாதி என்பவற்றை தீர்மானிப்பதில் அதிகளவு பொருளாதாரக் காரணிகளே செல்வாக்கு செலுத்துவனவாய் உள்ளன. வன்னிப்பிரதேசத்தில் அதிகளவு வர்க்க வேறுபாடுகள் தலைதூக்கி இருந்தமைக்கான சான்றாதாரங்கள் காணப்படவில்லை. குறிப்பாக ஏனைய பாரம்பரியப் பிரதேசங்களில் காணப்பட்ட வர்க்க வேறுபாட்டிலும் குறைந்த அளவான நிலையிலேயே இப்பிரதேச வர்க்கமுறை இருந்துவந்துள்ளது இப்பிரதேசத்தின் நிர்வாக தலைமைத்துவ வழிநடத்தல் காரணமாக ஊரின் மத்திமப்படுத்தப்பட்ட ஒரு இடத்தில்

இருந்து 'மடப்பண்டம்' எடுத்தல் என்ற சடங்கு மேற்கொள்ளப்படும். அப்போது தமது குலதெய்வத்திற்குரிய வழிபாட்டுப் பொருட்களோடு தாம் உற்பத்தி செய்த பொருட்களையும் எடுத்துச் செல்வது வழக்கம். இவ்வாறான கோவில் நிகழ்வுகளின் போதும் யாழ்ப்பாணத்தாருடைய வருகை வன்னியை நோக்கி இருந்தது. இங்கு முக்கியமாக வெளிப்படுவது யாதெனில் குளம், குடி என்பன வன்னியின் பொருளாதார நிலைக்களன்களாக இருந்தது போன்று கோவில்களும் பொருளாதாரத்தின் மையங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

மருத்துவ முறையைப் பொறுத்தவரை இயற்கை மருத்துவம், ஆயுர்வேதமருத்துவம், நம்பிக்கை மந்திர முறையிலான மருத்துவம் என்பன வன்னியில் காணப்பட்ட முக்கிய மருத்துவமுறைகளாகக் காட்டலாம். இயற்கை மருத்துவம், சித்தவைத்தியம், பாம்புக்கடி வைத்தியம் போன்றன தந்தை, மகன் வழி முறையாக பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதையும் அவதானிக்கலாம். இத்தகைய மருத்துவமுறைகள் வருமானம் கருதாது சேவை நோக்கின் அடிப்படையிலும், இறைவன் கொடை என்ற அடிப்படையிலும் மகத்துவம் மிக்க ஒரு தொழிலாக இன்று வரை இருந்து வருவதை அவதானிக்கலாம். குறிப்பாக சாஸ்திரி கூழாங்குளம் உயர்திரு பத்மநாதன் அவர்களது பரம்பரை ஐந்து தலைமுறையாகவும்,அம்மிவைத்தான் செல்லையா வைத்தியரின் பரம்பரை 7வது தலைமுறையாகவும் இதனைச் செய்துவருவது யாழ்ப்பாணத்தில் இருந்து வருவதன் மூலமும் இங்கிருந்து மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்றதுமான கல்விரீதியான தொடர்பு, மற்றொன்று திருமணமுறையின் ஊடாக வளர்ச்சி அடைந்த சமூக பொருளாதாரத் தொடர்புகள், '**மாடுகட்டுதல்**' என்ற அடிப்படையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் இருந்து மாடுகள் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் (அறுவடை முடிந்தபின்) வன்னியின் நிலப்பகுதிகட்கு மேய்ச்சலின் பொருட்டு கொண்டு வரப்பட்டமை விவசாயத்தோடு தொடர்பான யாழ்ப்பாண தொடர்பிற்கு வழிவகுத்தது. வேறொரு வகையான தொடர்பு கோவில் திருவிழாக்களின் பொருட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து தங்கிச் செல்லல் - நான் முன்னர் குறிப்பிட்டவாறு வன்னியின் பொருளாதாரமையமாக இருந்தவற்றில் கோவிலும் முக்கியத்துவம் பெற்று இருந்தது. கோவில் திருவிழா இறுதிநாளன்று தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் ஒரு இடமாக கோவில்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதை காணமுடிகின்றது. குறிப்பாக ஒட்டி சுட்டான், வற்றாப்பளை, புதூர் போன்ற வன்னிமையின் பிரசித்தம் மிக்க கோவில்களும் மடுமாதா போன்ற தேவாலயங்களும் இவ்வாறு தமது உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்தும் இடமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அதேபோன்று வன்னியின் பாரம்பரியக் கிராமங்களில் உள்ள குல தெய்வ வழிபாட்டுமுறையில் வருடத்திற்கு ஒரு முறை '**ஊருக்குச் செய்தல்**' என்ற வழிபாட்டு முறை இருந்து வருகின்றது. அவ்வாறான வேளையில் கல்வி, மருத்துவம், போக்குவரத்து, வழிபாடும் கோவில் வணக்கமுறையும் போன்றவற்றை இதன் கீழ் நோக்குதல் பொருத்தமானதாகும். பாரம்பரிய வன்னிமையில் கல்விமுறை மிகவும் குறைவான நிலையிலேயே காணப்பட்டது. திண்ணைப் பள்ளிகள் மாத்திரம் மிகக் குறைந்த அளவில் காணப்பட்டதற்கான சான்றுகள் உண்டு. நில உடைமை அதிகம் காணப்பட்டமை, அதிக விளைச்சல், தன்னிறைவு பெற்ற உற்பத்தி என்பவற்றின் காரணமாக கல்வி ஒரு முதலீடாகவோ அல்லது அவசியமான வாழ்வியல் தேவையாகவோ முக்கியத்துவப்படுத்தப்படவில்லை. எனினும் வசதிபடைத்தோர் சிறப்பாக உடையார், முதலியார், விதானைமார் போன்ற சமூக உயர்நிலை வகுப்பைச் சேர்ந்தோர் தமது பிள்ளைகளை யாழ்ப்பாண பிரதேசத்திற்கு அனுப்பி கற்பித்தனர். எனினும் பிற்காலத்தில் யாழ்ப்பாண குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாட்டு வண்டிகள் மூலம் வந்து திண்ணைப் பள்ளிகள் மூலம் கற்பித்தனர். வன்னிமையில் காணப்பட்ட திண்ணைப்பள்ளிகள் சாதி, குலமரபு பார்க்கப்படாது கல்வி கற்பிக்கப்பட்டமை சிறப்பானதொன்றாகும். கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்குரிய சன்மானமாக பண்டமாற்று அடிப்படையில் பொருட்களே வழங்கப்பட்டன. (நெல், தேன், நெய், போன்றன) எனினும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்பட்டவாறு 'எண்ணெய் சிந்து' படித்து அதன் மூலம் சேகரிக்கப்பட்ட பணம் ஆசிரியருக்கு சன்மானம் வழங்கப்பட்டது போன்ற ஒரு முறையும் வன்னியில் காணப்படவில்லை. இவ்விடத்தில் வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான தொடர்புகள் எவ்வாறு இருந்தன என்பது பற்றி குறிப்பிடுதல் பொருத்தமானது. நான் முன்னர் குறிப்பிட்டவாறு உள்ள ஆரியர் கரையா புதுக்குளம், அம்பட்டக்கரைச்சி தமது கிராமத்தில் அல்லது ஒரே சாதியினர் வாழ்ந்த ஒரு பிரதேசத்தில் வேறு இனத்தவரை அல்லது சாதியினரை ஊடுருவ விடாமல் தடுத்தற்குரிய காரணம்

1) தாம் வாழ்ந்த கிராமத்தின் மீதும் மண்ணின் மீதும் கொண்ட அளவற்ற பற்று.

2) கிராமிய உற்பத்தி மிகைகள் வெளிச்செல்லாது தடுத்தல் அல்லது பாதுகாத்தல்.

3) தமது உறவையும் இரத்த உரிமையையும் பிரியவிடாது கட்டுக்கோப்பாக வைத்திருத்தல்.

எவ்வாறாயினும் ஊர்ப்பெயரை அடிப்படையாக கொண்டு பல்வேறு சாதியினர் வாழ்ந்த கிராமங்களில் கூட நில உடைமை, நிலப்பங்கீடு என்பவற்றில் வேறுபாடு இல்லாது தமக்கென தனியாக நிலங்கள், குளம், தனியான கோவில் என்பவற்றையும் கொண்டிருந்தனர் - எவ்வாறாயினும் பிற்காலத்தில் வன்னியில் யாழ்ப்பாணக் குடியேற்றங்கள் ஏற்படத்தொடங்கியது. இது யாழ்ப்பாணத்து சாதியமைப்பையும் வன்னியில் கொண்டு வந்தது.

**சமூகக்கட்டமைப்பு**

வன்னியின் சமூகக்கட்டமைப்பும் அதனோடு இணைந்த வாழ்க்கை முறையும் பொருளாதார வாழ்வோடும் பொருளாதார கட்டமைப்போடும் தொடர்புள்ளனவாகவும் காணப்படுகின்றதோடு நெளுக்குளம் சிவசேகரம் வைத்தியரது பரம்பரை, பாம்புக்கடி வைத்தியத்தில் சிறப்பு மிக்க பம்பைமடு பூலோகசிங்கம் ஓமந்தைப்பகுதியில் உள்ள வீரகத்தி வைத்தியரது பரம்பரை போன்றனவும் வன்னியின் வைத்தியத்துறையில் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

போக்குவரத்து முறையைப் பொறுத்தவரை வன்னிப்பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகட்குப் பொதுப் போக்குவரத்திற்கும் முண்டு கொடுக்க கூடிய வகையில் காளைமாடுகளும், மாட்டுவண்டில்களுமே நீண்டநெடுங் காலமாக தேசிய வாகனமாக இருந்து வந்துள்ளன. விவசாயத்தோடு தொடர்பான போக்குவரத்துத்தேவைகளைப் பூர்த்தி செய்தல், வேறு இடங்கட்கு செல்லல், கோவில் திருவிழாக்களுக்கு செல்லல், பொருட்களை ஏற்றுதல் போன்றவற்றிற்கு மாட்டுவண்டில்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இதனால் வன்னிப்பிரதேசத்தில் வண்டில் மாடுகளை வாங்குதல், வண்டில்களை பராமரித்தல் என்பவற்றில் போட்டியும், தரமும் பேணப்படுகின்றது. தரமானதும் அழகானதுமான வண்டில் மாடுகளை வாங்கும் பொருட்டு சிங்கள வன்னிப்பிரதேசங்கட்கும், வன்னியில் பொருளாதாரவளமும் கால்நடை வளமும் சிறந்து விளங்கும் தென்னை மரவடிபோன்ற இடங்கட்கும் அடிக்கடி சென்று வருவதை காணமுடியும். இப்பிரதேசத்தின் செல்வமாகவும் பொருளாதாரத்தின் மற்றொரு பகுதியாகவும் கருதப்பட்ட, மாடுகள், பசுக்கள், எருமைகள் என்பவற்றை பராமரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து இருந்ததுடன் அவற்றின் பயன்பாட்டின் மூலம் பெருமளவு பொருளாதார நலன்களையும் பெற்றுவந்தனர்.

**நிர்வாகக்கட்டமைப்பு**

வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார, சமூக கலாசார கட்டமைப்பை பேணுவதிலும் அவற்றின் சிறப்பிற்கும் உதவிய மற்றொரு காரணி நிர்வாகக் கட்டமைப்பு ஆகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்திற்கு முன்னர் இருந்தே கட்டுக்கோப்பான நிர்வாகக்கட்டமைப்பையும் தமது பிரதேசத்தை தனியாகவும், திறமையாகவும், வீரம் செறிந்த முறையிலும் பராமரித்தன் காரணமாக இது **'அடங்காப்பற்று'** என அழைக்கப்பட்டது. வன்னிமையின் நிர்வாகப் பிரிவுகள் 'பற்று' என்ற நிர்வாகப்பிரிவு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். 'பற்று' என்ற நிர்வாகப் பிரிவு சிங்கள வன்னியிலும் காணப்படுகின்றது. கைலாயவன்னியன் கால சிதம்பரரும சாசனப் பட்டயம் ஒன்றில் வன்னிப்பற்றுக்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றன. குறிப்பாக கரிக்கட்டுமூலை, பனங்காமம், தென்னைமரவடி பற்று, மேல்பற்று முள்ளியவளை, பச்சிலைப் பள்ளி, ஓமந்தை, புதுக் குடியிருப்பு, பூநகரி என்னும் பற்றுக்களும் இருந்ததாக சான்றுகள் உண்டு. இதன் பின் ஒல்லாந்தர் போத்துக்கேயர் காலப்பகுதியில் இவை மேலும் விரிவடைந்து ஒவ்வொரு பற்றும் 'அதிகாரி' என்பவனால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஏறக்குறைய 100 ஆண்டுகட்டு முன் இருந்த வன்னியின் நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி சிவில் சேவை அதிகாரியான ஜே.பி. லூயிஸ் அவர்கள் குறிப்பிடும் போது வன்னி மாவட்டம் 10 பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்ததுடன் இப்போது இருக்கின்ற நடுச் செட்டிகுளம், கிழக்கு மூலை, தெற்கு சின்னச் செட்டிகுளம் லூயிசின் கால நிர்வாகப்பிரிப்பை பின்பற்றியதாகவே இருக்கின்றது. வன்னியின் பிற்கால நிர்வாகத்தில் உடையார், விதானைமார், மணியகாறர் போன்றோர் தனித்துவமானவர்களாக இருந்ததுடன் இவர்கள் தாம் நிர்வகித்த பிரதேசங்களின் பொருளாதார சமூகக்கட்டமைப்பு ஒழுங்காகவும், திறமையாகவும் இருக்க அரும் பணியாற்றிய சம்பவங்களும் உண்டு. வன்னியின் பொருளாதாரம், சமூகம், நிர்வாகம் ஆகிய கட்டமைப்புக்களில் தனித்துவமாகக் காணப்பட்ட ஒரு பண்பு யாதெனில் மானிட நேயத்தை பராமரித்தல் ஆகும். மற்றவரது விவசாயவிளைநிலங்களைப் பாதுகாத்தல், மற்றவருக்கு உதவுதல், மற்றவரது சொத்துக்களை மதித்துப்பேணல், நிர்வாகபொருளாதாரப்பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்க்க உதவுதல் ஆகிய மானிட நேயப்பண்புகள் அதிகம் காணப்பட்டதற்கு இன்றுவரை பல சான்றுகள் உண்டு.

**முடிவுரை:**

இவ் அடிப்படையில் வன்னிப்பிரதேச பொருளாதாரம் அதன் கட்டமைப்பு, சமூகக்கட்டமைப்பு, நிர்வாகம், சமுதாய விழுமியங்கள் மேம்பாடுகள் என்பவற்றை உற்றுநோக்கும் போது இவ் ஒவ்வொன்றிலும் வன்னிப்பிரதேசத்

தின் தனித்துவப்பண்புகள் வெளிப்பட்டுள்ளதை தெட்டத்தெளிவாகக் காணமுடிகின்றது. அண்மைக்காலத்தில் இப்பிரதேசத்தின் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படும் விதத்தில் அரசாங்கங்கள் நிர்வாக ரீதியாக இப்பிராந்தியத்தை 'வன்னி' என்ற தேர்தல் நிர்வாக அலகாகக்குறிப்பிட்டதன் பின்னர் மீண்டும் அண்மைக்காலமாக 'வன்னி' என்பது பலரது வாய்களிலும் குடிகொள்ளத்தொடங்கி இருப்பது மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும். மேலும் இப்பிரதேசத்தின் தனித்துவங்கள் பேணக் கூடியவிதத்தில் பல நிகழ்வுகள் இப்பிரதேசத்தில் நடைபெற்று வருவதும், குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம் பெறுவதும் மீண்டும் பண்டைய வன்னியின் அழிக்கமுடியாத பாரம்பரியங்கட்கு கொண்டு செல்கின்றதா என்ற ஆச்சரியமும் நம்மைச் சூழ்ந்துள்ளது. எவ்வாறாயினும் எனது இவ் ஆய்வின் முடிவாக நான் கேட்டுக் கொள்வதும் எதிர்பார்ப்பதும் வன்னியின் பொருளாதாரம், கலாசாரம், பண்பாட்டியல், வாழ்க்கைமுறை, வாழ்வியல் பண்புகள் என்பன தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியது எல்லோரும் மனங் கொள்ளத்தக்க ஒன்றாகும். அதேசமயம் வன்னியிமையின் கண் இன்று வரை அழிக்கமுடியாத பல பொருளாதார பண்புகள் மேலோங்கி நிற்பதைக் காண்பதுடன் அவை வேறு ஊடுருவல்களாலோ, அல்ல வேறு கலாசாரங்களாலோ உள்வாங்க முடியாத அளவிற்கும் சிதைந்து போக முடியாத அளவிற்கும் விஞ்சி விரிவடைந்து உறுதியானதாய் நிற்பதுதான் இன்று வரை 'வன்னியர்' என்று சொல்வதற்கு பெருமை சேர்க்கின்றது. அத்தகைய பெருமையும், புகழும் மேலும் கொண்டு செல்லப்பட வன்னியின் பொருளாதாரம் தொடர்பான மேலும் பயனுள்ள ஆய்வுகள் வெளிக்கொணரப்பட வேண்டியது அவசியம். அவற்றிற்கெல்லாம் முதற்படியாக ஒரு பிள்ளையார் சுழியாக எனது இச்சிறிய ஆய்வு உதவும் என்பது எனது தளரா நம்பிக்கை ஆகும். எதிர்கால வன்னியினதும் இப்பிரதேசத்தின் ஆய்வுகளில் அக்கறை கொண்டோரும் இம் முயற்சிகளில் ஈடுபடவேண்டியது அவசியமான ஒன்றாகும்.

**உசாத்துணை நூல்கள்**


01) வன்னியர் - கலாநிதி சி. பத்மநாதன்

02) 'வன்னியும் வன்னியரும்' - சி. எஸ். நவரத்தினம்

03) வன்னிவள நாட்டுப் பாடல்கள் - மெற்றாஸ்மெயில்

04) அகளங்கன் கவிதைகள் - நா. தர்மராஜா

05) பண்டார வன்னியன் விழாமலர் - வவுனியா கலாசாரகுழு

06) கைலாசபதி நினைவேடு - கைலாசபதி நினைவுக்குழு

07) வன்னிப்பிரதேச வாழ்க்கை முறையும், பண்பாட்டியல் அம்சங்களும் -
திரு. கே. தம்பையா (சாகித்திய விழா கட்டுரை)

08) தமிழ் நாட்டார் வழக்காறியல் - க. சண்முகலிங்கம்

09) Sri Lanka Tamil Society And Politics Prof. K. Sivathamby

10) நாட்டாரியல் கருத்தரங்குக் கட்டுரைகள் - யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

11) மலையகத் தமிழர்களின் பண்பாட்டுத்தளம் தொகுப்பு: பேராசிரியர் கா. சிவத்தம்பி

12) யாழ்ப்பாண வைபவமாலை - குல சபாநாதன்

13) வெளிக்கள ஆய்வுகள் - கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள்

14) பேராசிரியர் கா. சிவத்தம்பி திரு. நா. தம்மராஜா (அகளங்கன்) ஆகியோருடனான உரையாடல்


*மானுடம் செத்ததோ? மயக்கத்தில் ஆழ்ந்ததோ?*
*வஞ்சகர் கையிலே வதையுண்டதோ?*
*ஏனிந்த உலகிலே போர் என்ற வெறியாட்டம்*
*எப்போதும் ஒழியாது நடக்கின்றது?*

*வ. இராசையா*

# வன்னிமைகளின் விவசாயச்சடங்கு முறை

இரா வை. கனகரத்தினம் M.A.
விரிவுரையாளர், இந்துப்பண்பாடு, தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஈழத்து வன்னிமைகள் இயற்கை வளம் கொளிப்பவை, ஐவகை நிலங்களுள் முல்லை மருதம், பாலை, நெய்தல், ஆகிய நால்வகை நிலங்களையும் பெரிதும் தன்னுட் கொண்டது. இயற்கையின் நிலப்பயன்பாடு மாறாத காலநிலைத்தன்மையும் வன்னிமை களை வளமிக்க பிரதேசங்களாக ஆக்கிற்று. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவே னில் ஆகிய தமிழ் மக்களின் காலநிலைப்பாகுபாடு இங்கு ஒழுங்காகச் செயல்பட்டு வந்தன. மக்களும் அவ்வக் காலநிலைகளுக்கு ஏற்ப தொழில் முறைகளைக் கையாண்டு வந்தனர்.

வன்னிமைகளின் நான்கு நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் தத்தமக்கென தனியானதோர் தொழில் முறைகளைப் பெற்றிருந்த பொழுதும், சிறப்பாக, இம்மக்கள் யாவரும் விவசாயத்தை விரும்பி வெறுப்பின்றி மேற்கொண்டனர். சமூக ஏற்றத்தாழ்வுகள் இப்பிரதேசங்களில் பெரிதும் பாராட்டப்படாதது போன்றே, சமுதாயத்தில் எல்லா மக்களும் நிலத்தினை உடைமைகளாகப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இங்கு வசதி படைத்தோர் பெரும் நிலக்கிளார்களாக விளங்கினர். ஆனால் அவர்களின் நிலப்பரப்பின் தொகை மேலைத்தேச நிலப்பிரபுக்களின் நிலங்களின் எல்லைகளோடு ஒப்பிடக்கூடியனவல்ல. இவர்கள் சொற்ப நிலப்பரப்பை உடையவர்களாக இருந்த பொழுதும், அதிகார எல்லையும் மனநோக்கும் மேலைத்தேசப் பிரபுத்துவ சமுதாய நோக்குடையனவாகவே இருந்தன. ஆனால் மேலைத்தேசப் பிரபுத்துவ சமுதாயத்தில் இருந்த செல்வவளமும் ஆதிக்கமும் சுரண்டலும் பெரிதும் இவர்களிடத்தில் இருக்கவில்லை என்றே கூறுதல் வேண்டும்.

வன்னிப் பிரதேசம் வட கீழ்ப்பருவப் பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறுகின்றது. இது வருடமொன்றுக்குச் சராசரி 75 அங்குலம் மழை வீழ்ச்சியைப் பெறும் பகுதியாக விளங்குகின்றது. ஆனாலும் மேற்காவுகை மழை மூலம் அவ்வப்போது மழைவீழ்ச்சியினைப் பெற்றுக் கொள்கின்றது. வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்று ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆடி மாதத்தில் ஒரு சிறிய மழை வீழ்ச்சியினை யாழ்ப்பாணக் குடாநாடு பெறும் பொழுது இப்பிரதேசமும் பெறுகின்றது. 'ஆடிப்புழுதி தேடி உழு' என்பது விவசாயிகள் மரபு, எனவே இக்கால கட்டத்தில் இரு வேறு நோக்குடையவர் களாக வன்னி மக்கள் காணப்படுவர். பொதுவாக வன்னிப் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகள் (1) காலபோகம் (2) சிறுபோகம் என்ற இரண்டின் அடிப்படையாக நடைபெறுகின்றது. காலபோகம் மழை வீழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டது. சிறுபோகம் நீர்ப்பாசனக் குளங்களை மையமாக கொண்டு நடைபெறுவது குறிப்பாகக் காலபோகம் 'வானம் பார்த்த வெள்ளாமை' என்ற மரபு வழிக் கருத்தினை அடிப்படை யாகக் கொண்டு வன்னியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இயல்பு.

மழை பெய்ததும் விவசாயிகள் விதைப்புக்கான அடுக்குகளை ஆயத்தஞ் செய்வர். நெல், கடிகம், விதைப்பெட்டி, மாடு, ஏர், முதலான அடுக்குகளுடன் உழவுகாரர்களுக்கும் சொல்லி வைப்பர். நெல்லை தெரிவு செய்யும் பொழுது இரண்டரை மாதம் முதல் ஆறு மாதம் வரை நன்று விளையக்கூடிய நெல்வகைகளையும், கூடிய பலனைத் தரவல்ல நெல் இனங்களையும் குறுகிய காலத்தில் அறுவடை செய்யக்கூடிய நெல் வகைகளையும் தெரிவு செய்வர். காலபோகத்தின் குலவாழை,வெள்ளை நெல்லு, கறுத்த இளங்கலையன்

வெள்ளை இளங்கலையன், சீனட்டி, பச்சைப்பெருமாள், வெள்ளை சீனட்டி முதலான நெல் வகைகளைத் தெரிந்தெடுப்பர். சிறுபோகத்தின் போது சரனி, காடைக்கழுத்தன், அழகிய வண்ணன் கலியன், சிறுவெள்ளை, முப்பன்கண், சவரக்குரன், வட்டுப்பித்தன், கருன்குறு வலி, சோறிக்குறும்பை, முரங்கன், மணல்வாரி, மலையழகன், கார்நெல்லு, முல்லைநெல், அடுக்கு வெள்ளை முதலான நெல்வகைகளைத் தெரிவு செய்வர்.[2]

ஈழ நாட்டின் தமிழர் சமுதாய மரபில் ஒவ்வோர் சமூகமும் தமக்குள்ள கடமைகளைச் செய்ய வேண்டிய கடமைப்பாடு இருந்தது. இவ்வழமை வன்னிமைப் பிரதேசங்களில் ஓரளவு பின்பற்றப்பட்டு வந்ததெனலாம். விவசாயிகளுக்கு அவ்வகையில் ஏரினைத் தச்சுத் தொழிலாளி செய்து கொடுத்து வந்தான். ஏர், பாலை, முதிரை, மரங்களை உபயோகித்தும் நுகம், மஞ்சவண்ணா, ஆத்தி முதலான மரங்களை உபயோகித்தும் செய்யப்பட்டது. யாழ்ப்பாண குடாநாட்டின் ஏர் வகைகளுக்கும் வன்னியில் உபயோகிக்கும் ஏர்வகைகளுக்கும் வேறுபாடு இருக்கவில்லை. ஆனால் சிங்கள மக்கள் உபயோகிக்கும் ஏர்வகைகளுக்கும் வன்னிப்பிரதேச மக்களின் ஏர் வகைகளுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. சிங்கள மக்கள் உபயோகிக்கும் ஏர் கனதியானதும் பெரியதுமானதுமாக வுள்ளது. வன்னியில் எருமைமாட்டை பயன்படுத்தி உழும் பொழுது அதன் கலப்பை சாதாரண மாடுகளின் ஏரினைவிட மிகுந்த கனதியும் பருமனும் உடையன. இவ்வேறுபாடுகள் தரைத்தன்மை உழவு. மிருகங்களின் வலிமை இயற்கை உழப்பட வேண்டிய நிலத்தின் ஆழம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகிறது. மழை பெய்ய ஆரம்பித்ததும் ஒவ்வொரு கமக்காரனும் தனது வயலிலே மாட்டை இறக்கி உழுவதற்கு சுபவேளையினைப் பார்த்துக் கொள்வான். பொதுவாக அட்டமி, நவமி, கரிநாள், இராகுகாலம், பஞ்சமி முதலான நாட்களைத் தவிர்த்து அமிர்தயோகம் சத்தியோகம் முதலான சுபவேளையில் மாடுகளையும் கலப்பைகளையும் கொண்டு செல்வர். சுபமூர்த்தம் பார்த்தலைப் பஞ்சாங்கம் பார்த்தல் என்று அழைப்பர். வயலுக்குச் செல்லும் பொழுது ஒரு பெட்டியிற் கற்பூரம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் ஆகிய பொருட்களைக் கொண்டு செல்வர். அங்கு கமக்காரன் தலைப்பாகை கட்டி, விபூதி சாத்தி, கிழக்கு முகமாக நின்று கொண்டு இப்பண்டங்களை முன்னே வைத்து கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்துச் சூரியனைக் கும்பிட்டுத் தனது வயலும் நாடும் நல் விளைச்சல் பெற, நற்கதி அருள வேண்டி நிற்பான். பின்னர் பூட்டப்பட்ட ஏரினை வாங்கி உழுவை தொடக்கி வைப்பான். இதனைத் தொடர்ந்து ஏனைய மாடுகள் பின் செல்லும். இத்தகைய வைபவம் கூட்டாக முயற்சி மேற்கொள்ளப்படும் பொழுதும் பண்ணையாரின் கீழ் முயற்சி மேற்கொள்ளப்படுவதே வழமையாகும். தனி மனிதனும் சூரியனை வேண்டியே விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றான்.

சூரியனை வேண்டுதலுடன் மிக நம்பிக்கைகளும் பெரும் விளைவினைத் தருமென நம்புகின்றனர். ஏரின் பட வாழ் பாலை மரத்தினாற் செய்யப் பெற்றதாய், மொழி பங்கிராய்யினாலானதாய், கிட்டி பண்ணை மரத்தினதாய், நுகம் புன்னை மரங்கொண்டதாய், களக்கட்டை கார மரத்தினதாய், வேலைக்காரன்தடி காஞ்சுரம் மரத்தினதாய், இருப்பதோடு நத்தை புலித்தோலினதாய், முட்டான் கயிறு பொன்னாலதாய், இவற்றுக்கு மேலதாய் மாடுகள் மாமனும் மருமகனுமாய் என்ற உறவினை உடையனவாக இருத்தல் வேண்டும் என்று நம்பினர். இத்தகைய சிறப்பியல்புகளை உடையவற்றை வயல் நிலத்திலே இறக்கி ஏர் பூட்டி உழுவதன் மூலம் பெரும் பயனை எதிர்பார்த்தனர். இவற்றை முழுமையாக எல்லா ஏர்களுக்கும் பயன்படுத்த முடியாத பொழுதிலும் சில பண்ணையாளர்கள் முறைக்காக, இத்தகைய ஒழுங்கு முறைக்கமைந்த விதிகளைக் கடைப்பிடிக்கவே செய்தனர். இதனை வன்னி மக்கள் ஒரு வாய்ப்பாட்டாக பின்வருமாறு உரைப்பர்.

பாலை பட வாழ்
பங்கிராய் மொழி
பண்ணை கிட்டி
புன்னை நுகம்
காரை கனக்கட்டை
காஞ்சூழ் வேலையாள்
பொன் முட்டான் கயிறு
புலித்தோல் நத்தை
மாமனும் மருமகனும்

யாழ்ப்பாண விவசாய மக்கள் மத்தியிலும் இத்தகையதோர் நம்பிக்கை உண்டு. ஆனால் உபயோகப்படுத்தப் படும் பொருட்களில் சில வேறுபாடுகள் உண்டு.[4] அவை பிரதேச இயற்கை வளங்களுக்கேற்ப மாறுபட்டு அமைகின்றது. பண்ணையான் தான் உழவை ஆரம்பித்து வைக்கும் பொழுது இவ்வொழுங்கிற்கமைந்த ஏரினையே பிடித்து உழ ஆரம்பித்து வைப்பார். பின் அவற்றைக் கொண்டு சென்று விடுவான். இவற்றை ஒரு பெரும் பண்ணையாளனாற் செய்ய முடிந்தது. தவிர ஒரு சாதாரண வன்னி விவசாயியாற் செய்ய முடியவில்லை. நம்பிக்கையின் சின்னமாக இவற்றை பண்ணையாளன் வருடந்தோறும் கடைப்பிடித்தே வந்தான்.

வன்னிமைகளில் இருவகை முறையில் நெற்பயிர் செய்கை பண்ணப்படுகின்றது. 1. புழுதி விதைப்பு, 2. பலகை அடிப்பு. புழுதி விதைப்பென்பது நிலையெடுப்புடன் பலமுறை நிலத்தை மறுத்து உழுது விதைப்பதாகும். பலகை அடிப்பென்பது, வயல் நிலங்களை புழுதியில் உழுதும் தண்ணீர் விட்டுக் கட்டியும் பலமுறை உழுது கலக்கி பலகை கொண்டு தடவி விதைப்பதாகும். இப்பலகை வள்ளக்கைக் கொண்டு அமைந்திருக்கும். பூவரசு, தவிட்டை, விண்ணாங்கு முதலான மரங்களால் இவற்றை உருவாக்குவார்கள். விதைக்கும் பொழுது செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் உள்ள சுபதினத்திலே விதைப்பு ஆரம்பிப்பார்கள். செவ்வாய்கிழமை விதைப்புக்குகந்த நாளல்ல என்பது இவர்களின் நம்பிக்கை. இதனாற் போலும் 'செவ்வாயில் வித்தும் புதனில் அருவியும் ஒவ்வாதவன் செயல்' என்னும் முதுமொழி மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது. நெல் விதைத்து அறுவடை செய்யும் காலம் வரையுள்ள காலப்பகுதியில் நெல்லின் வளர்ச்சிப்பருவங்களைக் குருத்து, பூ, கம்பி, குடலை, காய்நெல்லு, பெரும்பழுப்பு, தாய்நெல்லு, தலைசாய்தல், பழுத்தல் என அழைப்பர்.

நெல் பயிராக இருக்குங் காலங்களில் காலநிலை மாற்றங்களும் பூச்சி, புழு முதலான ஜந்துக்களின் தாக்கமும் பயிரின் வளர்ச்சியினைத் தடை செய்து விடுகின்றன. காலநிலை மாற்றங்களுக்கு மனிதன் கட்டுப்பட்டதனால் அதை அவனால் வெல்லுதல் முடியாது. இந்நிலையில் மனிதனுக்குப் பொறுமையும் உறுதியும் கொண்டு இறைவனை வேண்டுதலே வழி தவிர பயிர்களை காலநிலை மாற்றங்களில் நின்று காப்பாற்ற வேறு வழிகள் இல்லை. ஆனால் பயிரைத் தாக்கும் குத்துப்புழு, மடிச்சுக்கட்டி, கொப்புப்புழு, குலைஈச்சன், கூழைவாயன், குறுங்களுத்தன், தத்துவெட்டியான், வேர்க்கறையான், முதலான புழுக்களையும் எலிகளையும் கட்டுப்படுத்த வன்னி மக்கள் பல வழி முறைகளைக் கையாண்டனர். அவற்றிலே குறிப்பிடத்தக்கன 1) பெருந்தெய்வங்களுக்கோ காவற் தெய்வங்களுக்கோ நேர்தல், 2) வயற் காவற்தெய்வத்திற்குப் பொங்கித் தெளித்தல் 3) பூசாரியைக் கொண்டோ மந்திரித்துத் தெளித்தல் என்பனவாகும்.

நேர்த்திகளை நெல் அறுவடையின் பின் செய்து முடிப்பர், நோய் தீவிரமாக பரவுங் காலத்தில் காவற் தெய்வங்களுக்குப் பொங்கித் தெளிப்பர். வயல் நிலங்களின் காவல் தெய்வமாக விநாயகர் விளங்குகிறார். மற்றும் சந்நியாசி, அண்ணாமார், முதலான தெய்வங்களும் வயல்நிலகாவல் தெய்வங்களேயாகும். வயல்நிலங்களில் நோய்காணப்படும் பொழுது அவ்வயல் நிலங்களுக்கு உட்பட்ட கமக்காரர்கள் அனைவரையும் அழைத்து ஒருநாளைக்குறிப்பிட்டுப் பொங்கல் நடத்துவர். பொங்கலின் போது மீட்ட பாலினைத்தனியே எடுத்து வைத்திருப்பர். பொங்கல் முடிந்ததும் ஒருவர் மீட்ட பாலைச்சட்டியுடன் அப்படியே தூக்கி ஒரு கண்டாயத்தில் இருந்து புறப்பட்டு நான்கெல்லையும் தெளித்துக் கடைசிக் கண்டாயத்தால் சட்டியை அவ்விடத்திலே கவிழ்த்து விட்டு விட்டுப் பாராது புறப்படுவார். மூன்று அல்லது நான்கு நாட்கள் சென்றதும் அவர் புறப்பட்ட கண்டாயத்தால் திரும்பப் புறப்படாமல் பிறிதோர் கண்டாயத்தால் சென்று பார்க்கும் பொழுது ஒரு புழுக்களும் ஜந்துக்களும் இருக்க மாட்டாதென நம்பினர். நம்புகின்றனர். மீட்ட பால் தெளிக்கும் பொழுது குலதெய்வமே இக்கொடிய பூச்சி புழு முதலான ஜந்துக்களில் நின்று பயிர்களுக்கு நோய் வராது காத்தருள்வாயென வேண்டிக்கொள்வர்.

மந்திரித்தல் என்பது மந்திரத்தை நீரில் ஓதிக் கொடுத்தலாகும். இதனை கமக்காரன் செய்வதில்லை. ஆலயங்களில் பூசாரியார் ஓதிக்கொடுத்ததையோ ஆலய விழாக்களின் பொழுது பூசாரியார் ஓதிக் கொடுத்ததையோ கொண்டு சென்று தெளிப்பர். சில சமயங்களில் மந்திரவாதிகளைக் கொண்டு மந்திரித்துத் தெளிப்பதன் மூலம் பூச்சி புழுக்களை இல்லாமல் செய்யலாம் என்றும் நம்புகின்றனர். பூசாரியோ மந்திரவாதியோ பின்வரும் மந்திரங்களை உச்சாடனம் செய்து மந்திரித்துக் கொடுக்கும் பொழுது பூசசி புழுக்களும் எலிகளும் மறைந்து விடுகின்றன என நம்புவர் வன்னி மக்கள். பூச்சி புழுக்களை இல்லாமல் செய்வதற்கு

ஓம் விலும்லோகம் விட்டுணுலோகம் நாகலோகம் சந்திரலோகம்
தேவலோகத்துக்குட்பட்ட புழுக்கள் எல்லாவற்றுக்கும் தம்பிரானிடத்தே
சென்று தம்பிரானருளிச் செய்த படியால் கள்ளி வனத்துட்
சென்று கள்ளி வெட்டிச் சுட்டுப்போடச் சொன்ன படியால் நானும்
வாயிலே நெருப்பும் அக்குமாலையுமாய் நின்றேன். குத்துப்புழு மடிச்சுக்கட்டி,
கொப்புப்புழு, குழைஈச்சன் கூழைவாயன், குறுங்கழுத்தன்
வில்லூன்றி வேர்க்கறையன், கந்தப்புழு, தத்துவெட்டியன் எப்பெயர்பட்ட
புழுக்களெல்லாம் இப்புனம் விட்டு அப்புனம் போகவே சிவாகா

என்ற மந்திரத்தை ஓதிக் கொடுப்பவர் எலிகளின் பாதிப்பினின்றும் வயல்களைப் பாதுகாப்பதற்கு பின்வரும் மந்திரங்களை ஓதுவர்.

1. ஓம் எலியனார் பிள்ளை புலியனார் வாரார் புணையனார் காவல் எலிகளெல்லாம் கட்டி அப்புறம் போகவே சிவாகா!
2. ஓம் எலியனார் பிள்ளை அனையனார் காவல் எலி நெற்புலம் விட்டு புறப்புலம் போகவே சிவாகா!

3. ஓம் எலியனார் பிள்ளை புலியனார் வாரார் புலையனார் காவல் எலி இப்புலம் விட்டு புறப்புலம் போகவே சிவாகா!

4. ஓம் இந்திரபுரத்தில் எலிப்புலி வாரார் எலிப்புலம் விட்டு அப்புறம் போகவே சிவாகா!

இத்தகைய மந்திரங்கள் வன்னிமை மக்களாலும் பொதுவாக ஈழத்துத்தமிழ் மக்கள் வாழும் பிரதேசமெங்கிலும் வாழும் தமிழ் மக்களால் (மந்திரம் தெரிந்தோர்) ஓதப்பெற்று வருவதாக அறிய முடிகின்றது.

**புதிர் எடுத்தல்**

ஆவணி முதல் ஐப்பசி வரையுள்ள காலப்பகுதியில் விதைக்கப்பட்ட நெல் தை பிறந்ததும் அறுவடைக்கு உட்படுத்தப்படும். அறுவடைக்கு முன்பாக புதிர் எடுக்கும் சடங்கு நடைபெறும். இச்சடங்கு அன்றும் இன்றும் சிறப்பாகவே நடை பெற்று வருகின்றது. நல்ல சுபதினத்தில் இக்கருமத்தை நடத்துவர். இம்மக்களிடத்தில் 'வியாழன் அறுப்பும் வெள்ளி அடிப்பும்' என்ற பழமொழி வழக்கில் உண்டு. அதற்கிணங்க பெரிதும் வியாழக்கிழமையிலேயே இச்சடங்கினை நடத்த முற்படுவர்.

புதிர் எடுக்கச் செல்வதற்கு முன்பாக தமது உறவினர் சிலருக்கு புதிர் காய்ச்சப்போகிறோம் என்பது பற்றி அறிவிப்பர். புதிர் எடுக்கப்போகும் போது புதிய பெட்டி தாழ்க்கத்தி கற்பூரம் தேய்காய் வாழைப்பழம் என்பவற்றை எடுத்துப் பெட்டியினுள் வைத்து வெள்ளைத் துணியினால் மூடிச் செல்வர். வயலில் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்துக் கிழக்கு முகமாக நின்று கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து நன்கு முற்றிய அருவியைப் பார்த்து உட்பட்டிகளாக வெட்டிக் கொண்டு வருவார்கள். புதிர் எடுப்பதற்கு விடிய முன்னரே சென்று விடுவார்கள். பிறரின் கண்ணூறு படக்கூடாதென்பதே இதன் நோக்கமாகும். வயலில் இருந்து புதிரைக் கொண்டு வரும் பொழுது வீட்டினுள்ளோரும் உறவினரும் மாவிலைத் தோரணம் கட்டி பிள்ளையார் பிடித்து கும்பம் வைத்து குத்துவிளக்குக் கொழுத்தி வரவேற்பர். புதிரை கும்பத்தின் முன் வைத்து வணங்கிய பின்னர் அதிற் சிறு பகுதியை எடுத்து வீட்டின் தலைவாசலின் முன்போ நடுவீட்டிலோ வட்டமாகக் கட்டித் தூக்கி விடுவர். மறுபகுதியை புதிர் காய்ச்சுவதற்காக எடுத்துக் கொள்வர். புதிரைத்தட்டிக் கசக்கி நெல்லாக்கி, மாவிலை கட்டி உரலில் போட்டு இடித்து அரிசியாக்கி அதைப் புதுப்பானையில் பால் சர்க்கரை முதலியவற்றுடன் கலந்து பொங்கி வீட்டினுள்ளே படைப்பர். படைக்கும் பொழுது தமது முன்னோர்களுக்கு ஒரு படைப்பு, வீட்டிற்காக ஒரு படைப்பு, வயற் தெய்வத்திற்காக ஒரு படைப்பு, என மூன்று படைப்புக்கள் படைப்பர். சில சமயங்களில் எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரு படைப்பை படைப்பர். படைப்பை வயதில் முதிர்ந்த ஆண் கமக்காரர் நடத்துவர். படையில் தயிர், நெய், பழவகைகள் யாவும் வைக்கப்படும். படைப்பன் திருமுறைகளை ஓதி படைப்பினை முடிப்பர். பின்னர் அவற்றில் ஒரு படைப்பினை எடுத்து படைப்பிலே படைக்கப்பட்ட எல்லாவற்றையும் ஒன்றாகப் பிசைந்து குழைத்து வீட்டினுள்ள முதியவருக்கு முதற் குழையலைக் கொடுப்பர். அவரும் தம் முன்னோர்களையும் இறைவனையும் நினைத்து கிழக்கு அல்லது வடக்கு நோக்கிய வண்ணம் நின்று மிகுந்த பக்தியுடன் வாங்கிக் கொள்வார். பின்னர் படிப்படியாக ஒவ்வொருவராக எல்லோருக்கும் கொடுத்து உண்டு மகிழ்வர்.

வீட்டிற்கு விலக்காக (துடக்கு) இருக்குங் காலங்களில் புதிர் காய்ச்சுதலை ஆலயங்களிலே நடத்துவர். உடனடித் தேவைக்கு நெல் தேவைப்பட்டால் முறைப்படி புதிரை எடுத்து வந்து கும்பத்தில் வைத்து கசக்கி கழுவிய பின் அந்நெல்லினைப் பாலில் போட்டு கலந்து குடிப்பதன் மூலம் புதிரை முடித்துக் கொள்வர்.

**பரத்தை வெட்டு :-**

தை பிறந்ததும் வன்னியில் அறுவடை ஆரம்பிக்கும். பெரும் கமக்காரன் தனது வயலில் அறுவடையை ஆரம்பிக்க வேண்டுமென்று நினைத்தவுடன் தனது கிராமத்திலோ அயற்கிராமத்திலோ உள்ள முதியவரிடம் ஏழு வெற்றிலை ஏழு பாக்கு ஏழு வாழைப்பழம் ஆகியவற்றைக் கொண்டு சென்று கொடுத்துப் பணிந்து தனது பயிர் விளைந்து விட்டது பரத்தை வெட்டவேண்டும் என்று குறிப்பிட்டு அதற்கான சுப வேளையையும் குறித்துச் சொல்லி விட்டுத் தமது இருப்பிடம் செல்வார். பின்னர் முதியவர் அயலவரை அழைத்து விடயத்தை விளக்கிக் குறிப்பிட்டு, கமக்காரன் வயலிற் சென்று நெல்லை வெட்ட ஆரம்பிப்பார். எல்லோரும் பாடிக் கொண்டே வெட்டுவார்கள். ஒருவர் மேளம் (மத்தளம்) அடிப்பார். வெட்டுவோர் பாட்டின் ஓசைத்தருவின் விறுவிறுப்புக்கேற்பவும் மிகுந்த விரைவாகவும் அமைதியாக களைப்பின்றி அருவியினை வெட்டி உப்பட்டிகளாக அடுக்கடுக்காக வெட்டிப் போட்டு கொண்டு செல்வர். இதனை பரத்தை போடுதல் என்பர். பாட்டுக்களின் போது பின்வரும் தருக்கள் மேலோங்கி நிற்கும்.

1. தெந்தென்னான தென தென்னான
   தென தென்னான தென தெனா
2. தெந் தென தென்ன தென தென தென்ன
   தென தெனத் தென்னத் தென்ன

அரிவியை வெட்ட ஆரம்பிக்கும் பொழுது பிள்ளையார் சிந்தினைப் பாட ஆரம்பிப்பார். காலை உணவு வரை சிவபெருமான் சிந்து, குவிப்பள்ளு, பண்டிப்பள்ளு ஆகியவற்றைப்படிப்பர். காலை உணவு மதிய போசனம் வரை ஐயனார் சிந்து, முருகன் சிந்து, நாகதம்பிரான் சிந்து, வன்னித்தெய்வச் சிந்து, அம்மன்சிந்து, விறுமன்சிந்து, வீரபத்திரன் சிந்து, வதனார்மார் சிந்து முதலானவற்றைப் படிப்பர். மதிய போசனத்தில் இருந்து மாலை வரை குதிரை மலைப் பள்ளுபடித்து முடிப்பர்.[6]

வயலில் அரிவி வெட்டுங் காலத்தில் கமக்காரன் வயலில் வெட்டுவோருக்கு எதிர் நோக்கி வருவாரானால், உப்பட்டியை அவர் முன் போட்டு மறித்து இடைமறித்து குற்றத்தை அவர் மேற் சுமத்தி, எல்லோரும் சூழ்ந்து அவர் செய்த குற்றத்திற்காக சில வேண்டுதலைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்வர். அதற்கு கமக்காரன் உடன்படவில்லையெனில் வெட்டு அப்படியே நின்று விடும். உடன்பட்டதும் வெட்டு தொடர்ந்து நடைபெறும். வெட்டி சூடு வைத்து முடிந்ததும் கமக்காரனுக்கு தலைப்பாகை கட்டி வழி நெடுக குழல் ஊதி அவ்வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.அங்கு நிறைகுடம் வைத்து, குத்துவிளக்குக் கொழுத்தி, பல்லோரும் வாழ்த்தி வரவேற்பர். பின்னர் கமக்காரன் பரத்தை வெட்டுவோரின் வேண்டுதலை அங்கு நிறைவேற்றி வைப்பான். பின் யாவரும் விருந்துண்டு புறப்பட்டுச் செல்வர்.[7]

சூடு வைக்கப்படும் இடம் களம் எனப்படும். சூடுகளத்தில் மேற்குத் திசையாகவும் தெற்குத் திசையாகவும் வைப்பர். ஏனெனில் மேற்கே வைத்த சூட்டினை வடக்கே சரித்து அடிப்பதற்கும் வாய்ப்பாகவும் இருக்கும் என்பதாலாகும். சூடு எப்பொழுதும் கிழக்குப் பக்கமாகவும் வடக்குப் பக்கமாகவும் தள்ளி அடிக்கப்பட வேண்டுமென்பது அவர்களது நம்பிக்கை. இந்நவீன யுகத்தில் இந்நம்பிக்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். சூடு அடிப்பதற்கு முன்பாக சூட்டுக்களத்தினை ஞாயிறு வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் நன்கு செதுக்கி சாணம் கொண்டு மெழுகுவார்கள். களம் எப்பொழுதும் வட்ட வடிவிதாகவே அமைக்கப்படும். முன்பு குறிப்பிட்டதுபோல 'வியாழன் அறுப்பு வெள்ளி அடிப்பு' என்பதற்கிணங்க வெள்ளிக்கிழமை வரும் சுபவேளையிலும் செவ்வாய், அமாவாசை, கரிநாள், அட்டமி முதலான நாட்களைத் தவிர்த்தும் சூடு போடுவார்கள். சூடு போடுவதற்கு முன்பாக ஆட்களையும் சாக்கு, சுழகு, மண்வெட்டி, கடகம், வேலைக்காரன், தடி, மாடு, தேங்காய், கற்பூரம், தண்ணீர் முதலான பொருட்களையும் ஒழுங்கு செய்வர். இதனை ஒழுங்கு செய்தல் அல்லது ஆயத்தம் செய்தல் என்று அழைப்பர். கேட்டி, களந்தட்ட ஆகிய பொருட்களை வயலின் சுற்றுப்புறக் காடுகளில் வெட்டிக் கொள்வர். இத்தகைய பொருட்கள் களத்துக்குக் கொண்டு சென்றதும் சில நம்பிக்கையின் பேரில் சிறப்பான குழு உக்குறிச்சொற்கள் கொண்டு வழங்குவர். இத்தகைய சொற்கள் மட்டக்களப்பு மக்களின் சமுதாய மரபிலும் வன்னி மக்களின் சமுதாயமரபிலும் ஒன்றிணைந்தும் மாறுபட்டும் காணப்படுகின்றது. சொற்கள் மாறுபட்டாலும் அவை உணர்த்தும் பொருள் மரபுகளும் நம்பிக்கைகளும் ஒரே அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டனவாகவே அமைகின்றன. சூடு அடி காலத்தில் பெண்கள் களத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.[8]

சூடு அடிக்கும் களம் வட்டம் வடிவினதாய் பல அளவுத்திட்டங்களுக்கு உட்பட்டதாய் அமைந்திருக்கும். அளவுத்திட்டம் சூட்டின் அளவிற்கு மாறுபட்டு அமையும். சுமார் 10-15 அடி வரை அதன் விட்டம் அமைந்திருக்கும் களத்தின் நடுவே இரண்டு தொடக்கம் இரண்டரை அடி ஆழத்திற்கு களக்கட்டை நடுவதற்கு கிடங்கொன்று தோண்டி வைத்திருப்பர். சூட்டுக் களத்திற்கு அடுக்குகளைக் கொண்டு சென்றதும் தேவகணங்களை அமைதிப்படுத்துவதற்காக சிறுபொங்கல், படையல் ஆகிய சடங்குகளை நடத்துவர். இச்சடங்குகளைச் சரியாக முடிக்காவிட்டால் இத்தேவ கணங்கள் பொலிகளைக் கொண்டு சென்று விடும் என்பது இவர்களது நம்பிக்கை. பிள்ளையாருக்குப் பொங்கலும் ஐயனாருக்கு மடையும் போடுவார்கள். நரசிம்மன் சந்நியாசி, காளி, வன்னியர் முதலான தெய்வங்களுக்குப் பத்திரிக்குழை, தேங்காய், வாழைப்பழம், சாராயம், பொரியல் முதலான பொருட்களை வைத்து வழிபடுவர். பிற்பாடு பிள்ளையார் பொங்களில் மீட்ட பாலினைக் கொண்டு வந்து களக்கட்டைக் கிடங்கினுள் விட்டு, களக்கட்டைக்கு விபூதி, சந்தனம் சாத்திக் கட்டையினை நடுவர். பின்னர் கமக்காரன் களத்திற்கு வந்து கிழக்கு முகமாக நின்று, கற்பூரம் கொழுத்தி, தேங்காய் உடைத்து வேலைக்காரன் தடியால் மேற்கு வடமேற்குப் பக்கமுள்ள சூட்டிலிருந்து நெல்லை எடுத்து 'பொழிதாயே பொழி' 'பொழிதாயே பொழி' என்று சொல்லியும் அல்லது மட்டக்களப்பு மணற் கும்பல் போலே 'வாரி பொழிதாயே பொழி' என்று சொல்லி கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கிக் களத்தின் நடுவில் மூன்று முறை அடிப்பர்.[9] இவ்வாறு மூன்று துறை கமக்காரன் அடித்ததும் எல்லோரும் சேர்ந்து சூட்டினை அள்ளி களத்திற் போடுவார்கள். சூடு தள்ளும் போது வலது பக்கமாகத் தள்ளியே அடிப்பர். சூட்டின் எண்ணிக்கை அதிகரித்தாலும் வலது பக்கமாகவே தள்ளி அடிப்பர். வடதிசையும் கிழக்குத் திசையும் மங்களமான திசை என்பதில் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சூடு தள்ளியதும் ஒற்றைப்பட்ட எண்ணிக்கைகளைக் கொண்ட பிணையல்களைக் களத்தில் இறக்குவர். குறிப்பாக 5,7,9 என்ற பாங்கில் பிணையல்கள் அமையும். பிணையல் களத்தில் இறக்கப்பட்டதும் களத்தினைச் சுற்றி கந்தினால் சுற்றிக் கட்டிடுவர். அவற்றில் கண்டாயம் விட்டிருப்போர், களத்தில் இறங்கியோர் எவ்வித காரணமும் கொண்டு களத்தினை விட்டு வீட்டிற்குச் செல்ல முடியாது, வீட்டினுள்ளோரோ,பிறரோ கந்தினைக் கடந்து களத்திற்குச் செல்ல முடியாது, அவ்வாறு சென்றால் அவர் திரும்ப வீட்டிற்கும் செல்ல முடியாது, சாப்பாடு வீட்டிருந்து வரலாம். கொண்டு வருபவர். களத்தினுள் செல்ல முடியாது. மாடுகளை வளைக்கும் பொழுது சிந்து பாடி ஓலம் எழுப்புவர். வீட்டுப் பேச்சுக்கள் அங்கு இடம்பெறும். களக் கழு உக்குறிப் பேச்சுக்களே அங்கு இடம் பெறும். அமுது, அரைவயிறன், இளைஞன் தோல்வாயன், ஓலம், கலங்கன், கலங்கன் முகாவை, கடகப் பெருவாயன், கந்து,

களம், குஞ்சுவாயன், குளரி, கூழம், சூட்டுக்கம்பு, சவளம், கிளவன், பொழி, கருங்களம், கட்டுக்களம், கொல்லன், கொம்பு, சூடு, சூழ், கட்டையடிப்போலன், தலைப்பொலி, கரவன் மதிப்பு, நடையன், பல்லிளிச்சான், வெள்ளோடன், பொல்லொடுவன், கொட்ட மீங்க கூங்கையன், வண்ணரமாடன், கட்டையடி நடையன், வாட்டி நடையன், வாட்டியான், பாசம், அமுக்கினி, பொற்கும்வம், பொலிக்கொடி, பெரியபோலன், சின்னப்போலன், போலன், போர், போர்க்குட்டி,பட்டறைப் பெருவாயன், பொலிமிலாறு, வரதராசன், வாயுதாசன், வருடல், கொட்டைபொலி, கடற்கரும்பு, வெளிச்சக்காரன், எடுவான், படுவான், பிள்ளையார் கோலன், ஒட்டுக்கலன், குவரி போர்க்குட்டி, பெருக்கு கந்துமுறி, துக்கம் பொல்லிடுவான் கண்டாயம், குல்லம் முதலான உக்குறிகளாக[10], இடம் பெறுவது வழக்கம். சூட்டடிப்பின் முடிவில் வைரப்பொலியின் முதல் அளவைப் பொலியைத் தனியாக எடுத்து 'கோயில் நெல்' என்று சொல்லி வைத்து விட்டு, ஏனையவற்றை தோல்வாயனில் போட்டுக் கட்டுவர். பின்னர் படைப்புக்கு வைக்கப்பட்டி ருந்த மதுப் பொருட்களைப் பருகி மகிழ்வுற்று செல்வர்.

சூட்டினை அடிக்க முற்படும் பொழுது நல்ல நாளையும் சுபவேளையையும் பார்த்தே சூட்டினைத் தள்ளுவர். இவற்றிலே வியாழனும் வெள்ளியும் சூடு அடிப்பதற்கு சிறந்த நாட்களாக கணிப்பதோடு கூடிய பொலியினையும் கொடுக்கும் என்று நம்புகிறார்கள். ஏனைய ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் கூடிய பலனைத் தரமாட்டாது என்பது இவர்களது நம்பிக்கை. இந்நாட்களில் சூடு மிதித்தல் தேவதைகள் ஒவ்வொரு நாளுக்கு அண்ணளவான பங்கினைக் கொண்டு சென்று விடும் என நம்புகின்றனர். குறிப்பாக ஞாயிற்றுக்கிழமையில் விளைவின் பதினொன்றும், திங்கட்கிழமையில் பதினொன்றில் ஒன்றும், செவ்வாய்க்கிழமையில் எட்டிலொன்றும், புதன்கிழமையில் மூன்றிலொன்றும், இருபதிலொன்றும் மொத்தப் பொலியின் கழிவாகச் சென்று விடும் என நம்புகின்றனர். இதனாலே இவற்றைக் கழிநாள் என்பர். யாழ்ப்பாணக்குடாநாட்டு விவசாய மக்களிடத்திலும் இத்தகைய நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

'இரவியில் பத்திலொன்றும்
இந்து பன்னொன்றிலொன்றும்
வருபுதன் மூன்றிலொன்றும்
மண்மகற் கெட்டிலொன்றும்
இருபதிலொன்றுங் காரிக்கியற்புடைக்
கூளிகொள்ளும்
குருபுகார் இரண்டும் நன்றாம்
கொழுஞ் சூடுமிதிப்பதற்கே ''என்பது வன்னி யாழ்ப்பாண மக்களது வாய்மொழியாகும்.''

வீட்டிற்குக் கொண்டு வரப்பெற்ற நெல்லை வன்னி மக்கள் இரண்டு வழிகளில் பேணுவர். அவை 1) நெல்லுப்பட்டடை 2) கொம்பறை என்னும் இரண்டுமாகும். நெல்லுப்பட்டடை என்பது பறன் அமைத்து அவற்றிலே வைக்கோலை நன்கு பரவி, வைக்கல் கத்தைகளை நாலாபக்கமும் அடுக்கி, உயர்த்தி அதனுள்ளே நெல்லைப் போட்டுப் பின் வைக்கல் கத்தைக் கொண்டே மூடி, முடிவில் வைக்கலால் வேய்ந்து விடுவர். இவற்றில் இடப்படும் நெல் பல வருடங்களுக்குப் பழுதடையாது இருப்பதுடன் எவ்வித பூச்சி புழுக்களும் குத்திச் சேதப்படுத்தா வண்ணம் பாதுகாக்கப்படும்.

கொம்பறை என்பது களிமண்ணால் ஆக்கப்படும் சிறிய குடில் வடிவம் போன்ற சுமார்10 அடி - 12 அடி உயரமுடையவையாக இருக்கும். வட்ட வடிவினதாய் கழுத்தற்ற பானை போன்ற அமைப்புடையதாய் கம்புகள் வைத்துக் கட்டப்பட்டதாய் இருக்கும். அதில் பல பொருட்களை வைத்தெடுப்பர். கொம்பறையிலோ நெல்லுப்பட்டடையிலோ நெல்லைப் போடுவதற்கு முன்பாக பொங்கல் நடத்தி சூரிய வணக்கம் செய்த பிற்பாடே நெல்லை அதனுள் போடுவார்கள். கொம்பறைகளை 500 மரக்கால் நெல் போட்டு பாதுகாக்கக்கூடியதாக அமைக்கப்படுவது வழமையாகும். இதன் மூலம் நெல், பூச்சி, புழு, எலி முதலான ஜந்துக்களால் ஏற்படும் தீங்கிலிருந்து பாதுகாக்க முடிகின்றது, கொம்பறையினுள் நெல்லைப் போட்ட பிற்பாடு சிறிய குடிலால் அதனை வேய்ந்து விடுவர். நெல் வேண்டும் பொழுது குடிலை நீங்கி நெல்லைப் பெற்றுக் கொள்வர். கொம்பறையில் பாதுகாக்கப்படும் நெல்லைப் புழுதின்றி நீண்ட காலத்திற்கு வைத்திருப்பர். வன்னி மக்களால் கண்டு பிடிக்கப்பட்ட சிறந்த கருவிகளுள் நெற்பட்டையமும் கொம்பறையமும் குறிப்பிடலாம். இன்றும் வன்னிமக்கள் தங்கள் இல்லம் தோறும் இவ்வழமையினை பேணியே வருகின்றனர். வீட்டின் முன்பக்கமாக இவற்றைக் கட்டிப் பேணுவர். இவற்றைச் சரிவர பேணுவதன் மூலம் தமது இல்லங்கள் தோறும் இலட்சுமி நிரந்தரமாக குடிகொண்டிருப்பாளென்பது இவர்களின் பூரணமான நம்பிக்கை.

பொதுவாக இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூறுவரை வன்னி மக்களின் விவசாயச் சடங்குகள் யாவற்றிலும் இறை நம்பிக்கையும் அவற்றைப் பெறுவதற்கான சடங்குகளும் ஒன்றுடன் ஒன்று இணைபிரியாதனவாய், முக்கியத்துவம் பெற்று விளங்கின என்பது உண்மை. இன்று வன்னிமைகள் யாவும் மிகவும் துரிதமாக பொருளாதாரம், கல்வி, அரசியல் முதலான துறைகளில் முன்னேறி வருகின்றன. வன்னிமையில் பொருளாதாரம் விவசாயத்துறையிலே தங்கி

இருக்கின்றது. 19 ஆம் நூற்றாண்டில் வன்னிமையின் பொருளாதார நிலைக்கும் இன்றைய நிலைக்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகின்றது. 19 ஆம் நூற்றாண்டில் வன்னி மக்கள் குளத்தின் கீழ் சிறு தொகையினை உடையோராய், சிறிய நிலப்பரப்பில் விவசாயத்தையும் மந்தை வளர்ப்பையும் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். தமது சுயதேவையைப் பூர்த்தி செய்வதையே பெரு நோக்கமாகக் கொண்டனர். பெரு வருவாயை எதிர்பார்க்கவில்லை. இதனால் மரபு வழிச் சடங்குகளைத் தக்கவாறு பேணிப் பாதுகாத்துத் தமது நோக்கினை நிறைவேற்றி வந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வன்னிமை மக்களின் சமூக பொருளாதார அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனாலே இவர்களால் மரபு வழி பேணப்பட்டு வந்த விவசாயச் சடங்குகளைப் பெரிதும் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகையதோர் நிலைக்கு சமூக அசைவியக்கத்தினைப் பிரதான காரணமாகக் குறிப்பிடலாம். அதற்கு வன்னிமைகளில் அமைந்த குளங்களின் கீழ் புதிய குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட்டு அங்கு யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் குடியமர்த்தப்பட்டமையும் அவர்களின் தேவைக்கு ஏற்ப பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், நிர்வாக மையங்கள், புதிய வீதியமைப்புக்கள், போக்குவரத்துச் சேவைகள் முதலானவை ஏற்படுத்தப்பட்டமையும் விவசாயத்துறையில் ஏற்பட்ட புதிய மாற்றங்களை குடியேற்றவாசிகள் விரும்பி ஏற்று செயல்பட்டமையும் குறிப்பாகப் புதிய இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல், நோய்களுக்குக் கிருமிநாசினிகளைத் தெளித்தல், உற்பத்திப் பெருக்கத்தின் பொருட்டு புதிய உரவகைகளை உரமிடுதல் முதலான நவீன முறைகளைப் பயன்படுத்தியும் தம்மையும் வன்னிமைகளையும் துரித முன்னேற்றத்திற்கு வழிவகுத்தனர். இந்நிலையில் வன்னிமை மக்கள் இப்புதிய பொருளாதார அமைப்பை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியத்தை வற்புறுத்திற்று.

வன்னிமைகளில் ஏற்பட்ட குடியேற்றத்திட்டம் காரணமாக யாழ்ப்பாண மக்களின் குடிசனத்தொகைப் பெருக்கம் வன்னிமை மக்களைக் காட்டிலும் பல மடங்காக அதிகரித்தது. இதனாலே வன்னிமைகள் யாழ்ப்பாண (சமய) கலாசாரப் பாரம்பரியத்திற்கு உட்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. யாழ்ப்பாணச் சமூகத்துடன் விரும்பியோ விரும்பாமலோ உறவு கொள்ள வேண்டிய தேவையும் அவர்களால் பின்பற்றப்பட்டு வந்த சமய பாரம்பரியத்தைப் பேணவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதனாலே வன்னிமை மக்களால் வழமையாகப் பேணி வந்த கிராமிய வணக்க முறைகளும் சடங்குகளும் நம்பிக்கைகளும் கைவிடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இம்மக்களிடத்தில் இச்சமய சிந்தனை மாற்றங்களைச் சமஸ்கிருத நெறிப்படுகை என்ற மேநிலைப்பண்பாட்டை உணர்ந்து கொண்டதால் ஏற்பட்டதென்று யாரும் வாதிட முடியாது. ''யாழ்ப்பாண சமூக சமய கலாச்சார பாரம்பரியம்'' என்ற மேலைப்பண்பாடே இம்மாற்றங்களை இம்மக்களிடத்தில் ஏற்படுத்தியது எனக்கூறல் மிகையன்று.

ஆயினும் வன்னிமை மக்கள் தம்மால் பின்பற்றி வந்த விவசாய சடங்கு முறைகள் யாவற்றையும் அடியோடு கைவிட்டனர் என்று கூறுவதற்கில்லை. நாள் பார்த்தல், புதிர் எடுத்தல், சூடு வைத்தல், சூடு மிதிப்பின் போது சில குழுஉட் குறிகளைப் பேணல், பொங்குதல் முதலான அம்சங்கள் வன்னிமை மக்களின் விவசாயச் சடங்குகளின் எச்சங்களாக மிளிர்கின்றன. இத்தகைய தன்மைகள் யாழ்ப்பாணத்து விவசாயிகளாலும் பேணப்பட்டு வருவது இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும். இவை பொது நிலை சார்ந்த அம்சம் என்லாம். பொதுவான பண்பாட்டு விழுமியங்கள் பண்பாட்டு மரபுகளை ஒழுங்காக கடைப்பிடிக்கவும் சமய நம்பிக்கைகளைப் பேணவும் உதவுகின்றன. அவ்வகையில் வன்னிமைச் சடங்கு முறைகள் புறநடைகளல்ல.

### அடிக்குறிப்புக்கள்

1. கணபதிப்பிள்ளை க. ஈழத்து வாழ்வும் வளமும், பாரிநிலையம், சென்னை, 1962,பக்.117
2. நாய்ச்சி, தலைவி, அரசி
2. நாய்ச்சி, நாய்ச்சிமார், தலைவி, பெண்தெய்வம், (சைவசித்தாந்தக் கழக வெளியீடு, கழகத்தமிழ் அகராதி, 1969, பக் 97)
3. பட்டினப்பாலை, அடி, 250
4. நெடுநெல்வாடை, அடி,165
5. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய், 59
6. வித்தியானந்தன் சு. தமிழர் சால்பு, சாரதாவிலாஸ் அச்சுக்கூடம், கும்பகோணம், 1954, பக் 126
7. மாயோனட மேயக் காடுறை யுலகமும்
   சேயோன் மேய மைவரை யுலகமும்
   வேந்தன் மேய தீம்புன லுலகமும்
   வருணன் மேய பெருமண லுலகமும்
   முல்லை, குறிஞ்சி, மருத நெய்தல் லெனச்
   சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே
   
   (தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்,5)

8. வித்தியானந்தன் சு. தமிழ் சால்பு 1954, பக் 106-107
9. சீனிவாசன் இரா. சத்தி வழிபாடு, ஸ்டார் அச்சகம், திருநெல்வேலி, 1975, பக் 16,17
10. மேலது நூல், பக் 17
11. கண்டியில் திசாவாக இருந்த வன்னியனே சிங்கள மக்கள் மத்தியில் வன்னியர் குலம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தான் என்பது வரலாற்று ஆசிரியர்களின் முடிவாகும்.
12. கணபதிப்பிள்ளை க. ஈழத்து வாழ்வும் வளமும், 1962,பக். 119
13. வையாபாடல், 1980, செய் 21, பக் 56-75
14. கணபதிப்பிள்ளை க. ஈழத்து வாழ்வும் வளமும், 1962,பக்.119
15. மேலது நூல், 1962
16. முனிசாமி முதலியார், பிரபஞ்ச உற்பத்தி, பக் 490
17. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கருணை மலர், கண்ணகி அம்பாள் பரிபாலன வெளியீடு, மெய்கண்டான் அச்சகம், கொழும்பு, 1978,பக்.74
18. அருணாசலக் கவிராயர் வட்டுவாகலில் பிறந்தவர். இவர் ஒரு அண்ணாவியார், நாடகாசிரியர், கோவலன் கூத்து, காத்தவராசன் கூத்து முதலான கூத்துக்களை மேடையேற்றியவர், சிறந்த கவிஞர்.
19. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கருணை மலர், 1978,பக்.74
20. மேலது நூல்,
21. பேர் கொண்ட முருகேசர் தெய்வயானை வள்ளியும்
பெருமையுறு வடுகேசனும் பிரபலம்புரி வீரபத்திரனும்
மரியனும் மாரியும் மகனாம் காத்தவராசக் கடவுளும்
கருங்கறுப்பினொடு குருநாத சுவாமியும்,
கன்னிமார் நாச்சிமாரும்
பேர் விண்ட தேனினருள் புரிந்தெம்மை யாளுகின்ற
பொற்பினுடை னிரு பாதமே போற்றினன்
வருதுயர் கடிந்தீர்த்து நித்தமும்
கருணை பொழியுமுகிலென வருவைதே
(சிங்க ராசாவின் கொப்பி புதுக்குடியிருப்பு)
22. நீலகண்ட சாஸ்திரி, கே. என்
23. ஸ்ரீனிவாசன், இரா.பி. ஆர். நாம் வணங்கும் தெய்வங்கள், சென்னை, இளங்கோ பதிப்பகம் 1959,பக்.36
24. சீனிவாசளன் இரா.சத்தி வழிபாடு, 1975,பக்.33
25. மேலது நூல், பக். 33
26. முனிசாமி முதலியார், பிரபஞ்ச உற்பத்தி, பக். 459
27. 'சிவனுக்கும் அந்தகாசுரனுக்குமிடையே ஏற்பட்ட போரில், அந்தகாசுரனின் உடலிலிருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் மற்றொரு அந்தகாசுரன் தோன்றினான். இதை நிறுத்துவதற்காகச் சிவன் யோகேஸ்வரி என்பவளுடன் இவ்வேழு சத்திகளையும் சிவன் உற்பத்தி செய்தார். இவர்கள் அசுரனின் இரத்தத்தைக் கீழே விழாமற் குடித்து சிவன் அவனை அழித்தனர்.
(ஸ்ரீனிவாசன் பி. ஆர். நாம் வணங்கும் தெய்வங்கள், 1959,பக்.36)
28. சிங்காரவேலு முதலியார், ஆ. அபிதான சிந்தாமணி, மதுரைத்தமிழ்ச் சங்கப் பிரசுரம், சென்னை, வைஜந்தி அச்சகம், 1910, பக். 348 - 349
29. கணபதிப்பிள்ளை, க., ஈழத்து வாழ்வும் வளமும், 1962, பக். 121.
30. மாற்றாஸ்மயில், செ, வன்னிவள நாட்டுப்பாடல், செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம், 1980
31. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் வழக்கில் வழங்கும் உபகரிப்பு என்ற சொல்லுக்கும் வட்டு வாகல் கோயில் வழக்கில் வழங்கும் உபகரிப்பு என்ற சொல்லுக்கு மிடையிலே பொருள் வேற்றுமைகள் உண்டு. வற்றாப்பளைப் பொங்கல் அரிசி, மடைக்கான பழவகைகள், முதலான பண்டங்களை நிரந்தரம் அளிப்போரையே உபகரிப்போர் என அழைப்பர். வட்டுவாகலில் வற்றாப்பளையில் நோன்புகாரர்கள் என்று அழைக்கப்படுவோரையே உபகரிப்போர் என்று அழைப்பர்.
32. கோபியர்-கோவியர்

33. வேளார்-குயவர்

34. பூசாரியார் முள்ளியவளையில் வசிப்பவர், கோபியரும் முள்ளியவளையில் வசிப்பவர்கள். தச்சரும் சலவைத் தொழிலாளியும் முல்லைத்தீவில் வசிப்பவர்கள். தோட்டி கணுக்கேணியில் வசிப்பவர்.

35. வன்னிப்பிரதேச ஆலயங்களிலே கோபியரே பாக்குத் தெண்டல், தீர்த்தமெடுத்தல், நோன்புக்காரர்களின் உணவுக்காகக் கொடுக்கப்படும் அரிசியைக் குத்துதல், சமைத்தல் பொங்கிப்படைத்தல் முதலான கடமைகளைச் செய்வர். ஆனால் வட்டுவாகலில் கரைந்துறை மக்களே பெரிதும் இக்கடமைகளில் பத்தியோடு ஈடுபடுகின்றார்கள். தச்சுத் தொழிலாளி ஆலய கட்டிட வேலைகளைப் பழுது பார்ப்பதுடன், பந்தல் போடுதல், உடுக்கு அடித்தல், சிந்து பாடல், மடைபோடும் இடங்களுக்குப் பூசாரியாருடன் கூடிச் செல்லல் முதலான பணிகளில் ஈடுபடுவர். தோட்டிமார் பூசைக்குரிய காலங்களிலும் பறையை ஏற்றியும் இறக்கியும் முழக்கம் செய்வர். சலவைத்தொழில் மேலாப்புப்படித்தல் கச்சு நேருகற்கான துணியைக் கொடுத்தல், துளி பிடித்தல், முதலான சேவைகளில் ஈடுபடுவர். கும்பம் வைத்தல், மடைபோடுதல், நாச்சிமாரைக் கும்பத்தில் ஆவாகணம் செய்தல், பரிகலம் வழிவிடுதல், மடை பிரித்தல், விபூதி கொடுத்தல், கட்டுச் சொல்லுதல், முதலான கடமைகளைப் பக்தி தவறாமல் கடைப்பிடித்து ஆலய பூசையை வழி நடத்திச் செல்பவர் பூசாரியாரோ ஆவார்.

36. வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கருணை மலர், 1978,பக்.7

37. மற்றாஸ் மயில், செ. வன்னிவள நாட்டுப்பாடல்கள், ''நாச்சிமார் சிந்து'' 1980, பாடல் 2-5

**பின்னிணைப்பு**

## வன்னிமைகளின் சூட்டுக்களத்தில் உபயோகிக்கப்படும் குழ உக் குறியீடுகள்

| குழ உக் குறியீடுகள் | | பொருள் மரபு |
|---|---|---|
| அக்கந்து, முகப்பொலி | - | கழிவு நெல் |
| அமுது | - | சோறு |
| அலங்காரி | - | கூழந்தட்டி |
| அரைவயிறன் | - | நன்றாக முற்றாத நெல் |
| ஆராய்தல் | - | கூளங்களைத் தட்டிச் சுத்தமாக்கல் |
| இளைஞன், கோணியல் | - | சாக்கு |
| ஓலம் | - | பொலி சொல்லிப் போடுதல் |
| உப்பட்டி | - | வெட்டிய அரிவிகளின் தொகுதி |
| எடுவான் | - | கிழக்குக் கரை |
| கட்டு | - | உப்பட்டி பல சேர்ந்தது |
| கடகப் பெருவாயன் | - | கடகம் |
| கட்டையடிப்போலன் | - | |
| கடற்கரும்பு | - | மீன் |
| கண்டாயம் | - | கடவை |
| கந்து | - | தண்டோடு காணப்படும் நெல் |
| கட்டுக்களம் | - | நெற்களம் |
| கட்டுமிலாறு | - | கூழந்தட்டி |
| கந்து முறி | - | எல்லையை அவிழ்த்தல் |
| கலங்கன் | - | தண்ணீர் |
| கலங்கன் முகாவை | - | தண்ணீர் குடித்தல் |
| கட்டையடி நடையன் | - | களத்தில் களக் கட்டையுடன் கட்டியிருக்கும் மாடு |
| கருங்களம் | - | நடுக்களம் |
| கருக்கல் | - | புகையிலை |
| கரவன்மதிப்பு | - | நெல் அளத்தல் |
| களம் பொலிதல் | - | சூடு அடித்து முடித்ததும் வீட்டுக்கொண்டு செல்லல் |

| | | |
|---|---|---|
| குல்லம் | - | சுளகு |
| குடில் | - | வீடு |
| குளரி | - | நெற் கதிர் கொத்து |
| கூழம் | - | நெல் தூற்றும் போது பறக்கும் கழிவுகள் |
| கூட்டுக் கம்பு | - | சூடு அள்ளிப் போடுவதற்குப் பயன்படுத்தப் படும் சோடிக்கம்பு |
| கூரன் போலி | - | நெல் |
| கரைஞ்சான் | - | வாழைப்பழம் |
| கொட்டை | - | பாக்கு |
| கொல்லன் | - | சின்ன மண் வெட்டி |
| கொம்பு | - | நெல் தூற்றும் போது சிதறும் நெல் |
| கோல் | - | சாணகம் |
| கூங்கையன் வண்ணரமாடன் | - | பேய் |
| சவளம் | - | அடிபடாத நெல் |
| சுள்ளாம்பித்தல் | - | கிண்டுதல் |
| சூடு | - | பல நூற்றுக்கணக்கான கட்டுகள் சேர்ந்தவை |
| சூடு தட்டி | - | சூடு வைக்கும் பொழுது உப்பட்டிகளை ஒழுங்கு படுத்த உபயோகிக்கப்படும் கருவி. |
| சூழ் | - | தீப்பந்தம் |
| தூக்கம் | - | நித்திரை |
| நடையன் | - | மாடு |
| நடையன் வளைத்தல் | - | மாடுகளைச் சாய்த்தல் |
| நெடு யாழி | - | தண்ணீர் |
| படுவான் | - | மேற்கு |
| பாசம் | - | கயிறு |
| பட்டறைப் பெருவாயன் | - | பட்டறை |
| பெருகு | - | வா போ என அழைத்தல் |
| பெருக்கல் | - | மாடுகளை அவிழ்த்துக் கட்டல் |
| பெரிய போலன் | - | பெரிய மனிதர் |
| பிரளம் பிடுங்கல் | - | வைக்கோலை மேலெடுத்தல் |
| பொலி | - | பொலி என்றதும் நிற்க வேண்டும் |
| பொலிக் கொடி முறித்தல் | - | பொலிக் கொடியைக் கிளறிவிடல் |
| பொலிமிலாறு | - | மாட்டுக்கு அடிக்கும் தடி |
| பொல்லிடுவான் | - | தேங்காய்ப்பாதி |
| பொலி | - | நெற்கும்பம் |
| போர் | - | சூட்டிலும் சிறியவை. சூட்டைப் போன்றது |
| பிள்ளையார் போலன் | - | பிள்ளையார் நெல்லை முதலில் அளப்பவன் |
| வருணன் | - | மழை |
| வலிச்சான் | - | ரொட்டி |
| வரதராசன், வாயுதரன் | - | காற்று |
| வாட்டி | - | களத்தின் ஓரம் |
| வாட்டிகட்டுதல் | - | கரையோரத்திற் கிடக்கும் பொலிக் கொடி |
| வாட்டி நடையன் | - | களத்தின் ஓரத்திற் நிற்கும் மாடு |
| வாடல் | - | வெற்றிலை |
| வெள்ளை | - | சுண்ணாம்பு |
| வெளிச்சக்காரன் | - | நெருப்பு |
| வெள்ளோடன் | - | தேங்காய் |
| வைரபிரப் போலி | - | மண்கட்டி |

# வவுனியா மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைமை

திருமதி. மே. அற்புதராசா
B.A (Hons) S.L.A.S
(பிரதேசச் செயலாளர், வவுனியா)

உலகளாவிய ரீதியிலே தொன்மையான தனக்கெனத் தனித்துவம் கொண்ட வாழ்க்கை முறைமையினைத் தமிழ்ச்சமுதாயம் கொண்டுள்ளது. தமிழ் மக்களுக்கெனத் தனியானதொரு வாழ்க்கை முறைமையொன்று காணப்பட்டபோதும், அவ்வாழ்வு முறையிலே, அச்சிறப்பம்சங்களைப் பின்பற்றுகின்ற வழிமுறைகளிலே நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், கிராமத்திற்குக் கிராமம் சில தனித்துவமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. மக்களாற் பின்பற்றப்படுகின்ற வாழ்க்கைத் தத்துவங்கள், சமயவாழ்வு, சமூக அமைப்பு, மற்றும் பேச்சு முறைமைகள், ஆடை அணிகலன்கள், சமூகத்திற் பெண்களின் நிலைமை, காதல் வாழ்வு, திருமணவாழ்வு, குடும்பக்கட்டுக்கோப்பு, பொருளாதார பண்பாட்டுணர்வுகள் என்பவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்களும், தாக்கங்களும் அம்மக்களின் வாழ்வு முறைமையை நாகரீக மேம்பாட்டிற்கு வழிநடாத்திச் செல்கின்றன என்பது யாவரும் கண்ட உண்மையாகும். இவ்வகையிலே வவுனியா மாவட்டத்திற்கே உரித்தான. சிறப்பம்சங்கள் கொண்ட, வரலாற்றுப்புகழ் மிக்க சமூக பண்பாட்டு வாழ்க்கை முறைமையினையும், அவ்வாழ்க்கையின் அண்மைய மாற்றப்போக்கினையும் அனுபவ ரீதியாகக் கண்டுணர்ந்த வெளிப்பாடாக இக்கட்டுரை அமைகின்றது.

வாழ்வினைச் சீரிய நெறியிற் கொண்டு செல்லக் கடவுட் கொள்கையுடன் கூடிய சமயவாழ்வு மிக அவசியமென்பது இம்மாவட்டத்தின் மக்களது அசையாத உணர்வாகும். எந்தவொரு முக்கிய செயற்பாட்டினைச் செய்யத் தொடங்கும் முன்னும் கடவுளை வேண்டித் தொடங்குவது இவர்களின் சமய உணர்வினைப் புலப்படுத்தி நிற்கின்றது. இந்துசமயமே பெரும்பாலான மக்கள் பின்பற்றும் சமயமாக உள்ளதுடன், கிறிஸ்தவ, இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களும் இங்குவாழும் தமிழ் மக்களில் கணிசமான பங்கினைக் கொண்டவர் களாகவுள்ளனர். இந்து சமயத்திலோ, இஸ்லாம் சமயத்திலோ இங்கு வேறுபட்ட பிரிவுகள் கிடையாது. கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தோரிற் பெரும்பான்மையானோர் கத்தோலிக்கராகவும், சிறு தொகையினராகக் கத்தோலிக்கரல்லாதோரும் வாழ்ந்து வருகின்றனர். 1990ஐ அடுத்த காலப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து குடியேறிவரும் பகுதிகளில் கத்தோலிக்கரல்லாதோரைச் சேர்ந்தோர் பலர் சமயம் பரப்பும் நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றமையைக் காண முடிகின்றது. கத்தோலிக்கரல்லாதோர் என்று கூறும் போது இங்கு தென்னிந்திய திருச்சபை, யெகோவாவின் சாட்சிகள், நல்ல மேய்ப்பன் திருச்சபை, பரிசுத்த ஆவி சபை, எக்காளத்தொனி, புதிய எருசலேம் போன்ற பிரிவுகளைப் பின்பற்றுவோரும் உள்ளனர்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான மருதமும், காடும் காடுசார்ந்த இடமுமான முல்லையும் கொண்டு விளங்குவது இம்மாவட்டம். பண்டைத்தமிழ் இந்துக்களின் மருதத்திற்குரிய கடவுள் வழிபாடாகத் திகழ்ந்த இந்திரன், முருகன் முதலிய தெய்வவழிபாடும், முல்லை நிலத் தெய்வமான மாயோன் வழிபாடும் அன்று தொட்டு இன்றுவரை நிலவி வருகின்றன. அத்துடன் பண்டைய தமிழ் மக்களின் இறைவழிபாடான இயற்கை வழிபாடு, பெண் தெய்வவழிபாடு, வீரவழிபாடு, அனுமர் வழிபாடு போன்ற சிறு தெய்வ வழிபாடுகளும் அன்று தொட்டு இன்றுவரை நிலவி வருகின்றன. இயற்கை அனர்த்தங்களான பெருமழை, மழையின்மை, கடுங்காற்று, கொடுவிலங்கின் அழிவு, அச்சம், போன்றனவும் (அவலம்) கடவுளின் தண்டனையெனவும், அனைத்தையும் உள்ளும் புறமும் நின்று இயக்குவது அவன் சக்தியேயென அஞ்சியும், தமக்கேயுரித்தான சமய அனுஷ்டானங்களில் இம்மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சமயவழிபாடு சங்ககாலத்தில் நிலவியமையை

''மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரியான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையர்''

என்ற புறப்பாடல் தெளிவாகக் காட்டுகின்றது. இம்மக்களும் தமக்கேற்பட்ட துயர் நீங்கவும், இடையூறு நீங்கிப் பயன்பெறவும் அளப்பரிய படையல்களுடனும், அபிஷேகங்களுடனும், விழாக்கள், பக்திப்பரவசமுள்ள களியாட்டங்களுடனும் பொருந்திய கடவுள் வழிபாட்டினை நடாத்தி வருகின்றனர். கிராமப்புறங்களிலே மண்ணினாற் கட்டப்பட்ட கோவில்கள் அமைந்துள்ளதுடன், மிகப்பழைய கிராமங்களிலே நிலைபெற்ற கற்களாற், கருங்கற்களாற் கட்டப்பட்ட கோவில்களும் அமைந்துள்ளன, நகரை அண்டிய பகுதிகளிலே அழகான புதிய சிற்பவடிவங்கள் பொருந்திய அலங்காரம் நிறைந்த கோவில்கள் இன்று தலைநிமிர்ந்து காணப்படுகின்றன. இன்று இம்மாவட்டத்தின் இந்து சமயவளர்ச்சியினதும், சிற்ப வடிவத்தினதும் சிகரமாகக் கோவிற்குளம் சிவன் கோவில் விளங்குகின்றதெனில் மிகையாகாது. நாட்டில் அவ்வப்போது ஏற்பட்ட அனர்த்தங்களாற் பற்பல பழம்பெருமை மிக்க கோவில்கள் கிராமப் புறங்களில் அழிந்தொழிந்து போயினவாயினும் அவ்வப்பகுதி மக்களின் முடிந்தளவு பங்களிப்புடன் கூடிய நிதிவளத்தின் மூலம் அவை சீர்செய்யப்பட்டு வருவதுடன் ஆலய வழிபாடு எங்கும் மேலோங்கியே காணப்படுகின்றது. ஒரு புறத்தில் புதூர் நாகதம்பிரான் வழிகாட்ட மறுபுறத்தில் உமாமகேஸ்வரன் வீதியிலே கோவில் கொண்டு கோவிற் குளம் சிவன் அருள்பாலிக்க இன்றைய வவுனியா மாவட்டம் பக்தர்கள் சங்கமிக்கும் பரவசக்கடலாக மாறிவருகின்றது. அத்துடன் அந்தோனியார் பக்தர்கள் ஆனியிலே கூடும் இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயமும் இன்று அழகுற மெருகூட்டப்பட்டு வருகின்றமை இங்குவாழும் கத்தோலிக்க மக்களின் சமய மேம்பாட்டினை வெளிப்படுத்தி நிற்கின்றதெனில் மிகையாகாது.

இங்குவாழும் மக்கள் வறியோராயினும், தனவந்தராயினும் தமது வருமானத்தின் ஒருபகுதியைத் தமது சமய நடவடிக்கைகளுக்காகவும், ஆலய அபிவிருத்திக்காகவும், சமயம் வளர்ச்சியுறவும் ஒதுக்கி வருகின்றனர். அதனைத் தம் வாழ்வின் கட்டாய அம்சமாகக் கடைப்பிடிக்கின்றனர்.

குளங்களை அதிகமாகக் கொண்டுள்ள இம்மாவட்டத்தில் அக்குளங்களையடிப்படையாகக் கொண்ட விவசாயமே பிரதான தொழிலாகவுள்ளதுடன் குளங்கள் எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் ஆனைமுகக் கடவுளுக்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் பிள்ளையார் வழிபாடு மேலோங்கியுள்ளது. தமது வயலிற் புதிதாக விளைந்த புதிரை, பிள்ளையார் சந்நிதியில் அமுதமாகப் படைத்த பின்பே அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது இவர்களின் இயல்பாகும். தெய்வங்கள் மக்களுடைய வழிபாட்டை ஏற்று அவர்கள் நலம்பெறத் துணைபுரிவதுடன் பகையை வெல்லவும், துன்பத்திலிருந்து உயிர்களைக் காக்கவும், சமய வாழ்வு சிறந்தோங்க வேண்டுமென்ற நம்பிக்கை கொண்டு கிராமங்கள் தோறும் தமக்கெனத் தனித்துவமான சமய வழிபாட்டைப் பேணிவரும் இம்மாவட்ட மக்களிடையே நாகரீக மோகத்தின் ஊடுருவலாற் போலி வழிபாட்டிலே நாட்டம் கொண்ட சிலரும் சிறிய வீதத்திலாவது கலந்திருக்க மாட்டார்கள் என்று இன்று சொல்வதற்கில்லை.

இம்மாவட்ட மக்களின் சமூக வாழ்க்கையினை எடுத்து நோக்கும்போது விவசாயம் சார்ந்த வாழ்க்கை முறைமையினையும் அதனடிப்படையிற் சமூகவமைப்பு அமைந்துள்ளமையினையும் காணக்கூடியதாகவுள்ளது. தமிழ்பேசும் இலங்கைத்தமிழர், இந்திய வம்சாவழியினர், முஸ்லீம் மக்கள் ஆகியோர் கணிசமான அளவினராக வுள்ளனர். இவர்களுக்கெனத் தனித்தனியான சிறப்பம்சங்கள் பொருந்திய சமூகக் கட்டுக்கோப்புக்கள் நிலவி வருகின்றன. தமிழர் எனக் கூறும்போது இங்கு வாழும் பூர்வீகக் குடிகளின் வழிவந்தோர் தம்மைப் பண்டார வன்னியன் பரம்பரையில் வந்தோர் எனவும், வீரவன்னியர் எனவும், வன்னியான் எனவும் கூறிக்கொள்வதிலே பெருமை கொள்வதினைக் காணக்கூடியதாகவுள்ளது. விவசாயமே பிரதான நடவடிக்கையாகவுள்ள இம்மாவட் டத்திற் குளங்களையடுத்துக் குடியிருப்புக்கள் உருவாகியுள்ளமையையும், அக்குடியிருப்புக்களை மையமாக வைத்து நாகரீகம் வளர்ச்சி பெற்றமையையும், இங்குள்ள கிராமங்களின் பெயர்கள் குளங்களின் பெயர்களில் அமைகின்றமை அல்லது அக்குளத்தைச் சுட்டும் மோட்டை, கேணி, முறிப்பு என்ற பெயர்களைக் கொண்டு அமைகின்றமை பறைசாற்றி நிற்கின்றது. தாம் வாழும் பிரதேசத்திற் தமது உறவினரையும் சுற்றம் சூழச்சேர்த்து வாழ்வது இங்குவாழும் மக்கள் வாழ்வின் சிறப்பம்சமாகும். அவ்வாறு வாழும் போது கிராமத்தில் ஓரளவு கல்வியறிவு ஆளுமை, சிறந்த நற்குணங்கள், பரந்த மனப்பாங்கு சிறந்த பண்பாடுகள் நிறைந்த ஒருவரையோ, இருவரையோ தமது பெரியோராகக் கருதி அவர் சொற்கேட்டு நன்னெறியொழுகி வாழ்வது அவ்வூர் மக்களது சிறந்த பண்புகளிலொன்றாகும். இந்நிலைமை பழந்தமிழர் வாழ்வில் நிலவியமையைச் சங்ககாலத்தில் தமிழ்நாடு சிறு சிறு கூறுகளாகப் பிரிந்து அக்கூற்றிலுள்ள பெரும்பான்மையான மக்களின் தலைவரே அரசோச்சினர் என்பதை அக்கால இலக்கியங்கள், இலக்கணங்கள் சான்று பகர்கின்றமை வெளிப்படுத்தி நிற்கின்றது. மக்களாற் தெரிவுசெய்யப்பட்ட அரசியற்தலை வர்கள் இம்மாவட்டத்தின் தலைமைத்துவத்தைத் தம்பாற் கொண்டுள்ள இன்றைய காலகட்டத்திலே அவர்களுக்குப் பக்கபலமாகவிருந்து சிறந்த நேரிய வழியினைக் காட்டிச் செல்வதில் இத்தலைவர்கள் முக்கிய பங்கினை வகித்து வருவதை எவரும் மறுத்தற்கில்லை.

சாதி, சமய, இன வேற்றுமையுணர்வுகள் இம்மாவட்டத்தைப் பெரிதும் ஆட்கொண்டுள்ளதாகப் புலப்படுதற் கில்லை. எங்கும் நிலவுவது போன்றே இங்கும் தொழிற்றிறக் கூட்டங்களினடிப்படையிற் சாதியமைப்புக்கள் உருவாகியுள்ளனவாயினும், சாதிவேறுபாடுகள் இங்கு சர்ச்சைக்குரியனவாக அமைந்துள்ளன எனக் கூறிவிட முடியாது. தத்தமக்கேயுரிய சாதியின் தனித்தன்மையைக் கௌரவமாகப் பேணும் பண்பு கொண்டவர்களாக இம்மாவட்ட மக்கள் காணப்படுகின்றனர். திருமணங்கள் நிச்சயமாகும் போது தத்தமக்குப் பொருந்திய சாதியிலிருந்து திருமணங்களை நிச்சயம் செய்யும் நிலைமை நிலவிய போதும், அதனையும் மீறிச் சாதி பிறழ்ந்து காதற்திருமணங்கள் அமையும்போது தம்பதியினர் பெற்றோரை விட்டு நீக்கப்படுகின்றனர் என்றும் கூறி விடமுடியாது. அரச உத்தியோகம், வர்த்தகம் மற்றும் கல்வி போன்றவற்றின் நிமித்தமும், திருமண உறவுகளாலும் யாழ்ப்பாணத்துத் தமிழர் வன்னித் தமிழர் வாழும் வவுனியா மாவட்டத்திற் கணிசமான அளவினராகக் கலந்துள்ளனர். இன்று யாழ் மாவட்டத்திற் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போர் அனர்த்தங்களாற் புலம்பெயர்ந்த மக்கள் பலரும் இம்மாவட்டத்தில் நிரந்தரமாகக் குடியேறத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வு முறைமைக்கும், வன்னித்தமிழர் வாழ்வு முறைமைக்குமிடையே ஒற்றுமைகள் எந்தளவிற்கு உள்ளனவோ அந்தளவுக்கு வேற்று மைகளும் உள்ளனவெனக் கூறக்கூடியதாகவுள்ளது. பேச்சுமுறைமை, உணவு, விருந்தினரை உபசரித்தல் மற்றும் கலாசார பண்பாட்டு முறைமைகளில் வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய வேறுபாடுகள் இம்மாவட்டத்தில் இன்று வாழும் தமிழ் மக்களை வன்னியார், யாழ்ப்பாணத்தார் என இரண்டாகக் கூறுபோட்டுக் காட்டுமளவிற்குக் காரணமாயமைந்து விட்டது.

1990க்கு முற்பட்ட காலப்பகுதியிலே கூடியளவு கிராமப்புறங்களிலே மண்சுவராலானதும், கூரையால் வேயப்பட்டுப் பச்சைச் சாணத்தால் அழகுற மெழுகப்பட்ட தளத்தைக் கொண்டதுமான மண்வீடுகள் அதிகமாகவிருந்த போதும் 1990க்குப் பிற்பட்ட காலப்பகுதியிலே கிராமங்களாயினும் சரி, நகர்ப்புறங்களாயினும் சரி செங்கற்கள், கற்களால் வீடுகளைக் கட்டி ஓடுகளாலும், கூரைத்தகடுகளாலும் வீடுகளை அமைப்பதிலேயே மக்கள் நாட்டம் கொண்டுள்ளனர். இதற்குத் தொடர்ச்சியான பாதிப்புக்களிலிருந்து தமது வீடுளைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கமும், நாகரீக மேம்பாடும் அரச புனர்வாழ்வு உதவிகளும் காரணமென்று கூறின் மிகையாகாது. சீமெந்து,

கூரைத்தகடுகள் கிடைக்கப்பெறாத இடங்களில் உள்ளூரிற் கிடைக்கப்பெறும் மூலப்பொருட்களைக் கொண்டு வீடுகள் அமைக்கப்பட்ட போதும் அவை மண்வீடுகள் என்று கூறிவிட முடியாதளவிற்குக் கண்கவர் அழகினைக் கொண்டு விளங்குகின்றன.

பண்டைத்தமிழர் வாழ்வு போன்று இம்மக்களும் இயற்கையுடனிணைந்து வாழ்வதை அவதானிக்க முடிகின்றது. குளங்களில் நீராடி மகிழ்தல், காற்றோட்டமுள்ள பரணமைத்துப் பயிர் காத்தல், முல்லை நில உணவான பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றை உண்ணலும், மருத நில உணவான நெய்ச் சோறு, காய்கனி முதலியவற்றை உண்ணலும், விருந்தினருக்குத் தம் விளைவாற் பெற்றவற்றை மகிழ்வுடன் வழங்கி மகிழ்தலும் இவர்களுடைய இயற்கையுடனிணைந்த இனிய வாழ்க்கைக்கு உதாரணங்களாகும்.

உழவுத்தொழிலே இங்கு முதன்மையான தொழிலாகும். போர்ச் சூழலாலும், இயற்கை அழிவாலும் இம்மக்களின் விவசாயம் பாதிக்கப்பட்ட போதும் தமது கடும் முயற்சியினாற் பயிர் செய்து வாழ்வதிற் பயனுண்டென இவர்கள் கருதுபவர்களாக உள்ளனர். இதை விட அரச உத்தியோகத்தில் ஈடுபடுவோர், தச்சர், மேசன் வேலைபுரிவோர், துணிதுவைப்போர் கூலித்தொழில் புரிவோர், சிற்பியர், ஓவியர் போன்ற தொழில் புரிவோரும் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டம் வடக்கிற்கும், தெற்கிற்கும் நடுவிலமைவதால் வியாபாரத்தில் கூடிய வருவாயை ஏற்படுத்தக்கூடிய ஒரு மாவட்டமாகவிருப்பதால் இன்று பலரது கண்ணோட்டமும் இவ்வியாபாரத்தின் பாற் திரும்பியுள்ளதுடன் அதிக வருவாயை ஈட்டித்தரக்கூடிய ஒரு தொழிலாக மாறிவருவதையும் காணக்கூடிய தாகவுள்ளது. பண்டைய தமிழ் நாட்டில் நிலவிய பரம்பரையாகத் தமிழ் மருத்துவக் கலையைத் தந்தையிடத்திலும் குலகுருமுறைப்படியும் கற்றுக் கையாளும் முறைமை இன்றும் இம்மாவட்டத்தில் நிலவி வருவதைக் காணமுடிகின்றது. கிராமப்புறங்களிலே இன்றும் வாழ்ந்து வருகின்ற தமிழ் வைத்தியர்கள் தேகதத்துவ நூல், விஷங்களை நீக்கும் நஞ்சு நூல், உணவுப்பொருள் மருத்துவ நூல், சோதிட நூல் போன்றவற்றைக் கற்று நடைமுறைப்படுத்தி வருவோராயும், தமது வம்சாவழியினரில் ஒருவருக்குத் தொடர்ச்சியாக அதனைப் போதித்து வருவோராகவும் காணப்படுகின்றனர்.

இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலையிலே பெண்களின் பங்கினை எடுத்து நோக்கும் போது நகர்ப்புறத்திலே பெண்களின் கல்வியறிவு, தொழிற்றிறமை, மற்றும் சமூகத்தில் அவர்களது நிலைமை பங்களிப்பு என்பன சிறப்புற்றுக் காணப்பட்ட போதும் கிராமப்புறங்களிலே அவர்களது நிலைமை சிறப்பாக எடுத்துக் கூறப்படுமளவிற்குக் காணப்படவில்லை. இயற்கையோடிணைந்த வாழ்க்கை நடாத்தி, மக்கட்பேணி, மனையறம் காத்து, கலையறிவு பெற்று விருந்தோம்பி, கணவன் பணி செய்து, இல்லறமே நல்லறமெனவாழும் இம் மாவட்ட மகளிர்க்கு இன்றைய நாகரீக நாடுகளில் பிரதேசங்களில் ஆணுக்குச் சரிநிகர் பெண்ணெனக் கருதி வழங்கப்படும் சம அந்தஸ்து வழங்கப்படுவதிலே இன்னும் ஆடவர் தயக்கம் காட்டி வருவதையே காணலாம். பெண் என்பவளுக்கு சமூக அந்தஸ்திலே முதலிடம் வழங்கப்படுவதில்லை. இந்நிலைமை இன்றும் இம்மாவட்டத்தின் நாகரீக வளர்ச்சியின் பின்தங்கிய நிலைமையையே எடுத்துக் காட்டுகின்றதெனலாம்.

இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலையிலே பெண்களின் பங்கினை எடுத்து நோக்கும் போது நகர்ப்புறத்திலே பெண்களின் கல்வியறிவு, தொழிற்றிறமை, மற்றும் சமூகத்தில் அவர்களது நிலைமை பங்களிப்பு என்பன சிறப்புற்றுக் காணப்பட்டபோதும் கிராமப்புறங்களிலே அவர்களது நிலைமை சிறப்பாக எடுத்துக் கூறப்படுமளவிற்குக் காணப்படவில்லை. இயற்கையோடிணைந்த வாழ்க்கை நடாத்தி, மக்கட்பேணி, மனையறம் காத்து, கலையறிவு பெற்று விருந்தோம்பி, கணவன் பணி செய்து, இல்லறமே நல்லறமெனவாழும் இம் மாவட்ட மகளிர்க்கு இன்றைய நாகரீக நாடுகளில் பிரதேசங்களில் ஆணுக்குச் சரிநிகர் பெண்ணெனக் கருதி வழங்கப்படும் சம அந்தஸ்து வழங்கப்படுவதிலே இன்றும் ஆடவர் தயக்கம் காட்டிவருவதையே காணலாம். பெண் என்பவளுக்குச் சமூக அந்தஸ்திலே முதலிடம் வழங்கப்படுவதில்லை. இந்நிலைமை இன்றும் இம்மாவட்டத்தின் நாகரீக வளர்ச்சியின் பின்தங்கிய நிலைமையையே எடுத்துக்காட்டுகின்றதெனலாம்.

இங்குவாழும் மக்கள், நாட்டுக்கூத்து, கோலாட்டம் கும்மி, நாட்டார் பாடல்கள் போன்ற பாரம்பரியக் கலைகளைப் பேணுவதிலே நாட்டமுள்ளவர்களாகவுள்ளனர். தமிழ்க் கலாசாரத்திற்கே தனித்துவமான ஆடை அணிகளை அணிபவர்களாகவுள்ளனர். மேலைத்தேய பண்பாடு ஆடை அணிகளைப் பின் பற்றும் இயல்பு

இலங்கையிலே ஏனைய மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்களைப் பாதித்தளவிற்கு இவர்களைப் பாதிக்கவில்லையெனக் கூற முடிகின்றது.

1990ம் ஆண்டு காலப்பகுதிக்குப்பின் இங்கு ஏற்பட்டு வரும் பொருளாதார, அரசியல் சமூக நாகரீக வளர்ச்சியும், மக்களது குடியேற்றமும் இம்மாவட்டத்திற்கே சிறப்பாகவுரிய தமிழ் மக்களது பாரம்பரிய வாழ்க்கையிலே ஒரு குறிப்பிட்டளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், எதிர்காலத்திலும் பெரியளவிலான மாற்றத்தை ஏற்படுத்தும் எனபது எதிர்பார்க்கக்கூடியதொன்றேயாகும்.

*பறவைகளெல்லாம் - எங்கே*
*குருதி குடிக்கின்றனவோ,*
*பிணங்களெல்லாம் - எங்கே*
*படுத்திருக்கின்றனவோ*
*அதுதான் -*
*நீயில்லாமல் பாலையான*
*எமது பூமி !*

*அந்தப்பிணங்களெல்லாம்*
*உன்னை*
*எதிர்பார்த்தபடியே*
*இறந்து போன*
*"நேற்றைய மனிதர்"கள் தான்!*

*அவசரமாம்*
*அழைக்கின்றோம் வெண்புறாவே,*
*இந்தச்சந்ததி - உன்னை*
*மறந்து போக முன்னர் -*
*அடுத்த சந்ததி - உன்னை*
*அடையாளம் காண,*
*சமாதானப்புறாவே,*
*சீக்கிரம் வந்துவிடு!!*

டக்ளஸ் ஜெயசேகரன்
வவுனியா

# வன்னி மக்களுடைய வாழ்வும் கலாசாரமும் - ஒரு கண்ணோட்டம்

தம்பு - விவேகராசா
(Dip-media)
(இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், லேக்கவுஸ் மாகாண நிருபர்)

சோழர் ஆட்சி வழித்தோன்றலில் வந்த வன்னி மக்களுடைய பூர்வீகமும் கலாசாரமும் பின்னிப் பிணைந்துள்ளது. கலாசாரத்தின் பின்னணியே அவர்களுடைய பூர்வீகம் ஆகும்.

அந்நிய படையெடுப்பானது இடம் பெற்ற மன்னார், முல்லைத்தீவு, போன்ற கரையோரப் பிரதேசங்கள் தவிர வன்னி பெருநிலப்பரப்பில் வாழ்ந்து வந்த வன்னிமக்களுடைய கலாசாரத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை,

குளம் அதனைச்சார்ந்த பிரதேசம் இவர்களின் வாழ்விடமாக இருந்த பகுதிகள் ''குடியிருப்பு'' என அழைக்கப் பட்டது. கூட்டு வாழ்க்கையுடன் ஆன விவசாயத் தொழிலே இவர்கள் மத்தியில் நிலவியது.

குளிருக்கும், உஸ்ணத்திற்கும் ஈடுகொடுக்கக்கூடிய வகையிலான வட்ட வடிவிலேயே மிகவும் தாழ்வான பத்திகளைக் கொண்ட, வைக்கோலினால் வேயப்பட்ட மண்வீடுகளிலேயே வசித்து வந்திருக்கின்றனர்.

விவசாயமே பிரதான தொழிலாக இருந்ததினால் வண்டில், ஒரு சோடி எருதுகள், ஒரு தொகை எருமைக் கடாக்கள், அத்துடன் நீண்ட தூரப் பயணத்திற்குப் பயன்படுத்தக் கூடிய வண்டிற் கூடாரம் முக்கிய சொத்தாக இருந்துள்ளது.

நெல்லும்,சிறுதானிய செய்கையிலுமே கூடிய கவனம் செலுத்தினார்கள் ஆனால் கடினமான உழைப்பாளிகள், வேட்டைக்கு நாய்களையும் வளர்த்து வந்துள்ளனர்.

விவசாயச் செய்கையில் ஈடுபடும் அந்த குறிப்பிட்ட 3-4 மாதங்கள் மிகத் தீவிரமாக உழைத்து விட்டுப் பின்னர் அடுத்த போகம் வரும் வரை நீண்ட ஓய்வு எடுத்துத் தமது வாழ்க்கையை ஓட்டியுள்ளனர். உணவில் தன்னிறைவு கண்டவர்கள் என்று கூறலாம். பால் தயிர், தேன், நெய், இறைச்சி (காட்டுமிருகங்கள்) தாராளமாக இவர்களிடம் கையிருப்பில் இருந்துள்ளன.

அடைமாரிமழை காலத்திற்குத்தேவையான இறைச்சியை முன் கூட்டியே வேட்டையாடி வத்தல் போட்டு ''அடுப்படியில்'' உமலில் வைத்திருப்பார்கள்.

அதே போன்று தான் குளத்து மீனையும் பிடித்து கருவாடாக்கி பறணில் வைத்திருப்பார்கள். கறிக்குத் தேவையான பூசணிக்காய் சேமித்து வைத்திருப்பது இவர்களின் வழக்கமாகும்.

மாரிகாலத்தில் சுடச்சுடப் பச்சை அரிசிச் சோறும் தயிர்,நெய், பூசணிக்காய்க் கறிக்குள் இறைச்சி வத்தல் போட்டு ஆக்கி உண்பார்கள்.

வன்னி மக்களுடைய பிரதான வீட்டு வாசலில் ''மால்'' என அழைக்கப்படும் விருந்தினர்களை வரவேற்கக் கூடிய மண்டபத்தினை அமைத்திருப்பார்கள்.

வைக்கோலினால் வேயப்பட்டு நான்கு பக்கமும் அரைச் சுவர் வைக்கப்பட்டு திறந்த மண்டபமாக மால் காட்சி தரும்.

மண்ணால் ஆன குந்து எனப்படும் மேடைகள் போடப்பட்டு இருப்பதினால் குந்தின் மேல் பாய் போட்டு விருந்தினர்களை வரவேற்பர்.

வீட்டில் நடைபெறும் நன்மையான நிகழ்வுகள் இந்த மாலில் தான் நடக்கும்.

வசதிக்கு ஏற்ற மாதிரி மால் வன்னியர்களுடைய வீடுகளில் இருந்திருக்கின்றது.

காலை உணவாக பெரும்பாலும் பழஞ்சோறு, தயிர், அப்படி இல்லாவிட்டால் பச்சை அரிசிச்சோறும் பச்சடியும், நெய்யும் கலந்து உண்பார்கள்,

சிலர் குளத்து மீன் கருவாட்டுப் பொரியலையும் காலை உணவில் சேர்த்து இருப்பர்.

சுண்டங்காய், வட்டுக்காய், கீரை, பூசணிக்காய் அவர்களின் உணவில் இடம் பெற்று வந்திருக்கிறது. இவர்கள் இந்துக்களாக இருப்பதினால் ஒவ்வொரு மக்களும் மிகவும் கடவுள் பக்தி கொண்டவர்கள். குல தெய்வங்களை வழிபட்டு வந்துள்ளனர்.

குளத்தைக் காப்பவன் ஐயனார் என நம்பி ஐயனார் என்ற தெய்வத்தைக் குளக்கட்டில் வைத்து வழிபட்டு வந்திருக்கின்றார்கள்.

விவசாயத்தொழிலுக்கு ஐயனார் அருள் புரிகின்றார் என்ற தெய்வ நம்பிக்கையில் ஐயனாருக்கு வருடா வருடம் விழா எடுப்பார்கள்.

ஐயனார், தெய்வம் உள்ள குளக்கட்டில் முட்டி கவிழ்த்தல் என்னும் சமய சம்பந்தமான நிகழ்வு இன்றும் நடந்து வருகின்றது.

நரசிங்கர், பிள்ளையார் வழிபாடும், பெண் தெய்வங்களின் வழிபாட்டு நாட்டமும் கொண்டவர்களாக காணப்பட்டனர். ஆலய வழிபாட்டில் மடப்பண்டம் என கூறப்படும் விழா எடுத்து வந்துள்ளனர்.

அம்மை நோய் வந்தால் அம்மனுக்கு நேர்த்தி வைத்து அடுத்த திருவிழாவில் காவடி அல்லது பால்ச் செம்பு எடுத்து நேர்த்திக்கடனைத் தீர்ப்பது வழக்கமாகி வந்துள்ளது.

தமது கோவில் திருவிழாக்களின் போது பெண்கள் கூடுதலான அளவு ஆபரணங்களை அணிந்து தம்மை அழகுபடுத்திக் கொள்வது இவர்களின் சம்பிரதாயம்.

இரண்டு - மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஊரில் பெரியதொரு விழா எடுப்பர். இதற்குப் பெயர் ''ஊருக்குச் செய்வது'' என்ற வேள்வி வைபவமாகும். குறிப்பாக நரசிங்கர் ஆலயம் உள்ள இடங்களிலேயே இந்த விழா எடுக்கப்பட்டு வந்துள்ளது. ஏன் நரசிங்கருக்கு விழா எடுக்கின்றனர் என்பதற்கு ஒரு கதை உள்ளது.

ஒரு முறை கிராமத்து வன்னியர்களுடைய ஒரு கூட்டம் எருமை கடாக்கள் பக்கத்து ஊருக்குச் சென்ற போது எதிரியினுடைய பட்டியில் அடைபட்டுக் கொண்டதாம். இதனைக் கேள்வியுற்ற அவ்வூர் மக்கள் குல தெய்வமாக விளங்கிய நரசிங்கருக்கு நேர்த்திகடன் ஒன்றை வைத்தார்களாம்.

விடியமுன் கடாக்கள் திரும்பி ஊருக்குள் வரவேண்டும், திரும்பாவிட்டால் விளக்கேற்றிக் கும்பிடமாட்டோம் என நரசிங்கரிடம் சபதமிட்டு வீடு சென்றார்கள்.

அதேபோல் கடாக்கள் எதிரியின் பட்டியை உடைத்துக்கொண்டு அதிகாலை ''சிறப்பை'' அடிக்க ஓடி வந்ததாக

பெரியவர்கள் இன்றும் கூறுகின்றார்கள்.

எருமைத் தயிர், நெய் வன்னி மக்களுடைய வீடுகளில் குறையமாட்டாது. உறிகட்டி இதனைப் பாதுகாப்பர்.

வீட்டுக்கு வருபவர்களை விருந்தோம்பலுக்கு அழைப்பது இவர்களின் சிறப்பம்சமாகும்.

விவசாயச் செய்கைக்குக் கடாக்களைப் (எருமைமாடு) பயன்படுத்தி வந்துள்ளனர். உழுதல் முதல் சூடு அடிக்கும் வரை கடாக்களையே பயன்படுத்தி வந்துள்ளனர். கடாக்களுக்கு சிறப்பை என்னும் ஒரு மணியை கழுத்தில் கட்டிவிட்டிருப்பார்கள். மேச்சலுக்குச் செல்லும் கடாக்களைக் கண்டுபிடித்து பட்டிக்கு சாய்த்துவர இந்த சிறப்பை (ஒலி) உதவியுள்ளது.

பலகையடித்தல், அருவி வெட்டுதல், சூடுவைத்தல், சூடு அடித்தல் போன்ற வேலைகளை அந்தக் காலத்தில் பரத்தை அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் உதவியாக வேதனமின்றி செய்து கொடுத்து வந்துள்ளனர்.

அனேகமானவர்களின் வீடுகளில் நெல்லைச் சேமித்து வைப்பதற்குப் ''பட்டறை'' வைத்திருந்துள்ளனர்.

விதை நெல்லுக்கூட இந்தப் பட்டறையில்தான் சேமித்து வைப்பார்கள் வைக்கோல் புரிகொண்டு பட்டறை அமைக்கப்படும்.

சூடு அடித்தல் முடிந்தவுடன் பொலி தூர்த்தி முதல் மூன்று குல்லம் (சுளகு) பிள்ளையாருக்கு எடுத்து வைப்பர். அதன் பிறகுதான் நெல்லுச் சாக்குகளில் போடப்படும் வழக்கம் சம்பிரதாயமாக இருந்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக வவுனியாவில் புகழ்பெற்ற அனுபவமிக்க நாட்டு வைத்தியர்கள் இருந் துள்ளனர்.

இவர்கள்தான் அந்த காலத்தில் நோய் நொடிகளை ஆயுள் வேத மூலிகைகளைக் கொண்டு கட்டுப்படுத்தி வந்துள்ளனர். விஷக்கடி வைத்தியர்கள் பாம்புக் கடிக்கு வேப்பிலை கொண்டு ''பார்வை பார்த்து'' தலைக்கு விஷம் ஏறாது காப்பாற்றி வந்துள்ளனர்.

விசர் நாய் கடிக்கும் ''பரியாரி'' மார் இருந்திருக்கின்றார்கள்.

வன்னி மக்களுடைய வீடுகளில் ஆபரணங்கள் கூறைச்சேலை, புடவைகள் பணம் வைத்திருப்பதற்கு மரத்தில் செய்யப்பட்ட தைலாப்பெட்டிகள் (பெட்டகம்) இருந்துள்ளன.

இந்த மக்களின் எளிமையான வாழ்க்கையும், வந்தோரை வரவேற்கும் பண்பாடும் இன்றும் கிராம மட்டத்தில் உள்ளதினை நாம் காணலாம்.

*கண்ணுறங்க தாலாட்டு*
*தாயும் பாடனும் - இங்கே*
*தூக்கத்துக்கு.......*
*தாலாட்ட.......*
*'துவக்கு' முழங்குது.....*

*கோழி கூவி கொக்கரிக்க*
*பொழுது புலரனும்-இங்கே*
*துப்பாக்கிகள்*
*கொக்கரிக்க*
*'காலை' மலருது*

**என். சஹாப்தீன், ஒட்டவமாவடி.**

# வன்னிநிலம்; இலங்கையின் இருதய நிலம்?

அ. விஜயகிருஷ்ணன்

ஒரு பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் பூர்வீகம் நீண்டகாலத்தைக் கொண்டதா? என்பதைத் தேடுவதற்கு அங்கு வாழ்ந்து வரும் மக்களிடம் காணப்படுகின்ற வழக்காறுகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், பேணுதல்கள், கலைவடிவங்கள், பிரதேசத்துத் தொடர்புகள் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் துணைபுரிகின்றன. இந்த வகையில் வன்னிப்பிர தேசத்தையும் அதன் வரலாற்று எச்சங்களையும், சமூக மரபுகளையும் மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வன்னிப் பிரதேச நிலப்பரப்பானது மிகவும் பெரியதாகும். 1895 இல் J.P லூயிஸ் என்பவரால் வெளியிடப்பட்ட ''மனுவல் ஒப் த வன்னி டிஸ்ரிக்'' (Manual of the vanni Districts) என்ற நூலில் வெளியிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி நோக்கின்,

வடக்கே ஆனையிறவு தொடக்கம் தெற்கே கர்நாட்டுக் கேணி வரையான கடற்கரையும், மேற்குப்பாக நிலப்பரப்பு மன்னார்ப் பிரதேசத்தை அண்டியதாக தெற்கே நீண்டு சென்றுள்ளது. தெற்காக வடமத்திய மாகாணத்தின் வட எல்லையும், தென்கிழக்காக கிழக்கு மாகாணத்தின் ஒரு எல்லையும் வன்னிப் பிரதேசமாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

வன்னியின் புவியியல் அமைப்பில் கடல், காடு, ஆறுகள், பாறைத் தொடர்கள் போன்ற எல்லாமே அடங்கியுள்ளன. இதனால் வன்னிப் பிரதேசம் இயற்கையிலேயே பாதுகாப்புமிக்க ஒரு பகுதி எனலாம்.

பருமட்டாக வன்னிப் பிரதேசத்தின் நிர்வாகப்பிரிவுகளை அவதானித்தால் வடக்கே கரைச்சி, கருநாவல்ப்பற்று ஆகியவற்றையும், கிழக்கே குடியிருப்பு, கரிகட்டு மூலை, முள்ளியவளை, மேற்பற்று வடக்கு, கரிக்கட்டு மூலை தெற்கு ஆகியவற்றையும்;

மேற்காக துணுக்காய், பனங்காமம், மேற்குமூலை ஆகியவற்றையும், தெற்கே நடுச்செட்டிகுளம், சின்னச்செட்டிகுளம், கிழக்கு மூலைதெற்கு ஆகியவற்றையும் மத்திய பாகத்தில் உடையா உளர், மேற்பற்றுத்தெற்கு மேற்பற்று உடையா உளர், கிழக்கு ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

வன்னிப்பிரதேசம் தெற்கே இருந்த அனுராதபுர நிர்வாகத்திலோ அல்லது, வடக்கே இருந்த யாழ்ப்பாண நிர்வாகத்திலோ, தங்கியிராது தனித்து நின்று ஓர் அலகாக நிலை பெற்றிருந்தமை இதன் சிறப்பம்சமாகும்.

வன்னிப்பிரதேச வரலாறு இற்றைவரை தெளிவற்ற நிலையிலேயே உள்ளது பூரணமான ஆய்வுகள் நடாத்தப்படாமையே இக்குறைபாட்டிற்கான காரணமாகும்.

ஒரு பிரதேசத்தின் வரலாற்றை இரு வேறுபட்ட அணுகுமுறைகளுக்கூடாக அறிந்து கொள்ள முடியும். ஒன்று, 'தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்வது. இரண்டு, இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் மேற் கொள்வது. இவ்விரு மூலங்களையும் ஒப்பிட்டு ஆராயும் போதே அது விஞ்ஞான பூர்வமான ஆய்வாக அமையும்.

வன்னிப்பிரதேசத்தைப் பொறுத்தவரை தொல்லியல் ஆதாரங்களென இதுவரை கண்டுபிடித்தவை மிகச் சொற்பமே. பொதுவாகப் புவியியல் அமைப்பைப் பார்க்கும் போது தொடர்ச்சியாகவும் பரந்தும் மக்கள் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

வன்னிச்சிற்றரசுகள் நிலவியிருந்த பல நகரங்கள் இன்று காடு மூடிய நிலையில் காணப்படுகின்றன. இந்நகரங்கள் பற்றி அவ்வவ்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களிடையே பல மரபு வழிக்கதைகளும் நிலவிவருகின்றன. இக்கதைகளுடன் இணைத்து ஒப்பீடு செய்யுமளவிற்கு தொல்லியல் ஆய்வெதுவும் இது வரை செய்யப்படவில்லை.

இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் ஓரளவிற்காவது இவ்வரலாற்றை ஊகிக்க முடிகிறது. ஏடுகளில் எழுதப்பட்டுள்ள செய்திகள், கூத்துமரபுகள், தலபுராணங்கள், ஐதீகக்கதைகள், மரபு வழி வழக்கங்கள், வழக்காறுகள், சடங்குகள் மூலம் கடத்தப்பட்டு வரும் செய்திகள் என்பனவற்றினூடாக இதனை அறிய முடியும்.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் எழுச்சி அடைந்தமைக்கு பிரதான உந்து சக்தியாக அமைந்தது வன்னிச் சிற்றரசுகளாகும்.

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குள் ஏற்பட்ட சோழப்படை யெடுப்பும்; அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தலை நகர மாற்றங்களும் சிங்கள மன்னர்கள் மத்தியில் பல குழறுப்படிகளைத் தோற்றுவித்தது. இந்நிலையில் வட இலங்கை நோக்கிய பாரிய படையெடுப்பு எதனையும் இம்மன்னர்களால் மேற்கொள்ள முடியவில்லை. எனினும் ஏற்படுத்தப்பட்ட சிறு முனைப்புக்களை தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமையை வன்னிச்சிற்றரசுகள் பெற்றிருந்தன.

சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வம்ச முரண்பாடுகளும், வாரிசு உரிமைப் போராட்டங்களும் அங்கு ஓர் ஸ்திரமான ஆட்சியைத் தோற்றுவிக்க தடையாக இருந்தது. அதேவேளை கி.பி. 13ஆம் நூற்றாண்டளவில் கையோங்கியிருந்த விஜயநகர மன்னர்களும் தமது லௌகீக வாழ்க்கையில் அதிக கவனம் செலுத்தினார்களே ஒழிய பேரரசு ஒன்றைக்கட்டி வளர்க்கும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை.

வன்னிச்சிற்றரசுகளின் எழுச்சியும் தென்னிந்திய அரசியலில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சுமுகமான முறையில் யாழ்ப்பாண இராச்சியம் வளர்வதற்கு கால் கோளிட்டது.

இலங்கைக்கு முதலில் வந்த ஐரோப்பிய நாட்டவரான போர்த்துக்கேயர் (கி.பி: 505) கரையோரப் பிரதேசங்களில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக வடக்கில் இவர்களின் நடவடிக்கை ஓரளவு வெற்றி பெற்றிருந்தது.

நூற்றாண்டைக் கடந்த போர்த்துக்கேயரின் பிரயத்தனத்தால் கி.பி. 1619 இல் யாழ்ப்பாண அரசு அவர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. இதற்கான பிரதான காரணம், தென் இந்திய அரசுகளின் உதவிகளை கண்டியரசு யாழ்ப்பாண இராச்சியத்தினூடாகவே பெற்று வந்தது. ஆயுத உதவி, ஏனைய பெறுமதி மிக்க பொருட்கள் போன்றன இவ்வாறு பெறப்பட்டன.


இலங்கையின் புராதன அரசுகளின் வரிசையில் நோக்கும் போது வன்னிப் பிரதேசம், கண்டிய பிரதேசம், றுகுணு பிரதேசம் ஆகிய மூன்றும் அன்னியர் ஊடுருவ முடியாத ஏதோவொரு பாதுகாப்பைக் கொண்டிருந்தன. இதில் வன்னிப் பிரதேசத்தின் அரணாக வளமான காடுகளும், சிறு பாதைகளும் குகைகள், மண்மேடுகள் என்பனவும் காணப்பட்டன.

கி.பி 1560 இல் சங்கிலி மன்னனுடன் போரிட்ட போத்துக்கேயப் படையினர் அத்தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் வன்னிப் பிரதேசத்திற்குள் ஓடிவந்து ஒழித்ததாக அறிய முடிகிறது. (1) அந்த அளவிற்குப் வன்னியின்

நிலப்பரப்பு பாதுகாப்பு வாய்ந்ததாகும்.

ஒல்லாந்தர் காலத்தில் (1658-1796) போர்த்துக்கேயர் காலத்தைப் போல கரையோர நிர்வாகமே சாத்தியப்பட்டது. பெருமுயற்சி எடுத்த போதிலும் கண்டியரசைக் கைப்பற்ற முடியாத அளவிற்கு வன்னிச்சிற்றரசுகளின் வியாபகம் காணப்பட்டது.

பிரித்தானியர் காலத்திலும் வன்னியரசு தொடர்பாக பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் பிரித்தானியர் வன்னிப்பிரதேசத்தைக் கைப்பற்றுவதில் அதிதீவிரமாக செயற்பட்டனர். இதற்கு முதல் இரு ஐரோப்பிய நாட்டவரும் பெற்றிருந்த தோல்வி நல்ல படிப்பினையாக இவர்களுக்கு இருந்தது. அதேவேளை இம் முயற்சியில் தமது படைவீரர்களை பெருந்தொகையில் இழக்க வேண்டியும் இருந்தது. 1796 இல் இலங்கை மண்ணில் கால்பதித்த பிரித்தானியர் 1803 ஆம் ஆண்டிலே பண்டார வன்னியன் என்ற வன்னியின் இறுதி மன்னனை தோற்கடித்ததுடன் (2) இப்பிரதேசம் வெற்றி கொள்ளப்பட்டது.



ஒரு பழமை வாய்ந்த அரசமைப்பு என்ற வகையிலும் பல வம்சங்கள் வன்னியர் சமூகத்தில் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டு வந்ததாலும், பிரித்தானியர் தமது பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் வன்னித்தலைவர்கள் பலரை தமக்குள் முரண்பட்டுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளி விட்டனர்.

இவ்வாறான முரண்பாட்டை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய பிரித்தானியர் தமக்கு சார்பாக செயற்படமுன்வந்த தலைவர்களுக்கு பெருமளவு காணிகளையும், அதிகாரத்தில் சிறுபங்கும் வழங்கி கௌரவித்தனர். இதன் காரணமாகவே வன்னியில் நிலப்பிரபுத்துவ சமூகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இவர்களை முதலிமார் எனவும்; உடைமைக்காரன் அல்லது உடையார் எனவும் அழைத்தனர்.

இவ்வாறானான சலுகைகள் பண்டாரவன்னியனுக்குப்பின் வன்னிப்பிரதேசத் திற்கென ஒரு தனி நிர்வாகத்தை அல்லது பாரம்பரிய தொடர்ச்சியைப் பேண முடியாமல் தடுத்து வைத்தன.

வன்னியரசு பிரித்தானியர் வசமாகி பன்னிரெண்டு ஆண்டுகளின் பின் பலமான அரண்களுடன் கூடிய; வெல்லப்பட முடியாதிருந்த கண்டியரசு பிரித்தானியர் வசமானது. (1815) இதிலிருந்து வன்னிப் பிரதேசத்தின் முக்கியத்துவமும் அரசமைப்பின் முக்கியத்துவமும் நன்கு புலனாகிறது.

ஐரோப்பாவில்; உலகின் இருதய நிலம் என வர்ணிக்கப்படுவது சைபீரியா. இப்பகுதியை யார் கைப்பற்றி வைத்திருக்கிறார்களோ அவர்களே உலகை ஆளும் தகுதி படைத்தவர்கள். அந்தவகையில் பார்த்தால் வன்னிப் பெருநிலத்திற்கு சைபீரியாவிற்கு இருக்கக்கூடிய தனித்துவம் உண்டு.

சிங்களக் கலாசார மரபில் குளம், பன்சலை,வயல், ஆகிய மூன்றும் பண்டைய வாழ்வின் ஆதாரங்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. அதேபோல் அதையொத்த ஒரு வாழ்க்கை முறை தமிழர் தரப்பில் இருக்க வில்லை என்பது சிங்கள வரலாற்றாசிரியர் பலரின் கருத்தாகும். இதற்கு மாறான கருத்தை வன்னிப் பிரதேச வாழ்வு முறையில் காண முடிகிறது.

பொதுவாக வன்னிக் குடியிருப்புக்கள் கோயில், குளம், வயல் பிலவு என்ற ஒழுங்கமைப்பிற்குள் காணப்படுகிறது. இவற்றைச் சுற்றியே ஒரு கிராமம் அமைந்தி ருக்கும். ஊர்ப் பெயரின் பகுதியில் குளம் எனப் பொதுவாக அமைந்திருப்பதைக் காணலாம். உதாரணமாக வேப்பங்குளம், வெள்ளாங்குளம், விளக்குவைத்தகுளம், வன்னி விளான்குளம், ஒட்டறுத்தகுளம், கொம்புவைத்தகுளம், கொம்பறுத்த குளம் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

லூயிசின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின்படி வன்னிப்பெரு நிலத்தின் தென் பகுதியில் மாமடு, மகாறம்பைக்குளம், மகாகைச்சற் கோடி, நெடுங்குளம், மடுக்கந்த, மகா மயிலங்குளம், ஈறற்பெரிய குளம், துடரிகுளம், துய்ப்பன்மடுவ, வாரிக்குட்டியூர், புளியங்குளம், துணுவேகம், அழகல்லை, பாவற்குளம், ஒலுக்குளம், பூமடுவ, போன்றகிராமங்களில் சிங்கள மக்கள் வாழ்ந்ததாக அறிய முடிகிறது.

பண்டார வன்னியன் 1803இல் தோற்கடிக்கப்பட்டான். லூயிசின் நூல் 1895 இல் வெளியிடப்பட்டது. இதிலிருந்து இச்சிங்கள மக்கள் பண்டார வன்னியனின் வீழ்ச்சிக்குப்பின் ரஜரட்டப்பகுதியில் இருந்து வடக்கு நோக்கிக் குடியேறியிருக்க வாய்ப்புண்டு. அதை விட கிராமங்களின் பெயர்கள் தற்போது கூட தமிழ் அர்த்தங்களைக் கொண்டிருப்பதையும் மற்றோர் சான்றாகக்காட்ட முடியும்.

தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது வன்னிப் பெரு நிலம் தமிழ்ப்பகுதி என்பது தெளிவாகிறது

| | *1881* | *1891* |
|---|---|---|
| மகாமைலங்குளம் | -- | 59 |
| மடுக்கந்த | 141 | 90 |
| பிராமணன் குளம் | 67 | -- |
| நெடுங்குளம் | 20 | 48 |
| அழகல்ல | 22 | 21 |
| தீவுக்குளம் | 45 | 61 |

| | | |
|---|---|---|
| புளியங்குளம் | 13 | 14 |
| நாவற்குளம் | 10 | 05 |
| மணியார் குளம் | 27 | -- |
| மகாறம்பைக்குளம் | -- | 24 |
| மாமடு | 64 | 107 |
| மகா கைச்சற்கோடி | 71 | 24 |
| பிரப்பமடு | 47 | 07 |
| புதுவிளாங்குளம் | -- | 12 |
| குருந்தன் குளம் | -- | 56 |
| கல்கண்டமடு | 09 | 05 |
| ஓலுக்குளம் | 75 | 63 |
| மருதமடு | 33 | 43 |
| பூமடு | 52 | 37 |
| வாரிக்குட்டியூர் | 35 | 24 |
| அறுகம் புல்வெளி | 15 | 24 |
| நொச்சிக்குளம் | 12 | 09 |
| பாலையாவூர் | -- | 16 |
| | ***912*** | ***971*** |

இதன் மூலம் பார்க்கும் போது பண்டாரவன்னியனை வன்னி பண்டார என சிங்கள வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டு; சிங்களத் தலைவராகக் காட்ட முனைவது வன்னிப் பிரதேசத்தின் தென்பகுதியில் காணப்படும் இக் கிராமங்களின் அடிப்படையிலாகும். இத்தரவுகள் பண்டார வன்னியன் காலத்தது என்பதை விட இருக்கருத்து மிகவும் குதர்க்கமானது என்பது வெளிப்படையாகின்றது.

போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தினர். ஒல்லாந்தர் புரொட்டொஸ்தாந்து மதத்தை அறிமுகப்படுத்தினர். இவ்விருமதங்களின் செல்வாக்கு வன்னியில் ஏற்படவில்லை. அதற்கான அரசியற் சூழலும், வாய்ப்பும் இல்லாதிருந்தமையும் ஒரு காரணமாகும்.

வன்னி மக்கள் இந்துக்களாகவும் திராவிட வணக்கமுறைகளைப்பின்பற்றுவோராகவும் காணப்படுகின்றனர். கோவில்கள் சிறிதாக விருப்பினும் கீர்த்தி மிக்கவை என்பது இவர்களின் நம்பிக்கை. திராவிட வணக்க முறைகளான வேள்விசெய்தல், பிராமணரல்லாதோர் பூசைசெய்தல், (பூசாரி) காணிக்கை கட்டுதல், பறைமேளம் அடித்தல், பண்டமெடுத்தல், வேளைகட்டுதல், தீமிதித்தல், வேப்பிலையால் அலங்காரம் செய்தல் போன்ற நடைமுறைகளை இன்றும் காணமுடியும்.

கோயில்களில் கலையாடும் வழக்கமும் அப்போது பூசாரியின் உடலில் கடவுள் இருந்து ஆணையிடுவதாகவும் நம்பப்படுகிறது. எதிர் காலத்தில் வரவிருக்கும் பிரச்சினைகள் நோய்நொடிகள், வரட்சி போன்றவற்றைக் கூறி அதற்கான பரிகாரத்தையும் அவரே குறிப்பிடுவார்.

சுயமாக நிலைத்திருந்தவன்னிப்பிரதேசம் சுய தேவைப்பூர்த்தியுடனான ஒரு வாழ்க்கை முறையைப் பின்பற்றி இருந்தது. இதற்கான இயற்கை ஆதாரங்களும் சாதகமாக இருந்தமையால், வன்னிப்பிராந்தியத்திற்கே உரிய தனித்துவம் அடை யாளம் காணக் கூடிய வகையில் இன்றுமுள்ளது. சூழலே மனிதனை உருவாக்குகிறது என்ற கருத்திற்கு வன்னிப் பிரதேசமும் மக்களும் தக்க உதாரணமாகும்.

# சக்தி வழிபாட்டில் வற்றாப்பழைக் கண்ணகை அம்மன்

திரு.ச.விஜயரத்தினம் B.A வவுனியா

சிந்துவெளி நாகரீக காலத்திலிருந்தே சக்தி வழிபாடு தமிழர் மத்தியில் முக்கிய வழிபாடாக இருந்து வருகின்றது. சக்தி வழிபாட்டில் அம்மன் பராசக்தி,காளி, சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கை, கண்ணகை முதலிய பெண் தெய்வங்கள் வடிவில் சக்தியை நாம் வழிபட்டு வருகின்றோம். இத்தெய்வங்களுக்கு இந்தியாவிலும், இலங்கையிலும் கோவில்கள் கட்டி திருவிழாக்கள் உற்சவங்கள் பொங்கல்கள், குளிர்த்தி முதலிய சிறப்பான நிகழ்ச்சிகளை வருடந்தோறும் ஏற்படுத்தி பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர். இத் தெய்வங்களில் கண்ணகை அம்மனுக்கு இலங்கையில் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி யாழ்ப்பாணம் முதலிய பிரதேசங்களில் கோவில்கள் அமைத்து வருடந்தோறும் பொங்கல்கள், குளிர்த்தி செய்து வழிபட்டு வருகின்றனர்.

வன்னிப்பிரதேசத்தில் பிரபல்யம் அடைந்த அம்மன் கோவில் வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவிலாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பழை கிராமத்தில் நந்திக்கடலாலும் வயல்வெளியாலும், பாலைமரச் சோலையாலும் சூழப்பட்டு நந்திக் கடற்கரையோரத்தில் எழில்மிகு தோற்றத்துடன் காட்சியளித்துக்கொண்டிருக் கின்றது வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவில். வருடம் தோறும் வைகாசி மாதபௌர்ண மியை அண்டி வருகின்ற திங்கட்கிழமை வற்றாப்பழை கண்ணகை அம்மனுக்கு சிறப்பாக பொங்கல் நடத்தப்பட்டு வருகின்றது.

வன்னி மக்களின் நம்பிக்கைக்குரிய தெய்வமாக விளங்கும் வற்றாப்பழை கண்ணகை அம்மனுக்கு செய்யும் பொங்கல், பழைய பாரம்பரிய முறைகளுக்கு ஏற்பவே இப்போதும் நடைபெற்று வருகின்றது வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவில் உரிமையாளருக்கு பொங்கலை ஞாபகமூட்டும் பாக்குத்தெண்டல் நிகழ்ச்சியுடன் திங்கட்கிழமை ஆரம்பமாகி அடுத்த திங்கட்கிழமை அதாவது பொங்கலுக்கு முதல் திங்கள் தீர்த்தம் எடுத்து விளக்கு வைப்பதற்காக, குறிப்பிட்ட குலத்தில் உள்ள ஒருவர் புதிய பானையுடன் செல்ல அவருடன் கோவில் உரிமையாளர்கள் பூசகர்கள் ஆகியோருடன் முல்லைத்தீவுக்கு அண்மையிலுள்ள சிலாவத்தை கடற்கரையில் உள்ள வழமையாக தீர்த்தம் எடுக்கும் தீர்த்தக் கடற்கரைக்குச் சென்று தீர்த்தம் எடுத்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் வைத்து அதற்குள் வெள்ளைத் துணியிட்டு விளக்கு ஏற்றப்படும். குறிப்பிட்ட கோவில் கடமைகளைச் செய்யும் குலத்தவர்களும், பூசகரும் ஏற்றப்பட்ட விளக்கும் மடப்பண்டங்களும் வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவிலுக்கு கொண்டு போகும் வரை, காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து தமது கோவில் கடமைகளைச் செய்வார்கள். சிலம்பு, வெள்ளிப் பிரம்புடன் பூசகர் காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு புறப்பட, கோவில் கடமைகளைச் செய்யும் குறிப்பிட்ட குலத்தவர்களால் ஏற்றப்பட்ட விளக்கு மடப்பண்டங்களுடன் புறப்படும்போது மேளத்துடன் கோவில் உரிமையாளர்கள் அவர்களை வற்றாப்பழை கண்ணகை அம்மன்

கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கு சென்றதும் பூசகர் தமது கடமைகளைத் தொடங்கியதும் சிலம்பு கூறல் படலம் ஆரம்பமாகும். வற்றாப்பழை கண்ணகை அம்மன் பொங்கல் தினத்தன்று நடக்கும் சிறப்பான நிகழ்ச்சி சிலம்புகூறல் படலம் வாசித்தலாகும். கோவலன் கண்ணகி கதையைக் கூறும் சிலப்பதிகாரம் வாசிக்கும் போது, ஒருவர் புராணபடலத்தை வாசிக்க இன்னொருவர் பயன் கூற அதனைச் செவிமடுத்து பல வயோதிபர்கள் கூடி இருப்பார்கள். பலர் மாறி மாறிப் புராணபடலம் வாசிக்க பலர் மாறி மாறிப் பயன் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இது திங்கட்கிழமை இரவு நிறைவு செய்யப்படும். இதனை சிலம்பு கூறல் என பயபக்தியுடன் கூறுவார்கள். மதுரையில் கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு பாண்டியனிடம் வந்த கண்ணகி, பாண்டியனுக்கு உண்மையை விளக்கியதும் பாண்டியனும் கோப்பெருந்தேவியும் இறக்க,கோபங்கொண்ட கண்ணகி, கண்ணகை அம்மனாக மாறி மதுரையை எரித்த பின் பல திக்குகளுக்கும் சென்று பின் சக்தி வடிவம் பெற்று இறுதியாக வற்றாப் பழையில் நந்திக்கடற்கரையில் பதிகொண்டதால் அத்தலத்தைச் தரிசிப்பதற்கு இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து பொங்கல் தினத்தன்று பல ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் வருடந்தோறும் வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஐம்பெரும் காப்பியங்களில் சிறந்து விளங்கும் சிலப்பதிகாரத்தில் வரும் கோவலன் கண்ணகி கதையை, பண்டைக்காலம் தொட்டு வன்னி மக்கள் குறிப்பாக அடங்காகப்பற்றில் உள்ள முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பழை, புதுக்குடியிருப்பு முதலிய கிராமங்களில் நாட்டுக்கூத்தாக வருடம் தோறும் மேடை ஏற்றிவரு கின்றார்கள். இக் கிராமங்களில் பரம்பரையாக இருக்கும் அண்ணாவிமார்கள் பழைய கலைஞர்களையும் புதிய கலைஞர்களையும் சேர்த்து பழக்கி அவ்அவ்வூர்களில் உள்ள அம்மன் கோவில்களில் வட்டக்களரி அமைத்து அம்மன் தெய்வத்துகுரிய நாளான திங்கட்கிழமையில் மேடை ஏற்றுவார்கள். கூத்து இறுதிக்கட்டத்தில் கோபங்கொண்டிருக்கும் கண்ணகியை ''தாயே குளிர்ந்திடும் அம்மா எங்களைப் பெற்ற நீயே குளிர்ந்திடும் அம்மா'' என கண்ணகியை அம்மன் தெய்வமாக வணங்குவதுடன் கோவலன் கூத்து முடிவடைகின்றது. வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவிலில் வருடம்தோறும் வட்டக் களரி அமைத்து இதனை மேடை ஏற்றி வருகின்றார்கள்.

வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவில் தோன்றியதற்கு முல்லைத்தீவு பிரதேச மக்கள் மத்தியில் கர்ணபரம்பரையாக வரும் கதையொன்று உண்டு. வற்றாப்பழை நந்திக்கடற்கரையோரத்தில் அமைந்துள்ள வயல்வெளிகளில் மாடுகள் மேய்ப்பதற்காக இடையர்கள் செல்லுவது வழக்கம். வழக்கம் போல மாடுகளை வயல்களில் மேயவிட்டு விட்டு நந்திக்கடற்கரையிலும் பாலைமரநிழலிலும் விளையாடிக் கொண்டிருக்கும் போது வெள்ளைச் சேலையுடனும், தளர்ந்த நடையுடனும் கையில் உள்ள தடியை ஆதாரமாக ஊன்றிய படி தங்களை நோக்கி ஒரு பாட்டி வருவதைக் கண்ட சிறுவர்கள் பாட்டியை நோக்கி ஓடிச் சென்று அன்புடன் அழைத்து வந்து பக்கத்திலுள்ள வேப்பமரத்தடியில் உழவு கலப்பைக்கு வெட்டி உள்ள, வேப்பம் படுவாளுக்கு மேல் இருத்தினர். களைப்பு சோர்வுடனும் இருந்த பாட்டியை நோக்கி குசலம் விசாரித்த சிறுவர்களை நோக்கி பாட்டி தனக்கு பசிக்கின்றது எனக் கூறவே, மாடுகளில் பாலை எடுத்து வழமையாக பொங்கும் பொல்கலை அவசரமாக பொங்கி முடித்த போது பாட்டிக்கு பொங்கிய பொங்கலை கொடுப்பதற்கு இலை இல்லையே என அங்கும் இங்கும் சிறுவர்கள் பார்க்கவே பக்கத்திலுள்ள விடத்தல் மரத்தில் உள்ள இலைகளை பிடுங்கித் தரும்படி பாட்டி கூறினாள். சிறுவர்களும் மிகச் சிறிய விடத்தல் இலைகளை ஒவ்வொன்றாக பிடுங்கிக் கொடுக்கவே அவற்றை கோர்வை செய்து தட்டாக்கிய பின் அதில் தனக்கு பொங்கலைத் தரும்படி நீட்டினாள். சிறுவர்களும் தாங்கள் பொங்கிய பொங்கலை ஆச்சிக்குப் படைத்தனர். சந்தோசத்துடன் ஆச்சியும் சிறுவர்களும் சாப்பிட்டனர். களைப்பு எல்லாம் மாறி ஆச்சி தனது தலையில் பேன் எடுத்து விடும்படி கூறவே சிறுவர்களும் தலையை விரித்த போது தலை எல்லாம் கண்கள் இருப்பதைக்கண்ட சிறுவர்கள் பயந்து அதனை ஆச்சியிடம் கூறினார்கள். பதட்டப்படாமல் இருந்த ஆச்சி, இதனை ஊர்மக்களுக்கு தெரியப்படுத் துங்கள் எனக் கூறினார். சிறுவர்களும் ஓடிச் சென்று ஊர் பெரியவர்களுக்குக்கூறி அவர்களை அழைத்து வந்தபோது ஆச்சியைக் காணவில்லை. ஆச்சி இருந்த வேப்பம் படுவாள் தளைத்திருந்ததைக் கண்ட எல்லோரும் ஆச்சரியம் அடைந்திருந்தனர் ஆச்சிஇருந்த வேப்பமரத்தடியில் கோவில் அமைத்து வருடந்தோறும் வைகாசி மாத பௌர்ணமி தினத்திற்கு அண்டி வருகின்ற திங்கட்கிழமையில் பொங்கல் வைத்து வழிபட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் வேப்பமரத்தடியில் கொட்டில் அமைத்து வழிபட்ட மக்கள் தற்போது பெரிய கட்டிடங்களால் கோவில் அமைத்து அதனைச் சூழ அன்னதான மடங்களும் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

அடங்காப்பற்றை பண்டாரவன்னியன் ஆட்சி செய்த காலத்தில் முல்லைத்தீவு நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்து ஆட்சி செய்து கொண்டிருந்த நெவில் என்ற வெள்ளையன் வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவிலை அழிப்பதற்குச் சென்ற போது அங்கிருந்த பூசகருக்கும் வேற்று மதத்தவனான நெவில் என்ற வெள்ளையனுக்கும்

இடையில் ஏற்பட்ட வாய் தகராற்றின் பின் குறிப்பிட்ட தினத்தில் கோவிலுக்கு வருவதாகவும், அத்தினத்தில் கண்ணகை அம்மன் புதுமை செய்யாது விட்டால் கோவிலை அழித்து விடுதாகவும் கூறிச் சென்றான். வேதனையுடன் படுத்திருந்த பூசாரியின் கனவில் தோன்றிய வற்றாப்பழை ஆச்சி, (கோவிலுக்குள் இருக்கும் வெள்ளிப்பிரம்பினால்) வெள்ளையன் வந்ததும் பக்கத்திலுள்ள பனிச்சம்மரத்தினை வலம் வந்த பின் அதனைத் தட்டிவிடும் படி கூறி மறைந்தாள். குறிப்பிட்ட நாளில் வெள்ளையன் வந்ததும் கோவிலுக்குள் இருந்த வெள்ளிப்பிரம்பினை எடுத்து வந்து பனிச்சமரத்தினை வலம் வந்த பின் அந்த பனிச்ச மரத்தினைத் தட்டினார். என்ன ஆச்சரியம்! நிறைகாய்களுடன் இருந்த பனிச்சமரம் ஆடத்தொடங்கி அதில் உள்ள காய்கள் எல்லாம் வெள்ளையர்கள் மேல் குண்டுகளாக வீசப்பட்டன. தலைதெறிக்க தப்பினால் போதும் என்று நந்திக்கடல் ஊடாக முல்லைத்தீவு நோக்கி ஓடினார்கள். கோடைகாலத்தில் குதிரை பாய்ந்த இறக்கம் என அழைக்கப்படும் வெள்ளையர் குதிரையில் பாய்ந்த பள்ளத்தினை இப்போதும் காணலாம். அந்த பனிச்சமரமும் அதன்பின் காய்ப்பதில்லை. அதில் வெள்ளை நாகம் குடியிருப்பதைக் கண்ட மக்கள் அதன் அடியில் நாகதம்பிரானுக்கு கோவில் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் தொடங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்பே வன்னிப் பிரதேச மக்கள் குறிப்பாக பண்டார வன்னியன் ஆட்சி செய்த அடங்காகப் பற்று மக்கள் அதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்வார்கள். மக்கள் மனதிலும் ஒரு குதூகலத்தைக் காணக்கூடியதாக இருக்கும். இளைஞர்கள் மத்தியிலும் ஒரு உற்சாகத்தைக் காணக்கூடியதாக இருக்கும். வீட்டுப் பெண்கள் கூட வற்றாப்பழை கண்ணகை அம்மன் பொங்கலில் வீடுகளுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு தங்களைத் தயார் செய்து கொண்டிருப்பார்கள். பொங்கல் நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்பு பதினைந்து நாட்களோ அல்லது ஏழு நாட்களோ அப்பிரதேச மக்கள் கண்ணகை அம்மனுக்கு விரதம் இருந்து பொங்கல் தினத்தன்று கோவிலுக்குச் சென்று கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள கிணறுகளில் நீராடி கற்பூரச் சட்டி எடுத்தோ அல்லது காவடி எடுத்தோ அல்லது கண்குடம் வைத்தோ அல்லது தீமிதித்தோ தமது நேர்த்திக் கடன்களை முடிக்கின்றனர் பொங்கல் தினத்தன்று காவடி எடுப்பது ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இருக்கின்றது. சூழவுள்ள கிராம மக்கள் தங்கள் ஊர் கோவிலிருந்தும் வற்றாப்பழை கண்ணகை அம்மன் கோவிலுக்கு அண்மையில் இருந்தும் கூட்டம் கூட்டமாக காவடி எடுத்து வந்து தமது நேர்த்திக் கடன்களை முடிக்கின்றனர். மேளவாத்தியங்களுடனும் ஆட்டத்துடனும் காவடிகள் வர, அவற்றின் பின்னால் கற்பூரச்சட்டிகள், பால் செம்புகள் ஏந்தியபடி பெண்கள் பின் தொடர்ந்து வர அவற்றைச்சூழ மக்கள் வரும் இக்காட்சிகள் மக்கள் மனத்தை மிகவும் கவருவனவாக இருக்கும். முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தண்ணீரூற்று, முள்ளியவளை, குமுளமுனை, கொக்கிளாய், ஒட்டிசுட்டான் முதலிய கிராமங்களில் இருந்து அவ்வூர்மக்கள் முற்காலத்தில் சோறு கறிகளையும் சமைத்துக் கொண்டு மாட்டு வண்டிகளில் தமது உறவினர் சகிதம் இரவு, இரவாகப் புறப்பட்டு ஒன்றின் பின் ஒன்றாக வரும்போது மாடுகளுக்கு கட்டப்பட்ட சலங்கை ஒலி நாத ஓசைகளை எழுப்பிக்கொண்டே இருக்கும். பொழுது விடியும் போது நந்திக்கடற்கரையை வந்தடையும் வண்டி நிரைகளில் இளம்காளைகளை பூட்டி ஏற்கனவே பழக்கிலைவத்திருந்தவர்கள் நிரைகளை விலக்கி முந்திச் செல்லும் போது ஏனைய வண்டிக்காரர்களும் தங்களது மாடுகளை உசார்படுத்தி ஓடவைக்கும் போது ஒரு மாட்டு வண்டிப் போட்டி நடைபெறுவது போன்ற காட்சியாகத் தான் இருக்கும். நிரை வண்டிகள் பாலைமரங்களின் கீழ் வண்டிகளை நிறுத்தி விட்டு, கோவிலைச் சூழவுள்ள கிணறுகளில் நீராடி தங்களது நேர்த்திக் கடன்களை முடிப்பார்கள் அதன்பின் பாலை மர நிழல்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தங்களது வண்டிகளுக்கு வந்து, கடகம், பெட்டிகளில் கொண்டு வந்த சோறு, கறிகள், தயிர் எல்லாவற்றையும் சேர்த்து குழைத்து கவளம், கவளமாக வட்டமாக இருந்து எல்லோரும் சாப்பிடுவார்கள். பின்பு மரநிழல்களில் படுத்து ஓய்வு எடுத்த பின் கோவிலைச் சூழ நடைபெறும் நிகழ்ச்சிகளையும் கடைகளையும் பார்ப்பதற்கு சிறுவர்கள் செல்ல, பெண்கள் தங்களுக்குத் தேவையான வீட்டுப்பொருட்களை வாங்க கடைகளுக்குச் செல்ல வயோதிபர்கள் கோவிலுக்குள் படிக்கும் இலம்பு கூறலைக்கேட்பதற்குச் செல்வார்கள். காலங்களின் கோலத்தால் இக்காட்சிகள் எல்லாம் கனவுக் காட்சிகளா என எண்ணவும் தோன்றுகின்றது.

வற்றாப்பழை கண்ணகை அம்மன் பொங்கல் நடைபெறும் போதுதான் கதிர்காம பாதயாத்திரிகர்கள் ஒன்று கூடுவார்கள். வன்னிப் பிரதேச யாத்திரிகர்களும், யாழ்ப்பாணத்திலிருந்து கரையோரப்பாதை வழியாக வரும் யாத்திரிகர்களும் வற்றாப்பழை பொங்கலில் கலந்து கொண்ட பின் எல்லோரும் ஒன்று சேர்ந்து கரையோரப்பாதை வழியாக தமது கதிர்காமப் பாத யாத்திரையைத் தொடங்குவார்கள்.

வற்றாப்பழை கண்ணகை அம்மனுக்கு விழா எடுக்கும் இன்னொரு தினம் பங்குனி திங்களாகும். ஒவ்வொரு பங்குனி மாதத்திலும் வரும் திங்கட்கிழமைகளில் விசேஷ பூசைகளும் கடைசி பங்குனி திங்களில் விஷேச வழிபாடுகள் நடைபெறும்.



# மண்முனைப் பற்று

நீர்வளம் நிலவளம் மலிந்த மட்டுமாநகரின் தென்பால் ஐந்து மைல் தொலைவில் உள்ளது மண்முனை பற்று. இப்பற்று ஆரையம்பதி, செல்வாநகர், பாலமுனை, வேடர் குடியிருப்பு, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், மண்முனை, வம்மியடிமுனை, காங்கேயன் ஓடை என்னும் கிராமங்களை உள்ளடக்கியதாகும். வடக்கே காத்தான்குடி என்னும் முஸ்லிம் கிராமமும் கிழக்கே வங்காள விரிகுடாக்கடலும் தெற்கே குருக்கள்மடம் என்னும் தமிழ்க்கிராமமும் மேற்கே மட்டக்களப்பு வாவியும் எல்லைகளாகும்.

க. இராசரெத்தினம்

புராதன காலத்தில் இப்பிரதேசம் அடர்ந்த காடுகளால் விளங்கிற்று. இங்கே வேடுவர்களும் திமிலர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். வேடுவர்கள் வாழ்ந்த பகுதி இன்றும் அவர்களின் பெயர்களினாலே வழங்கப்படுகிறது. காலவரையில் வேடுவர்கள் இடம் பெயர்ந்து மண்முனை மேற்கு தாந்தாமலைச்சாரலுக்குச் சென்று விட்டனர்.

மண்முனைப் பிரதேசத்தை உருவாக்கியவர் கலிங்கதேசத்து இளவரசி உலகநாச்சி என்பவளாகும். அசோக மன்னனரின் படையெடுப்புக்களாலும் முகலாயர்களின் ஆக்கிரமுக்களினாலும் ஒருகால் கலிங்கதேசம் தளர்வுற்றது. அக்காலத்தில் கலிங்கதேசத்து மக்கள் புலம் பெயரலானார்கள். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களுள் உலக நாச்சியும் ஒருவராவார். கலிங்கதேசத்து மன்னன் குகசேனனின் மகள் உலக நாச்சி. இவள் தனது சகோதரன் உலக நாதனுடனும் இன்னும் சில குடி மக்களுடனும் வர்த்தகப்படகொன்றில் ஏறி இலங்கை வந்தனர். உலகநாச்சி தன்னுடன் புத்ததசனம் ஒன்றையும் குக வம்சத்தினரால் கைலையிலிருந்து பெற்ற ஒரு மிகச்சிறிய சிவலிங்கம் ஒன்றையும் கொண்டு வந்தாள். இவர்கள் யாழ்ப்பாணம் மணற்றுயில் இறங்கி அங்கிருந்து அநுராதபுரம் வந்தடைந்தனர். அப்பொழுது அநுராதபுரத்தை ஆண்டுகொண்டிருந்தவன் மேகவண்ணன் என்னும் மன்னனாகும்.

உலக நாச்சி மேகவண்ணனிடம் சென்று முகமன் கூறி புத்த தசனத்தையும் அவன் கையிற்கொடுத்தாள். மேகவண்ணன் மகிழ்ந்து நல்லாசி கூறி உபசரித்து அவர்களுக்கு வேண்டுவன யாதென வினவ; அவர்கள் தாங்கள் குடியிருக்க நிலம் வேண்டும் மெனக் கேட்டுக் கொண்டனர். மன்னன் புளங்காங்கிதமடைந்து. தனது நண்பன் குணசிங்கன் என்பவன் மட்டக்களப்பை ஆண்டுவருவதாகவும் அவனிடம் செல்லுமாறும் அம்மன்னனுக்குச் செய்தி ஒன்றையும் எழுதிக் கொடுத்தான். உலக நாச்சியும் கூட்டத்தினரும், கொங்குகாசி அம்பன்பிட்டியூடாக மட்டக்களப்பை அடைந்தனர். அக்காலத்தில் மட்டக்களப்பு சம்மாந்துறை வீரமுனைக்கு அணித்தாக இருந்தது போத்துக்கீயர் 1626ல் தற்போதைய இடத்திற்கு மாற்றினர்.

உலகநாச்சியும் கூட்டத்தினரும் குணசிங்கனை அடைந்து முகமன் கூறி மேகவண்ணனின் செய்தியையும் கொடுத்தனர். அரசன் வினாவிய பொழுது எவரும் குடியிராத பிரதேசம் தாங்கள் குடியிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அரசன் மிகவும் சந்தோஷமடைந்து; தற்போதைய மண்முனைப் பிரதேசத்தை வழங்கினான். உடன் தனது பணியாளர்களையும் அவர்கள் குடியிருக்க வேண்டிய உதவிகள் வழங்குமாறு அனுப்பிவைத்தான். உலகநாச்சி இலங்கைக்கு வந்தது கி.பி 362-380 இடைப்பட்டகாலம் என இந்தியக் கல்வெட்டு **Epindxu 246** ம், மகாவம்சம் அத்தியாயம் 37ம் கூறுகின்றன.

உலக நாச்சியும் கூட்டத்தினரும் மண்முனையைத் துப்பரவு செய்து தடிகளாலும் கிடுகுகளாலும் வீடுகள் கட்டிக் குடியிருக்கலானார்கள். உலகநாச்சி தனக்கென ஒரு மாளிகையும் கட்டிக் கொண்டு மண்முனைப் பிரதேசத்தை ஆண்டு வந்தாள். அவள் மாளிகை கட்டிக் குடியிருந்த இடம் இன்றும் 'மாளிகையடி' என வழங்கப்படுகிறது. இந்த இடம் தாளங்குடா கிறிஸ்தவ தேவாலயத்திற்குத் தென்புறமாகும்.

சிறிது காலம் சென்றதும் உலக நாச்சி கலிங்க தேசமான ஒறிசா நாட்டிலிருந்து குகன் குடும்பம் நூற்றி ஆறும் சிறைக் குடும்பம் முப்பதும் தருவித்து மண்முனையில் குடியமர்த்தினாள். ஒவ்வொரு குடியினர்க்கும் தனித்தனி மடுக்கள் நீர் நிலைகளையும் உண்டாக்கிக் கொடுத்துள்ளாள். அம்மடுக்கள் தற்பொழுது தூர்ந்த நிலையிலுள்ளன.

உலகநாச்சியினால் கொண்டுவரப் பெற்ற சிவலிங்கத்தை மண்முனை மேற்கு வாவிக்கணித்தாய் களிமண்ணினால் ஒரு சிறு கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்துள்ளாள். அக்கோயில் தற்பொழுது கற்கட்டிடமாக உள்ளது. மண்முனைப் பிள்ளையார் கோயில் என வழங்கப் பெற்றுவருகிறது. இக்கோயிலுக்கணித்தாக 'மண்முனைத் துறை' என ஒரு துறையுண்டு. கொக்கட்டிச்சோலைப் பகுதிகளுக்குப் பிரயாணம் செய்பவர்கள் இத்துறை ஊடாக அக்கரப்பட்டுச் செல்ல வேண்டும். வேளாண்மைச் செய்கை காலங்களில் இத்துறை மிகவும் பிரபல்யமடைகிறது.

உலகநாச்சியின் பின் இவளுக்கு வாரிசு இல்லாமையால் மண்முனை மீண்டும் மட்டக்களப்பு மன்னன் ஆட்சிக்குக் கீழ் சென்றது. வளமும் குன்றிற்று. எனினும் தற்பொழுது சீரும் சிறப்புமாக விளங்குகின்றது.

குணசிங்க மன்னனது காலம் கலியாப்தம் மூவாயிரத்து ஐந்நூறு என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அவனது தந்தை அமரசேனன் இவனது காலம் கலிபிறந்த மூவாயிரத்து நாநூற்றறுபத்தாறு என மட்டக்களப்பு

மான்மியம் விளம்புகிறது. இவனது காலத்தில் இராமநாதபுரத்திலிருந்து ஏழு பெண்கள் தங்களது கணவன் மாருடனும் வன்னியர் குலத்து குருமார் குடும்பங்கள் ஐந்துடனும் வந்து பிரிந்து வேறுவேறு கிராமங்களில் குடியிருந்தனர். இவர்களை அரசன் வன்னிச்சிமார் என விருது வழங்கிக் கௌரவித்தான். இவர்கள் முறையே கலைவஞ்சி, மங்கி யம்மை, செட்டிச்சி, மகிழரசி, பாலம்மை, இராசம்மை, வீரமுத்து என்பவர்களாவார்கள். இவர்களில் பாலம்மை என்பவள் பாலமுனையிலும் செட்டியம்மை செட்டிகுளத்திலும் குடியிருந்ததாக அறிகிறோம். ஏனையோர் களுவாஞ்சிக்குடி, மங்கிக்கட்டு, மகிழூர், அம்பாறை, முத்துகல் ஆகிய இடங்களில் குடியமர்ந்ததாக மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி என்னும் நூல் கூறுகிறது. இவர்கள் இலங்கையிலுள்ள வைதூலிக (சைவம்) சமயத்தை மாற்றி இராம வழிபாட்டை ஏற்படுத்தும் நோக்கமாக இங்கு வந்தவர்கள் ஆவார்கள்.

பாலம்மை குடியிருந்த இடம் பாலமுனை எனவும் செட்டியம்மை வாழ்ந்த இடம் செட்டிகுளம் எனவும் அழைக்கப்படுகின்றன.இவைகள் மண்முனைப் பிரதேசத்தின் சிறுகிராமங்களாகும். செட்டிகுளம் தூர்ந்து தரிசுநிலமாயிற்று. பாலமுனையில் அனாதியில் தமிழ் மக்கள் குடியிருந்தனர். அருகாமையில் வேடர்குடியிருப்பு உண்டு. இக்கிராமங்களில் வாழ்ந்த மக்களை மதமாற்றம் செய்வதற்காக கிறிஸ்தவர்கள் ஒரு பாடசாலையைக் கட்டினார்கள். காலப்போக்கில் பாலமுனையில் முஸ்லிம் குடியேற்றம் அதிகரித்ததன் காரணமாக இப்பாடசாலை தற்பொழுது முஸ்லிம் பாடசாலையாக மாறிவிட்டது. இக்கிராமம் கடற்கரையை அண்டிய இடமாகையால் இங்குள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் மீன்பிடித்தொழில் செய்கின்றனர். ஏனையோர் நெசவுத்தொழில் செய்கின்றனர். இங்கு தென்னந் தோட்டங்களுமுண்டு.

கண்ணகை அம்மனின் விழா வளர்ச்சிக்கும் இம்மண்முனையே துணையாக அமைகிறது. பறங்கியர் இலங்கை யைக்கைப்பற்றிய காலத்தில் அவர்கள் சிவாலயங்களை அழித்தனர். சைவ ஆசாரங்களுக்குத் தடைவிதித்தனர். கிறிஸ்தவ மதத்தை மக்களிடையே திணித்தனர். இவைகளைத் தாங்கிக் கொள்ள இயலாத நைநாதீவு ஒத்துக்குடாவில் வசித்து வந்த கந்தப்பர் என்னும் சைவ ஆசார சீலர் மட்டக்களப்பில் இந்தத் துன்பநிலை இல்லை என அறிந்து தனது சகோதரர், ஒரு புதல்வி, மூன்று நம்பிமார் குடும்பங்கள் ஏழு நாடார் குடும்பங்களுடன் யாழ்ப்பாணத்தை விட்டு மட்டக்களப்புக்கு வந்தனர். இவர்கள் தங்களுடன் ஏழு கண்ணகி சிலைகளையும் வைரவர் விக்கிரகம் ஒன்றையும் கொண்டு வந்தனர். நம்பி குடும்பத்தினர் ஊறணியில் குடியேறினார்கள். ஏனையோர் மண்முனைக்கு வந்து புதுக் குடியிருப்புக்கு அணித்தாய் சிறாம்பியடித்து அதில் வாழ்ந்து வரலானார்கள் இன்றும் இந்த இடம் சிறாம்பியடி எனக் கூறப்படுகிறது.

அப்பொழுது மட்டக்களப்பு கண்டியரசனின் அதிகாரியின் பராமரிப்பில் இருந்தது. கந்தப்பர் ஊசாடுவதை அறிந்த அதிகாரி இவர் பறங்கியரின் ஒற்றனாக இருக்கக்கூடும் எனச் சந்தேகித்து கண்டியரசனுக்கு முறைப்பாடு செய்தான். அரசன் கந்தப்பரின் மகள் தவிர ஏனையோரை வாவியில் அமிழ்த்திக் கொன்றுவிடுமாறு கட்டளை பிறப்பித்தான். கட்டளை நிறைவேற்றப்பட்டது. சிலர் தப்பினர் கந்தப்பர் மகள் செம்பியம்மை தன்னிடமிருந்த கண்ணகி சிலை ஏழில் ஒன்றை தான் வைத்துக் கொண்டு ஏனையவைகளை வேறு வேறு கிராமங்களுக்குக் கொடுத்து விட்டாள்.

தப்பிப் பிழைத்த நாடார் குடும்பங்கள் கண்ணகி சிலைகள் கொடுக்கப்பெற்ற கிராமங்களில் சென்று குடியேறிக் கண்ணகி வழிபாட்டிற்கு வேண்டிய தொண்டு ஊழியங்கள் செய்து வரலானார்கள். இதன் பின்னரே மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு மேலோங்கிற்று. செம்பியம்மையிடமிருந்த கண்ணகி சிலையை அவளது அந்திம காலத்தில் ஆரையம்பதி கண்ணகி கோயிலுக்குக் கொடுத்துள்ளாள். ஆரையம்பதி மக்கள் இக்கண்ணகியம்மனை மிகவும் பயபக்தியோடு போற்றியும் வழிபட்டும் ஆராதித்தும் வருகிறார்கள்.

ஆரையம்பதிக்கும் மண்முனைக்கும் இடையில் கோவில் குளம் என்னும் ஒரு சிறு கிராமம் உண்டு. ஒரு காலத்தில் இங்கு மக்கள் செறிந்து வாழ்ந்துள்ளனர். இங்கே ஒருசைவக்கோயில் இருந்து அழிந்த தடயங்கள் உண்டு. 1980ல் இந்த இடத்தை அகழ்ந்த பொழுது ஆறங்குலமளவிலான படிகலிங்கம் ஒன்றும் நாக படத்தின் கீழ் திருமால் இருப்பது போன்ற ஒரு விக்கிரகமும் வேறு சில உலோகத்துண்டுகளும் கண்டெடுக்கப் பெற்றன. கோயில் இருந்த இடத்தில் செங்கற் தூசிகளும் ஓட்டுத் துகள்களும் காணப்படுகின்றன. இந்த இடத்திலிருந்து ஆறடியளவிலான

உயரமும் ஒன்றரையடி அகலமும் ஒன்றரையடிக் கனமுள்ள கருங்கற்கள் வேறு கோயில்கள் கட்டுவதற்காக எடுத்துச் செல்லப் பெற்றுள்ளன. ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலில் சில கற்களைக் காணக்கூடியதாகவுள்ளன.

இவ்விடத்திலிருந்த கோயில் சிவன் கோயிலாகவும் உலகநாச்சி காலத்தில் கட்டப் பெற்றிருக்கலாம் எனவும் சிலர் கருதுகின்றார்கள். அங்கு காணப்படும் எச்சங்கள் உலகநாச்சியின் காலமான மூன்றாம் நூற்றாண்டிற்குப் பொருத்தமாக இல்லை. இக் கோயில் பறங்கியரால் சேதப்படுத்தப்படுத்தப்பட்டதாகவும் சிலர் கணிக்கின்றனர். இவை எதற்கும் சான்றுகள் கிடைப்பதாக இல்லை. வணக்கத்திக்குரிய பிதா குவெய்றஸ் எழுதிய **The Temporal & Spiritual Conquest** என்னும் புத்தகத்திலோ **'Ancient Ceylon'** என்னும் நூலிலோ வேறு எந்த சரித்திர நூலிலுமோ இப்படியான கோயில் ஒன்று போர்த்துக்கீசரால் சேதப்படுத்திய செய்திகளைக் காணக்கூடியதாக இல்லை. கோயில் ஒன்று இருந்தது என்பது உண்மை.

இப்பற்றின் வடக்கு எல்லையிலுள்ளது ஆரையம்பதி என்னும் கிராமம். முன்னொருபோது காத்தான்குடி என்னும் முஸ்லிம் கிராமமும் ஆரையம்பதியும் ஒரே கிராமமாக விருந்ததென்றும் அப்போதிருந்த பிரித்தானிய அரசு இக்கிராமத்தை இருவேறு கிராமங்களாக 1872ல் பிரித்து முஸ்லிம் வாழும் பகுதியைக் காத்தான்குடியாகவும் தமிழர் வாழும் பகுதியை ஆரைப்பற்றை எனவும் பிரகடனப் படுத்தியதாக ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. ஆரைப்பற்றை தற்போது ஆரையம்பதி என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இக்கிராமத்தில் அநாதியில் குருகுல நாகர் வாழ்ந்து வந்தனர் எனவும் பின்பு சிங்கள அரசர்களால் மலையாள தேசத்தில் இருந்து கொண்டு வரப்பெற்ற போர் வீரர்களின் சந்ததியினர் வந்து குடியேறினர் எனவும் அறிய முடிகிறது.

பிரித்தானியர் காலத்தில் மண்முனைப் பற்று மக்களால் தெரிவு செய்யப் பெற்ற ஒரு கிராமச் சங்கத்தினால் நிர்வகிக்கப் பெற்று வந்தது. (A) பின்பு இச்சங்கம் வேறு பல பெயர்களில் மாற்றமடைந்து தற்போது மக்களால் தெரிவு செய்யப்பெற்ற ஒரு பிரதேச சபையினால் நிர்வகிக்கப் பெற்று வருகிறது. (B) இச்சபை சுகாதாரம், வீதியமைத்தல், கிராம அபிவிருத்தி, சன சமூக அபிவிருத்தி ஆகியவைகளைக் கவனித்து வருகிறது. மேலும் சந்தை, நூலகங்கள், விளையாட்டு மைதானம் ஆகியவைகளையும் நடத்தி வருகிறது.

இங்கு வாழும் மக்கள் கமக்காரராகவும், மேசன், தச்சன் தொழில் செய்பவர்களாகவும் தும்புத் தொழிலில் ஈடுபடுபவர்களாகவும், மீன்பிடித்தொழில் செய்பவர்களாகவும் அரசாங்க உத்தியோகத்தவர்களாகவும், ஆசிரியர் களாகவும் இருக்கிறார்கள். அரசாங்கப் பாடசாலைகளும், மகாவித்தியாலயம் ஒன்றுமுண்டு. மண்முனைப் பற்று ஒரு தனிப்பிரதேசமாக இயங்குகின்றது. அரசினர் வைத்தியசாலை பிரதேச செயலாளர் காரியாலயம், கமத்தொழில் சேவை நிலையம், பிரதேசசபை, ஈமக்காலை ஆகியன ஆரையம்பதியில் செயற்படுகின்றன.

தென்னந்தோட்டங்களும் மாந்தோப்புக்களும் ஆல, அரசு, புன்னை, நாவல் முதலான மரங்களும் வளஞ் செய்கின்றன. வேளாண்மை நிலங்கள் சேவுகப்பற்று செம்பிப்பற்று என அழைக்கப்படுகின்றன.

இங்கு 43 இந்து ஆலயங்களும்,03 கிறிஸ்தவ தேவாலயங்களும், 08 இஸ்லாம் பள்ளிவாசல்களும் உள்ளன.


(A) முதலாவது அக்கிராசனராக தம்பிமுத்து சின்னத்தம்பி விளங்கினார்.
(B) பிரதேச சபையின் முதலாவது தவிசாளராக திரு. கணபதிப்பிள்ளை நவரட்ணராசா இருந்து வருகிறார்.

*பொதிகையிலே பிறந்ததுவும்*
*புலவர்மடி தவழ்ந்ததுவும், புரவலர் தம்*
*நிதியமெனக் கொலுவிலிருந்து*
*நீடு புவி ஆண்டதுவும் தெய்வீகத்தின்*
*கதிரினது விழிக்கடையின்*
*கருணையிலே ததும்புவதும் கண்டு எந்தன்*
*மதிசுடரும் கவிபிறக்கும்*
*மனமளித்த தமிழ்த்தாயே வணங்குகின்றேன்.*

**வ. ஞானமாணிக்கம்**
**கல்முனை.**

# மட்டக்களப்புத் தமிழரின் பாரம்பரிய திருமணக் கலாசாரம்

கு. சண்முகம் ஆசிரியர், களுவன்கேணி



ஆயிரம் காலத்து பயிர் என்றும், சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது என்றும் பெருமையாகப் பேசிக்கொள்ளும் திருமணம் மனித சமுதாயத்தின் வளர்ச்சிப்படியில் முக்கியமானதொரு கட்டமாகும்.

பெற்றோரின் அரவணைப்பிலே வாழ்ந்த தம் பிள்ளைகளை பருவ வயது வந்ததும் பொருத்தம் பார்த்து குமரனுக்கு குமாரத்தியையும், குமாரத்திக்கு குமரனையும் சமய சம்பிரதாய கலாசார அனுட்டானத்துடன் திருமணம் செய்து வைத்து திருமணம் என்னும் நல்லறத்துள் நுழைய வைப்பதே திருமணமாகும்.

பெருமையும், சிறப்பும் முக்கியத்துவமும் மிக்க இந்த திருமணக்கலாசாரம் இடத்துக்கு இடம், இனத்துக்கு இனம், சமயத்துக்கு சமயம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஆயினும் மட்டக்களப்புத் தமிழ் மக்களிடையே தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் திருமணக் கலாசாரம் தனிச்சிறப்புமிக்கது.

மட்டக்களப்பு திருமணக் கலாசாரம் நவீன நாகரிக வளர்ச்சியின் காரணமாக தாக்கத்துக்குள்ளாகி நகரப் பகுதிகளிலிருந்து அருகி வந்தாலும் மட்டக்களப்பு கிராமப் புறங்களில் இன்றும் சிறப்புற்று விளங்குவது கண்கூடு.

மட்டக்களப்பு திருமணக் கலாசாரம் திருமணம் என்ற இறுதிக்கட்டத்தை யடைவதற்கு பல கட்டங்களைத் தாண்ட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திருமணம் பேசுதல், பொருத்தம் பார்த்தல், பெண்பார்த்தல், பெட்டி கொண்டு போதல், நாள் குறித்தல், தாலிக்கு பொன்னுருக்குதல், கூறைகொள்ளுதல், திருமணம் என்பன முக்கிய கட்டங்களாகும்.

திருமணம் முடிந்து குறிப்பிட்ட ஒரு நாளில் சுற்றம் புடைசூழ மங்கலவாத்தியம் குரவை சகிதம் மணமகனின் தாய் வீட்டுக்கு தம்பதியர் செல்வது ''கால்மாறுதல்'' எனப்படும்.

### திருமணம் பேசுதல்

பெரும்பாலும் இந்தத் திருமணப்பேச்சு தமது சொந்தத்திற்குள் நடைபெறுவது தான் வழக்கம். தமது குடும்ப சொத்துக்களை தமது சொந்தக்காரர் அனுபவிக்க வேண்டு மென்பது தான் இதன் உள்நோக்கம். உடன்பிறந்த சகோதரர்களிலே ஆண் பெண் சகோதரங்களிருப்பது இயல்பு. பெண் சகோதரத்தின் பிள்ளைகள் ஆண் சகோதரத்து பிள்ளைகளுக்கு மச்சான் மச்சாள் முறையாகும். இதே போலவே ஆண் சகோதரத்தின் பிள்ளைகள் பெண் சகோதரத்தின் பிள்ளைகளுக்கு மச்சான் மச்சாள் முறையாகும். இப்பிள்ளைகளுக்கு வயது வந்ததும் (மச்சான் மச்சாள் முறையானவர்களை) இன்னாருக்கு இன்னார் என தமக்குள் பேசித்தீர்மானித்து விட்டு இருவரினதும் சம்மதத்தையறிய முயற்சிப்பர். இந்த விடயத்தில் மச்சான் மச்சாள் முறையானவர்களே ஈடுபடுவர்.

### பெண் பார்த்தல்

திருமணம் பேசி முடிவெடுத்ததும் குறிக்கப்பட்ட ஒரு நல்ல நாளில் உறவினர் சகிதம் முதன் முதலாக மாப்பிள்ளை பெண்ணினுடைய வீட்டுக்கு செல்வது பெண்பார்த்தல் எனப்படும்.

அன்றையதினம் நிச்சயிக்கப்பட்ட பெண் ஆடை அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பாள். அன்று மாப்பிள்ளைக்கு சிற்றுண்டி குடிபானம் என்பவற்றை மணமகளே பரிமாறுவாள். இதன் மூலம் ஒருவரையொருவர் கண்டு கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பெட்டி கொண்டு போதல்

மட்டக்களப்பு திருமணக் கலாசாரத்தில் மிக முக்கியமான இந்த நிகழ்வு இன்றும் பின்பற்றப்படுவது கண்கூடு. இது மட்டு அன்னைக்கே உரித்தான உன்னத பாரம்பரியமாகும்.

பெண் வீட்டார் குறிக்கப்பட்ட ஒரு முகூர்த்தத்தில் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்லத் தயாராகுவர். ஐந்து அல்லது ஏழு பெட்டிகளில் உணவுப் பண்டங்கள் தயார் செய்யப்படும். இதில் அரிசிமாவும் சீனிப்பாகும் கொண்டு தயாரிக்கப்பட்ட அரிதாரம், முறுக்கு, அச்சு, கொழுக்கட்டை என்பன இவ்வுணவுப் பண்டங்களில் அடங்கும். இதில் விசேடமென்னவெனில் மாப்பிள்ளை கொழுக்கட்டை முக்கிய இடம்பெறும். குறைந்தது ஒரு கொத்துமாவில் தயாரிக்கப்பட்ட மூன்று கொழுக்கட்டைகள் ஒரு பெட்டியில் வைக்கப்படும். இதில் ஒரு கொழுக்கட்டையில் மணமகளின் நாம எழுத்து பொறிக்கப்பட்ட கணையாழி உள்ளடக்கப்பட்டிருக்கும். இப்படியாகத் தயார் செய்யப்பட்ட பெட்டிகளுடன் வெற்றிலை முதலிய மங்கலப் பொருட்கள் அடங்கிய வட்டாசும் தவறாது இடம் பெறும். இதில் இடம் பெறும் மட்டு மண்ணுக்கே உரித்தான மற்றொரு அம்சம் தயிர்ப்பானை, வாழைக்குலை காவுதலாகும். இதனை தோழன் மாப்பிள்ளையே கொண்டு செல்வார்.

வட்டா முன்னேயும் மாப்பிள்ளை கொழுக்கட்டை பெட்டி நடுவிலும் தயிர்ப்பானை வாழைக்குலை கடைசியிலும் இடம் பெறத்தக்கதாக வெள்ளை பிடித்து குரவை போட்டு மாப்பிள்ளை வீடு செல்வர் (பெட்டிகள் அனைத்தும் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருக்கும்)

மாப்பிள்ளை வீட்டு வாசலை அடைந்ததும், மாப்பிள்ளை வீட்டார், பன்னீர் தெளித்து சந்தணம் குங்குமம் தாம்பூலம் கொடுத்து வரவேற்று பெட்டிகளை மாறுவர்.

இன்றைய நாளில் மாப்பிள்ளை வீட்டில் விருந்துண்டு மகிழ்வதோடு சீதனம் பேசுதலும், திருமணத்துக்கும், தாலிக்குப் பொன்னுருக்குவதற்கும் நாள்கள் நிச்சயிக்கப்படும். இதற்கு அவ்வூர் சோதிடரின் பங்களிப்பும் இடம் பெறும்.

### தாலிக்கு பொன்னுருக்கல்

தாலிக்குப் பொன்னுருக்கும் இந்நிகழ்வு மட்டக்களப்பு தமிழர் திருமணக் கலாசாரத்தில் தனித்துவம் பெறுகிறது. தாலிக்கு பொன்னுருக்கினால் மணப்பெண் வீட்டு வளவுக்கு வெளியே, திருமணம் நடைபெறும் வரை செல்லக் கூடாது என்றும், இந்தவைபவத்தில் அமங்கலிகள் கலந்து கொள்ள கூடாது என்றும் விதியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாப்பிள்ளை மனையில் இடம் பெறும் இவ்வைபவத்தில் பெண் வீட்டாரும் கலந்து கொள்வர். பொற்கொல்லர் அழைக்கப்படுவார். பிள்ளையாருக்கு மடைவைத்து தூபதீபம் காட்டி வழிபாடு செய்து, இரு வீட்டாரும் பயபக்தியோடு நிற்க பொற்கொல்லர் பொன்னை உருக்கி தேங்காயுடைத்து முடியுள்ள பாதியில் வெற்றிலை அரிசி மலர் இதன் நடுவே பொன்னை வைத்து மாப்பிள்ளையிடம் கொடுப்பார். தட்சணை வைத்து வணங்கி மாப்பிள்ளை பெற்று மற்றவர்களுக்கும் காட்டுவார். அவர்களும் வணங்கி தட்சணைவைப்பர். பொற்கொல்லருக்கு அரிசி மரக்கறி வேட்டிசால்வை தானமாக வழங்கப்படும்.

### கூறை கொள்ளல்

பெண்ணுக்கு மாப்பிள்ளை வாங்கும் ஆடைகள், பெட்டி என்பன கூறை என்றே சொல்லப்படும். இதேபோல் பெண் வீட்டார் ஆணுக்கு வாங்கும் ஆடைகள் கூறை என்றே சொல்லப்படும். இவற்றை வாங்குவதற்கு இரு வீட்டாரும் தான் செல்வர். வாங்கிய பொருட்களை கூறைப்பெட்டிக்குள் வைத்து பக்குவமாகக் கொண்டு வருவர்.

### ஊருக்குச் சொல்லல்

இரு வீட்டு உறவினர்களும் வெற்றிலைத் தட்டத்துடன் அழைப்பாளர் இல்லங்களுக்குச் சென்று வெற்றிலை கொடுப்பர். இவ்வாறு செய்யும் போது சம்பவம் என்னவென்பதை மற்றவர் அறிந்து கொள்வர்.

### திருமணம்

பிரதேசத்துக்குப் பிரதேசம் இனத்துக்கு இனம், சமயத்துக்கு சமயம் வேறுபட்டுக் காணப்படும் திருமணக் கலாசாரம் மட்டக்களப்பு பிரதேசத்தில் இம்மண்ணுக்கே உரித்தான பல சிறப்பியல்புகளை கொண்டு திகழ்வது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

### பால் தப்புதல்

திருமணநாளன்று குறிக்கப்பட்ட திருமண நாளுக்கு முன்பதாக மாப்பிள்ளைத் தோழன் சகிதம் ஒருகுழுவினர் மாப்பிள்ளை வீட்டுக்கு பால் கொண்டு வந்து மாப்பிள்ளையின் சிரசிலே தப்பி முழுக வார்த்து புத்தாடை அணிவித்து தலைப்பாகை கட்டி ஏகாவடம் போட்டு வெளிக்கிடுத்துவர்.

இதேபோல் மாப்பிள்ளையின் சகோதரி சகிதம் ஒரு குழுவினர் பெண் வீட்டுக்கு சென்று பால் தப்பி முழுக வார்த்து புத்தாடை அணிவித்து அலங்கரிப்பர்.

குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்பதாக பெண் வீட்டார் மங்கலப் பொருட்கள் பெட்டிகள் மேளதாள வாத்தியங்கள் சகிதம் குரவையிட்டு வெள்ளை பிடித்து மாப்பிள்ளை கூட்ட வருவர். மாப்பிள்ளை வீட்டுக்கு வருவோரை பன்னீர் தெளித்து மலர் தூவி வரவேற்று பெட்டிகளை மாறி அழைத்துச் சென்று பந்தியில் அமரச் செய்வர். சிற்றுண்டி குடிபானம் என்பன பரிமாறி தாம்பூலமருந்தி, மாப்பிள்ளையின் சகோதரி கூறைப்பெட்டி தூக்க ஏனைய உறவினர் வட்டா பெட்டி என்பவற்றைத் தூக்கிக் கொண்டு மேளதாளம் முழங்க குரவையொலிக்க வெள்ளை பிடித்து மாப்பிள்ளை தோழன் குடை பிடித்து அருகில் வர மாப்பிள்ளை கூட்டிச் செல்வர். பெண்வீடு செல்லும் மாப்பிள்ளை கண்ணூறு கழித்து வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டு பந்தலின் வலப்பக்கமாக அமர்த்தப்படுவார். இதே போல ஏற்கெனவே அலங்கரிக்கப்பட்டிருந்த மணமகளும் அழைத்துவரப்பட்டு பந்தலின் இடப்பாகத்தில் மெல்லிய சீலையால் முகம் மூடப்பட்ட நிலையில் அமர்த்தப்படுவார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இரு வீட்டாரதும் இல்லங்கள் அலங்கரிக்கப்பட்டிருக்குமாற்றை இங்கு குறிப்பிடல் பொருந்தும். இரு வீட்டிலும் பந்தல் போடப்பட்டு வெள்ளை கட்டப்பட்டிருக்கும். தென்னங்குருத்து அரிதாரம் வாழைப்பழம் என்பவற்றால் அலங்கரித்திருப்பர். முற்றத்தில் பந்தலின் வாசலில் தோரணம் கட்டப்பட்டு வாழைமரம் நாட்டப்பட்டு, இளநீர்க் குலைகள் கட்டப்பட்டிருக்கும். பந்தலின் நடுவே நிறைகுடம் கண்ணாடி முதலிய மங்கலப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். விசேடமாக பெண் வீட்டில் கல்யாணக்கால் நாட்டப்பட்டிருக்கும். உள் வீட்டு வாசற்படியில் நிறைகுடங்கள் இருமருங்கும் காணப்படும். உள் வீட்டுக்குள் நிறை குடம் பிள்ளையார் மடை என்பன வைக்கப்பட்டிருக்கும்.

மணமகனுக்கும் மணமகளுக்கும் தனித்தனியே கிரியைகள் நடைபெறும். வீட்டுக்கடப்பைக்கடக்கும்போது தேங்காய் உடைக்கப்படும். அதன் பின் கூறை உடைகளை அணிந்ததும் விசேட கிரியைகள் நடைபெற்று தாலிகட்டும் நிகழ்வு இடம் பெறும். அதன் பின் மாலை மாற்றுதல் முடிவடைந்ததும் இருவரதும் தகப்பன்மார்களினால் கை பிடித்துக் கொடுக்கப்படும். அதன்பின் இருவரும் நேரே சென்று முன்னால் வைக்கப்பட்டிருக்கும் அன்னப் பெட்டி நிறைகுடம் முதலியவற்றைத் தரிசிப்பர். அதன் பின் இருவரும் மாறி மாறி மூன்று முறை பால் பழம் அருந்துவர். இதன் பின் திருமண விருந்து இடம் பெறும்.

திருமண விருந்து பந்திப்பாய் விரித்து ஆண்கள் ஒரு பக்கமாகவும் பெண்கள் ஒருபக்கமாகவும் அமருவர். மணமகள் மணமகனின் சகோதரி சகிதம் பெண்கள் தரப்பில் இருந்து விருந்துண்ண மாப்பிள்ளை மாப்பிள்ளைத் தோழன் சகிதம் ஆண்கள் தரப்பில் இருந்து உணவருந்துவர்.

வாழை இலை போட்டு மரக்கறிகளுடன் ஆணமும் பரிமாறப்படும். இறுதியாக பால் தயிர் வாழைப்பழம் பலகாரம் கூழ் ஆகிய உணவுடன் திருமண விருந்து நிறைவு பெறும்.

**கால்மாறுதல்**

திருமணம் முடிந்து சில நாள்களில் மாப்பிள்ளையும் பெண்ணும் சுற்றம்புடைசூழ மாப்பிள்ளையின் தாயார் வீட்டுக்குச் செல்வர். இதைக் கால்மாறுதல் என்று சொல்வர்.

*ஆற்றில் விழுந்து ஆடிப்பாடி*
*குளித்து மகிழனும்-இங்கே*
*இரத்தமெல்லாம்*
*நீரில் கலந்து*
*ஆறாய் ஓடுது*

*வெடி கொழுத்தி புத்தாடையுடன்*
*'பெருநாள்' மலரனும்-இங்கே*
*ஒவ்வொரு நாளும்*
*வெடிச் சத்தத்துடன்*
*பெரு நாளாகுது*

**என். சஹாப்தீன்,**
**ஒட்டமாவடி.**

# தமிழக, இலங்கைக் கூத்துக்களும் மட்டக்களப்புக் கூத்துக்களும்

**பாலசுகுமார்,** கிழக்குப் பல்கலைக்கழகம்

தமிழ் கலை வரலாறு பற்றிப் பேசுகின்ற நாம் அதன் ஆரம்ப ஊற்றுக்களை சங்க காலச் சூழலிலேயே பேசத் தொடங்குகின்றோம் தொடர்ச்சியாக சோழர் காலத்தில் முற்றிலும் வேறுபட்ட சூழலையும் விஜய நகர ஆட்சிக்காலத்திலிருந்து பல்வேறுபட்ட கலாசார மாறுபாடுகளையும் உள்வாங்கிய பண்பாட்டு மாற்றங்களை ஏற்றுக் கொண்டு தமிழ்க் கலை வரலாறு வளர்ந்து வந்துள்ளதை நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். இதில் கூத்து என்ற சொல்லும் அந்தச் சொல்லுக்குப் பின்னால் மறைந்திருந்து வளர்ந்து வந்த ஒரு அரங்க மரபும் நம்மிற் பலருக்குத் தெரியாமல் போனது. ஆனால் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கல்வி மாற்றங்கள் அரங்கு பற்றிய அக்கறையை கூத்துப் பற்றிய ஆய்வை ஒரு புதிய தளத்துக்கு இட்டுச் சென்றுள்ளது.

தமிழ்நாடு, கேரளா, கன்னடம், ஆந்திரா, இலங்கை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய தென்னிந்தியா அல்லது முன்பு தக்கண மேட்டு நிலமென அழைக்கப்பட்ட இப்பிரதேசம் ஒரே கலாசார வலயத்தைக் கொண்டதாகும். குறிப்பாக, தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்குமான தொடர்புகள் தொன்று தொட்டு பரஸ்பரம் கொண்டு கொடுப்புக்கள் நிறைந்ததாக இருந்துள்ளதை நமக்கு வரலாறு எடுதுக் கூறுகிறது. இந்தப் பிராந்தியத்தில் காணப்படுகின்ற இசை மரபு நாட்டிய மரபு அரங்க மரபு என்பனவும் வாழ்வியல் நெறிமுறைகளும் பெரும்பாலும் ஒத்த தன்மையுடையனவாயுள்ளன. இந்த வகையில் கூத்து மரபும் அதற்கு இடையிலான தொடர்பும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இன்று நாம் மட்டக்களப்பு கூத்துப்பற்றிய ஆய்வை மேற்கொள்கின்ற பொழுது தமிழ்ப்பிரதேசத்திற்கு உட்பட்ட அல்லது தமிழ் பேசும் மக்களது வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட அரங்க வடிவங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு ஆய்வு செய்ய முடியாது. தமிழ் நாட்டிலும் இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசங்களையும் அண்மித்ததாகவுள்ள பல்வேறுபட்ட மொழி இன மக்களின் அரங்க வடிவங்கள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்வது அவசியமாகின்றது

தென்னிந்திய கூத்துக்களான கேரளத்துக் கதகளி, கன்னடத்து யக்சகானா, தமிழகத்து தெருக்கூத்து ஆகியவற்றுக்கும் மட்டக்களப்பு கூத்துக்குமுள்ள ஒற்றுமைகளை பேராசிரியர் கா.சிவத்தம்பி, கலாநிதி சி.மௌனகுரு ஆகியோர் தம் ஆய்வுகளில் விளக்கியுள்ளனர். சிங்களக்கூத்துக்களோடு மட்டக்களப்பு கூத்துக்களுக்குள்ள உறவினை பேராசிரியர் சரத் சந்திர, பேராசிரியர் குணதிலக போன்றோர் தமது ஆய்வுகள் மூலம் நிறுவியுள்ளனர்.

பல்வேறு மொழிப்பிரிவுகளையும் மொழி வேறுபாடுகளையும் மீறி ஒரே வகையான வாழ்க்கைப் பண்பாட்டு வலயத்தையுடைய மக்கள் மத்தியில் காணப்படும் பொதுவான அரங்க வடிவங்களாகவே தென்னிந்திய இலங்கை மக்களிடம் பல அரங்க வடிவங்கள் காணப்படுகின்றன. சிங்கள மக்களிடம் காணப்படும் பல அரங்க மரபுகளை தென்னிந்

தியா, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தமிழக மக்களிடம் காணமுடிகிறது. எனவே மட்டக்க ளப்பு கூத்துப்பற்றிப் பேசுகிற நாம் தென்னிந்திய அரங்க வடிவங்கள் பற்றியும் சிங்கள மக்கள் சார்பான அரங்க வடிவங்கள் பற்றியும் ஒப்பிட்டு ஆய்வு செய்வது அவசியமாகின்றது. ஆகவே மட்டக்களப்பு கூத்துப் பற்றிய ஆய்வு தென்னிந்தியா இலங்கை என்கிற ஒரே கலாசார வலயத்தினை மனங்கொண்டு ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசிய மானதும் முக்கியமானதுமான தேவையாக இருக்கிறது.

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் அந்த அந்தப் பிரதேசத்திற்குத் தனித்துவமானதும், இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பொதுவானதுமான கூத்து வடிவங்கள் பல இன்றும் வழக்கிலுள்ளன. இந்தக் கூத்து வடிவங்கள் எப்படி மட்டக்களப்பு கூத்து வடிவங்களோடு நெருங்கிய தொடர்புடையனவென்பது எமது கேள்வியாகும். ஆனாலும் எனது இந்த ஆய்வில் ஆய்வுத்தேவை கருதியும் ஆய்வுச்சுருக்கம் கருதியும் தமிழகக் கூத்துக்களோடு மட்டக்களப்பு கூத்து கொண்டிருக்கும் தொடர்பைப் பிரதானப்படுத்த விரும்புகிறேன். இருந்தாலும் இன்று தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் வழக்கிலுள்ள அல்லது முன்பு வழக்கிலிருந்து இன்று வழக்கொழிந்து போன கூத்துக்களைப் பற்றி அறிந்திருப்பது அவசியமான தொன்றாகும்.

இலங்கையில் தமிழர் கூத்துக்களென்று பார்க்கின்றபொழுது மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், வன்னிப்பிரதேசம், மலையகம், சிலாபப் பிரதேசமெனப் பாகுபடுத்திப் பார்ப்பது முக்கியமானதென்றாகும்

மட்டக்களப்பில் வடமோடி தென்மோடி என்பன முக்கிய கூத்து வடிவங்களாகவுள்ளன. ''வடமோடி தென்மோடி என்ற பாகுபாடு வெறுமனே பெயரளவில் மாத்திரமல்லாமல் அதன் உள் கட்டமைவு வெளிக்கட்டமைவு என எல்லா வகையிலும் பல்வேறு விதமான வேறுபாடுகளைக் கொண்டுள்ளது'' வடமோடி தென்மோடிக் கூத்துக்களைவிட வசந்தன் கூத்து மகுடிக்கூத்து பறைமேளக்கூத்து என்பன பிரதானமான கூத்து வடிவங்களாகவுள்ளன இவற்றில் மகுடிக்கூத்தும் வசந்தன் கூத்தும் கதை தழுவியதாக இருக்க பறைமேளக்கூத்து ஆட்டத்தையும் தாளக்கட்டையும் பிராதனப்படுத்தி நிற்கின்றது.


யாழ்ப்பாணத்தில் வடமோடி தென்மோடி, வசந்தன், மகுடி என மட்டக்களப்பில் பயில் நிலையிலுள்ள எல்லா வடிவங்களும் இருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் இக்கூத்தர்களின் அளிக்கை முறைகள் வித்தியாசப்படுகின்றன.

ஈழத்திய வடமோடி தென்மோடி கூத்துக்கள் பற்றி கருத்துத் தெரிவித்துள்ள சிவத்தம்பி, மௌனகுரு வித்தியானந்தன், இலங்கையர்கோன், சுந்தரம்பிள்ளை போன்றோர் வடமோடி தென்மோடி கூத்துக்கள் மட்டக்களப்புப் பகுதியிலேயே இன்று வரை உரிய மரபுகளோடு பேணப்பட்டு வருவதை உடன்பட்டு உரைப்பர். இக்கூற்றுக்கள் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து மட்டக்களப்புப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் இன்று யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இவை பெரும்பாலும் வழக்கொழிந்தும் ஆடப்பட்டு வரும் ஒரு சில இடங்களிலும் வடமோடி தென்மோடிக்குரிய வேறுபாடுகள் உரிய முறையில் பின்பற்றப்படாமலும் வழங்கி வருகின்றன. ஆனால் மட்டக்களப்புப் பகுதியிலேயே உரிய மரபுகளோடு இருவகைக் கூத்துக்களும் பேணப்பட்டு வழக்கிலிருக்கின்றன. இந்த அடிப்படையில் இன்று மட்டக்களப்பில் ஆடப்படுகின்ற வடமோடி தென்மோடிக் கூத்து வடிவங்கள் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தினூடாக மட்டக்களப்பிலேயே பேணப்படுகிறதென்பதும் தெளிவாகின்றது.

யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய செல்வாக்குக் காரணமாக விலாச மரபோடு இணைந்த இசை நாடக மரபே வலுவானதாக வளர்ந்தது. இதனாலேயே ஏனைய கூத்து வடிவங்கள் தங்கள் உயர் நிலையை இழந்தனவென்று பாலசுந்தரம் போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். வடமோடி தென்மோடி மரபில் அண்மைக்காலம் வரையில் கத்தோலிக்க மரபுக்கூத்துக்கள் யாழ்ப்பாணக் கத்தோலிக்கர்களிடம் செல்வாக்குள்ள அரங்க வடிவமாகத் திகழ்ந்துள்ளது. ''எனினும் அடிநிலை மக்களிடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இக்கலையின் எச்ச சொச்சங்களை கரையோரப்பகுதிகளிலும் வட்டுக்கோட்டை, கழிபுரம், கொட்டக்காடு, இமையாணன், அரியாலை, கோண்டாவில், நாகர்கோயில், தாழையடி தீவுப்பகுதிகள் ஆகிய இடங்களிலும் இன்றும் காணக்கூடியதாகவுள்ளன. இவை வடமோடி தென்மோடி ஆகிய வடிவங்களில் காணப்படுகின்றன''.

யாழ்ப்பாணத்தில் பயில்நிலையிலுள்ள முக்கியமான கூத்து வடிவம் காத்தவராயன் கூத்தாகும். மட்டக்களப்பில் வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் பெறும் முக்கியத்துவத்தை யாழ்ப்பாணத்தில் இக்கூத்துப் பெற்றுள்ளது. ''ஈழத்தின் வடபகுதியில் இன்றும் பயில் நிலையிலுள்ளதும் பிரபல்யமானதுமான கூத்து இது. இந்நாடகத்தின் இசைதுள்ளல் ஓசையுடையது. ஆட்டம் இதிலில்லை. ஆனால் இசைக்கு ஏற்ப துள்ளு நடையுடன் நடிகர்கள் மேடையில் அசைவர். இதனால் இதனை துள்ளுக்கூத்து என்று அழைக்கும் வழக்கமுமிருந்தது''. இக்காத்தான் கூத்துக்கள் வன்னிப்பிரதேசத்தின் முக்கியமான கூத்து வடிவமாகப் பயில் நிலையிலுள்ளன.

வன்னி என்று அழைக்கப்படுகின்ற வவுனியா முல்லைத்தீவுப் பிரதேசங்களில் அதிலும் குறிப்பாக முல்லைத்தீவில் முக்கிய கூத்துவடிவமாக கோவலன் கூத்து விளங்குகின்றது. இதுவும் மட்டக்களப்பு வடமோடி தென்மோடி கூத்துக்களைப் போல ஒரு இரவு முழுவதும் ஆடப்படுகின்ற கூத்தாகும். அத்தோடு ஆட்டமுறைக்கு



முக்கியத்துவம் கொடுப்பதாகவும் இது உள்ளது வற்றாப்பளை இக்கூத்து வடிவத்தின் பிறந்தகமாகக் கருதப்படுகின்றது. முல்லைத்தீவைச் சேர்ந்த பிறபகுதிகளில் ஆட்டு வணிகள், மத்தேச மௌராமா போன்ற நாடகங்களும் ஆடப்படுகின்றன. இவை யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் கூத்துக்கள் போன்றவை.

மன்னார்ப்பகுதி கத்தோலிக்கச் செல்வாக்கு மிக்க ஒரு பிரதேசம். ''ஏனைய பகுதிகளை விட மன்னார்ப்பகுதிக் கூத்துக்கள் தனியாக நோக்கத்தக்கவை. ஐரோப்பியர் வருகையுடன் சம்பந்தப்பட்ட இக்கூத்துக்கள் முந்திய கூத்துக்களினின்றும் வளர்ச்சி பெற்றவை''. இங்கு நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட கூத்து நூல்கள் தோன்றியதாக அறிய முடிகிறது. இக்கூத்துக்களை வடபாங்கு தென்பாங்கு என அழைத்த போதிலும் ஏற்கெனவே இருந்த கூத்துமரபோடு மேற்கத்தைய அரங்கமரபும் இணைந்ததாக இக்கூத்துக்கள் உள்ளன.

இலங்கையில் தமிழாகன் செறிவாக வாழும் மற்றுமொரு பகுதி மலையகமாகும். இங்கு காமன் கூத்து அர்ச்சுனன் தபசு ஆகிய கூத்துக்கள் வழக்கிலுள்ளன. தமிழகத்தின் தென்மாவட்டங்களில் வழங்கும் கூத்துக்களோடு இவை நெருங்கிய தொடர்புடையன. இலங்கையில் ஏனைய பகுதிகளில் வழங்குகிற கூத்துக்களில் ஆடல் பாடல் முறைகளிலிருந்து இது பெரிதும் வேறுபடுகிறது. இந்த இரண்டு கூத்து வடிவங்களும் சடங்கோடு இணைந்த தன்மையு டையனவென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மக்கள் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்த பிரதேசம் நீர்கொழும்பு சிலாபப்பகுதி. இதனை ஒரு தனி சிறு கலாசாரப் பிரதேசமாகக் கொள்ள முடியும். இங்கு இந்து மதசார்பான கூத்துக்களும் கத்தோலிக்க மதசார்பான கூத்துக்களும் இன்றுவரையில் ஆடப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண கலாசாரப் பாதிப்பினையும், மட்டக்களப்பு கலாசாரப் பாதிப்பினையும் சம அளவாகப்பெற்ற பிரதேசம் திருகோணமலையாகும். இங்கு யாழ்ப்பாணப் பாதிப்பில் காத்தான் கூத்தும் மட்டக்களப்புப் பாதிப்பில் வடமோடி தென்மோடி கூத்துக்களும் பயில் நிலையில் உள்ளன. இருந்தாலும் வேதாள ஆட்டம் போன்ற தனித்துவமான ஆட்டமுறைகளும் இங்கு உள்ளன.

இலங்கைக் கூத்துக்கள் என்று பேசுகின்ற போது சிங்கள மக்கள் மத்தியில் பயில் நிலையிலுள்ள கோலம், சொக்கரி போன்ற கூத்து வடிவங்களையும் ''மனமே சிங்கபாகு நாடகம்'' வகையிலான நாடக வடிவங்களையும் கவனத்தில் கொள்வது மிக முக்கியமானதாகும்.

தமிழகத்தில் இன்று வழக்கிலுள்ள கூத்துக்களான கணியான் கூத்து, மரப்பரவைக் கூத்து, தேவராட்டம், தோற்பாவைக்கூத்து, தெருக்கூத்து என்பன வெவ்வேறு அவைக்காற்று முறைகளைக் கொண்டனவாகவும் வித்தியாசமான குணாம்சங்களைக் கொண்டனவாகவும் உள்ளன. ஆய்வுத் தேவை கருதி இங்கு மட்டக்களப்பின் வடமோடி தென்மோடிக் கூத்துக்களோடு ஒப்பீட்டாய்வு செய்ய முற்படுகிறோம். எனவே நான் இங்கு சொல்ல முனைவது வடமோடி தென்மோடி கூத்துக்களுக்கும் தமிழகத்தெருக்கூத்துக்குமிடையிலான தொடர்புகளும் வேறுபாடுகளுமாகும்.

இதிகாச புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இக்கூத்துக்கள் மனிதர்கள் இதிகாச நாயகர்களாக வேடமிட்டு பாட்டும் இடையிடையே வசனமும் கொண்ட ஒருவகைக் கூத்து இரவு முழுவதும் ஆடப்படுகின்ற வழக்கம் ஒருகாலத்தில் தமிழ்நாடு எங்கும் பரவியிருந்து கிராமங்களில் ஆடப்பட்டு வருகின்றது.

இசை நாடகம், ஸ்பெசல் நாடகம், சினிமா ஆகியவற்றின் செல்வாக்கு நாகரிக மாற்றம் என்பவற்றால் கூத்து தமிழகத்தில் பெருமளவில் வழக்கொழிந்தாலும் வட ஆற்காடு, தென்னாற்காடு செங்கல்பட்டு சென்னை சேலம் ஆகிய மாவட்டங்களில் இன்றும் கிராமங்களில் பரவலாக ஆடப்படுவதை நாம் இங்கு மனங் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் ஆடப்பட்டுவரும் கூத்துக்கள் வடக்கத்தி தெற்கத்தி என இரண்டு வகையானதாகப் பேசப்படுகின்றது. இதற்கும் மட்டக்களப்பு வடிமோடி தென்மோடிக்கும் தொடர்பு இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டும். இந்தக்கூற்றுப்படி ஆரம்பத்தில் திறந்த வெளியில் ஆடப்பட்டதாகவும் பிற்காலத்தில் ஏற்பட்ட நாடகச் செல்வாக்கினால் வீதியோரத்துக்குத் தள்ளப்பட்டதால் வீதிச் சந்துகளிலும், கோயில் வீதிகளிலும் ஆடப்பட்டதால் தொடுக்கூத்து என அழைக்கப்பட்டது எனவே கருணாநிதி போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

தமிழ்நாட்டில் ஆடப்பட்டுவரும் வடக்கத்தி தெற்கத்திக் கூத்துக்களும் மட்டக்களப்பு வடிமோடி தென்மோடிக் கூத்துக்களும் இன்றும் கிராம மக்கள் மத்தியில் கூத்து என்ற பதப்பிரயோகத்தினாலேயே அழைக்கப்படுகின்றன. ஆனால் இருபதாம் நூற்றாண்டு தமிழ் அறிஞர்களோ தெருக்கூத்து என தமிழகத்துக் கூத்துக்களையும் நாட்டுக்கூத்து என மட்டக்களப்புக் கூத்துக்களையும் அழைத்தனர். இத்தகைய கருத்தையே கலாநிதி மௌனகுரு திரு. வே. கருணாநிதி போன்றோர் தமது ஆய்வுகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

தமிழ் நாட்டில் வடக்கத்திக் கூத்துக்களே சிறப்பாக பேணப்பட்டு வருகின்றன. அனேக குழுக்கள் வடக்கத்திக் கூத்துக்களையே ஆடுகின்றன மட்டக்களப்பிலும் வடமோடிக் கூத்துக்களே பெரும்பாலானவர்களால் ஆடப்படு கின்றன. தமிழ்நாட்டு வடக்கத்திக் கூத்தும் மட்டக்களப்பு வடமோடிக்கூத்தும் ஒப்பனை பாட்டு ஆட்டம், கதை, உடை, பொருட்கள் ஆகியவற்றால் ஒன்றுபட்டிருக்கின்றன. தெற்கத்திக்கூத்து குறைந்த அளவிலேயே தமிழகத்தில் ஆடப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பிலும் ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே தென்மோடி செல்வாக்குடையதாக உள்ளது. ஆட்ட நுணுக்கங்களும் அழகியல் அம்சங்களும் இந்த இரண்டு வகையான கூத்துக்களுக்கும் ஒற்றுமைத்தன்மை உள்ளன என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

வடமோடிக்கூத்துக்களும் வடக்கத்திக் கூத்துக்களும் பெரும்பாலும் மகாபாரதக்கதைகளையே தமது கருப்பொருளாகக் கொண்டுள்ளன. தெற்கத்தி தென்மோடிக்கூத்துக்கள் உடை ஒப்பனை இசை என்பனவற்றால் ஒத்தன்மை உடையன என சில ஆய்வுகளின் மூலம் அறிய முடிகிறது.

அண்மைக்காலமாக தமிழக வடக்கத்தி தெற்கத்தி கூத்துக்கள் பற்றிய ஆய்வுகளும் மட்டக்களப்பு கூத்துக்கள் பற்றிய ஆய்வுகளும் இரண்டு பிராந்தியங்களினதும் கூத்துக்களுக்கான அடிப்படை ஒன்றே எனவும் ஒரே பிரதியே இரு பிராந்திய கூத்துக்களிலும் பல்வேறு மாறுபாடுகளுடன் பயன்படுத்தப்படுகின்றன என்பதும் தெளிவுபடுத்தப்பட்ட விடயமாகவுள்ளது.

### வடக்கத்தி தெற்கத்தி, வடமோடி தென்மோடி கூத்துக்களிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளும் தொடர்புகளும் :

இதிகாச புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. வடக்கத்திக்கூத்துக்களும் வடமோடிக்கூத்துக் களும் பெரும்பாலும் மகாபாரதத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

கிராமத்தில் இரவு முழுவதும் தேவையானால் அடுத்த நாள் இரவும் கூத்து தொடர்ந்து நடைபெறும்.

பாடல்களும் இடையிடையே வசனங்களும் கொண்ட வடிவமைப்பு மத்தளமும் சல்லாரியுமே முக்கியமான வாத்தியங்களாக உள்ளன.

தொடக்கத்தில் கட்டியக்காரனே அறிமுகப் பாத்திரமாக வருவான். தலைமைப்பாத்திரத்தை அறிவிப்பவனாகவும் இவனே தொழிற்படுவான். பாத்திரங்களது முதல் அறிமுகம் திரைபிடிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுதல். இதையே நாம் கன்னட யட்சகானத்திலும் காணலாம்.

ஒவ்வொரு பாத்திரமும் தம்மை அறிமுகப்படுத்த விருத்தத்தில் அமைந்த பாடல்களை திரைமறைவில் பாடுகின்றன.

ஒவ்வொரு பாத்திரமும் தங்களைத் தாங்களாகவே அறிமுகப்படுத்திக் கொண்டு கதை தொடர்பாகப் பேசுகின்றன.

இராக தாள அமைப்பிலும் ஒத்ததன்மையே காணப்படுகின்றது. இது நுணுக்கமாக ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

கூத்தில் பயன்படுகின்ற பொருட்கள் :

கிரீடம்

புஜக்கட்டைகள்

மார்புக்கவசம்

கீழ் ஆடை

வாள்

வில் என்பன ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆனால் வடக்கத்தி தெற்கத்தி வடமோடி தென்மோடி வேறுபாடு இவற்றுள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் ஒன்றையொன்று கலந்து தொழிற்படுகின்ற சூழ்நிலைகளும் உள்ளன.

உடையமைப்பைப் பொறுத்தவரையில் விரிந்த பாவாடை போன்ற அமைப்பு பயன்படுத்தப்படுகின்றது.

சலங்கை கட்டுதல் மரபாக உள்ளது.

மங்கள வாழ்த்துப்பாடலுடன் இருநாட்டுக்கூத்துக்களும் முடிவடைகின்றன.

தமிழகத்தில் கட்டியக்காரன் கூத்து முழுவதும் தொழிற்படுகின்ற ஒருவனாக இருப்பான் ஆனால் மட்டக்களப்புக் கூத்தில் ஆரம்பத்தில் மாத்திரமே வருவான். இரு நாட்டு கூத்துப் பிரதிகளிலும் பாத்திரத்தை அறிமுகம் செய்பவனாகவே கட்டியக்காரன் காட்டப்படுகிறான்.



தமிழகத்தில் கூத்தோடு தொடர்பில்லாத கோமாளி கூத்தின் இடையிலே வருவான் ஆனால் மட்டக்களப்புக்கூத்தில் கோமாளி இடம் பெறுவதில்லை ஆனாலும் கூத்தில் சில பாத்திரங்கள் கோமாளித் தன்மையைக் கொண்டிருக்கும்.

இரு பிரதேச கூத்துகளிலும் வினாயகர் துதி சரஸ்வதி துதி என்பனவும் அவையடக்கப்பாடல்களும் கூத்தின் தொடக்கமாக அமைகின்றன.

தமிழ்க்கூத்தில் அண்ணாவியார் கூத்துவாத்தியார் என அழைக்கப்படுவார்.

தமிழகக்கூத்தில் மிருதங்கம், டோலக், ஆர்மோனியம் முகவீணை என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் மட்டக்களப்புக் கூத்தில் மத்தளமும் சல்லாரியுமே பயன்படுத்தப்படுகின்றன.

மேடை அமைப்பில் தமிழகக் கூத்துக்கள் மூன்று பக்கம் திறந்ததாகவும் ஒரு பக்கம் அடைக்கப்பட்டதாகவும் இருக்கின்றது. ஆனால் மட்டக்களப்பில் வட்டமாக எல்லாப்பக்கமும் திறந்ததாக வட்டக்களரி என அழைக்கப்படுகிறது.

மட்டக்களப்புக் கூத்தில் வாத்தியக்காரரும்

அண்ணாவியாரும் கூத்தர்களுக்கு நடுவில் நிற்க தமிழகக்கூத்துக்களில் கூத்துவாத்தி யாரும் வாத்தியக்காரர்களும் பின்னணியில் நிற்பர்.

மட்டக்களப்புக் கூத்தில் கூத்தர்கள் களரியைச் சுற்றி ஆடுவர். ஆரம்ப காலங்களில் தமிழகக் கூத்துக் களும் மட்டக்களப்பு கூத்தர்கள் போலவே ஆடியிருக்க வேண்டும்.

மட்டக்களப்பு கூத்தர்கள் சலங்கைக்கு முக்கி யத்துவம் கொடுப்பவர்களாக இருக்க தமிழகக் கூத்தர்கள் சிறிய சலங்கைகளையே அணிகின்றனர்.

தமிழகக் கூத்தர்களை தொழிலடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. முழுநேர தொழில் கூத்தர்கள்

2. பகுதிநேர தொழில் கூத்தர்கள்

3. பொழுதுபோக்கு

மட்டக்களப்பில் முழுநேக்கூத்தர்களாக நாம் யாரையும் கொள்ளமுடியாது. வருமானம் கருதியோ தொழில் முறையாகவோ யாரும் கூத்தாடுவதில்லை.

மட்டக்களப்புக் கூத்திலும் தமிழகக் கூத்திலும் ஆட்டத்திற்கு சொற்கட்டுக்கள் அல்லது தாயக்கட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. மட்டக்களப்பு கூத்து ''தாளக்கட்டு'' எனவும் தமிழகக்கூத்து ''சொற்கட்டு'' எனவும் குறிப்பிடுகிறது.

தமிழக ஈழத்தமிழரிடம் பயில் நிலையில் இருக் கும் கூத்துவடிவங்கள் பற்றியும் பயில் நிலையி லிருந்து மறைந்துபோன கூத்துக்கள் பற்றியும் வரலாற்றடிப்படையில் பகுத்தறிந்து கொள்வதன் மூலம் தமிழ் அரங்க வரலாற்றின் மூலங்களை அறிந்து கொள்ளமுடியும்.

தமிழக மட்டக்களப்பு கூத்துக்களின் வரலாற்றையும் அவற்றின் சமூக இருப்பையும் கட்டமைவை அறிந்து கொள்வதன் மூலமே தமிழர் அரங்க வடிவங்களின் தனித்தன்மைகளையும் அவற்றின் வரலாற்றையும் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும்.

தமிழக மட்டக்களப்பு கூத்துக்களின் வரலாற்றமைப்பு ஒன்றையொன்று சார்ந்து செல்கின்ற பண்பையே கொண்டுள்ளது. ஆனாலும் மட்டக்களப்பு கூத்துக்கள் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளமையை நாம் இங்கு கண்டு கொண்டோம்.

இரு பிராந்தியக் கூத்துக்கள் பற்றியும் மேலும் ஆழமான ஆய்வுகள் செய்யப்பட வேண்டியது நமது கடமையாகும்.

**உசாத்துணை நூல்கள்**


அறிவுநம்பி. அ, - தமிழகத்தில் தெருக்கூத்து
அமுதன் நூலகம் காரைக்குடி, 1986.

சிவதம்பி. கா, - ஈழத்தில் தமிழ் இலக்கியம்
தமிழ் பதிப்பகம், 1978.

சுந்தரம்பிள்ளை. செ, - ஈழத்து இசை நாடக வரலாறு
இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம், 1990.

முத்துசாமி. ந, - அன்று பூட்டிய வண்டி
அன்னம் பிறைவேட் லிமிட்டெட், சிவகங்கை, 1982.

மௌனகுரு. சி, - ஈழத்து தமிழ் நாடக அரங்கு,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், 1995.

வித்தியானந்தன். சு, - தமிழியற் சிந்தனைகள்
முத்தமிழ் வெளியீட்டுக்கழகம், யாழ்ப்பாணம்,1979.

கருணாநிதி. வே, - தமிழக ஈழக்கூத்து மரபுகள்,
பல்கலை வெளியீடு சென்னை, 1993.

சுகுமார். பா, - தமிழ் நாடகம், அனாமிகா வெளியீடு,
மட்டக்களப்பு, 1993.

# தேனாட்டுக் கவிகளிலே திகழுசங்கத் தமிழ்ச் சுவைகள்

- ஓர் ஒப்பியல் நோக்கு

திமிலைத்துமிலன்

**தேனாட்டுக் கிராமியமும் தித்திக்கும் கவியமுதும்**

நாட்டுப்பாடல் என்றதும் ஈழத்து மக்கள் பெரும்பாலும் மட்டக்களப்பு நாட்டையே உடனே நினைப்பர். ஈழத்தின் பழந் தமிழகமான மட்டக்களப்பு அதிகமான உணர்ச்சிக் கவிதை நிறைந்த ஒரு நாடாக உள்ளதென்பதை இதனால் அறியலாம். கவிதையில்பேசி, கவிதையில் வளர்ந்து,கவிதையிலே வாழ்ந்த பழங்காலத்துப் பரம்பரையைச் சேர்ந்த மக்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். மட்டக்களப்பில் விரவிவாழும் கிராமப்புறத்துத் தமிழரும் முஸ்லிம்களும் நாட்டுப்பாடல்கள் இசைப்பதில் வல்லவர்கள். அது சாதாரண மக்களின் பரம்பரைச் சொத்து. கல்வியறிவு பெறாத கிராமவாசிகள் தமது நாளாந்த வாழ்க்கையில் தாமேபாடி, தாமேகேட்டு, செவிகருவியாய் மனதில்பதித்து, வெளியிட்டு வளர்த்து வருகிறார்கள். தமது தொழில் நேரத்திலும், ஓய்வு பெறும்போதும், வழிநடையிலும் உணர்ச்சி பொங்கும் போதும் அது கவிதையாகப் பெருகுவதுண்டு. இப்பெருக்கிலே ஓசையின்பம், தாளவமைதி, சொல்லழகு, தொடைச்சிறப்பு என்பன தானாகவே அமைந்துவிடும். இவை ஏட்டில் ஏறாவிடினும் அழிந்து போகாது, தலைமுறை தலைமுறையாக வழங்கிவரும் சிறப்புடையன. இந்த நாட்டுப்பாடல்கள் உணர்ச்சிப் பெருக்கொன்றையே அடிப்படையாகக் கொண்டு உலக வழக்கினோடு பொருந்திப் பிறப்பவை.

இத்தகைய உணர்ச்சிக் கவிவளம் மட்டக்களப்புத் தமிழகத்தின் கிராமப் புறங்க ளிலே பல்வேறு துறைப்பட்டு நிறைந்து விளங்குகிறது. இவ்வாறான நாட்டுப்பாடல்களைத் தொகுத்துப் பார்க்கும்போது சங்ககால எட்டுத்தொகை நூல்களுள்ளே ஐந்து நூல்கள் அகத்திணைசார்ந்த இன்பப்பகுதியினவாய் இருப்பது போன்று இவையும் பெரும்பான்மை யானவை அகத்திணை சார்ந்திருப்பதைக் காணலாம். சங்கச் சான்றோர்கள் அகத்திணைச் செய்யுளுக்கமைத்துச் சென்ற துறைகளிலும் கூட இப்பாடல்களுட் பல உட்பட்டிருப்பது கண்டு வியக்கத் தோன்றுகிறது.

பழந்தமிழரின் இன்ப வாழ்வுச் சின்னங்களாக விளங்கும் சங்க இலக்கியங்களிலே இயற்கையாக மலர்ந்த கட்டுப்பாடற்ற காதலையே காண்கிறோம்.அரசன் கண்ட காதலும் அங்குண்டு. உழவன், இடையன், குறவன், வலைஞன், என்போர் கண்ட காதலும் அங்கு உண்டு. காதல் நிகழ்ச்சியை புனைந்துரை வகையாலன்றி, இயல்பாய் உள்ளபடியே சங்கச் சான்றோர் பாடிவைத்தனர். அதுபோல் எல்லோருடைய காதல் நிகழ்ச்சிகளையும் உணர்ச்சியுறக் காட்டும் இன்பப் பாடல்கள் இங்கு வழங்குகின்றன. அத்தகையபாடல்கள் ''கவி'' என்ற சிறப்புப்பெயர் பெற்றுள்ளன. இக்கவிகளில் அதிகம் ஈடுபாடு உடையோர் இந்நாட்டுக் கிராமப்புறத்துத் தமிழரும் முஸ்லிம்களும் ஆவர். இக்கவிதைகளிற், பல

இவர்களின் முந்தையோர் பாடியவையே. அவை வாழையடி வாழையாக இன்னும் வழக்கிலுள்ளன. நினைத்தவுடன் நல்ல கவிகளைப் புனைந்து பாடும் ஆற்றல் இன்னும் கிராமப்புறத்து மக்களிடையே உள்ளதையும் நாம் காணலாம். காதலர்க்கிடையே தூதுபோகப் பாங்கனோ, பாங்கியோ இருத்தல் இலக்கிய வழக்கு. அத்தகைய வழக்கு பெரும்பாலும் கிராமியக் காதலருக்கு வாய்ப்பதில்லை. அதனால் தமது முதற்சந்திப்பின் பின்னர் வேண்டியவற்றைத் தாமே நேரிற் பேசிக்கொள்ளும் வழக்கம் கிராமியக் களவொழுக்கத்தில் காணப்படுகிறது.

''சந்தன மரத்தை மச்சான் சந்திக்கவேணுமெண்டால்
பூவலடிக்கு மச்சான் பொழுதுபட வந்திடுங்கோ''

''கடப்படியில் வந்துநின்று காளை கனைக்குமெண்டால்
எங்கிருந்தபோதும் நாகு எழுந்துவர மாட்டாதோ''

என்ற இந்தக் கவிகள் தலைவி கூற்றாகக் குறியிடங் கூறுகின்றன. இக்கவிகளில் காணப்படும் குறியீடு/ உள்ளுறை உவமம் என்பன சங்ககாலச் செய்யுள்களோடு ஒப்புநோக்கிச் சுவைக்கத்தக்கன.

காதலியின் தந்தையும் சகோதரரும் இரவில் வயலுக்குக் காவலுக்குப் போய் விடுகின்றனர். அரையாமத்தில் காதலன் வருகிறான்.

''பொடுபொடென்ட மழைத்தூற்றல் பூங்காரமானநிலா
கடுமிருட்டு மாலைவெள்ளி கதவுதிற கண்மணியே''

இது காதலன் கூற்று. தலைவி கதவுதிறக்காமல் விடுவாளா? இன்பம் நுகர்ந்த தலைவன் தலைவியைப் பாராட்டுதல் ''நலம் புனைந்துரைத்தல்'' எனப்படும். இதனையும் தலைவன் வாயிலாக நாம் கேட்கலாம்.

''வாழைப்பழமே என்ட வலதுகையில் சக்கரையே
ஏலம் கிராம்பே உன்னை என்னசொல்லிக் கூப்பிடட்டும்''

''தங்கக் கிளியே என்ட தாய்மாமன் ஈன்ற கண்டே
மையிட்ட கண்ணே உன்னை மறந்திருக்கக் கூடுதில்லே''

''குஞ்சுமுகமும் உன்ட கூர்விழுந்த மூக்கழகும்
நெற்றி யிளம்பிறையும் என்ட நித்திரையில் தோனுதுகா''

''காலிவிளை பாக்குக்கும் களுதாவளை வெற்றிலைக்கும்
ஏலம் கிராம்புக்கும் ஏற்றதுகா உன்னெழில்வாய்''

இத்தகைய பாராட்டுகளால் தலைவி' கிறங்கிப் போகிறாள். இங்கே நாட்டுப் புறத்து யதார்த்தமும் மண்வாசனையும் நம்மையும் கிறங்க வைக்கின்றன.

தலைவனின் 'நலம்புனைந்துரைத்தலை மட்டுமா? கிராமியக் காதலி வாயிலாக தலைவனைப் பாராட்டும் அழகு கவிகளையும் நாம் காணலாம். தலைவனால் பெற்ற இன்பத்தின் இனிப்பு அவளையும் தன்னை மறந்து பேசவைக்கிறது.

''நித்திரைக் கண்ணிலையும் நினைவிலயும் தோனுவது
கலிமா விரலும் மச்சான் கல்பதித்த மோதிரமும்''

''வட்டமுகமும் உன்ட வடிவிலுயர் மூக்கழகும்
கட்டு உடலும் மச்சான்-என்ட கருத்தழியச் செய்யுதுகா''

''தங்கத் தகடோ என்ட தகதகத்த பொன்தகடோ
வெள்ளித்தகடோ உன்னை விலைமதிக்கக் கூடுதில்லே''



சில சந்தர்ப்ப காரணங்களால் இரவில் குறிப்பிட்ட இடத்துக்கு தலைவி சென்று சந்திக்க முடியாமற் போகும். அப்போது தலைவன் வந்து காத்திருந்து வறிதே திரும்புவது உண்டு. இலக்கிய வழக்கில் இது இடையீடு என வழங்கப்பெறும்.

''வில்லுக்கு வந்துகொம்பன் விடியளவும் புல்லருந்தி
கல்லில் முதுகுரஞ்சி காடேறிப் போகுதுகா''

''ஆறாயம் வெள்ளி அதரால சாயுமட்டும்
காத்திருந்து போறேனெண்டு உன்ட
கதவுநிலை சாட்சி சொல்லும்''

மறுநாள் தலைவியைச் சந்தித்த போது தலைவன் கூறுபவை இவை.

இந்தக் களவொழுக்கத்தை ஊரார் அறிந்து பேசிக்கொள்வது இலக்கிய வழக்கில் 'அலரெழல்' எனப்படும். ஊரார் பேசிக்கொள்வதைக் குறிப்பிடுவன இவை.

''வெள்ளைக் கிடாநாம்பன் வீசுகொம்பன் தாமரையன்
பள்ளத்து வெள்ளாமையைப் பால்பறக்கத் தின்னுதுகா''

''திடுதிடென்டு மழைபேய திட்டியெல்லாம் தண்ணிநிற்க
மதுரையடி நாய்குலைக்க-அங்க வந்த கள்ளன் ஆரோடி''

இக்கவிகளிலே சங்ககாலத்தை ஒத்த குறிப்புப் பொருள்களையும் காணலாம்.

தலைவன் தலைவியின் சிறப்பினைத் தனக்குத்தானே கூறி இன்புறும் கவிகள் சுவைததும்புவன.

''பூவலைக் கிண்டி புதுக்குடத்தை மேல் வைத்து
ஆரம்ப விழுந்தகிளி அள்ளுதுகா-நல்லதண்ணி''

''மான்போல் நடைநடந்து மயில்போல் சிறகொதுக்கி
தேன்போல் குடிகிழம்பி - என்ட சின்னவண்டு போறதெங்கே''?

இங்கேயுள்ள உவமை உருவகங்கள்-கற்றுவல்ல புலவர்களையும் விஞ்சி விடுகின்றனர்.

தலைவன் தலைவியை 'வண்டு' எனக்குறிப்பிடுவது கிராமியக்கவிமரபு.

''கடலே இரையாதே கற்கிணறே பொங்காதே
நிலவே எறியாதே-என்ட நீலவண்டார் போகுமட்டும்''

'நீலவண்டார்' என்ற சொல்லாட்சி சுவைத்தற்குரியது.

''ஊனிடை சங்கூதும் உத்தமர்க்கென்று
உன்னித் தெழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படின்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே''

என்ற ஆண்டாளின் வைராக்கியத்தை ஒத்த ஒரு கிராமியத்தலைவியின் கூற்று ஒப்புநோக்கி நயக்கத்தக்கதாயுள்ளது.

மற்றெந்த ஆடவனுக்குமன்றி தன்மச்சானுக்காகவே வாழும் ஒரு தலைவி-அவனுக்கு கேட்கக் கூடியதாக மறைந்து நின்று மெல்லிய குரலில் பாடுகிறாள்.

''கச்சா னடிக்கக் கயல்மீன் குதிபாய
மச்சானுக்கென்றே வளர்த்தேன் குரும்பமுலை''

ஒரு தலைவி தலைவனைக் குறியிடத்துக்கு வரக்கூறுகிறாள். அவ்விடத் துக்குச் செல்ல எதிர்நோக்க வேண்டிய இன்னல் பற்றி அவன் கூற அவள் பதிலிடுகிறாள். இந்தக்கவியுரையாடல் சுவை மிக்கது.

**தலைவன்:** ''சுற்றிவரவேலி, சுழலவர முள்வேலி
எங்குமொரேவேலி எங்கால நான்வரட்டும்?''

**தலைவி:** ''காவல் அரணோ மச்சான் கள்ளனுக்கு முள்ளரணோ
வேலி அரணோ மச்சான் வேணுமெண்ட கள்ளனுக்கு''

கார்காலம், கூடலுக்கு, இனிய காலம், தன் கணவன் இன்னும் வந்து சேரவில்லை.

காதலியின் ஏக்கமும் இன்னலும் இந்தக் கவிகளில் கொப்பளிக்கின்றன.

''கன்னிக் கிரான்குருவி கடுமழைக்கு ஆற்றாமல்
மின்னிமின்னிப் பூச்சாலே விளக்கெடுக்கும் கார்காலம்''

''இந்த மழைக்கும் இனிவாற கூதலுக்கும்-என்ட
சொந்தப் புருஷனென்டா சுணங்குவாரா வட்டையிலே?''

'கிரான் குருவி' குளிர் உட்புகாது கூடுகட்டி வாழ்வது. அந்தக் குளிரையும் இருளையும் போக்க மின்மினிப் பூச்சிகளைப் பிடித்துவந்து கூட்டினுள் வைத்துக் குளிர்காய்வது என்ற கிராமப்புறக் கருத்தை முதற்கவி கூறி, கார்காலக் குளிரையும் தேவையையும் உணர்த்துவதாக அமைகிறது. அந்தக்குளிரிலே கணவனோடு நெருங்கியிருக்கும் சுகத்தை நினைத்த தலைவிக்கு அவன் வராதிருப்பது ஆற்றாமையை வளர்க்கிறது. அதனாலே ''சொந்தப்புருஷனென்றால் இப்படியிருப்பாரா?'' என்று கொதிக்கிறாள்.

இவ்வாறான கவிகளுக்குப் பேர்போனது மட்டக்களப்பே தான். வேறு இடங்களை ஈழத்திலே-ஏன், இந்தியாவில் கூடச்சொல்ல முடியாது. மட்டக்களப்புத் தமிழ் நாட்டில் விரவிவாழும் கிராமியத் தமிழரிடையும் முஸ்லிம்களிடையும் இன்றும் நிலவுகின்ற இக்கவிகள் அவற்றின் இயல்பும் இயற்கையும் கருதி சங்ககாலப் பாடல்களோடு ஒப்புநோக்கக் கூடியன. இவற்றின் இயற்கையோடிணைந்த தோற்றம், சொல்லப்படும் பொருள், சொல்லப்படும் முறை, அங்கே தோன்றும்சுவை, குறியீடுகள்/உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் என்ற இன்னோரன்ன பண்புகளின் அடிப்படையில் சங்ககாலப் பாடல்களோடு இவற்றை ஒப்பு நோக்கிப் பார்ப்பது சுவை தருவதாகும். அத்தகைய நோக்கில் நுகரக்கூடிய சில சுவைத்துளிகளை இனிக்கண்டு இன்புறலாம்.

**சுவைத்துளிகள்**

**1. ''பாலன் விளையாட - ஒரு பாக்கியம் தா வேல்முருகா!''**

ஒரு கிராமியக் காதலி அவள் தன் காதலனை உயிரினும் மேலாக விரும்புபவள். அவன் நோய்வாய்ப்பட்டு துயருற்றான் என்று கேள்விப்பட்டாள். அவளால் தரித்திருக்க முடியவில்லை. அவள்தன் நிலைமறந்தாள். வெட்கத்தையும் பாராதவளாக அவன் வீட்டையடைந்தாள் அவனைக்கண்டாள், கண்ணீர் உகுத்தாள். ''தேடாத வைத்தியனே இல்லை, செய்யாத மருந்தே இல்லை. இனி நான் பிழைக்க மாட்டேன் நீ....'' என்று

கூறத்தொடங்கியதும், தன்தளிர்க்கரம் கொண்டு அவன் வாயை மூடினாள், சொன்னாள்...'' அப்படிச்சொல்ல உங்களுக்கு என்ன உரிமை? உங்கள் உயிர் என்மனச்சிறையில் இருக்கிறது நான் இருக்கும் வரையில் நீங்களும் இருப்பீர்கள்....தெய்வம் செத்துவிடவில்லை....'' கூறிய மறுகணம் கைகூப்பியவளாக மண்டூர் முருகனிடம் ஓடினாள். அவள் தன்னுடலை துச்சமாக மதித்தவளாக நேர்கடன் வைத்தாள். வரம் கேட்டாள். எப்படி?

''வெள்ளிவேல் பூட்டி
வீதிவலம் நான்வருவேன்
ஆடுமயில் வேலழகா-என்
அன்பர் நல மாயிடட்டும்''

முருகப்பெருமான் அவள் மன உறுதி-ஓர்மை கண்டு மனம்குளிர்ந்தான். காதலன் உடல் நலம் பெற்றான். நேர்த்தியை அவள் நிறைவேற்றினாள். அந்தக் கட்டிளங்குமரி, தன்பூப்போன்ற பொன்மேனியெல்லாம் ஆயிரத்தெட்டு வேல்கள் குத்தி நேர்கடனை நிறைவேற்றினாள். கண்டோர் எல்லாம் உளம்நெக்குருகி நின்றார்கள்

இன்னுமொரு கிராமத்து மங்கை......

அவள் காதலித்தவனையே கைப்பிடித்தாள். இன்பம் கரைபுரண்டது. நாட்கள், வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி, வருடங்கள் இரண்டும் முடிந்தன. அவள் வயிற்றில் ஒருவாரிசு உருவாவதற்குரிய அறிகுறிகளே இல்லை. அயலவரின் கண்கள் அவளைக் குத்தாமல் குத்தின. அவள் அவமானந் தாங்காது கூனிக்குறுகினாள். அவளோடு திருமணம் செய்த பெண்கள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் பெற்றெடுத்துக் கொண்டிருந்தனர்.

''பொன்னி நீ எனக்குக் குழந்தை நான் உனக்குக் குழந்தை ஏன் நீ நாள்தோறும் அழவேண்டும்''? என்றான் அவன். அவள் அதற்குப் பதிலளிக்கவில்லை. கண்ணீர் தான் சிந்தினாள். அவள் அவனைப்பார்த்த பார்வை அவனுக்கு, யாரோ ஒரு பெண் தன்மச்சானிடம் யாசித்ததை நினைவூட்டியது.

''ஆறாயம் வெள்ளி அதரால சாயுமட்டும்
பூறாயகார மச்சான் - எனக்கொரு
புள்ளை தந்தாலாகாதோ?''.....

அவளின் அந்தப் பார்வை...அதைத்தான் கேட்டது. அவன் ஒரு குழந்தையைச் சிருஷ்டிக்கும் அளவு ஆண்மையற்றவனா? அதை நிரூபிப்பது போலத் தானே அவள் இந்த இரண்டு வருடத்துக்கும் வயிற்றில் ஒரு பூச்சி புழு முளையாமல்....வெட்கித்தலை குனிந்தாள். அவன் என்ன செய்வான். எந்த இரவாவது அவளைக் கைநழுவ விட்டிருப்பானா? ஆனால் அதுதான் நடப்பதாயில்லையே! ''மலடி, மலடி'' யென்று வையகத்தோர் நையாண்டி செய்யப்போகிறார்களே அவளை....அவனை அறியாமலே கண்கள் குளமாயின. அவள் அவனது கண்ணீரைத் துடைத்து விட்டாள். ஆனால் அவன் கண்கள் வற்றாத நீரோடையாயின. ''மச்சான் கவலைப்படாதகா... மண்டூர்க்கந்தன் இருக்கிறது உண்மையெண்டா, இன்னும் பத்து மாதத்துல பெத்துத் தருவன்'' என்றாள். அடுத்தகணம்



நீராடினாள், கற்பூரமும் தேங்காயும் எடுத்தாள், ஓட்டமாக ஓடினாள், கந்தப்பெருமானிடம் கையேந்தி நின்றாள்.

''மாலைவிளக் கெரிய
மணவாளன் சோறுதின்ன
பாலன் விளையாட-ஒரு
பாக்கியம்தா வேல்முருகா''

வேண்டுதலுக்கு வேலன் தலைசாய்த்தான். இவள் குழந்தையோடு இன்று வளைய வருகிறாள்.

இவ்வாறான நேர்த்திக்கடன் காட்சிகளை '**நல்லந்துவனார்**' பரிபாடலில் செவ்வேளைப் பாடும்போது காட்டுகிறார். இதோ;

திருப்பெருங்குன்றத்துச் செவ்வேளைக் கற்புடைப்பெண்டிர் தொழுகின்றனர். அவர்கள் தமது உளக் குறைகளைத் தீர்த்தருளுமாறு முருகப்பெருமானை வணங்குகின்றனர். பிரிந்து சென்ற கணவர் திரும்பி வந்து தமது கைகளைப்பிடித்து வைகையில் நீராடியதாக கனவு கண்ட அம் மகளிர் ''அக்கனவு பொய்யாகாது நனவில் நிகழுமாறு நினது நிறைந்த நீருடைய வைகையாற்றில் புதுவெள்ளம் வந்து அழகுபெறுதல் வேண்டும்'' என வேண்டுகின்றனர்.

திருமணமாகியும் கணவனின் கைநெகிழாது வாழ்ந்தும் இன்னும் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லையே என்று வாடிவருந்திய மகளிர் சிலர், ''எமது வயிற்றில் கர்ப்பம் உண்டாக அருள்புரிய வேண்டும்'' என குமரப் பெருமானை வேண்டி நின்று நேர்கடன்வைக்கின்றனர். வேறு சில பெண்டிர் பொருள் தேடச்சென்ற தம் கணவருக்கு நிறையச்செல்வம் கிடைக்க வேண்டும் என்று நேர்கடன் வைக்கின்றனர். வேறுசில மகளிர் தம்கணவர் போரில் பகைவரைக்கொன்று அழித்து வெற்றிவாகை சூடவேண்டும் என அர்ச்சனை செய்கின்றனர். இவ்வாறு முருகனை அன்பு கொண்டு பாடுவோர் ஒலியும்-பாடற்கேற்ப எழும் தாள ஒலியும், நடனமிடும் பெண்களின் அரங்க ஒலியும், மேகம் தவழும் மலையினிடத்தே தோன்றும் எதிரொலியும் அங்கு ஒன்றுசேர்ந்து எழுகின்றன என்று பின்வருமாறு பாடுகின்றார் நல்லந்துவனார்.

''கனவில் தொட்டது கைபிழை யாகாது'
நனவில் சே எப்ப நின் நளிபுனல் வைகை
வருபுனல் அணிகென வரங்கொள் வோரும்
கருவயிறு உறுகெனக் கடம்படு வோரும்
செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்
ஐயமர் அடுகென அருச்சிப் போரும்
பாடுவார் பாணிச்சீரும் ஆடுவார் அரங்கத்தாளமும்
மஞ்சாடு மலைமுழங்கும்
துஞ்சாக் கம்பலை.....''

''பாலன் விளையாட-ஒரு
பாக்கியம்தா வேல்முருகா''

என்று கிராமியப் பெண் ஒருத்தி முருகனை வேண்டி நேர்கடன் பூணுதலைக் குறிக்கும் கிராமியத் தொடரையும், கருவயிறு உறுகெனக் கடம் படுவோரும் எனவரும் பரிபாடல் அடியினையும் ஒருங்கு வைத்து ஒப்புநோக்கும் போது, காலம் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை கனவுகள் மாறவில்லை, என்பதை உணர்வதோடு சங்கப் புலவனதும், இன்றைய கிராமியப் பாடகனதும் உள்ள உணர்வுகள் ஒன்றாகவே திகழ்கின்றன, என்பதையும் கண்டு வியக்கின்றோமல்லவா?

**சுவைத்துளிகள் - 2**

**''ஆக்காண்டி கத்துதம்மா!''**

அவள் அந்தக் கிராமத்து இளங்குயில். அவன் மாட்டுப் பிணையலைச் சாய்த்துக் கொண்டு கலப்பையும் கையுமாக தெருவால் வயல் நோக்கி நடக்கும் ஒவ்வொரும் காலையும், திரும்பி வரும் ஒவ்வொரு மாலையும் வேலிக்குமேலால் அவள் முகத்தைத் தரிசிக்கத் தவறுவதில்லை. நீண்ட நாளைய இந்த நிகழ்ச்சி இறுதியில் இரவிலும் சந்திக்கும் நிகழ்வாக மலர்ந்தது. இந்த மாறுதல் தாய்க்குத் தெரியாதென்றுதான் அந்த இளம் குயில் நினைத்தாள். ஆனால் தாயோ பலநாளாக இதை அவதானித்தாலும் கையும் களவுமாக பிடிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. தாயின் படுகேடான நித்திரை நேரத்தைத் தெரிந்து கொண்டு, அவள் வெகுலாவகமாக நழுவிச்சென்று திரும்பி விடுவாள். அன்று அவள் தாயை நோட்டம் விட்ட பின் வாரிச் சுருட்டி எழுந்திருந்தபோது தாய் விழித்துக் கொண்டாள். ''என்னடி

எழும்புறாய்? எங்க போகப்போறாய்?'' என்றாள் தாய். வேறு தருணம் என்றால் ''வெட்டைக்குப் போகப்போறன்'' என்று சமாளித்து இருப்பாள். நீண்ட நேரமாக வயல்வெளியில் தொடர்ந்தொலிக்கும் ஆட்காட்டிப்புள்ளின் குரலிலேயே முழுக்கவனமும் செலுத்தியிருந்த அவளுக்கு வேறு எதுவுமே வாயில் வரவில்லை.

''ஆக்காண்டி கத்துதம்மா
ஆள்மதிப்பம் கொள்ளுதம்மா
வாய்கால் முளைகுடித்து
மணித்தாராப் பாடுதம்மா''

என்ற வார்த்தைகள் அவளை அறியாமலே கவியாக வெளிவந்தன. நாள்தோறும் அவனைச் சந்திப்பதற்கு முன்கேட்கும் அந்த ஆட்காட்டிக் குரல் இன்று அளவில்லாத வேதனைதந்தது அவளுக்கு.(ஆட்காண்டிப்பறவை மட்டக்களப்பு வயல் வெளியிலே வாழும் ஒரு பறவை. அது ஆட்களின் நடமாட்டத்தை தன் கணீரென்ற குரலால் காட்டும் தகையது) அவன் வருவதன் முன் அறிகுறியாக ஒலிக்கும். இந்த ஆட்காட்டிப் புள்ளின் ஒலிபோன்ற ஒருபுள் ஒலியையும் அது தலைவிக்குத்தந்த வேதனையையும், நலிவையும் புலவர் நல்லந்துவனார் நெய்தல் திணையிலே காட்டுகிறார். இதோ அந்த சங்ககாலத்தோழி தலைவனிடம் கூறுகிறாள். அழகிய சிறகுகளையுடைய குருகுகள் ஒலிக்கின்றன. அது குருகுகளின் ஒலியாகத் தலைவிக்குப் படவில்லை. அந்த ஒலி அவனது தேரின் மணிக்குரலாகவே அவளுக்குப்படுகிறது. அந்த ஒலியை அவள் கேட்டுக்கொண்டு இருக்கையிலேயே அவ்வொலி அடங்கி பறவைகளின் ஒலியாகக் கேட்கிறது. ஆரம்பத்தில் கேட்ட மணியொலி மணியொலியல்ல; கானப்பறவைகளின் ஒலியென உணர்ந்ததும் அவள் அடையும் வேதனைக்கு எல்லையே இல்லை. அவ்வாறு அவள் மேனி எழில் குலைகிறது. தலைவியின் அந்த மேனியில் புது அழகு பூக்குமாறு நீ உடனே தேரேறிப் புறப்பட்டு அவளிடம் செல்லவேண்டும். இவ்வாறு தோழி கூற்றாக வரும் கலித்தொகை அடிகள் இவை.

''அணிச்சிறை இனக்குருகு ஒலிக்கும்கால் நின்தோர்
மணிக்குரல் என இவள் மதிக்கும்மன், மதித்தாங்கே,
உள்ளான்ற ஒலியவாய் இருப்பக்கண்டு அவைகானல்
புள்ளென உணர்ந்துபின் புலம்புகொண்டு இனையூமே...

இவ்வாறு சங்ககால காதலிக்கும், மட்டக்களப்புக் கிராமியக் காதலிக்கும் பிரிவுத்துயர்தரும் இருபுள் ஒலிகளையும் ஒப்பிட்டு நோக்குதல் உவகை தருவதல்லவா? எழுத்தறியாத கிராமியப் பாடகன் கற்றுவல்ல சங்ககாலப் பாவலனை இங்கே தொட்டு நிற்பது வியப்பல்லவா?

**சுவைத்துளிகள் - 3**

### ''அந்தத் தறுதலைமேல் அவளுக்கு ஆசையெண்டால்''

அந்தக் கட்டிளங்காளை நாலாபுறமும் மணம்பரவ மலர்ந்திருந்த அந்த இளம்பூவைக்கண்டான். அது பூவா? இல்லை பூவை. அவளும் சும்மா இருந்தாளா? நாணம் தடுத்தாலும் ஓரக்கண்பார்வையால் அவனை விழுங்கினாள். இருவரும் கண்ணொடு கண் இணை நோக்கினர். கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்னபயனும் இல்லை என்றான் வள்ளுவன். இந்த மனம் ஒத்த காதலரின் சந்திப்புக்கு வழிவகுத்தாள் அந்தக் கிராமியத்தோழி. அதுமட்டுமா, அவர்களது தூயகாதலைத் தாய்க்குப்பட்டும் படாமலும் எடுத்துரைத்தாள். தாயோ அதுகேட்டதும் பத்திரகாளியாக மாறினாள். அதன் பயனாகத் தலைவிக்குக் கட்டுக்காவல் அதிகரித்தது. தலைவி தவித்தாள். தலைவன் தடுமாறினான். இந்த நிலையில் வேறுவழியில்லை என்றுணர்ந்ததோழி இருவரின் உடன்போக்குக்குத்தருணம் அறிந்து வழிவகுத்தாள். மட்டக்களப்புத் தமிழில் உடன்போக்கு ''கூட்டிற்று ஓடுதல்'' எனப்பட்டது. அவள் அவனோடு ஓடிவிட்டாள் என்பது ஊரெல்லாம் பரவ, மானமே போய் விட்டதாகத் தலையிலடித்து ஒப்பாரிவைத்தனர் பெற்றோர். தாய்மகளில் உயிரையே வைத்திருந்தவள். இப்படித்தன் மகள் செய்வாளென கனவிலும் அறியாள். ஊண் உறக்கமின்றி மகளை நினைத்து அழுதழுதே அவலக் கோலமானாள். இந்த நிலையிலே தோழிவந்து அந்த அன்னையைக் கண்டாள். நாசூக்காகத் தலைவியின் உடன்போக்குக்குத் தாயே

காரணம் என்பதை 'எலுமிச்சம் பழத்தில் ஊசி ஏற்றுவது போல'' உணர்த்தினான் தோழி. அப்போதுதான் தனது தவறை உணரத்தலைப்பட்டாள் தாய். ஐயோ இப்படி நடக்கும் என்று நான் நினைத்தேனா? அவன் மேல் இவள் இத்தனை உறுதியான அன்பு வைத்துள்ளாள் என்பதை அறிந்திருந்தால், அவனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்திருப்பேனே, என்று அங்கலாய்த்தாள் அவள். தாயின் அங்கலாய்ப்பு நாட்டுக் கவியாக எவ்வாறு மலர்ந்தது தெரியுமா?...இதோ

''அந்தத் தறுதலைமேல் அவளுக்கு ஆசையெண்டால்

கலத்திலே போட்டல்லோ கண்டு களித்திருப்பேன்''

தன்மகளைக் கடத்திப்போன கொடுமையால் தலைவன் தறுதலை என்ற சொல்லால் இங்கே குறிக்கப்படுகிறான். தறுதலையை, நட்ட முட்டி என்ற பதத்தாலும் மட்டக்களப்பில் குறிப்பிடுவர் ''கலத்திலே போடுதல் - திருமணத்தைக் குறிக்கும். தேசவழமைச்சொல். இத்தகைய ஒரு காட்சியை அகநானூற்றில் பாலைத் திணையிலே காட்டுகிறார், **கருவூர் கண்ணம்பாளனார்**. (அகம் 463)

அதுகொடிய பாலை நிலம். அங்கே நிற்கும் மாமர கொப்புகளிலே ஏறி மறைந்து இருக்கிறார்கள் ஆறலை கள்வர்கள் ஏன் தெரியுமா? புதிதாக வரும் வழிப்போக்கர்களைத் தூரத்தே கண்டுகொள்வதற்காக. அத்தகைய கொடிய சுரத்திலே எம்மகளைத் தன்னுடன் கொண்டு சென்ற கொடியவனாகிய இளைஞனுக்கு அவள் கொண்டிருந்த காதலின் உறுதிப்பாட்டை, நான் முன்னே அறிந்திருந்தேனானால், என் வீடு விளங்குமாறு, அழகிய என்மகளின் வளரும் முலைப்பரப்பிலே இனிது துயிலும் வண்ணம் மணம் செய்து கொடுத்திருப்பேன்''. என்று வருந்துகிறாள் அவ்வன்னை.

''ஆறுசெல் வம்பலர் வருதிறம் காண்மார்
விவ்வல் ஆடவர் மேலான் ஒற்றி
நீடுநிலை யா அத்துக் கோடுகொள் அருஞ்சுரம்
கொண்டனன் கழிந்த வன்கண் காளைக்கு
அவள் துணிவு அறிந்தனன் ஆயின் அன்னோ
ஒளிறுவேல் கோதை ஓம்பிக் காக்கும்
வஞ்சி அன்ன என் வளநகர் விளங்க
இனிதினிற் புணர்த்துவன் மன்னோ துனி இன்று
திருநுதல் பொலிந்த என் பேதை
வருமுலை முற்றத்து ஏமுறு துயிலே

இன்று நமது நாட்டிலே ஒருகாளையும் கன்னியும் காதலித்து விட்டார்களானால் பெரும்பாலான பெற்றோர் அதை ஏற்க மறுப்பது இயல்பாய் விட்டது. இந்த நிலையில் உடன்போக்கு அன்றும் இடம்பெற்றது. இன்றும் இடம் பெறுகிறது. இந்தநிலை மட்டக்களப்புக் கிராமப்புறங்களிலும் நிகழ்கிறது. கண்போல காத்து வந்த தனது மகளை அவன்-எங்கிருந்தோ வந்தவன் உடன்கொண்டு சென்றான் என்றால் அவன்மேல் பெற்றோருக்கு ஏற்படும் ஆத்திரம் எல்லையற்றது. அதைத் ''தறுதலை'' என்ற சொல்லால் வெளிப்படுத்துகிறாள் மட்டக்களப்புத் தமிழ்த்தாய். அந்த ஆத்திரத்தை சங்ககால அன்னை ''வன்கண்காளை'' என்ற சொல்லால் புலப்படுத்துகிறாள். ஆரம்பத்தில் ஆத்திரம் கொண்டாலும் இறுதியில் காதலரின் உடன்போக்குக்குத் தாமே காரணம் என்பதை உணர்ந்து வருந்தும் நிலை அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. அதனை ''இனிதினிற் புணர்த்துவன் மன்னோ'' என்கிறாள் அன்றைய அன்னை. ''கலத்திலே போட்டல்லோ கண்டுகளித்திருப்பேன்'' என்கிறாள் மட்டக்களப்பு மாதா, இவ்வாறு இந்த இருநிலைக் கழிவிரக்கத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது எழுத்தறியாத கிராமியக் கவிஞனை சங்ககால சான்றோரோடு கவித்துவத்தில் ஒன்றாக வைத்து வியக்கத் தோன்றவில்லையா?

இந்தக் கிராமியக் கவித்துவத்தை இன்னும் சுவைக்க வேண்டுமானால் அந்தக் கழிவிரக்கத்தின் பின் என்ன நடந்ததென்று காணவேண்டும். உடன்போக்கில் போனவர்கள் எங்கோ எப்படியோ வாழ்கிறார்கள். காலம் கடந்து செல்கிறது. மகள் மணவாளனோடு திரும்பி வந்துவிடவேண்டும் என்று நேராத கோயில் எல்லாம் நேர்கிறாள் தாய். அவர்களின் மனமாற்றம் தோழிமூலமாக காதலர்க்கு எட்டுகிறது. அவர்களுக்கு பெற்றோரின் உடன்பாடு கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி. அதிலும் தலைவியை விடத் தலைவன் முன்னிலையில் நிற்கிறான். அவன் தன் உயிருக்கினியவளிடம் கூறுகிறான், கேளுங்கள்.



''வாழைப் பழம் எடுகா வம்பரையில் தேனெடுகா
சாவல் வடிவெடுகா - உங்க தாயாரிடம் போய்வருவோம்''

தன் உயிரிலும் இனியாளை ஈன்றுதந்த அன்னைமேல் தலைவனுக்கு அத்தனை உருக்கம். அவளிடம் வெறுங்கையோடு போகமுடியாது. வாழைப்பழமும் தேனும் கொண்டு சென்று அந்த மனத்தில் மேலும் இனிப்பு ஏற்றவேண்டும். அதுவும் நடந்துபோயல்ல, சேவல் வடிவெடுத்துப் பறந்து போக வேண்டும். எப்படியானவன் இந்தக் கிராமிய மாப்பிள்ளை பார்த்தீர்களா?

**சுவைத்துளிகள் - 4**

**"கட்டிக்கறந்த நாகு"**

அந்தக் குளிர்நிசியில் அவன் அவள் வரவு பார்த்திருந்தான். இன்றல்ல, நேற்றல்ல எத்தனை இரவுகள் இப்படி ஏமாற்றி விட்டாள். என்ன நடந்தது இவளுக்கு? எதுவும் புரியாது ஏங்கி நின்றிருந்த போது தூரத்தே நிழலாடியது. அவள்தான் வருகிறாள் என்று ஆறுதல் கொண்ட அடுத்தகணம் அவன் ஏமாற நேரிட்டது. வந்தவள் தலைவியல்ல, அவள் தோழி. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் அந்த ஆத்திரம் அவன் இதயத்துக்குள்ளேயே அமுங்கியது. என்ன காரணத்தால் அவள் வரவில்லையோ? என்று ஏக்கம் அந்த ஏக்கம் கவியாகப் பிறந்தது.

''கட்டிக் கறந்தநாகு கனுவடிக்கு வந்தநாகு
தட்டிச் சொறிஞ்சநாகு-இப்ப
தலை கிழப்பிப் பார்க்குதில்லே''

இந்த உவமை எத்தனை பொருள் பொதிந்தது. சங்ககால உள்ளுறை உவமத்தைக் கூட விஞ்சிவிடவில்லையா எண்ணியெண்ணிக் கழிரவிக்கப்படும் ஒவ்வொரு நிகழ்வும் அவன் கண்களைக் குளமாக்கியது. ஆண்பிள்ளை அழலாமா? மௌனமாக நின்றிருந்தான் அவன். தோழி எதுவுமே பேசவில்லை. பேசினால் அவனது துயர் கரைகடந்து பெருகும் என்பதை அறிவாள். அதனால் திரும்பிச் சென்று விடுகிறாள். பெருமூச்சோடு அவன் திரும்புகிறான். தலைவியிடம் ஓடோடிச் செல்கிறாள் தோழி. அவளைக் கண்டதும் மடைதிறந்த வெள்ளமாக அவள்துயரம் கண்ணீராகக் கொட்டுகிறது. அவன் தந்த மயக்கம், அதனால் அவள் அடைந்த இன்பம், அவற்றையெல்லாம் அவன் மறந்து விடலாம். அவள் மறந்து விடுவாளா? வெட்கத்தை விட்டு அதையெல்லாம் பச்சையாகச் சொல்வதிலே துன்பத்திலும் ஒரு இன்பம் அவள் வார்த்தைகள் கவிவடிவெடுக்கின்றன.

''கூந்தலைக் கோதி குனிந்துகையில் கண்புதைத்து
மார்பழைந்த வண்டை மறப்பதுண்டா சொல்தோழி''

மலரைத் தழுவி மதுவுண்டு பறப்பது வண்டுதானே! வண்டு மலரை மறக்கலாம். ஆனால் மலர் அந்த அனுபவத்தை மறக்கமுடியுமா? அதனாலேதான் மலர் வாடுகிறது. தலைவனை வண்டாகக்கூறும் அந்தக் கிராமியத் தலைவியின் கவித்துவம் எம்மை வியக்கவைக்க வில்லையா? இத்தகைய ஒரு காட்சியை கலித்தொகை குறிஞ்சித்திணையிலே கபிலர் காட்டுகிறார்.

தலைவியின் கண்ணீர் ததும்பும் குரலைக் கேளுங்கள்:

''நரந்தம் பூவின் மணம் நாறும் என்கூந்தலைப் பற்றிக் கொண்டு கூந்தல் மாலையின் ஒரு வட்டத்தை விரல் நுனியில் சுற்றி மோந்து பார்த்தான். நறவமலர் போன்ற விரல்கள் உள்ள என்கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டான். பெருமூச்செறிந்தான். தன்பிடியை துதிக்கையால் தடவிக் கொடுக்கும் களிறுபோல் தொய்யில் எழுதிய என் இளம் முலைகளை மெல்லத் தடவிக்கொடுத்துக் காதல் மயக்கமூட்டினான்.

''நரந்தம் நாறு இருங்கூந்தல் எஞ்சாது நனிபற்றி
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றி குரலமை ஒருகாழ்
விரல்முறை சுற்றி-மோந்தலும் மோந்தனன்
நறா அவிழ்ந்தன்ன என்விரற் போதுகொண்டு
செறா அசெங்கண் புதைய வைத்தும்
பறா அக் குருவின் உயிர்த்தலும் உயிர்த்தனன்
தொய்யில் இளமுலை இனிய தைவந்து
தொய்யிலம் தடக்கையின் வீழ்பிடி அளிக்கும்
மையல் யானையின் மருட்டலும் மருட்டினன்..........''

இவ்வாறு தலைவன் தந்த அனுபவத்தை நினைந்து வருந்தும் சங்ககாலத் தலைவிக்கும் அந்த அனுபவத்தால் அவனை மறக்கமுடியாது தவிக்கும் கிராமியக் காதலிக்கும் உள்ள ஒற்றுமை கண்டு வியக்கத்தோன்றவில்லையா? சங்ககாலக் காதலரின் நுண்ணிய அனுபவத்தை அப்படியே யதார்த்தமாக செழுந்தமிழ்ச் சொற்களில் வடிக்கும் புலவரின் நுண்மாண் நுழைபுலன் கண்டு நுகர்ந்து வியக்கும் நாங்கள், அத்தகைய கவித்துவ வித்தையைக் கிராமியக் கவிகளிலும் கண்டு சுவைக்கலாம் அல்லவா?

**சுவைத்துளிகள் - 5**

**''விடியாவிடியுமட்டும்''**

அவள் தோழிகளோடு குளத்திற்கு வந்தாள். குடத்தில் நீர்முகந்தவள் அதை அப்படியே விட்டு விட்டு பக்கத்தில் மலர்ந்து முறுவலித்த ஆம்பல் மலரைப் பறித்தாள். பறிக்கும்போதே அவனது உயிரும் பறிக்கப்பட்டதாக உணர்ந்தான் அவன். பறித்த அந்த மலரைச் சிறிது நேரம் நோக்கினாள். பின்தலையில் சூடிக்கொண்டாள். அவனது உயிரும் பூவோடு சேர்த்துச் சூடப்பட்டதை உணர்ந்தான். இவ்வாறு நாள்தோறும் அவன் அவளால் அனுபவித்த துன்பம் ஒரு நாள் அவளோடு பேச்சுக் கொடுத்தபோது சற்றுக் குறைந்தது. விடுவானா? நாளும் சந்தித்தான்-கதைத்தான்-கதைத்தாள்- கதைத்தார்கள். இறுதியில் இரவிலே சந்திக்க விரும்பினான் அவன். எங்கே? என்றாள் அவள். ''ஐயையோ, அம்மா பொல்லாதவள், அப்பா அதைவிடக் கொடியவர் ....நான் தொலைந்தேன்'' என்றாள் அவள். ''பயப்படாதே தருணம்பார்த்து நீ மெல்ல கதவைத்திற கதவடியில் காத்திருப்பேன் ''என்றான். ஒருகையாக அவள் சம்மதம் பெற்றவன் மகிழ்ச்சியால் பூரித்தான். பிரியமுடியாமல் பிரிந்தனர். பகற்பொழுது கழிய பலயுகங்கள் காத்திருக்கும் உணர்வு அவனுக்கு. கங்கலும் வந்து நடுநிசியும் கடந்தது. அவன் வந்தான் கதவு சாத்திக்கிடந்தது. கதவோரம் தவமிருந்தான். இப்போ வருவாள் சற்று நேரத்தில் வருவாள், கதவுதிறபடும் என்று கண்ணில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு காத்திருந்தான். காத்திருந்தான்; காலமெல்லாம் காத்திருந்தான் இறுதியில் விடிந்தேவிட்டது. பக்கத்து வீட்டுக் கதவுகள் திறக்கப்பட்டன. இனியும் நின்றால்...?

கதவு திறக்கப்படவில்லை தான் விடியும்வரை காத்திருந்ததை அவளுக்கு எப்படி உணர்த்துவது கதவு ஆடி அசைவது அது மறந்து விடலாம். கதவு நிலை இருக்கிறதே அது உறுதியானது. அதனிடம் சொல்லலாம். கதவு நிலையைச் சாட்சிவைத்து அவன் சொன்னான். அது கவியாக உருப்பெற்றது. ஆனால் வெளிவராது நெஞ்சுக்குள்ளேயே அடங்கி வேதனைக் குமுறலாக அமுங்கியது. அவன் கதவு நிலையைச் சாட்சியாக வைத்து

அவளை முன்னிலைப்படுத்தி நெஞ்சுள்ளே பேசாமல் பேசினான். எப்படி?

''விடியா விடியுமட்டும்
விடிந்து பொழுதேறுமட்டும்
காத்திருந்து போறேனெண்டு-உண்ட
கதவு நிலை சாட்சி சொல்லும்''

நெஞ்சு நிறைந்த வேதனையோடு, தலைகுனிந்தபடியே நடந்தான். நாற்புறத்துக் கண்களும் அவனை நையாண்டி செய்யும் உணர்வில் வெட்கம் உயிரை விழுங்க வெளிப்பட்டு நடந்தான்.

இத்தகைய நெஞ்சோடு வேதனையுற்ற ஒரு தலைவனை அக நானூற்றில் ''பரணர் தரக் காண்கிறோம். அவன் நெஞ்சோடு கூறுவதைக் கேளுங்கள். ''அவள் மெல்லியள்; இளையவள், அவளது நல்ல அழகிய மார்பு தழுவ விரும்பினாய். அதனால் பாம்புகள் இரைதேடித் திரியும் அஞ்சத்தக்க ஒடுங்கிய வழியை இரவுதோறும் கடந்து சென்றாய். அவ்வாறு சென்றும் அவளை அடைந்தாயா? என்னே ஏமாற்றம் உனக்கு காண்பவர் எல்லாம் இரங்கும்படி கண்கள் சோர்ந்த நிலையில் தனிமையில் வருந்துகிறாய்.

ஊராரின் நகைப்புக்குரியவனாகிவிட்டாய். நெஞ்சே உன். அளவற்ற ஆசையால் எல்லையற்ற துன்பம் தந்துவிட்டாயே! என்று தன் நெஞ்சோடே கூறி வருந்துகிறான் அவன்.

''......நெஞ்சே நாளும்
மெல்லியல் குறுமகள் நல்லகம் நசை இ
அரவு இயல் தேடும் அஞ்சுதல்
சிறுநெறி இரவி
எய்தியும் பெறா அய் அருள்வரப்
புல்லென் கண்ணை புலம்புகொண்டு உலகத்து
உள்ளோர்க் கெல்லாம் பெருநகை யாக
காமம் கைமிக உறுதர
ஆனா அரும்படர் தலைதந் தாயே......''

தலைவியை இரவுக் குறியில் காணவந்து காத்திருந்தும் அவளை அடையமுடியா நிலையில் நெஞ்சோடு கிளர்த்தும் சங்ககாலக் காதலரின் துயரத்தை விஞ்சும் நிலையில் கதவுநிலையைச் சாட்சி கூறச்சொல்லும் கிராமத்துக் காதலனின் நிலை எம்மை உருகச் செய்கிறது. ''காத்திருந்து போறனெண்டு உண்ட கதவுநிலை சாட்சி சொல்லும் என்ற சொற்றொடர் அவனது பரிதாப நிலைக்காக இரங்கச் செய்கிறது. கிராமத்து வழக்கில் அமைந்த சாதாரண சொற்களைக் கொண்டு காதலனின் கையறு நிலையை நம்மனத்தகம் நெகிழவெளிப்படுத்தும் அந்தக் கிராமியக் கவிஞனின் கவித்துவம் அற்புதம் எனலாம்.

**சுவைத் துளிகள் - 6**

**"காப்பெங்க கண்டார் -உன்ட காதிலிடும் தோடதெங்க?"**

அந்த வயல்கள் பொன்கொழித்தன. அவன் அறுத்து நிமிர்த்திய ஒவ்வொரு பிடிக்கதிரோடும் அவனது கையும் வ்ளைந்து அந்த நெற்குவையின் பாரத்தைக் காட்டியது. அறுத்துப்பரப்பிய நெற்கற்றைகளை, அவன் கட்டுக்களாக்கிக் கொண்டிருந்தான். முழங்காலைக் குத்திக் கட்டை முறித்து கயிற்றைச் செருகிக்கட்டிக் கொண்டு நிமிர்ந்தவன் கண்களை அப்படியே நிலைகுத்தச் செய்தது அவளது பார்வை. அவனும் அழகன் அவளும் அழகி இருவர் கண்களும் சந்தித்தபின் சொல்லவும் வேண்டுமா?

கதிர் பொறுக்கச் செல்லும் ஒவ்வொரு வேளையும் அவள் கடைக்கண்கள் அவனை விழுங்கும். அந்த

விழுங்கலுக்காகவே அவன் கடைக்கண்களும் காத்துக்கிடக்கும். இப்படி ஒன்றையொன்று விழுங்கும் கண்கள் களவொழுக்கிலும் ஈடுபட்டபோது ஊர் சும்மாவிருக்குமா? அது தூற்றத்தொடங்கவே அதற்காற்றாது அவள் அன்னை கட்டிக் கொடுக்கவேண்டியிருந்தது. மறுமாதமே அவன் அவளைக் கூட்டிக்கொண்டு புதுக்குடித்தனம் போய் விட்டான். அன்னை மகளைச் சும்மா விட்டாளா? வாயை வயிற்றைக்கட்டிச் சேர்த்துவைத்திருந்த அத்தனையையும் சேர்த்துக் காதுக்கும் கழுத்துக்கும் கைக்கும் மாத்திரமல்ல கால்களுக்கும் பூட்டித்தான் அனுப்பினாள். ஆனால் மூன்று மாதங்கள் முழுமையாக நிறையுமுதல் அவள் மீண்டும் தனியாக வந்தாள். தனியாக வந்தால் போதாதா? வாடி வதங்கி அவள் வந்தகோலம், பெற்றவளைத் தவிக்கவைத்தது-திகைக்கவைத்தது அவள் விழிகள்-மான்போன்ற மருட்சியூட்டும் விழிகள் வீங்கிக் கண்ணீர்ச் சேற்றில் நீந்தின. அன்னையின் வயிறு பற்றியெரிந்தது, கவி பிறந்தது.

''காப்பெங்க கண்டார் உன்ட
காதிலிடும் தோடதெங்க
மார்புமணிக் கோவையெங்க-உன்ட
மான்வெருட்டிய பார்வையெங்க?''

கண்டார் என்ற சொல் இங்கு நயக்கத்தக்கது. கண்டு-கற்கண்டு அன்னைக்கு மட்டுமல்ல அவள் கற்கண்டு, அவள் மணாளனுக்கும் அவள் கற்கண்டாகத்தான் இனித்தாள். அந்தக் கற்கண்டு இப்போது அவனுக்குக் கசந்து விட்டதா? இல்லையானால் எவளோ ஒரு தட்டுவாணிக்கு அவன் நகைகளைக் கொண்டு கொடுப்பானா? நகைகளை மாத்திரமா? அவள் மான்போன்ற அழகிய பார்வையையும் அழித்துவிட்டானே!

இதேபோன்றதொரு காட்சியை, பரிபாடலில், வையைப் பாடலில் ஆசிரியர் **நல்லந்துவனார்** காட்டுகிறார்.

அகில் சந்தன வாசனைப்புகைவகைகளால் மணமூட்டப்பட்ட பூமாலைகளை யணிந்த அழகிய மகளிரும், அழகிய தாரினை அணிந்த ஆண்களும் உச்சிச்சுட்டும், தலைமாலையும் தலைவளையமாகியமாலையும் அணிந்த மக்களும் ஒன்றாகத் திரண்டு ஆற்றங்கரையில் நின்றிருந்தனர். அப்போது நீர்விளையாட்டுக்காக அங்குவந்துள்ள பிறமகளிர், அணிந்துள்ள ஆடை அணிகளை ஆங்காங்கே பார்த்துக்கொண்டு வந்தனர் சிலபெண்கள். அவருள் இருந்த தோழிப் பெண்கள், தம் தலைவியும் தலைவனும் அங்கோர் இடத்தில் நிற்பதைக் கண்டனர். அத்தலைவி, தன் வளைகளும் முத்துமாலையும் காணாமற் போனதற்காக வருந்திக் கொண்டிருந்தாள். தோழியர் இதை அறிந்திருந்தனர். அதனாலேயே அவர்கள் பிறபெண்கள் அணிந்துள்ள அணிகளைக் கவனிக்கலாயினர். அவ்வாறு பார்த்து வந்தபோது காணாமற்போன தலைவியின் வளையல்களையும் மாலையையும் ஒரு பெண் அணிந்திருப்பதைக் கண்டனர். அவ்வளையல்கள் அப்பெண்ணுக்கு எப்படிக் கிடைத்தன. தலைவனே அவற்றை அப்பெண்ணுக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்க வேண்டும் என உணர்ந்த அவர்கள், அப்பெண்ணையே பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பெண்ணே தம்தலைவிக்கு மாற்றாளாவாள் எனவும் உணர்ந்தனர். தோழிகள் அப்பெண்ணைப் பார்த்துக் கொண்டிருப்பதை அந்தத் தலைவன் கண்டான். அவனேதான் தலைவியின் அணிகளைத் திருடிச்சென்று தன்கள்ளக் காதலிக்குக் கொடுத்தவன். அதனால் அவனது குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்துக்கொண்டிருந்தது. தனது கள்ளத்தைத் தோழிகள் அறிந்துகொண்டனரோ என அவன் ஐயுற்றான். அதனால் அவன் முகம் நாணத்தால் கவிழ்ந்தது. இதைக்கவனித்த தோழிகள் இத்திருடனின் நாணிய முகத்தைப் பாருங்கள் எனத் தம்முன்னே கூறிக்கொண்டனர்.

இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தாள் அந்தக் கள்ளக்காதலி. அங்கிருந்து மறைந்து விட அவள் நினைத்தாள். அங்கே காடுபோல பெண்கள் கூட்டம் காணப்பட்டது. போர் செய்கின்ற கோபம்கொண்ட அம்பு போன்றனவும், தம்முன் ஒத்த இமைகொண்டனவும் மைபூசப்பட்டனவுமான கண்களைக் கொண்ட அப்பெண் கூட்டத்துள் ஓடி ஒளித்துக்கொள்ள அக்கள்ளக் காதலி முயல்வதைத் தோழிகள் கண்டனர். அவர்கள் மற்றத்தோழி களுக்கு அப்பெண்ணைக் காட்டி ''இவ்விடத்தினின்றும் ஓடி ஒளித்துத் தப்பிச் செல்லும் இவளைப் பாருங்கள்'' என்று கூறினர்.

''புகைவகை தைஇயினார் பூங்கோதை நல்லார்
தகை வகை தை இயினார் தார்

வகை வகை தை இயினார் மாலை மிக மிகச்
சூட்டும் கண்ணியும் மோட்டு வலையமும்
இயலணி அணிநிற்ப ஏறி அமர்பரப்பின்
அயலயல் அணிநோக்கி ஆங்காங்கு வருபவர்
இடுவளை ஆரமொடு ஈத்தான் உடனாகக்
கெடுவளை பூண்டவள் மேனியிற் கண்டு
நொந்தவள் மாற்றாள் இவளென நோக்கத்
தந்த கள்வன் சமழ்ப்பு முகம் காண்மின்
செருச்செய்த வாளி சீற்றத் தலையன்ன
நேரிதழ் உண்கணார் நிறை காடாக
ஓடி ஒளித்தொய்யப் போவாள் நிலை காண்மின்''

இவ்வாறு சங்ககாலத்துக் கனவும் காதலும்-அதனால் ஏற்பட்ட நகை இழப்பு, அதன் காரணமும் இன்றும் தொடர்கின்றன. சங்ககாலத்து இத்தகு பண்புகளைக் கிராமியக் கவிநயத்தோடு ஒப்ப நோக்குவது உவகை தருகிறது.

**சுவைத்துளிகள் - 7**

**''தேமல் அழகி பெண்ணார் திருநீற்றுப் பொட்டழகி''**

மாரியிலே பொங்கிப் புரண்டுவந்த சிற்றாறு வரண்டு கிடக்கிறது. ஆற்றோடையிலே வெள்ளைவெளேரென்ற படுக்கை மணல் அதன் பரப்பிலே இருக்கிறது. ஒரு 'பூவல்' - தொட்டனைத்தூறும் மணற்கேணி என்று வள்ளுவன் குறிப்பிட்ட ஊருணியைத்தான், வாடித்தலத்துமக்கள் 'பூவல்' என்று அழைக்கின்றனர்

அந்தப் பூவலிலே, அதோ நீர் அள்ளிக்கொண்டு நிமிருகிறாள் ஒரு பருவக்குமரி. எங்கிருந்தோ வந்த கட்டிளங்காளையைச் சந்தித்துக் குனிகின்றன அவள் நாவற்கனி விழிகள்; வியர்த்து விறுவிறுத்துவந்த அவன் கேட்காமற்கேட்பது அவளுக்குப் புரிந்து விடுகிறது. 'வாய்க்காலில் தண்ணியிலே வண்டுவிழும் தும்பிவிழும், என்று அவள் தண்ணீர் தர மறுக்கவில்லை. குனிந்ததலை நிமிராமலே தண்ணீர் தருகிறாள். கொடுப்புக்குள் சிரிப்பு அமுங்குகிறது. தாகம் தீர, தண்ணீரை மாத்திரமா அவன் குடித்தான்? அவள் இளம் கொடியுடல் வனப்பையும் முழு எழிலையும் சேர்த்தே பருகிவிடுகிறான். நாணி நிலநோக்கிய அவள் பாசாங்கு விழிகள் தாம் சும்மா இருந்தனவா?

பூவலடியிலே ஆரம்பித்த இந்தப் புது நாடகம் நாள்தோறும் நிகழ்ந்து பழம் நாடகமாகிறது. அவனோடு நல்லாகப் பழகிவிட்டாள் 'அவள்' ஒரு நாள் அவள் பவள இதழ்கள் குறுநகைபூத்து மலர்கின்றன. குரல்கொஞ்சுகிறது நாணம் இழைகிறது.

''ஒவ்வொரு நாளும் தண்ணித் தவிப்புத்தானா?'' அவன் வாயால் பேசவில்லை கண்ணால் பதில்சொல்கிறான்.

''ஒவ்வொருநாளும் உன்னைப் பார்க்கவேணுமென்டதாகம் உன்னுல அவன் எச்சிலை விழுங்குகிறான். அவள் நாணம் படர முறுவலிக்கிறாள்.

''ஏன் என்னில்?'' குரலில் தேன்பாய்கிறது அவனுக்கு வார்த்தைகள் பிறக்கவில்லை, கவிதான் பிறக்கிறது.

''ஒண்டுக்கு மில்லைப் பெண்ணார்
உன்னை விரும்பினது -உண்ட
சஞ்சி சடைக்கும் சரிஞ்சி விழும் தேமலுக்கும்''

கருங்குழல் காளையரைக் கட்டியிழுப்பது உண்மைதான். ஆனால் இங்கு அவனைக், கவர்ந்து விட்டிருப்பது அதுமாத்திரமல்ல; அவளிடமுள்ள ஏதோ ஒன்றுதான் அதை-இத்தனை நாளும் அவன் பார்த்துப் பார்த்து ரசித்ததை, அவள் கவனித்தாளோ இல்லையோ, அவன் அதைத்தான் விழுங்கினான். அதற்கு அழுத்தம் கொடுக்கிறான்

''புத்தப்புதுச் சட்டியிலே

பொன்னுருக்கி வார்த்ததுபோல்-உன்ட

பொன்னான மேனியிலே

போட்டதுகா நற்றேமல்!''

புத்தப்புதுச் சட்டியிலே பொன்னை உருக்கிவார்த்தால் எப்படியிருக்கும்? எத்தனை இயற்கையான-பொருத்தமான உவமை! அவளுக்குச் சூட்டப்பட்ட பட்டம் ''தேமல் அழகி!''

அன்று, முதல்நாள் கண்டதிலிருந்து ஒவ்வொரு நாளும் அவன் தாகத்தோடு வந்துகொண்டிருக்கிறானே; அதற்கு என்ன காரணம்? அவள் கொள்ளையழகை குறுகுறு பார்வையை- இளமைப் பூரிப்பை மறக்க முடியாமையல்ல, புத்தம்புதுச் சட்டியிலே பொன்னுருக்கி வார்த்துவைத்திருக்கும் அந்த வனப்பை மறக்க முடியாமைதான், அவன் விழுங்கி விழுங்கி இன்னும் மிஞ்சி வழிகிறதே, - அவள் தேமல் அழகு, அதை மறக்கமுடியுமா?

''தேமல் அழகி பெண்ணார்

திருநீற்றுப் பொட்டழகி

மார்பழகி வள்ளிப்பிள்ளை-உன்னை''

மறக்கமனம் கொள்ளுதில்லே..என்கிறான்

இதே போன்றதொரு தேமல் அழகுச்சுவையை குறிஞ்சித்திணையிலே காட்டுகிறார் கபிலர். இதோ அந்தக்காட்சி.

அவள், முகைவிரியாத மொட்டு. காதல் உணர்வு பெறாத கன்னி. ஆனால் அவள் தோற்றம் அவனை வெறிகொள்ளச்செய்கிறது. பந்தாடிச் செல்கிறாள் அந்தப் பாவை. பருவம் மலராத பைங்கொடிபோலவா காணப்படுகிறாள்! மூங்கிலெனத் திரண்டதோள், வெறிகமழ் கருங்குழல்; மானைவென்ற மருட்சிவிழிகள்; மயிற்சாயல், சிலம்பு ஒலிக்க, மலர்க்கொடிபோல - இடைநுடங்க - மின்னற்கொடிபோல நடக்கிறாள் அவனும் பின்னாலே நடக்கிறான். தான்கொண்ட காதலை அவளுக்கு இன்று நேராகவே உணர்த்திவிடுதென்பதுதான் அவனது முடிவு.


''இன்மொழி'' என்று அவளை அழைக்கிறான்.

''கூடல் நகரில் தேன்பாய மலர்ந்த நீலமலர்போன்ற உனது வேல்விழிகள் யானைப்படையோடு எதிர்க்கும் பகைவர்களை, பாண்டியனது வேல்பாய்ந்து வருத்துவதுபோல வருத்துகின்றனவே! இவ்வியல்பு உனக்குத் தகுமா?'' என்று கேட்கிறான். அவள் கவனிக்கவேயில்லை. ஆயினும் அவன் விட்டானா?

''கனங்குழாய்!'' என்று மீண்டும் அழைக்கிறான் ''வானம்பொழிந்து வளம் கொழித்த அசோகஞ்சோலையுள், அழகுமிளிர்ந்த இளமாவின் தளிர்போன்றவளே; தேர்ப்படையோடு வந்த பகைவரின் மார்பில் பாய்ந்த பாண்டியனின் அம்பைப் பார்க்கினும் அதிகமான துன்பம் நீதரலாகுமா?'' என்கிறான்.

இப்போதாவது அவனைக் கவனிக்கிறாளா? இல்லை; அவன்தான் விட்டகன்றானா?

''வகைவகையான குளுமையான மலர்மாலைகளை யணிந்த பாண்டியனது பொதியைமலையின் கண்ணேயுள்ள **வேங்கை மரத்தின் பூப்போன்ற தேமலையுடையவளே!**'' என்கிறான்.



இங்கு தேமல் அழகினை

''வகையமை தண்தாரான்

கோடுயர் பொருப்பின்மேல்

தகையினர் இளவேங்கை

மலரன்ன சுணங்கினாய்'' என்ற வரிகளாகச் சுவைக்கத் தருகிறார் கபிலர்.

கிராமியக் காதலனின் வாயாலான தேமலழகினையும் இந்தச் சங்க இலக்கியத் தேமல் அழகினையும் ஒருங்க வைத்துச் சுவைகாணும் பொழுது உண்மையிலேயே நாம் சங்ககாலத் தமிழர் நிலைக்கு உயர்ந்து விட்ட உணர்வு பிறக்கிறது.

**சுவைத்துளிகள் - 9**

**''வங்காளம் போறேனெண்டு மனக்கவலை கொள்ளாதே''**

காதலரிடையே நிகழும் பிரிவென்பது கனல் போன்றது. அன்றும் இன்றும் அது ஆற்றொணாத் துயர்தருவது.

அந்தக் கிராமத்து இளங்குமரியை அவன் காதலித்து மணந்து கொண்டான். காதல் மணமென்றாலும் கைப்பொருள் கரையாதிருக்குமா? பொருளீட்ட அவன் போகப் புறப்பட்டான். அந்தப் பிரிவை நினைக்கவே அவள் துணுக்குற்றாள், துடித்தாள், எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்தாள்; எப்படியாவது அவளை ஆற்றவேண்டுமே; சமாதானம் சொல்கிறான்.

''வங்காளம் போறேனெண்டு

மனக்கவலை கொள்ளாதே-உன்ட

சிங்காரக் கொண்டைக்கொரு

சீப்புவாங்கி நான்வருவேன்''

சீப்பைக் கண்டதும் அவள் நினைப்பு வந்துவிடும்; உடனே புறப்பட்டு வந்துவிடுவானாம் இது கிராமியக்கவிச் சுவை.

இதே போன்றதொரு சுவையை ''பாலைபாடியபெருங்கடுங்கோ'' நமக்குத் தருகிறார்.

''அன்பே நான்விரைவில் மீண்டு விடுவன்'' என்கிறான் அவன். ''இல்லை, நீங்கள் என்னை மறந்து நெடுநாள் தங்கிவிடுவீர்கள், நான் பிரிவு தரியேன்'' என்று விசும்புகிறாள் அவள்.

''நான் போகும் காட்டு வழி கனல்போன்ற வெம்மையுடையது. அங்கே கன்றுகலக்கிச் சேறாக்கிய சிறுநீரையும் தன்காதலிக்கு முன்பே ஊட்டிய பின்னரே, களிறு உண்ணும் அதைக்காண உன் நினைவு வந்துவிடும்.

''அந்தவழி இலைகள் காய்ந்து உதிர்ந்த நிழலற்ற கொடுமையுடையது. அங்கே வெப்பம் தாங்காது வருந்தும். தன் பெடைக்கு தன் மெல்லிய சிறகைவிரித்து ஆண்புறவு நிழல் கொடுக்கும். அதைக் கண்ணுற்ற பின்னும் உன் நினைவு எனக்கு வராமலிருக்குமா?

''மலைமேல் வளர்ந்த மூங்கில்கள் பட்டுப்போமாறு வெய்யில் காயும் கொடுமையுடையது அந்தக் காட்டுவழி. அங்கே நிழல் இல்லாமல் துன்புறும் தன்பிணைக்கு தன் உடல் நிழலைக் கொடுத்துதவும் கலைமான் அப்போது, உன் நினைவு வராமலா போகும்? உடனே வந்துவிடுவேன் என்கிறான் அந்தத்தலைவன்.

''அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்

கடியவே கனங்குழாய் காடு, அக்காட்டுள்

துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்

பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு,....

இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீய்ந்த உலவையால்

துன்புறூஉம் தகையவே காடு, அக்காட்டுள்

அன்புகொள்ள மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறகால் ஆற்றும் புறவு..

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால் துன்னனரும் தகையவே காடு, அக்காட்டுள் இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத் தன்னிழலைத் தந்தளிக்கும் கலை..

இந்தச் சங்க இலக்கியப் பண்பை கிராமியக் காதலனின் கள்ளங்கபடமற்ற நாவினால் கேட்டுச் சுவைக்கும் போது பிறக்கும் இரசனையே ஒரு தனி அலாதி.

**சுவைத்துளிகள் - 10**

**''உன்னாசை கொண்டுமச்சி உலகமெலாம் தூரானேன்''**

பதினாறும் மறையாத பருவமங்கை அவள். அந்தக் கிராமிய இளைஞன் பலமுறை தனது காதலை அவளுக்குணர்த்தியும் அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இதையறிந்த உலகம் அவனை நையாண்டி செய்தது. ஆனாலோ அவளை அவனால் மறக்கவே முடியவில்லை, வழிமறித்துக்கேட்கிறான்.

''உன்னாசை கொண்டு மச்சி உலகமெல்லாம் தூரானேன்
என்னாசை உன்மனதில்
எள்ளவும் இல்லையேகா!''

இத்தனை அவன் பணிந்து இரந்தும் கூட அந்த இறுமாப்புக்காரிக்கு இரக்கம் பிறக்கவில்லை. அவனை முறைத்துப் பார்த்தாள், எடுத்தெறிந்து பேசி ஒதுக்கினாள், அவனும் ஆண் பிள்ளையல்லவா!

''பழிகள்தான் வந்தாலும்
பத்தெட்டிறுத்தாலும்
கழுவி லிருந்தாலும்-இப்ப
காண்பேன்டி உன்னாசை...''

இத்தகைய ஒரு காட்சியை, சோழன் நல்லுருத்திரன் காட்டுகிறார். இடையன் ஒருவன். அந்த இடைச்சிமேல் அளவற்ற காதல் அவனுக்கு. ஆனால் அவளோ அவனை ஒதுக்கினாள். அன்று அவள் கவணோடு (கல்லெறிகருவி யோடு) காடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது தடுத்து நிறுத்தினான் அவன்.

''விடேஎன், தொடீஇய
செல்வார்த்துமித்து எதிர்மண்டும்
கடுவாய நாகுபோல்
நோக்கித் தொழுவாயில்
நீங்கிச் சினவுவாய் மற்று........''

போக விடேன்; போகப்போகிறாயா? தடுப்பாரைத்தள்ளி மோதிவிட்டுப் போகும் எருமை நாகுபோல முடியுமானால், என்னைத் தள்ளிவிட்டுப்போ, பார்க்கிறேன் என்கிறான்.

''நீ நீங்கு கன்று சேர்ந்தார்கண்
கதவு ஈற்றாச் சென்றாங்கு
வன்கண்ணன் ஆய்வரல் ஓம்பு''

''விட்டு விலகு, என்தாய் கண்டால், தன் கன்றை அன்னியவர் மேல் சினம் கொண்டு பாயும் ஈன்ற பசுப்போல சினம் கொண்டு உன்மேற் பாய்வாள்'' என்கிறாள்.

அவனா விடுபவன்?

''யாய்வருக ஒன்றோ பிறர்வருக, மற்றுநின்

கோவரினும் இங்கே வருக, தளரேன் யான்''

''உன் தாயென்ன உன் சுற்றத்தார் முழுப்பேரும் வரட்டும் ஏன், உன் அப்பனே வரட்டும் பார்க்கிறேன்'' என்று வல்லுக்கு நிற்கிறான் அவன்

அதன் பிறகென்ன?

அவள் வழிக்கு வருகிறாள்.

இவ்விரண்டையும் ஒப்பிட்டு இரசிக்கும் போது ஏற்படும் இரசனையே ஒரு தனிதான்.

மீன்பாடும் தேன்நாட்டின் வாய்மொழி இலக்கியத்தை-தித்திக்கும் கிராமியக் கவியமுதை, சங்ககாலச் சான்றோரின் கவிவளத்தோடு ஒப்பிட்டுச் சுவைகாண, இலக்கிய ஆர்வலர்கள் ஊக்கம் கொள்ள, இக்காட்டுக்கள் ஆற்றுப்படுத்துமென எதிர்பார்ப்போம்.

*வரவுக்கும் அப்பாலே*
*விலைவாசி தலைமீறி*
*வறுமைக்குள் மாய்ப்பதேன்*
*ஞானப் பெண்ணே!*
*மரணத்தை விளைக்கின்ற*
*மெஷின் வாங்கும் புலனாலே*
*மிடி வந்து சேருதே*
*ஞானப் பெண்ணே!*

*இனவாதம் குலவாதம்*
*இனி யிந்த பூமியில்*
*எயிட்ஸ் என்ற நோயாகும்*
*ஞானப் பெண்ணே!*
*மனவாசம் மனுவாசம்*
*மண மொன்றுந் தேறாதார்*
*மரணித்தல் உயர்வாகும்*
*ஞானப் பெண்ணே!*

சி. சத்தியகுமாரன்,
கொழும்பு - 5.

*கொக்கு மீனைக் கொத்தும் போதில்*
*குதுகலிக்கு மேல்*
*சிக்கும் மீனின் வாழ்க்கை தன்னைச்*
*சீரழிப்ப தார்?*
*பாம்பின் பார்வை தேரை வாழ்வைப்*
*பாதுகாக்குமோ?*
*தேம்பும்பிள்ளை தாய் இறப்பின்*
*தீர்வு காண்ப தார்?*

இ. தமிழரசி,
திருமலை.

வடகிழக்கு மாகாண இலக்கிய விழா
கவிதைப் போட்டியில்
முதலாம் இடம்
பெற்ற கவிதை



வே. கிருஷ்ணபிள்ளை

# குருதிக் கடல்கள்!

உலகப் பெருங்காடு,
ஒன்றல்ல, பலமரங்கள்
குலவிச் சுதந்திரமாய்க்
கூடுகட்டும் பட்சியினம்.
கலகமே யின்றி
கலகலத்து நிம்மதியாய்
நலம் பலவினோடும்
நட்புற்று வாழ்ந்த நிலை...

மேற்கே யிருந்து
வெறிகொண்ட வானரங்கள்
கூற்றெனவே வந்து
குதித்து மரத்தையெலாம்
ஆக்கிரமித்து
அடிப்படுத்திக் கொண்டதனால்
போக்கிடமே யின்றி
ஆக்கினைக்கு ளாயிடுதல்!

சின்னஞ் சிறியமரம்;
தினையானும் தூக்கணமும்
என்ன நிகழ்ந்தும்
இனத்தால் அடிமைகளாய்
மன்னும் குரங்குகளின்
வால்பிடித்துக் கால்பிடித்து
இன்னலிலும் ஒன்றுபட்டு
இருக்கின்ற போதினிலே...,

அயலில், பெருமரத்தை
ஆண்டிருந்த வானரங்கள்.
மயில்களின் தாக்குதலால்
வலிபொறுக்க மாட்டாமல்,
செயலிழந்து ஓடச்
சிறுமரத்துப் புன்குரங்கும்
சுயவிருப்பால் ஓடச்
சுதந்திரம்வந் தெய்தியதாம்!

வேறு

வீரசுந்திரம் பெற்ற மகிழ்ச்சியாம்
வெற்றி விழாப் பலவாம்-மிகத்
தீர்க்க னாயினும் சிற்றினம் தூக்கணம்
தினையான்கள் பேரினமாம்-அந்தக்
காரணத்தாலவை 'செங்கோல்' பிடித்தன
காலம் உருண்டதுவாம், - தமைச்
சேரும் உரிமைகள் கேட்டதால் தூக்கணம்
செத்து மடிந்தன வாம்.

வடக்கு-கிழக்குக் கிளைகளில் கூட்டொடு
வாழ்ந்திட்ட தூக்கணங்கள் - தினம்
அடக்கமும் செய்யா தழுகும் பிணங்களாய்
ஆற்றில் மிதந்தன வாம்; - ஆட்சித்
தொடக்கம் முதற்கொண்டடக்கியழித்திடு
சூட்சிகள் ஆயிரமாம்; - வீழ்ந்து
கிடக்கும் எறும்பும் மிதிப்பவர் காலைக்
கடிக்கா திறந்திடுமோ?

வேறு

கடித்த எறும்புகள்
துடித்து இறந்தன
இடிகள் விழுந்தன

எறும்புகள் மடிந்தன
எறும்புப் பிணங்களின்
நறும்புகை கமழ
'ரயர்'கள் எரிந்தன
'டமாரம்' முழங்கின

''இழிந்த எறும்புகள்
எம்மைக் கடிப்பதா?
அழித்தே முடிப்போம்
- ஆணவத் தடிப்புகள்!
இரும்புக் கழுகுகள்
எழுந்தன வானில்
குருவிக்கூட்டினைக்
குறிவைத் திறங்கின
உருக்கு ஆமைகள்
உயரப் பறந்தன
நெருப்பு முட்டைகள்
தருக்கொடே யிட்டன
'ஆமைக் குஞ்சுகள்
ஆயிரம் ஆயிரம்!
குருவிக்கூடுகள்
கொழுந்துவிட்டெரிந்தன!
ஆண்கள் பறந்திட
அழுதபெண் குருவிகள்
கற்பழித் தெரியிற்
கடாவிடப் பட்டன
கூட்டொடே குஞ்சுகள்
குருவியின் முட்டைகள்
வேட்டையின் இலக்காம்
வெறிக்கிரை யாயின
''தினையான் குருவிகள்
செகத்தில் வேறில்லை
இந்த மரம் முழு
தெமக்கே யுரியது
பிரிவினைக் குருவிகள்
பயங்கரத் துரோகிகள்
அழித்தே முடிப்போம்''!
ஆணவக் குரைப்புகள்!

உலகக் காடெலாம்
ஓடெடுத் தோடுதல்;
அறியா மரங்களின்
தெளியா மயக்கம்
உதவி ஒத்தாசைகள்
உண்மைகள் மரணம்!
உரிமை கோரிடும்
குருதிக் கடல்களை
வற்றிடச் செய்ய
வடக்கிலும் கிழக்கிலும்
கொடுநெருப் பெழுந்து
கொழுந்துவிட்டெரியுது!

வடகிழக்கு மாகாண இலக்கிய விழா
கவிதைப் போட்டியில்
இரண்டாம் இடம்
பெற்ற கவிதை



# இழந்துவிட்ட இன்பங்கள்

ஏ. எம். முகைதீன்

ஆதவனும் கீழ்வானம் கிழித்து மெல்ல
அம்புயத்தின் இதழ்தடவி மலரச் செய்யும்
மாதர்களும் மட்குடத்தைச் சுமந்து செல்ல
மயில்கூட்டம் மருங்கிப் புதர் நாடியோடும்
நாதஸ்வர ஓசைகாதில் தேனாய்ப் பாயும்
நதியினிலே சலசலத்து கயல்கள் துள்ளும்
காதலரும் களிப்படையும் காலை இன்பம்
காததூரம் போனதின்று யாவும் துன்பம்.

சோலையிலே தவழ்ந்துவரும் தென்றல் பட்டு
சோர்வெல்லாம் பறந்தோடும் தேகம் விட்டு
மாலையிளம் வெயிலினிலே மருதம் சென்று
மாங்கனிகள் பறித்துமனை வருவோம் அன்று
நாளைக்கோர் இடம்தேடிப் பொழுதைப் போக்கி
நாடிடுவோம் நள்ளிரவில் வீட்டை நோக்கி
சாலைக்கோர் தடைபோடும் காலம் இன்றோ
சாமமாகும் பொழுதுறங்கின் ஊரும் அன்றோ.

சித்தாற்றி லிருக்கின்ற சிறாஜுத் தீனும்
சிரிபால மாமாவும் சேர்ந்து ஒன்றாய்
புத்தாண்டாம் சித்திரையில் புதிதாய்ச் செய்த
பொங்கலினைப் புசிப்பதற்கு வருவார் எங்கள்
புத்திரர்க்கும் புத்தாடை பரிசாய்த் தந்து
புன்னகையில் விடைபெறுவார் யாவும் இன்று
சித்திரமாய் நெஞ்சினிலே நிலைத்த காட்சி
சத்தியமாய் நம்பிடுவீர் நானோர் சாட்சி.

இன்பத்தமிழ் மொழிகேட்கும் இல்லம் முன்னால்
இசைவான சிங்களமும் ஒலிக்கும் அந்நாள்
அன்பென்னும் உறவாலே இணைந்து ஒன்றாய்
அன்றாட நிகழ்வுகளில் பிணைந்து நன்றாய்
பண்புநிறை வாழ்வுடனே பாரில் நாங்கள்
பலகாலம் வாழ்ந்தகதை பொய்யோ என்று
கண்ணெதிரே நடக்கின்ற காட்சி கண்டு
கேட்கின்றார் இளையோர்கள் எம்மை இன்று.

பொன்னகராம் நான்வாழும் பதியும் இன்று
பொலிவிழந்து போனதுமே போரால் வெந்து
கண்போன்று காத்திட்ட கல்விக் கூடம்
கலையிழந்து காட்சிதரும் கோலம் கண்டு
கண்ணீரை விட்டும் நான் கவலை கொண்டு
கடந்திட்ட காலத்தைக் கனவாய்ப் பார்த்தே
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி நெஞ்சில்
ஏக்கத்தில் வாழ்கின்றேன் இன்னும் மண்ணில்.

அழகூட்டும் நகைநட்டும் அணிந்து எங்கள்
அரிவையர்கள் ஆனந்தம் பொங்க நாளும்
பழஞ்சோறும் பாற்சொதியும் சேர்த்துக் கட்டி
பனிப்புகையில் அதிகாலை வயலை நோக்கி
வழமைபோல் வருகின்ற காட்சி இன்று
வந்துநினை வூட்டியதே; மீண்டும் இதுபோல்
இழந்திட்ட இன்பங்கள் கிடைத்தால் போதும்
இனியெனக்கு இவ்வுலகில் எதுவும் வேண்டாம்.

# ஈழத்தமிழரின் இன்றைய நிலை!



செ. குணரத்தினம்

வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா கவிதைப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற கவிதை

1. கச்சான் முறிச்செறிஞ்ச-அந்த
கதலிவாழைக் குட்டியைப்போல்
மச்சானை எண்ணியெண்ணி-நான்
மண்டபத்துள் கிடந்தழுதேன்!

2. எந்த முகாமுக்குள்ள-கிடந்து
என்ரராசா துடிக்கிறாரோ!
கந்தா நீ அவருசிர-இன்றே
காக்கவேணும் ஆண்டவனே!

3. கண்களுக்கு முன்னால-போட்டு
காலால் உதச்சவண்ட
பொண்புரசி புள்ளையெல்லாம்
பொசுங்கவேணும் தம்பிரானே!

4. கண்ணகைத் தாயே என்ர-செல்ல
கணவனுக்கு ஏதுமென்றால்......
உன்னுடைய தீக்குழியில் - வந்து
உழுந்து நான் சாம்பலாவேன்!

5. பப்பாசிக் காய் சிதறி - எங்கும்
பறந்ததுபோல் புள்ளகுட்டி
சப்பாத்துக் காரர்களின் - தொல்லை
தாங்காமல் துலங்சி போச்சு

6. குருநாகல் ஓலைவாங்கி-நான்
குருத்தோலை வாட்டி மேஞ்ச
குடிலுக்கேன் நெருப்புவெச்சார்?-மனம்
குமுறுதுகா என்ன செய்வேன்?

7. ஆசையோடு வாங்கிவந்து-ருசியாய்
ஆக்கிவெச்ச மீன்குழம்பை
வாய்க்குள்ள வைக்குமுன்னே-இசமன்
வந்து நிண்டான் சத்துராதி!

8. பிரளயம் ஒண்டெழுந்து - இந்த
பூவுலகை அழிச்சிடாதோ!
இரவுபகல் என்ரநெஞ்சம்-மச்சாள்
ஏங்கியேங்கிச் சாகுதுகா!

9. தேவாங்கு போல கண்ணீர்-நாம
தினம் வடிய வாழலாமா?
பாதகர்கள் குரல்வளைய - இஞ்ச
பதம் பார்க்க யாருமில்லை!

10. என்புருசன் செத்தபின்னால் - அடியே
எனக்கெதற்கு இந்த வாழ்வு?
இன்னொருத்தன் கைபுடிச்சி - நான்
இந்த மண்ணில் வாழ மாட்டன்!

11. மதுரையினை எரிச்சவளாம் - அந்த
மாதரசி கண்ணகியாள்!
புருசனுக்கு ஏதுமென்றால் -நான்
புறப்படுவேன் அவளுருவில்!

12. 'பூசா' முகாமுக்குள்ள-இசமன்
போட்டடச்ச என்ரபுள்ள!
பாஷை விளங்கிடாம-என்ன
பாடுபட்டுத் துடிக்கிறானோ?

13. அப்பன் கறுப்பனென்றால்-மச்சாள்
அவன்ர புள்ள சிவப்பானா?
சப்பாத்துக் காரருக்கு - ஒரு
சங்கதியும் விளங்குதில்ல!

14. ஒளிச்சொளிச்சி என்ரபுள்ள-இப்ப
உருமாறிப் போனான் கா!
வெளிநாடு அனுப்புறெண்டால்-நமக்கு
'வேங்கில'யா காசிருக்கு?

15. ஆத்தாக் கொடுமையினால் - அவன
ஆத்திலயும் கொண்டிறக்கி
தேச்சிக் குளிக்கவாத்தன் - கறுத்த
தோல் வெள்ளையாகுமெண்டு!

16. இயமனுக்குப் பயந்து சிர-நாம
எங்ககொண்டு ஒளிக்கேலும்?
நியமம் முடிஞ்சிதெண்டால் - நிலவில்
நிண்டாலும் அவன் வருவான்!

17. சிங்கப்பூர், லண்டனெண்டு-நாம
சிறகடிச்சிப் பறந்தாலும்
எங்கப்பன், அம்மையுடன் - ஊட்டில்
இருப்பதுபோல் வருமாகா?

18. சாதி இழிவெண்டு சொல்லி-நேத்து
சத்தி எடுத்த சனம்
கேசியொண்டும் சொல்லாம - இப்ப
செத்தழிஞ்சி போறதற்பார்!

19. சாதி குறஞ்சவர்க்கும் - உயர்
சாதியெண்டு சொன்னவர்க்கும்
ஆமிவந்து கையவெச்சான் - மச்சான்
அவன் சாதி பார்த்தவனா?

20. புயலடிச்சி அகதியானோம் - அன்று
போட்டார்கள் பாண்துண்டு!
படையடிச்சி அகதியானோம் - இன்று
போடுறாங்க ஷெல் குண்டு!

21. ஊடழிஞ்சி, உயிரழிஞ்சி - நாம
ஓடிப்போய்க் காடுகளில்
மாடுகள்போல் கிடந்தோமே - கீழ்
மேல்சாதி பார்த்தோமா?

22 தெய்வமே அகதிக்கெல்லாம் - தக்க
துணை யெண்டு சொல்லுவாங்க
தெய்வமெல்லாம் செயித்தானாய் - இப்ப
திசை மாறிப் போச்சிதுகா!

23. நாட்டுக் குழப்பமெல்லாம் - இப்ப
நசல் வருத்தம் போலாச்சு
வாட்டில் வெச்சும் சுகம்வரல்ல - ரிக்கட்
வெட்டுதற்கும் முடியல்லகா

24. மூக்கு முட்ட மூணுநேரம் - திண்டு
மூச்சிழுத்துப் படுத்த நாம
பாக்கு வெட்ட நேரமத்து - இப்ப
பறக்கிறமே அகதிகளாய்

25. தெரிஞ்சிபார்த்து அரிசிவாங்கி - கறிக்கு
தேடிப்போய் மீனும் வாங்கி
உருசி பார்த்துத் திண்டசனம் - இப்ப
உருளுதுகாதெருத் தெருவாய்

26. திண்டவாய் கேக்கிதில்லை இப்ப
தேடுதுகா சாப்பாட்ட
நண்டெழுத்தார் தாறதத்தான் - நாம
நம்பிவாழும் காலமாச்சு

27. போட்டசட்ட வேட்டிகள - கழுவி
போடுதற்குச் சோப்பு வாங்க
ஊட்ட விற்கவேணும்கா - அதுக்கும்
ஊடெல்லாம் அழிஞ்சிபோச்சே

28. நீட்டி நிமிர்ந்து நல்லாய் - முன்பு
நிம்மதியாய்ப்படுத்தவர்க்கு
நாத்தமடிக்கு மந்த - அகதி
நரகல் முகாம் பள்ளியறை!

29. மின்விளக்கைக் கண்டு சனம் - இப்ப
மிக நீண்ட காலமாச்சு!
மின்மினியைப் புடிச்சிவெட்டி- அவர்
முகம் பார்த்துப் பேசலாச்சு!

30. முற்றத்தில் பாய்விரிச்சி - நாம
முழுநிலவில் சோறுதிண்டு
பெற்றவரும் பிள்ளைகளும் - இனிக்க
பேசயிது காலமில்ல!

31. சொந்த ஊடு வளவுவாசல் - நமக்கு
சொர்க்கம்தான் என்றாலும்
எந்தநேரம் குண்டுவிழும் - என்று
ஏங்கிவாழும் நரகமும் தான்

32. நம்மகாலம் முடிஞ்சிபோச்சி - இனி
நம்மநம்ம புள்ளகுஞ்சி
இந்த மண்ணில் காலூன்றி - மச்சான்
எப்படித்தான் நடந்திடுமோ?

34. சேர சோழ பாண்டியர்போல - நம்ம
சிரிலங்கைத் தமிழர்களும்
ஆளையான் கொன்று திண்டால் - நாட்ட
அரசாளப் போறவர் யார்?

35. ஒன்றுபட்டுத் தமிழனெல்லாம் - திரண்டு
ஓர்மமுடன் நிண்டால்தான்
ரெண்டுபட்டுப் போகாம - நாட்டில்
ரெண்டிலொண்டப் பார்த்திடலாம்!

36. உண்ணாமத் தின்னாம - நாம
ஒழுப்பிவெச்ச ஊடுவாசல்
மண்ணோடு மண்ணாச்சே - பார்க்க
மனவருத்தம் வா போவம்!

37. பெத்தபுள்ள ஏழுமச்சாள்-அதில
பெடிகள் நாலும் துலஞ்சிபோனார்!
உத்தரிச்சி நாங்க வாழ - கடவுள்
உசிரோட உட்டிருக்கான்!


38. பொழுதுபட்டும் அந்தநாளில்-நமக்கு
போகவரப் பயமேயில்ல!
பகல் பொழுதும் இப்ப பயம் - வேலி
போட்டதுபோல் ஆமி மயம்!

39. மட்டக்களப்பில் ‘டும்’ - புறகு
மன்னார் ரவுணில் ‘டும்’
கொட்டடியிலேயும் டும்! - எங்கும்
கோதாரி ‘டும்’ தான்கா

40. மாரிமழ பெய்து,விடும்! - கண்ணீர்
மழ ஓய மாட்டுது கா
ஆரிடத்தில் சொல்லியழ - மச்சாள்
ஆண்டவனும் எதிரிபக்கம்!

41. பேச்சு வார்த்தை யெண்டு சொன்னார்
- இப்ப
பேசிதற்கும் மனிசரில்ல
ஆச்சிகத சொல்லுறாப்போல் - நெடுக
அதென்னடாப்பா பேச்சுவார்த்த?

42. நாடழிஞ்சி நகரழிஞ்சி - தமிழர்
நாங்களெல்லாம் அழிஞ்சாலும்
காடழிச்சி எம் தமிழன் - விரைவில்
குருத்தெடுப்பான் ஓர்நாளில்!



# அமைதி வழி தேடி........!

கவிஞர் செ. சிவானந்ததேவன்

1. அன்பும் அறனும் அழிந்து விட்டதா?
அறிவும் பரிவும் அகிம்சையும் உலகில்
என்பும் தோலுமாய் இறந்து மடிந்ததா?
எங்கள் நெஞ்சில் இரக்கம் சுரப்பதை
துன்பும் துயரும் சூழ்ந்து மரித்ததா?
தொலைந்து போனவை யாவும் துளிர்த்து
தென்பும் தெளிவும் பெற்றிட, அமைதி
சேர்க்கும் வழிதனைத் தேடி அலைகிறேன்

2. பாசமும் பணிவும் பாரினை நீத்து
பறந்து போனதா? பண்டைய வாழ்வின்
நேசமும் காதலும் நெருக்கமும் தகர்ந்து
நீறாய் ஆனதா? நீசர்கள் தம்மால்
நாசமும் அழிவும் நேர்ந்திட நானிலம்
நலிந்து போவதா? ஆதலால் எங்கள்
தேசமும் நாமும் செழிப்புற அமைதி
சேர்க்கும் வழிதனைத் தேடி அலைகிறேன்.

நீதியும் நேர்மையும் நிலத்துள் அமிழ்ந்திட
நிலையிலா உலகில் அநீதி தழைத்ததா?
சாதியும் சமயமும் தருமம் என்பதைத்
தகனம் செய்திடச் சபதம் பூண்டதா?
ஆதியும் அந்தமும் இல்லாப் பரம்பொருள்
ஆக்கிய உயிர்கள் அழிவதா? அறிவெனும்
சோதியும் அணைவதா? ஆதலால் அமைதி
சேர்க்கும் வழிதனைத் தேடி அலைகிறேன்.

புத்தர் கூறிய தத்துவம் எங்களின்
புனித நாட்டினில் புதைந்து போனதா?
சித்தர் செப்பிய சிந்தனைக் களஞ்சியம்
சிதைந்து தகர்ந்ததா? சின்னத் தனங்களால்
எத்தனை உயிர்கள் இன்னுயிர் நீத்தன?
இவற்றின் பெறுமதி இயம்பிட ஒல்லுமோ?
அத்தகை நிகழ்வுகள் அனைத்தும் ஒழிந்திட
அமைதி வழிதனைத் தேடி அலைகிறேன்.

ஏசுவின் போதனை எரிந்து தணிந்ததா?
எல்லா உயிர்களும் ஒன்றெனக் கருதும்
மாசறு சங்கரர் வழங்கிய உண்மைகள்
மனித மனங்களில் மறந்து தொலைந்ததா?
காசினி நலனுற களிப்புடன் வள்ளுவர்
காட்டிய நெறியினில் களிப்புற்று தேசம்
தேசுறா வளங்கள் செழித்திட அமைதி
தேங்கும் வழிதனைத் தேடி அலைகிறேன்.

கரைக ஆயுதம் கக்கிடும் ஓசையில்
காதலும் கருணையும் கருகித் தீய்ந்ததா?
இனசன மோதலில் இதயம் யாவுமே
இரும்பாய்ப் போனதா? சோதரர் நாங்கள்
சினமுற ஒருவரை ஒருவர் தாக்குதல்
சிந்தனை மிக்கதோர் செயலா? ஆதலால்
மனமதில் மகிழ்ச்சி முகிழ்ந்திட, அமைதி
மலரும் வழிதனைத் தேடி அலைகிறேன்.

# மாற்றம் அடைவீர் மனம்

சி. கனகசூரியம்

காலை எழுந்து கதவைத் திறக்கின்றேன்
சாலை வெறுமை சனமே கிடையாது
எங்கோ பெரிய இடிபோல் வெடிச்சத்தம்
இங்கே எனது இதயம் வலிக்கிறது...
என்று முடியும் எமது துயரங்கள்
குன்றா வளத்திற் குளித்த திருநாடே
இன்று நடப்பதெலாம்...என்ன கொடுமையிது.
சென்றதெலாம் மாறித் திரும்பாதோ சாந்திநிலை.

நாய்கூட வீதி நடக்கப் பயந்திடுதே
பேயும் நடுங்கிப் பிறதேசம் போயினவோ
தூக்கமெல்லாம் எங்கோ தொலைந்து
மறைந்தனவே
ஏக்கமொன்றே இப்போ எமது நியதியாச்சே
வெளியிலே சென்றமகன் மீளும் வரைக்கும்
வழிபார்த்துக் கண்ணீர் வடித்தே இருக்கும் தாய்
வேலைக்குச் சென்ற துணைவன் வரவுதனை
மாலைவரைப் பார்த்தே வாடும் மனையாட்டி.

குண்டு வெடிப்பால் குழந்தை உடல் கூடத்
துண்டுதுண்டான துயரப் பெருங்கதைகள்
துப்பாக்கிச் சூடும் தொடர்ந்த அழுகுரலும்
அப்பப்பா இந்த அவலங்கள் ஓயாதோ
காலை விரியும் மலரும் துயர்கண்டு
கோலம் அழிந்து குனிந்தே அழுகிறதே
சத்தமிடும் புள்ளும் சரியாகத் தூங்குவதை
விட்டுவிட்ட தாலோ மெலிந்தே குரல் எழும்பும்.

செங்கதிரே உன்றனது தெய்வச் சுடரொளியால்
இங்கேயெம் உள்ளத் திருக்கும் துயர்போக்கு
காற்றேநீ எங்கள் கனத்த கவலைகளை
மாற்ற உடனே வழியேதும் சொல்லிவிடு.
வானமே நாங்களிங்கே வாழ்வதா வேண்டாமா
ஏனெம்மைப் பார்த்து இரங்கா திருக்கின்றாய்
மண்ணே எம் நாட்டு வளத்தை பெருக்கின்ற
உன்னாலும் கூட உதவ முடியாதா

ஆதிகுரு சங்கரரும் அத்வைத மார்க்கத்தின்
சோதி ரமணர் துயர்தீர்க்கும் நிர்வாணம்
போதித்த புத்தர் புனிதர்கள் யேசு நபி
சாதித்த தெல்லாம் சரிந்தே ஒழிந்தனவா
நல்லவரே எங்கள் நல் நாட்டில் உறைபவரே
எல்லோரும் சேர்ந்து எமது உயிர்க்குலத்தை
காத்திடுதல் உங்கள் கடனன்றோ ஆதலினால்
மாற்றம் அடைவீர் மனம் .



# அந்த நாட்கள் வாராதோ...?

கேணிப்பித்தன்

சின்ன இளம் வயதுச்
சில நினைவு துளிர்க்கிறது
எண்ண விம்மி நெஞ்சு
இரைகிறது பெரு மூச்சாய்.

வாய்க்கால் வரப்புகளில்
வளைந்தோடும் அருவிகளில்
பாய்ச்சல் குதித்தோடிப்
பறந்தோம் சிட்டு களாய்.

சுண்டு வில் கைகளிலே
சிறு கற்கள் பைகளிலே
கொண்டு குறி பார்த்துக்
குருவி புறா அடித்தோம்.

மாமரப் பொந்து களில்
மதி உயர்ந்த கொப்புகளில்
தாமரைக் குளத்தடி மண்
தடவி அளைந்து வந்தோம்.

உப்புக் காற்று அளைந்து
உருண்டு வரும் கடலலையுள்
குப்புறப் பாய்ந்து அதைக்
கிழித்து நீச்சலிட்டோம்.

ஊர்ப் பள்ளி மணியடிக்க
உப்பாற்றுக் கரை நோக்கி
ஊர்ந்து வரும் கயல்பிடிக்க
ஓடி ஒளிந்து வந்தோம்.

கிட்டி புள் நொண்டியடி
கிளித்தட்டு மணல் மேட்டில்
தட்டி வீழ்ந்து உருண்டு
கண்ட சுகம் ஏராளம்.

வட்ட நிலா வான்முகட்டில்
வந்து குந்தும்; முற்றமதில்
வட்ட மாய்ப்பாய் விரித்து
மகிழ்ந்து உணவு கொண்டோம்.

நடுச் சாம வேளையிலும்
நல்ல நிலா ஒளியில்
படுக்காது கூத்து ஆடிப்
பாடி உலா பழகிவந்தோம்.

சாமம் வரை இராமர்கதை
சமய புராணக் கதைகள்
ஆமைக் குஞ்சு ராசன்கதை
ஆச்சி சொல்ல மெய்மறந்தோம்.

கோயில் திரு விழாக்கள்
காவடிகள் தேர்பவனி
பாயில் படுத் திருந்து
பார்த்தோம் நாட்டுக் கூத்து.

கொள்ளை இன்ப மெல்லாம்
கொட்டி வைத்த அந்தநாட்கள்
கொள்கை கொண்டு போயினவோ
கூடி மீண்டும் வாராதோ.

# நினைத்துப் பாரீர்!

கீழ்கரவை.கி. குலசேகரன்

*"எங்களுக்கும் கலை கலாசாரம் உண்டு*
*எப்படியும் நாம் அவற்றைப் பேணிக் காக்கும்*
*மங்கையராய் இவ்வுலகில் வாழல் வேண்டும்!*
*மானத்தைப் பெரிதெனவே மதித்தல் வேண்டும்!*
*அங்கங்கள் தெரியவுடை அணிதல் வேண்டாம்,*
*ஆபாசமாய் நீவிர் அலைதல் வேண்டாம்*
*தங்கையரே கேண்மின்!" என்று உரைத்தால் ஏனோ*
*தவறாகப் புரிந்தெம்மை ஏசுகின்றீர்?*

*நாற்குணமும் கொண்டவளே எமது நங்கை!*
*நாடறியும் எங்கள் குலப் பண்பை என்று*
*சாற்றி வைத்துச் சென்றனரே எமது முன்னோர்!*
*சற்றேனும் அவர் வார்த்தைக் கமைந்து மற்றோர்*
*போற்றிடவும் புகழ்ந்திடவும் வாழல் வேண்டும்*
*பூவையரே என்றுரைத்தால் நீவிர் ஏனோ*
*சீற்றமது கொள்கின்றீர்! சிந்தை நோகச்*
*சினந்தெம்மை ஏசுகின்றீர் ஏது செய்வோம்?*




*பாதி உடை உடுப்பதனாற் றானா உங்கள்*
*பருவத்தின் அழகதனைக் காட்டல் வேண்டும்?*
*மேதினியில் பிறர் நகைக்கும் வண்ணம் ஏனோ*
*விநோத உடை அணிந்து வலம் வருதல் வேண்டும்?*
*கோதி முடிக்காதுமது கூந்தல் தம்மைக்*
*குலையவிட்டு நிலை கெட்டேன்திரிதல் வேண்டும்?*
*நீதி நெறி என்பதெலாம் பொய்யோ? பெண்மை*
*நிலையதனைச் சிறிதேனும் நினைத்துப் பாரீர்!*

# எல்லாம் உயர்வாகும்

- குறிஞ்சிவாணன் -

மனிதனே; இவ் வாழ்வுநிலை யென்றே நீயும்
மனதினிலே எண்ணியெண்ணி பார்த்தா யாமோ?
மனைவி, மக்கள் உறவெல்லாம் இவ்வுலகில்
மாயைதான் என நீயும் அறிந்தா யாமோ?
எனதுனது என்பதெலாம் இந்த மண்ணில்
இருக்கும் வரை தான் மனிதா அறிவாய் நீயே!
அனைத்துமிங்கு பெற்றினிதாய் வாழ்ந்திட்டாலும்
ஆறடிமண் நிலமேதான் இறுதிச் சொந்தம்!



யாருமிந்த உலகினிலே நிலைத்த தில்லை!
எதனையுமே எடுத்துக்கொண்டு சென்ற தில்லை!
ஊர்புகழ இம்மண்ணில் வாழ்ந்திட்டாலும்
ஓர் நாளில் நாம்மடிவ துண்மை யன்றோ?
பேர்கூட மாறிவிடும், இறந்த பின்னர்
பிணமெனவே உரைத்திடுவர் மக்களெல்லாம்!
நாறுமுடல் சதமென்றே மனதில் எண்ணி
நாளும் மண்ணில் வாழாதே; இறப்ப துண்மை!

சொத்துசுகம் தேவையென்றே நாளும், நாளும்
ஓடியாடி உழைத்திங்கே வாழ்ந்திட்டாலும்
எத்தனை நா ளனுபவிப்பாய் அதனை வைத்தே
எனதற்குள் இப்பாடு படுகின் றாய் நீ?
சொத்துசுகம் நிரந்தரமோ? இல்லை! இல்லை!!
துணையாக நம்மோடும் வருவ தில்லை!
பித்துபிடித் தே நீயும் அலைகின் றாயே
பேதைமிகு மானிடனே அறிவாய் இன்றே!

மொழி, மதங்கள் இனம்வேறாய் இருந்த போதும்
உணர்வாலே நாம்மனிதர் என்னும் கொள்கை
அழிவில்லாப் பாதையிலே இட்டுச் செல்லும்
ஆணவமும், அகங்காரம், பகைமை மறந்து
பழி, பாவம் நெஞ்சத்துள் தழைத்தி டாத
பண்பான வழிசமைத்து நமது நாட்டை
எழிலான, வளமான நாடாய் மாற்ற
இன்றே நாம் செயற்படுவோம் விரைந்தோடி வா!

பொன்னென்றும் பொருளென்றும் சேர்த்தே வைத்துப்
பிறருக்கு ஈயாமல் தானே மட்டும்
இன்பமொடு வாழ்கின்ற சுயந லமாம்
எண்ண மதை மனத்தினின்றும் களைந்தெ றிவோம்!
மண்ணுலகில் நாம் வாழ்தல் சொற்ப காலம்!
மனதினிலே தீயன எண் ணாதி ருப்போம்!
எண்ணுகின்ற எண்ணமெலா முயர்வே யாகில்
எல்லாமே நம்வாழ்வில் உயர்வே யாகும்!

# வேறிடம் நோக்கி.....

மீண்டும் எனது
சொந்த ஊர்
நேற்றைய மாலை
கால்பதித்தேன்.
பயணக்களைப்பின்
இரவுத் தூக்கம்!
விடிகாலை
"மக்கள் அனைவரும்
திறந்த வெளிமைதானத்தில் கூடுக"
ஒலி பெருக்கி அறிவிப்பு
காற்றில் மிதந்து வரும்.
மீண்டும் ஞாபகங்கள்.
ராணுவம் -
முகமூடி -
கொடிகள் -
வாகனங்கள் -
பிரேதக்களை புதைந்த
முகங்களை சுமந்து மக்கள் கூட்டம்
வீதியில் செல்லும்
அறியாத எதிரிக்காய்
தெரியாத முகத்தின் முன்நின்று
அடையாளம் இடப்படும்,
இங்கு அடையாள அட்டைகள்
தங்கள் பெறுமதி இழக்கும்
தலையாட்டி பொம்மையின்
ஆட்காட்டி விரலே
பெறுமதி சுமக்கும்.
அதிர்வுகள் கூடி
எங்கோ கேட்கும்
வெடிச் சத்தம்
குறைந்த பட்சம் இருந்த
நம்பிக்கைகளையும்
குழிதோண்டிப் புதைக்கும்.

பயணங்கள்
பலருக்கு -
இறுதியானவை
தலையாட்டி
அருள் பெற்று
முதலில் வெளியே
செல்லத் துடிக்கும்
கூட்டத்தொடர்.
தாகம் -
என்னுள்
தாகம் -
நாளைநான்
போக வேண்டும்
இந்த இடத்தை விட்டு
வேறிடம் நோக்கி



வி. மைக்கல் கொலின் திருகோணமலை

# இன்றேனும் நிகழ்ந்திட.......



முன்னூறு மைல் கடந்தென்
மண் மீது தடம் பதித் தோர்
பண் பாடி மகிழ்ந் திடவும் ஆசை ! - அது
இன் றேனும் நிகழ்ந் திடவும் ஆசை!


செம் பாட்டுத் தரை பிளந் தோர்
நெம் போட்டிப் பயிர் விளைத் தூர்
அம் மாணைப் பணிந் திடவும் ஆசை ! - பாடி
எம் பாவம் களைந் திடவும் ஆசை!

காற் றாடக் கால் மிதித் தூர்
பார்த் தோடி சைக்கிளில் நான்
வேர்த் தாழிக் கரையிறங்க ஆசை ! - நண்பர்
சேர்த் தாடிக் குளித்திடவும் ஆசை!

கொல் கின்ற அணி மாந்தர் யாரும்
இல் லாத தேசத்தில் நானும்
சில் வண்டாய்ப் பிறந்திடவும் ஆசை! - பூவில்
செல்வங்கள் பருகிடவும் ஆசை !!

-மாவை - வரோதயன்.

# வனப்புமிகு வடகிழக்கு!



எட்டுமா வட்டமதை எழிலுடனே தாங்குகிற
கொட்டுமழ கொளிர்நிலமாம் கோபுரத்து வடகிழக்கு!
முத்தமிழின் ஓசையொடு மூவினமும் முறுவலிக்கும்
வித்தகர்கள் வாழுகிற விந்தைமிகு பூமியது...!

மட்டுமா வட்டமுடன் மகிமைநிறை திருமலையும்
தட்டுப்பா டின்றிநல்ல தமிழ்மணக்கும் யாழ் மண்ணும்
மலர் மணமே வீசுகின்ற மகிமைநிறை ''முல்லை'' யொடு,
கல கலப்புக் கிளிநொச்சி களிமன்னார் வன்னியதும்

அம்பாறை மண்ணினையும் அழகுநிறை மழலையென
அம்மாவாய்த் தாங்கிநனி ஆயுளினைக் கடத்துகிற,
செந்தமிழின் தேசமதாம் சுந்தநிறை மண்ணிதனில்
சந்தனமும், பன்னீரும் சத்துநிறை செந்தமிழே!

பாடுகின்ற மீன்களுடன் பண்ணிசைக்கும் யாழதுவும்
தேடு மொளிர் திரவியமாம் திருமலையின் துறைமுகமும்,
வயல்வெளியும் வண்ணமிகு வரம்புகளும் சுற்றிவர
அயர்வின்றி ஓடுகிற அழகுநிறை நதிபலவும்....

இயற்கைமகள் அருமையுடன் ஈன்றபல சொத்துகளும்,
மயக்கமுற வைத்து விடும் மன்னாரின் வளங்களதும்
பனைமரத்துக் காட்சியுடன் பயன்கொழிக்கும் தென்னைகளும்,
கனதியுடன் நிமிர்ந்தழகாய்க் காட்சிதரும் வடகிழக்கு!

தேசமதில் சிறப்புமிகு தெள்ளுதமிழ் நூலகத்தை
நாசகர்கள் அழித்திடினும் நானிலமே போற்றுகின்ற,
அற்புதமாம் ஆழமொடு அருமை மிகு நூல்களதும்
பொற்பதமாய் அமைந்ததொரு பொங்குபுகழ் யாழ்நகரே!

சிறப்புகளை, சீர்மைநிறை சிந்தனையின் சிற்பிகளை
இரக்கமுடை மனங்களினை இனங்களதாய் இதயமதில்,
நித்தமுமே தாங்கியிந்த நிகரில்லாத் தீவுதனில்
உத்தமமாய் இலங்குகிற உயர்வுநிறை வடகிழக்கு

கவிஞர் ரீ.எல். ஜவ்பர்கான்

# கடவுட் காட்சி (கலித்துறை)

*காதலா யெனதகத்துக் கரந்துறையுங் கடவுட் காட்சி*
*போதமாம் மெய்ஞானப் பூந்துணராற் புலனவித்துப் போதலர*
*நாதமாய் நின்றொலிக்கும் நாயகனின் அருட்குறிப்பு நமதகத்து*
*சோதியாய்த் தோன்றுமடா துயர்களைவான் உமக்குறுதிசோதியாமே.*

*ஆதவ னுதயமாக அரும்பும் மென்மலர்க ளெல்லாம்*
*மாதவர் மனமும் போதம் உதித்திடில் மலருமன்றோ*
*நாதன தருளும் நன்றே நாடுவார் நமருமாவார்*
*வேதனும் விதித்தவாறு விரும்பிலே உவகை கொள்வாய்*

*சோதியும் உளத்திற் றோன்றும் தொடரடா துணையுமாகும்*
*வேதிகை மனமதாகும் வேட்டு நீ வினையைச் செய்வாய்*
*கோதிலாக் குருவின் வாக்கு கூட்டுமே குறியிலக்கை*
*ஆதியும் அருள்வான் நின்னை அருளுருக் காணலாமே*

*அருளுருத் தோன்றுமாகில் ஐம்புலன் அடக்கி நோக்கு*
*திருவருள் காட்டும் உண்மைச் சிவநெறி யூட்டும்*
*பருதியும் உதயமாகும் படருமே தொலைவில் காட்சி*
*சுருதியும் உறுதிகூறும் துரியத்தில் லயித்துத் தூங்கு*

*பயிலும் நல் யோகந்தன்னால் பரமனை அகத்துட் காண்பாய்*
*'துயிலும் நின் திறத்தால்ஞானத் துரியத்தைத் துறந்து நீங்கி*
*அயில்மழு அமலன்தானம் அருச்சித்து அவனோ டொன்ற*
*எயிலது எறிந்த முன்னோன் இருவினை யறுப்பானீதி*

*ஐம்பெரும் புலனாந்தேவர் அவிந்து மெய்யொடுங்கி நிற்பர்*
*ஐம் பெரும் அவத்தைதானும் ஐயனில் அடங்கி நிற்கும்*
*ஐம் பெரும் பூதம் நின்னை அருச்சித்து வழிபட் டேத்தும்*
*ஐம்பெருங் கடவுளாகும் அறிஞனுக் கருள்வா ரம்மா,*

*நீரினில் நடக்கலாம் நெருப்பினில் துயிலலாம் நிமலனாணை*
*பாரினில் பறக்கலாம் பருவரல் அகற்றலாம் பாதத்தாணை*
*வாரியைக் குடிக்கலாம் வளம்பல பெருக்கலாம் வரதனாணை*
*தேரினிற் செல்லலாம் சிவபதஞ் சேரலாம் தெவிட்டாதம்மா*

*அரும்பெருஞ் சித்தியெல்லாம் அடைந்து நின்னாணை நிற்கும்*
*அருவினில் உருவைக்கண்டு அறிவினால் அனைத்தும் நீக்கி*
*திருவினால் அருளைப் பெற்று திகழ்மதி தரித்தோன் பாதம்*
*குருவினால் அடைவதாகும் குறித்து நீ தவத்தைச் செய்யே*

*பரிபவம் அடைந்தால் நின்னைப் பரமனும் ஆண்டுகொள்வான்*
*அரியயன் முதலாந்தேவர் அமரரும் அணுகா ரெந்தை*
*திரிபுர மெரித்ததேவன் திருவருள் சிவணிக் காக்கும்*
*பரிபுர மொலிக்கத்தாயும்-பரமனின் பாதஞ் சேர்ப்பாள்*

*பிறப்பிறப் பில்லையென்பர் பேரின்ப பதத்தின் நீழல்*
*பிறப்பிறப் பில்லாமோனப் பிரமத்தின் கூறு மாவாய்*
*உறுதவஞ் செய்தவர்க்கு உறுதுணை யூட்டிக் காப்பான்*
*பெறவரும் பிறவி பெற்றோம் பெருமையு மிதுவேயன்றோ*

**சிவசம்பு தட்சணாமூர்த்தி**
காரைதீவு

# முத்தமிழ் வித்தகர் முனி விபுலானந்தர்

"ஜின்னாஉற்"

சுற்றிமுத் துறைபே ராழித் தூமணித் துவீப மன்ன
பொற்புறும் ஈழத் தாயின் பெருவிளை நிலப்ப ரப்பின்
நற்பதி யாங்கி ழக்கின் நனிபுகழ் காரை நல்லூர்
பெற்றநற் பேறாய் ஆங்கு பிறந்தனர் அடிக ளாரே


பிறந்ததம் மண்ணிற் றெற்குப் பாரதத் தமிழ்ப்பு லத்தில்
அறிவமு தூட்டி ஞான அருளொளி பரப்பிச் சற்றும்
மறுவிலா வாழ்வு வாழ்ந்தே மறுபிறப்பதனி லுய்ய
துறவறம் பூண்டார் தெய்வத் தொண்டராய் அடிக ளாரே.

தெய்வமென் றொன்றுண் டென்னுந் தெளிவினோ டுலகி னோர்க்குச்
சைவநந் நீதி யோதிச் சமயநற் பணிகள் செய்தே
ஐவகைப் புலன டக்கி அறிவினுக்கடங்கி ஆண்டு
மெய்வழி கண்ட ஞான வள்ளலெம் அடிக ளாரே.

ஈதலில் உயர்வாங் கல்வி ஈதலே யதனாற் றூய
வேதநூ லுரைத்தார் தாயின் வழிமொழி தமிழை மற்றோர்
ஓதிடச் செய்தார் கற்றோர் உவந்திட மொழிந்தார் எந்தப்
பேதமு மிலாது யார்க்கும் பிரியமாய் அடிக ளாரே.

முத்தமிழ் வித்த கர்தம் முயற்சியால் யாழ்நூல் செய்தே
இத்தரைக் கீந்தார் ஈடு இணையிலாத் தொண்டாய்த் தம்மின்
சொத்தெனக் கொண்ட தன்னார் தூய நற் றமிழை ஞான
வித்தகந் தனைத்தா னன்றி வேறிலை அடிக ளாரே.

தமிழுக்குஞ் சைவத் திற்குந் தம்மையே தந்த வள்ளல்
தமிழொடு ஆங்கி லத்திற் றனித்திறன் கொண்ட மேதை
இமயத்தின் சாரல் தன்னில் இறைதவ மிருந்த ஞானி
நமதீழ நாட்டின் பேறே நனிபுக ளடிக ளாரே.




முகம்மது சரீப் - றம்ஸீன்
வ/ அறபா. வித். வவுனியா

கவிதை உயிர்த்துடிப்பானது. மனதுக்கு இனிமையானது. படிப்போர் கேட்போரின் மனத்தை ஈர்த்து அவர்களிலே மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தும் சக்தி கவிதைக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. சொல்லழகும் எதுகை, மோனை வாக்கிய வளமும் பெற்றுப் பொருளாழம் பொதிந்துள்ள கவிதைகள், அவை எம்மொழிகளில் வடிவமைக்கப் பெற்றிருப்பினும் மனித உள்ளங்களைக் கவர்ந்து நிற்பதை நாம் அவதானிக்கலாம்.

இஸ்லாமிய உலகிலே கவிதைக்கு முக்கிய இடம் இஸ்லாம் வழங்கியுள்ளது. அரசியல், விஞ்ஞானம், தத்துவம், புவியியல், மருத்துவம் போன்ற இன்னோரன்ன விடயங்களுக்கு இஸ்லாமியர் பங்காற்றியதைப்போல் கவிதையும் கவிஞனும் இஸ்லாமிய இலக்கிய வரலாறுகளில் முக்கிய இடம் பிடித்துக் கொண்டுள்ளதை அரேபிய வரலாறு அரேபிய நாகரீகம் போன்ற நூல்களில் ஆசிரியர்கள் இயம்பியுள்ளார்கள்.

இஸ்லாமானது மனித வாழ்க்கைக்கு தேவையான எல்லா அறிவுகளையும் கலைகலாசாரங்களையும் விருத்தி அடையச் செய்துள்ளதை மறுக்க முடியாது. மனித நாகரீகம் பண்பாடு வளர்ச்சியடையவும் செழிப்படையவும் உயிர்த்துடிப்புள்ள சமுதாயம் தோன்றவும் மொழி அவசியமாகும். பெரும்பாலான இஸ்லாமியர் அரபு மொழியைக் கொண்டுள்ளனர். இது ஆதிமொழியாகவும் மனதை கவரவல்லதாகவும் இஸ்லாம் துரிதமாக வளர்ச்சியடையவும் காரணமாக அமைந்தது. இவ்வாறே ஏனைய மொழிகளை வளர்க்கவும் பேணிப்பாதுகாக்கவும் இஸ்லாமியர் விட்டு வைக்கவில்லை. அவர்களின் அறிவுத்தாகமே இவற்றிற்கு ஊன்று கோலாக அமைந்தது. தமிழ், உருது, ஹிந்தி, பாரசீகம், ஹிப்ரு, ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் இஸ்லாமியக் கவிஞர்கள் சிறப்பாக பங்காற்றி உள்ளார்கள். எமது நாட்டிலும் அயல் நாடான இந்தியாவிலும் இஸ்லாமியக் கவிஞர்களின் கவிதைகளை அளவுகோலால் மட்டிட முடியாது. இந்நாடுகளில் பேச்சு மொழியாக தமிழ் மொழியை கொண்டுள்ள இஸ்லாமியர்கள் இம்மொழி வளர்ச்சியில் பங்காற்றியுள்ளமை வரலாற்று உண்மையாகும்.

இஸ்லாம் தோன்றிட முன்னர் அரேபியர்களின் மொழி அரபு மொழியாகவே பெரும்பாலும் காணப்பட்டது. ஆனால் இஸ்லாம் தோன்றியவுடன் அரபு மொழி செழிப்படைய நபி முஹம்மது(ஸல்) அவர்களே பெரும் பங்காற்றியுள்ளார்கள். இஸ்லாத்தின் காலத்தின் முன்னர் அரபு மொழியானது இலக்கிய கவிதைகள் காதல் போர், சேருதல், பிரிதல், ஒற்றுமை, வேற்றுமை பாலை நில அமைப்பு, ஒட்டகம் போன்ற இன்னோரன்ன இயற்கை அமைப்புகளை வைத்து கவிதைகள் ஆக்கப்பட்டது.

இது மனிதனை நல்வழியில் செல்லவும், மாறாக தீமையை தூண்டவும் அமைவதாக காணப்பட்டது. ஆனால் இஸ்லாம் தோன்றிவிட்ட பின்னர் குர்ஆன் என்னும் வேத நூல் மூலமும் நபி வழியின் ஷரி அத் என்னும் சட்டதிட்டங்களுக்கு அமைய கவிதை இயற்றுவதை இஸ்லாம் அனுமதி வழங்கியது. அல்குர்ஆனில் அஷ்ஷுஅறா கவிஞர்கள் என்ற அத்தியாயம் அமைந்துள்ளது. கவிஞர்களைப் பாராட்டியும் ஊக்கமும் அளித்துள்ளதை அவதானிக்கலாம். நபிமணி அவர்களும் கவிபாட மேடை அமைத்து கவிஞர்களின் கவிதைகளை இரசித்துணர்ந் துள்ளதோடு பாராட்டும் பட்டமும் வழங்கினார்கள். நபித் தோழர்கள் கவிபாடும் திறமை உடையவர்கள். இவர்கள் இறைவனையும் நபிமணியையும் புகழ்பாடும் வகையிலும் இஸ்லாம் வளர்ச்சி அடையும் முறைமையிலும் இஸ்லாமிய கவிஞர்கள் கவிகளை இயற்றினார்கள். இஸ்லாமியதற்காப்பு யுத்தங்களில் முஸ்லிம்களின் வீரத்தையும் அறிவையும் மறுமையின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் பணியில் கவிஞர்கள் கவிதை வடித்தார்கள். இஸ்லாத்தின், எதிரிகள் கவிபாடும்போது அவற்றிற்கு எதிராகவும் கவிபாடும்படி கவிஞர்களைப் பணித்தார்கள். நபிமணி அவர்கள் கஃப்இப்னு சுஹைர் இஸ்லாத்தை ஏற்க முன்னர் இழிவாக கவிபாடினார்கள். இஸ்லாத்தை தழுவியபின்னர் இறைவனையும் தூதர் அவர்களையும் புகழ்பாட ஆரம்பித்தார்கள். இவர்களின் பாணத், சுஆத், என்னும் இனிய கவிதை பிரசித்தி பெற்றது. இஸ்லாம் பரப்பும் தஃவாபுனித பணியிலும் கவிதை முக்கிய பங்காற்றியது. அக்காலமுதல் இன்றுவரை கவிதைத்தொகுப்புகள், ஏடுகள், புத்தகங்கள், போன்றவற்றையும், அரபுமொழியைப் போல் ஏனைய மொழிகளிலும் கோவை செய்தார்கள். ஆண்களும் பெண்களும் பெரும் கவிஞர்களாக காணப்பட்டனர். அவர்களில் கஸ்ஸான் (ரலி) அலி (ரலி) ஆயிஷா(ரலி) அபீவக்காஸ்(ரலி) தாபித்(ரலி) இப்னு அப்பாஸ் (ரலி) போன்ற அக்கால கவிஞர்கள் முக்கியமானவர்கள். இவர்களைப்போல ஏனைய கவிஞர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆபூநவாஸ் போன்ற மத்திய கால கவிஞர்களும் முக்கியமானவர்கள்.

அக நானூறு சங்க இலக்கியத்தில் காதற் பகுதியை சொல்வதைப்போல் இஸ்லாத்திற்கு முன்பு இம்ற உல்கைஸின் முஅல்லகாத் கவிதைகள் அரேபியர்களின் அகத்திணை வாழ்வு பற்றி எடுத்தியம்புகின்றது. ஹமாஸா போன்ற போர்க்கவிதையும் ரஜிஸ்பாலை வனத்தைப் பற்றியும், அவர்கள் வாழ்ந்த, அஸ்ஷி உருதீவானுல் அரப மக்களின் வாழ்க்கைபற்றியும், அனுபவங்கள் மூலமாக கஸீதா கவிதையும் மௌலுத் போன்றபிறந்தநாள் கவிதைகளையும் இயற்றப்பட்டன. கவிதைபுனைவது சிறப்பான பணி புகழுக்குரியது. ஆனால் இச்சையை தூண்டுவது வசைபாடுவது போன்ற பாவகாரியங்களுக்குரிய கவிதைகளை இஸ்லாம் தடை செய்துள்ளது. தற்காலத்திலும் இஸ்லாமியக் கவிஞர்கள் தங்கள் பேசும் மொழியிலேயே கவிதையை இயற்றும் கவிஞர்களாக காணப்படுகின்றனர். அந்த வகையில் தமிழ் மொழி இலக்கிய வரலாற்றில் தமிழ் சகோதரர்களுடன் சேர்ந்தும் தனியாகவும் தமிழ் இலக்கியத்துறைக்கு இஸ்லாமியக் கவிஞர்கள் ஆற்றியபங்கை வரலாறு மறக்காது.

# உலகளாவிய ரீதியில் கிராமிய ஆடல் பாடல்களில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

வித்துவான் சா. இ. கமலநாதன்
B. A., S. L. E. A. S

பாரம்பரிய கிராமியப் பாடல்கள், கிராமியக் கூத்துக்கள் ஆகியவற்றைப் பொறுத்த வகையில் 1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதி ஒரு முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்திலே ஈழத்தில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் எதிர்காலக் கண்ணோட்டத்துடன் பாரம்பரியக் கிராமியக் கலைகள் உயிரூட்டம் பெறுகின்றன.

படித்தறிவற்ற பாமரர்களின் படைப்புக்கள் என ஓரங்கட்டப்பட்டிருந்த கிராமியப் பாடல்களுக்கும் ஆடல்களுக்கும் ஜீவகளையூட்டும் பணியிலே படித்தவர்களும் சமூக மதிப்புப் பெற்றவர்களும் அரசியலாரும் அபிமானத்துடன் தம்மை அர்ப்பணிக்கின்றனர். இவை தொடர்பாக மேற்கு நாடுகளிலும் ஈழத்திலும் நிகழ்ந்தவற்றை ஒப்புநோக்குதல் பயனுடையதாம்.

1962 ஆம் ஆண்டு வெளிவந்த 'ரைம்' (Time) சஞ்சிகையில் ''கிராமிய இசையின் புதிய தொனி'' (The New Sound of Falk Music) என்னும் ஒரு கட்டுரை வெளிவரு கிறது. இக் கட்டுரையிலே ஜோன் பையஸ் (Joan Baez) என்னும் இசைவல்லாள் ஒருத்தியின் இசைப்பணி கூறப்படுகிறது. இவள் ஒரு மேலிடத்துப் பெண். மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த பௌதீக விஞ்ஞானி ஒருவரின் மகள்; ஆரம்பத்திலே மேற்கத்திய இசையிற் பாண்டித்தியம் பெற்றவள். இத்தகைய தகுதிகளைப்பெற்ற இவள் அமெரிக்க ஆதிவாசிகளின் கிராமிய இசையிலே ஈடுபாடு கொண்டு ஆய்வுகள் நிகழ்த்துகிறாள். அவர்களின் பண்டைய இசைமரபிலே எத்தகைய மாற்றங்களுஞ் செய்யாமல், பழைய வாத்தியக் கருவிகளோடு புதிதாக ''பெஞ்சோ'', ''கிற்றார்'' முதலிய பக்க வாத்தியங்க ளைச் சேர்த்துக் கொள்கிறாள். இது சரியா, பிழையா என்பது நமது பிரச்சினையல்ல. மக்கள் இதை இரசித்து ஏற்றுக் கொண்டார்களா என்பதே எமது கவனத்திற்குரியது.

இவளுடைய இந்த முயற்சியின் பின்னர் இற்றைவரை ஓரங்கட்டப்பட்டிருந்த கிராமியப் பாடல்கள் சாதாரண கோப்பிக் கடைகள் தொடங்கி, பெரிய ஹோட்டல்கள் வரை ஒலித்தன. கல்லூரி மாணவர்கள் ஒரு கோப்பைக் கோப்பியை நாலு சிலின் கொடுத்து வாங்கி அதை ருசித்தவண்ணம் அங்கு முழங்கிய கிராமியப் பாடல்களை இரசித்துக் கொண்டிருந்தார்கள் எனக் கூறப்படுகிறது. மேலிடத்துப் புத்திஜீவிகள் கூடும் நியூயோக், பொஸ்டன், சிக்காக்கோ, டென்வர், சன்பிரான்சிஸ்கோ முதலிய பெருநகரங்க ளிலுள்ள நாடகக் கொட்டகைகளையும் இக்கிராமியப் பாடல்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கின. கிராமிய இசைப் பாடகர்களுக்கு இரவு நிகழ்ச்சி ஒன்றிற்கு 3500 பவுண் வழங்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டில் மாத்திரம் 700,000 கிற்றார்கள் விற்பனையாகின. இப் பாடல்களுக்கு மக்கள் மத்தியில் நிலவிய வரவேற்பினைக் கண்ட 'ஐக்கிய அமெரிக்க வாசிகசாலைக் காங்கிரஸ்' (U.S Library Congress) இப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து அல்பங்களாக்கி விற்பனை செய்தது.

அமெரிக்க ஆதிவாசிகளின் கிராமியப் பாடல்களுக்குப் பெருமதிப்பை உண்டாக்கி அதை ஜனரஞ்சகப்படுத்திய ஜோன் பையஸ் மேற்படி பாடல்களின் வரலாற்றுப் பின்னணி பற்றி அக்கறை கொள்ளவில்லை. அவள் தன் கொள்கை பற்றிப் பின்வருமாறு கூறுகிறாள். ''ஒரு பாடல் எங்கிருந்து வருகிறதென்பது பற்றியோ, ஏன் வருகிறது என்பது பற்றியோ நான் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. நான் கவலைப்படுவதெல்லாம் அப்பாடல் எவ்வாறு தொனிக்கிறது என்பது பற்றியும், அதிற் புலப்படுத்தப்படும் உணர்ச்சி என்ன என்பது பற்றியுமே!'' (I don't care very much about where a song came from or why? all I care about is how it sounds and the feeling in it). இதனை இத்துடன் நிறுத்திவிட்டு இதே காலப் பகுதியிலே கிராமிய நடனங்களிலே நிகழ்ந்த மலர்ச்சி ஒன்றினைக் கவனிப்போம்.

செல்வி அமலியா என்ற பெண்மணி அமெரிக்க மேற்சபை உறுப்பினராயிருந்த கெர்னான்டஸ் (Hernandez) என்ற தனவந்தரின் செல்வப் புதல்வி. தனது இளமைப்பருவ ஆரம்ப காலத்தில் தந்தையின் கடுமையான எதிர்ப்புக்குங் கட்டுப்பாட்டுக்கும் இடையிலே சாஸ்திர ரீதியான 'பலே' எனப்படுங் கோஷ்டி நடனத்தைப் பயின்றாள். அதில் ''வலறீனா'' எனப்படும் முதன்மைப் பாத்திரமாக வரல் வேண்டுமெனக் கனவு கண்டாள். ஆயின், இடையிலே அக்கனவு மாறியது. சாஸ்திர ரீதியான ஆனால், அன்னியத்தன்மை வாய்ந்த இசையையும் நடனத்தையும் விட, தன் சொந்த நாடாகிய மெக்சிக்கோ நாட்டு ஆதிவாசிகளின் இசையும் தாளமும் சிறந்ததென உணர்ந்தாள். விவசாயிகள் கரும்புச்சாகுபடியின்போது கொண்டாடும் 'ஸப்றா' என்னும் விழாவில் இடம்பெறும் கிராமியப் பாடலும் ஆடலும் அவளைக் கவர்ந்தன. இவள் அமெரிக்க ஆதிவாசிகளான இந்திய, இஸ்பானிய கலப்பிற் பிறந்தவள். மெக்சிக்கோ நாட்டு மலைப்பகுதிகளிலும், சமவெளிகளிலும் வாழ்பவர்களின் இயல்பான திறமை, அழகிய கிராமியக் கலைகளிலே புலப்படுத்தப்பட்டுள்ளதெனும் உண்மை படிப்படியாக அவளுக்கு உதயமாகியது.

அது மட்டுமல்ல அவை பெருமைப்படுத்தப்படாமலும் கவனிக்கப்படாமலும் இருப்பதை உணர்ந்தாள். இக்காலப் பகுதியில் மெக்சிக்கோ அரசினரால் நடத்தப்பட்ட நுண்கலை நிறுவனம் ஒன்றிலே சேவையாற்றிக் கொண்டிருந்தாள். அங்கு 'பலே' எனப்படும் சாஸ்திரரீதியான மேற்கத்திய கோஷ்டி நடனங்களை ஒழுங்குபடுத்தி நிர்வகிக்கும் (Choreographer) பணி அவளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தனது இலட்சியத்தை நிறைவேற்ற இப் பதவியைப் பயன்படுத்த முயன்றாள். அதாவது மெக்சிக்கோ நாட்டுக் கிராமிய கோஷ்டி நடனங்களை அறிமுகஞ் செய்ய முயன்றாள். ஆனால், மேற்படி நிறுவனம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கிராமியக் கலைகள் தமது 'நுண்கலை மாளிகைக்கு' உரியனவல்ல எனக் கூறப்பட்டது. இதன் காரணமாகத் தனது 34 ஆவது வயதிலே அரசாங்க பதவியை இராஜினாமாச் செய்து தனது இலட்சியத்தை நிறைவு செய்யத் தனியான கோஷ்டி ஒன்றினை உருவாக்கினாள். வாராவாரம் பல நிகழ்ச்சிகளை மேடையேற்றினாள். நாளாவட்டத்தில் இக்கிராமிய நடனங்களுக்கு வெகுஜன ஆதரவு வளர்ந்து கொண்டே வந்தது. இவளது நிகழ்ச்சிகள் மெக்சிக்கோவின் சுற்றுலாத்துறைத் திணைக்களத்தைக் கவர்ந்தது. அதன் ஆதரவுடன் அவை தொலைக்காட்சியிலும் பிரபல்யம் அடைந்தன. இவற்றைக் கண்ட மெக்சிக்கோ அரசாங்கம் இக் கோஷ்டியை அதிகாரபூர்வ கலைப் பிரதிநிதியாக ஐக்கிய அமெரிக்க நாடுகள், இலத்தீன் அமெரிக்கா ஆதியாம் இடங்களுக்கு அனுப்பிவைத்தது. ஏழு வருடங்களுக்கு முன் அவளது பணிகளை ஏற்க மறுத்த அதே நுண்கலை நிறுவனம் அவள் முன்பு பெற்ற வேதனத்தைப்போல் ஐம்பது மடங்கு மேலதிகமாகக் கொடுத்து 1959 இல் அவளை வேலைக்கமர்த்தியது. இவளது கோஷ்டி 1961 ஆம் ஆண்டில் பரீசில் நடைபெற்ற அகில உலகக் கலாசார ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றது. இதுவரை ஒதுக்கப்பட்டிருந்த கிராமிய இசைசார் நடனத்தைக் கலாசார ஒலிம்பிக்கில் அரங்கேற்றியதன் மூலம் உயர்மட்டப் புத்திஜீவிகளின் அங்கீகாரத்தையும் அபிமானத்தையும் பெற்றுக் கொடுத்த பெருமை அவளைச் சார்ந்தது. இதன் உச்சக்கட்டம் போல 1962 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஒரு நிகழ்ச்சி இடம் பெறுகிறது. அன்று, அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ஜோன் கெனடியும் அவர்தம் மனைவியாரும் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு மெக்சிக்கோவுக்கு வருகின்றனர். இவர்கள், பெருவிழா ஒன்றிலே அமலியாவைப்பாராட்டுவதோடு அவளது நிகழ்ச்சி ஒன்றினை வெள்ளைமாளிகையில் அரங்கேற்றுமாறும் வேண்டுகின்றனர். இதைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் கிராமிய நடனம் ஒரு உச்சக் கட்டத்தை அடைகிறது.

முறையே ஜோன் பயசும், அமலியாவும் கிராமிய இசைக்கும் நடனத்துக்குங் கொடுத்த உயிரூட்டம் இதே காலப்பகுதியில் ஈழத்திலும் சில தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கலாமா என எண்ணிப்பார்க்கவேண்டியுள்ளது. சிலவேளை இது ஒரே காலகட்டத்தில் முன்பின்னாக ஏற்பட்ட தற்செயல் நிகழ்ச்சியாகவும் இருக்கலாம். இதே காலப்பகுதியிலேதான் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களான கலாநிதி சரச்சந்திரா கலாநிதி வித்தியானந்தன் ஆகியோர் ஜோன் பயசும், அமலியாவும் பின்பற்றிய அதே பாணியில் தம் பணியினை மேற்கொள்கின்றனர்.

1955 ஆம் ஆண்டு கண்டி புஷ்பதான மகளிர் கல்லூரி மண்டபத்திலே பேராசிரியர் சரச்சந்திராவினால் புதிய உத்திகளோடு நெறிப்படுத்தப்பட்ட ''மனமே'' என்னும் சிங்களக் கிராமியக் கூத்து அரங்கேறுகிறது. அக்காலம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பட்டிப்பை மேற்கொண்டிருந்த மாணாக்கர் இருபாலாரும் பங்கேற்று நடிக்கிறார்கள்.

தென்னிலங்கையிலுள்ள 'றிச்மன்ட்' கல்லூரியில் ஆசிரியராய் இருந்து, பின்னர் சிங்கள டிப்ளோமா வகுப்பிலே படித்துக் கொண்டிருந்த 'ஜெயமன்ன' என்பவர் முக்கிய பாத்திரத்தை ஏற்று நடிக்கிறார். இந்தக் கூத்து இன்றுவரை

காலத்துக்குக்காலம் பல்வேறு நடிகர்களைக் கொண்டு (மட்டக்களப்பு உட்பட) நூற்றுக்கு மேற்பட்ட தடவைகளில் அரங்கேறியுள்ளது. அன்று தொடக்கம் இன்றுவரை அது ரூபவாகினித் தொலைக்காட்சியில் அடிக்கடி ஒளிபரப்பப்படு வதை சகலரும் அறிவர். இதன் பின்னர் பேராசிரியர் நெறிப்படுத்திய 'சிங்கபாகு' மேடையேறுகிறது.

இதனைத் தொடர்ந்து அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பணிகள் ஆரம்பமாகின்றன. பேராசிரியர் அவர்கள் இலங்கைக் கலைக்கழகத் தமிழ்ப் பிரிவின் தலைவராயிருந்தவர். இக் காலத்திலே சிற்சில கிராமங்களிற் பாமர மக்கள் மட்டும் காலத்திற்குக் காலம் ஆடிவந்த வடமோடி தென்மோடிக் கூத்துக்களைப் படித்தவரிடையே அறிமுகமாக்கும் முதற்படியாகப் பாடசாலைகளுக்கிடையிலும், மன்றங்களுக் கிடையிலும் போட்டிகளை உருவாக்குகிறார். இத்தகைய போட்டிகளின்போது அவர் நேர்முகமாகவே சமூகங் கொடுத்தார். அண்ணாவிமாரோடும் இத்துறைசார் அறிஞர்களோடும் கலந்துரையாடும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. அவர் பிற்காலத்தில் ஆற்றவிருந்த மீள்தேடலுக்கு இது பெரும் பங்களிப்பினைச் செய்தது. பிற்காலத்திலே அவரால் நெறிப்படுத்தப்பட்ட கூத்துகளிலே தலைசிறந்தவர்களாகக் கருதப்பட்ட சிலர் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கூத்துப் போட்டிகளிற் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றவர்களாகும். இன்று கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் கலை-பண்பாட்டுப் பீடாதிபதியாயிருக்கும் கலாநிதி சி.மௌனகுருவும் அவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகை மாணவர் பலர் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகஞ் சென்றதும் இரண்டாவது கட்ட வளர்ச்சி நெறிப்படுத்தப்படுகிறது. பேராசிரியர் அவர்கள் கூத்துக்கள் அருகிப் போவதற்கான காரணங்களை நன்கு அறிந்தி ருந்தார். விரைவாக மாறிவரும் சமுதாயத் தேவைகளுக்கு வசைந்து கொடுப்பதிலேதான் கலைகளின் நீள்நிலைப்பாடு தங்கியுள்ளதென்பதை உணர்ந்திருந்தார். மட்டக்களப்புக் கூத்துக்களைப் பொறுத்தவரை அவற்றிற்கு நீண்டகால மரபொன்றிருந்தது. அந்த மரபு சிதையாவகையில் காலத்திற்கேற்ற புதிய நாடக உத்திகளையும் ஒலி,ஒளி மேடைய மைப்புகளையும் கைக்கொள்வதிலே அவர் பேரார்வங் காட்டினார்.

பேராசிரியர் ஒருவர் நெறிப்படுத்த அதே பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆண் பெண் பட்டதாரி மாணவர்கள் பங்கேற்று நடிக்கிறார்கள். 1962 இல் கர்ணன்போரும், 1963 இல் நொண்டி நாடகமும், 1964 இல் இராவணேசனும், 1966 இல் வாலிவதையும் அரங்கேறுகின்றன. இவை சகலராலும் வரவேற்கப்பட்டு இரசிக்கப்பட்டவை என்பதில் ஐயமில்லை. ஆயினும் இதன் தொடர்வளர்ச்சி என்ன? பாடசாலைகள் சில வருடாவருடம் பாடசாலை மட்டத்திலான போட்டிகளிற் கலந்து கொள்வதோடு பரிசளிப்பு விழாக்களிலும் மேடையேற்றுகின்றன. எனினும் இதனை ஜனரஞ்சகப் படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. கனடாவில் றொறன்டோ பகுதியில் வேனிற்காலத்தில் இடம்பெறும் ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். இதனை நான் நேரிலேயே பார்த்துள்ளேன். 'கறிப்' (Carib) என்னும் ஆதிவாசிகள் மேற்கிந்திய தீவுகளின் தென்பகுதியில் கரிபியன் கடல் ஓரமாக வாழ்ந்தவர்கள். இவர்கள் வேனிற் காலத்தில் றொறன்டோவில் ஒரு விழா எடுக்கிறார்கள். இறுதிநாள் நிகழ்ச்சியின் போது இலட்சக் கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். சனநெருக்கங் கூடிய மிக நீளமான 'யங்' என்னும் வீதியில் ஆங்காங்கு மக்கள் கூடும் இடங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறுசிறு நிகழ்ச்சிகள் திறந்த வெளிகளில் நடத்துகிறார்கள் இதற்கு ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். இவையெல்லாம் முக்கிய விழா நாளுக்கு முன்னர் மக்களைத் தயார் செய்யும் நிகழ்ச்சிகளாக அமைகின்றன. சில சமயங்களில் பார்வையாளர்கள் காட்டும் உணர்ச்சி வெளிப்பாடுகளைத் தனித்தனியாக அவதானித்த பின்னர் அவர்களிற் சிலரை அழைத்துத் தம்மைப்போற் பாடவும் ஆடவும் அவர்களைப் பழக்குகிறார்கள். இத்தகைய முறைகளை நாமும் ஓரளவாவது நிதானத்துடன் நடைமுறைப்படுத்தலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கலாம்.

அலக்ஸ் கம்பெல் (Alex Campble) என்பவர் "Balleto" (பலே) எனப்படுங் கோஷ்டி நடனக்காரர். அவர் ஸ்கொத்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். அவர் பின்வருமாறு கூறுகிறார். கழகங்களில் உன்னாற் பாட முடியாவிட்டால், தெருக்களிற்பாடு -புகையிரத நிலையங்களிலே சனசந்தடி மிக்க பிற்பகல் நேரத்தில், நீ எப்போதும் உயிரான பாடல்களைப் பாடமுடியும் "(If you can't sing in the clubs, sing in the streets and you can always get a living singing at the railway station during the evening rush hours) கிராமியப் பாடல்கள் பற்றிய அவரது கூற்றினை நாம் பாடல் தழுவிய நமது கூத்துக்களிலும் பரீட்சித்துப் பார்க்கலாமா என்பதையும் இக்கால கட்டத்திலே சிந்திப்பது நன்று. சிலவேளை இது தெருக்கூத்து நிலைக்குத் தாழ்த்தி விடவுங்கூடும்! இதன் வெற்றியுந் தோல்வியும் படித்த, மேலிடத்து புத்திஜீவிகளின் விவேகமான அணுகுமுறையைப் பொறுத்ததாகும்.

# இந்து சமயத்தில் சுவாமி விபுலாநந்தரின் இடம்

வாகரை வாணன்

## முன்னுரை:

இலங்கைத் தமிழறிஞர்களில் சுவாமி விபுலாநந்தர் சிறப்பாகச் சுட்டப்பட வேண்டியவர். மட்டக்களப்புத் தமிழகத்தில் பிறந்த இந்த மங்கா ஒளிவிளக்கு பாரத நாடு முழுவதும் பரந்து பிரகாசித்ததொன்றே அதன் பெருமைக்குச் சான்றாகும்.

பிறப்பிலிருந்து பிரிவு வரை, உண்மையான ஓர் இந்து சமயத் துறவியாக வாழ்ந்தவர் அடிகளார். ஆனால், அவர் வாழ்ந்து காட்டிய இந்து சமய வாழ்விற்கும், சாதாரண ஒரு இந்து சமயி வாழும் இந்து சமய வாழ்விற்கும் இடையேயுள்ள வேறுபாடு மிகப் பெரியது. எனவே தான், இந்து மதத்தில் சுவாமி வகித்த இடம் எது எனக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். அதிலும், பல்வேறு பேதங்களாலும் போட்டி பூசல்களாலும் சிதறுண்டு கிடக்கும் மனித சமுதாயத்தை ஒரே வானம் ஒரே பூமியின் கீழ்க் கொண்டு வரக்கூடிய சக்தி, அடிகளார் வாழ்ந்து வளமூட்டிய இந்து மதத்திற்கும் உண்டு.

அடிகளாரின் அந்த அற்புதமான இந்து மதத் தத்துவத்தை உங்கள் முன்வைக்க விரும்பும் அதே வேளையில் சமயம் என்னும் சொல் சுட்டும் பொருள் பற்றி சில கருத்துக்களை எடுத்துவைக்கலாமென எண்ணுகின்றேன்.

**சமயம் - ஒரு விளக்கம்**

சமயம் என்னும் சொல்லுக்கு மரபு, உடன்படிக்கை, அறிவு, நோக்கம், என்றெல்லாம் பொருள் உண்டு. இக்கருத்துக்களே சமயம் பற்றிய ஓர் அபிப்பிராயத்தை, உணர்வை நமக்கு ஊட்ட முடியும். அதாவது - சமயம் என்பது நீண்ட நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் பல சடங்குகளின் **(Rituals)** சங்கமம்; இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள ஒரு பாலம்; இறைவன் பற்றிய ஞானத்தை அறிவிப்பது; மக்கள் சமுதாயம் ஒழுக்கத்தோடு வாழ்வதற்கான மார்க்கத்தைக் காட்டுவது என்றெல்லாம் நாம் கருத்திற் கொள்ளலாம்.

சமயம் எனும் சொல்லைக் குறிக்க ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் **"Religion"** என்னும் சொல்லும் இதன் வேர்ச்சொல் என்று அறிஞர் பலராலும் கொள்ளப்படும் **"Religio"** என்னும் இலத்தீன் சொல்லும் அநேகமாக ஒரே வித பொருளையே குறிக்கின்றன.

அதாவது - கடவுளுக்கு மரியாதை **(Reverence for God)** கடவுள் பயம் **(The fear Of God)** என்னும் கருத்துக்களே அவையாகும். ஆனால், வேறு சில அறிஞர் **"religio"** எனும் சொல்லுக்குப் பதிலாக **"religatio"** எனும் சொல்லினை எடுத்துக் காட்டுவர். இச்சொல்லின் பொருள் பிணைத்தல் அல்லது கட்டுதல் **(binding up)** ஆகும். அதாவது, இறைவனோடு எமது ஆன்மாவை இணைத்தல் - சேர்த்தல் - என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். இக்கருத்தினைக் கவனிக்கும் அறிஞர்களுக்கு இந்திய தத்துவங்களில் ஒன்றான வேதாந்தம் நினைவுக்கு வரலாம்.

ஆக, சமயம் என்பது இறைவனையே மையமாகக் கொண்டு விளங்கும் ஓர் அனுட்டான முறையாகும். இதனால்தான், சமயங்கள் மனிதர்களை இறைவனிடம் ஆற்றுப்படுத்துகின்றன என நாம் நம்புகிறோம்.

ஆனால், இக்கருத்துக்களெல்லாம், இக்கால கட்டத்தில் மாற்றமடைந்து வருவதை நாம் அனுபவ ரீதியாக உணர்கிறோம். சமயத்தில் இறைவனுக்கிருந்த இடம் இப்போது மனிதனுக்குத் தரப்பட்டுள்ளது. மனிதனையும் அவனது வாழ்க்கை முறைகளையும செம்மைப்படுத்தும் ஒரு பெரும் சமூக அமைப்பாகவே சமயங்கள் விளங்க வேண்டும் என்னும் குரல் பலமாகக் கேட்கின்ற காலம் இது. காரணம், மனிதன் இறைவனின் சாயலாகவே படைக்கப்பட்டான் என்று கிறிஸ்தவ திருமறை நூல் (ஆதிஆகமம் 26-27) எடுத்துக் கூறுகின்றது. ''பிரமம்'' என்பது மட்டுமே மெய் - ஏனையவையெல்லாம் அதன் பிரதிபிம்பங்கள் என்று வேதாந்தம் சொல்லுகின்றது. உன்னையே நீ அறிவாய் **(Know yourself)** என்னும், கிரேக்க தத்துவஞானிகளில் ஒருவரான சோக்கிரட்டீஸின் உரையிலும் இந்திய வேதாந்தத்தின் சாயல் தெளிவாகவே தெரிகின்றது.

இக்கூற்றுக்களெல்லாம், மனிதன் தெய்வாம்சம் **(Divinity)** பொருந்தியவன் என்னும் கருத்தையே பிரதிபலிக்கின்றன. இதனால்தான், மனிதனே சமயத்தின் மையப் பொருளாக விளங்க வேண்டுமென்ற கூற்று வலுப்பெற்று வருகின்றது. இதன் ஒரு வளர்ச்சிக் கட்டமாகவே, இருபது ஆண்டுகளுக்கு முன் லத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவான மீட்பின் இறையியலினை **(Theology of liberation)** நாம் பார்க்க வேண்டும். கத்தோலிக்க சமயத்தைப் பொறுத்தவரையில் அது மனிதனுக்கும், அவனது வாழ்க்கைத் தேவைகளுக்கும் பெரும் முக்கியத்துவம் கொடுக்கிறது. என்பதையே மீட்பின் இறையியல் காட்டுகின்றது.

மனிதனே சமயத்தின் மையப் பொருள் என்னும் கோட்பாடும் - அதன் தீவிரமான செயற்பாடும் - மனிதனை முற்றாக இறைவனிடமிருந்து பிரித்து விடக்கூடும் என்று சிலர் அச்சம் தெரிவிக்கலாம். ஆனால் மனிதன் என்பவன் வெறும் மனிதன் அல்லன்.அவன் இறைவனின் ஒரு வடிவம், என்னும் கருத்தை ஏற்பவர்கள் நிச்சயமாக அவனூடாக இறைவனைத் தரிசிக்க முடியும். எனவே, இறைவன் மறைக்கப்பட்டு விடுவான் என்ற வாதம் வலுவானதல்ல என்ற கருத்து இங்கே பெறப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்து வரும் நாம் சுவாமி விபுலாநந்தர் இந்து மதத்தில் வகித்த இடம் பற்றி சரிவர அறிந்து கொள்ள வேண்டுமாயின், நமது பார்வையை அவர் ஊறித்திளைத்த இந்து சமயத்தின் பக்கம் திருப்ப வேண்டும்.

## இந்து சமயம் - ஓர் அறிமுகம்:

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றி இன்றும் இந்த உலகத்திலே நிலைத்து நிற்கும் சமயங்கள் மூன்று. அவை இந்து சமயம், சொராஸ்திரிய சமயம், யூத சமயம் என்பார் சுவாமி விவேகாநந்தர் (சிக்காக்கோ பேருரை-1893 செப்டம்பர் 19ம் நாள்.) இவை மூன்றிலும் இந்து சமயம் ஒன்றே பலகோடி மக்களால் பின்பற்றப்பட்டு வருவதோடு இன்றும் இளமைப் பொலிவோடு விளங்குகின்றது.

இந்தியா என்னும் பெயரைக் கொண்டே வழங்கப்பட்டுவரும் இச்சமயத்தினை அந்நாட்டில் வாழ்ந்த, வாழ்கின்ற பல்வேறு இன மக்களின் சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், செயற்பாடுகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் தொகுப்பு என்றே குறிப்பிடலாம். இத்தொகுப்பு நான்கு பெரும் காலப்பகுதிகளைக் கொண்டதாகும். அவையாவன-

| | |
|---|---|
| சிந்து வெளிநாகரிக காலம் | (5200 ஆண்டுகளுக்கு முற்பட்டது) |
| வேத காலம் | (3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) |
| புராண இதிகாசங்கள் | (1700 ஆண்டுகளுக்கு முற்பட்டது) |

பொதுவாகத் தமிழரின் பொற்காலம் எனப் போற்றிப் புகழப்படும் சங்க காலம் (2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது.)

மேற்படி நான்கு காலங்களிலும், சிந்துவெளி நாகரிக காலம் தீராவிடர் என்னும் ஓர் இனத்தாரின் ஆளுகைக்குட்பட்ட காலம் எனக் கொள்ளப்படுகின்றது. சில மொழி நூலாரின் கருத்துப்படி 'திராவிடம்' என்னும் சமஸ்கிருதச்சொல் தெற்கு என்னும் பொருளை உடையது. அதற்கேற்ப திராவிட மொழிகளும் தென்னிந்தியாவின் மொழிகளாகவே விளங்குகின்றன. சிந்துவெளி நாகரிகம் - வெறுமனே 'தமிழர் நாகரிகம்' என்று விதந்து போற்றுவதை விடுத்து - எகிப்திய, சுமேரிய மக்கள் கூட்டத்தோடு பெருமளவு தொடர்புடைய திராவிடமொழி பேசும் மக்களின் நாகரிகம் என்று கூறுவதே சாலப்பொருந்தும். இக்காலகட்டத்தில் தாய்க்கடவுள் வழிபாடும் சில வழிபாடுமே சிறப்புற்று விளங்கின என்பர்.

இந்நாகரிகம் மங்கி மடிகின்ற ஒரு காலப்பகுதியிலே தோன்றியதுதான் இருக்குவேதகாலம். இந்தியாவிற்கு வெளியேயிருந்து வந்த ஆரியர் என்னும் மக்கட்கூட்டத்தார்க்குச் சொந்தமான இக்காலப்பகுதியில் இந்திரன், வருணன், உஷா போன்ற தெய்வங்களே முதன்மை பெற்றுத் திகழ்ந்தன. வேள்வி இயற்றுதல், இக்காலத்தின் முக்கிய வழிபாட்டு அம்சமாகும். வேத காலத்தின் ஆரம்பத்தில் இலைமறைகாயாக இருந்த சிவனும், விஷ்ணுவும் அக்காலத்தின் கடைசிப்பகுதியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். இதற்குக் காரணம், ஆரியருக்கும், திராவிடருக்குமிடையே ஏற்பட்ட ஒருவகைப் புரிந்துணர்வு என்றே கொள்ளலாம்.

வேத காலத்திற்குப் பிற்பட்ட புராண இதிகாச காலம் ஆரிய இனத்தாரின் எச்சம் என்பதில் ஐயமில்லை. இக்காலப் பகுதியின் சிறப்பம்சமாகக் கடவுள் அவதாரக் கோட்பாடே விளங்குகின்றது. இராமாயண, பாரதக் கதைகளும், கிறித்து வுக்குப் பின் எழுந்த பல்லவர் காலச் சைவ வைஸ்ணவச் செழிப்புக்கு பெரிதும் உதவின என்பது மனம் கொள்ளத்தக்கது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலம் திராவிடரில் ஒரு பிரிவினரான தமிழரின் தனித்துவத்தைக் காட்டும் பொற்காலமாகும். சமயச்சார்பு இல்லாத, உலகியலில் அதிக ஈடுபாடு கொண்ட இக்காலப் பகுதியில், மனித உணர்வுகளை ஆட்டிப் படைக்கும் காதலும் வீரமும் புலவர்களின் பாட்டுபொருளாக அமைந்தன. சங்க கால இலக்கியங்களில் ஆங்காங்கு காணப்படும் யாக்கை நிலையாமை, ஊழ்வினை ஆகிய நம்பிக்கைகளும், வேள்வி இயற்றுதல் போன்ற வைதிகச் சடங்குகளும், அக்காலப்பகுதியில் ஊடுருவத் தொடங்கிய ஆரியச் செல்வாக்கின் விளைவுகள் என்பதில் ஐயமில்லை.

ஆரியச் செல்வாக்கின் ஆரம்பத்தைப் பிரதிபலிக்கும் மேற்படி விளைவுகளையும் கடந்த சங்ககாலம், தமிழரின் தனித்துவமான ஒரு காலமாக ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கும் மேலாக தலை நிமிர்ந்து நின்றது.

நாம் மேலே கூறியபடி மேற்படி நான்கு காலப்பகுதிகளை எடுத்துக்காட்டும் ஒரு கண்ணாடியாகவே இந்து மதம் விளங்குகின்றது. அதாவது ஆரிய திராவிடம் பெற்றெடுத்த குழந்தையே இன்றைய இந்து மதம், என்னும் கூற்றினை நிருபிக்கும் விதத்திலேயே, சங்க காலத் தமிழரின் அழகுத் தெய்வமான முருகன், ஆரியரின் சுப்பிரமணியனாகவும், கொற்றவை உமாதேவியாகவும், சிவன் உருத்திரனாகவும் விளங்குகின்றார்கள், என்பது மறக்கமுடியாத உண்மை.

இந்து மதத்தின் முதல் நூல்களாக நான்கு வேதங்களும், சிறப்பு நூல்களாக ஆகமங்களும் போற்றப்படுகின்றன. இந்நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்து மதத்தில் சைவ வைஷ்ணவ வழிபாடே மேலோங்கி நிற்பது கண்கூடு. இதைத்தவிர சக்தி, முருகன், விநாயகர், சூரியன் முதலான தெய்வ வழிபாடுகளும் உண்டு. இவ்வழிபாடுகளோடு, கூரிய சிந்தனையின் வடிவங்களாக விளங்கும் சாங்கிதம், யோகம், நியாயம், வைசெடியம், மீமாம்சை ஆகிய ஐவகைத் தரிசனங்களும் அடங்கும். கடவுள் மறுப்பாக எழுந்த புத்த சமண மதங்களுக்கும், இந்து மதத்தில் இடமுண்டு. சுவாமி விவேகாநந்தரின் கருத்துப்படி புத்தமதம் இந்து மதத்தின் பூரணத்துவம் ஆகும். சுவாமிகளின் இக்கூற்று, கிறிஸ்தவர் களின் - பழைய ஏற்பாட்டின் நிறைவே புதிய ஏற்பாடு எனும் கருத்தை ஒத்ததாகும். நாத்திகன் ஒருவன் கூட இந்து மதத்தவனாக இருக்க, அம்மதம் அவனை அனுமதிக்கிறது என்னும் தத்துவஞானி டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணனின் கூற்றும் இச்சமயத்தில் மனங்கொள்ளத் தக்கது.

### சுவாமி விபுலாநந்தரின் இளமைக்காலச் சமயச் சூழல்

மட்டக்களப்பு தமிழகத்து இந்துக்களிடையே வழக்கிலுள்ள இறை வழிபாடுகளில் முருகனும், பிள்ளையாருமே முதன்மை பெற்றவர்கள். இவர்களையடுத்து, சிந்துவெளிச் சமய வழிபாட்டை நினைவு கூரத்தக்க வகையில் கண்ணகி, திரௌபதி, மாரி, பேச்சி, பத்திரகாளி, கடலாட்சி என்னும் பெயர்களில் தாய்க்கடவுள் வழிபாடும் பெருமளவு அனுட்டிக்கப்படுகின்றது. வயிரவக் கடவுள் போன்ற சிறுதெய்வவழிபாடும் பெருமளவு அனுட்டிக்கப்படுகின்றது. வயிரவக் கடவுள் போன்ற சிறு தெய்வ வழிபாடும் கிராமிய மட்டத்தில் இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இத்தெய்வங்களுக்கென இரவு நேரங்களில் கிராமங்களில் நடத்தப்படும் வழிபாடு, மட்டக்களப்பு தமிழகத்தின் சில பகுதிகளில் 'சடங்கு' என்றே அழைக்கப்படுகின்றது. இச்சடங்கு முறை சங்ககாலத் தமிழ்நாட்டில் இருந்த வெறியாட்டை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளதெனலாம்.

இம்மண்ணில் உள்ள கோயில்களில் நடைபெறும் வழிபாடுகளுக்கு- புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல, 'பரம்பரை உரிமையும் ஆசார பயபக்தியும், கோயிற்பழக்கமுமே தேவை.' கோயில்களில் பூசகர்களாக சைவக்குருக்கள்மாரும் அதற்குரிய குடிவழிவந்தோரான கப்புகனார்களுமன்றிப் பார்ப்பன குலத்தார் யாரேனும் பண்டு இருந்ததாகத் தெரியவில்லை. எனினும், தற்காலத்தில் இந்நிலைமையில் சிறிது மாறுதல் ஏற்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய விடயத்தை இங்கே நான் குறிப்பிடத்தான் வேண்டும். அதாவது, யாழ்ப்பாணத்து இந்து பெருமக்களிடையே நிலவும் சைவ சித்தாந்த ஆகம நெறி தொடர்பான இறுக்கமான வழிபாட்டை மட்டக்களப்பு மண்ணிலே காண முடியாது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலே இருப்பதாகச் சொல்லப்படும் கந்தபுராணக் கலாசாரமும் அங்கு இல்லை.

ஆக, மட்டக்களப்பு தமிழகத்திலுள்ள இந்து மத வழிபாடு - வைதிகச்சமயச் சடங்குகளின் பெருந் தருக்கங்களுக் குள்ளாகாத - திராவிட மரபு வழிபட்ட நெகிழ்வான ஒரு வழிபாடு ஆகும். இந்நிலைக்கு சமூக வரலாற்று நிகழ்வுகளே காரணிகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, கி.பி. 13ம் நூற்றாண்டுவரை இலங்கையின் கிழக்குப் பிரதேசம் பௌத்த செல்வாக்கிற்குட்பட்டதாகவே விளங்கியது, என்று பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் சொல்வதும், தமிழர் தெய்வமான முருகனின் மனைவி வள்ளிநாயகியைச் சிங்களப் பெண் என்று தென்னிலங்கை மக்கள் சொந்தம் கொண்டாடுவதும் மேற்படி சமூக வரலாற்று நிகழ்வுக்குட்பட்டவையே.

மட்டக்களப்புத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கண்ணகி வழிபாடு மிகவும் முக்கியமானதொன்றாகும். கி.பி. 2ம் நூற்றாண்டில், அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்ட கஜபாகு வேந்தனால், தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இவ்வழிபாடு, முல்லைத்தீவிற்கும் அங்கிருந்து கடல் வழியாக

மட்டக்களப்பிற்கும் பரப்பப்பட்டதாக அறிகின்றோம். ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட கண்ணகி கோயில்கள் - காலப்போக்கில் கண்ணகி சமண சமயத்தைச் சேர்ந்தவள் என்ற ஒரே காரணத்திற்காக இராச இராசேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ஆறுமுக நாவலர் அவர்களும் கண்ணகி வழிபாட்டை ஆதரிக்கவில்லை என அறிகின்றோம்.

ஆனால், சுவாமி விபுலாநந்தர் மிகச் சிறிய வயதிலிருந்தே கண்ணகி வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இதனை அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் வாயிலாக நாம் அறியமுடிகின்றது. சிறிய வயதில் அவருக்கு ஏற்பட்ட இவ்வழிபாட்டுணர்வு, அவர் ஓர் துறவியாகி ஞானத்தில் கனிந்திருந்த நேரத்தில் சர்வமும் சக்திமயம் என்று சொல்லக்கூடிய பக்குவத்தை அளித்திருந்தது. அனைத்துத் தெய்வங்களையும் ஒன்றாக, அன்பு மயமாகக்காணும் இம்மனப்பக்குவத்தை அவர் பிறந்த மண்ணுக்கேயுரிய வெறும் சடங்குகளுக்குட்படாத இறைவழிபாட்டுணர்வும், அவரின் இளமைக்காலத்துக் கிறிஸ்தவ சமயச் சூழலுமே உருவாக்கிக் கொடுத்தன என்றால் அது மிகையாகாது. ஏனெனில், உள்ளதுதான் வரும் இல்லாதது வராது என்பது சாங்கியம்.

### இந்து சமயத்தில் விபுலாநந்தரின் இடம்

இந்து சமய வரலாற்றில் 19ம் நூற்றாண்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலகட்டமாகும். நீண்ட நெடுங்காலமாக நிலவிவரும் இச்சமயத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்திய நாட்டில் மூன்று சீர்திருத்த இயக்கங்கள் முகிழ்த்தன. ஒன்று - பிரமசமாஜம்: இரண்டு - ஆரிய சமாஜம்: மூன்று -இராமகிருஷ்ண மிஷன்.

இவற்றில் பிரமசமாஜத்தை உருவாக்கியவரான ராஜாராம் மோகன்ராய் (1774-1883) கிறிஸ்தவ சமயக் கோட்பாட்டினால் பெரிதும் கவரப்பட்டதனால் இந்து சமயத்திற்குப் புதியதோர் வடிவம் கொடுக்க முற்பட்டார். ஆரிய சமாஜத்தின் கர்த்தாவான சுவாமி தயாநந்த சரஸ்வதி (1824-1883) அவர்கள் இறைவன் ஒருவனே என்னும் தத்துவத்தில் நம்பிக்கையுடையவர். ஒழுக்க மேம்பாட்டை வற்புறுத்தியவர். இராமகிருஷ்ண பரமஹம்சரின் முதற் சீடரான சுவாமி விவேகானந்தரால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ண மிஷன், இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளை மூலமாகக் கொண்டது.

அடிப்படையில் இராமகிருஷ்ண பரமஹம்சரும், சுவாமி விவேகாநந்தரும் வேதாந்திகளாக விளங்கியது போல இலங்கையின் முதல் இராமகிருஷ்ணமிஷன் துறவியாகிய சுவாமி விபுலாநந்தரும் ஒரு வேதாந்தியே. இந்து சமயத்தில் சுவாமி விபுலாநந்தர் வகிக்கும் மிக முக்கியமான இடம் இதுதான்.

வேதாந்தம் என்ற சொல்லுக்கு வேதத்தின் உட்பொருள் என்று அர்த்தம். இவ்வுட்பொருளை உணர்த்திடவே பாதராயணர் என்பார் பிரமசூத்திரம் என்னும் நூலினைச் செய்தார். இதனை விளக்கியுரைக்கும் நோக்கத்தோடு சங்கரர் எழுதிய உரையே இன்று வேதாந்தம் என்று சொல்லப்படுகிறது.

இத்தத்துவத்தின்படி மூலப்பொருளாகிய பிரமம் மட்டுமே உண்மை. மற்றையவை அனைத்தும் (உலகம், உயிர்கள்) அதன் தோற்றம். இக்கருத்தினை விளக்கிட கயிறு பாம்புபோல் தோன்றுவதை வேதாந்திகள் எடுத்துக் காட்டுவர். இதில் கயிறு என்பது தான் உண்மை. பாம்பு அதன் தோற்றம். இதன்படி காரணம் மட்டும் உண்மை. அக்காரணத்திலிருந்து வரும் காரியம் உண்மையன்று. காரணமாகிய கயிறு உண்மை. அதிலிருந்து தோன்றிய காரியமாகிய பாம்பு உண்மையன்று. இதைப்போன்றே காரணமாகிய பிரமம் உண்மை. அப்பிரமத்திலிருந்து தோன்றிய உலகம் உண்மையல்ல.

பிரமம் ஒவ்வொருவரிலும் உறைகிறது என்பது வேதாந்திகள் கொள்கை. எனவே தான் பிரமம் பரமாத்மா என்றும் உயிர்கள் ஜீவாத்மா என்றும் அழைக்கப்படுகின்றது. ''தத்துவமஸி'' என்னும் சமஸ்கிருதச் சொற்பிரயோகத்திற்கு ''நீ அதுவாக இருக்கின்றாய்'' என்று பொருள். அதாவது நீ என்பது நீ அல்ல; அதுவாகிய பிரமம்தான் நீ என்கிறது வேதாந்தம்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் சமய சமரசத்தை நாடி நின்றதற்கு அவருக்கு வேதாந்தத்திலிருந்த அபார

நம்பிக்கையே காரணம். ''கடலை நாடிச் செல்கின்ற நதிகளைப்போல எல்லாச் சமயங்களும் இறைவனையே நாடுகின்றன'' என்கிறார் அவர். இயேசு கிறிஸ்து, புத்தர், மகாவீரர் முதலானவர்களெல்லாம் அவதார புருஷர்கள் என்பது அவரது நம்பிக்கை. இந்நம்பிக்கையினால்தான் எல்லாச் சமயங்களிலும் அவரால் பிரமமாகிய பரமாத்துமாவை தரிசிக்க முடிந்தது.

சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கை முறை, சிந்தனை, எழுத்து, பேச்சு அனைத்திலும் வேதாந்தப் பொருளே தொனிக்கக் காணலாம். நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல, மட்டக்களப்பு மயில்வாகனனின் இளமைக்கால வாழ்க்கையும் சமய சூழலுமே அவரை இப்படியொரு தத்துவப்பாதைக்கு இட்டுச் சென்றிருக்கவேண்டும். இல்லையென்றால், கிறிஸ்து இயேசுவின் திருப்படத்தைத் தனது பூசை அறையில் வைத்துப் பூசித்த மயில்வாகனன் இராமகிருஷ்ணரின் சீடராகியிருப்பாரா, என்ன?

அடிகளாரின் சமய வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்ப்பவர்கள் அவர் பல தெய்வ வழிபாட்டில் (Polytheism) நம்பிக்கை உள்ளவர் என்ற முடிவுக்கு வரலாம். ஆனால், இது உண்மையல்ல என்பதைப் பின்வரும் சுவாமி அவர்களின் வார்த்தைகளே நிரூபிக்கின்றன. அவர் சொல்கிறார்:

> ''திருமால், திருமகள், இந்திரன், குமரநாயகர், வள்ளிநாயகி, தெய்வானையம் மையார், என்னும் அனைவரும் பராசக்தியினுடைய அர்த்தகாமரூபத்தின் அம்சமாவரேயன்றி வேறாகார்.''

இங்கே, பராசக்தி என்று அடிகளார் குறிப்பிடுவது பிரமத்தையன்றி வேறொன்றையல்ல. இந்து சமய வழக்கில் இயற்கை தெய்வ சக்தியுள்ள தாயாகவே வணங்கப்படுவதுண்டு. உதாரணத்திற்கு பூமி, பூமாதேவியென்றும், சமுத்திரம் சமுத்திராதேவியென்றும் வணங்கப்படுவதைக் காட்டலாம். இது, இயற்கைக்கு இந்துக்கள் கொடுக்கும் மதிப்பின் வெளிப்பாடாகும். இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் இயற்கையினையே இந்துக்கள் தெய்வமாக (Pantheism) வணங்குகின்றார்கள் என்று குறை கூறுவதுண்டு.

இம்மரபினை ஒட்டியே பிரமத்தை, சுவாமி விபுலாநந்தர் பராசக்தி எனப்பகர்கிறார். இராமகிருஷ்ண பரமஹம்சரும் ஜகன்மாதா என்று அழைப்பதும் இந்தப் பிரமத்தைத்தான் என்பதை நாம் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

சுவாமி அவர்கள் 'குருதேவ வாக்கியம்' என்ற தலைப்பிலே பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் அவரது வேதாந்த உள்ளத்தைக் காட்டுவனவாகும். அதிலே பரமாத்மா, ஜீவாத்மா - தத்துவம் பற்றி இப்படிப் பேசுகின்றார்:

மன்னுயிருக் குயிராக இறைவனிருந்
திடுமரபை வழுத்தக் கேன்மோ
பொன்னுடைய புரவலர்தம் மனையினிடைத்
திரைமறைவிற் பொருந்துகின்ற
மின்னனையார் புறந்தோற்றார், யாவரையும்
தாங்காண்பார், மேவுமீசன்
அன்னது போலெவ்விடத்து மெவ்வெவர் தம்
அகத்திடையுமமர்ந்து நிற்கும்.

இப்பாடலின் பொருள் இதுதான். திரைமறைவிலிருக்கும் செல்வந்தர் வீட்டுப்பெண்கள் புறத்தேயுள்ள அனைவரையும் பார்க்க முடியும். ஆனால், அவர்களை யாரும் காணமுடியாது. இது போன்றே, பரமாத்துமா, ஜீவாத்துமாவாகி நம் ஒவ்வொருவரிலும் உறைந்துள்ளார்.

''பெருந்தேவபாணி'' என்னும் பாடல் பகுதியில் உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் பிரமத்தின் தோற்றமாகவே விபுலாநந்தர் கண்டு வியக்கின்றார் என்னும் உண்மையைப் பின்வரும் பாடல் காட்டும்:

மண்ணு நீ விண்ணு நீ மலையு நீ கடலு நீ
எண்ணு நீ எழுத்து நீ இரவு நீ பகலு நீ
பண்ணு நீ பரவு நீ பாட்டு நீ தொடரு நீ
அண்ண நீ அமலநீ அருளு நீ பொருளு நீ

அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கியபோது, அவரோடு இணைந்து பணியாற்றியவர் கந்தசாமி எனும் தமிழறிஞர். எதிர்பாராதவிதமாக இப்பெரியோன் இயற்கை எய்திய செய்தி அடிகளாரின் இதயத்தைப் பெரிதும் பாதித்தது. அதன் விளைவே ''கங்கையில் விடுத்த ஓலை'' என்னும் கவிதைச் சித்திரம்.

அப்பாடல்களில் தன் நண்பன் கந்தசாமிப் பெரியோனின் அருமை பெருமை பற்றியெல்லாம் குறித்துள்ள அடிகளார், இவ்வுலகினை 'மாயப் பொய் உலகம்' என்று பழித்துரைப்பதை நாம் பார்க்கின்றோம். அதாவது, இந்த உலகம் பொய், பிரமம் ஒன்றுதான் மெய் என்னும் வேதாந்தக் கருத்துக்களையே மேற்படி பாடல்களின் மூலம் விபுலாநந்தர் நமக்குத் தெரிவிக்கின்றார்.

தத்துவப்போக்கில் சுவாமி விபுலாநந்தர், தம்மை விடப் பத்து வயது மூத்தவரான சுப்பிரமணிய பாரதியாரை ஒத்தவர். பாரதியார் கிறிஸ்து, புத்தர் உட்பட பல்வேறு இந்து சமய தெய்வங்களையும் பாடிப்பரவியவர். ஆனாலும் அவரின் உள்ளத்தில் வேதாந்த ஞானமே விரிந்து நின்றது. அதனால்தான் அவர் தன்னை மறந்து பாடினார்:

காக்கைச் சிறகினிலே நந்த லாலா - நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்த லாலா.
பார்க்கும் மரங்களெல்லாம் நந்த லாலா - நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்த லாலா.

சுவாமி அவர்கள் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, வளி, வான் என்பவற்றினை வாழ்த்தி அழகான பாடல் செய்துள்ளார். ஒவ்வொரு பூதத்தையும் விளித்துப் பாடியுள்ள அடிகளார் அவற்றைப் பிரமத்தின் தோற்றமாகவே பார்த்து வியக்கின்றார்.

வானின் அகலம், வளி வலிமை, மலி தீத்தெறல் நன்னீரினளி
ஆன உலகின் பொறையனைத்தும் அவன் மெய்யருளென்றறிவர்-சொல்வார்
அவன் செய் அருளே ஆதிசக்தி; அவன் மெய் அருளே ஈசுவரி
அவன் மெய் அருளே விறற்காளி; அரியின் பிரியை, இசைமடந்தை.

அடிகளாரின் அர்த்தம் நிறைந்த இந்தப் பாடலைப் படிக்கும்போது நமக்கு கத்தோலிக்க மதத்தின் வைரத்தூண்களில் ஒருவராகப் பிரகாசிக்கும் புனித பிரான்சிஸ் அசிசியாரின் பாடல்கள் சில நினைவுக்கு வருகின்றன. அடிகளாரைப் போலவே அசிசியாரும் இயற்கையைக் கண்டு பரவசம் அடைந்து அவற்றினூடாக இறைவனைக் கண்டு துதித்தவர்; அந்தப்பாடல்களில் ஒன்று:

"Glory be to you, My God, For the Gift of your creation, and
Especially for our brother, the sun, who gives us the day and
By whom you give us light. He is beautiful and radiant and
Of Great Glory, and bears witness to you, O' most high"

இந்திய தத்துவ ஞானமுணர்ந்த யாராவது புனித பிரான்சிஸ் அசிசியாரின் மேற்படி பாடல்களைப் படித்துப் பார்ப்பார்களேயானால், நிச்சயம் அவர்கள் சுவாமி விபுலாநந்தரின் வேதாந்தத்தை அவற்றில் தரிசிப்பார்கள். இவ்வேளையில், இன்னுமொரு உண்மை என் நினைக்கு வருகிறது. மேல் நாட்டுத் தத்துவம் புறநிலையை அடிப்படையாகக் கொண்டிருக்க, இந்திய தத்துவம் மனிதனின் உள் நிலையை ஆன்மாவை அடிப்படையாகப் பெற்றுள்ளது. இதனால்தான் இந்திய தத்துவஞானத்தின் ஆன்ம விசாரணை மிக மிக அதிகம்.

இந்து சமயத்தில் அடிகளார் வகிக்கும் இன்னுமொரு முக்கிய இடம் அவரது சமய சமரச நோக்கு. இத்தத்துவம் தமிழர்க்கொன்றும் புதியதல்ல. ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் சைவ சமய சண்டமாருதப் பிரசுரங்களை ஆறுமுக நாவலர் பொழிந்து கொண்டிருந்த நேரத்தில் அவர் காலத்தைச் சேர்ந்த வடலூர் இராமலிங்க சுவாமிகள் என்னும் வள்ளலார் சமய சமரச போதனையில் சளைக்காது ஈடுபட்டிருந்தார். அன்றையச் சூழ்நிலையில் ஆறுமுக நாவலரும் வள்ளலாரும்

இரு துருவங்களாகவே விளங்கினார்கள். ஏன், அவர்கள் இருவருக்குமிடையில் ஒரு வழக்குக்கூட நடைபெற்றதுண்டு.

வள்ளலாருக்கு முன்பே சமயசமரசத்தை வலியுறுத்திய ஞானியாக விளங்குகின்றார் நமது திருவள்ளுவ நாயனார். பிறப்பால் இவர் ஒரு சமணரெனக் கொள்ளப்பட்ட போதும் தமது சமய உணர்வினை முற்றாகத் தள்ளி வைத்து விட்டு கடவுள் பற்றிக் கூறியுள்ள பாக்கள் அனைத்திலும் எம்மதத்தினர்க்கும் சம்மதமான கருத்துக்களை காணலாம். இன்னும் சொல்லப் போனால் தமிழர் சமய வாழ்விற்கு அப்பாற்பட்ட ஒரு சமூகத்தினர்,. இதனைச் சங்க இலக்கியங்களே சாற்றும். இதனால்தான் சங்க காலத்தில் சமயசமரசம் என்ற பேச்சுக்கு இடமிருக்கவில்லை. சமயங்கள் பல இருக்குமிடத்தில்தானே சமரசம் தேவை.?

இதை நான் இங்கே குறிப்பிடக் காரணம், சுவாமி விபுலாநந்தர் - பழந்தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர். அவருக்குச் சமயம் என்றால் என்ன என்று நன்கு தெரியும். அதனால்தான் அவர் பிறப்பிலே ஒரு இந்துவாக இருந்தபோதும், எம்மதம் சம்மதம் என்ற கருத்தைத் தழுவி மகிழ்ந்தார். இதனை விளக்க அடிகளாரின் வாழ்க்கையில் நடந்த பின்வரும் நிகழ்வொன்றே போதும்:

ஒரு தடவை அடிகளாரின் நண்பரொருவர் அடிகளாரின் முன்னிலையிலேயே பிற சமயங்களை இகழ்ந்து பேசியதை அவரால் பொறுக்க முடியவில்லை. பேசியவர் தமது பிரிய நண்பராக இருந்த போதும் அடிகளார் மிக ஆணித்தரமாக இவ்விதம் கூறினார்.

''நீர் ஒரு சைவ சமயத்தவன். மற்றைய சமயங்களை இகழாதிருத்தலே சைவ சமயத்தின் கொள்கை. சைவ சமயத்தின் பெருமையை மற்றைய சமயங்கள் தாமாக உணரல் வேண்டும். ஆகையால், மற்றைய சமயம் எதையாவது நீர் இகழ்ந்து பேசுவீராகில் நீர் சைவ சமயத்தின் முதலாவது எதிரியாகக் கருதப்படுவீர். ஆகையால், நீர் உண்மைச் சமயப்பற்று உள்ளவராக இருப்பீராகில் இன்று முதல் பிற சமயங்களை இகழ்ந்து பேசுவதை நிறுத்தல் வேண்டும்.''

அடிகளாரின் மேற்படி உரை அவருக்கு சமயசமரசத்திலிருந்த ஈடுபாட்டை நன்கு விளக்கும். சமய சமரசமின்மைக்கான அடிப்படைக் காரணம் அறியாமையே என்பது அடிகளாரின் அழுத்தம் திருத்தமான கருத்து.

''அழிவற்றதும், ஆனந்தம் நிறைந்ததும், கருணை பொருந்தியதும் எல்லா உயிரையும் தனதாகவே பாவிக்கும் இயற்கை உள்ளதுமான ஈஸ்வர அம்சம் நாமே'' என்னும் உண்மையை மறந்து நாம் ஒருவர் மீது ஒருவர் பகைமை பாராட்டலாமா?'' என்று கேட்கும் அடிகளார் அக்கேள்விக்குரிய பதிலாகவே சமய சமரசத்தத்துவத்தை ஏற்று நடந்தார்.

சுவாமி விபுலாநந்தர் உலகளாவிய உள்ளத்தின் சொந்தக்காரர். மட்டக்களப்பில் இருந்தாலும் சரி - பாரத நாட்டின் மாயாவதித் தவப்பள்ளியில் வாழ்ந்தாலும் சரி ''யாதும் ஊரே, யாவரும் கேளீர்'' எனும் எண்ணத்தை இதயத்தில் வளர்த்துக் கொண்டவர். அதனால்தான் - மூலப்பரம்பொருளாகிய முதல்வனை எம்மதத்திற்கும் சொந்தமாக்காமல் ''உத்தமனார்'' என்றும் ''வள்ளல்'' என்றும் அவரால் உருகிப் பாடமுடிந்தது. ''வெள்ளை நிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ?'' என்ற அந்த இனிய பாடல் வேறெந்த உள்ளத்திலிருந்துதான் ஊற்றெடுக்க முடியும்.? வேதாந்தம்தான் இந்தப் பாடலின் வித்து. சமய சமரசத்தின் அடிப்படையாய் இருப்பது எல்லாச் சமயங்களிலும் உண்மை உண்டு எனும் உணர்வாகும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு - உலகெலாம் வாழும் கத்தோலிக்க மக்களின் ஒரே தலைவராக விளங்கிய 23ம் அருளப்பர் தாம் கூட்டிய வத்திகான் பேரவையின் ஊடாக மேற்படி உணர்வை வெளிப்படுத்தியதையிட்டு கத்தோலிக்க உலகம் நிச்சயம் மகிழ்ச்சியடையும்.

சுவாமி விபுலாநந்தரும் அவர் போன்ற ஞானிகளும் கட்டிக்காத்த இந்தச் சமய உணர்வே உலகை வாழ்விக்கும் என்றும் நாம் நம்பலாம்.

**முடிவுரை:-**

சடங்குகள், சம்பிரதாயங்கள், புராண இதிகாசங்கள், அவற்றுக்கான தத்துவ விளக்கங்கள், கடவுள் பற்றிய கோட்பாடுகள்-இவற்றின் தொகுப்புத்தான் சமயம் என்ற நிலையிலிருந்து முழுமையாக விலகி நின்று - சமயம் என்பது

ஓர் ஆன்மீக அனுபவம் எனக் கண்டவர் சுவாமி விபுலாநந்தர்.

அடிகளார் கண்ட அந்த அனுபவம் உபநிடத காலத்து முனிவர்கள் கண்ட அனுபவத்துக்கு நிகரானது. அனுபவத்தின் ஊடாகவே ஆண்டவனைத் தரிசித்த ஞானிகள் அவர்கள்.

இந்து சமயம் என்பது இந்திய நாட்டு மக்களின் வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடுதான். இந்த அனுபவக் கடலில் விளைந்த அமுதமாக விளங்குவதே வேதாந்தம் என்னும் அற்புதமான சிந்தனைக் கருவூலம்.

சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கை, வேதாந்தத்தின் விளக்கமே! மனிதர்களையெல்லாம் இறைவனின் வடிவமாகக் கண்டவர் அந்த மகான். இதைப் போன்றே உலகிலுள்ள அனைத்து மதங்களும் இறைவன் என்னும் பரம்பொருளை நோக்கிச் செல்லும் வழிகள் என்று உணர்ந்தவர் அவர். இதன் காரணமாகத்தான் மற்றைய மதங்கள் மீது அவரால் கண்டனப் பிரசாரங்களைப் பொழிய முடியவில்லை.

இந்து சமயத்தில் சுவாமி அவர்கள் வகிக்கும் இடம் இன்றும் பிரகாசமாய் இருப்பதற்கு - அவரது இந்த உன்னதமான மன உணர்வே காரணம்.

அடிகளாரின் வாழ்வும் பணியும், இந்த உணர்வுகளின் வெளிப்பாடாகவே அமைந்தன என்பதை யார் தான் மறுக்க முடியும்?

ஒன்றே குலம் : ஒருவனே தேவன்
நன்றே நினைமின் -
(திருமந்திரம்)

*கற்பனையின் கனவெல்லாம் கவிதை அல்ல*
*கன்னியவள் எழில் மட்டும் கவிதை அல்ல!*
*சொற்பதத்தின் சோபனையும் கவிதை அல்ல*
*சோதனையின் சுமைகள் மட்டும் கவிதை அல்ல*
*இற்றரையின் மாந்தர்தமை எழுச்சி செயும்*
*இன்னமுதக் கன்னலதே கவிதை என்பேன்!*
*அற்புதமாய் ஒளி சிந்தி இருள் கிழிக்கும்*
*ஆதவனின் கிரணமதே கவிதை என்பேன்!*

எம்.ஏ.எம். மசூத் அஹமத்,
காத்தான்குடி.

# கலாயோகி ஆனந்த குமாரசுவாமி

குமாரசாமி சோமசுந்தரம் M.A

எவர் உள்ளத்தையும், கவனத்தையும் ஈர்ப்பது அழகு. அழகின் வயப்படாத மனிதர்கள் இருத்தல் இயலாது. அழகுணர்ச்சிதான் மனிதர்களையும் பண்படுத்தி ஓர் ஒழுங்கில் அவர்களை வைத்திருக்கிறது. உண்மை, செம்மை, அழகு என்பன ஒன்றாய், உடனாய்,வேறாய் உள்ளன. இவற்றைச் சத்தியம், சிவம், சுந்தரம் என பண்டைய பாரதத்தினர் அழைத்தனர். நாகரிகம், பண்பாடு, கலைகள், கலாசாரம், சமயம் அனைத்தும் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் ஆதார சுருதியாக அழகு விளங்குகின்றது. இன்பத்தை அடையவும் அனுபவிக்கவும் விரும்பாதவர் எவரும் இல்லை. அத்தகைய இன்பத்தை விளைக்கும் அழகுணர்வு மனிதனிடத்தில் மிகவும் அழுத்தத்தை ஏற்படுத்துமானால், அங்கு அழகுக்கலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

இசை,நடனம்,நாடகம், உயர்நிலை இலக்கியம் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை முதலிய அழகியல் கலைகளில், அவற்றை வளர்த்துப் பேணி வந்த மக்கட்கூட்டத்தினரின் பண்பாடு தோன்றும் மக்களின் வாழ்வியல் கொள்கைகள், நோக்கங்கள், தத்துவங்கள் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், சட்டதிட்டங்கள், சமயங்கள், விழுமியங்கள், அகப்புறமரபுகள், அரசியல் அமைப்புக்கள், சமூக மரபுகள், பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள் என யாவும் பண்பாடு என்பதனால் குறிக்கப்படுகின்றன. அழகியல் கலைகள் மக்களின் பண்பாட்டில் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றன, பாரத மக்கள் அமைத்த கோயில்கள், கோபுரங்கள்,செதுக்கிய சிலைகள், சிற்பங்கள், தீட்டிய ஓவியங்கள், சித்திரங்கள், வளர்த்த இசையும் நாட்டியமும் அவர்கள் கொண்டிருந்த அழகுக் கலைகளின் ஈடுபாட்டிற்கு சான்றுகளாக விளங்குகின்றன.

பாரதக் கலைகள், பாரதத்திலிருந்து பண்பாட்டினைப் பெற்ற அயல் நாடுகளுக்கும் பரவியிருந்தன. நமது இலங்கை நாடும் அவற்றுள் ஒன்று.

பாரதப் பண்பாடு பழம் பெரும் பண்பாடு. அத்தகைய சிறப்பு மிக்க பண்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற அழகுக்கலைகளின் தெய்வாம்சத்தினை முழு உலகிற்குமே எடுத்துக்காட்டிய தூதுவராக எண்ணப்படுபவர் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள். ரொடின் என்னும் புகழ்மிக்க பிரான்சு நாட்டுச்சிற்பி, சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள நடராஜப் பெருமானின் சிலையை வியந்து போற்றியுள்ளார்கள். அவ்வாறே பாரதக் கலைகள் அனைத்தும் உலகின் நன்மதிப்பைப் பெற்றுள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தராக விளங்கியவர் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி ஆவர்.

சேர் முத்து குமாரசுவாமி என்னும் பெரியார், சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரின் மூதாதையர் பத்தொன்பதாம்

நூற்றாண்டில், ஆங்கிலேயர் இலங்கையை அரசாட்சி செய்த போது அரசியலில் பிரகாசித்தவர். இங்கிலாந்து சென்று, அரிசந்திரன் நாடகத்தை, ஆங்கிலத்தில் விக்ரோறியா மகாராணியாருக்கு நடித்துக்காட்டி பாராட்டுப் பெற்ற பெருங்கலைஞர். சேர் பட்டம் பெற்று, அரசறிய வீற்றிருந்து பெருவாழ்வு வாழ்ந்தவர். அத்தகைய பெரியார் சேர் முத்துக்குமார சுவாமி, எலிசபெத் பீபி என்போரின் ஒரே புத்திரன் கலாயோகி ஆனந்த கென்ரிஷ் குமாரசுவாமி ஆவர்.

1877 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதி கொழும்பில் பிறந்த ஆனந்த குமாரசாமி, இரண்டு ஆண்டின் பின் அவரது தந்தையார் இறந்ததும், தாயாருடன் இங்கிலாந்து சென்றார். அருமைத் தாயாரின் அரவணைப்பிலும் பராமரிப்பிலும் இங்கிலாந்தில் வளர்ந்து கல்விகற்று இலண்டன் பல்கலைக்கழகத்து விஞ்ஞானி மாணி-பி.எஸ்சி. பட்டத் தேர்வில் முதல் வகுப்பில் சித்தியடைந்து சாதனை படைத்தார். புவிச்சரிதவியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் அவர் நிபுணத்துவம் பெற்றார், ''தந்தையொடு கல்விபோம்'' என்ற கூற்றிற்கு விதிவிலக்காக விளங்கினார்.

''தந்தையர் நாடெனும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'' என்று பாடினார் மகாகவி பாரதியார். பொதுவாகத் தாய்நாடு என்றே பிறந்த நாட்டைக் கூறுவார்கள். பாரதியோ வித்தியாசமான கவிஞன்; எனவே தந்தையார் நாடு என்று கூறிப் பெருமை கொண்டார். ஆனந்தரைப் பொறுத்தமட்டில் தந்தையர் நாடு ஒன்று; தாயார் நாடு பிறிதொன்றாக இருந்தது. தந்தையர் நாடு இலங்கை. அங்கே பிறந்தார். ஆனால் தாயார் நாட்டில் வளர்ந்தார்; கல்வி கற்றார்.

இங்கிலாந்தில் கல்வி கற்றுப் பட்டம் பெற்ற பின்னர் தந்தையர் நாடாம் இலங்கையை எண்ணிய போது, அவரது உள்ளத்திலும், மூச்சிலும் ஒரு சக்தி பிறந்திருக்க வேண்டும். அந்தச் சக்தியின் உந்துதலால், தமது நாட்டிற்குச் சேவை செய்ய, 1903 ஆம் ஆண்டில் ஆனந்தர் இலங்கைக்கு வந்தார்.

இலங்கையில் கனிப்பொருள் ஆராய்ச்சிப் பகுதியின் தலைவர் பதவியை அரசு ஆனந்த குமாரசாமிக்கு வழங்கியது. இலங்கையின் கனிப்பொருள் வளம் பற்றி அதிகம் அறிந்து கொள்ளப்படாத காலம். கடினமாக ஆராய்ச்சி செய்து அதன் பயனாக உயர்ந்த தன்னீர்ப்புக் கொண்ட ஓர் அரிய கனிப்பொருளைக் கண்டு பிடித்தார். அதற்குத் தோரியனைற்று என்று பெயர் வைத்தார்.

இலங்கையில், ஆனந்தர் வகித்த பதவியின் காரணமாக, நாட்டின் காட்டுப்பகுதிகள், மலைக்குகைகள், கிராமங்கள் போன்ற பல பகுதிகளுக்குச் செல்லும் வாய்ப்புக்கிடைத்தது. பல அனுபவங்களைப் பெற்றார். 1905 ஆம் ஆண்டில் விஞ்ஞானத்தில் கலாநிதிப்பட்டத்தையும், அதாவது எஸ்ஸி பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். விஞ்ஞானத்தில் அதி உயர் தகைமையைப் பெற்றிருப்பினும், அவரைப் பெரிதும் ஈர்த்தது கலைகள்தான். நமது பண்டைய கலைகளை உலகறியச் செய்வதற்கென்றே உதித்தவர் அல்லவா?

இலங்கையின் பண்டைச் சிறப்பு மிக்க அரச அரண்மனைகள்; கோயில்கள்; புத்த விகாரைகள்; குகைகள் ஆகியவற்றை நேரில் சென்று கண்டார், அங்குள்ள சிற்பங்கள், சிலைகள், ஓவியங்கள், மற்றும் அழிந்த நிலையிலுள்ள கட்டடங்கள் என்பவற்றுடன் ஆத்மார்த்தமாக உரையாடினார். அவற்றின் உயிர்ப்புக்களை உணர்ந்து கொண்டார். அவரின் கலையுணர்வு, தேசியப் பற்று, தந்தையர் நாடு என்னும் போது பெற்ற அளப்பரும் சக்தி என்பன அவரிடம் விழித்துக் கொண்டன. தான் பிறந்ததன் நோக்கத்தினைத் தெரிந்து கொண்டார். மாபெரும் விஞ்ஞானி, கலாயோகியும் ஆனார். விஞ்ஞானமும் கலையும் ஒன்றோடொன்று இணங்கிப் போகாது என்ற நம்பிக்கை பொய்த்து விட்டது. உண்மையில் விஞ்ஞானமும் கலையும் இணைய வேண்டும். அந்த இணைப்பினால்தான் அற்புதங்கள் நிகழ முடியும். ஆனந்தரில் விஞ்ஞானமும் கலையும் சங்கமித்தன. அவரின் கலைப் பணியின் உன்னதத்திற்கு அந்தச் சங்கமம் தான் வழி வகுத்தது.

இலங்கைத் திருநாட்டின் பண்டைய பண்பாடும் கலைச் சிறப்பும் ஆனந்தரின் உள்ளத்தில் ஒரு தேசிய உத்வேக உணர்வினைத் தட்டியெழுப்பியிருக்க வேண்டும். ஆனந்தர் வாழ்ந்த காலம், இலங்கையிலும் இந்தியாவிலும் ஆங்கிலேய ஆதிக்க ஆட்சி நிலவிய காலம். அரசியல் ரீதியாக மட்டுமன்றி கலை, கலாசாரம், பண்பாடு ரீதியாகவும் இந்த நாடுகளின் மக்கள் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்தமையை நன்கு உணர்ந்து கொண்ட ஆனந்தர், மக்களை, கலை, கலாசாரம், பண்பாட்டு ரீதியாக விடுதலை அடையச் செய்வதற்கு வழிவகைகளைத் தேடலானார்.

ஒரு அடிமைநாடு அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்னர்,கலை, கலாசார,பண்பாட்டு விடுதலையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பது ஆனந்த குமாரசாமியின் நிலைப்பாடாக இருந்தது. இவ்வாறு, இதே காலப்பகுதியில், இந்தியாவில் சிந்தித்த ஒருவர் இரவீந்திரநாத் தாகூர் ஆவர். இந்திய விடுதலைத் தலைவர்களான இரவீந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதை, அன்னி பெசன்ற் ஆகியோரின் நண்பராகவும் ஆனந்தர் விளங்கினார். சிந்தனையால் ஒன்றுபட்ட வர்கள் அவர்கள்.

ஆனந்த குமாரசாமி தம்முடைய விடுதலைச் சிந்தனைகளைச் செயற்படுத்தவும் முனைந்தார். பல்வேறு சமூக, கலாசாரப் பணிகளில் ஈடுபாடு கொண்டார். 1905 ஆம் ஆண்டிலே இலங்கைச் சமூக சீர்த்திருத்தக் கழகத்தைத் தாபித்தார். அக்கழகத்தின் சார்பில் ''இலங்கைத் தேசிய சஞ்சிகை'' **(Ceylon National Review)** அவரால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆசிரியராக இருந்து, தம் எண்ணங்களையும், ஆராய்ச்சிகளையும் ஆணித்தரமாக கட்டுரைகள் வடிவில் வெளியிட்டார்.

தாய் மொழியிலேயே பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்றும், நமது தேசியக் கலைகள் மறுமலர்ச்சி காண வேண்டும் எனவும் அந்நிய ஆங்கிலேயப் பண்பாடுகள், கலாசாரம் ஆகியவற்றைக் கண்மூடித்தனமாய் பின்பற்றுதலால் நாட்டுப்பற்றும், பொருளாதார வளர்ச்சியும் தடைப்பட்டு விடும் என்றும் தமது கருத்துக்களை எடுத்துரைத்தார். விஞ்ஞான, கைத்தொழில் கல்வியை மாத்திரம் கற்றுவிட்டு பண்பாட்டுக் கல்வியைப் புறக்கணிப்பதினால் மனிதர்கள் மனிதப் பண்புகளையும் விழுமியங்களையும் இழந்து விடுகின்றனர் என்று கூறினார். அவரது தீர்க்கதரிசனம் மிக்க கூற்றுக்கள் இன்று மெய்யாகி விட்டமையைக் கண்கூடாகக் காண்கின்றோம். எமது நாட்டில் உயர் கல்வி, பல்கலைக்கழகக்கல்வி என்பவை வளர்ச்சி பெறுவதற்கு வித்திட்ட பெரியார்களில் முக்கியமான ஒருவர் ஆனந்த குமாரசாமி அவர்கள்.

1907 ஆம் ஆண்டிலிருந்து ஆனந்தர் கலைப்பணிகளுக்கே முற்று முழுதாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அவரின் பணிகள் தொடர்ந்தன. 1911 ஆம் ஆண்டு, ஆலகபாத் நகரில் நடைபெற்ற பொருட்காட்சியின் கலைப்பகுதிப் பொறுப்பு, அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியாவில் இருந்த காலத்தில் ஆனந்த குமாரசாமி வட இந்திய யாத்திரையொன்றை மேற்கொண்டு, பெருந்தொகையான சித்திரங்களையும், ஓவியங்களையும் சேகரித்துக் கொண்டார். பின்னர் தாம் வெளியிட்ட நூல்களில் அவற்றை இடம்பெறச் செய்து உலகறியச் செய்தார்.

இந்தியாவின் தேசிய விடுதலை இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த வேளை, ஒத்த கருத்துக்களைக் கொண்ட இரவீந்திரநாத் தாகூரின் நட்பைப் பெற்றிருந்தார். இதன் பயனாக ஏற்கனவே ஆனந்தர் கொண்டிருந்த தேசியம். கலை பண்பாட்டுணர்வு ஆகியன பன்மடங்கு பெருகிற்று. இந்த வகையில் இவை பற்றிய கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டார்.

ஆனந்தர் பலநூல்களை வெளியிட்டார். அவற்றுள் ''இடைக்காலச் சிங்களக்கலை'', **(Medical sinhalese Art - 1908)** ''இந்தியா, இலங்கை நாடுகளின் கலைகளும் கைப்பணிகளும்'' **(Arts and Crafts of India-1913) Bronzes from Ceylon -1914;** இராஜபுதன ஓவியங்கள் **(Rejput Paintings-1916)** ''இந்தியாவினதும் இந்தோநேசியாவினதும் கலை வரலாறு - 1927; ஆகிய நூல்களில் கலைகளின் தெய்வீகப் பாங்கினை அழகாக எடுத்துக்காட்டுகிறார்.''சிவநடனம்'' **(Dance of shiva-1917)** ''இந்து சமயமும் புத்தசமயமும்'' 'புத்தரும் பௌத்த திருமறையும்'' **(Buddha and joseph of Buddha)** வேதங்கள்-ஒரு புதிய அணுகுமுறை **(A New approach to the vedas-1932);** ''ஆன்மீக வலுவும் உலகியல் அதிகாரமும்'' **(Spiritual Authority and temporal power)** ஆகிய நூல்களில் தம்மையொரு சமய தத்துவ ஆய்வாளராகக் காண்பித்துள்ளார். சகோதரி நிவேதிதையுடன் இணைத்து பௌத்த, புராணக் கதைகளையும் தொகுத்துத் தந்துள்ளார். ''பிரபுத்த பாரதா'' எனும் ஆங்கிலச் சஞ்சிகையில் தாயுமானவர் பாடல்கள் சிலவற்றின் ஆங்கிலமொழி பெயர்ப்புக்களையும் வழங்கியுள்ளார்.

1917 ஆம் ஆண்டு முதல் 1947 இல் அவர் இறக்கும் வரை அமெரிக்க ஐக்கிய நாட்டில், பொஸ்ரன் நகரில் அமைந்திருந்த நுண்கலை அரும்பொருட்சாலையில், கீழைத்தேயக் கலைப்பிரிவின் பணிப்பாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் பணிபுரிந்தார். இந்தக் கலைக்கூடத்தில் காட்சிக்கு வைப்பதற்காக பல நுண்கலைப்

பொருள்களை உலகின் பல பாகங்களுக்குஞ் சென்று சேகரித்தார். இந்த வகையில், இந்தியக் கலைச் செல்வங்களை உலகறியச் செய்த ஆனந்தரின் பணி போற்றுவதற்குரியது.

ஆனந்தர் இந்தியக் கலைகள் பற்றி ஆய்வு செய்து பல அரிய விரிவுரைகளையும் ஆற்றிப் பெருமை பெற்றவர். கலாயோகியின் இறுதி இருபது ஆண்டுகளில் முந்நூற்றுக்கும் அதிகமான நூல்களையும், கட்டுரைகளையும்; நாற்பது வரையிலான நூல் மதிப்புரைகளையும் வெளியிட்டார் என அறியக் கிடக்கிறது. பெறுமதி வாய்ந்த கடிதங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். இந்த ஆக்கங்களுக்கூடாக, ஆனந்தர் தமது கலையுணர்வை வெளிக் கொணர்ந்தார்.

இந்திய நாட்டு உபநிடதங்கள், தத்துவங்கள், கலைகள் ஆகியவற்றை நன்கு விளங்கிக் கொண்டு; மேலை நாட்டுத் தத்துவ சாத்திரங்களுடன் அவற்றை ஒப்பிட்டும் ஒன்றிணைத்தும் விளக்கந்தந்த ஆனந்தரின் ஆழ்ந்த அறிவும் புலமையும் வியக்கத்தக்கன. இதன் பயனாக இந்திய தத்துவஞானம், சமயங்கள், கலைகள் என்பனவற்றையும் அவற்றின் மூலவர்களான ஞானிகள், அறிஞர்கள், கலைஞர்கள் என்பவர்களையும் உலக அரங்கில் முதன்மைப் படுத்தியவர் கலாயோகி அவர்கள்.

கிழக்கும் மேற்கும் ஒன்றையொன்று சந்திக்காது என்று இரண்டையும் வேறுபடுத்தி நோக்கி வந்த காலத்தில்; கிழக்கையும் மேற்கையும் சங்கமிக்கச் செய்தவர் ஆனந்த குமாரசாமி ஆவர். அதுமட்டுமல்ல கீழைத்தேயக் கலைகளையும், ஆன்மீகத்தையும் உலகம் முழுவதிலும் செறியச் செய்தவர். இனபேதம், சமயபேதம், மொழிபேதம், நிறபேதம் போன்ற மனிதருக்கிடையே கற்பிக்கப்பட்டிருந்த வேற்றுமைகளையெல்லாம் கடந்து உலக ஒருமைப்பாட்டினை அவாவி நின்றவர். உலகம் ஒன்று என்ற பரந்து விரிந்த பார்வையைக் கொண்டிருந்தவர். நம் நாட்டில் பௌத்த சமயத்தையும், பௌத்தம் தழுவிய கலைகளையும் போற்றிப்பணிந்தார். அவற்றை விளக்கினார். இந்து சமயத்தை அகச்சமயமாகவும்; பௌத்தத்தைப் புறச்சமயமாகவும் கருதப்பட்ட ஒரு காலத்தில் இரண்டையும் இந்தியச் சமயச்சிந்தனையாகவே மதித்தார்.

கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்களை அவர் வாழ்ந்த காலப்பகுதியோடு வைத்து நோக்கினால், அளவுக்கு அதிகமான வளர்ச்சியென்றே மதிப்பிடப்படவேண்டும். அவர், பின் வந்த ஆய்வாளர்களுக்கு அடியெடுத்துக்கொடுத்த வர். கலைகள் வெறும் சம்பிரதாயங்களோ, கோரிக்கைகளோ அல்ல; அவ்வக்காலத்தில் வாழ்ந்த மக்களின் சிந்தனைகள், பண்பாடுகள், அழகுணர்ச்சிகள், வாழ்க்கை முறைகள் என்பனவற்றை வெளிப்படுத்திக் காட்டுவன. கலைகள் மூலம் மக்கள் எனும் கலைஞர்களைக் காணவிளைந்தவர் ஆனந்த குமாரசாமி அவர்கள். தாம் கண்டவற்றை உலகிற்கு அளித்தவர். அந்தவகையில் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் ஒரு பண்பாட்டாய்வாளர், கலாரசிகர், சீர்த்திருத்தவாதி, விடுதலை வீரர், சஞ்சிகை ஆசிரியர், பன்மொழிப்புலவர், புவிச்சரிதவியல் விஞ்ஞானி, எழுத்தாளர், பேச்சாளர், தத்துவஞானி ஆக விளங்கிய பெருமைக்கு, உரியவர்.

***எங்கள் அலறல் கேட்டு***
***இங்கே நீ வந்தாலும்,***
***மனிதரைக் காணாமல்***
***மீண்டும் மறைந்து விடாதே***
***நாங்களெல்லாம்***
***பாதுகாப்பிற்காக (?!)***
***பதுங்கியிருக்கின்றோம்!***

***அ. டக்ளஸ் ஜெயசேகரன்,***
***வவுனியா.***

# முத்தமிழ் மணி விபுலானந்தர்

தம்பிலுவில் தயா

சூரியன் . தினமும் காலையிலே தோன்றி பகலை உண்டாக்கின்றது. அது தோன்றவில்லையென்றால் உலகமே இருள் மயமாகிவிடும். உயிர்கள் வாழ முடியாது அத்தகைய உயரிய பணியைத் தவறாது தினமும் குறைவு நேராவண்ணம் செய்யும் நிலை மிகவும் அரியது. உலக மகிழ்ச்சிக்கெல்லாம் முதற்காரணமாக ஒரு பெருஞ்செயலில் சிறிதுங்குறைவு நேராவண்ணம் நியமந் தப்பாமல் நடைபெறச் செய்யும் நிலையை உண்டாக்குவது எத்தனை ஆழுமை

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே'' என்ற கடப்பாட்டினோடு மட்டக்களப்பில் வாழ்ந்து இந்நாட்டில் கலை நிலையினையும் பண்பாட்டுப் புகழினையும் உயர்த்திய திருவுடையாளர் ஈழத்திருமணி-பாரதப் பொதுமணி முத்தமிழ் வித்தகர் விபுலானந்தராவர். அவர் பெருமை எமது பிரபஞ்சத்துக்கு வெப்பமும்-ஒளியும் கொடுத்து இங்கு உயிர்வாழ்க்கை நிலைபெறக் காரணமாய் இருக்கும் சூரியனுக்கு ஒப்பானதாகும். அச் சூரியனை வழிபடுவதும், விழாவெடுப்பதும் நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

தமிழுலகு போற்றும் ஈழத்தடிகனாகிய மட்டக்களப்பு காரைதீவில் தோன்றிய மயில்வாகனனார் எனும் நாயம்கொண்ட விபுலானந்தர் தமிழ்த் தொண்டாக, தாய்மொழித் தொண்டாக இருந்தால் ''என் இன்பம் இரட்டிப்பாகும்'' என்று தொடர்ந்து தமிழ்ப்பற்றையும் புலமைப்படுத்திய பேரறிஞர். எல்லாரும் இன்புற்றிருக்குமாறு தொண்டு செய்வதில் கிடைக்கும் இன்பம் வேண்டும் என்ற வரம் பெற்ற பத்தராவர்.

''கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. தமிழர் பழங்காலத்துச் சிறப்பினை மாத்திரம் பறையறைந்துகொண்டிருப்பாரெனின் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் இழந்த நீர்மைபாராதல் கூடும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விஞ்ஞான நூல் விருத்தியடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச் செல்வத்தை தமிழ் மொழி பெறுவதற்கு ஆவன செய்தல் சிறந்த தமிழ்த்தொண்டாகும். மூட நம்பிக்கையோடு கூடிய பௌராணிக மனப்பான்மையெனினும் இருள் அகல வேண்டும். அறிவுக் கதிரோனுடைய இளவெயிலானது நம்முள்ளத்துக்கு உவகையையும் உலகத்துக்கு புதிய வல்லமையையும் தரல் வேண்டும். புத்தம் புதிய நூல்கள் பலவற்றைப் புனைந்து தமிழன்னையின் திருவடிகளிலே காணிக்கையாக வைக்கவேண்டும். உறக்கம் நீங்கி விழித்தெழுந்த தமிழராகிய நாம் ஓய்வின்றி உழைத்து உலகனைத்திலும் நம்மொழியை, நம் செல்வத்தைப் பரப்புதற்கும் முயல்வோமாக சாதிமதபேதமின்றியும் அரசியற் கட்சிப் பிரிவினையின்றியும் செய்தற்குரிய தொண்டு தமிழ்த்தொண்டு''

இவ்வாறு தமிழகமெங்கும் ஈழத்தின் பிரதிநிதியாகவே தமது காலமுற்றும் கருதி போற்றப் பெற்றவரான விபுலானந்த அடிகள் முழக்கம் செய்தார்.

இவர் முத்தமிழில் இயற்றமிழானது, உண்மைகளையும், இசைத்தமிழானது அழகினையும், நாடகத் தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டுவன என்றும், பேருண்மையும் பேரழகும் வரம்பு கடந்த செம்மையும் பேரழகும் இறைவனுக்குரிய குணங்களாக சமயநூல்களால் கூறப்பட்டன வாதலால் இவை தம்மை வெளியிட்டுரைக்கும் ஆற்றலுடைமையினாலேதான் மொழிகள் தெய்வத்தன்மையுடையனவாகக் கருதப்பட்டன என்றும் எடுத்துரைத்தார்.

நாட்டுக்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் தொண்டாற்றவேண்டும் என்றும் நூல்களால் கல்வி பெறுவதைத் தொண்டுகளால் பெறும் கல்வி பூர்த்தி செய்யும் என்றும் கூறிய இவர் சேரித் தொண்டுகளில் ஈடுபட்டு மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியானார். அடிகளின் பெரும் புலமைக்கு ''மதங்க சூளாமணி'' என்ற நாடகத்தமிழ் நூலும், அன்னாரது மொழிபெயர்ப்பு ஆற்றலுக்கு பிளேட்டோ என்ற கிரேக்கப்பேரறிஞர் எழுதிய ஒரு நூலை ''பாவலர் விருந்து'' என்ற தலைப்பில் தமிழில் மொழி பெயர்த்ததும் ஒரு சான்றாகும். இவர் பல்துறைகளில் ஆற்றிய பணிகளால் அறியாமையை விலக்கி அறிவைப் பரப்பினார்.

ஈடினையற்ற தமிழறிஞராய் வாழ்ந்து மறைந்த ஈழமணி, நமது விபுலானந்தரென்னும் முத்தமிழ் மணி. தமிழன்னைக்கு அழியாத சிறந்த தொண்டு புலமையாலே தமிழைப் புதுமுறையில் வளம்படுத்திய மேதை நுண்மான். நுழைபுலனாற் பல்லாயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடந்த பழந்தமிழிசைப் பரப்பினை எல்லை கண்டு ''யாழ் நூல்'' யாத்த புலமையாளர். ஆழி தமிழ்க் கடலிலே வாழ்வெல்லாம் நீந்தி யாழ்நூலினைக்கொண்டு வந்த அடிகளாரது பேரறிவு தமிழினத்தின் நுண்ணறிவினை மதிப்பிடுதற்கோர் பேரெல்லைக் கல்லுப் போன்றதாயிற்று. இசைத் தமிழ், விஞ்ஞானம், இயற்றமிழ், கணிதம், ஆகிய அறிவுத்துறைகளெல்லாம் கலந்து குழைந்து எடுத்த தமிழமுதம் அந்த யாழ்நூல்.

மட்டக்களப்பு காரைதீவில் சாமித்தம்பியாருக்கும், கண்ணம்மையாருக்கும் 27.3.1892ல் பிறந்த விபுலானந்த அடிகளார் 19.7.1947ல் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

தமிழ் மொழியை மரபு தவறாது ஆய்ந்து கற்றோரும் மற்றோரும் அவ்வாறு கற்றுத்தேறியவரை வழிபடுவோருமாகிய இரு சாராரும் உண்மைத்தமிழ்த் தொண்டிற்கு உரிமையராவர்.

அடிகளாரைத் தோற்றுவித்தது மட்டக்களப்பு காரைதீவு, பேறிஞராக்கியது பாரதநாடு, அன்னாரது சேவையைப் பெற்றுப் பயன் அடைந்தது தமிழ்கூறும் நல்லுலகம் என்றால் மிகையாகாது. அவர் நாமம் இன்றும் பெயர் கொண்டு நிலைத்திருக்க மட்டக்களப்பு-கல்லடியில் அமைந்துள்ள விபுலானந்த நடனக் கல்லூரி மிளிர்ந்திருப்பதும் கண்கூடு.

தீண்டாமை இந்துசமயத்தை அரித்துவிடும் ஒரு கொடிய நோய் என்று கூறிய அடிகளாரின் வாழ்வும், தொண்டுகளும் 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்ற கருத்தையொட்டி படர்ந்து நிற்கின்றன என்றால் அதில் சந்தேகமேயில்லை.



# "வேதகாலம் முதல் வரலாற்றுக் காலம் வரை வாழ்ந்த அகத்தியர்கள்"

நா. நவநாயகமூர்த்தி

அகத்தியர் என்றதும், நமது நினைவில் வருப வர் தமிழ்முனி என்று, தமிழிலக்கியங்களால் புகழ்ந்து ரைக்கப்படும், மாமுனிவரேயாவர். இவரைத்தவிர, புராணங்கள், இதிகாசங்கள், வரலாற்று நூல்கள், என்பன வற்றிலும், அகத்தியர் என்ற பெயரை, நாம் காணக்கூடியதாகவுள்ளது. காலவரையறை கொண்டு நோக்குமிடத்து, அகத்தியர் என்ற பெயரில், பல்வேறு காலங்களில், பலர் வாழ்ந்திருந்து, சாதனைகள் பல புரிந்துள்ளமை தெளிவாகின்றது இவர்களைத்தவிர, அகத்தியர் குடும்பத்தில் பிறந்தவர்களும், அகத்தியர் எனப்பட்டனர். இவர்களது சமயப்பணிகள் தமிழகத் தில் மட்டுமன்றி, இந்துமதம் பரவியிருந்த கடல் கடந்த நாடுகளிலும், பரவியிருந்ததை வரலாறுகள், தொல்லி யல் சான்றுகள் என்பனவற்றின் வாயிலாக அறிய முடிகின்றது.

அகத்தியர் வரலாற்றினை நோக்குமிடத்து இது மிகவும் குழப்பமானதாக உள்ளது. இருப்பினும், இதனை, ஓரளவு தெளிவுபடுத்துவது அவசியமாகும், காலவரையறை கொண்டு நோக்குமிடத்து, முதலில் வாழ்ந்தவர், புராண காலத்தில், வாழ்ந்து, ஆரியரின் வேதபாடங்களைச் செய்த மாமுனிவரான அகத்தியரே யாவார். இவர் பிரமன் செய்த யாகத்தில் தோன்றிய தாகக் கூறப்படுகின்றது. இவரைக் கும்பசம்பவர் என அழைக்கின்றனர். இவர் உருவத்தில் குள்ளமானவ ராதலால், குறுமுனி என்றும் குறிப்பிடப்படுகின்றார். இவரைப்பற்றியகதைகள் நிறைய உண்டெனலாம்.

கந்தப்புராணம் திருவிளையாடற் புராணம் என்பனவற்றில் இவரைப் பற்றிய வரலாறுகளைக் காணக்கூடியதாகவுள்ளன. குறிப்பாக, கந்தப்புராணத் தின் அசுரகாண்டத்தில் உண்டு. விந்தியனின் செருக்கை

அடக்கியவரும் இவரேயாவர். இவர் பேசிய மொழி சமஸ்கிருதம் ஆகும். காசி அரசனின் புத்திரியாகிய உலோபாமுத்திரை என்பவளை, மணம் புரிந்த இவர், வட இந்தியா தொடங்கி இலங்கை வரையும்,யாத்திரை செய்து பலசிவதலங்களையும், தரிசித்துள்ளார். இவர், கோணேசப்பெருமானையும், தரிசித்ததாய், கோணாசலப் புராணம் உரைக்கின்றது.

ஆரியரான இம்முனிவர், காசியில், சிவபெருமானை நீண்டகாலம் வரை பூஜித்து வந்தார். இதனை அங்குள்ள '**அகஸ்தீஸ்வரலிங்கம்**' உறுதிசெய்கின்றது இவர் பாரதகாலம் வரையும் வாழ்ந்துள்ளார். கந்தப்புராணம், இராமாயணம், பாரதம், ஆகிய நிகழ்ச்சிகள், தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்களாகும் இதனை பல சான்றுகளுடன் 'ஹோம் சந்திரராவ் சௌத்திரி திரு.ந.சி.கந்தையா பிள்ளை போன்றோர், உறுதி செய்கின்றனர். ஆதலால், இவர், பாரதகாலம் வரையும் வாழ்ந்துள்ளார் என்று கொள்ளுவதில் தவறில்லை.

இராமாயண காலத்தில் வாழ்ந்த பரத்துவாஜரின் மகனே, துரோணராவார். இவ்வாறு இராமனிடம் போரிட வந்த, பரசுராமர், பாரதகாலத்திலும் வாழ்ந்துள்ளார் இவரிடமே, துரோணர் படைப்பயிற்சி பெற்றார். இராமாயண காலத்தில் வாழ்ந்த ஆஞ்சநேயர், வயதான காலத்தில், கதலிவனத்தில் வீமனைச்சந்தித்ததாகப் பாரதம் கூறுகின்றது. இதேபோன்று, புராணகாலத்தில் வாழ்ந்த அகத்திய முனிவரே, பாரதகாலம் வரையும் வாழ்ந்துள்ளார். என்பது தெளிவாகின்றது. பாரத நிகழ்ச்சி நடைபெற்ற காலம், கி.மு 13ம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். இதனை ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

புராண காலத்தில் அகத்தியரது ஆச்சிரமம் ஒன்று, குடகுமலைப் பகுதியில் இருந்துள்ளது. இங்கு அகத்தியர் இருந்த வேளையிலேயே, சூரனின் தங்கை அஜமுகிக்கும், குந்திதேவி, தன் கன்னிப்பருவத்திலே, பணிவிடை புரிந்த துர்வாசருக்கும் பிறந்த, வில்லவன், வாதாபி, என்ற இருவரையும் கொன்றார். இதனைக் கந்தப் புராணமும், கல் வெட்டுக்களும் கூறுகின்றன. (ஆரிய திராவிடரும் அழிந்துபோன சங்கங்களும், ஆய்வுநூல்துரை ஜெகநாதன்)

வால்மீகி இராமாயணத்தில், ஆரண்யகாண்டத்தில், பஞ்சவடிக்கு இரண்டு யோசனையிலும், கிஷ்கிந்தா காண்டத்தில், அயோமுகத்தின் சிகரத்திலும், (குடகுமலைச்சிகரம்) அகத்தியரது ஆச்சிரமங்கள் இருந்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளது (பாவலர் சரித்திர தீபகம்,பக்,8,9 பதிப்பாசிரியர், கலாநிதி பூலோக சிங்கம் 1975) இராமாயணகாலத்தில் வாழ்ந்த இவரையே இராமரும், சீதையும், இலக்குமணரும் தரிசித்தனர்; இவ்வேளையிலேயே, இவர் தான் வைத்திருந்த விட்டுணுவில்லை இராமருக்குக் கொடுத்ததாக, வால்மீகி இராமாயணம் கூறுகின்றது.

இவரே, வடநாட்டிலிருந்து, தமிழ் நாட்டுக்கு, ஒரு அந்தணர் கூட்டத்துடன் வந்தாரென்றும், பின்னர், பொதியமலையில் தங்கியிருந்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு, உதவினாரென்றும், அவரால், அகத்தியம் என்னும், இலக்கணநூல் உருவாக்கப்பட்டதாகவும், பழங்கதையொன்று கூறுகின்றது. மேலும், இவரால் இயற்றப்பட்ட, அகத்தியம், மூன்று சங்கத்திலும், இலக்கண நூலாக, இருந்ததென்றும், தொல்காப்பியத்துக்கு, இந்நூலே, முதன் நூலாக இருந்ததென்றும், கூறப்படுகின்றது ஆனால், இவைகள் யாவும், கட்டுக் கதைகள் என்றே கொள்ளலாம், காரணம் இவற்றிற்கு ஆதாரங்கள், இல்லை,

எல்லாவற்றிற்கும் மேலாக, சங்கநூல்களிலும் இவ்வரலாறுகள் பற்றிய குறிப்புக்கள் இல்லை. இவை ஆரியரால் புனையப்பட்ட கட்டுக்கதைகளாக விருக்கலாம். இவ்வாறான கதைகள் எழுதுவதற்கு அடிப்படையாக விருந்த வரலாற்று நிகழ்ச்சிகள், தென்னகத்தில் ஆரியப் பண்பாடும், நாகரீகமும் பரவுவதற்காகிய, பேரியக்கத்திலிருந்து எழுந்தவையாகும். என்பது சிலரது கருத்தாகும். சங்க மருவியகால இலக்கியங்களிலொன்றான, மணிமேகலையில், சில இடங்களில், அகத்தியர் பற்றிய குறிப்புக்கள் இடம் பெறுகின்றன. இவைமுறையே,காவிரிநதி தோன்றிய வரலாறு, காந்தமன் என்னும் மன்னன் பரசுராமனின் மழுவுக்குப்பயந்து அகத்தியர் மொழி கேட்டது, என்பனவாகும்.

ஆனால், அத்தியருக்கும் தமிழுக்கும், யாதும் தொடர்புகள் இருப்பதாய் இந்நூலில் குறிப்பிடப்படவில்லை. சிலப்பதிகாரத்தில், அகத்தியரைப் பற்றிய குறிப்புக்கள் இடம் பெறவில்லை. இதேபோன்று, பொதியமலை பற்றிய குறிப்புக்கள் இடம் பெறும், குறுந்தொகை (83,376) அகநானூறு (25,138,322) புறநானூறு (24,128) என்பனவற்றிலும், அகத்தியர் பற்றிய செய்திகள் இல்லையெனலாம். ஆதலால், புராண, இதிகாச காலத்தில் வாழ்ந்த அகத்தியர் வேறு, பிற்கால அகத்தியர் வேறு என்பதில் ஐயமில்லை. இன்று நாம் காணக்கிடைக்கும், தமிழ் முதன் நூலான, தொல்காப்பியம், தொல்காப்பியரால் உருவாக்கப்பட்டது. இவர், அகத்தியரின் மாணாக்கர் என்ற பழங்கதையும் வழங்குகின்றது.

ஆனால், தொல்காப்பியத்துக்குச் சிறப்புப்பாயிரம் எழுதிய, 'பனம்பாரனார்' அதனைப் பற்றிச்சிறிதும் குறிப்பிடவில்லை. ஆனால், பிற்காலப் புறப்பொருள் 'வெண்பாப்பாயிரமும்' பன்னிருபடலப் பாயிரமும் அவ்வரலாற்றைக் கூறுகின்றன. ஆனால், தொல்காப்பியப்பாயிரம், அதனைக் கூறவில்லை. இதற்கான

காரணம் புனம்பாரனார், பாயிரம் செய்கின்ற காலத்தில், அகத்தியர், தொல்காப்பியரின் ஆரியர் என்னும் வரலாறு, தோன்றவில்லை யெனலாம். (தமிழ் பழமையும் புதுமையும்,பக்,43,44, திரு.ந.சி. கந்தையாபிள்ளை) ஆசிரியர் வட நாட்டினின்றும், வந்தார் என்ற புராணக்கதை காரணமாக, அவரை, ஆரியர் எனக் கொண்டு, அவ்வாரியரே, (அகத்தியர்) தமிழுக்கு இலக்கணம் செய்தார். என்ற கதை தோன்றியிருக்க வேண்டும் என்றுகொள்வதில் தவறில்லை.

தொல்காப்பியரின், வரலாறு பற்றி ஆராயுமிடத்து, இவர், (கிமு.205-161) சுமார், இரண்டாயிரத்தி நூற்றிஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழராவர். இவரது இயற் பெயர், 'திரண தூமாக்கினி' என்பதாகும். இவர், அகத்தியரின் மாணாக்கரும் அல்ல, காவியகுலத்துப் பார்ப்பானரும் அல்ல, என்பதை அறிய முடிகின்றது. தொல்காப்பியர், அகத்தியரின் மாணாக்கர், என்பது வெறுங்கட்டுக்கதையாகும். இவ்வாறு திரு. சுப, நாராயணன் (ஆரியப்புல்லுருவி .பக்,5,6) அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மொழியில் காணப்படும், பழைய நீதிநூல், திருக்குறளாகும். இந்நூல்போன்று, முப்பாலாக, நூல் செய்யும், வழக்கம் உண்டு என்பதை, தொல்காப்பியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. ஆயினும், திருக்குறளுக்கு முற்பட்ட பழைய நீதி நூல்கள் தமிழில் இல்லையெனலாம். இந்நூலை, தொல்காப்பியத்துக்குப் பிற்பட்ட காலத்தில், திருவள்ளுவர், கடைச்சங்கத்தில் அரங்கேற்றினார். திருவள்ளுவர், தான் இயற்றிய திருக்குறளை, பொதியமலை சென்று, அங்கு வாழ்ந்து வந்த தமிழ் முனிவரான அகத்தியரிடம் காண்பித்ததாகவும், அவர் அந்நூலைப் பாராட்டியதாகவும் திருவள்ளுவர் சரித்திரம் கூறுகின்றது. திருவள்ளுவர், தொல்காப்பியர் காலத்துக்குப்பிற்பட்ட வராவர்.

ஆதலால், வள்ளுவர் காலத்தில், பொதியமலையில் வாழ்ந்த அகத்தியர், ஒரு சிவபக்தராகலாம். இவரையே, தேவாரங்கள், பொதிகை வாசம், அகத்தியருக்கு இறைவனால் அளிக்கப்பட்டதென, குறிப்பிடுகின்றன. சிவபக்தரான, இவரே, பொதிகை மலையில் வாழ்ந்தகாலத்தில், தமிழ் மொழியுடன் சிவ வழிபாட்டினையும், வளர்ச்சி பெறச்செய்தார். இதன் பொருட்டு, அவர் புரிந்த அருந்தொண்டுகள், வேதகால அகத்தியருடன் (குடகுமலையில் வாழ்ந்த) இணைக்கப்பட்டுள்ளன.

பொதிகை மலையில் வாழ்ந்தவரும், தமிழருமான, அகத்தியர், சைவமும், தமிழும் வளரவேண்டி அருந்தொண்டுகள் புரிந்தார். இவர், ஒரு சித்தர் கூட்டத்தை உருவாக்கினார். பல சிவாலயங்களையும் உருவாக்கினார். அத்துடன், அவ்வாலயங்களை நடாத்துவதற்காக, சித்தர்களையே நியமித்தார். இவரால் அமைக்கப்பட்ட ஆச்சிரமம், 'அகத்தியம் பள்ளி' என்று பெயர் பெற்றது. பதினெண் சித்தர்களுள், ஒருவராக வாழ்ந்த, இவரது வழித்தோன்றல்களே, பிற்காலத்தில் இவரது பெயரால் (அகத்தியர்) பல நூல்களை வழங்கியுள்ளனர் இவை, மருத்துவம், இரசவாதம், மந்திரம், யோகம், ஞானம், ஆகிய துறைகளை உள்ளடக்கியவைகளாகும். இவர்களைத்தவிர, 'அகத்தியர்' என்ற கோத்திரத்தினர் பற்றியும் அறியமுடிகின்றது.

இவர்களைப்பற்றிய ஆராயுமிடத்து குறிப்பாக, இவர்கள், கடல் கடந்த நாடுகளில் வாழ்ந்துள்ளனர் என அறியமுடிகின்றது. அகத்தியர் மரபைச்சேர்ந்த இவர்கள், (கோத்திரம்) ஜாவா, இந்தோனிசியா, பாலி, சுமத்திரா போன்ற நாடுகளில் வாழ்ந்துள்ளனர். இவர்களால் பலசிவாலயங்கள் நிறுவப்பட்டன. அரசர்களாகவும், இவர்கள் இருந்துள்ளனர். இதனை, கல் வெட்டுக்கள் மூலமாக அறியமுடிகின்றது. ஜாவாவிலுள்ள கிமு.732ம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு இதனை உறுதிசெய்கின்றது. அத்துடன், மேற்குறிப்பிட்ட கடல்கடந்த நாடுகளில் 'அகத்தியர்' வழிபாடு நிலவியிருந்தமை பற்றியும் அறியமுடிகின்றது.

மேலும், 'தினயர்' என்ற இடத்தில் 'அகத்தியர்சிலை' யொன்று, வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்ததை, கி.பி 760ம் ஆண்டுக் கல்வெட்டொன்று தெளிவுறுத்துகின்றது. இதன் வாயிலாக கி.பி 7ம் நூற்றாண்டுக்கு முன்பே, தென்னிந்தியா விலிருந்து, அகத்தியர் வழிபாடு, ஜாவா, சுமத்திரா, ஆகியநாடுகளுக்குச்சென்றதாக அறியமுடிகின்றது. வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருந்த இந்த அகத்தியர், (உருவங்கள்) புராண, இதிகாச காலத்தில் வாழ்ந்த அகத்தியர் ஆவார். இவரே, நீண்டதாடி, சடைமுடி, பெருத்த வயிறு, குறுகிய வடிவம்,கையில் கமண்டலம், ஜபமாலை, ஆகியவற்றைக்கொண்ட தோற்றத்துடன், விக்கிரகங்களாக, கடல் கடந்த நாடுகளில், (ஜாவா, சுமத்திரா) வணங்கப்பட்டு வருகின்றார். இவ்வாறான, சிலைகளை, ஆந்திரம், தஞ்சை, ஆகிய இடங்களில் காணமுடிகின்றது. இவைபண்டைக் காலத்தவைகளாகும்.

சின்னமனூர் பட்டயத்தில், பாண்டியர் காலத்தில் வாழ்ந்த 'அகத்தியர்' பற்றி அறிய முடிகின்றது இவர், குலகுருவாக விளங்கினார் சடையவர். மன் முதலாம் சுந்தரபாண்டியன் (1251-1268) இவரது சீடன் எனவும், இப்பட்டயம் கூறுகின்றது. இந்த அகத்தியரது காலம், கி.பி 13ம் நூற்றாண்டாகும். (தென்னிந்திய வரலாறு, பக்,152 டாக்டர். அ. கிருஸ்ணசாமி, பதி, 1977) முதலாம் சுந்தரபாண்டியனது காலத்தில், இலங்கை மன்னன், இவனது பேரரசிற்கு வணங்கித்திறையளித்தான் என்பதும் வரலாற்றுண்மையாகும்.



# 'திவ்வியப் பிரபந்தங்களில் தமிழ்த்தேன்'

சைவப்புலவர், ஞானசிரோன்மணி, பண்டிதர்
**ஆர். வடிவேல்**

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்குங் காணோம்'' என்றார் மகாகவி பாரதியார். இது உபசாரமல்ல. உலகிலுள்ள வேறு மொழிகளை அபசாரப் படுத்தும் கூற்றுமல்ல. மொழியாராய்ச்சி வல்லுனர்கள் ஆராய்ந்தறிந்த முடிவாகும்.

ஆழ்வார்கள் பன்னிருவர் திருமாலின் சிறப்பியல்புகளைக் குறித்துத் திவ்வியப் பிரபந்தங்களைத் தமிழ் மொழியில் அருளிச் செய்தார்கள். இது திருமாலின் உயர்நலங்களில் ஆழ்ந்து, பக்தி வயப்பட்டுள்ளோரால் பைந்தமிழில் பாடப்பட்ட நாலாயிரம் பாடல்களாகும். தெய்வத் தொடர்புடைமையால் திவ்யப் பிரபந்தம் என்று போற்றப்படுகின்றது. திவ்விய - தெய்வத் தொடர்புடைய. பிரபந்தம் - நூல். ''பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் மன்னின்ற நீர்மை இனியாம் உருமை உயிரளிக்கவல்லது'' ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தத்தேன் திருவாசகம் என்னும் தேன்போலத் தித்திப்பது.

சமண, பௌத்த எழுச்சியின் தாக்கத்தால் சைவ, வைஷ்ணவர்களின் வைதீக ஒழுக்கங்கள் நலிவடையத் தொடங்கின. இதனால் மக்களின் பண்பாடு, கலாசாரங்களை சீர்செய்து நெறிப்படுத்தும் ஆன்மீக ஆக்கப் பணிகளை ஆழ்வார்களும், சைவசமய குரவர்களும் ஆரம்பித்தார்கள். ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை ஆழ்வார்கள் வைஷ்ணவ சம்பிரதாய நெறிகளை வளப்படுத்தத் தொடங்கியதாகக் கூறியுள்ளார்கள்.

ஆழ்வார்களின் வைஷ்ணவ இயக்கம் ஆதியில் காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் தோன்றித் தென்பாண்டி நாடுவரை பரவியது. பின்பு வட நாட்டிலும் செறிந்தது. மக்களின் கலை, காலாசாரம், பண்பாடுகளின் காவலர்களாகிய ஆழ்வார்களின் பக்திச்சுவை சொட்டும் பாசுரங்கள் ஆத்ம தாபத்தையும், தாகத்தையும் போக்கி, தமிழ்மொழியின் சிறப்பையும் விளக்குவதோடு இறை நிலை, உயிர் நிலை, இறைவனை அடையும் நெறி என்பனவற்றையும் உணர்த்துவன.

**இறை நிலை:-**

திருமாலாகிய எம்பெருமானுடைய இறைநிலையைப் பத்து அவதாரங்களில் காண்கிறார் பெரியாழ்வார். உயிர்களின் பரிணாம வளர்ச்சியில் உயிர்கள் மாறிமாறிப் பல பிறவிகளிலும் பிறந்து உழல்வதன் காரணம் அவைகள் செய்யும் வினைகளும் வினைப் பயன்களுமாகும். திருமாலும் பத்து அவதாரங்களில் பிறக்கின்றார். நாம் பிறப்பது நமது அஞ்ஞானத்தினால். திருமால் பிறப்பது ஞானத்தினால். நம்மை ஆட்கொண்டு காப்பதற்காக *திருபாவசத்தினால்* அவதரிக்கின்றார் என்பதைப் பெரியாழ்வார் தமது பாசுரத்தில் கூறுகிறார்.

''தேவுடைய மீனமாய் யாமையாய் ஏனமா யாயாய்க் குறளாய்
மூவுருவி லிராமனாய்க் கண்ணனாய் கல்கியாய் முடிப்பான் கோயில்
சேவலொடு பெடையன்னம் செங்கமல மலரேறியூசலாடி
பூவனைமேல் துரைந்தெழு செம்பொடி யாடி விளையாடும் புனல் அரங்கமே''

இப்பாசுரத்தில் பெரியாழ்வார் செந்தமிழ்ப் பதங்களைச் செட்டாகப் பிரயோகிக்கிறார். மீனம், யாமை, ஏனம், ஆய் என்பன முறையே மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் என்னும் அவதாரங்களையும், குறள் என்பது வாமனாவ தாரத்தையும்; மூவுருவிலிராமன் என்பது பரசுராமன், தசரதராமன், பலராமன் என்னும் அவதாரங்களையும், கண்ணனாய், கல்கியாய் என்பது கிஷ்ணாவதாரம், கல்கியவதாரங்களையும் புலப்படுத்துகின்றன. திருமால் இதுவரை எடுத்துள்ள அவதாரங்கள் ஒன்பது. பத்தாவது அவதாரமாகிய கல்கியவதாரம் கலியுகமுடிவில் நிகழவிருப்பதாக நூல்கள் கூறுகின்றன.

ஸ்ரீரங்கத்தில் அனந்த சயனத்தின் மேல் அறிதுயில் கொள்ளும் அரங்கநாதன் மீது பக்திவயப்பட்டு நிற்கின்றார் பெரியாழ்வார். ஜீவப் பிரம்ம ஐக்கிய தத்துவத்தின் உணர்வு அவருடைய உள்ளத்தில் கசிகின்றது. புலம் மிக்கவரின் புலமை பாசுரத்தில் தமிழ்த்தேனாகச் சொரிகின்றது ''சேவலொடு......... புனல் அரங்கமே'' என்னும் உதாரணத்தால் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய தத்துவத்தை உணர்த்துகிறார். சேவல்-பரமாத்மா; பெடையன்னம் - ஜீவாத்மா. செங்கமலம் - ஸ்ரீரங்கம், செம்பொடி - அரங்கனின் திருவருள்; ஊசலாடல் - பேரானந்தக் களிப்பு

அரங்கநாதனுடன் கூடிக் கலந்த குதூகலத்தில் ஆடிக்களிக்கும் பெரியாழ்வாருக்குத் திருமாலின் அவதார நினைவுகள் வருகின்றன. ஒன்பது அவதாரங்களின் நடுநாயகமாக வாமனாவதாரத்தை வைத்துப் பாடுவதிலும் ஒரு தத்துவத்தை உணர்த்துகின்றார். உலகில் அசித்து எனப்படும் உயிரற்ற பொருட்களுக்கும் சித்து எனப்படும் உயிருள்ள பொருட்களுக்கும் தானே அதிகாரி என்ற அகங்காரமுடையவனாய் ஆட்சிபுரிகின்றான் மாபலி. சித்துப்பொருளைப் பற்றிய சிந்தனைத் தெளிவில்லாத மாபலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடிமண்தரும்படி யாசித்து நிற்கின்றார் திருமால். குறள் வடிவாய் வந்த வாமனனுக்கு மூன்றடிமண் வழங்கி விட்டான் மாபலி. ஈரடியால் மூவுலகையும் அளந்த திருமால் மூன்றாவது அடியை மாபலியின் தலைமீது வைத்து சித்துப்பொருளின் வியாபகத்தை உணர்த்தி ஆட்கொண்ட கதை யாவருமறிந்ததே.

''மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகை முடித்துத்
தாவிய சேவடிசேப்பத் தம்பியொடும் கான்போந்த
சேவகன் சீர்கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே''

என்று சித்துருவான திருமாலின் பெருமையைச் சிலப்பதிகாரத்தில் இளங் கோவடிகளும் கூறுகின்றார்.

**உயிர் நிலை:**

நம்மாழ்வாரினால் அருளிச் செய்யப்பெற்ற பிரபந்தங்களில் ஒன்று திருவாய்மொழி. தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு வேதாந்த விழுப்பொருளாகிய விழுமியங்களையெல்லாம் குன்றிலிட்ட விளக்குப்போன்று எல்லாரும் அறியக் கூறுவது திருவாய்மொழி. ''பயிலும் சுடரொளி'' முதலிய நான்கு திருப்பதிகங்களில் உயிரின் நிலையினை உணர்த்துகின்றார் நம்மாழ்வார்.

''பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனை
பயிலவினிய நம் பாற்கடல் சேர்ந்த பரமனை
பயிலும் திருவுடையார் யாவரேனும் அவர்கண்டீர்
பயிலும் பிறப்பிடைதோறும் எம்மையாளும் பரமரே''

ஆன்மாவானது பலபல பிறவிகளில் பயின்று ஆன்மயாத்திரையைச் செய்துகொண்டிருக்கின்றது. எந்தப் பிறவியை எடுத்தாலும் பரம்பொருளாகிய திருமால் பிறவிதோறும் எம்மை ஆட்கொள்ளுகின்றார். பாற்கடலில்

பள்ளிகொள்ளும் பரந்தாமனைச் சரணமடைகின்றவர்கள் திருவுடையராகின்றனர். சுடரொளி மூர்த்தியாம் பங்கயக் கண்ணனே ஆன்மாக்களின் உறைவிடமாகின்றார் என்பதை உணர்த்துகின்றார் நம்மாழ்வார்.

ஊனில் வாழும் உயிர்கள் பற்றுக்களால் எற்றுண்டு மாயப் பிறவிகளை மீண்டும் மீண்டும் எடுத்து உழல்வதை உணர்ந்த நம்மாழ்வார் பிறப்பிறப்பற்ற பெருநிலையைத் தனது அனுபவத்தில் வைத்து உரைக்கின்றார்.

''ஊனில் வாழ் உயிரே நல்லைபோ உன்னைப் பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன னெம்மான்
தானும் யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுதுமொத்தே''

என்பது நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாசுரம்.

**இறைவனை அடையும் நெறி:-**

இறைவனை அடைவதற்குச் சிறந்த நெறி பக்திமார்க்கம். ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாவதற்குப் பக்திமார்க்கம் உகந்த உயர் நெறி. அது தமிழர் பண்பாட்டுச் சென்னெறி. ஆழ்வார்கள் எல்லாரும் பல்வேறு பக்திமார்க்கச் சாதனைகளால் முத்தியடைந்துள்ளார்கள்.

ஸ்ரீ நாராயணனுடைய லீலைகளிலும், திருவருட் குணங்களிலும் ஈடுபட்ட ஆழ்வார்கள் தங்களுடைய அனுபவங்களைத் திவ்வியப் பிரபந்தங்களில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். தாஸ்யம், வாத்சல்யம், மதுரம் என்னும் மூன்று பாவனைகளையும் சிறப்பாக அவர்களுடைய பிரபந்தங்களில் காணலாம். இவற்றை முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம் எனக் கொள்ளலாம்.

**தாஸ்யபக்தி :- (தாசமார்க்கம்)**

தொண்டர்க்குத் தொண்டனாய் வாழ்ந்தவர் தொண்டரடிப் பொடியாழ்வார். பரந்தாமனின் அடியவர்களுக்கும் அடியவனாய் வாழ்ந்தவர். அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன் என்று சுந்தர மூர்த்தி நாயனார் வாழ்ந்தது போல எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

ஸ்ரீரங்க நாதனுக்கு மீளா அடிமையாய் வாழ்ந்த தொண்டரடிப் பொடியாழ் வார் அரங்கனின் திருமேனி அழகையும், பவளவண்ண வாயினையும், செங்கமலம் போன்ற கண்களையும் கண்டு அனுபவித்த தெய்வீக இன்பத்தை இந்திரபோகத்திலும் மேலானதாகக் கருதி திருமாலுக்குத் தமிழ்மாலையாகத் ''திருமாலை'' சாத்துகின்றார்.

''பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போம் இந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே''

இச்சுவை என்பது அரங்கனின் அருட்பேற்றினையும், அச்சுவை என்பது இந்திர போகத்தையும் உணர்த்துவன.

திரு வேங்கடநாதன் மீது நீங்காத பக்தியுடைய குலசேகராழ்வார் திருமாலின் அடியார்களையும், அவர்களின் கொடிய வல்வினைகளைத் தீர்க்கும் வேங்கடவனின் அருட்செயலையும் நினைத்துத் தன்னை அடியார்க்கும் அடியனாக்கித் தமிழ் மணங்கமழும் பாசுரத்தை விண்ணப்பம் செய்கிறார்.

''செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே''

மனித வாழ்க்கையில் தொடர்ச்சியாகவரும் கொடிய தீவினைகளைச் செடியாய வல்வினை என்கிறார். படியாய்க் கிடப்பது அடியார்களுக்குச் செய்யும் பாதசேவை.

**வாத்சல்யபக்தி:- (சற்புத்திரமார்க்கம்)**

பெரியாழ்வார் தம்மை யசோதையாகவும் பகவானைக் கண்ணனாகவும் பாவனை செய்து பாசுரத்தைப் பாடியுள்ளார். இது வாத்சல்ய பக்தி.

''சிறுவிரல் தடவிப் பரிமாறச் செங்கண்
கோடல் செய்ய வாய் கொப்பளிப்பக்
குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந் திறங்கிச் செவியாட்டகில்லவே''

பக்திவயப்பட்ட பெரியாழ்வார் பரந்தமனைக் குழந்தையாகப் பாவனை செய்கிறார். குழல் ஊதுவதற்குத் துணைக் காரணமாயிருப்பன கைவிரல்களும், வாயும். குழலில் எழும் நாதத்தை நயப்பது புருவமும் கண்களும். கோபாலனின் விரல்கள் குழலில் எழும் நாத பேதங்களைத் தொனிக்கச் செய்வதற்காக நிகழும் செயலை 'பரிமாற' என்னும் பதத்தால் விளக்குகின்றார். கோடல்-செங்காந்தள். கண்ணனின் சிவந்த கண்களையும் வாயையும் செங்காந் தளுக்கு ஒப்பிடுகிறார், காந்தளில் செவ்வண்ணமும், நறுமணமும் வெளிப்படுவது போல கண்ணனின் கண்களில் இசை ஞானமும், வாயில் நாதசாதனையும் பொங்கி எழுவதைக் 'கொப்பளிப்ப', என்னும் பதத்தால் புலப்படுத்துகிறார் பெரியாழ்வார்.

குழலோசையில் லயித்த பெரியாழ்வார் தமது மெய்ப்பாடுகளைப் பறவை, கறவைகளின் மேலேற்றிக் கூறும் பாங்கு தமிழ்மொழிக்கே தனித்துவமான சிறப்பாகும். பறவைக் கணங்கள் அமைதியாகத் தங்குமிடம் கூடுகள். அச்சத்தால் அமைதி குலைவதுண்டு. பெரியாழ்வார் காட்டும் பறவைகளுக்கு ஆனந்தத்தால் அமைதி கலைகின்றது. படுகாடு என்பது சுடுகாடு. புலன்கள் ஒடுங்கி உயிரற்ற பிணங்கள் போல மெய்மறந்து பறவைகள் பேரானந்தத்தில் மூழ்கிக்கிடப்பதை படுகாடு கிடப்பதாகக் கூறுகிறார்.

கறவைக் கணங்கள் என்பது பசுக்கூட்டங்கள். அவைகள் தூங்கும் போது கால்களை மடக்கிப் படுத்திருத்தாலும் செவிகளை இடையிடையே ஆட்டிக்கொண்டிருக்கும். கண்ணனின் குழலோசையைச் செவிமடுத்த கறவைக் கணங்கள் கால்களை ஒழுங்கறப் பரப்பிவிட்டன. தலை கவிழ்ந்து கொண்டது. செவிகளையும் ஆட்டவில்லை. மரணித்த கறவைகள்தான் இப்படிக் கிடக்கும். நாத மயக்கத்தில் மெய்மறந்து கிடக்கும் பேரானந்தக் காட்சியை இவ்வாறு காட்டுகிறார் பெரியாழ்வார்.

கண்ணனைக் குழந்தையாகக் காணும் வாத்சல்ய பாவத்தில் ஜீவப் பிரம்ம ஐக்கிய தத்துவத்தை உட்பொருளாக வைத்துப் பிரபந்தத்தைப் பாடியருளினார். இவருடைய பாசுரங்களில் தமிழ் மொழியின் சிறப்பும் வளமும், இனிமையும் தொனிக்கின்றது.

**மதுரபக்தி:- (சகமார்க்கம்)**

இதனைப் பிரேமபக்தி என்றும் கூறுவர். பெரியாழ்வாருக்கு மகளாய் அவதரித்த கோதையார் பாடியருளிய பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன. சிறுபிராயந் தொடங்கி அவர் திருமாலிடத்தில் மிக்க அன்புடையவராய் தமது தந்தையார் செய்துவந்த பூமாலைத் தொண்டினைத் தாமும் செய்துவந்தார். கோதையார் வளர வளரக் கண்ணனிடத்தில் கொண்ட அன்பு காதலாக வளர்ந்தது. தான் சூடிக் கொடுத்த மாலையைக் கண்ணன் பிரேமையோடு அணிந்து மகிழ்ந்தான். இதனால் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்னும் நாமமும் கோதையாருக்கு வழங்கி வருகின்றது.

ஜீவாத்மாவை ஆட்கொள்ளும் பரமாத்மனை ஆண்டான் என்பது புராண மரபு. பரமாத்மனை ஜீவாத்மா ஆட்கொண்ட வரலாறு திவ்யப் பிரபந்தத்தில்தான் உண்டு. கோதையார் கண்ணனை ஆட்கொண்டதால் ஆண்டாள் என்ற பெயர் பெற்றாள்.

ஆண்டாள் கண்ணனிடத்தில் கொண்ட காதல் முதிரமுதிர அவரையே தமது நாயகனாக்கிக் கொண்ட வரலாற்றை நாச்சியார் திருமொழி கூறுகின்றது.

''வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் கட்டக் கனாக்கண்டேன் தோழி''

ஆயிரம் யானைகள் புடைசூழ நாரணன் திருவுலா வருகின்றான் என்று அவனை வரவேற்கப் பூரண பொற்குடம் வைக்கவும், எங்கும் தோரணங்கட்டி அலங்கரிக்கவும் கனவு கண்டேன் என்றும்,

''மதுசூதனன் வந்து என்னைக் கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன் தோழி''

''திருக்கையால் தாள்பற்றி அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன் தோழி''

''குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் அட்டித்து
மஞ்சனம் ஆட்டக் கனாக்கண்டேன் தோழி''

என்றும் தமது மதுர பக்தியை நாச்சியார் திருமொழியில் கூறுகிறார். அவர் பாடியருளிய திருப்பாவை மக்களின் பண்பாட்டையும், கலாசாரத்தையும், தமிழ்மொழியின் சிறப்பையும் கட்டியங்கூறுகின்றன.

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெரும் செங்நெலூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து ஏலோர் எம்பாவாய்''

ஓங்கி உலகளந்த உத்தமன் ஸ்ரீ நாராயணன். நாராயணனுடைய அவதாரங்களில் நடுநாயகமாகிய வாமனாவதாரத்தையும் தெய்வத்தொடர்புடைய வாழ்க்கையின் அவசியத்தையும் உணர்த்த ஆண்டாள் திருப்பாவையில் அறிமுகம் செய்கிறார். மார்கழித் திங்கள் மதிநிறை நன்னாளில் பாவைநோன்புக்காக நீராடிக் கண்ணனை வழிபடுவது தமிழர் பண்பாடு.

நோன்பினால் பரநலம் பேணப்பட வேண்டும். தனது தனிவளத்துக்காகவல்ல, மனிதவளம் பேணப்பட வேண்டும். உலக நலனுக்காக நோன்பு அனுட்டிக்கப்பட வேண்டுமென்பது ஆண்டாளின் பெருநோக்கு.

எல்லோரும் வாழவேண்டும். உலகம் இன்புற்றிருக்க வேண்டுமென்று கண்ணனை வழிபட்டால் நாட்டிலே தீமை ஒடுங்கும். நன்மை பெருகும். மாதம் மும்மாரி பொழியும். வயல்களில் செந்நெல் செழித்து வளரும். குன்றாதநீர் வளத்தால் வயல்களில் கயல்கள் புரண்டு விளையாடி மகிழும். மதுவுண்ட மயக்கத்தால் குமுத மலர்களில் வண்டுகள் துயில் கொள்ளும். வரையாது வழங்கும் வள்ளல்களைப் போலப் பசுக்கள் குடங்களில் பாலைப் பொழியும். இயற்கை வளத்தினால் செவ்வம் பெருகுமென்று இறை வழிபாட்டின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார் ஆண்டாள்.

திவ்வியப் பிரபந்தங்கள் செந்தமிழ்த்தேன் நிறைந்த தேன்கூடு. இயற்கை இன்பமும் இறையின்பமும், தமிழின் சுவையின்பமும் நிறைந்த தேன்கூடு. மரபுத் தமிழ்க் கவிதைகளால் அமைந்த தேன்கூடு.

*முதுமைசெறி நிலப்பரப்பின்*
*முடித்தலமாய் இமயமலை முகிழ்ந்த காலை*

*எது ஒலியாய் எழுந்ததுவோ*
*எழுத்துருவாய் மலர்ந்ததுவோ இளமையோடும்*

*அது தமிழாய்ப் பிறந்தவளே*
*அரண்மகளாய் வளர்ந்தவளே கவிதா ஞான*

*மதுக்கலசம் நுகர்வண்டாய்*
*மனுக்குலத்தில் பிறவி பல வாய்த்ததம்மா*

**வ. ஞானமாணிக்கம்**
**- கல்முனை**

# ஆடும் பெருமானின் ஆனந்தத் தாண்டவம்!

அருட்கலை வாரிதி ஸ்தபதி
சு. சண்முகவடிவேல்



சிவ மூர்த்தங்களில் முதன்மையாகத் திகழ்வதும் அழகிலும், தத்துவநோக்கிலும் கலைச்செறிவிலும் மிகச் சிறந்ததாக விளங்குவதும் நடராஜ படிமமாகும்.

வலக் காலை சிறிது மடக்கி முயலகன்மீது ஊன்றி இடக் காலை வலப்பக்கமாக சிறிது தூக்கி குஞ்சிதமாக்கி இடது முன் கரத்தை வலப்பக்கம் நேராக நீட்டி கைத்தலத்தை கீழ் நோக்கி தொங்கவிட்டு, வலது முன் கரத்தில் அபய முத்திரை காட்டி இடது மேற்கரத்தில் அக்கினியும் வலது மேற் கரத்தில் துடியும் (டமருகம்) கொண்டு கொவ்வைச் செல்வாயில் குமிழ் சிரிப்பும் பொங்க மூன்று கண்களுடன் சாந்த சொரூபியாய் விளங்க தலையில் கொக்கின் இறகும் ஊமத்தை கொன்றை எருக்குமலர்கள் அணிந்து கங்கையும், பிறையும்

சிரசில் சூடிக்கொண்டு இடக்காதில் குழையும் வலக்காதில் மகரகுண்டலமும் பூண்டு தீச்சுடர் கொண்ட திருவாசி சூழ்ந்திருக்க அதன் நடுவே நின்றாடும் நடராஜனின் நடனத் திருக்கோலமே ஆனந்த தாண்டவ வடிவமாகும்.

சிவன், கூத்தனாகி தாண்டவமாடும் நடனத்திருக்கோலங்களை நாயன்மார்களும் கவிஞர்களும் அனுபவித்து பாடியிருக்கிறார்கள். சிற்பக் கலைஞர்கள் சிலையாக வடித்து கண்முன்னே காட்டியிருக்கிறார்கள் நாட்டியக் கலைஞர்கள் அபிநயித்து ஆடிக்காட்டி யிருக்கிறார்கள்.

அண்டத்தின் இயக்கமே நடராஜனின் ஆங்கிகா-அபிநயம் என்றும் அண்டம் அமைகின்ற போது எழுகின்ற ஒலி ஆனது ''வாசிகா அபிநயம்'' என்றும் வானமும் விண் மீன்களும் அவனது ''ஆதார்யா அபிநயம்'' என்றும் இவ்வியக்கத்தின் உட்கிடையான ''பாவ த்தை'', ''சாத்விகா அபிநயம்'' என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

அண்டசாரசராங்களின் இயக்கமே சிவனின் திருக்கூத்தாகும். இதுவே நடராஜனின் திரு நடனமாகும் இயற்கையே இந்த நடனத்தின் முக்கிய பொருளாகும் இயற்கையே சிவகாமி என்ற நாணமுள்ள அழகிய பெண் வடிவமாகும். சிவன் ஆடும் கூத்து சிவகாமியுடன் சேர்ந்து ஆடும் கூத்தாகும் இதனால்தான் நடராஜ படிமத்தின் அருகே சிவகாமியின் படிமமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிவனின் திருக்கூத்து எங்கும், எப்பொழுதும் நிகழ்கிறது. எமது உள்ளத்திலும் நிகழ்கிறது பல தத்துவ உண்மைகளை உணர்த்தி நிற்கிறது.

**ஐந்தொழில் விளக்கம்**

கடவுள் அனாதியானவர். உயிர்களும் அனாதியானவை. உயிரானது அனாதிக் காலம் தொடக்கம் பாசம் என்ற மலங்களின் இருளில் மூழ்கிக்கிடக்கிறது. பாசமும் அனாதியானது. பாசங்களால் மூழ்கிக்கிடக்கும் ஆன்மாக்களை மீட்டு தூய்மைப்படுத்தி முத்தியடையச் செய்வதற்காகவே அசையா இறைவன் ஆற்றும் தொழில்களே ஐந்தொழில்கள் ஆகும். இது ''பஞ்ச கிருத்யம்'' எனவும் அழைக்கப்படும். படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் எனபவையே ஐந்தொழில்களாகும். இவைகள் முறையே சிருஸ்டி, ஸ்திதி, சம்ஹாரம் திரோபவம், அனுக்கிரஹம எனப்படும்.

உயிர்கள் தாமாக பாசத்தை நீக்கிக் கொள்ள முடியாதவை அதனால் பாசத்தை நீக்கும் பொருட்டு இறைவனே இவ் ஐந்து தொழில்களையும் மேற் கொள்கிறான்.

**படைத்தல்**

படைத்தல் என்பது உயிர்களைப் படைப்பதல்ல ஏனெனில் கடவுளைப் போலவே உயிர்களும் அனாதியா னவை உயிர்களின் மீட்சிக்காக தனு கரண, புவன, போகங்களைக் கொடுத்தலே ''படைத்தல்'' ஆகும்.

**காத்தல்**

உடம்பு பெற்ற உயிரானது தான் செய்த நல்வினை தீ வினைக்கேற்றபடி வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்தலே ''காத்தல்'' ஆகும்.

**அழித்தல்**

உயிர்களுக்கு இறைவன் கொடுத்த தனு, கரண, புவன போகங்களை நீக்குதலே ''அழித்தல்'' ஆகும்.

**மறைத்தல்**

உயிர்கள் தாம் செய்த நல்வினை தீவினைப் பயன்களை ஒரே பிறவியில் தீர்த்துக்கொள்ள முடியாது. ஆகவே உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்க வேண்டும் இப்பிறப்பெடுப்பினால் உயிர்கள் வெறுப்படையாது பாசம் தேயுமளவு வினைப் பயஜ்களைத் துய்க்குமாறு ஆழ்த்துவதே ''மறைத்தல்'' ஆகும்.

## அருளல்

உயிர்கள் மீது படிந்த பாசம் அகன்ற பின்னர் ஞானம் பிறக்கிறது கடவுளை உயிர் நாடுகிறது தூய்மையடைந்த ஆன்மாவை இன்பம் துய்க்குமாறு செய்தலே ''அருளல்'' ஆகும்.

இவ்வைந்து தொழில்களையும் ஒருங்கே ஆற்றுவதே சிவனின் ஆனந்த தாண்டவமாகும். ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியான தாண்டவமும் உண்டு சிவ தாண்டவங்கள் மொத்தம் நூற்றெட்டு ஆகும். ஆனந்த தாண்டவத்தில், படைத்தலை துடியும், காத்தலை அபயமும், அழித்தலை அக்கினியும், மறைத்தலை ஊன்றிய திருவடியும், அருளலை தூக்கிய திருவடியும் உணர்த்துகின்றன. இறைவன் தாமரைப்பூ பீடத்தில் நின்றாடுகிறான். இது நமது இதயக் கமலத்தில் நின்றாடுவதை குறிக்கிறது முயலகன் மீதும் நின்று ஆடுகிறான். முயலகன் மும்மலங்களின் உருவாகும்.

தூக்கிய திருவடி அருளலை குறிக்குமாதலின், அதனை அடைவதே ஆன்மாக்களின் குறிக்கோள் என்பதை வீசிபகரத்திலுள்ள சுட்டுவிரல் சுட்டிக் காட்டுகிறது. மற்றைய நான்கு விரல்களும் முயலகனைச் சுட்டிக்காட்டி மும்மலங்கள் அற வேண்டும் என்பதை உணர்த்துகின்றன.

அபய கரம் இறைவன் உயிர்கள் மேல் கொண்ட கருணையின் அபிநயக் குறிப்பாகும்.குமிழ் சிரிப்பு திருவுள்ளத்தின் கருணை வெளிப்பாடாகும். திருவாசி இயற்கையைக் குறிப்பதாகும் திருவாசிக்குள் நின்றாடுவது இயற்கையுடன் இணைந்தும், அவற்றின் உடனாகியும் இருப்பதைக் குறிப்பதாகும். விரிந்த செஞ்சடை, பறக்கும் ஆடை ஆட்டத்தின் வேகத்தைக் காட்டுகிறது எத்தகைய வேகத்தில் இருந்தாலும் அதிலிருந்து வேறுபட்டு விகாரமடையாதவனாய் இறைவன் உள்ளான் என்பதை சாந்தமுகமும் கருணை பொங்கும் விழிகளும் காட்டுகின்றன.

ஆனந்த தாண்டவத்திற்கு ஓங்காரத் தாண்டவம் என்ற பெயரும் உண்டு. நமசிவாய என்ற பஞ்சாக்ஷர மந்திரத்தின் வடிவமாகவும் கொள்லர் தூல பஞ்சாக்ஷரம், சூக்கும் பஞ்சாக்ஷரம் என்ற இருவகையும் ஆனந்த தாண்டவத்தில் காணப்படுகிறது.

நடராஜ மூர்த்தியின் முடி அக்கினி, உத்தரியம், ஊன்றிய திருவடி தூக்கிய திருவடிடமருகம், (துடி) ஆகிய ஆறும் அறுபது பாகைக் கொன்றாக அமைந்து, திருவாசியாகிய பிரபஞ்சத்தை தொட்டுக்கொண்டு நின்று, பிரபஞ்சத்தையே இயக்கும் ஆரக்கால் போன்றிருக்கின்றன. அத்துடன் அறுகோண அமைதியிலும் அமைந்திருக்கின்றது.

திருநடனம் உணர்த்தும் ஒவ்வொரு தத்துவக் கருத்தையும் புரிந்து காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி வழி படல் வேண்டும் நான் தோறும் தவறாமல் நடராஜ வழிபாடு செய்துவர மனம் தெளிவு பெறும் புத்துணர்வடையும் ஆணவம் மெல்ல மெல்ல அகன்று மெஞ்ஞானம் கைவரப்பெறும் சாந்தி தவழும் பிறவாப் பேரின்ப நிலையும் வந்தடையும்.

# சமயக் கல்வியும் இன்றைய நிலையும்

திரு. ந. சந்திரகாந்தன்,
திருக்கோணமலை


சமயக் கல்வி என்றால் என்ன என்பதனை ஆராய்ந்து நியூயோர்க்கில் உள்ள சமயக் கல்விச் சங்கம் ''உயிருக்கு உறுதி பயப்பனவற்றை உணர்ந்து சிக்கனப் பிடிக்கும் பக்குவத்தையூட்டும் சாதனமாகவும் அதன் பயனாகவும் அமையும் கல்வி முறை பற்றிய விசாரனை''[1] என்று கூறுகின்றது. அதாவது உயிருக்கு உறுதி பெறுவது, அல்லது ஆன்மீக அனுபூதியடைவதே சமயக் கல்வியின் நோக்கம் என்பது தெளிவாகின்றது. ஆனால் ஆன்மீக அனுபூதி இன்றைய சமயக் கல்வியினால் அடையப்பட்டதற்கு எந்த வித அறிவியல் சார்பான சான்றுமே கிடைக்கவில்லை.

ஒருவரின் ஆளுமை முழுமையாக விருத்தியடைவதற்கு சமயக் கல்வி அவசியம் என்பதை நம் சமுதாயத்திலே பெரும்பான்மையினர் தயங்காது ஒப்புக்கொள்கின்றனர். ஆயினும் சமயக் கல்வி அல்ல, கல்வியே கற்காத ஆளுமை சிறந்த பண்பாட்டாளர்களையும், படிக்காத மேதைகளையும், நம் சமுதாயத்திலே காணும்போது மேற்கூறிய கூற்றின் யதார்த்தம் மாசுபடுகின்றது. அத்துடன் சமயக் கல்வி முரண்பாடுகளையும் மோதல்களையும் ஊக்குவிக்கும் நெறியைத் தனிமனிதனுக்கு உருவாக்குவதை நாம் காணலாம். இதனால் ஆளுமை விருத்தி சார்பாகவும் சமயக் கல்வி உதவுகின்றது என்று கூறமுடியாது. இதே கருத்தினையே சமயக் கல்வி பற்றிய பிரபுக்கள் சபை விவாதமொன்றில் கலந்துகொண்ட ''உவில்லிஸ் பிரபு'' கல்வியின் நோக்கம் மனக்கதவுகளைத் திறப்பது. சமயக் கல்வியிலோ மனக்கதவுகளை அடித்து மூடுவதில் நாம் நேரத்தைச் செலவிடுகிறோம். என்று கூறுகின்றார்.

ஒழுக்கவியலை சமயக் கல்வி ஊட்டுகின்றது என்று எடுத்துக் கொண்டாலும்கூட ஒரு பக்கம் உண்மையில் அது போட்டி பொறாமை பூசல் என்பனவற்றை வளர்க்கின்றது. மறுபக்கம் உலகளாவிய ஒழுக்க விதிகளுக்கு குறிப்பிட்ட மத ஒழுக்கக்கொள்கைகள் பொருந்த முடியாது உள்ளன. போட்டி பூசல்கள் பொறாமைகள் அடிப்படையில் சமயக் கல்வி அமைந்துள்ளது மட்டுமல்லாது அக்கல்வி முறைகள் போட்டி பொறாமைகளை வளர்த்தன என்பதற்கு பல சான்றுகள் வரலாற்றில் காணப்படுகின்றன. இலங்கையில் பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கை தன்னளவிலும் சுட்டிக்காட்டுமாற்றாலும் அதனை நிரூபிப்பதனை நாம் காணலாம். அன்றிருந்த நிலைமைகளில் பௌத்த மத பாடசாலைகளிலே உண்மையான பௌத்த மதக் கல்வியை நிலைநாட்டுவது

கடமையாயிற்று. முதலாவதாக அத்தகைய பாடசாலைகளை நிறுவியவர்களையும் நிருவகித்தவர்களையும் அரசாங்க உத்தியோகத்தர்கள் சந்தேகக் கண்கொண்டு பட்சபாதத்துடன் நோக்கலாயினர். இரண்டாவதாக அந்நிய உருவமைப்புக்குள் அடங்கிய ஒரு கல்வி முறையில் பௌத்த மதக் கல்வி சுதந்திரமாக வளர்வதற்கு இடமில்லாதுபோயிற்று. அன்றியும் பௌத்த மதக் கல்வி முயற்சிகளை ஒரு முகப்படுத்துவதற்கு ஒரு மத்திய நிறுவகம் இல்லை. தனித்தனியாக வெவ்வேறு குழுக்கள் இம்முயற்தியில் ஈடுபட்டன. இதனால் பௌத்தர்களின் கல்விக்கு மட்டுமன்றி அவர்தம் பிற செயற்பாடுகளுக்கும் தடையேற்பட்டது.[3]

மனித அறிவின் வளர்ச்சியினால் உலகம் சிறுத்துவிட்ட இன்றைய நிலையில் உலகத் தொடர்புகள் அந்நியோன்னிய உறவுகளுக்கு இனங்கள், மதங்கள், வேறுபட்டமொழிகள் என்பனவே தடை அமைப்புக்களை சமுதாய மட்டத்திலும் உலக ரீதியிலும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இன வேறுபாட்டுக்குச் சூழல் பாரம்பரியதன்மைகள் போன்ற காரணிகளும் மொழி வேறுபாட்டுக்கு பிரதேச பண்பாட்டு வரலாற்றுக் காரணிகளும் காரணங்களாக அமையும் பொழுது சமய வேறுபாட்டுக்குத் திட்டமிட்ட போதனாமுறையே காரணமாகின்றது. எனவே மனித சமுதாயத்தால் மிக இலகுவாக நீக்கிவிடக்கூடிய தடையாகவும் உலக ஒற்றுமையை சீர்குலைக்கின்ற பயில்துறை என்ற பெயரிலே இருக்கின்ற அறியாமையுமாக சமயக் கல்வி விளங்குகின்றது.



இன்றைய சமயக் கல்வி நிறுவன ரீதியாக்கப்பட்ட மதங்களினால் தான் திட்டமிட்டுப் போதிக்கப்படுகின்றது. இன்றைய ஸ்தாபன ரீதியான மதங்களாலும் கட்டுப்பெட்டித் தத்துவங்களினாலும் அமைப்புக்களாலும் பீதியூட்டப்பட்ட இன்றைய மனிதன் உண்மை எதுவென்று அறியாது உமியையும் நெல்லையும் ஒன்றென மாறாட்டம் செய்யும் நிலைக்கு வந்துள்ளான். இன்று ஸ்தாபன ரீதியான மதங்களும் கொள்கைகளும் அமைப்புக்களும் தமது தேவை தீர்த்து வாழ்வனவாகவே உள்ளன.[4] என்பது உண்மைதான். அப்படியாயின் இந்த மதங்கள் தோன்றிய காலத்திலும் அதன் பின் வந்த நீண்ட காலத்திலும் அவை ஒன்றுமே சாதிக்கவில்லை என்று கூற முடியுமா? என்று கேள்வி எழுகின்றது.

மனித இனத்தின் நீண்ட வரலாற்றை ஒரு நடு நிலையுடன் நோக்கும் மாணவன் மனித நாகரிகத்தை வளர்த்தெடுப்பதற்கு சமயங்கள் முக்கிய அடிப்படைகளாக இருந்ததை மறுக்க முடியாது. அவை தோன்றிய இடங்களில் இருந்த சமூக அமைப்புக்கள் மகாபுருஷர்களினால் மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்ட பொழுது மதங்களினால் தான் அச்செயல்பாடுகள் பின்னடத்திச் செல்லப்பட்டன. இன்றைய மனிதன் கூறும் உயர்ந்த இலட்சியங்களான அன்பு விடுதலை, சகோதரத்துவம், சமாதானம் எல்லாம் இம்மதங்களில் உண்மையாகவோர்

பாய்ச்சியிருந்தாலும் நடைமுறையில் சமயக் கல்வி சமயக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி கிரிகை கொள்கை, வேறுபாடுகளை உறுதிப்படுத்தி மனக்கதவுகளை மூடுவதற்கும் மதப்பூசல்களுக்கும் வழிவகுக்கின்றன. அத்துடன் ஸ்தாபன ரீதியான மத அமைப்புகள் எல்லாம் லோகாயுத வீச்சுக்களால் விழுங்கப்பட்டுவிட்டன! எனவே போட்டி போட்டுக்கொண்டு சமயப் பிரிவினை அடிப்படையில் அல்லது மற்றைய சமயங்களை விழுங்கும் அடிப்படையில் சமய போதனையை மேற்கொள்கின்றன. எனவே அவற்றின் கட்டுப்பெட்டிக்கொள்கைகளும் சடங்குகளும் அவற்றின் உண்மை இலட்சியங்களை மனிதன் பின்பற்ற முடியாதபடியும் அவை மீது நம்பிக்கையை இழந்து விடும்படியும் மனிதனை ஆக்குகின்றன. மனிதனுக்காகவே சமயம் என்ற நிலை மாறி சமயத்துக்காகவே மனிதன் என்ற நிலை உருவாகிவிட்டது.

இன்று உண்மையான ஆத்மீகத்தை வாழ்கையில் கடைப்பிடிக்க அக்கறை காட்டும் எவரும், அப்படித்தான் தேடும் ஆன்மீக வாழ்க்கை சர்வசமய சுருதிகளும் கூறும், அந்த ஒரே சத்தியப்பொருளை தேடி உணர்வதிலேயே முடிவடைகின்றதை உணரும்போது, அதாவது அந்த ஒருமைப்பாட்டை உணரும்போது நிறுவன ரீதியான சமயங்கள் காட்டும் பிரிவினைகளையும் கோட்பாடுகளையும் சடங்குகளையும் கடந்துவிடுவார்கள். புறக்கணித்துவிடுவார்கள். அப்பொழுதுதான் உலகளாவிய சகோதரத்துவ பண்பையும் அன்பையும் பேண முடியும். இதனை நடைமுறையில் வாழ்ந்து காட்டிச் சென்றவர்கள் அவதாரபுருஷர்களான ஸ்ரீராமகிருஷ்ணர்,ஸ்ரீநந்தகோபாலகிரி போன்றோரும் அண்மைக்கால ஞானிகளான ரமணர், அரவிந்தர், விவேகானந்தர், இராமதாஸ் போன்றோருமாவர். இந்த ஒருமைப்பாட்டை தீவிரமாக வலியுறுத்திய விவேகானந்தர் அமெரிக்காவில் சிக்காகோநகரத்தில் கூடிய உலகச் சமயப் பேரவையில் இன்றுகாலை ஒலித்த மணி சமயப் பகைக்குச் சாவுமணி ஆகட்டும். பேனாவின் மூலமும் வாள் மூலமும் சமயப் பகை இனி நேராதிருக்கட்டும்.[6] என்று முழக்கம் செய்தார். எனவே நிறுவன சமய அமைப்புக்களினால் பயில் துறை ஆக்கப்பட்ட சமயக்கல்வி தமது சமயத்தையே சரியெனவும் அதனை-தனது கட்டுப்பெட்டிக் கொள்கையை மட்டுமே போதிக்கும் இன்றைய முறையும் நிச்சயமாக உலக ரீதியான ஒருங்கிணைப்புக்கோ, உயர்ந்த இலட்சியமான உலக அமைப்புக்கோ, மக்களையிட்டுச் செல்ல முடியாது. இந்த அடிப்படையே 1961ம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒரு தேசியக் கல்வி முறையிலே பல்வேறு சமய நம்பிக்கைகளையும் பல்வேறு சமயப் பின்னணிகளையும் உடைய பிள்ளைகளை ஒருங்கு கொணர்ந்து சமய பேதமின்றி அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் ஆக்கமுறையான உணர்ச்சித் திறனுள்ள உறவுகளின் உயிர்நாடியாய் அமையும் நன்மை தீமை பற்றிய இலட்சியங்களை அவர்கள் நெஞ்சிலே உளம் கொளச்செய்தல் வேண்டுமென நாம் எண்ணுகின்றோம். இந்நோக்கத்திற்கு அனுசரணையாக எந்தப் பள்ளிக்கூடத்திலும் எச்சமயத்திற்கும் சிறப்பான சலுகை அளித்தல் கூடாது. நான் ஒரு அயலவன் என்ற மனப்பான்மை எந்தச் சமயத்துப் பிள்ளைக்கும் ஏற்படுதல் கூடாது.[7] என்பது அதன் வாசகம்.

நிறுவன ரீதியான சமய அமைப்புக்கள் போதிக்கின்ற சமயக்கல்வி நெறியெலாம் வெறும் மூடத்தனமான தென்பதனையும் அந்நெறியினால் மக்கள் வீண்போகின்றனர் எனவும் கவலைப்படுகின்றார் இராமலிங்க சுவாமிகள்.

''பேருற்ற உலகிலுறு சமய மத நெறியெலாம் பேய்ப்பிடிப்புற்ற பிச்சுப்

பிள்ளை விளையாட்டென உணர்ந்திடாதுயிர்கள் பல பேதமுற்றங்குமிங்கும்

போருற்றிறந்து வீண்போயினர் இன்னும் வீண்போகாதபடி விரைந்தே

புனிதமுறு சுத்தசன்மார்க்க நெறிகாட்டி மெய்ப்பொருளினையுணர்த்தியெல்லாம்

ஏருற்ற சுகநிலையடைந் திடப் புரிதி நீ என்பிள்ளையாதலாலே

இவ்வேளை புரிகவென்றிட்டனன் மனதில் வேறெண்ணெற்க என்ற குருவே

நீருற்ற வெள்ளிய நெருப்பே நெருப்பினில் நிறைந்து இருளகற்றுமொளியே

நீர்க்குணானந்த பரநாதாந்த வரையோங்கு நடராசபதியே!''[8]

இன்றைய சமயக் கல்வி அமைப்பில் தத்தம் சமயத்தை வலியுறுத்தும் விதத்தில் சமயக்கொள்கைகளும் தூய உணர்வற்ற கிரிகைகளும், தத்தம் சமயப் பெரியார்கள் என்று வலியுறுத்தப்பட்ட பெரியார்களின் வரலாறுகளும்

அவர்கள் பாடிவைத்த அனுபவங்களும் தான் போதிக்கப்படுகின்றனவே தவிர எல்லாச் சமயச் சுருதிகளும் கூறுகின்ற வலியுறுத்துகின்ற உண்மையை நடைமுறையில் அனுபவிக்குமாற்றை அவை கற்பிக்கவில்லையென்பதனை நடுநிலைநிற்கின்ற எவரும் மறுக்கமுடியாது. அதே வேளையில் சமயக் கல்வி தன் சமயம் என் சமயம் என்று பேதங்காட்டவே பயன்பட்டுள்ளது. அக்கல்வியின் அடிப்படை, மற்றச் சமயங்களை ஒழிப்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ள தென்பதனையும் அதன் தீமையையும் உணர்ந்த விவேகானந்தர் சமயங்கள் ஏதேனுமொன்று வெற்றி பெற பிற சமயங்கள் அழிந்து போதலால் சமய ஒருமை நிலவாது, சமயங்கள் எல்லாம் ஒவ்வொன்றும் பிற சமயங்களின் தலையாய உண்மைகளைப் படித்தறிந்து தமது சமயத்துடன் இயையுபடுத்திக் காணவேண்டும்.[9] என்று கூறுவார். இங்கு இன்றைய சமயக்கல்வியின் தீங்கினைத் தீர்க்க ஒரு வழி எல்லாச் சமயங்களினதும் உண்மைகள் ஒன்று என்பதனை போதித்து அதனையடையும் வழியினை நோக்க வேண்டுமென்று கூறுவதே தவிர, தத்தம் சமயம் பெரியது அல்லது சிறந்தது என்று நிரூபிப்பதல்ல.

பயில் துறை 'பாடவிதானம்' என்பது வேண்டும் என்றே முறைமையாகக் கற்பிக்கத்தக்கவாறு ஒருங்காக்கப்பட்ட எண்ணக் கருக்கள் மெய்மைகள் கொள்கைகள் ஆகியவற்றைக் கொண்ட விடயத் தொகுப்பாகும்[10] சமயம் சார்ந்த மெய்ப்பொருளில் மனிதனது சமய அனுபவங்களை ஆராய்கின்றது. சமயம் என்பது பண்புணர்வு மட்டுமன்று என்று கருதுபவர் காண்ட் என்ற ஜேர்மனிய அறிஞர். சமயமும் ஒருவகையான அறிவு என்று ஹேகல் கருதுவார். ஆனால் இவ்விருவர் கருத்துக்களையும் இராதாகிருஷ்ணன் ஏற்கவில்லை. சமய அனுபவத்தில் அனுபூதிக்கூறு ஒன்றுண்டு என்றும், அக்கூறு மறை மெய்மை சார்ந்ததென்றும் கூறுகின்றார். இவ்வனுபூதி உட்பொருட் காட்சிக்கு வழிவகுக்கின்றது என்றும் அதனை வாழ்க்கையிலே அனுபவித்தல் இயலுமென்றும் உலக அனுபூதிச் செல்வர்கள் இதனை அனுபவித்துள்ளார்கள் என்றும் இவர் சுட்டிக்காட்டி காண்ட் ஹெகல் போன்றோரின் கருத்துக்களை ஏற்க மறுக்கின்றார்.[11] எனவே உண்மையான சமயக் கல்வி அனுபூதிபெற்ற மகான்களின் கருணையினால் கொடுக்கப்படுவதே தவிர பாடசாலைகளின் பயில்துறையாக அமைய முடியாது என்பது தெளிவாகின்றது. இதனால் தான் இறை அனுபவமே சமயங்களின் உட்கிடை என்றும் அதனையுணர்ந்து பக்தர்களுக்கு உணர்த்திய இராமகிருஷ்ணர் ''சமயம் என்பது அறிவு கொண்டு ஆராயப்படுகின்ற ஒன்று அன்று என்பார். உண்மையில் அது இறை அனுபவமாகிய உணர்வு. இதனையே மாணிக்கவாசகரும் நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே[13] என்று பாடுவார். இறைவனைப்பற்றி நேராக அறியாத நிலையில் நாம் நலம் தோன்ற மேடைப்பேச்சுக்கள் பேசுவதோ அல்லது கருத்து மிக்கதாக சமயக் கல்வியையும் புகட்டுவதாலோ யாதுபயன். மலர் மலர்ந்தவுடன் தேனீக்கள் தாமே அம்மலரைச் சேருகின்றன. தேனீக்களுக்கு அழைப்புயாரும் விடுப்பதில்லை. சமயப் போதகர்களை நோக்கி இராமகிருஷணர் கூறுவது. ''உங்களை இனிப்புப்பண்டம் போன்று அமைத்துக்கொள்ளுங்கள். எறும்புகள் தாமே வந்து சேரும். காந்தம் போன்றிருங்கள். இரும்புத்துகள்கள் தாமே வந்து சேரும் என்பதாகும். எனவே சமயம் என்பது கற்பிக்கும் பயில்துறையல்ல. அனுபவிக்கும் இன்பம். அனுபவிப்பவரே அதனை எடுத்துக் காட்டுவார். இதனால் சமயக் கல்வி தேவையற்றது என்று கறுவதை விட இயலாதது என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

மக்களின் நெறி ஒழுக்கத்தையும் ஆன்மீக ஒழுக்கத்தையும் சீராக்கும் நோக்குடன் சமயக் கல்வி அமைந்தாலும் கூட ஆன்மீக அனுபவம் இல்லாவிட்டால் உலகியல் பொருள் சார்ந்த நலன்களைப் பெற்றுக்கொள்ளும் எண்ணங்கள், சமயம் கற்பவரிடம் தோன்றிவிடுவதை நாம் காணலாம். யேசுபிரான் ''உன்னைப் போல் உன் அயலானை நேசிப்பாயாக'' என்று கூறிய போது அதைப் பல முறை பல நூல்கள் எழுதி வலியுறுத்தப்பட்டபோதிலும் பின்பற்றமுடியாது மாய்கின்றது மனித குலம் ஆன்மா யாவருக்கும் ஒன்றேய் ஒருபடித்தாய் உள்ளது. மற்றவர்களைக் காணும் போது நீ அவர்கள் வழியில் காண்கின்றாய். அயலவனை நீ உன்னை நேசிப்பது போல் நேசிப்பாயாக! நீ அவனை ஏன் நேசிக்க வேண்டும்? ஏனெனில் அவன் நீயேயாவாய்.[14] என்று இரமண மகரிஷி கூறியபோதும் ஆன்ம அனுபவம் இல்லாவிட்டால் அங்கு அன்பே இருக்க முடியாது. அன்பைப்பற்றிப் போதிக்கும் சமயக் கல்வியினாலும் பயன் இல்லை. எனவேதான் சமயத்தைப் பேசி கற்று பயன் இல்லை. அனுபவத்தைப் பெறவேண்டும். பாலைக்குடிக்க வேண்டுமே தவிர பரீட்சிப்பதினால் பயன் கிடைப்பதில்லை. ''சுவைத்துப் பாருங்கள் இறைவன் நல்லவன் என்பதனை'' என்று விவிலிய நூலில் கூறப்பட்டுள்ளது. இந்த அனுபவத்தைப் பெறுவதற்கு கண்ணன் பகவத்கீதையில் கூறியது போல உண்மையை உணர்ந்த ஞானிகளிடம் சென்று பணிந்தும் பணிவிடை செய்தும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.[18]


# நேசத்துள்...
# ஒரு தேசம்

வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா சிறுகதைப் போட்டியில்
முதலாம் பரிசு பெற்ற சிறுகதை

**எம். எம். எம். நஸ்வர்**

மூன்று வருடங்களின் பின் இன்றுதான் புறக்கோட்டை பஸ் நிலையத்தைப் பார்க்கின்றேன். வழமையான சகதியும், நீரும், சகிக்க முடியாத நாற்றம் காற்றோடு கலந்து வீசியது. அவசரமாக பஸ் கிடைத்தால் தேவலை. திக்குவெல்லைக்குப் போவதற்கு முதலில் மாத்தறைக்குப் போக வேண்டும். தூரத்தில் மாத்தறை பஸ் தெரிகிறது. சேறு தெரிக்காமல் அதுவரை நடப்பது சாத்தியமா? ஊ...ஹூம்; சாத்தியப்படாது குனிந்து 'பதினொன்றின்' இரு தொங்கல்களையும் மடித்துக் கொள்ளனும்...என்ன முழிக்கிறீர்கள்? ட்ரவுஸரை நாங்கள் பதினொன்று என்றுதான் சொல்லுவோம்.

அம்பலங்கொடை, ஹிக்கடுவ, கால்ல, மாதறை, மாத்ற, மாதறோ.. அங்குமிங்கும் பார்த்து விட்டு, போகும் வழியில் உள்ள ஊர்ப்பெயர்களையெல்லாம் கூறி அழைப்பானேன் இந்தக் கண்டக்டர்? வேறு என்ன காரணம் ஞாயிற்றுக்கிழமையென்பதால் கொழும்பை விட்டுச் செல்லும் பிரயாணிகள் குறைவு. 'இன்டர் சிடி' பஸ் வேறு வந்து விட்டதால், சட்டத்தை மீறி காலி பஸ்ஸில் செல்ல வேண்டியவர்களையும் இங்கு அழைத்துக் கொண்டிருக்கிறான். எனக்கென்ன அதைப்பற்றிக் கவலை? அவசரமாக ஆள் நிரம்பினால்தானே நம்மட பயணம் கெதியாய்த் தொடக்கும். 'அட அளுத்கமைக்கும் ஆள் எடப்பா' என்று சொல்லுவோமே?



திக்குவெல்லையில் இருந்து நண்பன் முஸ்தாக் கடிதம் போட்டிருந்தான். 'எனக்கு அவரசமாகக் கலியாணம் ஏற்பாடாகி விட்டது. கட்டாயம் வரவும்' என்ற சிறு துண்டோடு WC யும் உள்ளிருந்தது. WC என்றால் 'வெடிங்காட்' என்று உங்களுக்குத் தெரியாதா என்ன? திக்குவெல்லை செல்லும்போதே கமால் உங்களை அறியாமலே வெளிப்பட்டிருக் குமே...அந்தப் பிரபல எழுத்தாளரின் தாத்தாவின் மகன் தான் நண்பன் முஸ்தாக். இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கண்டியிலிருந்து மாத்தறைக்குப் போகும் ரயிலில் வந்திருந்தால் மிக வசதியாக இருந்திருக்கும். மாத்தறை ஸ்டேஷனுக்குப் பக்கத்தில்தானே கலாநிதி சுக்ரி அவர்களின் 'தாருள் புஷ்ரா' இல்லம் அமைந்திருக்கிறது. அவர்களையும் ஒரு முறை தரிசித்து விட்டுப் போயிருக்கலாம். எல்லாம் என்னுடைய சோம்பரத்தால் தவறிப்போனது. அரை மைல் தூரம் நடப்பதற்குச் சோம்பல்பட்டு, கஸாவத்தை பஸ்ஸில் கண்டிக்கு வரும்போது ரயில் மிஸ்ஸாகிவிட்டது. அடடே ஆள் நிறையுமுன்பே ட்ரைவர் வந்து ஏறிட்டாரே..எத்தன மணிக்குப் போய்ச் சேருவான்? காலிக்குப் போகவே இரவு பத்துமணியாகிவிடும். அங்க இறங்கி நண்பன் லுதுபுர் ரஹ்மான்ட வீட்ல தங்கிவிட்டுப் போனால் எப்படி? சே....அவன் திக்குவெல்லையில் இருப்பான். நான் மடையன் காலையிலேயே வீட்லயிருந்து கிளம்பியிருந்தால் கலியாணத்துக்கு வந்து சேரும் ஏனைய நண்பர்களுடன் இரவை இன்பமாகக் கழிக்கலாம். எமது வளாக வாழ்வில்தான் எத்தனை சுவையான நிகழ்ச்சிகள் நடந்தன. அக்ரம்ட உம்மாட மையத்துக்குப் போய் வந்து பள்ளிவாசலில் பட்டினிகிடந்தது, ஷியாம்ட வீட்ல நோன்பு திறந்தது, தீவுக்கும்,'பாவா தாட்ன்' க்கும் போய்வந்தது, ஆறாம் வருடத்தில் கல்விச் சுற்றுலா போனது அடடே நம்மட பிர்தௌஸ் அந்தச் சுற்றுலாவின்போது விடுபட்டுப்போனது திக்குவெல்லப் பன்சலயிலதானே....அந்த நேரம் முஸ்தாக் ஹஜ்ஜிக்குப்போய் இருந்தானே...பரீத் பிளேரில் தங்கி G.A.Q பரீட்சைக்குப் படித்ததும் அந்தப் 'பீரியட்ல' தானே என்ன இனிமையான காலம் அது....இவற்றையெல்லாம் நினைவுபடுத்திச் சிரிப்பதற்கு நானும் நேரத்தோடு போயிருக்க வேண்டுமே...

''மொனவத மல்லி, தனியென் ஹினாவன்னே என்ன தம்பி தனியச் சிரிக்கிறீங்க''

அடுத்த சீட்டில் இருந்தவர்தான் என்னைப் பார்த்துக் கேட்டார். படிக்கும் காலத்திலேயே நான் இப்படித்தான் எதையாவது நினைத்துக் கொண்டு சிரிப்பேன். நண்பர்கள் 'மெண்டல்' என்பார்கள். நே அய்யே- இல்ல அண்ணே, ஸல்மான் என்றொருவன் என்னோட படிச்சான் அவன் ஒருமுற தலமுடிய மிகவும் கட்டையாக வெட்டிக் கொண்டு வந்தான். மீதசல்லி இல்லாததால அதுக்கும் சேர்த்து வெட்டிடக் கொண்டு வந்ததாக நாம கதையக்கட்டி விட்டோம் அத நெனச்சபோதுதான்...'' என்று வழமையான எனது 'இல்லை'யுடன் தொடங்கி, தெரிந்த சிங்களத்தில் சொல்லி முடித்தேன்.

''பலண்டகோ அர மினியாவ ஹொந்த 'டோபர்' கெனெக் வகே அந்த மனிதனைப் பாருங்களே, ஒரு நல்ல டோப்பர் மாதிரி இருக்குது. 'நானும் இப்போதுதான் அவனை அவதானித்தேன். டிக்கட் எடுக்கும் விடயத்தில் பஸ் நடாத்துனரோடு வாதம் புரிந்துகொண்டிருந்தான்.

''மல்லி கொஹாட்டத யன்னே-தம்பி, எங்க போறீங்க?''

''மம-நான் திக்குவெல்லைக்குப் போகனும்; நீங்க எங்க போறீங்க?'' மம வெலிகமட-நான் வெலிகாமத்துக்குப் போறேன். மாத்தறைல இருந்து உங்களுக்கு திக்வெல்ல பஸ் காலைலதான் கெடைக்கும். நான் அமைதியாக இருந்தேன் பிர்தௌஸை திக்குவெல்லைக்குப் போய்த் தேடிக் கொண்டு வரும்வரையில் மாத்தறை பிரதான வீதியில் இரவு பத்துமணிவரை அலைந்து திரிந்த சம்பவத்தை ரிஸ்வி அடிக்கடி சொல்லுவான். நானும் இன்றிரவு அலைந்து பார்க்க வேண்டும். சிங்களவர்கள் மிகப் பெரும்பான்மையாக இருக்கும் அந்நகரத்தில் நான் மட்டும் தனித்து அலைந்து திரிவது ஆபத்தில் முடியுமோ..சே..அந்தளவு மோசமானவர்கள் அல்ல அவர்கள்.

'மொன சமாதானயத?'-என்ன சமாதானம் வேண்டிக் கிடக்குது? எங்கட வாலிபர்கள ஆயிரக் கணக்கில் கொன்று குவித்தவனுகளோட என்ன சமாதானம் தான் வேண்டிக்கிடக்குது. சமாதானமல்ல அவனுகள்ட குஞ்சு குறுமான்கள் முதல் அத்தன பேருக்கும் சமாதிதான் கட்டனும்'' திடீரென்று முன்பக்கம் இருந்து குரல் வந்து எட்டிப் பார்த்தேன்: அவனேதான். அந்த டோப்பர்தான்..... பஸ் சாரதிக்கு மறுபுறத்தில் இருந்த ஆசனத்தில் இருந்து கொண்டு அருகிருந்த ஓர் அப்பாவியை வலியப் போய்க் கதைக்கிழுத்துக் கொண்டிருந்தான்.பஸ்ஸில் இருந்த அனேகரின்

கவனம் அவன் பக்கம் திரும்பியிருந்தது. மே,மங் கியன்னதே அகண்ட - இதோ நான் சொல்றதக் கேளு இது பௌத்த நாடு சிங்கள மக்களட பூமி, தமிழனும், சோனவனும் வந்தாம் வருத்தான்கள். அவங்கட அதிகாரம் இங்க செல்லுபடியாகாது. எங்கட பெரியவங்க ஏதோ பாவப்பட்டு பாராளுமன்றத்துல கொஞ்சம் இடம் கொடுத்தாங்க அதோட நின்றானா அவன்? தனி நாடு, கேக்குறான். எல்லாம் நாங்க விட்ட தவறுதான்? அவனுடைய பேச்சில் சிங்கள இனவாதம் கொப்பளித்தது சந்தேகமே இல்லை...அத்தனை பேரும் அவனது பேச்சைத்தான் 'ஆவலோடு' கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

''மல்லிட எயா கியன்னதே தேரனவாத-தம்பிக்கு அவர் சொல்றது விளங்குதா?'' அடுத்திருந்தவர்தான் என்னிடம் கேட்டார்.

''ஒவ் பொட்டக் தேருனா-ஓம் கொஞ்சம் விளங்கியது''

''மல்லி முஸ்லிம் நேத- தம்பி (நீங்க) முஸ்லிம்தானே'' எனக்குள் மெல்ல மெல்ல ஒரு திகில்....வாய் கஸ்டப்பட்டுத்தான் திறந்தது.

''ஓ....ஓ....ஒவ் அய்யே'' அத்துடன் இருவரும் மௌனமானோம்.

''மங் எகக் கியன்னங்-நான் ஒன்று சொல்றேன். இந்த நாட்ல சிறுபான்மைன்னு ஒரு கூட்டம் இருக்கும் வரைல நம்மலால நிம்மதியாக இருக்க முடியாது. அவங்கள அழிக்கனும், இல்லாட்டி அடிமைகளாக வாழ வைக்கனும் தமிழன்ட திருநீர ஒழிக்கனும் தமிழச்சிட நெத்திப் பொட்ட அழிக்கனும். சோனவன்ட தொப்பி பறக்கக் கொடுக்கனும். சோனகத்திட பர்தாவப் பத்தவைக்கனும்..'' அவன் இன்னும் ஏதேதோ சொல்லிக்கொண்டு போனான். எனது இதயத்துடிப்பு வேகம் அதிகரித்துக்கொண்டே போனது. தொடர்ந்து கெட்ட வார்த்தைகளால் ஏசத் தொடங்கினான் அவன். 'ஏசுவதற்குச் சிறந்த மொழி சிங்களம்தான்' என்று உஸ்தாத் ஒருவர் எப்போதோ சொன்னது இந்தத் தருணத்தில் எனக்கு நினைவு வந்தது.

'இந்த இனவாதத் தீயை மூட்டியவர்கள் யார்?' எனக்குள் இந்தக் கேள்விதான் எழுந்து நின்றது. சிங்களத் தலைவர்களா? தமிழ் போராளிகளா? நிச்சயம் இரு சாராரும் இல்லை. அப்போ முஸ்லிம்கள் என்று முடிவுக்கு வரலாமோ...சே...சே முஸ்லிம் சமூகம் எப்போதுமே இனரீதியாகச் சிந்தித்த வரலாறு கிடையாதே. அப்படியானால் இந்தக் கொடிய நோயைப் பரப்பிவிட்ட தீய சக்தி எது?'.

''அபி சுத்தன்ட யடத்வெண்ணடத்..நாங்கள் வெள்ளையர்களுக்கும் ஏனைய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அடிமைப்பட்டிருந்தது இந்தத் தமிழர்களும், சோனகர்களும் செய்த சதிகளால்தான். அதுக்காகத்தான் எமது பெரும்பான்மை சமூகத்தவிட தமிழ் சமூகத்துக்கு வெள்ளையன் மதிப்பளித்தான். அவங்களுக்குச் சார்பாக அரசியல் திட்டங்களை வகுத்துக் கொடுத்தான். வரலாறு நெடுக இந்த சிறுபான்மையினர் சிங்கள சமூகத்துக்குத் துரோகம் செய்து கொண்டே வந்திருக்காங்க. சுதந்திரம் கிடைத்த பின்பாவது இவங்கள அடக்கி ஆளாதது எங்கட குத்தம்தான். முதல்ல இவங்களுக்க இருந்த பாராளுமன்ற அங்கத்துவ உரிமை எங்கட தலைவர்கள் எடுத்து வீசியிருக்க வேணாமா?'' தீவிரவாதம் வரலாற்றையே திரிவுபடுத்தி விட்டிருப்பதைக் காண எனக்கு மனதில் ஒருவகை விரக்கி ஏற்பட்டது. சில இனத்துவேசிகளால் தூவி விடப்பட்ட நச்சுக்கருத்துக்கள் அந்த டோப்பரின் வாயிலிருந்து தீச் சுவாலையாக வெளிவந்தன. அவனது உணர்ச்சி பூர்வமான வார்த்தைகள் பஸ்ஸுக்குள் எத்தனை பேரைக் கிளறிவிட்டு அனர்த்தத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற பயம் எனக்கு அவனைத் தடுப்பார் யாருமே இந்த சமூகத்தில் இல்லையா? சே...என்ன உலகம் இது நான் எனக்குள் சலித்துக்கொண்டு மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன், என்னைப் போல் வேறு யாராவது இருக்கிறார்களா என்று என் கண்கள் துளாவின.

ஆம்...அதோ அந்த மூலையில் ஒரு தொப்பி மட்டும் தெரிகிறது. அதற்குரியவர் இந்த உலகத்திலேயே இருப்பதாகத் தெரியவில்லை எமது சமூகம் எப்போதுதான் விழித்திருந்தது?.

''பலன்டகோ மல்லி, மெயா கதாகரன்னதே-பாருங்களே தம்பி, இவர் பேசுறவைகள் சே...நாடு குட்டிச் சுவராகப் போறதுக்கு இவனுகள்தான் காரணம். உண்ம ஒரு புறம் இருக்க, பொய்யையும், புறட்டையும் கூறி இன்னுமின்னும்

இனவாதத்த வளக்குறானுகளே'' எனக்குப் பக்கத்தில் இருந்தவர்தான் இப்படிப் பேசினார். எனக்குள் கொஞ்சம் மகிழ்ச்சி இவர் படித்த, பண்பாடான மனிதன் என்று புரிந்து கொண்டேன்.

''மல்லி, மே ரடே ஜாதி வாதய எதிவுனே கவத்த தன்னவாத தம்பி, இந்த நாட்ல இனவாதம் ஏற்பட்டது எப்போதுன்னு தெரியுமா? 1933ல் நடந்த கோல்புரூக் சீர்த்திருத்ததுக்குப் பின்பு தான். அதற்கு முன் யாருமே இனவாதம் பேசயில்ல, வெள்ளையன்களோட போராடத்தான் அவங்க முற்பட்டாங்களே ஒழிய துவேசம் பேசயில்ல. சுதந்திரம் வழங்க நெனச்ச வெள்ளையன் எமக்குள்ள ஒரு தீராத பகைமையை ஏற்படுத்தத்தான் இந்த இனரீதியான பிரதிநிதித்துவ அமைப்ப அறிமுகப்படுத்தினான். அதன்பின் இலங்கையன் என்று இருந்த எமது தேசிய ஒருமைப்பாட்ட இனரீதியாக நாங்களே கூறுபோட்டோம். எல்லா இன மக்களும் முயன்றுதான் சுதந்திரத்தப் பெற்றாங்க'' தொடர்ந்து இவர் பேசினார். நானும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தேன்- இதற்காக இந்த விடயங்கள் ஏற்கனவே எனக்குத் தெரியாதவை என்று நினைத்து விடாதீர்கள். நானும் உயர்தரப் பரீட்சைக்கு அரசியலை ஒரு பாடமாகப் படித்தவனாக்கும்..இவருடைய கருத்துக்கள் என்ன என்று முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டாமோ அதுக்காகத்தான் மிக ஆவலோடு கேட்பது மாதிரிக் காட்டிக் கொண்டேன்.

''பே விசிஹதரென் சிங்கள பாஷா - இருபத்திநான்கு மணி நேரத்துள் சிங்கள மொழியை ஏக அரச மொழியாக மாற்றினார் பண்டார நாயக்கா. ஒரு மொழி என்று ஏற்பட்டால் நாடு இரண்டாகும். இரண்டு மொழிகள் என்றிருந்தால் நாடு ஒன்றாகவே இருக்கும் என்று அன்றே திரு கொல்வின் ஆர். டீ. சில்வா பாராளுமன்றத்தில் எதிர்த்துப்பேசினார். அது இன்று நிதர்சனமாகின்றது. அன்று தொடங்கிய இந்த மொழிரீதியான போராட்டம் பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் அப்போதே முடிவுக்கு வந்திருக்கும். ஜே.ஆர். ஜயவர்தன ஆர்ப்பாட்டம் நடத்தி அந்த சிறு முயற்சியையும்கூட முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டார். தொடர்ந்து தரக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் நாட்டின் எதிர்காலத்துக்கு ஒரு குழுவினர் நாசக்குழி வெட்டினார்கள். இலங்கை மாணவன் என்ற தேசிய உணர்வு, சிங்கள மாணவன், தமிழ் மாணவன் என்று சுருங்கிப்போனது. இந்தத் திட்டத்தின் மூலம் மற்றொரு சிறுபான்மையினர் நன்மையடைந்ததும் உண்மைதான்'' அவர் தொடர்ந்து பேச முற்படுகையில் தான் அந்த சத்தம் கேட்டது.

தாடி வளர்த்த ஒரு இளைஞன் அந்தக் குடிகாரனின் சேட் கொலரைப் பிடித்து உலுக்கிக்கொண்டிருந்தான். அவனைத் தடுக்க அங்கு யாரும் முன்வராதது எனக்குப் பெரும் வியப்பாக இருந்தது. அந்த டோப்பரின் பேச்சை முதலில் எல்லோரும் ஆவலோடுதான் கேட்டார்கள். அவனது அசிங்கமான வார்த்தைகளையும், துவேசமான சிந்தனைகளையும் எவ்வளவு நேரம் தான் கேட்பது. சலித்தார்கள் சிலர், முணுமுணுக்கத் தொடங்கினார்கள் பலர்; கோபம் கொண்டது ஒரு குழு; அவனது பேச்சுக்கு முடிவுகட்ட வந்தான் அந்த இளைஞன்.

பஸ்ஸில் என்னையும், பின்னால் தூங்கி வழியும் தொப்பியையும் தவிர மற்றெல்லோரும் சிங்களவர்கள். ஒரு பெரும்பான்மை சமூகத்தில் ஒரே ஒருவன்தான் இனவாதம் பேசுகின்றான்...இவ்வளவு காலமும் அதனைத் தூண்டிய அதே சமூகம் இன்று சலித்துவிட்டது. இல்லை; அவனை நிராகரித்து விட்டது. எதிர்க்கவும் ஒருவன் புறப்பட்டு விட்டான். என்ன ஆச்சரியம்! கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவை இதனோடு நான் ஒப்பிட்டுப் பார்த்தேன்....ஒரு பெருமூச்சு சமாதானம் எப்போது வரும்!.

''பலன்ட மல்லி- பாருங்க தம்பி, இன்றைக்கு மக்கள் சாமாதானத்தைத் தேடுகிறாங்க. அதற்காக என்ன செய்யவும் அவங்க தயாராகிவிட்டாங்க. இன்று இந்த நாட்ட ஒரு வீட்டப்போல யோசிக்க மக்கள் தயாராகிவிட்டாங்க. வீட்ல பிணக்கு வந்தா அத நாமலேதான் தீர்த்துக் கொள்ளனும். உறவு முறியாம இருக்கப் பிரிவுதான் வழி என்று இருந்தால் சொத்தப் பிரிக்க நாங்கள் தயார். மாறாக முரண்டுபிடிக்கும் சகோதரனைக் கொன்றுவிட நாங்க தயார் இல்ல. நாட்லயும் அப்படித்தான்...வீட்டுக்குள்ள குறுக்கே ஒரு சுவர் வரத்தான் யாரும் விரும்பமாட்டாங்க. மற்றப்படி சொத்தையும் அதிகாரத்தையும் பகிர்ந்து கொள்ள அவங்க தயார்.'' பக்கத்து சீட் காரார் மனம் திறந்து பேசுகிறார். எனக்கும் கொஞ்சம் தைரியம் வந்தது.

''தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கியிராவிட்டால் சிங்களவர்கள் இப்படி இறங்கி வந்திருப்பார்களா'' என்று கேட்டுவைத்தேன். அவர் என்னை ஒரு முறை கூர்ந்து பார்த்தார் நான் ஒரு புன்னகையை உதிர்த்தேன். அவர் எனது வலதுகையைப் பற்றிக் கொண்டார். எனக்கு மெய் சிலிர்த்தது பஸ் திடீரென்று நின்றது.

''பெஹபங் யகோ- இறங்குடா'' அந்தக் குடிகாரன் தொடர்ந்து பேச முற்பட்டதால் அந்த இளைஞன் அவனை

பஸ்ஸிலிருந்து பலவந்தமாக இறக்கிவிட்டான். இளைஞனுக்குத் துணையாக மேலும் இருவர் சேர்ந்து கொண்டிருந் தார்கள். பஸ்ஸில் இருந்த அனைவரினதும் முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளமாய் புன்னகை மலர்வதை நான் அவதானித்தேன். பஸ் பெந்தொட்டைப் பாலத்துக்கு இப்பக்கமாக நின்றிருந்தது. பாலத்தைக் கடந்தால் தென்மா காணம். அந்த மண்ணுக்கு அவன் வரக்கூடாது என்று அவர்கள் எல்லோரும் கருதுவது போன்றிருந்தது. கேஸட்டில் ஒரு இனிமையான சிங்களப் பாடலைப் போட்டுவிட்டு, ட்ரைவர் வண்டியைக் கிளப்பினார்.

''மல்லி மங் கியன்னதே ஹொந்தட்ட ஹிதே தியாகன்ன தம்பி நான் சொல்லப்போறத நல்லா மனதுல வச்சிக்கங்க ஆயுதப் போராட்டமோ, அரசியல் தந்திரங்களோ, வேறு வக்கிரங்களோ ஒரு நாளும் இனங்களுக்கிடைல இணக்கத்தைக் கொண்டுவராது. இந்தத் துவேஷ உணர்வு தோன்றி ஐம்பது வருடங்கள்தான் ஆகுது. அதுக்கு முந்தி மக்கள் எல்லோருமே சமாதானத்தோடதான் வாழ்ந்திருக்காங்க. நாங்க எல்லோரும் மனசு வெச்சா இந்த இனரீதியான சிந்தனைப் போக்கத் தூக்கி எறிந்து போடலாம். எந்த சமூகத்துல இருந்து எத்தன உறுப்பினர்கள் பாராளுமன்றத் துக்குப் போனாங்க என்பதோ, எந்த இனத்தவர் பல்கலைக்கழகத்துக்கு அதிகம் தெரிவானார்கள் என்பதோ முக்கியமல்ல. தகைமை உள்ளவங்களுக்குத் தகுந்த இடம் கிடைப்பதுதான் முக்கியம். இனரீதியான இந்தப்பாகு பாட்டால நல்ல பல தலைவர்கள் தோன்றாமலேயே போயிட்டாங்க. திறமையுள்ள எத்தனையோ மாணவர்கள் தட்டுப்பட்டுப் போயிட்டாங்க. இனவாத சிந்தனைக்கு எங்கெல்லாம் இடம் தரப்பட்டிருக்கின்றதோ அதையெல்லாம் கிள்ளி எறிந்து, இலங்கை மைந்தன் என்ற தேசிய உணர்வை ஏற்படுத்தனும். அப்பதான் நாம நாட்டக் கட்டி எழுப்பலாம். நிம்மதியாக மூச்சு விடலாம்'' கூறிய அவர் தூங்குவதற்காக சீட்டில் சாய்ந்து கொண்டார்.

எனக்குள் விவரிக்க முடியாத ஒருவகைப் பூரிப்பு. இவ்வளவு காலமும் இலங்கையின் சமாதானத்துக்கு ஊறுவிளைவித்த சக்திகளை இன்று எல்லாத் தரப்பினரும் நிராகரிக்கத் தொடங்கி விட்டார்கள். தென்னிலங்கை மக்கள் சமாதானக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டால் வடபகுதி மக்கள் எவ்வளவு காலம்தான் ஒதுங்கிப்போக முடியும்.

வேகமாகச் சென்று கொண்டிருந்த பஸ் ஒரு திருப்பத்தில் திரும்பிய போது பக்கத்து மனிதர் ஒரு புறம் சரிய,தூக்கம் கலைந்தார். நான் எனது தோட்புயத்தைச் சுட்டிக்காட்டிப் புன்னகைத்தேன். அவரும் ஆதரவோடு எனது தோளில் சாய்ந்து உறங்க ஆரம்பித்தார்.

சாமாதானத்தைத் தேடி இனி நாம் வெகு தூரம் செல்லத் தேவை இல்லை. இதோ மிக அருகில்...பக்கத்து சீட்டில் ...இல்லை! உனக்குள்ளேயே....உன் இதயத்துள்! உள்ளத்தைத் திறக்கும் வரை...திறந்து அதைப் பேச்சுவார்த்தை மேசையில் எடுத்து வைக்கும் வரை உன் கண்களுக்குப் புலப்படாது அந்த சமாதானம். சிறிது நேரத்தில் எம்மிருவரதும் குறட்டை ஒலி பஸ்ஸெங்கும் கேட்டிருக்கும்.

***அருவிகளிலெல்லாம்***
***குருதியருவி***
***பூக்களிலெல்லாம்***
***பிணவாடை***
***இவைதான்***
***எங்கள் தேசத்தின்***
***இன்றைய அடையாளங்கள்!***

***அ. டக்ளஸ் ஜெயசேகரன்***
***வவுனியா.***

# மருத நிலத்தேர்

பாலா. பேராதரன்

வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழாச் சிறுகதைப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை



கார்த்திகை மாதப் பிற்பகுதி. செக்கலுக்குள் நல்ல மழை பெய்து நிலங்குளிர்ந்து போய்க்கிடந்தது. இருட்டும் மண்டிக்கிடந்தது.

சரிசாமத்துக்குப் பிறகு கிளி நித்திரையே கொள்ளவில்லை. மழையில் நனைந்த தாட்டான்கள் மாவிலும், பிலாவிலும் குதிபாஞ்சு அவள் நித்திரையைக் குழப்பியிருந்தன.

''கிளி...விடிய முதல் வண்டில் பூட்டோணும், வெள்ளண எழும்பு புள்ள'' என்று திண்ணையில் படுக்கும் போதே கனகன் சொல்லியிருந்தான்.

கணவன் சொல் நினைவில்வர, அடுப்புக்கரியில் இரண்டு துண்டை எடுத்துக் கடித்துப் பல் தீட்டிக் குடத்துத் தண்ணியில் பல் கிடுகிடுக்கக் கொப்புளித்துக் கால்முகம் கழுவினாள்.

மால்க் கப்பில் தொங்கிய திருநீற்றுக் குடுவையில் கைவிட்டு நெற்றியில் ஒரு இழுவை இழுத்து மனதுக்குள் ''வேகாவனக்கிழவா.....'' என்று சொல்லிக்கொண்டாள்.

பன்னாடையை அடுப்புக்குள் தள்ளி நாலு முதிரம் விறகை வைத்து நெருப்பு மூட்ட எழுந்தது சுவாலை.

கிளி தன் பாவாடையால் போர்த்திவிட்டபடி கனகனின் மூன்றுவயதுச் செல்வ மகன் காலைக் குறட்டித் தூங்கிக் கொண்டிருந்தான்.

மஞ்சள் உணாத் தடியில் அப்பா செதுக்கிக் கொடுத்த பாவைப்பிள்ளை அவன் அணைப்பில் கிடந்தது.

மகனைப் பார்த்துப் புன்னகைத்தபடி பசளைப் பைத்தட்டியை விலக்கி எழுந்து எருதுகளை எட்டிப் பார்த்தான்.

மாட்டுத் தொட்டியில் வைக்கோலைப் போட்டுவிட்டு, வேப்பங்குச்சை முறித்துச் சப்பத் தொடங்கினான். சறத்தால் முகம் துடைத்து, திருநீறு பூசிவிட்டுத் திரும்ப ''இந்தாங்கோ தேத்தண்ணி'' என்று சொல்லிக் கையில் சீனியைக் கொட்டினாள் கிளி. சீனி நக்கித் தேனீர் குடிக்கும் சுகம் அற்புதம்.

அப்போதுதான் நித்திரையால் அருண்ட கனகனின் தாய் அடைத்த குரலில் ''மோனை திரும்பி வரேக்க மான்கொடி கொஞ்சம் வலிச்சுக் கொண்டுவா'' என்றாள்.

''இம்..'' என்று சம்மதம் சொன்னான். ஏன் மான்கொடி? என்பதுபோல் கனகன் கிளியைப் பார்க்க ''கோடிக்குக் கிடுகு கட்டவாம்'' என்றாள் அவள். பச்சையரிசிச் சோறும், கத்தரிக்காய்ப் பொரியலும், மோர் மிளகாயும் மூக்கை இழுத்தது.

''வெத்திலையும் வச்சுக்கிடக்கு, சிங்கனுக்குப் பழஞ்சோறு குழைச்சு வச்சிருக்கிறன்'' என்றபடி வண்டில்க் கிறாதியில் பின் பையைக் கொழுவி விட்டு நரையனை அவிழ்க்கப்போனாள் கிளி. வயலுக்குப் போகப் போகிறோம் என்பதை உணர்ந்த எருதுகள் சலங்கழித்துச், சாணி போட்டு மூலி முறித்துத் தயாராகின.

சுருட்டை இழுத்தூதி வந்த அப்பம்மாவின் இடுப்பை இறுக அணைத்தபடி பாக்கியநாதன் குறைநித்திரையில் அப்பாவின் பயணம் பார்க்க வந்திருந்தான். தாயின் கையிலிருந்த மகனை இழுத்துக் கொஞ்சி அவன் முகவாசத்தை முகர்ந்து பாசத்தோடு உள் இழுத்தான் கனகன்.

''அம்மா போட்டுவாறன்'' என்றபடி கனகன் ஆசனத்தில் ஏற நுகத்தில் நுழைந்த எருதுகள் நடக்கத் தொடங்கின. கண்டாயத்தைத் திறந்து விட்டுக் கைவிளக்கோடு நின்றாள் கிளி. அவளின் கருநாகச் சடைக் கொண்டையின் நேர்த்தியின்மையில் தன்னை இழந்து, உழவன் கேட்டியால் செல்லமாக அவளுக்கோர் அடிபோட்டுவிட்டு, ''வாறன் புள்ள'' என்றதும் வண்டில் கறாரிட்டுப் பாதையில் ஏறி விரைந்தது. கண்ணில் மறையும் வரை கணவனைப் பார்த்து நின்று பின் போனாள் கிளி. எருதுகளுக்குப் போகும் இடம் தெரிந்ததால் சாரதிக்கு வேலையில்லை. கிறாதியில் நாணயக் கயிற்றை ஒரு இழாவல் இழாவிவிட்டு வெற்றிலைச் சரையை எடுத்தான் கனகன்.

அவன் படித்தது ஐந்தாம் வகுப்புத்தான். ஏழ்மை அவன் படிப்பை மறித்து விட்டது. ஆனால் காத்தான் கூத்தும், கோவலன் கூத்தும், கோலாட்டப் பாட்டுகளும் கை வந்த கலை.

ஒரு தரம் கோலாட்டத்தில் கை தவறிப்பட்ட அடியில் பெருவிரல் கண்டி நகச்சுத்தாகிவிட்டது. அதற்கு வட்டுக்காய் வைத்துக் கட்டுவாள் மாமன் மகள் கிளி. அப்போதுதான் அவர்கள் மனங்களும் சங்கமித்தது. அதை நினைத்தான்....... பாட்டு வந்தது.

குப்பையிலே நிண்டு மேயும்

கோல வண்ணச் சாவல்-அந்தக்

கோல வண்ணச் சாவலினைக்

கொண்டு சென்றவன்யாரோ..?-அப்படித்

தன்னானே னானனன்னே

தான னன்னே னானே-தன

தன்னானே னானனன்னே

தான னன்னே னானே...

என்று, அண்ணாவி கிட்டுணர் பழக்கி, கல்யாணவேலவர்கோயில் திருவிழாவில் நிலாவெளிச்சத்தில் விளையாடிய கோலாட்டப் பாட்டைச் சுதியோடு பாடினான். எருதுகள் தலையசைத்துக் கெண்டயங்களால் இசை கொடுத்தன.

காட்டு வழிப் பயணம்; காலைக்குளிர்; கதிரவன் இன்னும் விழிக்கவில்லை. வெள்ளைமலை இறக்கத்தில் எருதுகள் நடக்கமுடியாமல் மெல்ல ஓட ஆரம்பித்தன.

அதிகாலையில் மாங்குளத்துக்குப் போகும் வஸ் வண்டி வரும் சத்தம் கேட்டு எருதுகள் தாமாகவே விலகி இடம் கொடுத்தன.

மழைக்காலக் காலைத் தென்றல் தேகத்தை மயிர்க்கூச்செறிய வைத்தது. அதைவிடக் காட்டுப் பூக்களின் வாசம் கதம்பமாய் வந்து மூக்கை மகிழ்வித்தது.

எருதுகள் மாட்டிலையான்களோடு வால்கொண்டு போராடியபடி வயல்க்குடிலை அண்மித்தன. ஏற்கெனவே கெண்டயச்சத்தம் கேட்டு வேலிபாய்ந்து ஓடி வந்த சிங்கன் வாலையாட்டி வளைந்து முனகினான். அவனுக்குத் தெரியும் எசமானியின் அன்பு வாளைமீன் சட்டியில் வீழ்ந்து பழஞ்சோற்றுக் குழையலாகி பார்சலாய் வரும் என்று.

ஐந்து ஏக்கர் குளத்தறை. நன்றாகச் செழித்துக் கிடந்தது. தன் பாக்கியநாதனை அணைப்பது போன்று கதிர்களை அணைத்தான் கனகன். அப்போது அவனுள்ளத்துள் அவனே பேசினான். ''கிளிக்குச் சங்கிலி, பாக்கிக்கு வெள்ளியில அறுணாக்கொடி, அம்மாக்குச் சீலை, வண்டிலுக்குப் புதுச்சில்லு, அம்மாளாச்சிக்குப் பொங்கல்.....

''கடன் காசு....''

பகல் முழுதும் வக்கடவைகளை வெட்டித் தண்ணீர் பாய்ச்சி, உமையடைத்து, வரம்பு செருக்கி வியர்வை சிந்தி பயிருக்கு யூறியா போட்டான். சூரியன் தாவரங்களுக்கு ஒளி உயிர் ஊட்டி கனகனின் முதுகிலும் ஊசியாய்க் குத்த, கிளியின் சாப்பாடு நினைவுக்கு வந்தது. பீலித்தண்ணீரில் கை கழுவிருசித்துத்தின்றான். உணவு அவனின் உணர்வோடு உயிரில் இறங்கியது.

இராக்கால அணைப்பையும், கிளியின் மொழியையும் மீட்டுக்கொண்டு தடிகள் பரவிய சாக்குப்பரணில் கால்பரப்பிப் படுத்தான். உண்டகளையால் உடம்பாற உறங்கினான்.

அயல்க் குடில்ப் பெட்டை நாய் தன் எசமான் இல்லாத நேரம்பார்த்துச் சிங்கனிடம் வந்தது. அவர்களின் மொழி இல்லா முனகல்ப் பேச்சில் அருண்டு விழித்தபோது மாலை மங்கி மந்தாரமாயிருந்தது.

தேத்தண்ணிப் பானை மூன்று வீரங்கொட்டனுகளுக்கு நடுவில் கிடந்து கொதித்துக் கொண்டிருந்தது. தும்பு செதுக்கிய சிரட்டையில் தேத்தண்ணியை விட்டுக் குடித்தவன் தெம்பாகினான். கைக் கத்தியை எடுத்து வண்டிலில் போட்டு விட்டு என்னடா பச்சப் புல்லு நல்லாத் தியக்குது போல கிடக்கு. வேலிக்கு இடிகட்ட வெட்டோணும். ''ஒழும்புங்கோ..ஒழும்புங்கோ'' என்றதும் அதை விளங்கிக் கொண்ட செங்காரி சடக்கென எழுந்து கொண்டது. வண்டில் வாய்க்கால்க் கரையாகப் போய் அயல்க்காட்டில் புகுந்தது.

ஒரு நூறு நூற்றைம்பது இடிகட்டை வெட்டியவன் அம்மாவின் நினைவு வர மான்கொடி வலிக்கத் தொடங்கினான். கடவுள்கள் வரிசையில் அவனுக்கு அவனது அம்மாவும் ஒருத்தி.

மான் கொடியை வளையமாடிக் கட்டிவிட்டுத் திரும்பியவன் காலைப் பொத்தியபடி ''அம்மா...ஆ....'' என்று இரைந்தான். முத்திரைப் புடையன் ஒன்று அவன் காலடியின் கீழ் நிதானமாக நகர்ந்து சென்றது.

வேகமாக ஓடி மான்கொடியோடு வண்டிலில் தாவினான். எசமானின் அவசரம் புரிந்த எருதுகள் கட்டை, வேர் பார்க்காமல் இழுத்துக்கொண்டு ஓடின. மரமேற்றும் காட்டுப் பாதையால் விரைந்து உலுவிந்தங் கெட்டொன்றை முறித்து. ஈரப் புத்தொன்றில் சில்லு ஏறி வண்டில் தடத்தில் ஓட ஆரம்பித்தது. தான் தளர்ந்து கொண்டு போவதை உணர்ந்த கனகன் செங்காரியின் கயிற்றை இழுத்தபடி பாதையை மாற்றிக் காட்டி ''வீட்...ட போங்கோடா வீட்ட...வீட்ட...அம்மா...ஐயோகிளி'' கிறாதியில் சாய்ந்தபடி முனகினான்.

நன்றியுள்ள சிங்கன் கலவரப்பட்டு முன்னே பாய, நரையனும் செங்காரியும் எசமானுக்கு விசுவாசங்காட்டத் தொடங்கின. வயலோர நிலத்தில் மலர்ந்து கிடந்த செங்கழு நீர்களும், கருங்குவளைகளும் வண்டில்ச் சக்கரத்தில் நெரிந்து சாய விரைந்தது வண்டில். பாதையைக் குறுக்கிட்ட முயலின் முகத்திலும் மருட்சி.

''ஓடுங்கோடா ராசா....ஓடுங்கோடா நான் கிளியப் பாக்கோணுமடா...ஓடுங்.கோடா...ஐயோ பாக்கியநாதா...''

யானை முறித்து விட்டுப்போன விண்ணாங்குத் தடியை நரையன் தலையால் ஏற்றிவிட்டு வேகத்தை மேலும் கூட்டியது.

இருள் கவிந்து கொண்டிருந்தது. கனகன் வண்டிலின் குலுங்கலில் அனுங்கினான். ஓங்கி வளர்ந்த பாலையும், முதிரையும், யாவறணையும் காத்துக்குப் பேயாட்டமாடின. மேகம் மின்னினான். இடி இடித்துச் சிரித்தான் கோரமாக!

கனகனுக்கு விஷம் தலைக்கேறிக் கொண்டிருந்தது. மழை கொட்ட ஆரம்பித்தது.

''ஆ...காட்டா விநாயகா..!..!.செங்காரி..ஓடுடா...ஓடுடா ஓடிப்போடா கிளீட்டக் கொண்டு போங்கோடா...'' அழுதான். கதறிக்கதறி அழுதான்.

எழுதுகளின் கொம்புகளில் படிந்திருந்த செம்புற்றுமண் மழையில் கரைந்து கண்ணருகிலே வழிந்து இரத்தக் கண்ணீர் போலச் சிந்தியது.

இடிகட்டைகள் கனகனின் இறுதி நிமிடங்களாய் வீதியில் விழுந்து கொண்டு வந்தன.

வீடுவந்தது.....கனகனின் வீடு வந்தது. சிங்கன் குரைத்தபடி கண்டாயத்தால் சேறு சிதறி நுழைந்தான். கடார்...கடார்....கண்டாயத் தடிகள் உடைந்து நொருங்கி அங்கிங்காக மாலடியில் வந்து நின்றது கனகனின் மருதநிலத்தேர்.

நரையனதும், செங்காரியதும் வாயிலிருந்து வெண்ணுரைகள் மழை நீரில் நனைந்து வெள்ளத்தில் சிந்தியன.

மான் கொடியைக் கையில்ப் பிடித்தபடி, காட்டுக் குழைகள் மார்பை அலங்கரிக்க மழையில் மல்லாந்து கிடந்தான் அவன்.

''மாமி....மாமி....அவர் வந்திட்டார் போல கிடக்கும்....நெருப்பெட்டியத் தாங்கோ'' என்றபடி விளக்கேற்ற முனைந்தாள் கிளி

நாய் திண்ணையடித் தாழ்வாரத்தில் நாக்கைத் தொங்கப்போட்டு நனைந்தபடி இருந்தது.

**சொற்பிரயோகம் தொடர்பான குறிப்புகள் சில**

- வேகாவனக்கிழவா- ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரரை அப்பிரதேச பக்தி மிகுதியால் அழைக்கும் பெயர்.
- சறம் - Sarong - ஒரு வகை ஆண்களின் ஆடை.
- மான்கொடி- கயிற்றுக்குப் பதிலாக, கட்டுதல் முதலிய தேவைகளுக்குப் பயன்படுத்தும் ஒருவகைக் கொடி.
- கோடி - கிராம மக்களின் மலங்கழுவுமிடம், அல்லது குளியலறை.
- இழாவல் - அலட்சியமாகக் கட்டுதல்.
- கெண்டயம் - எருத்து மாடுகளின் கழுத்தில் கட்டும் ஒரு வகை மணி.
- அம்மாளாச்சி- வற்றாப்பளைக் கண்ணகையம்மனை அப்பிரதேச மக்கள் பக்தியோடு சொல்லும் சொல்.
- உமை - வயல் வரம்புகளில் நண்டுகள், போன்ற உயிரினங்கள் ஏற்படுத்தும் துவாரம் .
- இடிகட்டை - வேலியடைக்கும் பொருட்டு வெட்டப்படும் சிறிய காட்டுத்தடி.
- வளையமாகுதல் - வளைவாகச் சுற்றுதல்.
- முதிரை, பாலை, யாவறணை, உலுவிந்தை, விண்ணாங்கு-காட்டுமரங்கள்.

# கணக்கு

திருமதி. செவ்வராணி சின்னையா

வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழாச் சிறுகதைப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற சிறுகதை

புகையிரத நிலைய வீதி,
வவுனியா,
20.06.96.

அன்பும் பண்பும் நிறைந்த திருமதி சுப்பிரமணியம் அறிவது,

நான் இவ்விடம் நலமாக உள்ளேன். நீங்கள் தற்போது கிளிநொச்சியில் தங்கியிருப்பதாகச் சுன்னாகம் சின்னத்தங்கத்தின் மகன் சிவராஜா மூலம் அறிந்தேன். தங்கள் வீடு சேதத்துக்குள்ளாகி இருப்பதாகக் கூறினான். அது குறித்து மனவருத்தப்படுகின்றேன். நீங்களும் மகளும் நலத்துடன் இருப்பதை இட்டு சந்தோசமடைகின்றேன்.

நாம் முன்பு பிரச்சனைக்கு முதல் மக்களின் திருமண விடயம் பற்றிக் கதைத்திருந்தோம். இடையில் நின்ற புரோக்கர் இப்போது எங்கே நிற்கின்றார் என்று தெரியவில்லை. வவுனிக்குளத்திலிருப்பதாகக் கேள்வி. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் பிரிந்ததால் இவ்வளவு நாளும் தொடர்பு கொள்ள முடியாது போய்விட்டது. கடிதத்தில் நீண்டதாக உரையாட முடியாது. எனவே நேரடியாகவே விடயத்துக்கு வருகின்றேன்.

நீங்கள் எங்கள் மகனுக்கு ஊரில் வீடுவளவும் ரொக்கம் மூன்றும் தருகிறேன் என்று முற்றுச்சொன்னீர்கள். அதற்கு நானும் உடன்பட்டேன். ஆனால் இங்கு வந்து நான் இது பற்றி மகனுடன் ரெலிபோனில் கதைத்தேன். சுவிசில் இப்போ முன்போல உழைக்க முடியாதாம். பிரச்சனை தீர இங்கு வந்து ஏதும் தொழில் நிறுவனம் தொடங்க வேண்டுமாம். ஊரில் வீடு வைத்திருப்பதால் பயன் இல்லை என்றும் அதற்காக இன்னும் ஒரு இரண்டைக்கூடத்தந்தால் நல்லது என்று கூறுகின்றான். யோசித்துப் பார்த்ததில் எனக்கும் சரியாகப்படுகின்றது. இது பற்றி யோசித்து நல்ல பதில் ஒன்றைச், சண்முகம் மாஸ்டர் உவ்விடம் வருவார். அவரிடம் கொடுத்து விடுங்கள். மகள் எப்படி இருக்கின்றா. பாடசாலை ஒழுங்காக நடைபெறுவதாகக் கேள்வி. பிள்ளை படிப்பிக்க போகும் என்று நினைக்கின்றேன்.

இப்படிக்கு,
இ. லிங்கநாதன்.

ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி,
30.06.96.


மதிப்புக்குரிய வாத்தியார் அவர்கள் அறிவது,

தங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் நலமாக இருப்பதை இட்டுமகிழ்ச்சி அடைகிறேன். எனது அண்ணரும் தாங்களும் ஊரில் ஒன்றாகப்படிப்பித்தீர்கள். கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுகாலத்துக்கு மேல் உங்களைத் தெரியும். அண்ணரும் நோய்வாய்ப்பட்டுப் போய்ச்சேர்ந்து விட்டார். லிங்கநாதன் சொன்னால் சொல்லுத்தான் பேச்சு மாறமாட்டான் என்று அண்ணர் அடிக்கடி கூறுவார். அப்படிப்பட்ட நீங்கள் இப்படி ஒரு கடிதம் எழுதியிருப்பது கண்டு மிகவும் கவலைப்படுகின்றேன்.

முன்பு பேசிய தொகையே எனது சக்திக்கு அப்பாற்பட்டது. அங்கும் இங்கும் ஓடித்திரியாமல் எனது மகளாவது நிம்மதியாக வாழட்டும் என்றுதான் நான் இதற்கு ஒப்புக்கொண்டேன். எங்கள் நிலமை உங்களுக்கு தெரிந்தது தானே. புதிதாக என்ன கூற உள்ளது. எனது கணவன் இறந்து இவ்வளவு காலமும் நான் தனியாகவே என் குடும்பத்தைக் கொண்டு இழுத்தேன். வீடு காணி வேலி என்று கண்ணும் கருத்துமாக இருந்து சேர்த்த பணமே இதுவாகும். இப்படி ஒரு குறுகிய வட்டத்தினுள் வாழ்ந்தபடியால்தான் இன்று இப்படி நாடோடியாக ஓடித்திரிகின்றோம் என்று நினைக்கின்றேன். படுத்துறங்க ஒரு சீரான இடம் இல்லாமல் நானும் மகளும் மிகவும் கஸ்டப்படுகின்றோம்.

நேரடியாக விசயத்துக்கு வருகின்றேன். என்னிடம் உள்ளது இவ்வளவு தான். ஏதும் உழைத்துத்தர வாங்கித்தர எனக்கு மகன்மார் ஏது? எனவே உங்கள் மனச்சாட்சிப்படி செய்யுங்கள். சுணங்காமல் பதில் போடுங்கள். இழுபறிப்ப டாமல் ஏதாவதொரு முடிவு எடுக்க வேண்டும்.

இப்படிக்கு,
திருமதி. சி. சுப்பிரமணியம்.



புகையிரத நிலைய வீதி,
வவுனியா,
10.07.96.

அன்பும் பண்பும் நிறைந்த திருமதி சுப்பிரமணியம் அறிவது,

தங்கள் கடிதம் ஒரு கிழமைக்குள் கிடைத்து விட்டது. எல்லாம் வாசித்தேன். நறுக்காக எழுதியிருக்கின்றீர்கள். யாதார்த்தத்தை உணராமல் அவசரப்பட்டுக் குற்றம் கூறியுள்ளீர்கள். எனது பக்கத்தையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். எனது தகப்பனார் இறந்த போது கடன் சுமையால் எனது குடும்பம் திண்டாடியது. நான் எனது கடின உழைப்பால் கடன்களைத் தீர்த்துக் குடும்பத்தை இந்த நிலைக்குக் கொண்டு வந்தேன். இரு சகோதரிகளுக்குத் திருமணம் செய்து வைத்தேன். இருவரும் இப்போது நல்ல வசதியுடன் இருக்கின்றார்கள். எனது மகனை வெளிநாடு அனுப்புவதற்காக நான் எவ்வளவோ கஸ்டப்பட்டேன். ஆனால் அவர்களிடமிருந்து ஒரு உதவியும் கிடைக்கவில்லை. எனது முயற்சியினால் மகன் வெளிநாடு சென்று தற்போது தான் உழைக்கத்தொடங்கியிருக்கின்றான்.

அவன் உங்கள் மகளைத் திருமணம் செய்து வாழப்போகின்றான். அவனின் உழைப்பு எல்லாம் இனி உங்கள் மகளுக்குச் சொந்தமானதே. நேடியாகச் சொல்லப்போனால் நான் நட்டுப்பாதுகாத்துத் தண்ணீர் ஊற்றி வளர்த்த பயிரில் இருந்து தாங்களே பலனைப்பெறப்போகின்றீர்கள். நான் எனது பிற்காலத்தில் எனது உறவினர்களை நம்பியே வாழ வேண்டியவன் ஆகின்றேன். எனவே தான் இந்த முடிவை நான் எடுத்தேன். முன்பு கூறியது போல் இது எனது மகனின் யோசனை அல்ல. இப்பொழுது என்மேல் பிழையில்லை என்று உணர்த்திருப்பீர்கள். வேறு பகுதியினரும் சம்மந்தம் பேசி வருகிறார்கள். எனவே தங்கள் பதிலைத் தாமதிக்காது அனுப்புங்கள்.

இப்படிக்கு,

இ. லிங்கநாதன்.

ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி,
22.07.96.

மதிப்புக்குரிய வாத்தியார் அவர்கள் அறிவது,

தங்கள் கடிதம் 21.07.96 அன்று கிடைத்தது கடிதம் வாசித்ததில் இருந்து யோசித்துக் கொண்டே இருக்கின்றேன். எனது மகள் தனித்துப்போவது போல் எனக்குள் ஒரு உணர்வு தோன்றுகின்றது. நீண்ட காலம் இனி நான் இருக்கப்போவதில்லை என்று உணர்கின்றேன். எனது மனதில் பட்டதை யாருக்கும் சொல்லவில்லை. உங்களுக்கே எழுதுகின்றேன். எனது மகளுக்கு இறைவன் ஒரு வழியமைப்பான் என்று நம்புகின்றேன்.

நீங்கள் ஒரு பக்க நியாயத்தை மட்டுமே பார்த்திருக்கின்றீர்கள். மறுபுறத்தையும் எண்ணிப்பாருங்கள். கணவனை இழந்த நான் எனது மகளை ஆளாக்கிப், பட்டதாரியாக்க எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பேன் என்பதை உணரவில்லையா? மகள் இப்பொழுது வேலையில் சேர்ந்து ஒரு வருடமாகத்தான் உழைக்கத் தொடங்கி இருக்கின்றாள். உங்கள் மகனைத் திருமணம் செய்தால் அவள் வெளிநாடு சென்று விடுவாள். நான் வளர்த்த பயிரில் இருந்து தாங்கள் தான் பலன் எடுக்கப்பபோகின்றீர்கள் என்று நான் கூறினால் அதையேற்றுக்கொள்வீர்களா? நானும் யாரையும் அண்டித்தான் எனது பிற்காலத்தை போக்க வேண்டும். இதற்கான செலவை நான் உங்களிடம் கேட்டால், தருவீர்களா? அப்படிக் கேட்க முடியுமா? யோசித்துப்பாருங்கள்.

நீங்கள் பெயர்போன கணக்குவாத்தியார் ஆயிற்றே; கணக்கைக் கூட்டிக்கழித்துப் பாருங்கள். நீங்கள் எனக்குத்தர வேண்டுமா? அல்லது நான் தர வேண்டுமா? அல்லது கணக்கு சமன் செய்வதா? இதற்கு நீங்கள் கட்டாயம் கடிதம் போடத்தான் வேண்டும். இனி இந்த சம்பந்தம் நிறைவேறாது என்றே தோன்றுகின்றது. ஒரு முறை நன்றாக யோசித்து, ஒரு நல்ல பதில் ஒன்றை அனுப்புமாறு யாதித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு,

திருமதி. சி. சுப்பிரமணியம்.

ஸ்கந்தபுரம்,

கிளிநொச்சி,

15.08.96.

மதிப்புக்குரிய வாத்தியார் அவர்கள் அறிவது,

திருமதி. சுப்பிரமணியத்தின் மகள் ராணி எழுதிக்கொள்வது, அம்மா 05.08.96 இல் இறந்து விட்டா. என்னுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப்படித்த எனது சிநேகிதியின் திருமண வீட்டுக்கு மாங்குளம் சென்றிருந்தேன். அன்று எங்கள் வீட்டுப் பக்கம் ஒரே செல் அடியாம். எல்லோரும் சிதறியோட அம்மா மட்டும் அசைய மாட்டேன் என்று சொல்லி இருந்திருக்கின்றா, செல்துண்டுபட்டுக் காயப்பட்டு இறந்துவிட்டா. கடந்த சில நாட்களாக ஏதோயோசித்தபடி இருப்பா. கேட்டால் ஒன்றும் சொல்லமாட்டா. செலவு அன்று அம்மாவின் உடுப்புப்பெட்டியை திறந்தபோது தான் உங்கள் கடிதங்களைக்கண்டேன். இவ்வளவு நாளும் கடிதங்களை மறைத்து விட்டா. நான் பாடசாலைக்குச் செல்வதால் தபாற்காரன் வந்து போவதும் தெரியாது, தெரிந்திருந்தால் அம்மாவை கடிதம் எழுத விட்டிருக்க மாட்டேன்.

அம்மாவிற்குத் தன் மகள் குடியும் குடித்தனமுமாய் இருக்க வேண்டும் என்ற ஆசை. பெண்ணுக்கு திருமணம் என்ற ஒன்று இல்லை என்றால் வாழ்க்கையே இல்லை என்ற கொள்கை உடையவர். எனவே தான் இப்படிப்பாடு பட்டிருக்கின்றா, நான் உழைத்துச் சொந்தக்காலில் நிற்கின்றேன். யாரையும் யாசித்து வாழ்க்கை பெற வேண்டும் என்ற நிலையில்லை. ஒழுக்கமாகச் சந்தோசமாக வாழ்நாள் முழுவதும் என்னால் வாழ முடியும். இப்படி ஒவ்வொரு பெண்ணும் உறுதியாக நின்றால் பிரச்சனையே வராது. அம்மா தனது இறுதிக்காலத்தில் கவலைகளுடன் இறந்து விட்டா என்றுதான் எனக்குக்கவலையே தவிர, எனது திருமணம் குழம்பியது குறித்து, கவலையில்லை. எனவே நீங்கள் தங்கள் மகனுக்கு நல்ல இடமாகப்பார்த்துத் திருமணம் செய்து கொடுங்கள்.

இப்படிக்கு,

சு. ராணி.

புகையிரத நிலைய வீதி,
வவுனியா,
28.08.96.

அன்பின் பிள்ளை ராணி அறிவது,

உமது கடிதம் கிடைத்தது. மிகவும் மனம் நொந்து போனேன். அம்மா கடைசியாக எனக்கு எழுதிய கடிதத்தை எடுத்து வாசித்தேன். மிகவும் வருத்தமாக உள்ளது. இப்படிச் சீக்கிரம் ஒரு முடிவு அவவுக்கு வரும் என்று நான் எண்ணவில்லை. நானும் மனச்சாட்சியுள்ளவன் தான் பிள்ளை. இடையில் கொஞ்சம் பேதலித்து விட்டேன். சுயபுத்தியில்லாமல் மற்றவர்களின் தூண்டுதலால் இப்படி நடந்துவிட்டேன். பிள்ளை என்னை மன்னித்துவிடு. நான் விரைவில் புறப்பட்டு அங்கே வருகின்றேன். அம்மாவின் 31 முடிய என்னுடன் வந்து விடு. இங்கிருந்து அலுவல் பார்த்து உன்னைச் சுவிசுக்கு அனுப்பி வைக்கின்றேன். எனது மனநிலையைப்புரிந்து கொண்டு இதற்கு மறுக்க மாட்டாய் என்று எண்ணுகின்றேன். மீண்டும் மன்னிப்புக்கோரி விடை பெறுகின்றேன்.

இப்படிக்கு,

இ. லிங்கநாதன்.

*சமூகமோ சுடுகாட்டில்*
*ஆனால்*
*துப்பாக்கிகள் மட்டும்*
*நிதர்சனமான அறைகளுக்குள்*
*குளிர்காய்கிறது!*

**எம்.ஏ.எம். மசூத் அஹமத்**
**காத்தான்குடி.**

*மனித மண்டை ஓடுகள்*
*நாளுக்கு நாள்*
*உலக சந்தையில்*
*மலிவு விற்பனை.........!*

•

*அதற்கு வெகுமதி*
*'துப்பாக்கி ரவை''*

**எம்.ஏ.எம். மசூத் அஹத்,**
**காத்தான்குடி.**

**இரத்ததானம்**

*நானும் இப்போது*
*இரத்ததானம்*
*செய்கின்றேன்*
*என் வீட்டு*
*மூட்டைப்பூச்சிகளுக்கு*

**மரியலிட்வினா மரியதாஸ்,**
**திருகோணமலை.**

# கூத்து -
# அமைப்பும், அழகியலும் அதன் அரசியலும்

சி. ஜெயசங்கர்

இக்கட்டுரை மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடிக் கூத்துகளின் அமைப்பையும் அழகியலையும் ஆராய்கின்றது. கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கு மேற்கொண்ட மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் என்ற ஆய்வினையும்; கூத்தரங்கக் கள அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

எமது பாரம்பரிய அரங்க அளிக்கை, மேற்கத்தைய அரங்க அறிக்கையில் இருந்து வேறுபட்டது. இன்று எம்மில் ஏற்பட்டுள்ள அரங்கு பற்றிய மனப்பதிவு மேற்கத்தைய அரங்கின் செல்வாக்கால் ஏற்பட்டிருப்பது. எமது பாரம்பரிய அரங்கு கூத்து அல்லது நாட்டுக்கூத்து என்று அழைக்கப்படுகின்றது. இதற்கேயான வரலாறும், காரணங்களும் இந்த அரங்கிற்கு இப்பெயர் அமையக் காரணமாயிற்று.

பாரம்பரிய அரங்கு மகிழ்வூட்டலுக்கும், அறிவூட்டலுக்கும், மக்கள் ஒருங்கு கூடுவதற்குமான களமாக அமைவதுடன் சடங்கு சார்ந்து பக்திக்குரியதாகவும் அமைகிறது. இதனை கூத்துக்களின் வாழிபாடுதலில் காண முடியும். கூத்தின் நோக்கம் நாடும், வாழ்வும் சிறக்கவே ஆடப்படுகிறது என்பது தெளிவாகிறது.

குருகேத்திரன் போரில் வரும் வாழி விருத்தம் பின்வருமாறு அமைகிறது.

''பாரெல்லாம் ஓரடியால் அளந்த மாயனோடு
பஞ்சபாண்டவரும் வாழி
கார் மழை பொழிந்து செந்நெற் கழனிகள்
செழிக்க வாழி
வீரமோடரசு செய்யும் வேந்தர்கள்
செங்கோல் செழிக்க
பாரினிற் குருகேந்திரன் நாடகம்
பாடினோர் வாழ்க வாழி''

சமயச் சடங்குகளுக்கும் நாடகங்களுக்குமான தொடர்பை தெளிவாக இனங்காட்டும் இடமாகவும் இது அமைகிறது.

எமது மனதில் பதிந்துள்ள மேற்கத்தைய நாடக அனுபவத்திலிருந்து கூத்து அனுபவம் வேறுபடுகிறது என்று பார்த்தோம். எமது பாரம்பரிய அரங்கு சமூக மட்டத்தில் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த அல்லது பழக்கப்பட்ட ஒன்றாக சிறுபராயம் முதலே புழங்கி வருகிறது. இதனையே மரபுரீதியான அரங்கு என்றும் கூறுகின்றோம்.

மரபு என்பது எங்களுடைய அர்த்தத்தில் ஒரு வகைப்பாடானதாக (GENRE) அல்லது அதற்கும் சற்றுப் பொருள் கூடினதாகக் கொள்ளப்படுகிறது. மரபு என்பது காலாகாலமாகப் புழங்கிவரும் செயல் அல்லது இயக்கம்.

அளிக்கை மரபென்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட உணர்வும், சிந்தனையும் செயல்வழிப்பட்டு தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்த விடயமாகும். அல்லது அளிக்கை நுட்பங்கள், எழுத்துரு, அழகியல் கோட்பாடுகள், விதிகள் என அந்த வகையைத் தீர்மானிப்பவற்றின் தொகுத்த அறிவாகும். தலைமுறை தலைமுறையாக அது வருவதே அந்த மரபின் அதிகாரத்திற்கும் **(AUTHORITY)** தனித்துவத்திற்கும் **(AUTHENTICITY)** காரணமாகும்.

கூத்து அரங்கு, குறித்த ஒருமொழி பேசும் பிரதேசத்திற்குரியதாக இருக்கும். இந்த வகையில் ஈழத்தமிழர்களது பாரம்பரியப் பிரதேசங்களின் தொடர்ச்சியையும்; தொன்மையையும் வெளிப்படுத்தி நிற்பவையாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் விளங்குகின்றன.

இந்த அரங்கில் அசுரத்தன்மை நிறைந்த பாத்திரங்கள் சவால் நிறைந்தவையாகவும்; இதன் காரணமாக கவர்ச்சி நிறைந்தவையாகவும்; தெய்வத்தன்மைமிக்க பாத்திரங்கள் அவ்வாறு தோற்றம் காட்டுவதன் மூலமே கவர்ந்து விடுவனவாகவும், அதாவது பக்தி அனுபவத்திற்குரியவையாகவும் அமைந்து விடுகின்றன. கூத்தரங்கில் என்ன நடக்கப் போகின்றதென்பதல்ல பார்வையாளரின் எதிர்பார்ப்பு. எப்படி நடக்கிறது என்பதே அவதானிக்கப்படுகிறது, அனுபவிக்கப்படுகிறது.

கூத்தரங்கு; இசை, நடனம், நாடகம் என்பவற்றின் ஒத்திசைவில் முழுமை பெறுகின்றது. இந்த அரங்கில் கூட்டாக இயங்கும் கலைஞர்கள்; வார்த்தைகளால், இசையால், சத்தங்களால், வெளிகளால், அந்த வெளியில் நிகழும் அசைவுகளால், கட்புலக் கோலங்களால், முழுமையான ஒரு அளிக்கையை உருவாக்குகிறார்கள். இசையும், அசைவும் இந்த அரங்கின் பிரிக்க முடியாத அடிப்படைகள். இந்தக் கூட்டு அளிக்கையின் தனித்த ஒவ்வொரு கலைஞனும் குறித்த ஒரு கலைப்பிரிவில் நிபுணத்துவம் பெற்றுள்ளமையுடன் ஏனைய அனைத்து விடயங்களிலும் தாடன முள்ளவனாக இருப்பான். இது கூத்தரங்கின் தவிர்க்க முடியாத அம்சம்.

நாட்டிய சரித்திரம் கூறும் நிருத்த, நிருத்திய, நாடக அம்சங்களும்; தாண்டவ, லாஷிய அம்சங்களும் கூத்தரங்கிற்குமுரியவை. நடனங்களில் லாஷ்யம் இல்லாமல் தாண்டவம் மட்டும் முழுமை பெறாது. இவ்வாறான நிலை முழுமையற்றதும்; சமநிலையற்றதுமாகும். சிவன், சக்தியில்லாமல் இருப்பது சமனற்ற தன்மையையே உருவாக்கும். எதிரெதிரான இயக்கங்கள் மூலம் சமனிலை பேணுவது இந்துத் தத்துவ அடிப்படை. இது மரபுரீதியான அரங்கில் அவதானிக்கப்படுகிறது. இந்தியத் தத்துவத்திற்கும்; இந்திய அரங்கிற்குமான தொடர்பை இது விளக்குகிறது.

எமது மரபுரீதியான அரங்க அழகியல் இந்து சமயத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அரங்க வளர்ச்சியில் சமயம் முக்கிய பங்கு வகித்துள்ளது. அதுவும் இந்து சமயம் இந்த அரங்கில் மேலாண்மை செலுத்தி அதன் வடிவத்தைத் தீர்மானித்திருக்கிறது.

எல்லா வகையான இந்து அளிக்கைகளும் பொதுவான சமயத் தத்துவ நோக்கையே கொண்டுள்ளன. இந்த வாழ்வு மாயமானது; பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற வட்டத்தின் ஒரு பகுதி. வாழ்வின் தளைகளில் இருந்து ஆன்மாவை விடுவிக்கும் பாதையைத் தேடுவதும் அதனை அடைவதுமே நிரந்தர விடுதலை என்பதாக இது அமைகிறது.

இதனைச் சாதாரண மக்கள் மனதில் பதிய வைக்கும் சாதனமாக கூத்தரங்கு தொழிற்படுகிறது. இந்த நோக்கத்தை அடையவே கூத்தின் அமைப்பும், அழகியலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சமண, பௌத்த மதங்களின் வருகையின் பின்னர்தான் விதிக்கோட்பாடு தமிழர் மத்தியில் ஆழமாக வேரூன்ற ஆரம்பித்தது. பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் எழுந்த சமய மறுமலர்ச்சி இந்த விதிவாதத்தை ஜீரணித்துக் கொண்டது.

விதியையும் வெல்லும் இறைவனை பக்தி இயக்கம் சிருஷ்டித்துக் கொண்டது. எனவே விதியால் அலைக்கழிக்கப்படினும் இறைவன் அருளால் அனைத்தும் நீங்கிச் சுகம் கிடைக்கும் என்ற இறைகோட்பாடு தமிழர் சமய வாழ்வில் கலந்தது, இவ்விந்துமதக் கோட்பாட்டின் பின்னணியில் எழுந்த நாடகங்களில் அவல முடிவு ஏற்பட இடமிராது. கழுத்தை வெட்டும் வேளையில் வாள் மாலையாகும். கடவுளின் தரிசனம் கிடைக்கும். பக்திபூர்வமாக எல்லாம் நிறைவுபெறும்.

இந்த அடிப்படையில் வடமோடி, தென்மோடிக் கூத்தின் அமைப்பையும், அழகியலையும் பார்ப்போம்.

மேற்படி கூத்து, காப்பு விருத்தம், கட்டியகாரன் வரவு, அரசன் தோற்றம், தேச விசாரணை, நாடகசாலைப்

பெண்கள் என்பவை அடங்கிய நாடக ஆரம்பத்தையும்: சிக்கல், வளர்ச்சி, உச்சம் என்ற நடுப்பகுதியையும்; முனிவர் தோன்றல், சிக்கலைத் தீர்த்தல், பறையன் வருதல், பறையறைதல், திருமணம் நடத்தல், வாழிபாடல் என்னும் முடிவுப் பகுதியையும் உடையதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

கூத்தின் ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற ஐந்து படிநிலைகளில் வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் ஆரம்பமும் முடிவும் பெரும்பாலான நாடகங்களில் ஒன்றாகவும் மரபு பேணும் தன்மையுடையதாகவும் இருப்பதனைக் காண முடிகிறது.

சிக்கல், வளர்ச்சி, உச்சம் ஆகிய மூன்று படிநிலைகளையும் கூத்தின் இடைப்பகுதி என அழைக்கப்படுகிறது. இப் பகுதிகூத்தின் கதையோட்டத்திற்கு அமைக்கப்படும். இதனால், சிக்கல், வளர்ச்சி, உச்சம் என்பவற்றில் கூத்துக்கள் வேறுபடும்.

கூத்தில், வட்டக்களரியின் மையத்தில் நிற்கும் சபையோர், கூத்தினை ஆரம்பித்து வைத்து பாத்திரங்களை அறிமுகம் செய்வதும்; நாடகக் கதைத் தொடர்பை விளக்குவதும், அறங்களை எடுத்துக் கூறுவதும், பாத்திரங்களுடன் உரையாடி கருவையும், பாத்திரத்தின் தன்மையையும் வெளிப்படுத்துவதும்; கூத்தினை முடித்து வைப்பதும்; பிற்பாட்டுப் பாடுவதும், கூத்தருக்கு நினைவூட்டுவதும்; கூத்தர் தோன்றாதவிடத்து வேறு பாடல்களைப் பாடிச் சபையை மகிழ்விப்பதுமாகத் தொழிற்படுகின்றனர்.

மத்தளத்தில் களரியடியுடன் தொடங்கும் கூத்து கூத்த ரங்கில் பக்திபூர்வமான அனுபவத்திற்கு தயார் செய்கின்றது. பார்வையாளரை கூத்தில் கவனம் செலுத்த வைக்கிறது.

களரியடி முடிந்ததும் சபைக்கட்டு என்ற தருக்கள் படிக்கப்படும். இச்சபைக்கட்டு பெரும்பாலும் பிள்ளையாரைத் துதிப்பதாக அமைந்திருக்கும். கூத்தின் கதையைப் பாட உதவிபுரியும்படி பிள்ளையாரை வேண்டுவதாக இது அமைகிறது.

வடமோடி நாடகங்களிலும், சில தென்மோடி நாடகங் களிலும் சபைகட்கு இருப்பதில்லை. மாறாக, விருத்தப் பாங்கில் அமைந்த காப்புச் செய்யுள்களே உள்ளன. காப்பு விருத்தம் பிள்ளையாரைத் தொழுவதாகவும், கருவை உணர வைப்பதாகவும் அமைகிறது.

இக்கூத்துகள் பெரும்பாலானவற்றில் காப்பு விருத்தம் முடிய கட்டியகாரன் வரவு இடம்பெறுகிறது.

''முண்டாசு சிரசணிந்து கவசம் பூட்டி
முறுக்கிய மேல் மீசை யொருகையாற் கோகி
தண்டா மென்றிடப் பிரம்பு கையிலேந்தி
சபையிலுள்ளோர் அதிசயிக்கத் தகைமைகூறிக்
கண்டோர் கைதொழ நடந்து வாணன் வாசல்
கட்டியகாரன் சபையில் கடிதுற்றாரோ''

''சிறிராமச் சந்திர மூர்த்தியும் தம்பிமாரும் கொலுவுக்கு வருகிறார்கள். நான் தெருவீதி போகிறேன். வெகு பராக்கு எச்சரிக்கை. ஒருவரும் பேசக்கூடாது. பேசினால் தண்டம். குற்றம்'' என்று கூறிச் செல்கிறான் கட்டியகாரன். அவன் தனது உரையாடலினூடாக பார்வையாளரை நாட்டு மக்களாகக் கருதி அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கிறான். கூத்தின் அமைப்பும் அழகியலும் அற்புதமாக வெளிப்படும் சந்தர்ப்பங்களில் இதுவுமொன்று. இந்தச் சந்தர்ப்பத்தில் அரங்கு அவைக்களமாகக் கருதப்பட்டு விடுகிறது. பார்வையாளரும் கூத்துக்குத் தயாராகி விடுகி றார்கள்.

கட்டியகாரனின் கூற்றுக்களிலும்; தன்மையிலும் கூத்துக்குக் கூத்து வேறுபாடுகள் இருப்பினும் தோற்றம், பாடும் முறை, அரசன் வரவைக் கட்டியங்கூறும் வகை என்பவற்றில் அதிக வேறுபாடு இருப்பதில்லை.

கட்டியகாரன் இப்படி இப்படித்தான்; இன்ன இன்ன நேரங்களில் வருவான், வரவேண்டுமென்ற திட்டவட்டமான வரையறைகள் இல்லை. எனவே இந்த நெகிழ்ச்சித் தன்மையையே புதிய சாத்தியப்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் கூத்தில் வரும் முனிவர், நாரதர் போன்ற பாத்திரங்கள் புலவனின் தேவைக்கும், கற்பனைக்கும் ஏற்ப எல்லைகளை விரிவுபடுத்திக் கொடுக்கும் பாத்திரங்களாகக் காணப்படுகின்றன.

கட்டியகாரனை உதாரணமாகக் கொண்டு அல்லது கட்டியகாரனை விளங்கிக் கொண்டதிலிருந்து கூத்தின் பாத்திரங்கள் பற்றிய பொதுவிதியொன்றிற்கு நாங்கள் வரலாம். அதாவது கூத்தின் பாத்திரங்கள் தட்டையானவை எவ்வாறு கழுத்தின் அசைவையும்; கைவிரல்களது பயன்பாட்டையும் கொண்டு முகமூடிக்குப் பலவித அர்த்த பாவங்களைக் கொடுப்பது போல தட்டையான கூத்தின் பாத்திரங்களுக்கும் புதியதும்; ஆழமானதுமான அர்த்தபாவங்களைக் கொடுப்பது சாத்தியமானதென்று கருதுகிறேன். ஏனெனில் கூத்தின் பாத்திரங்களது அசைவைக் கவனித்தால் அவை பாவைகளின் அசைவை ஒத்ததாக இருக்கக் காணப்படுகிறது (கூத்து, பாவைக்கூத்தின் பரிணாம வளர்ச்சி என்ற கொள்கை இருப்பதும் இங்கு கவனத்திற்கு உரியதாகிறது) எனவே கூத்திற்கான நடிப்பினை கூத்துக்குள் தேடுவது சாத்தியமானதும் சாதகமானதுமான அம்சமாகும். ஏனெனில் கூத்தின் மொழி ஆடலும் பாடலுந்தான். இவற்றுடன் கூத்து அளிக்கையில் அசைவுகள், சைகைகள், செயல்கள் என்பனவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மூலக்கூத்தை ஒத்தே மற்றைய கூத்துகளும் பாடப்பட்டுள்ளனவே அன்றி அதிலுள்ள கூறுகளை பல்வேறு பரிமாணங்களில் சிந்தித்துப் பாடுவது அன்றைய புலவனுக்கு பலவழிகளாலும் சாத்தியமற்றதாகவே இருந்திருக்கிறது. அவற்றுள் ஒன்று மரபு என்ற கட்டுப்பாடு. மற்றையது புலவனின் அனுபவ எல்லையின் மட்டுப்பாடு. ஒரு வாய்பாட்டின் கீழ் இயங்கியமையால் கூத்தின் பல பரிமாணம் சாத்தியமற்றுப் போனது. மேலும் கூத்தானது சமயம் சார்ந்து இயங்கியதும்; சாதி சார்ந்து நின்றதும் அதற்குப் பாதகமாகிப் போனது.

இங்கு முன்வைக்கப்படும் கருத்து என்னவென்றால், கூத்தின் அமைப்பை, அதில் வரும் பாத்திரங்களை, கையாளப்படும் உத்திகளை பூரணமாக உள்வாங்கிக் கொள்வதன் மூலம் கிரேக்க நாடகங்களுக்கு ஒப்பான கூத்துகளை ஈழத்தமிழரது கூத்தரங்கங்களில் பிரசவிக்கலாம் என்ற நம்பிக்கை இந்த ஆய்வை மேற்கொண்டிருக்கின்ற வேளையில் ஏற்பட்டுள்ளது. நவீன புனைகதைக்காரருக்கோ அல்லது கவிஞருக்கோ கிடைக்கக் கூடிய வாய்ப்பும் வளமும் கூத்தரங்கிலும் கிடக்கிறது. தேவைப்படுவதெல்லாம் தெளிந்த நோக்கும் தீர்க்கமான செயற்பாடுந்தான்.

கூத்தில் கையாளப்படும் உத்திகள் வலிமை வாய்ந்தவையும்; சுவாரசியம் மிக்கவையுமாகும். அவையாவன கனவு, சகுனங்கள், அசரீரி, கடிதம், தனிமொழி, பின்வருவன கூறல், மந்திரம் போன்றனவாகும். இவை நாடகப் போக்கினைத் திருப்ப அல்லது வளர்த்துச் செல்லப் பயன்படுகின்றன.

கூத்துகளில் கதையை வளர்த்துச் செல்ல அதிகமாகவும்; சிறப்பாகவும் பயன்படும் உத்தி சபை விருத்தம் அல்லது சபைத்தரு அல்லது சபை வசனமாகும். இவை ஏழு வகையாக உதவுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

1) பார்வையாளரை ஆயத்த நிலைக்கு உள்ளாக்கல்.
2) குறிப்பிட்ட சில காட்சிகளை விளக்கல்.
3) காட்சி மாற்றங்களைத் தெரிவித்தல்.
4) காட்சி மாற்றங்களை மேலும் விளக்கல்.
5) மேடையிற் காட்ட முடியாத காட்சிகளை விளக்கல்.
6) நாடகத்தை விறுவிறுப்பாக்கல்.
7) நாடகத்தை முடித்து வைத்தல் என அவை அமைகின்றன.

இவ்வாறாக கூத்தின் கதைத்தொடர்புகளை விளக்கி கதையை நடத்திச் செல்பவராக சபையோரும் அண்ணாவியாரும் அமைய, கூத்தை ஆரம்பித்து வைத்து வரப்போகும் அரசன் பெருமை கூறி பார்வையாளரை கூத்துக்குத் தயார்படுத்தும் பாத்திரமாகக் கட்டியகாரன் அமைகிறான்.

கட்டியகாரன் அரசன் வரவை உரைத்துச் சென்றதும் அரசன் மந்திரியுடனோ அல்லது மனைவியுடனோ கொலுவுக்கு வருதல் வழமை, வந்து, மந்திரியிடம் நாட்டுவளப்பம் வினவுகிறான். இது தேசவிசாரணை எனப்படும். தேசவிசாரணையில் ''மாதம் மும்மாரி பொழிகிறதா?'' ''மாதர் கற்போடு இருக்கிறார்களா?'' ''ஆலயங்களில் ஆறுகாலப் பூசை நடைபெறுகிறதா?'' என்று விளப்பம் கேட்பது பொதுவான அம்சம்.

இதனைத் தொடர்ந்து, அரசவையில் நாடகசாலைப் பெண்கள் தோன்றி நாட்டியம் புரிவதாகும். இந்நாடகப் பெண்கள் சிருங்கார ரஸமான பாடல்களைப் பாடி ஆடுகிறவர்களாகவே கூத்துகளில் வருகிறார்கள். இது கூத்தரங்கங்களில் பெருங்காட்சித்தன்மையை ஏற்படுத்துகிறது. இந்த நாடகசாலைப் பெண்கள் தென்மோடிக் கூத்துகளில் இடம்பெறுவதில்லை.

இதுவரை குறிப்பிட்ட காப்பு விருத்தம், கட்டியகாரன் வரவு, அரசன் தோற்றம், தேச விசாரணை, நாடகசாலைப் பெண்கள் என்பன கூத்துகளின் ஆரம்பத்தில் பேணப்படும் மரபுகளாகும்.

கூத்துகளில் ஆரம்பமும், முடிவும் பெரும்பாலும் மரபுபேண நடுப்பகுதியே கூத்தின் தனித்துவத்தைத் தீர்மானிக்கிறது. அதாவது கூத்தின் ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம் முடிவு என்ற ஐந்து நிலைகளில் ஆரம்பமும் முடிவும் பெரும்பாலான கூத்துகளில் ஒரேமாதிரியாகவும்; மரபுபேணும் தன்மையுடையதாகவும் காணப்படுகிறது. சிக்கல், வளர்ச்சி, உச்சம் ஆகிய பகுதிகள் கூத்தின் கதையோட்டத்திற்குத்தக அமைக்கப்படும். இதனால் சிக்கல், வளர்ச்சி, உச்சம் என்பவற்றில் கூத்துகளில் வேறுபாடு காணப்படுகிறது.

கூத்தின் ஆரம்பத்தை அடுத்த புள்ளியிலிருந்து சிக்கல் ஆரம்பமாகிறது. அதனைத் தொடர்ந்து கதையைப் பின்னுவது, ராகத்தைத் தெரிவது புலவனைப் பொறுத்தது. இந்தப் பகுதியே நவீன புனைகதை ஆசிரியனுக்குரிய சுதந்திரத்தை கூத்தைப்பாடும் புலவன் அனுபவிக்கும் இடமாகும். ஆனால் மூலக்கூத்தையே (தாய்க்கூத்து) மரபாகக் கொண்டு அதன் எல்லைகளுக்குள் நின்று பாடுவதால் இருக்கும் சுதந்திரத்தைத் தானாக இழந்து விட்டிருக்கிறான். இது கூத்துகளை ஒரேவிதமாக நகரச் செய்து விடுகிறது. இது கூத்துகளுக்கு ஒரே மாதிரியான தோற்றப்பாட்டைக் கொடுத்துவிட்டிருக்கிறது. கற்பனைக்குறைவும் இதற்கு மற்றொரு காரணமாகும்.

வடமோடியில் புராண இதிஹாசக் கதைகளே அதிகம். இதில் சிருங்கார ரசம் அருகியே காணப்படுகிறது. தென்மோடியில் சிருங்கார ரசங் கொண்ட கற்பனைக் கதைகள் கருக்களாக கையாளப்பட்டிருக்கின்றன. கூத்தரங்கில் கற்பனைக் கதைகளைக் கையாளுவது வழமையாக இருக்கிறது. எனவே சமகாலக் கதைகளைக் கையாளுவதற்கும் தடைகள் இருக்க முடியாது.

கூத்தின் அமைப்பில் நெகிழ்ச்சித் தன்மை இருப்பது ஏற்கனவே மேலே அவதானிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் கூத்துக்கு கருக்களைத் தெரிவு செய்வதிலும் கட்டுப்பாடுகள் இல்லை என்பதும் அவதானிக்க முடிகிறது.

கூத்தின் அமைப்பினதும்; அழகியலினதும் காலம் கடந்து போயிற்று என்ற வாதம் அர்த்தமற்றுப் போவதும் இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. கூத்தரங்க அனுபவம் பிரதேச எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டி ருப்பினும்; வல்லமைமிக்க புலவனதும், அண்ணாவியினதும் கைகளில் அது எக்காலத்திற்கும்; எத்தேசத்திற்கும் உரியதாக மாறிவிடும் வல்லமை கொண்டதாய் இருப்பதையும் கண்டு கொள்ள முடிகிறது.

கூத்தின் நடுப்பகுதி சிக்கலில் ஆரம்பித்து வளர்ச்சி அடைந்து உச்சி நிலைக்கு வரும், இந்த இடத்தில் விடயத்தைத் தர்க்கபூர்வமாகத் தீர்க்க முடியாதவிடத்து முனிவர் பாத்திரம் தோன்றி சிக்கலை விடுவிக்கும். இது கூத்துக்கலைக்குக் கிடைத்த ''லைசென்ஸ்''. கூத்தரங்கில் நாரதரும் இப்பணிக்குப் பயன்படுத்தப்படுவதுண்டு.

கூத்தின் முடிவுப் பகுதியில் முனிவர் தோன்றல், சிக்கலைத் தீர்த்தல், பறையன், வருதல்,பறை அறைதல், திருமணம் நடத்தல், வாழிபாடல் என்பன அடங்கும். கூத்தில் மங்கல முடிவு என்பது மரபாகும். தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும், இறைவன் கிருபையால் இறுதியில் இன்பம் வரும் என்பவையே கூத்தின் அடிநாதமாகும்.

கூத்தின் நிறைவில் வழிபாடுதலிலும் கூத்தின் நோக்கம் வெளிப்படுகிறது, குருகேத்திரன் போரில் வரும் வாழி விருத்தம் பின்வருமாறு அமைகிறது.

பாரெலாம் ஓரடியால் அளந்த மாயனோடு
பஞ்சபாண்டவரும் வாழி
கார் மழை பொழிந்து செந்நெற் கழனிகள்
செழிக்க வாழி
வீரமோடரசு செய்யும் வேந்தர்கள்
செங்கோல் செழிக்க
பாரினில் குருகேத்திரன் நாடகம்
பாடினோர் வாழ்க வாழி

கூத்து, அதை ஆடும் மக்களின் வாழ்வாகவும், வழிபாடாகவும், வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் காணப்படுகிறது. அதன் அமைப்பும் அழகியலும் அதற்குத்தக அமைந்திருக்கிறது. கூத்து சமூகத்தையே பார்க்கிறது, தனிமனிதனையும் அவனுடைய சிக்கல்களையும் அல்ல. மேலும், கூத்தில் தர்மம் முக்கியத்துவமுடையதாக

இருக்கிறது. தர்மத்தின் பக்கம் அதன் எதிர்ப்பக்கம் என்றே பார்க்கப்படுகிறது.

இதனை வெளிப்படுத்த ஆடல், பாடல், தாளக்கட்டு, சொற்கட்டு, மத்தள அடி, சல்லாரி என்பவற்றுடன் கூத்தன் தட்டையான பாத்திரத்தைக் கட்டிக்கொள்கிறான். கூத்துப் பாத்திரங்கள் தட்டையாக இருப்பதற்கு மற்றுமொரு காரணம், மேற்படி பாத்திரங்களின் தனித்துவமான சிக்கல்கள் முழுமையாகக் கருத்திற் கொள்ளப்படாமல், அவை தர்மத்தின் பக்கமா அல்லது அதர்மத்தின் பக்கமா நிற்கின்றன என்று பார்க்கப்படுவதால் ஆகும். ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கும் முகமூடியைப் போல, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தைக் கட்டி ஆடுவபனாகவே கூத்தன் காணப்படுகின்றான். கூத்துப் பாத்திரத்தை ஏற்கும் கூத்தன் தான் அதுவாகவில்லை.

இவை காரணமாக கூத்தில் இராவணனுக்கு யார் ஆடினாலும் லாவகம் தவிர்த்து பெரிதாக வித்தியாசம் தெரியவராது. இராவணத்தனத்தில் மாற்றமிருக்காது. கூத்துப் பாத்திரங்களை வியாக்கியானப்படுத்த இடமிருந்தாலும்; கூத்தன் அதனை அறியாதவனாக மரபுரீதியாக அறிக்கை செய்யப்படுவதையே ஒப்புவித்துக் கொண்டிருப்பான். பலவீனமான அறிவுப்பின்புலத்தில் மரபு என்ற கட்டுப்பாடு இவ்வாறாகக் கூத்தனை கட்டிப்போட்டிருக்கிறது. இதன் காரணமாகவே சேக்ஸ்பியர் அரங்கில் கூறப்படுவது போன்ற ஒலீவியரின் ஹம்லெற், றிச்சேட் பேட்டனின் ஹம்லெற் எனப் பாத்திரத்தை வியாக்கியானிப்பதை அடிப்படையாக கொண்டு அழைக்கப்படுவதை கூத்தரங்கில் காண முடியாது. இதனை ஓரளவிற்கு இசை நாடக நடிகர், நடிகையரிடம் அவதானிக்க முடிகிறது. இசை நாடகம் தொழில் முறையாக வளர்ந்திருந்ததும்; அதிலீடுபட்டவர்களது அறிவுப்பின்புலமும் இதனைச் சாத்தியமாக்கி இருக்கிறது. கூத்தரங்கில் இராவணனுக்கு இன்னார் ஆடினால்...என்ற பொச்சடிப்புத்தான் இருக்கும்.

மேலும் கூத்தின் பாத்திரங்கள் நேரடியானவை, வெளிப்படையானவை

''கொங்கையைத் தழுவிக்கொண்டு
கோல இதழ் அமிர்த முண்டு
வாழ்ந்திருக்கலாம் வா''

என்று கூத்தில் வரும் இராவணனால்தான் அசோகவனத்தில் இருக்கும் சீதையிடம் கேட்க முடியும். இந்தத் தைரியம் கம்பனின் இராவணனுக்கு வரவே வராது. இங்கு கூத்தைப் பாடிய புலவன் இராவணனுக்கு வியாக்கியானம் கொடுத்திருக்கிறான். ஆனால் கூத்தை அறிக்கை செய்யும் கூத்தர்களிடம் இதனை அரிதாகவே காணலாம்.

கூத்தில் வேடர், பறையர், வண்ணார், வண்ணாத்தி போன்ற பாத்திரங்கள் நகைச்சுவை மிக்கதாக கீழ் நிலையில் படைக்கப்பட்டிருக்கும். அண்ணாவியாருக்கும் பறையனுக்குமான சம்பாஷணை நகைச்சுவை மிக்கதாகவும்; கூத்தாடும் காலத்திற்குரியதாகவும் இருக்கும். இதுவொரு சமூக அங்கதமாகவே இருக்கும். பிரதான கூத்துக்கும் மேற்படி சம்பாஷணைக்கும் தொடர்பேதாவது இருக்க வேண்டுமென்ற கவலை கூத்தரங்கில் இல்லை. அதன் நோக்கம் நேரடியாக எதிர்கொள்ள முடியாத பிரச்சினைகளை அம்பலப்படுத்துவதே ஆகும். இந்த வகையில் கூத்தரங்கு நேரடி அரசியலுடனும் தொடர்புபடுகிறது.

இவ்வாறாக சமூகத்தை வழிப்படுத்தும் சாதனமாக இயங்கிய கூத்து சமூகத்தை விளங்கிக் கொள்ளும் சாதனமாகவும் காணப்படுகிறது. இது சமூகத்தையும் அரங்கையும் புதிது செய்வதன் தேவையையும் உணர்த்துகிறது.

இதற்கு எமது எண்ணத்தை காலனித்துவத்தின் பிடியிலிருந்து விடுவிப்பது அவசியம். கூத்தில் காணப்படும் சாத்தியப்பாடுகளூடு கூத்தின் புத்துருவாக்கம் என்பது உண்மையில் உலகமயமாதல், பூகோளமயமாதல் என்ற, ராட்சதக் குடைக் காளான்கள் போல பூதாகரமாக எழுந்துவரும் நவகாலனித்தவச் சிந்தனைகளுக்கு எதிரான சுதேசியச் சிந்தனைப் போக்கின் முன்னெடுப்பே ஆகும்.

மரபுள் அடங்கிப் போதல் என்ற எமது மரபிலிருந்து எம்மை விடுவிப்பதே இதற்கு அவசியம். புதிய தேடலுக்கு இது எம்மை வழிப்படுத்தும்.




## - ஒரு நோக்கு

**நமசிவாயம் தயானந்தன்,**
இரண்டாம் வருடம்,
இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரி, வவுனியா.

இன்னவை தான் கவியெழுத
ஏற்ற பொருள் என்று, பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்,
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள்! மீதிருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்.

தமிழ்க்கவிதையின் உள்ளடக்கம் குறித்து மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் கருத்து சிந்தனைக்குரியது. சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியமுடையது எமது கவிதை இலக்கியம். சங்க இலக்கியம், இலக்கியப் பொருளை,

அகம்,புறம் என இரண்டு வகையாக பிரித்துள்ளது. தலைவன் தலைவியர்க்கு இடையே அகத்தில் ஏற்படும் உணர்வுகளை சித்தரிப்பது அகப்பொருள் இலக்கியம். அகம் அல்லாத எல்லாம் புறம் எனப் போற்றப்பட்டாலும் போர், ஆட்சிச் சிறப்பு, மக்கட் சிறப்பு, கொடை, முதலியவற்றைப் பொருளாகக் கொண்டது புறப்பொருள் இலக்கியம். அகத்திற்கும், புறத்திற்கும் திணைகள் வகுக்கப்பட்டுள்ளன. பின்னர் அறம், பொருள்,இன்பம் என பாகுபாடு செய்யும் முறை நிலவியது. பின்னர் எழுந்த காப்பியங்கள், இலக்கியங்கள் என்பவை இவற்றையே கவிதைப் பொருளாகக் கொண்டன.

ஒரு காப்பியம் எப்படி அமையவேண்டும், ஒரு பிரபந்தம் எப்படி அமையவேண்டும் என்றெல்லாம் இலக்கணம் உண்டு. ஒரு காவியம் படைக்கப்படும் போது நாடு, நகர், ஆட்சி, மக்கள், தொழில் பற்றிய சிறப்புகள் எல்லாம் விபரித்தே ஆகவேண்டும். இவ்வர்ணனைகள் கம்பன் போன்ற உன்னத கவிஞர்களின் கற்பனைகள் மூலமாக உயர்ந்த இலக்கிய அந்தஸ்து பெற்றுவிடுகின்றன. பின்வந்த சில கவிஞர்களின் கவிதைகள், கற்பனை வளம் குறைந்தவையாகவும், இலக்கிய ரசனை அற்றவையாகவும், தற்புதுமை அற்றவையாகவும் ஆகிவிடுகின்றன. இவை விரும்பிப் படிக்கும் ஒரு வாசகனை கவரமுடியாதவையாகி விடுகின்றன. செய்யுள் இலக்கியமா? இது எங்களுக்கு விளங்காத விஷயம், இதையெல்லாம் படித்துப் பொருளுணர எமக்கெல்லாம், பொறுமை இல்லை என்று வாசகர்கள் கருதுகிறார்கள். சமகால இலக்கிய உலகில் உரைநடை இலக்கியத்துக்குரிய பரந்த வாசகர் கூட்டம் தமிழ்க் கவிதை இலக்கியத்துக்கு இல்லையென்றே கூறலாம். தமிழ்க் கவிதை தொடர்ந்து வாழ வேண்டுமானால் சொல்லும் பொருளிலும் பாணியிலும் மாற்றம் ஏற்படத்தான் வேண்டும். கோவை உலா, அந்தாதி, பிள்ளைத் தமிழ் போன்ற மரபு ரீதியான இலக்கிய வடிவத்துக்கு மட்டும் கவிதை பயன்படுமானால் அது வெறும் அலங்கார பண்டமாகவே இருக்கும். எனவே காலத்துக்கு ஏற்ப கவிதையின் போக்கு மாற்றி அமைக்கப்படவேண்டும். இக் காலமாற்றத்தின் போக்கில் சரிநிகர் பத்திரிகையில் ''சோலைக்கிளி'' என்ற கவிஞர் எழுதும் கவிதைகளைக் குறிப்பிடமுடியும். இவரது கவிதைகள் 1990ல் தமிழ்க் கவிதையில் ஒரு மாற்றத்தைத்தந்த கவிதைப்பாணியாக விமர்சகர்களால் நோக்கப்படுகிறது. கவிஞர் வாலி அவர்கள் இராமாயணத்தை மக்கள் விரும்பிப் படிக்கும் எளிய மொழிநடையில் ''அவதார புருசன்'' என்ற பெயரில் புதுக்கவிதை வடிவில் வெளியிட்டுள்ளார். இதனையும் காலத்துக்கு ஏற்ப கவிதை இலக்கியம் ஏற்றதொரு புதிய வடிவமாகக் கொள்ளலாம்.

நாவலும் சிறுகதையும், இன்றைய மனிதர்களை இன்றைய கால வாழ்க்கையை, காதலை, நோக்குகளை, இன்னல்களை, சமூக அநீதிகளை, வறுமையை, போராட்டங்களை கையாளுகின்றன. கவிதையும் வாழவேண்டுமானால் இவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு சித்தரிக்க வேண்டும். ஆழமான கவிதையானது இலகுவான மொழி நடையில் வாசகரின் சிந்தனையில் புரியக்கூடிய வகையில் அமையவேண்டும். ஒரு கவிதை பரந்த பொருளை சுருக்கமான கருத்தமைப்பின் ஊடாக சுட்டவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு கவிதை, ஒரு பொருள் குறித்த பல சொல்லும் பல பொருள் குறித்த ஒரு சொல்லுமாகிய திரிசொற்களைக் கூடிய அளவு தவிர்த்தல் வேண்டும். பாரதி இதனை நன்கு உணர்ந்தான். பாரதியின் வெற்றிக்கு அவனது மேதாவிலாசம் மட்டுமன்றி மொழி நடையும் காரணமாக அமைந்தது,

பா, என்பது பரந்துபட்டு செல்லும் ஓசையை உடையது. இயல், இசை, நாடகம் என முத்தமிழ் பேசப்படுகிறது. பெரும்பாலும் எமது பழந்தமிழ் இலக்கியம் இயற்றமிழின் பாற்பட்டது. சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப் படுகிறது.

தேவாரமும் திருவாசகமும் நாலாயிரம் திவ்விய பிரபந்தம்களும் இசைத் தமிழின் பாற்பட்டவை. எழுத்தறிவின் பரவல் நிகழாத காலகட்டத்தில் இசை ஊடகத்தை முற்றுமுழுதாக நம்பியே செய்யுள் இலக்கியம் வாழமுடிந்தது.

செய்யுள் இலக்கணம் செய்யுளின் ஓசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. சீர்,அசை,அடி, தொடை என்ற பாகுபாடு ஓசை ஒழுங்கினை ஏற்படுத்தவே ஆக்கப் பட்டது. வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்னும் நால்வகைப்பாக் களும் செப்பலோசை, அகவல் ஓசை, துள்ளல் ஓசை, தூங்கல் ஓசை, ஆகியவற்றை உடையனவாக யாப்பிலக்கண நூல்கள் கூறுகின்றன. எனவே செய்யுளுக்கு ஓசை மிகவும் முக்கியம்.

நடைமுறையில் செய்யுள் அமைப்பில் எழுதப்படுவது மரபுக்கவிதை. மரபுக்கவிதை வடிவம், இன்றைய காலப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு இடைஞ்சலாக உள்ளது என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

கவிதை என்ற சொற்பிரயோகம் மிகவும் அண்மைக் காலத்திலேயே தோன்றியது. கவி என்ற சொல்லில் இருந்தே இது உருவாகியது. கவிதைகளை. வாசிக்கும் அரங்கினை கவிதை அரங்கு என்று கூறாமல் ''கவியரங்கு'' என்றே அழைக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை என்று கூறும்போது நாம் நவீன தமிழ்க் கவிதைகளையே பிரதானமாகக் கருதுகிறோம். நவீன தமிழ்க் கவிதை அல்லது தற்கால தமிழ்க் கவிதை என்ற தொடரை இப்போதெல்லாம் நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். பழைய பண்டித மரபு வழிப்பட்ட நிலப்பிரதிநிதித்துவ வாழ்க்கை அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்ட வாழ்க்கை அம்சங்களில் இருந்து மாறுபட்டு நிகழ்கால வாழ்க்கை முறைகளையும் அதன் அடிப்பிறந்த வாழ்க்கை நோக்குகளையும் கருத்தோட்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்ட கவிதைகளே நவீன கவிதை என்ற தொடர் குறிக்கிறது. (மௌனகுரு சித்திரலோக நுஃமான் 1979)

நவீன தமிழ்க் கவிதை என்ற தொடர் நிகழ்கால வாழ்க்கை நிலமைகளை யாப்புக் கட்டுக் கோப்புடைய பாவகையால், உணர்த்துவது என்பதனை நாம் நோக்கமுடியும், யாப்பினை மீறாத வகையில் நவீன உள்ளடக்கம் உடைய கவிதைகளையும் எழுதமுடியும் என்பதனை மகாகவி, நீலாவணன் முருகையன் ஆகியோர் நிரூபித்தனர்.

அடகுவைத்த நகைகளை மீட்டனன்
அப்பன் முந்தி இரத்தினத்தாரிடம்
''பொடியன் நாளை படித்தபின் மீண்டிடிற்
போதுமே என ஈடுவைத்திட்டதோர்
திடலை மீண்டு தன் நெஞ்சு நிறைந்தனன்
''சிவன் செயல்'' கண்டு தந்தை வியந்தனன்
உடம்பை நீ கவனித்திடல் வேண்டும் - என்று
ஒன்பதாம் முறை பெற்றவள் ஓதினாள் - மகாகவி

ஈற்றிலொரு நாள்
எட்டுமாதத்தின் இறுதியில்
நீதிவான் தீர்ப்பை
நூற்றிரண்டுயர்ந்த வெள்ளைத்தாள் நிறைய
நுட்பமாய் எழுதி வைத்துரைத்தார்
காற்றிலே அவர் தம் குரல் மிகக்கறாராய்க்
கருமையாய் விபரமாய் ஒலிக்கும் - முருகையன்

மாற்றம் தொலைக்கோ
மனிதருள்ளே ஊருதாமோ
ஆற்றைக் கடக்கும்
அவதிகளும் உண்டாமோ - நீலாவணன்

சாதாரண தமிழ்ச் சொல்லையும் பேச்சு மொழியையும் கொண்டு யாப்பமை நவீன கவிதைகளாக இவை திகழ்கின்றன.

மரபுக்கவிதைகளை விட புதுக்கவிதை என்ற மற்றோர் கவிதை வடிவமும் தற்போது செல்வாக்குப் பெற்றுள்ளது. இந்த புதுக்கவிதையை எழுதவெளிக்கிடும் கவிஞர்கள் முதலில் வல்லிக்கண்ணன் எழுதிய புதுக்கவிதையின்

தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலை ஒரு தடவை படித்தபின் கவிதையை எழுதுவது நல்லது. இன்று சிவசேகரம், நுஃமான், அரவிந்தன் போன்றோர் எழுதுகின்ற புதுக்கவிதைகள் குறிப்பிடத்தக்கன. முற்போக்குக் கருத்துக்களே இன்றைய புதுக்கவிதையின் பலமாக இருக்கிறது. கவித்துவமும் கலைப் பெறுமானமும் உடைய படைப்புக்கள் இத்துறையில் குறைவாகவே இருக்கின்றன. எனினும் செய்திப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் புதுக்கவிதையின் வளர்ச்சிக்குப் போதிய களம் அமைத்து கொடுத்துள்ளன.

இன்றைய சமூகப் பிரச்சனையை கவிதையாகச் சொல்லத் தெரியாமை தவறல்ல, தெரியாதுவிடின் அதனோடு மாரடிக்காமல் கட்டுரையாகவே தாம் விரும்பியதை எழுதலாம். அதுவும் ஓர் இலக்கிய வடிவம் தான் மரபுக்கவிதையை தகர்த்து தரைமட்டமாக்கி புதுக்கவிதை எழுத வெளிக்கிட்ட, மேத்தா கடைசியாக என்ன சொல்கிறார் எனின்,மரபை உடைத்துக் கொண்டு புதுக்கவிதையை தோற்றுவித்த காலம் ஒன்று இருந்தது. பிச்சமூர்த்தி அதன் பிதாமகன். அதுக்கு மவுசு இருந்ததாக நாம் நம்பியதும் உண்மை. ஆனால் உண்மையில் அது கவிதை எழுத முடியாமையின் ஆற்றாமையின் விளைவு என்பதனை இன்று நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். உண்மையில் மரபுக்கவிதை மூலம் இன்றைய சமுதாயப் பிரச்சனைகளைச் சொல்லமுடியாதவர்களே இன்றும் புதுக்கவிதை என்ற இடத்தில் வெறும் வசனம் எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் என்னால் எந்த வடிவங்களிலும் பிரச்சனைகளை எழுதமுடியும். கவிஞர் சிதம்பரரகுநாதனாலும் அப்படி முடியும்.

இப்படி மேத்தா சொன்ன பிறகும் சமகாலத்தில் பல்வேறுபட்ட புதுக்கவிதை களை எழுதித்தள்ளிக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்க் கவிதை உலகில் புரட்சிக் கவிஞர் பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், கவிஞர் கந்தவனம், சில்லையூர் செல்வராஜன், கவியோகி சுத்தானந்த பாரதியார், சிதம்பரரகுநாதன், இ.முருகையன், நீலாவணன், கல்லடி வேலுப் பிள்ளை, கலைஞர், மு. கருணாநிதி, நுஃமான், அகளங்கன், காரை சுந்தரம்பிள்ளை, சி.சிவசேகரம், க.பசுபதி, காசிஆனந்தன், எ. இக்பால், மேமன்கவி, பன்னாமத்து கவிராஜர் போன்ற கவிஞர்கள் தரமான இலக்கிய ரசனையும், தமிழ்நடையும் உடைய கவிதைகளை படைத்துள்ளார்கள்.

அன்று எங்கள் அப்பர்மார்
வன்னி மண்ணைக் கொத்திக் கொத்தி
தம் வியர்வையாற்றில் சம்பா வளர்த்து
உங்கள் வீட்டு முகடுவரை அடுக்கி வைத்தும்
உங்கள் ரங்குப் பெட்டி நின்ற
எங்கள் உறுதிக்கு மூச்சுவரவில்லை.

(முல்லையூரான் 1980)

இந்த வரையறைகளுடன் தமிழ்க் கவிதையும் அதன் பல்வேறுபட்ட கோணங் களின் ஊடாக வளர்ச்சியையும், தமிழகத்திலும் இலங்கையிலும், காணமுடியும். இன்று நவீன இலக்கியங்களின் புதியதொரு வடிவமாகவும் கவிதை இலக்கியம் செல்வாக்குப் பெற்றுள்ளது.

*என் இனிய தோழனே, எல்லோரும் வாழ்கஎன*
*என்றுமே எண்ணுகிற நல்லிதயமே!*
*பொன்னான மானுவம் வாழ்கின்ற வழிதவறிப்*
*புவியெங்கும் அழுகிறது கேட்கின்றதா?*

**வ. இராசையா**

# கலையாக்கத்தில் மனவெழுச்சிகளின் தாக்கம் - ஒரு குறிப்பு.

**க. சுவர்ணராஜா,**
வவுனியா

மனிதன் தன் வாழ்க்கையில் காணும் வெற்றியின் அளவு அவனது அறிவுத் திறனைக் காட்டிலும் அவனது மனவெழுச்சிகளின் முதிர்ச்சி, மனவெழுச்சிகளின் சமநிலை ஆகியவற்றில் தங்கியுள்ளது. மனவெழுச்சிகள் மனிதச் செயல்களின் பெரும் ஊக்கிகளாக **(Motives)** அமைகின்றன. மனிதனின் வாழ்வு முழுவதிலும் பங்குக் கொள்ளும் மனவெழுச்சிகள் மகிழ்ச்சியூட்டும் முடிவுகளைத் தேடிச் செயல்புரிவதும், அருவருப்பும், அச்சமும் தரக்கூடியவைகளை உதறித் தள்ளுவதுமான மனித இயல்புகளை கட்டுப்படுத்துகின்றன.

மனிதனின் வாழ்வில் மிக நெருக்கமாக உள்ள மனவெழுச்சிகள், மனிதனின் கலையாக்கத்திலும் படைப்புகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மனிதனின் எந்தவொரு படைப்பாற்றலிலும் கலையாக்கத்திலும் மனவெழுச்சிகளின் பங்கு புறக்கணிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

கலாநிதி சபா. ஜெயராஜா அவர்கள் கலையாக்கம் மனவெழுச்சிகளின் வடிவம், மனவெழுச்சிகளைப் புனையாத படைப்பு சத்தும் சுவையும் அற்றதாகிவிடும் என்கிறார்.

சமூகத்தின் யாதார்த்தங்களிலிருந்து பொங்கி வரும் மனித உணர்வுகளை கலையாக்கமாக வெளியிடுதலில் மனிதன் மகிழ்ச்சிக் கொள்கின்றான். மனநிறைவு பெறுகின்றான். மனித .உணர்வுகளை ஒருமனிதன் உள்வாங்குதலில் மனவெழுச்சிகளின் பங்கு இன்றியமையாதவை என உளவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். மனவெழுச்சியானது மனவுணர்ச்சிகளும், இதயம், நுரையீரல், குடல் போன்ற உள்ளுறுப்புகளினின்றும் எழும் புலனுணர்ச்சிகளும் இணைந்த ஒரு கலப்பு அனுபவம் ஆகும். மனவெழுச்சிகளை அனுபவித்தறியலாமே தவிர பிறர் சொல்லிப் புரிந்துக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

சினம், மகிழ்ச்சி, அச்சம், துயரம், பெருமிதம், அவமானம், குற்ற உணர்வு, வலி, அருவருப்பு, உற்சாகம், அன்பு, பொறாமை பரிதாபம், ஆச்சரியம், மரியாதை போன்றவற்றை மனவெழுச்சிகளுக்கு உதாரணங்களாக் கொள்ளலாம்.

மனவெழுச்சியானது மனித நடத்தையின் ஊக்கிகளாகவும், நடத்தையின் இலக்குகளாகவும் செயற்படுகின்றன. ஒவ்வொரு மனவெழுச்சியும் ஒரு பொருளையோ, ஒரு நிலைமையோ பற்றிய தீவிர உணர்ச்சியைக் கொண்டிருக்கும். மனவெழுச்சிகள் குழந்தைப்பருவம் தொட்டு கிழப்பருவம் வரை மனிதரிடம் காணப்படுகின்றன. மனவெழுச்சி அனுபவங்களுடனும், சில உடல்நிலை மாற்றங்களுடனும் உடனிகழ்கின்றன, போன்றன மனவெழுச்சியின் பொது இயல்புகளாகும்.

மனவெழுச்சி ஆனது மனிதனை அதனை தோற்றுவித்து, நிலையினை வரவேற்று எதிர்நோக்கிச் செல்லவோ, எதிர்த்து போராடவோ, அந்நிலையினின்று விடுபட்டு ஓடி ஒளியவோ ஒருவனை தூண்டுகின்றன. இவ்வாறான ஒவ்வொரு நிலையிலும் ஏற்படும் உணர்வுகள் மனிதனை கலையாக்க வெளிப்பாட்டுக்கு தூண்டுகின்றன.

மனவெழுச்சிகள் அதன் தன்மைக்கு ஏற்ப மனிதனின் படைப்புகளை ஒழுங்கமைக்கின்றன. உதாரணமாக இனிமையான மனவெழுச்சிகள் அழகு நயமிக்க கலையாக்கத்தை தருகின்றன. துன்ப மனவெழுச்சிகள் துன்பவியல் படைப்புக்களை தருகின்றன. சில வேளைகளில் இனிமையான மனவெழுச்சி படைப்புக்கள் கட்டுப்பாடற்ற நிலையில் மற்றவர்க்கு துன்பம் தருவதாகவும், துன்பவியற் மனவெழுச்சி படைப்புக்கள், துன்ப நீக்கத்திற்கான திறவு கோல்களாகவும் மாறுகின்றன.

அன்பு, காதல், மகிழ்ச்சி, உற்சாகம் மரியாதை போன்ற மனவெழுச்சிகள் வாழ்வின் தொடர்ச்சிக்கும், வாழ்வில் ஏற்படும் முரண்பாடுகளை இலகுவாக தீர்த்துக் கொள்ளவும் இன்றியமையாதவை ஆகும். இவ்வகை மனவெழுச்சிகளால் எழும் கலையாக்கமானது மகிழ்ச்சிகரமான சமாதான வாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்கான, மனிதனிடையே பரஸ்பர புரிந்துணர்வை நிலைகொள்ளச் செய்வதற்கான அடிப்படைகளாகவும் அமைகின்றன.

ஒரு கலையாக்கத்தின் ஒழுங்கமைப்பிலும் மனவெழுச்சிகள் பெரும் பங்கினை வகிக்கின்றன. அனுபவித்த ஒரு மனவெழுச்சியை உடனடியாகக் கலைவடிவமாவதற்கும், தாமதித்து கலை வடிவமாக்குவதற்குமிடையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தாக்கத்தை அனுபவித்தவுடன் ஆக்கப்பெறும் கலை வடிவங்கள் மனவெழுச்சிக் குமுறல்களை மிகையளவில் கொண்டுள்ளதாக காணப்பட தாமதித்த நிலையில் ஆக்கப் பெறும் கலை வடிவங்கள் ஒழுங்கமைப்பு நிறைந்தாகவும், நேர்த்தியானதாகவும் காணப்படுகின்றன.


மனவெழுச்சியை அனுபவித்தவுடன் எழும் திறனாய்வு, விமர்சனம் போன்ற படைப்புக்கள் அகவயப்பட்ட தாகவும், பக்கச் சார்பானதாகவும், சொல்லவரும் செய்தியினை தெளிவாக குறிப்பிடுவதில் சிக்கல்களை வெளிக்காட்டு வதாகவும் அமைந்து விடுகின்றன. இவை மக்களிடையே வரவேற்பினை பெறுவதிலும் தாக்கஞ் செலுத்துகின்றன. உதாரணமாக எழுத்தாக்கங்களை எழுதி முடித்த முதலாவது வரைபில் அப்படியே பிரசுரிக்கலாகாது என்ற கருத்தை எடுத்துக் கொள்ளலாம். காலம் தாழ்த்தும் பொழுது மனவெழுச்சி முதிர்ச்சியும், உளச் சமநிலையும் ஏற்பட்டு கலையாக்கம் மேலும் பொலிவு பெறும்.

ஒரு கலையாக்கம் வரவேற்பை பெறுவதற்கு அதனை ரசிப்பவர்களின் மனவெழுச்சி நிலையும் ஒரு காரணமாக அமைகின்றன. உதாரணமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், யுத்தம் பற்றிய யுத்தத்தின் துன்பங்கள் பற்றிய சித்தரிப்புகளை கொண்ட கலையாக்கங்களை விரும்பி வரவேற்பர். தாயின் அன்பை பெறாத மனிதன் தாய் அன்பு பற்றிய படைப்புகளை நன்கு ரசிப்பர்.

ஆகவே மனவெழுச்சியானது கலையாக்கத்திலும், கலையாக்க ஏற்பிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. ஆனால் மனிதனின் அனைத்து மனவெழுச்சிகளும் அழகு பெறுமானத்தைக் கொண்ட கலையாக்கமாக அமைவதில்லை. கலையாக்கமானது அழகு பெறுமானத்தை பெறுவதற்கு பயன், பண்பை தருவதற்கு மனவெழுச்சி களுடன் கருத்தும் கற்பனையும் இணைக்கப்பட்டு அவை கலையாக்கங்களாக தரப்படல் வேண்டும்.

# தமிழ்மொழிக்கு மீண்டும் மறுசீரமைப்புத் தேவை: - ஒரு கண்ணோட்டம்

திக்கவயல். சி. தர்மகுலசிங்கம்




தமிழ்மொழி இலக்கணம் நிரம்பிய பண்டைய மொழி. ஆயினும் 20ம் நூற்றாண்டில் தமிழ்மொழி மக்களின் விஞ்ஞான, மெய்ஞ்ஞானத் தேவைகளுக்காக ஆட்டியும், அசைத்தும், நீட்டியும், பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டு உள்ளதால் சில இலக்கண வரம்புகள் தாமாகவே உடையவேண்டி ஏற்பட்டது. இக்காரணம் கருதியே பாரதிதாசன் தமிழில் புதிய இலக்கணம் எழுதப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

தமிழ் பிறமொழி எழுத்துக்களை இப்போதும் தன்னகத்தே வைத்துக் கொண்டிருக் கின்றது. உதாரணமாக 'ஸ' என்ற எழுத்தை எடுப்போம். ஓர் ஒலிமாற்றத்துக்காகவே ஸ, ஸா என்ற எழுத்துக்கள் உள்ளே நுழைந்துள்ளன. அதுபோன்றே ஷ, ஷா, ஷி என்ற எழுத்துக்களும் பாவனையில் உள்ளன.

சிங்களத்தில் F என்ற ஆங்கில எழுத்தின் ஒலிக்குறிப்பினை ஒத்த எழுத்து இல்லாத இடத்து "M" என்ற எழுத்து சமீபத்தில் உண்டாக்கப்பட்டது. இந்த எழுத்து ஒன்று தமிழில் உண்டாக்கப்பட வேண்டும் "Cool Bar" என்பதில் வரும் "BA" என்ற உச்சரிப்பை உண்டாக்கும் ஒலி எழுத்துத் தமிழில் இல்லை. எனவே ''பார்'' என எழுதுகின்றனர். வினையாகவும் பெயராகவும் வரக்கூடிய ''பார்'' என்ற சொல்லு இங்கு ஆங்கிலச் சொல்லைக் குறிக்கப்போய் அவல நிலை அடைந்தது. நவீன தமிழ்மொழித்தேவை ''ப'' என்ற சொல்லுக்கு மேலாக "BA" என்ற எழுத்தும் ''ஹ'' என்ற எழுத்தும் தமிழில் உருவாகியே தீர வேண்டும். இதற்கான ஒரு மாதிரிகை, கட்டுரையின் கடைசியில் காட்டப்பட்டு உள்ளது.

**ஆங்கிலத்தை தமிழாக மாற்றல்**

கட்டடித்தல் (போகாது விடல்) என்ற சொல் தமிழில் வழக்கத்துக்கு வந்து விட்டது (Cut அடித்தல்) சைற் அடித்தல் போன்ற நகைச்சுவைப் பதங்களும் இதில் சேர்ந்து கொண்டது கொடுமையிலும் கொடுமை. ஆங்கிலத்தில் "ING" என்ற மூன்று எழுத்துக்களைக் கூட்டுவது மூலம் சில அர்த்தங்களைச் சுகமாகப் பெறலாம். ரிங்கறிங், வல்கனைசிங், பிஸ்ஸிங் (Fishing) மொடேணைசிங், வெல்டிங், என்பன. இவைபோன்ற உதாரணங்களும் ஆங்கிலத்தை இலகுவாக்கி உள்ளன. ஆனால் ''இங்க்'' தமிழில் கலந்து தமிழ் இலக்கணத்தையே உருமாற்றி உள்ளது. ஒரு சைக்கிள் தமிழில் கலந்ததால் றொட், வால்ரியூப், ரயர், ரியூப், டிம்லைட், மக்காட், செயின் உட்பட 50க்கு மேற்பட்ட ஆங்கிலச் சொற்கள் தமிழிற்கு வந்தன. அதனால் தமிழின் சுயநிலை தடம்மாறத் தொடங்கி விட்டது. சூரியனை அழைப்பதற்கு 50க்கு மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் உண்டெனத் தமிழ் அறிஞர் பெருமைப்படுவர். ஆனால் புதிதாக வரும் பொருட்கள் எதுவும் புதுமையான தமிழில் ஈழத்தில் உட்புகவில்லையே!

**கலைச்சொல்லாக்கத்தில் ஒருமைப்பாடு இல்லை**

தமிழ்மொழி தனது வளர்ச்சித் திட்டத்தில் புதிய கலைச்சொற்களை உள்வாங்கி இருக்கின்றது. ஆனால், இன்றைய கலைச்சொல்லாக்கத்தில் தமிழகத்துக்கும், ஈழத்துக்கும் இடையில் பெருமளவு இடைவெளி ஏற்பட்டுள்ளது. கீழேயுள்ள சிறிய அட்டவணை கலைச் சொல்லாக்கத்தில் தமிழ் நாட்டினதும், ஈழத்தினதும் இடைவெளியை எடுத்துக்காட்டி உள்ளது.

| ஆங்கிலக் கலைச்சொல் | இலங்கை | தமிழகம் |
|---|---|---|
| Promisery note | வாக்குறுதிப் பத்திரம் | புறோநோட் |
| Bank | வங்கி | பாங்கு |
| Conductor | நடத்துனர் | செலுத்தி |
| Right of succession | வாரிசுஉரிமை | பிறங்கடை உரிமை |
| Discrimination | பாகுபாடு | ஓரம்கட்டல் |
| Wastage | சேதாரம் | அழிமானம் |
| Affidavit | சத்தியக்கடதாசி | வழக்குரைதாள் |
| Plaintiff | மனுதாரர் | வாதி |
| Raw Materials | மூலப்பொருட்கள் | கச்சாப்பொருட்கள் |
| Building | கட்டடம் | கட்டுமானம். |

மேலே காட்டப்பட்ட சொற்கள் நடைமுறையில் உள்ள சாதாரண சொல்லாட்சியே. இச்சொல்லாட்சிகளுக்கான மொழிமாறுதல் தமிழகத்துக்கும், ஈழத்துக்கும் இடையே விரிவு அடைந்து செல்வது விரும்பத்தக்கது அன்று. சீனி, சர்க்கரை என நாம் வழங்கும் பதங்கள் தமிழ் நாட்டில் சீனி = சர்க்கரை, சர்க்கரை= சீனி என மொழி வழக்கில் மாற்றம் அடைந்து உள்ளது. அவ்வாறு நடைமுறைக் கலைச்சொற்களில் வித்தியாசம் ஏற்படக்கூடாது.

1881ல் வழக்கு இழந்து ஆன்மீக மொழியாக இருந்த ஹீப்ரு மொழியினை வழக்கிற்கு யூதர்கள் இஸ்ரேலில் கொண்டுவந்தனர். நாம் வழக்கில் இருக்கும் பழம் மொழியான தமிழ்மொழியை பிராந்தியச் சிக்கல்களால் சீரழித்து விடுவோமோ என்ற ஐயப்பாடு உண்டாகி உள்ளது.

### ஹீப்ருவும் தமிழும்

1881ம் ஆண்டுமட்டும் வழக்கு இழந்து ஆன்மீக மொழியாக ஹீப்ரு விளங்கி வந்தது. இம்மொழியை வழக்கு மொழியாக இஸ்ரேலியர் கொண்டுவந்தனர். இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் ஹீப்ரு மொழியில் மாத்திரமே பேச முடியும். தமிழ் தொன்மையான வழக்கு மொழி. ஆனால் ஆன்மீகத்தால் தமிழிற்கு இடம் இல்லை.

பின்வரும் சுலோகங்கள் கோயில்களில் பூசை பண்ணப்படும் சமஸ்திருத சுலோகங்கள். அவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பும் தரம்படுகின்றது.

| **சமஸ்கிருதம்** | **தமிழ்** |
|---|---|
| ஓம் மித்ராயநம | எல்லோரிடமும் அன்பு கொண்டவரே நமஸ்காரம் |
| ஓம் ரவயே நம | மாறுதலுக்கு அதிபதியானவருக்கு நமஸ்காரம் |
| ஓம் சூர்யாயநம | எல்லோரையும் செயலில் புகுத்தும் உங்களுக்கு நமஸ்காரம் |
| ஓம் ககாய நம | ஆகாயத்தில் சஞ்சரிக்கும் உங்களுக்கும் நமஸ்காரம் |
| ஓம் மரிசயே நம | ஒளிகளுடைய உங்களுக்கு நமஸ்காரம் |
| ஓம் ஆதித்யாய நம | தேவனுக்கும், தேவனாகிய உங்களுக்கும் நமஸ்காரம் |

இவ்வாறு பல ஆன்மீகத்தைத் தமிழில் சொல்லும் ஆற்றல் எம் மொழிக்கு இல்லையா? தமிழ் மொழியின் புதுமையாக்கம் பற்றிச் சிந்திப்போர் இதனைச் சிந்தியாது இருத்தல் மிக வேதனையானது.

### எழுத்துச் சீர்திருத்தம்

தமிழில் உள்ள சில எழுத்துக்களின் ஒலிகளைப் பின்வரும் முறையில் மாற்றியமைக்க முடியும்.

BA =  ('ப' வில் மாற்றம்)

FA =  (மேற்படி)

ஷ =  (''ச'' வில்மாற்றம்)

ஸா =  (மேற்படி)

இந்த இலகுவான ஒலிமாற்றத்தினைத் தமிழ் உலகம் ஏற்றுக்கொண்டால் பலன் உண்டாக்கும்.

# புனைகதை இலக்கியம்

''அன்புமணி''

## 1. முன்னுரை:-

புனைகதைகளை, 20ம் நூற்றாண்டு இலக்கியமாக உலகமொழிகள் எல்லாம் ஏற்றுக்கொண்ட போதும் தமிழில் அவ்வாறு ஏற்றுக்கொள்ளாத சில பண்டிதர்களும் வித்துவான்களும் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பது ஆறுதல் தரும் செய்தி.

கால, தேச, வர்த்தமானங்களுக்கமைய இலக்கிய வடிவம் அமையும் என்பதைக் கருத்திற் கொண்டால் ஒரு காலத்தில் செய்யுள்வடிவமாக இருந்த இலக்கியம் இன்று வசன நடையில் அமைந்து, நாவல்,நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, சித்திரம், விமர்சனம் எனப் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது, தெளிவாக விளங்கும். அதன் தேவையும் புரியும்.

இவ்வடிவங்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குக் கிடைத்தவை என்பதை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. ஆனால் ஆங்கிலேயர் ஷேக்ஸ்பியர்,மில்டன், கிற்ஸ், ஷெல்லி, வேர்ட்ஸ்வேர்த், போன்றவர்களின் படைப்புகளை இலக்கியமாக ஏற்றுக் கொண்டது போல், பெர்னாட்ஷா, எச்.ஜி.வெல்ஸ், ஜே.பி.பிறிஸ்ட்லி, போன்றவர்களின் படைப்புகளையும் இலக்கியமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதே அடிப்படையை நமது தமிழ் மொழிக்கும் பொருத்தி, தற்காலப் புனைகதைகளை இலக்கியமாக ஏற்றுக் கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது.

## 2. புனைகதை இலக்கியத்தின் முன்னோடிகள்

தமிழைப் பொறுத்தவரை முன்சீப் வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் முதல் தமிழ் நாவலாகவும் வ.வே. சுப்பிரமணிய ஐயரின் சிறுகதைகளை முதற் சிறுகதைகளாகவும் கொள்வதுண்டு. வேதநாயகம்பிள்ளையைத் தொடர்ந்து மாதவையா (பத்மாவதி) ராஜம் ஐயர் (கமலாம்பாள் சரித்திரம்) முதலியோரின் நாவல்கள் முன்னோடி நாவல்களாகக் கொள்ளப்படுகின்றன.

சிறுகதையைப் பொறுத்தவரை வ.வே.சு. ஐயரை விட சொ. விருத்தாசலம் என்ற புதுமைப்பித்தனையே சிறுகதை முன்னோடியாக இன்றைய இலக்கிய உலகம் ஏற்றுக்

கொண்டுள்ளது. புதுமைப்பித்தன், வ.ரா, பி.எஸ்.ராமையா, சீனிவாசன், கு.ப. ராஜகோபாலன் போன்றவர்கள், ''மணிக்கொடி'' என்ற சஞ்சிகையில் யதார்த்த ரீதியான கதைகளை எழுதினர். தமிழக இலக்கிய உலகில் ''மணிக கொடிகாலம்'' என்று இன்றுள்ளோர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவு அவர்களுடைய கதைகள் ஒரு தாக்கத்தை ஏற்ப டுத்தின என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது (பார்க்க: மணிக் கொடிக் காலம் - பி.எஸ்.ராமையா - ''தீபம்'' தொடர் கட்டுரை)

புதுமைப்பித்தன் கடிதங்கள் கூட இலக்கியமாக அமைந்துள்ளன. அவர் தன் மனைவியைப் பிரிந்து இருந்த காலத்தில், மனைவிக்கு எழுதிய கடிதங்கள் - வாத்சல்யம் நிறைந்த கடிதங்கள்-ஒரு மனிதனின் மன உணர்வுகளைப் படம் பிடிக்கும் கடிதங்கள் அண்மையில் நூலாக வெளிவந்துள்ளன (பார்க்க: புதுமைப்பித்தன் கடிதங்கள்)

### 3. மணிக் கொடிகாலத்தின் தொடர்ச்சி

''மணிக்கொடி'' சஞ்சிகைக்குப் பின் ''சரஸ்வதி'' என்ற சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகள் வித்தியாசமான பார்வையில் அமைந்து,ஒரு திருப்பு முனையாக அல்லது மைல் கல்லாக அமைந்தன. விஜயபாஸ்கரனை ஆசிரியராகக் கொண்ட இச்சஞ்சிகையில், மார்க்ஸிஸ சித்தாந்த வாதிகள், பாட்டாளி மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி கதைகளை எழுதினர். இலக்கியத்தை அதன் இயல்பான போக்கிலிருந்து திருப்பி ஒரு கோட் பாட்டுக்குள் அடக்கிய இம் முயற்சி ''முற்போக்கு இலக்கியம்'' என்ற முத்திரை குத்தப்பட்டு இன்றுவரை தொடர்வதை நாம் பார்க்கிறோம் (பார்க்க: சரஸ்வதிகாலம் வல்லிக்கண்ணன்)

இவ்வாறே ''எழுத்து'', நடை, கணையாழி, தாமரை போன்ற சஞ்சிகைகள் வித்தியாசமான சிறுகதைகளைப் பிரசுரித்து, சிறுகதைகளின் யதார்த்த அணுகுமுறை யை வலுப்படுத்தின.

இக்காலத்தில் லட்சியநோக்கில் ஏராளமான நாவல்களும் சிறுகதைகளும் தோன்றின. இவைகளை எழுதியவர்களின் முன்னோடியாக திரு.ரா.கிருஷ்ண மூர்த்தி (கல்கி) கருதப்படுகிறார். இவரைப்போன்றே, அகிலன், நா.பார்த்தசாரதி அநுத்தமா, லக்ஷ்மி, ராஜம் கிருஷ்ணன், எல்லார்வி, ஆர்வி, ஜெகசிற்பியன், தேவன், மாயாவி, சூடாமணி, போன்ற எண்ணற்ற கதாசிரியர்கள் ஆயிரக்கணக்கான சிறுகதைகளையும் நாவல்களையும் படைத்துள்ளனர். லட்சோபலட்சம் வாசகர்களை இப்படைப்புகள் சென்றடைந்துள்ளன. 'கல்கி'யின் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் போன்ற வரலாற்று நாவல்களும் அலை ஓசை அமரதாரா, சோலைமலை இளவரசி முதலிய சமூக நாவல்களும் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

### 4. யதார்த்தக்கதைகள்

கால ஓட்டத்தில் இந்த லட்சியப் போக்கிலிருந்து வேறுபட்டு யதார்த்தரீ தியான கதைகளை எழுதுவோர் அதிகரித்தனர். த.ஜெயகாந்தன், தி.ஜானகிராமன், ராஜ நாராயணன். சுந்தரராமசாமி, அசோகமித்திரன், ஜெயந்தன், மாலன் பாலகுமாரன் போன்றோர் இவ்வாறான கதைகளை எழுதிப் புகழ்பெற்றனர். மண்வாசனை வீசும் இக்கதைகளில், பேச்சுமொழி உரையாடல்கள் இடம்பெறு வதால், இக்கதைகள் புகைப்புலனை யதார்த்தமாக வெளிப்படுத்துகின்றன. ஆனால் பேச்சு மொழி உரையாடல் மட்டுமே யதார்த்தமாகிவிடாது. மாறாக பாத்திரங்களின் உயிர்த்தன்மை, பிரதேசமக்களின் பழக்க வழக்கங்கள் - இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு புனைகதைக்குத் தேவையான கலைத்துவம் செய்நேர்த்தி என்பன மிக முக்கியமா னவை என்பதை இக்கதைகளைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ளலாம்.

காலப்போக்கில், புனைகதையில் பல்வகையான வடிவமைப்புகள் - அல்லது வார்ப்புகள் இடம்பெற்றன. உணர்வோட்டங்களின் சித்தரிப்பு, காவியமெருகு அல்லது கவிதைப்பண்பு போன்றவை அவற்றுட்சில.

மௌனி,லா.ச.ராமாமிர்தம் போன்றவர்களின் கதைகளில் யதார்த்தமோ, மண்வாசனையோ இருக்காது. உணர்வோட்டங்களின் சித்தரிப்பாக அவை அமைந்திருக்கும். வி.ஸ.காண்டேகர் (கா.ஸ்ரீ.ஸ்ரீ) போன்றவர்களின் கதைகளில், பேச்சுமொழி உரையாடலோ கொச்சைவர்ணிப்புகளோ இருக்காது, காவிய மெருகு பளிச்சிட அவை அமைந்திருக்கும், சோமு, சாண்டில்யன், கோவி. மணிசேகரன் போன்றவர்களின் கதைகள் கவிதைப் பாங்கில் அமைந்திருக்கும்.

## 5. வெவ்வேறு வார்ப்புகள்

மேலே பார்த்த விபரங்களிலிருந்து சிறுகதைகள் அல்லது நாவல்கள் வெவ்வேறு வார்ப்புகளில் அமைந்திருக்கும் என்பதை அறியலாம். அவை (i) ஜானகிராமன்,ஜெயகாந்தன்,ராஜநாராயணன் போன்றோர் எழுதும் யதார்த்த ரீதியான கதைகள், (ii) மௌனி, லா.ச.ரா.போன்றோர் எழுதும் உணர்வோட்டங் களான கதைகள் (iii) காண்டேகர், சோமு போன்றோர் எழுதும் காவிய மெருகேறிய கதைகள் (iv) சாண்டில்யன் கோவி.மணிசேகரன் போன்றோர் எழுதும் கவிதைப்பாங்கான கதைகள் (v) கல்கி,அகிலன், நா.பா.போன்றோர் எழுதும் லட்சியநோக்கில் அமைந்த கதைகள் (vi) இன்னும் உருவகமாக, அங்கதமாக எழுதும் புனைகதைகளும், உள்ளன.

இவையெல்லாம், எழுத்தாளரின் செய்நேர்த்தியாலும் கலைத்துவ நிறை வாலும், சிறந்த இலக்கியங்களாக அமைந்து விடுகின்றன. அத்துடனமையாது அவை வாசகர் இதயங்களை எளிதாகத்தொட்டு, அதில் சலனங்களை ஏற்படுத்தி, இலக்கியத்தின் பண்பையும் பயனையும் நிறைவு செய்கின்றன.

எனவே கிளிப்பிள்ளைபோல், யதார்த்தம், மண்வாசனை என்று உச்சாடனம் செய்து கொண்டிருப்பவர்கள் புனைகதைகளின் பல்வேறு பரிமாணங்களையும் இலக்கியப் பெறுமானங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, பலசந்தர்ப்பங்களில், யதார்த்தம் மண்வாசனைகளைக் கொண்ட கதைகளை விட லட்சியப் போக்குள்ள கதைகளும், கவிதைப்பாங்கான கதைகளும் சிறப்பாக அமைந்து சிறந்த இலக்கியமாக மிளிர்வதையும் நாம் பாக்கிறோம். அவை லட்சக்கணக்கான வாசகர்களை ஈர்த்து இதயச்சலனங்களை ஏற்படுத்தி, புனைகதை இலக்கியத்தின் நோக்கங்களைப் பெரிதும் நிறைவு செய்கின்றன.

## 6. புனைகதை இலக்கியமும் கோட்பாடுகளும்

இலக்கியம் என்பது மக்கள் வாழ்வைப் பிரதிபலிப்பது; மக்கள் வாழ்வை விமர்சிப்பது; மக்கள் வாழ்வைப் பண்படுத்துவது என்பதை நாம் அறிவோம். உலகப்பிரசித்திபெற்ற இலக்கியங்கள் எல்லாம் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. இன்று உருவாக்கப்படும் இலக்கியங்களும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன.

ஆனால் அறுபதுகளில் அல்லது அதற்கு முன் இலக்கியத்தில் மார்க்ஸிஸ சிந்தனைகளைப் புகுத்தியவர்கள் பாட்டாளி மக்களைப்பற்றி எழுதுவதும் வர்க்க உணர்வுடன் எழுதுவதும் தான் சிறந்த இலக்கியம் என்ற கோட்பாட்டைப் புகுத்தினர். மார்க்ஸிஸ பிரசாரத்திற்கான ஒரு உத்தி இது என்பது வெளிப்படை. ஆனால் இலக்கியத் தின் அடிப்படைத்தத்துவத்துடன் இக் கோட்பாடு முரண்படுவது தெற்றென விளங்கும். இக்கோட்பாட்டின்படி இலக்கியம் என்பது மக்களைப் பற்றியது அல்ல. மக்களின் ஒரு சிறு பகுதியினரைப் பற்றியது என்று ஆகிவிடும் அல்லவா? மற்றொருவகைப்பிரசாரம் ஒழுக்கநெறிப் பிரசாரம். உ+ம் : மு. வரதராசன்.

எனவே, கோட்பாடுகளினால் குழப்பமடையாது இலக்கிய உணர்வுடன் நோக்கினால், மக்களைப் பற்றிக் கூறுவது இலக்கியம் என்றால், மக்களின் எல்லாப்பகுதியி னரையும்-அதாவது, ஏழை, பணக்காரன், உயர்வர்க்கம், நடுவர்க்கம், கீழ்வர்க்கம், உல்லாசபுரிவாசிகள், குடிசை வாசிகள், முதலிய எல்லா வர்க்கத்தினரையும் பற்றி இலக்கியம் - புனைகதை இலக்கியம் உருவாகலாம் என்பது பெறப்படும்.

இது பற்றி 'மாலன்' கூறும் ஒரு கருத்து வருமாறு: ''நான் எந்த சித்தாந்தின் அடிப்படையிலும் எழுதுவதில்லை. மனிதர்களையும் வாழ்வையும் நேசிப்பதே என் சித்தாந்தம்'' இதன் அடிப்படையில், மனிதவாழ்வு, மனிதநேயம், சமூகமேம்பாடு ஆகியவையே இலக்கியத்தின் தொனிப்பொருளாக அமையும் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

## 7. மேல் நாட்டுச் சிந்தனைகள்

நாவல், சிறுகதை இலக்கியத்தின் வெவ்வேறு வார்ப்புகளை ஆங்கில விமர்சகர்கள் வெவ்வேறு பெயர்களால் அழைத்தனர் அவை **Realism** (யதார்த்தம்) **Surrealism** (அதீதம்) **Naturalism** (இயல்புவாதம்) **Romanticism** (கற்பனாவாதம்) **Impressionism** (மனப்பதிவுவாதம்) இவ்வாறு வேறு பல இஸங்களும் ஆங்கில விமர்சன உலகில்

பயிலப்படுகின்றன. அவற்றை தமிழ் விமர்சகர்களும் கிரகித்துக் கொண்டு, இவற்றுக்குள் தமிழ் புனைகதை இலக்கியத்தை அடைக்க முயல்கின்றனர். ஆனால் இவ்வகையான பகுப்புகள் தமிழ் புனைகதைகளுக்கு முற்று முழுதாகப் பொருந்தும் என்று சொல்வதற்கில்லை.

தமிழ் புனைகதை இலக்கியம் தனியாக நோக்கப்படவேண்டிய ஒன்று. தமிழக எழுத்தாளர்களும் சரி, ஈழத்து எழுத்தாளர்களும் சரி, தமிழ்ப்பண்புகளுக்கேற்ப, தமிழ் வாழ்க்கை முறைகளுக்கேற்ப எழுதும் கதைகளை ஆழ்ந்து நோக்கினால் இந்த உண்மை புலப்படும்.

புனைகதை என்ற இலக்கியவடிவம், மேல்நாட்டவர்களிடமிருந்து கிடைத்தது என்பதற்காக, மேல்நாட்டுச் சிந்தனைகளை அப்படியே பிரதிபலிப்பது எவ்வகையிலும் பொருந்தாது. இலக்கியத்துக்கு மட்டுமல்லாது வேறுதுறை களுக்கும் இது பொருந்தும். இதில் மற்றுமொரு ஆபத்தும் உண்டு.

இத்தகைய கொள்கையால், லட்சோபலட்சம் வாசகர்களின் இதயங்களை வருடிச் செல்லும் புனைகதைகள், விமர்சகர்களின் மேல் நாட்டு அளவுகோல்களுக்குப் பொருந்தாமையால், அவர்களால் அவை நிராகரிக்கப்படுகின்றன. அவ்வாறே விமர்சகர்களின் அளவுகோல்களுக்குப் பொருந்தும் புனைகதைகள் வாசகர்களால் நிராகரிக்கப்படுகின்றன.

## 8. ஈழத்துப்புனைகதைகள்

தமிழக எழுத்தாளர்களுடன் போட்டிபோடும் அளவுக்கு ஈழத்து எழுத் தாளர்களும் வளர்ந்துள்ளனர் என்பது ஒரு முக்கியமான செய்தி. நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட மணிக்கொடிகால கட்டத்தில், யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச் சிக்காலம் என்று ஒன்று உருவானது. இதில் வரதர் (தி.ச.வரதராஜன்), இலங்கையர்கோன், சம்பந்தன் போன்றோர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து, உருவான எழுத்தாளர் பரம்பரையில், மார்க்ஸிஸப் பார்வையுடன் எழுதியவர்கள் பிரபலம் பெற்றனர். இவ்வகையில் அ.ந. கந்தசாமி, டானியல், அகஸ்தியர், காவலூர் ராசதுரை, இளங்கீரன், செ.கணேசலிங்கன், டொமினிக்ஜீவா, நீர்வை பொன்னையன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அதேசமயம் இயல்பான இலக்கிய நோக்கில் புனைகதை எழுதுபவர்களும் புகழ் பெற்றனர். இவ்வகையில் செ.யோகநாதன், சொக்கன், உதயணன், எஸ் பொன்னுத்துரை, நெல்லை க.பேரன், யாழ்ப்பாணம் தேவன், ஈழத்துச்சோமு, து.வைத்திலிங்கம் மு.தளையசிங்கம், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் தெளிவத்தை ஜோசப், என் எஸ் எம் ராமையா, செந்தூரன், சாரல்நாடன் வ.அ. இராசரெத்தினம், அ.ஸ. அப்துஸ்ஸமது, மருதூர்க்கொத்தன், திக்குவல்லைகமால் முல்லைமணி, உமாவரதராஜன், எஸ்.எல்.எம். ஹனிபா, நவம், அருள் செல்வ நாயகம், அன்புமணி, ரவிப்பிரியா, ஜுனைதா, ஷெரிப், வை. அகமது, ஜோன்ராஜன், செ.குணரத்தினம், பாலமனோகரன், அருள்சுப்பிரமணியம், தங்கன், ஆ.பொன்னுத் துரை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள், இவர்களில் பலரது நாவல்கள் வீரகேசரி வெளியீடாக வந்துள்ளன.

ஈழத்துப்பெண் எழுத்தாளர் வரிசையில் அன்னலட்சுமி ராஜதுரை (லக்ஷ்மி) வள்ளிநாயகி (குறமகள்) பவானி கவிதா, பாலேஸ்வரி, தமிழ்ப்பிரியா, தாமரைச்செல்வி, கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பத்மாசோமகாந்தன், நயிமாசித்தீக் போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களது புனைகதைகளின் தனித்துவப் பண்புகள் விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம் என்பதால் அதுபற்றி இங்கே எழுதவில்லை.

## 9. விமர்சனம்

புனைகதை இலக்கியத்தை மிகவும் பாதிக்கின்ற ஒரு விடயம் விமர்சனம் ஆகும். புனைகதை விமர்சகர்களில் தமிழகத்தில் க.நா.சுப்பிரமணியம், வெ. சாமிநாதன், சிதம்பர ரகுநாதன், சி.சு.செல்லப்பா, வல்லிக்கண்ணன் போன்ற பலர் பிரபலம் பெற்றுள்ளனர்.

ஈழத்தைப் பொறுத்தவரை, கலாநிதி கைலாசபதி, கலாநிதி சிவத்தம்பி, கலாநிதி மௌனகுரு, கலாநிதி எம்.ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், கே.எஸ். சிவகுமாரன், எஸ்.பொ, எஸ்.எல் எம் ஹனிபா, போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் எந்த இரு விமர்சகர்களும் ஒத்துப் போவதில்லை. பலவிமர்சகர்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வர். அந்தவகையில், கா.நா.சுப்பிரமணியம் - கே. கைலாசபதி, வெங்கட்சாமி நாதன் - எம்.ஏ.நுஃமான், எஸ்.பொ. சிவத்தம்பி எனப் பலகோடி விமர்சன யுத்த வீரர்களை, நாம் பார்க்கிறோம். பல சந்தர்ப்பங்களில் இவர்கள் கோஷ்டிகளாகச் சேர்ந்தும் மோதிக்கொள்வர்.

இந்தமோதலுக்கான முக்கிய காரணங்கள் மூன்று

1) இவர்கள் வெவ்வேறு கோட்பாடுகளுக்குள் சிறைப்பட்டிருப்பது.

2) இவர்களில் பலர் ஆக்க இலக்கியத்திறன் அற்றவர்களாயிருப்பது.

3) தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளினால் உந்தப்பட்டு விமர்சிப்பது.

விமர்சனத்தினால் இன்னும் ஒரு பெரிய ஆபத்தும் உள்ளது. அதாவது ஒரு புனைகதையை, இலக்கியப் படைப்பை ஆயிரமாயிரம் வாசகர்கள் விரும்பிப்படித்திருப்பார்கள். ஆனால் அது வெளியே தெரியவராது. ஆனால் ஒரு விமர்சகர் அதற்குமாறான தனது சொந்த அபிப்பிராயத்தை ''விமர்சனம்'' என்றபெயரில் பத்திரிகையில் எழுதிவிடுவார். அதை ஆயிரமாயிரம் வாசகர்கள் படிப்பார்கள். ஆக, அந்தப்படைப்பு தரமில்லாதது என்ற மாயை ஏற்படும். மொத்தத்தில் இந்த விமர்சனம் என்பது, புனைகதை இலக்கியம் படைக்க முடியாதவர்களால், தமது மன அரிப்பைத் தீர்த்துக் கொள்ள எழுதப்படும், ரசனைக்குறிப்பு என்பதும், இதனால் புனைகதை இலக்கிய வளர்ச்சிக்கு மிகப் பெரிய பயன் எதுவும் இல்லை என்பதும் பெறப்படும். மாறாக நேர்மையான நடு நிலை விமர்சனம், புனைகதை இலக்கிய வளர்ச்சிக்கு மிகவும் துணைபுரியும் என்பதும் கண்கூடு.

## 10. இலக்கியத் தரமான புனைகதைகள்

ஒரு புனைகதை இலக்கியத்தரம் உள்ளதா இல்லையா என்பதை எவ்வாறு அறியலாம்? அதற்கு அப்படைப்புகளை மூளையால் அணுகாது இதயத்தால் அணுகவேண்டும். டாக்டர் மு.வரதராசன் பின்வருமாறு கூறினார் 'ஒரு கட்டிடத்தைப் பார்த்து ''இது 30 அடி உயரமானது'' என்றால் அறிவியல். ஆனால் அதை வானளாவிய கட்டிடம் என்றால் அது இலக்கியம்.

வாழ்க்கையிலிருந்தே இலக்கியம் உருவாகிறது. வாழ்க்கைக்கே அது பயன்படுகின்றது. எனவே ஒரு சிறந்த இலக்கியப் படைப்பு வாழ்க்கையைப்பற்றி இதயத்தைத் தொடும் வகையில் ஏதாவது சொல்லவேண்டும். அதைப்படித்து முடித்தபின்னரும் அது நெஞ்சில் நிழலாடவேண்டும், சிந்தனையைத் தூண்ட வேண்டும்.

அவ்வகையில் பார்த்தால், துப்பறியும் கதைகள், ஜனரஞ்சகக்கதைகள், கிளுகிளுப்புக்கதைகள், மாயாஜாலக் கதைகள், தமாஷாக்கதைகள் முதலியன அடிப்பட்டுப் போய்விடும். ஏனைய கதைகளில், உயிர்த்துடிப்புள்ள கதைகள் மனிதாபிமானத்தைப் பேசும் கதைகள், மானிடநேயத்தைக் கூறும் கதைகள் மிகச்சுலபமாக இதயத்தில் இடம் பிடித்துவிடும். அதிலும், அவ்வாறான கதைகள் பூடகமாக, கலைத்துவமாக, நளினமாக, நயமாகக் கூறப்படும்போதும் உள்ளம் விகசித்து, மலர்ந்து உவகையடையும் அல்லது கடம்பிச்சாம்பி, உருகிக் கண்ணீர் விடும்.

அத்தகைய கதைகள் நாம் ஏற்கனவே கூறியது போல் யதார்த்தப் படைப்பாக, லட்சியப்படைப்பாக, உணர்வோட்டமாக, காவியப் படைப்பாக, கவிதைப்படைப்பாக, ஏதாவது ஒரு வார்ப்பில் அமைந்திருக்கலாம். அத்தகைய கதைகள் கோட்பாடுகளுக்குள் சிக்காது, விமர்சனத்துக்குள் அகப்படாது. வாசகனுடைய இயத்தில் அந்தரங்கமாகச் சங்கமிக்கும். அவையே இலக்கியத்தரமான சிறந்த புனைகதைகள் ஆகும்.

## 11. இலக்கியச் சஞ்சிகைகள்

புனைகதை இலக்கிய வளர்ச்சிக்குத் தற்கால சஞ்சிகைகள் பெரிதும் உதவுகின்றன. ஏராளமான இச்சஞ்சிகைகளை, இலக்கிய ஏடுகள் என்றும், ஜனகரஞ்சக ஏடுகள் என்றும், பொதுவாக வகைப்படுத்துவர். கல்கி, விகடன், குமுதம், குங்குமம், சாவிபோன்ற Mass Circulation ஏடுகள் ஜனரஞ்சக ஏடுகள். இவற்றில் பொழுதுபோக்கு அம்சங்களும், சுவாரஸ்யமான கதைகளும் பெரும் பாலும் இடம்பெறும். அவ்வப்போது இலக்கியத்தரமான படைப்புகளும் இவற்றில் இடம் பெறுவதுண்டு.

ஆனால், கணையாழி, தாமரை, தீபம், சுபமங்களா போன்ற சஞ்சிகைகள் இலக்கியப் பிரக்ஞையுடன் வெளியிடப்படுவதால் இவற்றில் இலக்கியத்தரமான, சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, விமர்சனம் முதலியன இடம் பெறும். இவற்றை இலக்கியச் சிற்றேடுகள் எனப் பொதுவாகக் குறிப்பிடுவார்கள். இவற்றுக்கு Circulations (விநியோகம்) குறைவு, வாசகர்குறைவு. இக்காரணங்களால் இவை இடையில் நின்று விடுவது முண்டு. இலங்கையிலும், இவ்வாறான இலக்கியச் சிற்றேடுகள் நிறைய வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் நீண்டகாலம் நிலைத்து நிற்பது ''மல்லிகை'' ஒன்றுதான். கடந்தகாலங்களில் அலை, கற்பகம், மலர், களம், படி வெளிவந்து மறைந்தன. இன்றும் பிதேசரீதியாக இவ்வாறான இலக்கியச் சிற்றேடுகள் அதிக அளவில் வந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுள்ளும் ''முற்போக்கு'' என முத்திரை குத்திக் கொண்டவை ஒரு குறிப்பிட்ட வட்டத்தினரை - அதாவது முற்போக்கு வட்டத்தினரை முதன்மைப்படுத்தி, கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றை வெளியிடுவதால், இவற்றின் பிரசார நெடி சற்றுத்தூக்கலாகவே தென்படும்.

## 12. இலக்கியபடைப்புகள்

தற்காலப் புனைகதை இலக்கிய வளர்ச்சியில் நூல் வெளியீடுகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. துரதிர்ஷ்ட வசமாக, இலங்கையில் தமிழ் நூல் பதிப்பகங்களும், வெளியீட்டகங்களும் மிகக்குறைவாகவே உள்ளன. அதனால் இலக்கியத்தரமான புனைகதைகள் நாவல்கள் அச்சில் வெளிவராமல் ஏட்டுப் பிரதிகளாக முடங்கிக் கிடக்கின்றன. இங்கு எழுத்தாளர்களே தமது நூல்களை வெளியிட்டு, தாங்களே விற்பனை செய்து தாங்களே நஷ்டப்பட்டு, விரலைச் சுட்டுக் கொண்டு சூடுகண்ட பூனையாக அடங்கிவிடுகின்றனர்''.

தமிழகத்தில், ஏராளமான பதிப்பகங்களும் வெளியீட்டகங்களும் உள்ளன. அங்கு நூல்வெளியீடு ஒரு லாபம் தரும் தொழிலாகவே செய்யப்படுகிறது. அவற்றுள்ளும் க்ரியா, நர்மதா, அன்னம், சென்னைபுக்ஸ், காந்தளகம் போன்ற நிறுவனங்கள் ஓரளவு இலக்கியத்தரமான நாவல், சிறுகதைகளை வெளியிடுகின்றன. தற்போது இலங்கை எழுத்தாளர்கள் பலரது நூல்கள், தமிழகத்தில் வெளிவரு கின்றன. இவ்வாறே புலம் பெயர்ந்த பல எழுத்தாளர்களது நூல்களும் வெளிவரு கின்றன.

இவற்றில் தொனிக்கும் ஒரு பொதுப்பண்பு மனங்கொள்ளத்தக்கது. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பதை வரலாற்றில் நாம் பாக்கிறோம். அதற்கேற்ப கடந்த ஓரிரு தசாப்தங்களில் வெளிவந்த இலங்கை எழுத்தாளர்களின் நாவல்கள் சிறுகதைகள், இன்று தமிழ் மக்கள் முகம் கொடுக்கின்ற முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினை, அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியதாக அமைந்திருப் பதைப்பார்க்கிறோம். எனவே, சமூகப் பிரச்சினை களுடன், மக்கள் பிரச்சினைகளுடன் தொடர்புறும் படைப்புகளே சிறந்த இலக்கியங்களாக அமைவதைப் பார்க்கிறோம்.

# எண்ணமும் எழுத்தும்

உடுவை
எஸ். தில்லைநடராசா

உலகில் வாழும் உயிரினங்களுள் மனித இனம் சிந்திக்கும் சிறப்பாற்றலைப் பெற்றிருக்கிறது. நல்லது - கூடாதது; பயனுள்ளது-பயனற்றது; தீங்கற்றது - தீங்குள்ளது என்று பகுப்பாற்றல் செய்யும் திறமையும் மனிதனுக்குண்டு? சிந்தித்தல் அதனை வகைப்படுத்தல் என்பதோடு, சிந்தனையை - சிந்தித்தல் அதனை வகைப்படுத்தல் என்பதோடு, சிந்தனையை - எண்ணத்தை எழுத்தாக - பேச்சாக - நடிப்பாக - ஓவியமாக - சிலையாக உருவாக்க வெளிப்படுத்தும் ஆற்றலும் அமையப்பெற்றவனாக மனிதன் விளங்குகின்றான்.

சாதாரணமாக மனிதன் சிந்திக்கின்றான்; எண்ணங்கள் உருவாகின்றன. கடந்த காலங்களில் நடந்தவற்றைப் பற்றிச் சிந்திக்கின்றான். இன்று நடப்பவற்றைப்பற்றிச் சிந்திக்கின்றான்; நாளை நடக்க இருப்பதைப்பற்றியும் சிந்திக்கின்றான்.

நடந்து முடிந்ததைப் பற்றி எண்ணும் போது இப்படிச் சொல்லி இருக்கலாம் அல்லது இப்படிச் செய்திருக்கலாம் ஏன் இப்படி நிகழ்ந்திருக்கலாம் என்று சிந்திக்கின்றான். கலைஞன் -எழுத்தாளன் மட்டுமல்ல கூட்டுவிடுதியில் வாழும் இருவர் விடுதிக்கு முன்பாக உள்ள முற்றத்தில் இரவு உணவின் பின் பலவற்றைக் கதைத்துக் கொண்டிருந்தபோது கண்களைத் தூக்கம் தழுவியது. இருவரும் தத்தமது அறைக்குச் சென்று தூங்கி விட்டனர். காலையில் எழுந்த போது முற்றத்தில் வைத்திருந்த இரண்டு கதிரைகளும் இல்லை. இருவரும் ஒருவரையொருவர் குறைகூறிக்கொண்டனர். நடந்ததைப்பற்றிய சிந்தனை - அதன் பின் அவர்கள் இருவர் மட்டுமல்ல - கூட்டு விடுதியில் வசிப்போர் எல்லோரும் உறங்குவதற்கு முன்பு எல்லாப்பொருட்களையும் உள்ளே தூக்கி வைத்தபின் தான் தூங்க வேண்டும் என்ற சிந்தனை செயற்பட ஆரம்பித்தது. நடந்ததைப்பற்றி ஒரு எழுத்தாளன் சிக்கலுக்குள் அகப்படும்போது ஏனையவர்களும் சிக்காதிருக்க சில முன்னேற்பாடுகளைச் செய்து கொள்கின்றனர்.

இன்று நடப்பவற்றைப் பற்றி சிந்திக்கின்றோம். மழை காலம் ஆரம்பமாகி விட்டது. காலையில் காலநிலை மாற்றமேதுமின்றி வழமைபோல இருக்கின்றது. மதியம் அதிக வெய்யில் - புழுக்கம், மாலையில் மழைபெய்யலாம் என எதிர்பார்ப்பு, மழைக்கு முன் வீடுக்குப் போய்ச்சேர ஏற்பாடு செய்தி எழுதுபவர்கள்/கதை எழுதுபவர்கள் உடனடியாகச் சுடச்சுட தயாரித்தால் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். தாமதமானால் தேடாப்பொருளாகி விடும்.

நாளை நடப்பதைப்பற்றியும் சிந்திக்கின்றோம். எங்கள் எதிர்காலத்துக்காக சேமிப்பு - சாகுந்தறுவாயிலும் வருங்காலச்சந்ததிக்குப் பயன்படலாம் என்ற நோக்குடனும் சேமிப்பு. கவிபாரதியின் பாடல்கள் பல எதிர்காலத்தை வரவேற்பதாக எதிர்காலம் இப்படியிருக்கும் என்ற சிந்தனையில் எழுந்தவை.

அநேகமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகையான அனுபவம் கிடைக்கின்றது அனுபவத்தோடு ஒட்டியதாக சிந்தனை - எண்ணங்கள் எழுகின்றது. பலர் அனுபவங்களை

மாற்றமின்றியோ அல்லது தமது எண்ணங்களோடு இணைத்தோ பகிர்ந்து கொள்ளார்கள். தங்களுக்கு ஏற்றபடி இணங்கியவர்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள். பகலில் பெற்ற அனுபவத்தை மாலையில் சந்திப்பவரோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

நல்ல சொற்பொழிவாளன் தன் வாசிப்பை- அனுபவங்களை சுவைசேர்த்து பேச்சின் மூலம் பகிர்ந்து கொள்கின்றான். நடிகன் நடிப்பின் மூலம் வெளிப்படுத்துகின்றான், எழுத்தாளன் எண்ணங்களை எழுத்தின் மூலம் வெளிப்படுத்தகின்றான் கவிதை, கதை, கட்டுரை மட்டும்தான் எழுத்து என்பதல்ல - கடிதமும் ஒரு வடிவம்தான். சில வேளைகளில் சில கடிதங்கள் கதைபேசுகின்றன கவித்துவத்தோடு - கலை அம்சங்களோடு பல சங்கதிகளைத் தெரிவிக்கின்றன. வீடுகளிலும் வீதிகளிலும் சாதாரணமக்கள் நன்றாகப் பேசுவதையும் நடிப்பதையும் பார்த்திருக்கின்றோம். சிலர் போதையிலும் நன்றாக எண்ணுவதுண்டு; சிறப்பாக எழுதுவதுண்டு கவியரசர் கண்ணதாசன் - தடுமாறும் போதையிலும் தமிழ் பாடும் கவிஞன் எனப்போற்றிப் புகழப்படுவதும் நாம் அறிந்ததே!

நடிக்கின்றவரோ-ஓவியம் வரைகின்றவரோ-சிலைவடிக்கின்றவரோ-பேசுகின்றவரோ - எழுதுகின்றவரோ சதா சிந்திக்கின்றனர். சில விடயங்களைச் சிந்திக்கின்றபோது எண்ணங்கள் எவ்வளவு சுகமாக இருக்கின்றன நினைவுகள் நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. எண்ணத்தை வெளிப்படுத்த - பகிர்ந்து கொள்ள எழுத்து பேச்சு - நடிப்பு - ஓவியம் - சிற்பம் என ஒவ்வொரு வடிவத்தைத் தேடுகின்றோம்.

காலத்தையும் தேசத்தையும் கடந்து செல்லும் ஆற்றல் எழுத்துக்கு இருப்பதாகச் சொல்கின்றனர். பேனாமுனை வாள்முனையை விடக் கூரானது என்பதையும் அறிவோம். பேசசின் மூலம் எண்ணத்தை வெளிப்படுத்தும் போது கேட்பதற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தில் - குறிப்பிட்ட இடத்தில் குறைந்தளவாவது கேட்போர் அவசியம் இருக்க வேண்டும். நடிப்பும் அப்படியே, இவ்வடிவங்கள் ஒரே நேரத்தில் எல்லோரையும் சென்றடைவதில்லை. எல்லா நேரமும் ஒரே மாதிரி அமைவதுமில்லை. பேச்சோ அல்லது நடிப்போ பலரைச் சென்றடைந்தபின் திருத்தங்கள் செய்வது சிற்பம். எழுத்து அஞ்சலில் இடம்படும் வரை திருத்தப்படலாம், அச்சு இயந்திரம் முழுமையாக வெளியே தள்ளுமுன் திருத்தங்கள் செய்து கொள்ளலாம் அச்சாகிய பின்னர் கூட மாற்றங்களை உள்வாங்கி வெளியான சம்பவங்களும் உண்டு. எனவே எண்ணுவதும் எழுதுவதும் சுகம்; ஒருவரின் எழுத்தைப் பார்ப்பதும் படிப்பதும் சுகம்.

சிலர் ஒரு சொல்லை சரியாக உச்சரிக்கமுடியாத போது மெதுவாகச் சமாளித்த விடுவார்கள். இதனை நசுக்கி விடுதல் என நாட்டுப்புறத்தில் சொல்லக் கேட்டதுண்டு. சொல்லக்கூடாதவற்றை சொல்ல ஆரம்பித்தபின் தயங்கத்தயங்கி விழுங்கி விடுவதுமுண்டு. எழுதும் போது சரியான எழுத்துக்கள் தெரியாது விட்டால் கையெழுத்துப்பிரதிகளில் 'கிறுக்கிவிடுதல்' உண்டு. நடிப்பிலும் மௌனம் ஓர் அம்சமாகும். எழுத்து அச்சாகும் போது நசுக்குதல், கிறுக்குதல், மௌனம் என்ற உத்திகளைக்கையாள முடியாது. எனவே சொல்வது பேசுவது எளிது, சில பாத்திரங்களாக மாறி நடிப்பதும் சுகம் எழுதுவது தெளிவாக எழுத வேண்டும். தவறில்லை எழுத்தாளன் என்ற பெயரெடுக்கமுடியாது எழுத்தும் நிலைத்து வாழாது.

சிந்திக்கும் போது எமக்குக்கிடைத்த அனுபவங்களை, தெரிந்தவருக்குக்கிடைத்த அனுபவங்களை அசைபோடுவதில் ஒரு விதமான சுகானுபவத்தைக் காண்கின்றோம். சில வேளைகளில் எனது எண்ணத்தில் ஓர் உலகம் மலர்ந்து விரியும். பார்த்தவர்கள் - பழகியவர்கள் வருவார்கள் புதியவரும் வருவர், கருணையுள்ளம் நிரம்பிய அன்னையரும் வருவர், கனிமொழிபேசும் கன்னியரும் வருவர் உணவுக்குக் கெஞ்சும் சிறுவன் கந்தலுடையுடன் வருவான் வருவோரில் சிலர் எச்சரிப்பர் - எதிர்ப்பர். அது மட்டுமா பழைய அனுபவங்கள் வந்து போகும். சில வருடங்களுக்கு முன் கிளிநொச்சி அரச அதிபராக இருந்தவரை அண்மையில் சந்தித்தபோது அன்றைய-இன்றைய அனுபவங்களை-எண்ணங்களைப்பகிர்ந்து கொண்டோம். அப்போது அவர் நினைத்தவுடன் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கோ அல்லது கொழும்புக்கோ ஜீப் வண்டியிலோ புகையிரதத்திலோ சென்று வரக்கூடியதாக இருந்தது என்று சொல்லி மகிழ்ந்தார். நானும் விட்டுக்கொடுக்கவில்லை.

''இப்போதெல்லாம் கிளிநொச்சியிலிருந்து பதினைந்து மைல் தூரத்திலுள்ள ஸ்கந்தபுரம் கிராமத்தில் இரவு சுமார் ஏழெட்டு மணி போல ஒரு மாமரத்துக்குக் கீழே இருப்பேன். திடீரென்று நான் பிறந்த உடுப்பிட்டி மண்ணுக்குச் சென்று வருவேன். கல்லூரி நாட்களில் வழிபட்டுவந்த தொண்டமானாறு சந்நிதிமுருகனையும் கும்பிட்டுக்கொண்டு வருவேன்'' என்றேன்.

''எப்படி?'' என வாயைப்பிளந்தார், நண்பர் ''எல்லாம் நினைவில் - மனதால் சென்று வருவேன். வாகனமும் தேவையில்லை, அனுமதியும் தேவையில்லை, மனத்தைப் பழக்கப்படுத்திக்கொண்டால் யாவும் கைகூடும்'' என்றதும் வாய்விட்டுச்சிரித்தார் உண்மைதான்.

பள்ளிச்சிறுவனாக இருந்தவேளை தீபாவளிப்பண்டிகை நாட்களில் மழை ஆரம்பித்துவிடும். அந்த மேகங்களில்

ஏறிப்பவனி வந்திருக்கின்றேன். சுகமான நினைவு மழைக்கு அஞ்சி வீட்டினுள் நுழையும் பூனை, நாய் போன்ற பிராணிகள் என் அருகே வரும். அருவருப்பின்றி அவற்றைத்தடவி மகிழ்ந்திருக்கின்றேன். முன்னிரவில் சிவகாசி மத்தாப்பு கொழுத்தி அந்த பொன் வெள்ளி மழையில் குளித்து நனைந்து மகிழ்ந்திருக்கின்றேன். அம்மா சுட்டுத்தந்த இனிமையான பலகாரங்களை சிறிது சிறிதாகச் சுவைத்து மகிழ்ந்திருக்கின்றேன். கனதியான வண்ண வண்ணத்தீபாவளி மலர்களை மணிக்கணக்காக படித்து வியந்திருக்கின்றேன். இன்று அந்த மகிழ்வை உண்மையாக பெறமுடியவில்லை. நினைவில் எண்ணி எண்ணி மகிழ்வதும் ஆனந்தம் தானே!

இப்போது சில வேளைகளில் நல்ல படுக்கையறையும் மெல்லியமெத்தையும் கிடைத்து விடும். எப்படித்தான் அலுப்பாக களைப்பாக இருந்தாலும் நடந்த நடைபெறும் விரும்பத்தகாத நிகழ்வுகளும், அடுத்துவரும் நாளில் தொடரும் துயரங்களும் தூக்கத்துக்குத்தடையாக அமைந்து விடுவதுண்டு. அப்போதெல்லாம் என் பிறந்த மண் உடுப்பிட்டிக்குச் சென்று விடுவேன்.

விறாந்தையில் தகரக்கூரையின் கீழ்-மரச்சட்டங்களை சணல் நூல்களால் இணைத்த சாக்குக் கட்டில் தன்னால் இனிக் கட்டமுடியாது எனத் தாயார் கழித்துவிடு இரண்டு மூன்று பழைய சிலைகள் கட்டிலில் குவிக்கபபட்டிருக்கும் ''டொக் டொக்'' டொக் - டொக் - மழைத்தூறல் துளித்துளியாக தகரத்தில் தாளமிடுகிறது. டமார் ''டமார்'' பேரிரைச்சலோடு இடையிடையே இடிமுழக்க ஓசை.

டொக்-டொக் மெல்லொலி கொழ கொழ எனப் பெருமழையாக மாறுகிறது. சில கணங்களில் இடியோசையும் காதில் விழவில்லை; மழைபெய்யும் சத்தமும் கேட்கவில்லை, ஒன்றுமே தெரியாது-அப்படி ஒரு சுகமான தூக்கம் இன்றும் பல்வேறு நெருக்கடி காரணமாக தூக்கம் வராத வேளைகளில் பேசாமல் என் பிறந்த மண்ணில் விறாந்தையில் சாக்குகட்டிலில் கிடந்ததை நினைப்பேன். எண்ணத்தில் மின்னல் வெட்டும்-மழைபெய்யும்-இடி இடிக்கும் மாரித்தவளை மறந்த உறக்கம் அதிகாலை ஐந்து மணிக்குப் பின்னர் தான் தூக்கம் கலையும்.

நல்ல உறக்கத்தின் பின் எழும் மனிதன் புதியவனாக எழுகின்றான். அவன் வாழ்வையும் மக்களையும் நேசிக்கும் எண்ணத்தை வரவழைத்தால் செயல்கள் சிறந்ததாக அமையும். எழுதுகின்றவன் - எழுத்தை ஆளபவன் வாழ்வில் நம்பிகை - உள்ளவகை - மானுடத்தை நேசிப்பனாக - விழுமியங்களை மதிப்பவனாக ஆக்கங்களை உருவாக்க வேண்டும்.

சிலர் என்னைக் கோவிப்பார்கள் 'கோபம் வரக்கூடாது' என்ற எண்ணத்துடன் ஏதாவது ஒரு நகைச்சுவையை நினைப்பேன் மனதில் சிரிப்பு மலரும் சோகமான விடயங்களுக்கு முகம் கொடுக்கும் போது சோகங்களை அனுபவித்ததை எண்ணுவேன். மோசமான நிலை ஜீரணமாகி விடும்.

கலை இலக்கியவாதிகள் காண்பதையும் கற்பதையும் உள்வாங்கி சிந்திக்கின்றனர். காண்பதும் கற்பதும் அழகானதாக- ஒழுங்கானதாக அமைய வேண்டும், இல்லையேல் அழுக்கான எண்ணங்கள் கருவாகி ஒழுங்கற்ற படைப்புகள் உருவாகும். சமூக அவலங்களைச் சித்தரிக்கும் போதும், ஆழப்பதியவைக்கக்கூடிய அழகைக் கையாள வேண்டுமே தவிர 'அசிங்கம்' எனச் சொல்லக்கூடிய நடையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மனித வாழ்வு - அவர்களின் நடைமுறை - ஏற்படுத்திக் கொள்ளும் வசதிகள் எல்லாம் மாறிக்கொண்டு வருகின்றன. ஒரே நேரத்தில் இருவேறு அனுபவங்களைப் பெறும் காலத்தில், அவலப்படும் மக்களை இன்று காண்கின்றோம்.

'வாடிய பயிரைக்கண்டபோதெல்லாம் வாடினேன்' என உள்ளம் வருந்திப்பாடிய வள்ளலாரைப் படித்திருக் கின்றோம்.

மனித உயிர்களைக் கோரமாகக் கொன்று குவிக்கும் போராட்ட காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சிலருக்கு அடுக்கு மாடி வீடுகளில் ஆனந்த வாழ்க்கை, இன்னும் சிலர் உள்ளதெல்லாம் இழந்து காடுகளையும் மரநிழல்களையும் தேடி ஓடும் வாழ்க்கை, கைக்கடக்கமான தொலைபேசியுடன் நினைத்த உடன் உலகின் எங்கோ ஓரிடத்தில் இருப்பவருடன் மணிக்கணக்காக உரையாடும் மகிழ்ச்சி சிலருக்கு நான்கைந்து மைல் தூரம் கூட இல்லாத உறவினரின் நலத்தை அறியாமுடியாத கவலை சிலருக்கு.

இந்த இருவேறு அனுபவங்கள் பற்றிய குறிப்புகள் யாவும் தேடப்பட்டு, பயன்பட வேணடும்.

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதன்றி வேறொன்றறியேன்' என்றார் தாயுமானவர் சுவாமிகள்.

எண்ணமும் எழுத்தும் எல்லோரையும் இன்பத்தில் ஆழ்த்தவேண்டும்.

# ஆடற்கலை, சமுதாய மேம்பாட்டுக்கு, உதவ வேண்டும்

''கலாபூஷண்'' வேல். ஆனந்தன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு,
திருகோணமலை.

''கலைஞர்களின் கலைவடிவங்களை நாம் மேடையில் பார்க்கும் போது பார்ப்போரின் உள்ளுந்தலை, உயிர்க்கனலை அவை தட்டி விட வேண்டும். அந்த அளவிற்குக் கலைப்படைப்புகள் மக்கள் உள்ளங்களை உலுக்கிவிடக்கூடியதாக அமைதல் இன்றியமையாததும் முக்கியமானதும் ஆகும். உண்மைக் கலைப்படைப்பும் அதுவே ஆகும்'', என்று கலைப்படைப்புகளுக்கு வரைவிலக்கணம் தருகிறார் மேல் நாட்டறிஞரான ஸ்ருவட் வேவல் (Stvart veval).



எனவே மக்களின் பயனுள்ள முயற்சிகள் யாவும் அதன் பெறுபேறுகளும் மக்களின் வாழ்விற்காகவும் வளத்திற்காகவும் பயன்படும் போது கலைகள் மட்டும் கலைக்காக என்று சிலர் கூறுவதில் அர்த்தம் என்ன இருக்க முடியும்?

ஆடற்கலையைப் பொறுத்தவரை அது மனித இனத்தின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட காலத்திலிருந்து தோன்றி வளர்ந்து வந்திருந்தாலும், ஆடற்கலைக்கு வரலாறு கணிக்கப்படுகின்ற காலத்திலிருந்து இன்றுவரை ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப மக்களின் உணர்வுகளை அனுசரித்தே மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கிறது. ஒவ்வொரு பிரதேச மக்களினதும், அப்பகுதி மக்களின் மன எழுச்சிகளினதும், தேவைகளினதும் அடிப்படையிலேயே ஆடல் வடிவங்கள் வளைந்து வாழ்ந்து வந்துள்ளன என்பது வரலாறு தரும் உண்மைகளாகும்.

ஆடற்கலையின் புராண வரலாற்றை நாம் பார்க்கும் போது உலகினை ஆக்கிப் படைத்து ஆட்டிவைக்கும் இறைவனிடம் இருந்து பெறப்பட்ட, அதிலும் மனித வாழ்வைச் செம்மைப்படுத்த உருவாக்கப்பட்ட வேதமாகவே ஆடற்கலை காட்டப்படுகின்றது.

இந்த அடிப்படையில் கலைகள் எல்லாம் மக்களின் பொழுது போக்கிற்காகவே உருவாக்கப்பட்டன, என்ற கருத்தும், பொழுது போக்குக் கலைஞர்களின் வாதத்திற்கு சற்று மாறுபட்டு நிற்கிறது. ஆனால் கலைஞர்களாகிய நாம் கலை கலைக்காகவே என்ற வாதத்தையும், மறுபக்கமாக கலை பொழுது போக்கிற்காகவே என்ற வாதத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனினும் விஞ்ஞானத்துறையும், விவசாயத்துறையும், மருத்துவத்துறையும், சட்டத்துறையும், இலக்கியம் சமயம் என்பனவும் மக்களுக்காகவே என்று நிறுவப்பட்ட பின்பும் அழகியற் துறையும் மக்களுக்காகவே என்ற உண்மைக் கோட்பாட்டினை நாம் உணர்ந்து ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியுமா?

எனவே ஆடற்கலை அதன் தோற்றுவாயில் இருந்து இன்றுவரை ஒவ்வொரு காலகட்டத்திலும், அக்கால கட்டத்திலுள்ள மக்களின் பண்பாடு, அத்தோடு ஆசை, அபிலாசகளையும் அனுசரித்து எப்படிக் கைக் கொள்ளப்பட்டது என்பதையும் உரிய காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த, சீர் செய்ய ஆடற்கலை எவ்விதம் உபயோகப்பட்டது என்பதையும் வரலாற்றுரீதியாகவும் புராண இதிகாச செய்திகள் மூலமாகவும் நாம் பார்க்க முடியும்.

கீழைத்தேசத்தின் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்தின் பெருமைக்கும், சிறப்பிற்கும் தனித்துவத்திற்கும் அத்திவாரமாகவும், அரணாகவும் நிற்பவை ''இருக்கு, யசுர்,சாம, அதர்வண'' என்ற நான்கு வேதங்களாகும். இந்த நான்கு வேதங்களும் மக்களின் நெறிபிறளா வாழ்வைச் சீர் செய்யவும் நெறியுடைய வாழ்வை மேற் கொள்ளவும் இறைவனால் உண்டாக்கப்பட்டன என நம்பப்படுகிறது.

இக்கூற்று மேற் கூறிய வேதங்களைப் பற்றிய புராணகால வரலாறு எமக்குத்தரும் உண்மைகளாகும். இவ் வேதங்களைப் பற்றிய ஆய்வு நடாத்திய யோகிகள் மற்றும் அறிஞர்கள் இவ்வுண்மையை ஒப்புக் கொள்கிறார்கள். எனினும் இவ் வேதங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த காலத்திலும், அதாவது திரேதாயுக காலத்தில் மக்கள் நெறிபிறள் வாழ்வை மேற் கொண்டிருந்தார்கள், என்றும் இத்தகைய நிலையை மேற்கூறிய நான்கு வேதங்களின் நற்கருத்தின் துணைகொண்டு மாற்ற இயலாமல், ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதத்தைப் பிரமன் படைத்தார் என்றும் அந்த நாட்டிய வேதத்திற்குரிய அசல் சத்துக்களை மேற் கூறிய நான்கு வேதங்களிலும் இருந்து பிரமன் எடுத்து நாட்டிய வேதமாகத் தொகுத்தார் என்றும், போதனையை விடக் கண்காட்சி சாதனைகள் மூலம் மக்களை நெறிப்படுத்தலாம் என்பதைப் பிரமன் உணர்ந்ததால் இதை ஐந்தாவது வேதமாகப்படைத்து உபதேசித்தார் என்றும் புராணவரலாறு காட்டுகிறது. எனவே ஐந்தாவது வேதமாக உருவாக்கப்பட்ட நாட்டிய வேதம் வெறும் கண்காட்சிக்காகவோ அல்லது அழகுபட ஆடிப்பாடும் பொழுது போக்கு சாதனமாகக் கருதியோ படைக்கப்படாமல் மக்கள் வாழ்வை மேம்பாடுடையதாக அமைக்க வேண்டும் என்ற நோக்கிற்காகவே படைக்கப்பட்டது என்பதை நாம் உணர்கின்றோம். இந்த உண்மை நாட்டியத்தின் புராணகால வரலாற்று மூலமாக நிறுவப்படுகிறது.

நாட்டிய வேதத்தை உருவாக்கிய பிரமா அந்த வேதத்தைப் பரதமுனிவருக்கு உபதேசித்தார். காந்தர்வர்களின் உதவியுடனும் அப்சரஸ் பெண்களின் உதவியுடனும் நாட்டியம், நிருத்தியம், நிருத்தம் ஆகிய அங்கங்கள் அடங்கிய ஆடல் வடிவத்தைப் பரத முனிவர் சிவபெருமான் முன்னிலையில் அரங்கேற்றினார். இதைப்பார்த்த சிவபெருமான் அவரின் பிரதான கணங்களின் ஒருவரான தண்டுமுனிவரைப் பார்த்துப் பரத முனிவருக்கு தாண்டவ வகையான நடனத்தைப் போதிக்கும்படி பணித்தார். தண்டு முனிவரும் அங்ஙனமே செயற்பட்டார். தண்டு முனிவரிடம் பெற்ற தாண்டவ நடனவகையைப் பரத முனிவர் மற்றைய தேவர்களுக்கும், தேவர்கள் மூலம் முனிவர்களுக்கும் போதிக்க அங்ஙனமே உலகில் பரவியதாக வரலாறு.

மேலும் சிவ பெருமான் பார்வதியைப் பார்த்து இலாஷ்ய வகை நடனத்தைப் போதிக்கும்படி பணித்தார். இவ்வகை நடனத்தைப் பார்வதி பாணாசுரன் மகள் உஷைக்குக் கற்றுக்கொடுக்க உஷைதுவாரகையிலுள்ள கோபிகளுக்கு கற்றுக் கொடுக்க கோபியர் சௌராஸ்டிர பெண்களுக்குப் போதிக்க அவ்வாறே அதுவும் உலகில் பரவியது. இதுவும் புராண வரலாறு.

நாட்டியத்தின் தோற்றத்தினையும் அது உலகிற்கு எப்படி எட்டியது என்பதையும் இந்த வரலாறுகள் காட்டுகின்றன. அதற்கு அப்பாலும் நாட்டியக் கலையை நாட்டிய வேதமாகவே பிரமன் படைத்தார் என்பதையும் அறிகிறோம். வேதங்களை இறைவன் தனக்காகப் படைக்கவில்லை. அது தேவர்களுக்காகப் படைக்கப்பட்டால் மக்கள் மன்றத்திற்கு வந்திருக்கத் தேவையில்லை. எனவே ஐந்தாவது வேதமாகப் படைக்கப்பட்ட நாட்டிய வேதமும் மக்களின்

மேம்பாட்டிற்காகவே படைக்கப்பட்டிருக்கிறது என்பது வேதங்களின் புராண வரலாற்றுப்படி கிடைக்கும் உண்மைச் சான்றுகளாகும்.

தாண்டவ நடனத்தைத் தண்டுமுனி மூலம் உப தேசித்த பெருமான் இடது காலைத் தூக்கி நிற்கும் நடராஜ மூர்த்தத்திற்கு ஒரு நிலையிலேயே தத்துவார்த்த நிலையைத் தருகிறார். அது மட்டுமல்லாமல் ஒரு தாண்டவ நிலையிலேயே தனது ஐந்தொழில்களின் ஆழமான உண்மையை அருளி நிற்கிறார். மனிதர்களை வழிப்படுத்த, நெறிப்படுத்தவே சமயங்கள் உருவாக்கப்பட்டன. நாம் பார்க்கும் இந்திய நடனங்களும் இறை வழிபாட்டுடன் இணைத்தே தோற்றுவிக்கப்பட்டன, வளர்க்கப்பட்டன.

மனித உள்ளம் பெலவீனமானது. அந்த மனதின் தனிப்பட்ட ஆசாபாசங்களில் இருந்து அதை நேர்வழிப் படுத்தவே இறைவழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. இந்த இறைவழிபாட்டை நாதத்தின் அடிப்படையிலான இசை மூலம் ஒரு நிலைப்படுத்துவது போல ஆடல் வடிவங்கள் மூலமும் ஒரு நிலைப்படுத்தலாம் என்பது உண்மையாகிறது. வேண்டப்படாதனவற்றை ஆடல் வடிவமாகச் சித்தரித்து மக்கள் மனதில் பதியச் செய்வது போல், வேண்டியவற்றை அதேபோல் ஆடல் வடிவமாகச் சித்தரித்து மக்கள் மனதில் பதியச் செய்யலாம். தாண்டவத்தின் தத்துவம் இதையேதான் வலியுறுத்தி நிற்கிறது.

தாண்டவம் எனும் போது சிவபெருமானையும் நடராஜ மூர்த்தத்தையும் அவர் ஆடும் பேராட்டத்தின் மெய்ப்பாடுகளையும் அதன் பொருளையும் நாம் உணருகின்றோம். அதுவும் மக்களுக்காகவே என்பதையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

உலகை ஆக்கிக் காத்து அழித்து மாயையில் மறைத்து கருணையால் அருளி இப்படித்தன் ஈஸ்வரத்தன்மையால் செய்யும் ஐந்தொழில்களையும் விளக்குவதே தாண்டவத்தின் தத்துவமாக அமைகிறது.

நடராஜ உருவத்தில் டமருகம் என்ற துடி வைத்திருக்கும் கை ஆக்கல் என்ற சிருஷ்டித் தத்துவத்தை விளக்குகிறது. மனிதனையும் அவனது தலைவிதியையும் நிர்ணயித்து ஆக்குவது ஆண்டவன் செயல் என்பதை இத் தத்துவம் நமக்குத் தருகிறது. மண்ணிற் புரளும் மனிதன் விண்ணினை நோக்கிப் பறந்து சென்றாலும் அந்த மனிதனின் தலை எழுத்தை நிர்ணயிக்கும் சூத்திரதாரி இறைவன்தான் என்பதை இக்கருத்து மனிதனுக்குத் தருகிறது. இக்கருத்தை அவன் உணரவேண்டும் என்பதும் புலனாகிறது. ஆக்கல் தத்துவமான துடியிலிருந்தே ஒலிகள் எழுகின்றன. ஒலிகளில் இருந்து உலகம் மிளிர்கின்றது ஒலியும் ஒளியும் இன்றேல் மனிதன் எங்ஙனம் வாழ்வது.

அபயகரம் காத்தல் என்ற தத்துவத்தைத் தருகிறது. மனிதன் தனது மனம் போன போக்கில் எதைச் செய்தாலும் அவனின் கணக்கு முடியுமட்டும் காத்து நிற்பவன் இறைவனே என்பதைக் காட்டுகிறது. நெருப்பைக் கொண்டகை சம்காரம் அதாவது அழித்தல் என்ற கருத்தைப் போதிக்கிறது. செய்ய வேண்டியதைச் செய், செய்யத்தகாதனவற்றைச் செய்யாதே,தருமம் குலையும் நிலைக்கு நீ செயற்படுவாயானால் உனது உடல் மட்டும் அல்ல ஆன்மாவும் அழிக்கப்படும். தீயில் பொசுங்கிய சாம்பல் போலாகிவிடும் என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது.

நாட்டப்பட்டகால் மறைத்தலைக் குறிக்கும். அதாவது திரோதனம் இக்கருத்துத் தூய்மையான உள்ளத்தைப் பாசத்தில் கட்டும், தூய உள்ளம் எப்பொழுதும் நற்பண்புகளின் உறைவிடமாக அமைவதுடன் இறைதத்துவத்தை அது இயல்பாகவே தன்பால் கொண்டிருக்கும்.

தூக்கியகால் தன்னைச் சரண்புகுந்தார்க்கு நல் மோட்சம் என்ற அருளைக் காட்டி நிற்கின்றது. நாட்டப்பட்ட காலின் கீழே அடக்கி வைக்கப்படும் முயலகன் என்ற அரக்கன் மலத்தைக் குறிக்கும்.

ஒரு தாண்டவ நிலையிலேயே பெருமான் தனது ஐந்தொழிலை வெளிப்படுத்தி நிற்கிறார். ஈஸ்வரனின் ஐந்தொழில் தத்துவம் மனித வாழ்வின் அத்திரவாரமாக நல் நெறிகளையே நோக்கிச் செல் என்ற எச்சரிக்கையை நமக்குத் தருகிறது. எனவே நாட்டிய வேதத்தின் மூலத் தத்துவமும் அது மக்களின் மேம்பாட்டிற்காகவே என்ற உண்மையை நிறுவுகிறது.

நாட்டிய வேதம் நாட்டிய சாஸ்திரமாக உருமாறிய காலம் கி.மு. 2ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ம் நூற்றாண்டு காலமாக ஊகிக்கப்படுகிறது. நாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படைக்காலம் அதுவானால் இன்று நாட்டிய சாஸ்திரத்தின்

2000 ஆண்டுகளுக்குப் பின்னால் நாம் நிற்கிறோம். இந்த 2000 ஆண்டுகளுக்கிடையில் உலகின் ஒவ்வொரு கோடியிலும் இந்தியத்துணைக்கண்டத்திலும் மிகப் பெரிய மாற்றங்கள் உண்டாகியிருக்கின்றன. மக்களும், மக்களைக் கொண்டுள்ள பிரதேசங்களும் மாற்றத்திற்குள்ளாகியிருந்தாலும் நாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படையும் நோக்கமும் மாற்றமடையவில்லை. காரணம் அது எந்தக் காலத்திற்கும் பொதுவானதாகவே அமைந்தது. ஆனால் ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆடல் வடிவங்கள் அடிப்படை தவறாத அளவில் மக்களினதும் பிரதேசங்களினதும், எண்ணங்களுக்கும் எழுச்சிகளுக்கும் ஏற்ப வளைந்து கொடுத்தே வாழ்ந்து வந்திருக்கிறது. அத்தோடு தளர்வின்றித் தழைத்த காலமும் உண்டு. இது மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு உட்பட்ட சம்பவமாகும்.

இந்த நிலையில் நாம் ஒரு உண்மையை உணரலாம். எந்தக் காலகட்டங்களிலும் இக்கலையானது மக்களுக்காக என்று உணரப்பட்டபோது அது செழித்து வளர்ந்துள்ளது. அது பொழுது போக்கிற்காக என உணரப்பட்டு மக்களைக் கெடுக்கும் ஒரு சிற்றின்பக் கருவியாகக் கருதி ஒதுக்கப்பட்ட காலமும் உண்டு. இத்தகைய காரணங்களால் தளர்ச்சியுற்றும் வந்துள்ளது.

பரதசாஸ்திரத்தின் ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரையிலான ஆடல் வடிவங்களின் உண்மைத் தொடர்புகள் சரிவர அறியப்படவில்லை 12ம் நூற்றாண்டு முதல் 17ம் நூற்றாண்டு வரையிலான ஆடல் முறைகள் கூத்து வடிவமாகவே இருந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அவற்றுக்கு ஆதாரமாகக் கூத்துக்கள் ஆடப்பட்ட புராணக்கதைகளை மேற்கோள் காட்டுகிறார்கள். இந்தக் கதைகள் புராண இதிகாசங்களில் இருந்து எடுக்கப்பட்டாலும் அவை மக்கள் மனதில் நல்ல கருத்துக்களைப் பதியச் செய்யக் கூடியதாகவே இருந்தன.

மார்க்கண்டேய, ருக்மாங்கதா, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரன் போன்ற கதைகளை உதாரணமாகக் கொள்ளலாம். இந்தப் புராணக் கதைகளின் உள்ளீடு அம்சங்களையும் அக்கதையின் கருப்பொருளையும் நாம் நோக்கும் போது பக்தி, தாம்பத்தியத்தில் ஏகபத்தினி விரதம், சத்திய நெறியுடைய வாழ்வு, போன்ற கருப்பொருளை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டன, என்பதை நாம் உணருகிறோம்.

மேடைகளில் தோன்றும் பாத்திரங்களை, புராண காலப் பாத்திரங்களின் ஒப்பனை வடிவங்களைக் கொடுத்து சம்பவங்கள் அனைத்தையும் இறைவனின் செயற்பாடாகவே வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். இச்சம்பவங்கள் மெய்யான ரீதியான பல கருத்துக்களை உணர்வுகளை அக்காலத்து மக்களிடம் ஏற்படுத்தத் தவறியதில்லை. நாம் குறிப்பிடும் கால கட்டத்தில் இக்காலத்தைப் போல் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இருந்திருக்கவில்லை. மக்கள் கூட்டம் கூட்டமாகவும் குழுக்களாகவும் சேர்ந்து வாழ்ந்தார்கள். ஒரு கோடியில் வாழ்ந்த மக்களைப் பற்றி மறு கோடியில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தாம் உண்டு தம் குழுக்கள் உண்டு என்று வாழ்ந்த காலம்.

சமூக மாற்றத்தின் வேகம் இக்காலத்தைப் போன்றிருக்கவில்லை. எனவே தமது உணவுக்கும், உடைக்கும் உழைக்கின்ற நேரம் தவிர்ந்த மற்றைய நேரமெலாம் அவர்கள் ஓய்வாகவே இருந்திருக்கின்றனர். இத்தகைய ஓய்வு நேரங்களைக் கூத்து வடிவிலான கருத்தம்சங்களைப் பார்ப்பதிலும், உணர்வதிலும் அதன் மூலமாக நெறிபிறழா ஒரு நேரிய வாழ்வையும் கண்டனர். அதனைப் பின்பற்றியும் வாழ்ந்தனர். வாழ்வின் உண்மை இலக்கையும் அடைந்தனர்.

தற்காலம் நடைமுறையில் உள்ள ஆடல் வடிவங்களின் அடித்தள அமைப்பு ஏறத்தாழ 2 1/2 நூற்றாண்டுக் காலமாகும். எனினும் இவற்றின் உள்ளீடு நிலையிலும் குறைந்த கால கட்டத்தில் அவை மாற்றத்திற்குள்ளாகி யிருக்கின்றன. இன்றைய பரத நாட்டியம் என்ற ஆடல் முறை தஞ்சை சகோதரரின் காலத்திற்குப் பின்னால் இத்தகைய உருவைப் பெற்றிருக்கிறது. அதே போன்று இன்றைய கேரளம் என்று அழைக்கப்படும் அன்றைய சேர நாட்டின் கதகளி நடனமும் இதே கால அளவினதாக மாற்றங்களுக்கு உட்பட்டு இருக்கின்றது. ஆடற்கலையின் கோட்பாடுகள் (சாஸ்திரம்) பொதுவானதாகவே அமைந்திருந்தன என்பது உண்மை. சதிர் என அழைக்கப்பட்ட பரதக்கலையைப் பொறுத்தவரை தஞ்சை சகோதரர் வாழ்ந்த காலத்தில் தஞ்சை மன்னர்களின் ஆதரவு அவர்களுக்கு இருந்திருக்கின்றது. அதேபோன்று சேர நாட்டுக் கதகளி நடனமும் சிற்றரசர் பரம்பரையால் காப்பாற்றப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது. இதில் ஒரு யதார்த்தமான கருத்தினை நாம் அனுமானிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பிட்ட கால கட்டத்தில் சாதாரண மக்கள்

மட்டுமல்ல ஆளும் வர்க்கத்தினர் கூட இவ்வாடல் வடிவங்கள் மூலம் ஈர்க்கப்பட்டுக் கவரப்பட்டுள்ளார்கள். மன்னர்களை சபாநாயகனாக வைத்து சமூகத்திற் பெரியோர்களை சபையின் முன்வரிசையில் அமர வைத்து ஆடல் வடிவங்களைச் சமர்ப்பித்ததாக நாம் அறிகிறோம்.

அதுமட்டுமன்றி ரசிகர்கள் தரத்தினையும், தகைமையையும் இனங்கண்டு அதற்கேற்ப ஆங்காங்கே அவர்களை அமரச் செய்துள்ளதன் மூலம் மக்களின் பண்பாட்டுக் கோலங்கள் அறிந்து அவர்களைச் சமுதாயத்தில் தரம் பிரித்துக் கணக்கிட்டு வைத்துள்ளார்கள். ஆடும் கலைஞர்களையும் அவ்வாறே பொருத்தமான, பொருத்தமற்ற என்ற கணிப்பில் தரம் பிரித்தார்கள். பார்வையாளர்களை அல்லது ரசிகர்களைத் தரம் பிரித்து சபைகளில் ஆங்காங்கே குறிப்பிட்ட இடங்களில் நிறுத்தி வைத்ததன் மூலம் இச் செயற்பாடானது ஓரளவு வருணாச்சிரம முறையை சமூகத்தில் நிலை நிறுத்த அடிகோலியது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் ரசிகர்களைத் தரம் பிரித்ததன் நோக்கம் ரசிகர்களின் இயல்புக்கும் குணாதிசயத்திற்கும் ஏற்பவே அல்லாமல் உண்மையில் வருணாச்சிரம முறையைப்புகுத்துவதற்கல்ல. எனினும் ஏதோ காரணத்தால் வருணாச்சிரம முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்து விட்டது. தவிரவும் ஆடல் அரங்கில் இவர்கள் தரம் பிரிக்கப்பட்டது போல் சமூகத்திலும் இவர்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். அத்துடன் இனங்காணவும் செய்தார்கள்.

இதன் காரணமாகவே ஒரு சிறிய கிராமத்திலேயே பல குழுக்கள் இயல்பாகத் தோன்ற வாய்ப்பேற்பட்டுவிட்டது. எனினும் அக் குறிப்பிட்ட காலகட்டத்திலும் இத்தகைய வருணாச்சிரம முறை மானிட இயல்புக்கு உகந்ததல்ல, என்ற நோக்கோடு இத்தகைய நிலைமைகளை நீடிக்கவிடக் கூடாது என்பதற்காகவே ''வேடன் கண்ணப்பன்'' போன்ற கதைகளைக் கூத்து வடிவமாக மேடையில் சமர்ப்பித்தனர்.

''இட்டார் பெரியோர் இடாதோர் இழி குலத்தோர்'', என்று தமிழ் மூதாட்டி ஔவையார் கூறினார். இது ஒருவரின் அன்பு, அறம் என்பவற்றைத் தரம் பிரிக்கவே கூறினார். அதுபோல் ஆடல் அரங்கிலும் மக்களின் உண்மை ரஸ ஞானத்தையும் அறிவாயுதக் கூர்மையையும் கணக்கிட்டே உரியவர்களை ஆங்காங்கே அமரச் செய்தார்கள். எனினும் வருணமுறை குடிசை முதல் கோவில்வரை நடைமுறைக்கு வந்துவிட்டது. இத்தகைய நடைமுறைகள் சமூக விழுமியங்களை பங்கப்படுத்தும் என்பதை எடுத்து விளக்கவே மேற்கூறிய ''வேடன் கண்ணப்பன்'' கதையையும், மகாபாரதத்திலே ''ஏகலைவன்'' கதையையும் கூத்து வடிவில் மேடையில் செய்தனர். எந்தத் தொழிலையும் செய்யும் ஒருவன் அவனது அந்தரங்க சுத்தியுடனும் ஆத்ம பலத்துடனும் இறைவனை வழிபடுவானானால் அந்தப் பரம் பொருளை அடைய அவன் தகுதியுடையவன் என்பதை வேடன் கண்ணப்பன் கதை சித்தரிக்கின்றது. அது போலவே காட்டிலே அலைந்து திரிந்த காட்டு மனிதன் ஏகலைவன், காண்டீபனின் வில்வித்தைக்குக் குருவான துரோணரை மானசீகக் குருவாக ஏற்றுக் களிமண்ணிலே துரோணரின் உருவத்தைச் செய்து நிறுத்தி அந்த உருவத்தை வணங்கிக் கொண்டே வில்வித்தையில் தேர்ச்சி பெற்றான் என்பதையும், குருதட்சணையாகத் தனது பெருவிரலையே துரோணருக்கு அரிந்து கொடுத்தான் என்பதையும் இந்நடவடிக்கைகள் எமக்குக் காட்டுகின்றன.

ஒரு வில்வீரன் தனது உயிர் நாடிபோன்ற பெருவிரலையே அரிந்து மானசீகமாக வழிபட்ட குருவுக்குக் கொடுத்தான் என்ற கருத்தினை அவனது பக்தியின் மேன்மையை உணர்த்தவே இக் கருத்துக்களைக் கூத்து வடிவமாகச் சமர்ப்பித்தார்கள் என்பதை நாம் உணர்கின்றோம். எனவே ஆடற்கலையின் இடைக்கால வரலாற்றிலும் மக்களின் மேம்பாட்டுக்காக உரிய காலத்தில் சமூக அமைப்புகளுக்கு ஏற்ப அக்கலை மக்களுக்காகவே பிரயோகிக்கப்பட்டது என்பதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இன்று நாம் இலங்கையில் பயிலுகின்ற பரத நடனம், கதகளி ஆகிய இந்திய நடனங்களின் நவீன மறுமலர்ச்சியின் காலம் 19ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது. அதாவது 1930ற்குப் பிற்பட்ட காலமாகும். 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் அக்கால கட்டத்திற்கு சற்றுப் பிற்பட்ட காலத்திலும் இந்தியத் துணைக்கண்டம் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த காலம். வெளிநாட்டு நாகரீகம் பண்பாட்டுக் கோலங்கள் என்பவற்றை இந்திய மக்கள் ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டு உத்தியோக மோகத்தில் மூழ்கியிருந்த காலம். சுதேசிய எண்ணமும், எழுச்சியும் பெரும்பாலான மக்களிடம் மங்கிப் போயிருந்த காலம். இதன் காரணமாக அம்மக்களிடம் இயல்பாகவே ஊறியிருந்த சுதேசிய பண்பாட்டுக் கோலங்களும் கலைவடிவங்களும் அவசியமற்றவை என்ற மனப்பான்மை அவர்கள் மனதில் செயற்கையாக வளர்ந்து விட்டகாலம். இதனால் இக்கலை வடிவங்களுக்கு ஊக்கம் கொடுப்பார் யாருமற்ற நிலையில்

கைவிடப்பட்டு அனாதரவாக விடப்பட்டிருந்தன. தவிரவும் கலைஞர்கள் அதிலும் ஆடற் கலைஞர்கள் சமுதாயத்தைக் கெடுக்கும் ஓர் கூட்டம் என்ற மனப்பாங்கில் ஒதுக்கிவிடப்பட்ட காலம்.

பொருளாதார மாற்றத்தின் அடிப்படையில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் சுதேசியத்தின் வீழ்ச்சிக்கும், சுதந்திரத்தின் வீழ்ச்சிக்கும் அடிப்படையாய் இருந்தன. இதனால் எப்படியும் வாழ்ந்தால் போதும் என்ற அடிமை மோகத்தில் மக்கள் ஊறிக்கிடந்தார்கள். சுதேசிய எண்ணமும் விடுதலை உணர்வும் உள்ள மக்கள், நாம் சுதந்திர மக்களாக இருக்க வேண்டுமானால் அதற்கான ஆரம்ப முயற்சியாக சுதேசியக் கலைகள் பேணப்பட்டு வளர்க்கப்பட வேண்டுமென்பதை மீண்டும் உணரத் தலைப்பட்டார்கள்.

வங்கத்து கவியரசு தாகூர், கேரள மகாகவி வள்ளத்தோழ் நாராயண மேனோன், போன்ற கவிஞர்களும் தமிழகத்துப் பாரதியார் போன்ற கவிஞரும் சுதேசிய எண்ணத்தையும் விடுதலை உணர்வையும் தமது கவிதைகள் மூலம் தட்டி எழுப்பினர். இவர்களின் விடுதலைக் கவிதைகளுக்கு ஆடல் வடிவம் தந்து அதை மக்கள் முன் சமர்ப்பித்தார்கள் பல ஆடற்கலைஞர்கள். பாரதியாரின் ''ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று'' இத்தகைய பாடலுக்கு குமாரி கமலா போன்ற நர்த்தகிகள் பல இடங்களில் நடன வடிவம் தந்து ஆடியதாகவும் அதன் மூலம் மக்களிடம் சுதந்திர உணர்வை ஏற்படுத்தியதையும் நாம் அறிகிறோம். அதேபோன்று கேரளத்துக்கதகளி கலைஞர்கள் பலரும் சுதந்திர உணர்வைக் கொடுக்கக்கூடிய பல நடன வடிவங்களை மேடையில் சமர்ப்பித்தார்கள்.

ஒவ்வோர் காலகட்டத்திலும் மக்கள் மத்தியில், சமூகத்தில் தேவைப்பட்ட கருத்துக்களைப் புகுத்தி சமூகத்தினதும், இனத்தினதும், நாட்டினதும் பொதுவான விடுதலைக்காக, மீட்சிக்காக ஆடற்கலை பயன்படுத்தப்பட்டுள்ளதை இதன் மூலம் நாம் அறிகிறோம். தவிரவும் நாடு சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது சமுதாயத்தில் மனிதன் சுதந்திரம் பெற்றவனாக ஏற்றத்தாழ்வற்றவனாக வாழ வேண்டும். அதுதான் உண்மைச் சுதந்திரம் என்பதைப் பாரதியார் ''பறையருக்கும் இங்குதீய புலையருக்கும் விடுதலை'' என்று பாடினார்.

இத்தகைய கருத்துக்களை இந்தியக் [illegible]ைஞர்கள் தமது நடனவடிவங்களில் புகுத்தினர். கேரளத்துக் கலைஞர்களும் வங்கத்துக் கலைஞர்க[illegible]கத்தில் புரையோடியிருந்த ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்து சமத்துவ நோக்குடைய சமதர்மக்கருத்துக்களைத் தநதார்கள். இதில் கேரளத்து சங்கர மேனோன், ரவியம்மாள் போன்ற கலைஞர்கள் அதி தீவிரமாக இயங்கிய படியால் வெள்ளையரின் நடவடிக்கைக்கும் ஆளாக நேரிட்டது. தவிரவும் கதகளி ஆடல் வடிவத்தின் சம்பிரதாயக் கோலங்களைத் தகர்த்தெறிந்து இலகு முறை ஒப்பனைக் கோலங்களுடன் சமூகக் கருத்துக்களையும் இவர்கள் முன் வைத்தனர். குருகோபிநாத் பாணியிலான கதகளி ஆடல் வடிவத்திற்கு முன் உதாரணமாக கால்கோள் இட்டவர்கள் சங்கரமேனோன், ரவியம்மாள் போன்றோர் என்றால் மிகையாகாது.

நமது நாட்டில் குறிப்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய யதார்த்தமான சமூகத்துடன் ஒன்றிய கருத்துக்களை ஆடல் வடிவங்கள் மூலம் வெளிக்கொணரும் அளவுக்கு நாட்டியக் கலைஞர் முன் வரவில்லை. எனினும் இலங்கையின் இனப் பிரச்சனை சம்பந்தமான இனக்கலவரங்களிற்கான பிரச்சனைகளை மையமாக வைத்து 1978 இன் முற்பகுதியில் எனது கலைக்குழு தயாரித்த ''பஸ்மாசுரன்'' -77, 86ம் ஆண்டு சமர்ப்பித்த ''என்னதான் முடிவு'' போன்ற ஆடற்கதை நிகழ்வுகள் இலங்கைத் தமிழ் இனத்தின் அரசியல் சித்தாந்தத்தினையும், விடுதலை உணர்வினையும், இனத்தின் தார்மீக அபிலாசைகளையும் வெளிப்படுத்துவனவாக அமைந்தது. இதற்கிடையில் சமூகநிலை ஏற்றத்தாழ்வுகளை மையம வைத்து தயாரிக்கப்பட்ட ''ஆலய மணி'' சீதனக் கொடுமையை வெளிப்படுத்திய ''நீறுபூத்த நெருப்பு'' போன்ற ஆக்கங்கள் வெளிவந்தன.

இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழர் மத்தியிலுள்ள பல பிரச்சனைகளை மையமாக வைத்துப் பலராலும் பல ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இத்தகைய முயற்சிகள் நம்மவர் மத்தியில் ஓரளவு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தவறவில்லை. அத்தோடு இக்கால கட்டத்தில் ஆடற்கலை சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்ற சிந்தனையும், செயற்பாடும் தனிப்பட்ட ஆடற்கலைஞனோடு மட்டுமல்லாது தாபன ரீதியாகவும் சிந்திக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

தென்னிலங்கை நாட்டியக் கலைஞர்களின் பெரும்பாலான நடன ஆக்கங்கள் மக்களை, அவர்தம் பிரச்சனையை மையமாக வைத்தே படைக்கப்படுகின்றன. அதன் காரணமாக அவர்களின் படைப்புகள் மக்கள் மத்தியில் நூற்றுக்கு நூறு செல்வாக்குப் பெறுகிறது. அதன் காரணமாக நாளுக்கு நாள் பல புதிய படைப்புக்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இதனை நாம் சிந்தனைக்கு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கிழக்காசிய நாடுகளின் கல்வித்துறையில் நுண்கலைகளை அழகியற் கல்வி என்ற அந்தஸ்தோடு பாடதிட்டத்தில் புகுத்திய நாடு நமது இலங்கையாகும். 1972 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கல்வித் துறையிலான மாற்றம் நுண்கலைகளையும் அழகியல் கல்வி அந்தஸ்திற்குப் பாடவிதானத்தில் ஏற்றி வைத்தது. இதன் மூலம் நுண்கலை ஆசிரியர்கள் விஞ்ஞான, கணித, வரலாறு போதிக்கும் ஆசிரியர்களின் அந்தஸ்திற்குரியவர்களாக கணிக்கப்பட்டார்கள். இது நமது நாட்டின்கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட சமூக அந்தஸ்து என்றே சொல்லலாம். அதற்கப்பாற்பட்ட நிலையில் நுண்கலை உணர்வு அதாவது முருகியல் உணர்வு ஒரு மனிதனைப் பூரணப்படுத்துகின்றது என்ற உளவியல் தத்துவத்தினை இத்தகைய நடவடிக்கை மூலம் நிறுவி உள்ளார்கள்.

அரசியல் வாதிகள் முதல் அரச நிர்வாக அதிகாரிகள், நாளாந்தம் மாடாக உழைக்கும் தொழிலாளர் வரை இசைக்கும் ஆடலுக்கும் தம்மைப் பறிகொடுக்கத் தவறுவதில்லை. இந்த உணர்வை பள்ளிச் சிறார் முதல், வளரும் சந்ததிக்குப் புகட்டுவதற்காகவே அழகியல் கல்வி பாடத்திட்டத்தில் புகுத்தப்பட்டது. எனவே அழகியற் கல்வி பாடசாலையில் புகுத்தப்பட்டதன் நோக்கம் அத்தனை பிள்ளைகளையும் கலைஞர்களாக்க வேண்டும் என்ற நோக்கமல்ல. முருகியல் உணர்வு மூலம் அவர்கள் உள்ளத்தில் அடர்த்தியான மன நிறைவை ஏற்படுத்தவும், பிரச்சனைகள் எழுகின்ற நேரத்தில் ஒருவரை யொருவர் புரிந்து கொண்டு, பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொணடு மற்றவர் அபிலாசைகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளவும், ஒவ்வொருவரும் மற்றவரை அங்கீகரித்துக் கொள்ளவும் கலையுணர்வு உதவும் என்பதே.

பள்ளிக்கூட மட்டத்திலே குழந்தைகள் ஒருவரை ஒருவர் அங்கீகரிக்கவும் ஒத்த மனதுடன் குழு முயற்சியுடன் சேர்ந்து உழைக்கவும் அன்பு, பக்தி, உதவும் மனப்பாங்கு போன்ற ஆளுமைக் கூறுகளை விருத்தி செய்யவும் இந்த முயற்சி உதவுகின்றது. ஆகவே ஆடற்கலையும் அழகியற் கல்வியில் ஓர் அங்கமாக உயிர்த்துடிப்புள்ள வடிவமாக நம் முன்னால் உள்ளது. இது மக்களின் மேம்பாட்டிற்காகவே என்பதையும் உணர்த்துகிறது அல்லவா?

வேதங்கள் உருவாக்கப்பட்ட புராண காலத்தில் நாட்டிய வேதத்தினை மக்கள் நெறியுடை வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்குடனே பிரமன் படைத்தான் என்பதை ஆரம்பத்தில் பார்த்தோம். நூற்றாண்டு காலமாக மாற்றத்திற்குட்பட்ட சமூகங்கள் அதன் ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகங்களின் நகர்வுக்கு ஏற்ப ஆடல் வடிவங்களும் மக்களின் தேவைகளைப் பொறுத்தே மாறியுள்ளன என்பதனையும் பார்த்தோம்.

இந்தியத் துணைக்கண்டத்தை ஆங்கிலேயர் ஆதிக்கம் சூழ்ந்திருந்த போது சுதந்திர உணர்வுற்ற கவிஞர்களும் ஆடற்கலைஞர்களும் விடுதலை நோக்கில் தமது பங்களிப்பினை எங்ஙனம் செலுத்தினர் என்பதையும் பார்த்தோம் நமது கல்வித் திட்டத்தில் அழகியல் கல்வி ஏன் புகுத்தப்பட்டது என்பதையும், நோக்கம் எது என்பதைப்பற்றியும் அறிந்தோம்.

ஒட்டுமொத்தத்தில் ஆடற்கலை தனித்துவமானது, புனிதமானது, மக்கள் மனதில் கருத்துக்களை இலகுவாகப் புகுத்தக்கூடியது. இதன் மூலம் தனிமனிதன் முதல் சமூகம், இனம், நாடு என்ற பரப்பளவில் அதன் மேம்பாட்டிற்கு உதவ வல்லது, உதவ வேண்டும் என்ற நற்கருத்துடன், ஆடற்கலை சமுதாய மேம்பாட்டிற்கு உதவும் ஒரு மாபெரும் ஊடகம் என்பது சிந்திக்கப்பாலது.

சிந்துவெளிநாகரீகம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்டது என்றும்; அது முழுமையாக திராவிட நாகரீகம் என்றும், ஏற்கப்பட்டுள்ளது. சங்க காலம் கி.மு 50 தொடக்கம் கி.பி 250 எனக்கணிக்கப்பட்டுள்ளது. சிந்துவெளிநாகரீக காலத்துக்கும் சங்க காலத்துக்கும் இடைப்பட்ட ஏறத்தாள 3000 ஆண்டுப்பகுதி மொழி இலக்கிய வளர்ச்சி பற்றி எந்தவித ஆதாரக் குறிப்புமில்லை. சங்ககால இலக்கியம் திடீரென ஒரு காலப்பகுதியில் ஏற்பட்ட மொழிவளர்ச்சி எனக்கூற முடியாது. மிக நீண்டகாலமாக வளர்ந்துள்ள மொழி காலாசார இலக்கியத்தின் பிரதிபலிப்பே சங்க இலக்கியம் என்றால் அது மிகையாகாது.

சங்க இலக்கியம் ஒரு குழந்தைப்பருவத்தினையுடையது என்று கூறலாம். 50க்கு மேற்பட்ட புலவர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்தார்கள். அவர்கள் கண்ணாற் கண்டு, மனதால் அனுபவித்தவற்றினையே ஆசிரியத்தி லும், வஞ்சியிலும் பாடல்களாகச் செய்தனர். மன்னர்களைப்பற்றிக்கூறும் போது சிறிது உயர்ச்சி காணப்பட்ட போதிலும் அவர்கள் எப்பொழுதும் பொய்யினை உண்மையாக்க முயற்சிக்கவில்லை. கற்பனை விடயங்களையோ, செவி வழிக்கேட்டவற்றினையோ, மரபு முறையில் வந்தவற்றினையோ, தழுவல்களையோ வைத்து செய்யுட்கள் செய்யவில்லை.

இலக்கியம் என்பது நோக்கம் என்ற கருத்துப்பட மக்களின் நாளாந்த வாழ்க்கையினை நோக்கமாகக் கொண்டே செய்யுட்கள் புனைந்தனர். மக்கள் அகமும் புறமும் முரண்பாடில்லாத வாழ்க்கை நடத்தினர். புலவர்கள் செய்யுளின் உயிரோட்டமாகக் காதலையும், வீரத்தினையுமே கொண்டனர். அன்பும் காதலும் அகத்துக்குள் அனுபவித்தது; வீரம், போருக்கும், தொழிலுக்கும், வருவாய்க்கும் வெளியில் பயன்பட்டது. நீக்கவும் அகத்துள் அனுபவித்ததை அகத்திணை என்றும்; வெளியில் செயல்பட்டதனைப் புறந்திணை என்றும் கொண்டனர்.

அக்காலத்தில் புலவர்களும் மன்னர்களும் இரண்டறக்கலந்திருந்தனர். புலவர்களின் அன்பைப் பெறுவது பெரும்பேறென மன்னர் கருதினர். தெளிந்த உள்ளம் கொண்ட புலவர்கள் உண்மையை எடுத்துக் கூறும் மனத்திண்மை கொண்டவர்களாக இருந்தனர். மன்னர்கள் புலவர்கள் பாடும் புகழிலும் மேலாக வேறு எதனையும் மதிக்கவில்லை.



# இலக்கியமும் மக்கள் வாழ்க்கையும்

க. கணேசு B.A

சங்கப் புலவர் ஆக்கிய பாக்களைப்பத்துப்பாட்டு எட்டுத் தொகை எனத் தொகுத்துள்ளனர். அதில் திருமுருகாற்றுப்படையும் கலித்தொகையும் பரிபாடலும் பிந்தியது எனக் கணிக்கப்பட்டுள்ளன. சங்கப்பாடல்கள் வேறு இனமதக்கலப்பின்றித் தனித்துவம் கொண்டு விளங்குகின்றது. இப்படிப்பட்ட தனித்துவச் செய்யுட்கள் பின் எப்போதும் எழுந்ததில்லை.

சங்க காலத்தொடர்ச்சியாகச் சங்கம் மருவியகாலம் கி.பி 4ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 6ம் நூற்றாண்டுக் காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் மூவேந்தர் ஆட்சி சிறப்புற்றுள்ளதாக ஆதாரமில்லை. நாடுகுழப்பமடைந்து மக்கள் வாழ்க்கை குழப்பமடைந்ததாகக் காணப்பட்டது. மக்களுக்கு மன அமைதிதேவைப்பட்டது. சமணத்துறவிகளும் புத்தமதத்துறவிகளும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். வாழ்க்கையின் நிலையாமையினை விளக்கி வையத்துள் வாழ்வாங்குவாழும் ஒழுக்க நெறிகளை மக்கள் கடைப்பிடிக்கும் இலக்கியங்களை ஆக்கினார்கள். வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்பதையும் விளக்கினர். காதலும் வீரமும் என்ற மரபுக்குள் இருந்த தமிழ் இலக்கியம் அறம் பொருள் இன்பம் என்பவற்றில் பற்றினைக் குறைத்து ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் வீட்டுப் பேற்றுக்கு வழிவகுக்கும் என இலக்கியத்தின் மூலம் வழியை வகுத்துக்காட்டினர். இக்காலத்துக்குரிய 18 கீழ்க்கணக்கு நூலிற் திருக்குறள் மனிதவாழ்க்கையை உயர்த்த வழிவகுத்த நூலாகும்.

சங்கமருவிய காலத்தினைத் தொடர்ந்து கி.பி 7ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டு காலப்பகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர்காலம் என அழைக்கப் படுகின்றது. இக்காலப்பகுதி எழுச்சிக்காலம் எனலாம். வடமொழியில்தான் இறைவனைப்பூசிக்கமுடியும் என்ற ஆரியகோட்பாட்டை உடைக்க எழுந்த உத்வே கமும் சமண, பௌத்த செல்வாக்கால் சைவம் தளர்ந்திருத்ததை உயர்த்த ஏற்பட்ட உத்வேகமும் தமிழ் இலக்கியத்துறையில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியது. ஆதியிலே வடமொழியில் வேதம் ஆகமம் தான் இலக்கியமாக இருந்தது. அந்நிலை இந்தக்காலத்தில் தமிழ் இலக்கியத்தில் ஆத்மீகம் முழுமையாகப் புகுந்தது. சங்ககாலத்திற் தலைவன் தலைவிக்குள் ஏற்பட்ட அன்பு, காதல், பல்லவர் காலத்தில் சீவாத்மா பரமாத்மாவுக்குள் ஏற்பட்டது. இக்காலத்து நாயன்மார்களும் ஆள்வார்களும் பாடிய பாடல்களைத் திருமுறைகளாகவும் பிரபந்தங்களாகவும் வகுத்தனர். மன்னர்கள் தனிக்கற்களில் கோவில்களைச் செதுக்கினர். இலக்கியத்துக்கும் சமயத்துக்கும் பேராதரவு நல்கினர். இக்கால இலக்கியம் மக்களை கோவில்களுக்குச் செல்லவும் இறைவனிடம் பக்தி செலுத்தவும் வழிவகுத்துக் கொடுத்தது.

பல்லவர்கால நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம்முள்ளத்தில் எப்படி இறை உணர்வை அனுபவித்தார்களோ அதனை அப்படியே எடுத்துக்கூறினர். அந்த அனுபவம் பக்தியுடன் வெளிவந்தது. சங்ககாலத்தில் எப்படி அகத்தில் உணர்ந்த காதலையும் வீரத்தையும் இலக்கியமாக்கினார்களோ அதேபோன்றே இக்கால இலக்கியமும் எழுந்துள்ளது. இரண்டுக்கும் ஒற்றுமையிருந்தபோதிலும் வேற்றுமை அங்கு உலகியல், இங்கு ஆன்மீகம்.

உள்ளத்தில் உணர்ந்த உலகியலைக் கூறிய சங்ககாலத்துக்கு, அறிவுரைகளாகவும் சூக்குமமாக பேரின்பத்தை உணர்த்தும் சங்க மருவியகாலம் அமைந்துள்ளது. அதேபோல் உள்ளத்தில் அனுபவித்த இறையனுபவங்களை நேரடியாக வெளிப் படுத்திய பல்லவர்காலத்துக்கு, ஆன்மா இறைவனையடைவதற்குரிய சரியான வழிமுறையை நீண்ட கதைகளைக் கூறும் போது அதில் வெளிப்படாத சூக்குமப்பொருளாக வைத்து இலக்கியம் செய்துள்ளனர், சோழர்காலப் புலவர்கள். சோழர்காலம் இலக்கிய வரலாற்றில் உச்சகாலம்என்று கூறலாம். பெருமன்னர்களின் ஆட்சி சிறப்புற்று விளங்கியது, மக்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தனர், மக்களிடமும் மன்னனிடமும் அமைதி நிலவியது. இதனால் வடமொழியிலுள்ள பெரிய கதைகளைத் தழுவி அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடாத்தத்துக்கு அமைய காவியம் அமைத்தனர். இக்காலக் காவியங்களெல்லாம் விரிவான ஆத்மீகக் கருத்தைக் கொண்ட நீண்ட நூல்களாக இருந்தன. இலக்கியம் என்பது எது என நச்சினார்க்கினியார் ''இலக்கியமாவது பாரதமும் இராமாயாணமும் போல்வன'' என விளக்கினார். வில்லிபுத்தூராரின் பாரதமும் கம்பனாட்டாழ்வரின் இராமாயண மும் முழுமையான இலக்கியங்களே. ஆனால் ஒரு ஆன்மா இறைவனை அடையும் வழிகளை சிறப்பாகக்காட்டி யுள்ளனர். பேதிமருந்தைக் கொடுக்கும் போது எப்படிச்சர்க்கரை மூடி கொடுக்கின்றார்களோ அதேபோன்று தான் சோழர்காலப் புலவர்கள் ஆத்மீகமாகிய பேதியைச் சர்க்கரை என்ற இலக்கியத்துள் வைத்து பாடல்கள் அமைத்தனர்.

''விடியவிடிய இராமர்கதை விடிந்தபின்னர் இராமருக்கு சீதை என்னமுறை எனத்தெரியாது'' என்ற பழைய கூற்றொன்று உண்டு. இராமாயாணத்தில் சீதை இராமருக்கு மனைவி எனத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இது இலக்கியம். இந்த இலக்கியத்தினைத்தான் ஆன்மீகம் என்று தவறாக கருதுகின்றனர் என்பதைக் கூறவே இக்கூற்று எழுந்தது. சித்தாந்தக்கருத்தின்படி பரமாத்மாவுடன் சீவாத்மா ஒன்றாக இருக்கின்றது. உலகியல் ஆசை காரணமாகப்பரமாத்மாவிடம் இருந்து சீவாத்மாபிரிந்து மிகவும் தூரவிடம் சென்று விடுகின்றது. அப்போது சீவாத்மா தன்னிலையை விளங்கி பரமாத்மாவை அடைய வருந்திக் கொண்டிருக்கும்போது பரமாத்மாவே சென்று ஆட்கொள்கின்றது. ஆலாலசுந்தரர்கதை, பார்வதராசன் பார்வதி இவற்றை ஓரளவு விளக்கவே எழுந்தவை.

இராமாயணமும் இப்படிப்பட்டவரலாறே, மிதிலையில் விவாகமான இராமரும் சீதையும் அயோத்தியில் இராசபோகத்தில் மிக்க பேரானந்தத்துடன் இருக்கின்றனர். கைகேயியின் கருத்துப்படி கானகம் செல்லும்போதும் கூட சீதையின் சந்தோசத்தில் மாற்றம் ஏற்படவில்லை. கானகத்தில் பர்ணசாலையில் இராமருடன் இருக்கும் போதும் கூட, பேரானந்தத்துடன்தான் இருந்தார். பொன்மான்மேல் சீதைக்கு ஆசை ஏற்படுகின்றது. அப்போது சீதையை விட்டு இராமர் பிரிந்து கொண்டு படிப்படியாக போகின்றார். இந்த ஆசை சீதை இராமரை விட்டு மிக வேகமாகப் பிரிந்து செல்லவைக்கின்றது. ஆழி சூழ் இலங்கையில் கானகத்தின் மத்தியில் அரக்கியர் நடுவில் கொண்டு சென்று விட்டது. இப்போது சீதையின் ஆனந்தமெல்லாம் பகலவனைக் கண்ட இருள்போல் மறைந்துவிட்டது. துயரமேவடிவாக மாறி விட்டாள்.

நாம் குழந்தையாக இருக்கும் போது இறைவனுடன் ஒன்றாக இருக்கின்றோம். வீட்டிலிருந்தாலென்ன காட்டிலிருந்தாலென்ன குழந்தை, பேரானந்தத்துடன் தான் இருக்கின்றது. உலகப் பொருள்களில் ஆசை ஏற்பட, ஆனந்தம் குழந்தையை விட்டுப்படிப்படியாக மறையத்தொடங்குவதைக் காணலாம்; பரமாத்மாவின் தொடர்புபடிப்படியாக நீங்குவதே காரணம். இந்த நீக்கம் காலப்போக்கில் சீதை சென்றிருந்த இடத்தில் கொண்டுபோய் விடுகின்றது. நாம் எல்லோரும் இந்நிலையிலே இருக்கின்றோம். அன்று சீதை எது நடந்தாலும் கவலை இல்லை இருக்கும் இடத்தில் கிடைக்கின்ற வசதியை தப்பவிடாது அடைய வேண்டும் என எண்ணவில்லை. வசதிகள் அவளைத் தேடிவந்தன. இராவணன் இரவுபகலாக தன்னை மணக்கும்படி வற்புறுத்தினான். எதற்கும் மனம் தளராது அந்த இராமரையே முழுமையாக மனத்திலெண்ணி நாள்பூராவும் வேண்டி நின்றாள். நாமும் இந்த உலகியலைப் பெரிதாக மதியாது நாம் பிரிந்து வந்த அந்தப் பரமாத்மாவை அடைய வேண்டும் என முயற்சி செய்தால் அவர் எம்மைத் தேடிவருவார்.

அதற்குள் மனத்தைப்பற்றிய விளக்கங்களுக்கு வாலி சுக்கிரீவன்போராட்டம் காட்டப்படுகின்றது. நல்லமனத்துக்கும் கெட்டமனத்துக்கும் எப்பொழுதும் போராட்டம் நடை பெறுகின்றது. நல்லமனம் வழமையில் தோல்வியடைகின்றது. அது இறைவனை நாடும் போது வெற்றி பெறுவதை வாலி சுக்கிரீவன் கதை விளக்குகின்றது. நல்ல மனம்தான் இறைவனையும் ஆன்மாவினையும் ஒன்றாக்கத் துணையாய் நிற்கின்றது. இறுதியில் பரமாத்மா ஆணவமாகிய இராவணனை செயலிழக்கச் செய்து சீதையை அடைகின்றார். இங்கு இராமருக்கு சீதை பரமாத்மாவுக்கு சீவாத்மா.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கிடைத்தற்கரிய பெரிய காவியங்கள் சோழர் காலத்தில் தான் தோன்றின. மனிதன் பூமியில் பிறந்த நோக்கத்தைப் பூரணப்படுத்தும் வகையிலேயே எழுந்துள்ளது. இன்றுவரைக்கும் சிறப்பாக விளங்குவதற்கு அதன் ஆத்மீக உயிரோட்டமே காரணமாகும். அதுமட்டுமல்ல உலகுள்ளமட்டும் இதன் சிறப்புமாறாது என்பது நிட்சயம். குழந்தைப் பருவத்திலிருந்த சங்க இலக்கியம் கனிஸ்ரபாடசாலைப்பருவத்தை சங்க மருவிய காலத்திலடைந்து; சிரேஸ்ர பாடசாலைப்பருவத்தைப் பல்லவர்கால இலக்கியமடைந்து பல்கலைக்கழக தரத்தை சோழர்கால இலக்கியம் அடைந்துள்ளது. சோழர்காலம் பூரணத்துவ இலக்கியகாலம் என்றால் அது மிகையாகாது.

# இலங்கையில் இசைக் கல்வி



பி. சந்திரசேகரம், சங்கீத பூஷணம்.

இலங்கையில் ஆதி காலத்தே நாட்டுக் கூத்து, காவடி ஆட்டம், கரகம்-மேளக் கச்சேரி, சதுர்க் கச்சேரி, தொடர்ந்து கதாகாலட் சேபம், புராணபடனம் இத்தியாதி நிகழ்ச்சிகட்குத்தான் அதிக கிராக்கியும் அவையே நடைமுறை நிகழ்ச்சிகளுமாயிருந்து வந்தது.

1935 - 1936ல் ஒரு விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. பாடசாலைகளில் மாணவர்கள் கற்கும் தமிழ் பாக்களான வெண்பா, அகல், விருத்தம், கலித்துறை ஆகியவற்றை பாடசாலை ஆரம்ப பிரார்த்தனைக்குரிய தேவாரப் பாடல்களை அவ்வவற்றிற்குரிய ராகங்களில் பாடவேண்டுமென்ற ஓர் விருப்பம், உந்துதல் பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் கல்விப் பணிப்பக அதிகாரிகள் சிந்தனையில் உண்டாயிற்று.

இவ்வித நிலைப்பாட்டிற்கு முன்னோடியாக (N. C. O. M. S) வடஇலங்கை சங்கீதசபை 1931லேயே, அக்காலக் கல்விப்பணிப்பக, உவற்சன், சன்டிமன் அருனந்தி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டு இசைக்கல்விப் பாட அபிவிருத்திக்கான பல அரிய சேவைகளை ஆற்றிவந்தது. இதன் விளைவாகப் புத்தம்புதியதொரு சங்கீதக் கல்வி மறுமலர்ச்சி யுகமொன்று உருவாகியது. 1940ல் முதல் கட்ட ''சங்கீதபூஷணங்களின்'' வரவு உதயமாகிற்று. இதோர் மாபெருந்திருப்பு முனையாக கல்வியுலகில் இடம் பெற்றது. இலங்கைக் கல்வியுலகிலோர் புத்தம் புதிய முறைப் பாடத்திட்டம் 1972 - 1975 முதல் உருவாக ''சங்கீதபூஷணங்களின்'' வருகையும் படிப்படியாக எண்ணிக்கையில்

கூடிவந்ததும் காரணமாகும்.

பாடசாலைகளில் முன்னையகல்வி முறையில் ''நாட்டில் சாதாரண'' எழுதுவினைஞர்களையும் சில ஆசிரியப்பயிற்சிக்கல்லூரிகள் மூலம் ஆசிரியர்களையும் உருவாக்கும் பணியே ஓர் சிறப்பம்சமாக இருந்து வந்தது. இம்முறை சரியானதல்லவென உணர்ந்த கல்விமான்கள் பாடசாலைக்கல்வி முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள் அதன் பயனாக கல்வி முறையே ''மூளை கை கால் தேக உறுப்புக்கள் - மனப்பண்பை வளர்த்தற்குரிய ரஸிகக் கலைகள் என்ற ரீதியில், அறிவியல் கல்வி, விஞ்ஞானம் ரஸிகக் கல்விக்குரிய நுண்கலைகள், விளையாட்டு, தேகப் பயிற்சி, தொழிற்கல்வி எனப் பல்வேறு பிரிவுக் கல்விப் போதனைகளும் பாடசாலைகளில் புகுத்தப்பட்டன. இதன் பயனாகப் படிப்படியாக வளர்க்கப்பட்டு வந்ததே இன்றைய பாடசாலைச் சங்கீதம், நடனம். இக்கலைகள் இன்று பாடசாலைகளில் வகுப்புகட்கோர் பரீட்சைப்பாடமாகும். முறையே G. C. E. O/L, A/L பரீட்சைகளில் இசை நடனப் பாடங்களில் சித்தியெய்தியோர் சர்வகலாசாலையில் Dicrey Music. B.A. (Music), M. (Phil) பட்டப்படிப்புகளையும் மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சங்கீத பூஷணங்கள் முதலில் மூன்றுபேர், படிப்படியாகப் பலர் தோன்றி பல மாறுதல்களை இசைக் கல்வி அபிவிருத்திக்கு அயராது உழைத்துப் பெருஞ்சாதனை புரிந்துள்ளார்கள்.

சங்கீதக் கல்விக்கு அநுபவம் வேண்டும். அனுபவம் என்பது தேர்வில்லாத பாடம். சாந்த நிகேதனம் - விஸ்வபாரதி சர்வகலாசாலைப் படிப்பு அனுபவத்தை ஒட்டிய சாதனா முகாங்களாகும். சங்கீதம் நடனம் ஆகிய கலைகட்கு அநுபவமே முக்கியமாகும்.

யாழ்ப்பாணத்தில் அண்ணாமலைச் சர்வகலாசாலை மூலம் வந்த ''சங்கீத பூஷணங்கள்'' அண்ணாமலைச் செட்டியாரது ''தமிழிசை'' இயக்கத்திற்கு மகத்தான சேவைபுரிந்திருக்கிறார்கள். தமிழகத்தில் - இலங்கையில் சங்ககாலத் தமிழிசை, தேவாரத் தெய்வீக இசை, தெலுங்கு சமஸ்கிருத கருநாடக இசை என நமதிசை மரபு வழி நாயன்மார், சங்கீதமும் மணிகள் ஓதுவார்கள் - பின்பு - சங்கீத வித்துவ பரம்பரையினரால் படிப் படியாக வளர்ந்து வருகிறது. இன்று அந்த இசை நடனம் மாணவர்கட்கு சிறுவயதிலேயே பாடசாலைகளில் தொடங்கி சர்வகலாசாலைகள் வரை அகில உலகம் எங்கணும் போதிக்கப்பட்டு வருகிறது.

கிராமியக் கலைகள் - நாடகக்கலைகள் பயன் தருவன. வில்லுப் பாட்டு , கதைப்பாட்டு தலைசிறந்த கலைகளாகும். மட்டக்களப்பு கிராமியக்கலையான வட மோடி, தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, இவற்றை விட ஊஞ்சல், மகுடி, கொம்புமுறி ஆகியன நமதிலங்கைக் கலை மரபுச் சொத்துக்கள். வவுனியாவிலும் - முல்லைத்தீவிலும் இதே பழைய மரபுப் பண்பாட்டுக் கலைகள் உள்ளன. இன்னும் இதே வகையில் நாமாவளிகள், பஜனைப்பாடல்கள், பண்ணிசை, திருவாய் மொழி, திருப்பாவை போன்றன அளவிட முடியாத உணர்ச்சிக் களஞ்சியங்கள்.

வடக்கே ஒரு மீரா - தெற்கே ஒரு ஆண்டாள் - இன்றுM.S.S - லதாமங்கேஷ்கார் மற்றும் சிலர் மக்களை இசையால் கவர்ந்துள்ளனர்.

இன்று நாம் ஒரு புதிய புதினமான கலையுலகைக் காண்கிறோம். மங்கையர் பலர் நடனமாடி இசை கற்றுச் செங்கனிச் சிரிப்பினொடும் நடனமாடும் காலமிது. பாடசாலைகள் பிருந்தாவனமாக - பூலோக வைகுண்டமாகத் திகழ்கின்றன.

இசை உணர்வுகள் என்று நாம் பேசும்பொழுது அது நமக்குப் பெரும் ஆச்சரியத்தை விளைவிக்கிறது. உடல் வளர்ச்சி, தலை முடி நீளமாக வளர இசை கேட்டுப் பலனடைகின்றனர். மனிதப் பண்பு, உயர் நோக்கம் உண்டாவதும் இசையால் தான். இன்னும் இசை ஜீரணசக்தியில்லாது வயிற்று நோயால் உபாதைப்படுகிறவர்கள் இசை கேட்டு குணமடைகிறார்கள். இது மாத்திரமல்ல மேலை நாடுகளில் அறுவைச் சிகிச்சைக்கு இசைத் தட்டுப் போட்டுக் கேட்டு மயக்கமடையச் செய்கிறார்கள். மனித உடலை, ஆன்மீக உணர்வை வெகுதூரம் இசை பாதிக்கச் செய்கிறது. மனித இயல்பு முழுவதையுமே மாற்ற வல்லதிசை. மனதிற்கு - அதன் அமைதிக்கு இசை உதவுகிறது.

இலங்கையில் ஒரு சங்கீத மாபெரும் கல்வி உலகைச் சிருஷ்டித்த பெருமைவட இலங்கைச் சங்கீத சபை N.C.O.M.S க்கே உரியது. வட இலங்கைச் சங்கீத சபைக்கே உரியது. துர்அதிஸ்டவசமாக இந்நாட்டில் போர் சூழ்ந்ததால் இச்சபையின் வருடாவருட இசைப் பரீட்சைகள் நடாத்தப்பட முடியவில்லை.

கடந்தகாலம் அரை நூற்றாண்டுக் காலத்திற்குமேலாக இலங்கை பூராகவுமுள்ள பாடசாலைகள் மூலம் சுமார் பன்னீராயிரம் மாணவர்கள் வரை இச் சபையினால் நடாத்தப்படும் சங்கீதப் (வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், ஜலதரங்கம், நடனம் - பண்ணிசை - நாடகமும் அரங்கியலும் ஆகிய பரீட்சைகட்கு - ஒன்று முதல் ஆறு வெவ்வேறு தரப்) பரீட்சைக்குத் தோற்றுவது வழக்கத்திலுள்ளது.

மீண்டும் அப்பரீட்சைகளை இலங்கை பூராகவும் வைத்து நடாத்தப்பட்டுள்ள பரீட்சை ஸ்தானங்களில் நடாத்த ஏற்பாடுசெய்ய வேண்டும்.

பரதநாட்டியத்தை நமது சிங்கள சகோதரர்கள் மிகமிக விரும்பித் தங்கள் பிள்ளைகட்கு கற்பித்து அரங்கேற்றங்களுஞ் செய்துள்ளனர். இனமத மொழி பேதங்கட்கப்பாற்பட்டதாக இசை நடனம் நாட்டில் ஐக்கியத்தை வளர்க்கும் கருவியாக இருந்து வருகிறது.

மீண்டும் N.C.O.M.S பரீட்சைகளை 1997 ஏப்ரலில் நடாத்த, வடகீழ் மாகாண கல்வி அமைச்சு செயலர் திரு. சு. டிவகலாலா அவர்கள் எமக்குதவவேண்டும். அதிர்ஸ்டவசமாக இச் சபை அரச சார்பு நிறுவனமாக - கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாக யாழ்ப்பாணம் (வட இலங்கை) கல்விப் பணிப்பக வலையம் ஒன்றின் கல்விப் பணிப்பாளரையே Ex. Officio President - தலைவராகக் கொண்டு அதற்குரிய ஓர் Directors' Board நிர்வாகத்தின் கீழ் இயக்கப்பட்டுவருகின்றது. சுமார் அறுநூறு அங்கத்தவர்கட்கு மேல் சபையில் அங்கம் வகிக்கின்றனர். Directors' Board ல் பழம் பெரும் அதிமூத்தகலைஞர்கள், பேராசிரியர்கள், வித்துவான்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந் நிறுவனத் தலைவர்களாக உயர்திரு. தி. மாணிக்கவாசகர், வெ. சபாநாயகம், க. சிவநாதன், செல்வி T. பெரியதம்பி ஆகியோரிலிருந்து வந்தவர்கள். தற்சமயம் திரு. சிவாநந்தன் அவர்கள் தலைவராக இருந்துவருகிறார். உயர் கல்வி அமைச்சின் உதவியோடு இலங்கை பூராகவுமுள்ள பாடசாலைகளிலிருந்தும் சுமார் பன்னீராயிரம் மாணவர்கள் வரை இச் சபைப் பல்வேறு தரங்கட்குரிய - பல்வேறு சங்கீதப் பிரிவுப் பரீட்சைகட்கும் தோற்றிவருகின்றனர். எதிர்காலத்தே இப் பரீட்சைகட்குத் தோற்றும் மாணவர் தொகை இப்போதைய எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு எண்ணிக்கைக்கு மேலாகிவிடும் என நம்பலாம். படாசாலை மாணவர் முறையே

| | | |
|---|---|---|
| ஆண்டு ஐந்து மாணவர் - N. C. O. M. S. | 1ம் | தரப் பரீட்சைக்கும் |
| ஆண்டு ஆறு    ,,    ,, | 2ம் | தரப் பரீட்சைக்கும் |
| ஆண்டு ஏழு    ,,    ,, | 3ம் | தரப் பரீட்சைக்கும் |
| ஆண்டு எட்டு    ,,    ,, | 4ம் | தரப் பரீட்சைக்கும் |
| ஆண்டு ஒன்பது - 10 ,,    ,, | 5ம் | தரப் பரீட்சைக்கும் |
| ஆண்டு பதினொன்று - 12    ,, | 6ம் | தரப் பரீட்சைகட்கும் தோற்றும் முறையில் பாடசாலை சங்கீத |


பாடத்திட்டம், N. C. O. M. S. ஆறு தரம் பரீட்சைகட்குச் சமாந்திரமாகவே அமைந்துள்ளது.

ஆயின் N. C. O. M. S. ன் 5ம், 6ம் தரப் பரீட்சைகளின் தரம் மிகமிக உயர்ந்தது. 5ம், 6ம் தரம்களுக்கு பாடசாலை மாணவர்கள் முறையே இரண்டு இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக அதிசிரமமெடுத்து ஓர் நல்லாசிரி யரிடம் பயின்றே இவ்விரு பரீட்சைகட்கும் தோற்ற வேண்டும்.

N. C. O. M. S. 5ம் தரப் பரீட்சை சர்வகலாசாலை Diploma மற்றும் பட்ட வகுப்புகட்கும் சமமான தரத்திலோ, சற்றே அவற்றினும் கூடிய தரத்தை எட்டியதாகவே உளது. N. C. O. M. S. பரீட்சைகள் மீண்டும் 1967 ஏப்ரல் முதல் நடாத்த ஆவன செய்யப்படல் வேண்டும் என்பது பலகலைஞர்களது அபிலாஷைகளாகும். இச் சபைப் பரீட்சைகள் மிகமிகத் தரம் கூடியது. சர்வகலாசாலை Dipmusic தரத்திற்கும் மேலானது. வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலர் இந்நிறுவனத்தை தங்கள் மாகாண கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரவேண்டும்.

# சிந்திய முத்துக்கள்.......

சி. சிவநிர்த்தானந்தா
B.A (Hon) Dip. in. Edu.



கொதிக்கும் வெயில், தகிக்கும் மணல். கானல் நீராய் தெரியும் அந்த மணற்பரப்பில் அந்தத் தாய் ஓடிப் போகின்றாள். வியர்வையால் அவள் உடம்பு தொப்பட்டமாகி உள்ளது. இவைகளைப் பொருட்படுத்தாமல் அந்தத்தாய் ஓடிக் கொண்டேயிருக்கின்றாள். தன் உயிராய் வளர்த்த அவளது மகள், பிறள் மகன் ஒருவனோடு ஓடிப் போய் விட்டாள். தன் மகளைக் கடத்திப்போன அந்தப் பிறள் மகனைக் கண்டு, நாலு கேள்வி கேட்கவென்றே ஓடிப் போகின்றாள். நினைக்க நினைக்க அவள் உள்ளம் நெருப்பாய் எரிகின்றது. இதனால், கொதிக்கும் அந்த வெய்யில் கூட அவள் உடம்பைச் சுட்டதாகத் தெரியவில்லை. ஓடிக் கொண்டிருக்கும் அந்தத் தாயின் எதிரினில் தபசிகள் சிலர் தென்படுகின்றனர். செந்தன்மை பூண்டொழுகும் அந்த அந்தணர் கூட்டத்தைக் கண்ட அந்தத் தாயின் உள்ளத்தில் ஒரு புதிய தெம்பு பிறக்கின்றது அவர்களை நெருங்கி, ஐயன்மீர் ஒழுக்கமுடையோரே! இவ்வழியில் என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும், தம்முள் தாமே ஒற்றுமையுடையார். அன்னார் இருவரை கண்டீரோ, பெரியீர் என்று அழுதமுகமும், சிந்திய கண்ணீருமாய் கேட்டாள். அந்தணர்கள், சற்று மௌனம் சாதித்தனர் பின்னர் தாய் முகம் நோக்கி அம்மணீ காணாமல் இல்லை கண்டு நாம் வந்துளோம். அண்ணலாம் அழகிய இளைஞன் ஒருவனோடு கடும் காட்டிடைப் போகும் அழகியின் தாயே சிறந்த கற்புடைய அவளுக்கு துன்பம் செய்யாதே, ஆண்களில் சிறந்த ஒருவனை தனக்கு வாழ்க்கைத் துணையாக ஏற்று செல்கின்றாள் சரியான தரும வழியும் இதுவேயாம். மேலும் கடலுள்ளே சிப்பியில் முத்துப் பிறந்தாலும் கழுத்தில் கட்டி அணிபவர்க்கு தானே அழகைக் கொடுக்கும். நீருக்கு அதனால் அழகில்லை. ஆராய்ந்து பார்த்தால் உம் மகளும் அப்படித்தான் வீணையினுள்ளே, இனிய மதுரமான இசை பிறந்தாலும், அந்த இசையினால் அந்த வீணைக்கு என்ன பயன், அதை மீட்டி இசைப்பவனுக்குத் தானே பெயரும் புகழும் கிடைக்கின்றன. யோசித்துப் பார்த்தால் உம்முடைய மகள் உமக்கும் அப்படித்தான். மலையிலே சந்தனம் பிறந்தாலும், அதனால் மலைக்கென்னபயன்? அரைத்து,குழைத்து அணிபவருக்குத்தானே

அழகும் வாசனையும் கொடுக்கும். ஆதலின் தாயே உணர்ந்துபார் உன் மகளும் அப்படித்தான். ஏற்றுக் கொண்டவனுக்கு தான் அவளால் பெயரும் புகழும் கிடைக்கும். ஆதலின் சிறந்த கற்புடைய உம் மகளுக்கு துன்பம் செய்ய நினைக்காதே. தனக்கேற்ற ஒருவனை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு மகிழ்வுடன் செல்கின்றாள். இது உலக நியதி என்றனர். அந்தத்தாயும் வாயடைத்துப் போனாள். பாடலும் இது தான்.

எறித்தரு கதிர்தாங்கி, ஏந்திய குடை நீழல்
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல் இசைகீ, வேறோரா நெஞ்சத்து
குறிப்பேவல் செயல் மாலைக் கொளல் நடை அந்தணீர்
வெவ்விடைச் செலல் மாலை, ஒழுக்கத்தீர் - இவ்விடை
என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்
தம்முள் தாமே, புணர்ந்திடு, புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணீரோ-பெரும
காணேம் அல்லேம், கண்டனம் கடத்திடை
ஆண் எழில் அண்ணலோடு, அருஞ்சுனம் முன்னிய
மாண் இழை மடவரல் தாயீர் நீர் போறீர்
பல உறு நறுஞ்சாந்தம், படுப்பவர்க்கல்லது
மலையுளே பிறக்கினும், மலைக் கவைதான் என் செய்யும்
ஆயுங்கால் நும்மகள், நுமக்குமாங் கனையளே
ஏழ்புணர் இன்னிசை, முரல்பவர்க்கல்லது
யாழுளே பிறக்கினும், யாழ்க்கவைதான் என் செய்யும்
சூழுங்கால் நும்மகள், நுமக்குமாங்கனையளே
சீர்கெழு வெண் முத்தம், அணிபவர்க்கல்லது
நீருளே பிறக்கினும், நீர்க்கவைதான் என் செய்யும்
தேருங்கால், நும்மகள், நுமக்குமாங்கனையளே
இறந்த கற்பினாட்கு, எவ்வம் படரன் மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா, ஆறும் மற்றதுவே.

பெண்கள் பிறந்த இடத்துக் குரியவர் ஆகார் என்பது சங்கநூற் பாடல் ஒன்று சிந்திய முத்து. மீட்டுகின்ற வீணை இசை, பூசுகின்ற சந்தனம், அணிந்து கொள்ளும் முத்தாரம் அழகும் பெருமையும் தருவது போன்று, சிறந்தானைக் கொழுநனாய் பெற்ற மங்கையும் பெருமைக் குடையவள். சிந்திய முத்தின் சிறப்பும் இதுவேதான்.

நாட்டை ஆளும் மன்னன் இவன், காடு சுற்றிப் பார்க்கப்புறப்பட்டான். பரிவாரங்கள் எதுவுமின்றி தற்பாதுகாப்புடன் கானகம் நுழைந்தான். புரவியும் அவன் சொற்படி கானகத்தைச் சுற்றி வந்தது. வனத்தின் வனப்பில் மயங்கிய மன்னன் முன்னே, புள்ளி மான்போல் ஒரு கன்னி வந்தாள். ஓரக் கண்ணால் பார்வையை மீட்டி, மன்னனைக் கிறங்கவைத்தாள். மயிலாய் ஆடினாள் குயிலாய் இசைத்தாள். புள்ளிமானாய் துள்ளி மறைந்தாள் யார் இந்தப் பூங் கொடியாள்? மன்னன் யோசித்தான். கானகத்துப் பைங்கிளி பறந்தது. மனம் மீறினாலும் வரம்பு மீறாத மன்னவன் வேகமாக நாடு திரும்பினான். மந்திரியுடன் உசாவினான். திருவெங்கை மாநகர வேடராசன், மகளென அறிந்தான். தூதுவரை அழைத்து, பொன்னும் மணியும், பாட்டாடைகளும் குவித்து, உரிய முறைப்படி மணவோலை போக்கினான். தூதுவர்கள், காற்றிலும் வேகமாய் சென்றனர். அரசன் சபை முன் சென்று அரசனை வணங்கி மணவோலை கொடுத்தனர். அரசன் கையில் வாங்கினான். படித்தான் அரண்மனை கிடுகிடுக்கச் சிரித்தான். பார்வையால் தூதுவரை எரித்தான். அரசனுக்கா? திருமணமா? எனது மகளையா? பேய்பிடித்த தூதரே! நான் சொல்லுவதைக் கவனமாகக் கேளுங்கள் மன்னர் குலத்துக்கு நான் பெண் கொடுக்கவா? மீண்டும் சிரித்தான். அன்றொரு நாள், தான்பட்டகடனுக்காக, மனைவியையும் மகனையும் விற்றானே, அவனும் ஒரு அரசனல்லவா? தன் மனையாளும்,

தானும் ஒன்றாக உடுத்திருந்த ஒரு துணியை, நடுவாக வெட்டி, கானகத்தில், மனைவியைக் கைவிட்டுச் சென்றானே! யாரவன்? நளச்சக்கரவர்த்தி, அவனும் ஒரு அரசனல்லவா? கட்டிய மனைவியை ஒருவன் எடுத்துப் போய் சிறைவைக்க, பேதலித்துப் போய் நின்றானே, மன்னனல்லவா? புதுமையான புதுமை, ஐந்து கணவர்கள் அவளுக்கு அந்த ஐவரும் பார்த்திருக்க, அவளின் ஆடையைப் பற்றி இழுத்து உரிந்தபோது, இந்த மன்னவர்கள் என்ன செய்தார்கள்? இப்படியான இந்த மன்னர்களுக்கு தாரம் என்ற ஒன்று வேண்டுமா? மணம் என்ற புனிதமான சொல்லை உச்சரித்த உன் வாய் உமிழ்நீரை வெளியே துப்பிவிடடா. மண ஓலையை கிழித்து காற்றிலே பறக்கவிடடா. மன்னனுக்கு தாரம் ஒன்றினி வேண்டுமா? நாங்கள் திரு வெங்கை மாநகர் வேடர்கள். இறைவன் எங்களை அடுத்திருந்தான். எங்கள் எச்சிலை உண்டான். இதற்காக அவன் பெற்ற மகன் வேலனுக்கு, நாங்கள் வளர்த்த ஒரு வளர்ப்புப் பெண்ணாம் வள்ளியை மணம் செய்து கொடுத்தோம். பெற்ற பெண்ணை கொடுப்போமா? பேய்பிடித்த தூதரே ஓடிவிடுங்கள் என்றான் அந்த வேடராசன். ''பாத்திரம் அறிந்து பிச்சை கொடு, கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு'' என்பர். இதனால் வேட்டுவராசன், மன்னன் என்றாலும் பெண்ணைக் கொடுக்க விரும்பமில்லாமல் தூதுவரைத் துரத்தினான். திரு. வெங்கைக் கலம்பகப் பாடலும் இது தான்.

''விற்றதார்? கலை பாதியோடு வனத்திலே அழ விட்டதார்

வெஞ்சிறைப்புக விட்டதார், துகில் உரியவிட்டு விழித்ததார்

உற்றதாரமும், வேண்டு மென்றினி, மன்னர் பெண் கொளல் ஒக்குமோ

உமியடா மணம் என்ற வாய்கிழித்து ஓலை காற்றில் உருட்டடா

வெற்றியாகிய முத்தி தந்திடும்,வெங்கை மாநகர் வேடர்யாம்

விமலரானவர், எமையடுத்து, இனிது எங்கள் எச்சில் மிசைந்ததால்

அவர், பெற்ற வேலன் தனக்கு யாம், ஒரு பெண் வளர்ப்பினில் ஈந்தனம்.

பெற்ற பெண்ணைக் கொடுப்பமோ? இதன் பேய்பிடித்திடும் தூதரே!

இதுவும் சிந்திய முத்தாக ஒளிர்கிறது மன்னவன் எனினும், வசை உடையோன் ஆகில் மகளுக்கு மணம் முடிக்க விரும்பாத, வேட்டுவராசன் மாண்பு போற்றுதற்குரியது.

காளியின் அருள் பெற்று புலவனானவன் பொய்யா மொழி. இவனது உற்ற நண்பன் சீருக்கன் எனும் முதல் அமைச்சர் இருவரும் ஒருவராய் வாழ்பவர்கள். ஊரெல்லாம் திரிந்து வரும் பொய்யாமொழி இடைக்கிடை நண்பனைப்பார்க்கவும் தவறுவதில்லை. அன்றொரு நாள் தொலை தூரம் நடந்து களைத்து சோர்ந்து அமைச்சரின் இல்லத்தை அணுகினான் புலவன், யாரும் அவனை வரவேற்கத் தேவையில்லை. உள்நுழைந்தான், தம்பதியர் உறங்கும் அந்தச் சயனக்கட்டில் தென்பட்டது. அதைப்பற்றிய விபரம், அதைச் சிந்திக்கும் சக்தி அப்போதைக்கு அவனிடம் இருக்கவில்லை. மிக லாவகமாக ஏறி கட்டிலின் நடுவில் படுத்தான். சற்றைக் கெல்லாம் மிக ஆழ்ந்த உறக்கமானான். அமைச்சரின் மனைவி வந்தாள். புறமுதுகு காட்டிடப்படுக்கும் புலவனைப் பற்றி அவள் எதுவும் சிந்திக்கவில்லை. தமது சயனக்கட்டிலாச்சே ஆனமையின் அவன் பக்கலில் அவளும் படுத்துறங்கினாள். சற்று நேரத்தில் அமைச்சர் வந்தார். கட்டிலை நோக்கினார். தனது மனைவியின் மாண்பினை அமைச்சர் அறிவார். உத்தமனான தனது நண்பனின் உள்ளத்தினையும் உணர்வார். ஆதலின் தெளிந்த மனத்தினோடு புலவரின் பக்கத்தில் உறங்கினார். ஆயாசம் தீர்ந்த புலவர் சற்று நேரத்தில் கண்விழித்தார். தன் இரு பக்கத்தையும் நோக்கினார். விபரீதம் புலப்பட்டது. பதட்டத்துடன் எழும்ப எத்தனித்தார். அமைச்சர் அவரைக் கையமர்த்தி புலவரே ''செல்லக்கிட'' என்றார். மன அமைதியாக புலவரும் உறங்கினார். சில பல மாதங்களின் பின் அமைச்சர் இறந்து விட்ட செய்தியை புலவர் அறிந்தார். வெகு தொலைவில் இருந்து ஓடோடி வந்தார். பிரேதமாக அமைச்சரும், உடன் கட்டை ஏறிய அவர் மனைவியும் மயானத்தில் எரிந்து கொண்டிருந்தனர் சுற்றி, சுற்றி வந்து அழுதார் முன்னேவந்து, நண்பனே, ''அன்று நீ செல்லக்கிட என்றாய் இன்று நீ வானுலகம் எய்தினாய்''. இப்போ எனக்கு இங்கொரு இடம் வேண்டுமென்று பாடினார் உடனே கணவனும், மனைவியுமாக எரிந்த சிதை இருபக்கமும் அசைந்து பிரிந்தது. புலவர் பாய்ந்து ஓடி அதன் நடுவே கிடந்தார். நெருப்பு அவரையும் அணைத்துக் கொண்டது. நண்பர்களின் நல்லியத்தை இங்கு சிந்தியது முத்தொன்று. பாடலும் இதுதான்.

அன்று நீ செல்லக் கிட வென்றாய், ஆயிழையோடு

இன்று நீ வானுலகம் எய்தினாய் - வென்றிதிகழ்

வானக்க பூண்ட மடவார் மார்பனே கண்டியூர்ச்

சீனக்கா செல்லக்கிட''

## தலை நிமிர்ந்து வாழ வழியில்லை !


*வெஞ்சமர்கள் விழுகொலைகள் குழப்ப மெல்லாம்*
*வெடிக்கின்ற விதனத்தைத் தாங்க ஒண்ணாச்*
*சஞ்சலத்தில் மனங்கிடத்து பதறு தம்மா*
*சாவுநிலை இதற்கின்று விடிவு முண்டோ*
*அஞ்சியஞ்சி எத்தனை நாள் உயிரைக் கையில்*
*அடுத்தவனும் தாக்கிடாமல் பாது காப்போம்*
*நெஞ்சமது நிலைகுலைந்து நீறு பூத்த*
*நெருப்பாக கொதிப்பதுதான் மாறு மெப்போ...?*

*ஷெல் விழுந்து சற்குணமும் செத்துப் போனான்*
*சீதேவி பாத்தும்மா கடத்துப் பட்டாள்*
*பல் கழன்ற பார்வதியோ குண்டில் பட்டாள்*
*பல காலம் காலின்றித் துடிக்கு கின்றாள்*
*நெல் விதைக்கச் சென்ற உதுமான் தானும்*
*தோற்றுத்தான் சுடப்பட்டான் வயலில் வைத்து*
*வேல் முருகா என்றழைக்கக் கோயில் சென்ற*
*வெத்திலைக் காறிக்கு மிந்தக் கெதியோ....?*

*வீதியிலே தொழிலுக்காய்ச் சென்று விட்டு*
*வெறுங்கையாய் திரும்புகிறான் கந்தப்பு*
*பாதியிலே ஏனப்பா வீடு வந் தீர்*
*பதறுகிறாள் வினோதினியும் லட்சுமியும்*
*சாதிசனம் கூடுகிற இடத்தில் இப்போ*
*சட்டென்று குண்டென்று புரளி விட்டால்*
*பீதிதானே வளரு மப்பா வேறுஎன்ன*
*பிரச்சினைதான் நாமிங்கு உழைக்க லாமோ.....?*

**ஏ. எச். எம். ஜிஹார்**
**காத்தான்குடி.**

# "ஈழத்துத் தமிழ் நாடக அரங்கம்" கடந்த நான்கு தசாப்பதங்களில்



கைதையூரான்
நல்லையா குமரகுருபரன்

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகின் நாடக அரங்கம் இன்றும் உயிர்ப்புடன் இருபத் தற்கான ஆதாரங்கள் தென்படாமலில்லை. தலை நகரிலும் மலையகத்திலும், வடபாலும் குறிப்பாக யாழ். பல்கலைக்கழகமும் அண்மைக் காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகமும் வருடந் தோறும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பினைச் செய்து அரங்கத்தினை உயிர்ப்பு டைத்தாய்ப் பேணுவது கண்கூடு. மேலும் பட்டறைகள், கருத்தரங்குகள், சந்திப்புக்கள் என்பனவும் ஏதோ வகையில் எங்கேயும் இடம்பிடித்து ஈழத்தின் எங்கோ, எந்த மூலையிலோ அரங்கத்தின் உயிர்ப்பைப் பரீட்சித்துக் கொண்டே இருக்கின்றன.

எழுபதுகளில் தலைநகரில் நாடக அரங்கத்துறையை அறிவுசார் பட்டறைகளாகத் தந்ததில் கட்டுபெத்த வளாகத் தமிழ் மாணவர்களின் பங்களிப்பு முதற்கண் இங்கு குறிப்பிடத்தக்கது. நெறியாள்கை கே. பாலேந்திரா என்றால் அந்த மேடையேற்றத்தில் ஏதோ ஒரு அரங்கப்புலமை விசேடமாகக் கையாளப்பட்டே இருக்கும். இது தனிரகம். எழுபதுகளின் முற்பகுதியில் தென்னிந்தியச் சினிமாவின் செயற்கைத்தனமும், நகைச்சுவை என்ற பெயரில் இரட்டை அர்த்தம் தொனிக்கும் சம்பாஷணையும் அடங்கிய மேடை நிகழ்வுகள் தான் பெரும்பான்மையாக நாடகம் என்ற பெயரில் மேடையேறின. அரங்கத்தன்மையற்று ஒலிவாங்கியை முன்னுக்கு வேலிமாதிரி வைத்து விட்டு மாறி மாறிக் கதைப்பது நாடகமாக மேடையேறி வந்தது. நல்ல சமூகப் பிரக்ஞையுள்ள சிறந்த நாடகங்கள் ஓரிரண்டு மேடைகளுக்கு மேல் ஏறமுடிவதில்லை. இப்படியான நிதர்சனச் சூழலில் தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும்! என்ற கோஷத்துடன் செயற்படத் தொடங்கியது தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் மொறட்டுவை பல்கலைக் கழகத்தினூடாகச் சில புலமைசார் நாடகங்கள் மேடையேறி

வரவேற்பைப் பெற்றமைதான் இக் கழகத்தின் தோற்றத்திற்கு ஆதாரமாக இருந்தது. தொடர்ந்தும் 1982 வரை மொரட்டுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்தும் இவர்கள் நாடகங்களைத் தயாரித்து மேடையேறினார்கள். யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள ஆர்வலர்களுடன் யாழ்ப்பாணத்தில் இவ்வமைப்பு மீண்டும் கால்பதித்தது. 1978 இலிருந்து 1982 க்குள் நூற்றுக்குமதிகமான நாடகங்களை இலங்கையின் பலபாகங்களிலும் யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை, திருகோணமலையில் நிகழ்ந்த இனங்களுக்கிடையிலான சமத்துவ கலாசார விழாவிலும் இந்நாடகம் 1980 ஆம் ஆண்டு மேடையேறியது. மழை, கண்ணாடி வார்ப்புக்கள் ரூபவாஹினியில் முதலாவது தமிழ் நாடகமாகவும் இடம்பெற்றன. இந்த வகையில் ஜனரஞ்சகம், நகைச்சுவை நாடக அமைப்பு, வானொலி நாடக அமைப்பு என்பனவற்றில் எழுபதுகளின் இறுதிப்பாகம் முதல் எண்பதுகளில் முத்திரை பதித்தவர் எஸ்.எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) அவர்கள் மொத்தத்தில் கோமாளிகள் மற்றும் இதன் தொடர்கள், புழுகர் பொன்னையா போன்றவை இந்த வகையில் குறிப்பிடத்தக்கன.

வட பால் நோக்கின் சிலகால அரசியற் பிரசாரத்திற்காய் தெருவோர தமிழ் நாடகப் பிரயோகம் இடம் பெற்றன என்ற கருத்துக்கள் நிலவுகின்ற போதும் அறுபது எழுபதுகளில் இடம் பெற்ற அளவு சமுதாய ரசனை தாங்கும் நாடகங்கள் உருப்பெற்று வெளிவருவது அரிதாகவுள்ளது. இதற்கு இன்றைய உவப்பற்ற காலச் சூழலும் முக்கிய காரணம். கிராமங்கள் தோறும் குறைந்தது ஒரு சனசமூக நிலையமோ அல்லது நாடகமன்றமோ தமது கிராமங்களிலும் அயற் கிராமங்களிலும் ஆண்டு விழாக்கள் மூலமாகவும் அந்நாளில் நாடகங்களை அரங்கேற்றி வந்திருப்பது வரலாற்று நிகழ்வு. இந்த வகையில் அரியாலை சனசமூக நிலையமும், வல்வெட்டித்துறை, நல்லூர் சார்ந்த தமிழ் இலக்கிய நாடக மன்றங்களும் முன்னைய தசாப்தங்களில் முத்திரை பதித்திருக்கின்றன. உதாரணமாக ''கவரிவீசிய காவலன்'', ''சாம்ராட் அசோகன்'', ''தம்பிகொழும்பிலை'', ''வெளிக்கிடடி விசுவமடுக்கு'' போன்ற பலவற்றை அறுபது எழுபதுகளில் சாதாரண சமூதாய மத்தியிலிருந்த நாடகப் பங்களிப்புகளாக வடபால் காணமுடிந்தது.

இன்று தலைநகரில் வெள்ளிநிலா கலாலயம் புதிய நாடகங்களைச் சமுதாய மற்றும் சினிமாப் பாணி நயத்தோடு அரங்கேற்றி வருகின்றது. இது குறிப்பிடக்கூடிய ஒரு நிகழ்வு. சுலபமான பொருள் தேட்டும் பாதையாக இசைக் குழுக்களும் ஒலி, ஒளி நடனங்களும் அமையும். இக்கலை உண்மையிலே வெள்ளிநிலா கலாலயம், மீள முடியாத பொருட் செலவில் டவர் மண்டபம் மற்றும் எல்ஃபின்ஸ்டன் அரங்குகளில் புதிய முயற்சிகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே தமிழ் நாடக அரங்கத்தைப் பொறுத்தவரை இன்றைய காலகட்டத்தில் ஓர் நம்பிக்கையூட்டும் ஒளிக்கீற்றினைத் தெறிக்கின்றது. இங்கு இக் கருத்து சினிமா நயத்தை சாடுவதாகக் கொள்ளல் தவறு.

பல காலத்தின்பின் மேடையேறிய ''யாருக்காக'' என்ற நாடகம் நம் நாடக அரங்க வளர்ச்சியில் ஓர் மைல்கல்லாகும். இந்த வகையில் மேடை நாடக அரங்கில் தலைநகரைப் பொறுத்த வரை ராஜசேகரன் ஹெலன் குமாரி தம்பதிகள், விஸ்வநாதராஜா போன்றவர்கள் ஒரு புறம், திரு.கே.ஏ. ஜவாகர் குழாம் மறுபுறம். அத்துடன் இலங்கை வானொலிக் கலைஞர்களாக அறிமுகமாகிய தொலக்காட்சி ரூபவாஹினிக் கலைஞர்கள் ஒரு ரகம். பல்வேறு வகைகளிலும் வானொலி, தொலைக்காட்சி வாயிலாக பல முயற்சிகளின் பின்னணியில் திகழும் மரிக்கார் புகழ் கலைக்குரிசில் எஸ். ராமதாஸ், அப்புக்குட்டி ராஜகோபால், செல்வசேகரன், சந்திரசேகரன், கலைக்குரிசில் பி.எச். அப்துல் ஹமீட், கமலினி செல்வராசன் போன்றோரின் நகைச்சுவை நயம் ஒருவித சுவை.

இன்றைய காலகட்டத்தில் தலைநகரில் வானொலிக் கலைஞர்கள் பலர். இவர்களின் மத்தியில் ஓரளவு நாடக அரங்கத்துறைசார் புலமையுடன் பல்கலை இளவலாகத் திகழ்ந்தவர் கே.எஸ். பாலச்சந்திரன், நாடக எழுத்து தயாரிப்புத்துறையில் தலைநகரில் மாத்தளை கார்த்திகேசு, கம்பளைக் கலைஞர்களும் போதிய பங்காற்றக் காணலாம். இவர்களிலும் இன்று தயாரிப்பாளர் விக்கினேஸ்வரன், கே.எஸ், பாலச்சந்திரன், அப்புக்குட்டி புகழ் ராஜகோபால் என்பாரும் புலம்பெயர்ந்த கலைஞர்கள் வரிசையில் சேர்ந்துவிட்டதாக அறியக்கிடைக்கின்றது.

கடந்த பத்து ஆண்டுகளாக லண்டனில் சுறுசுறுப்புடன் இயங்கிவரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகம், தமிழர் வாழும் புகலிட நாடுகளிலெல்லாம் தற்போது நாடக விழாக்களை நடத்தி வருகிறது. 1995 இல் முக்கியமான முதல் நிகழ்வாக பாரீஸ் ஆசியக் கலையகத்தில் ஏழு நாடகங்களையும் கான சாகரம் மெல்லிசை நிகழ்ச்சியையும் கொண்ட மாபெரும் நாடக விழாவொன்றினை இவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்கள். பாரததர்மம், போகிற வழிக்கு ஒன்று,

மன்னிக்கவும், யுகதர்மம், முகமில்லாத மனிதர்கள்,மழை, சம்பந்தம் ஆகிய நாடங்கள் மேடையேறியுள்ளன என அறியமுடிகின்றது. இந் நாடகங்களை ஈழத்துத் தீவிர நாடக ஆர்வலர்களுக்கு பரிச்சயமான நாடக நெறியாளர் க. பாலேந்திரா நெறிப்படுத்தியிருந்தார். ஏற்கனவே நெதர்லாந்து, சுவிற்சலாந்து, கனடா, ஆகிய நாடுகளில் இவர்களது நாடகங்கள் மேடையேறி வரவேற்பைப் பெற்றுள்ளன.

நாடகப் பிரதி ஒவ்வொரு முறையும் மேடையில் நிகழும் போதுதான் உயிர்ப்பு பெறுகிறது. இந்த வகையில் புகலிடத் தமிழர் மத்தியில் பல்வேறு கலாசார சூழல்களில் பாதிக்கப்பட்டு தமிழ் அடையாளத்தைத்தேட முயலும் எம்மவர் மத்தியில், தரமான தமிழ் நாடகங்களை திரும்பத் திரும்ப மேடையேற்றி வரும் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம் பாராட்டுக்குரியது. லண்டனில் சுமார் எழுபது மேடையேற்றங்களை நிகழ்த்தியுள்ள இவர்கள், லண்டனில் வருடாந்தம் நாடக விழாக்களை நடத்தி வருகிறார்கள்.

கலாநிதி.சி. மௌனகுருவின் பிரதிகளைக் கொண்டு லண்டனில் ஆங்கிலச் சூழலில் வாழும் தமிழ்ச் சிறார்கள், தமிழைச் சரளமாகப் பேசுவதற்கு, வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள், தப்பி வந்த தாடி ஆடு, நம்மைப்பிடித்த பிரசாசுகள் ஆகிய நாடகங்களை இவர்கள் தயாரித்து வெற்றி கண்டிருக்கிறமை பதிவாகிறது. நாடகத்துறையிலும் பெரும்பான்மையான நிகழ்ச்சிகள் புராணக் கதைகளையும் தெய்வ வழிபாடு, சிருங்காரம் போன்றவைகளையும் அடிப்படையாகவே நிகழ்ந்து வருகின்றன. இவர்களது 1994 லண்டனில் இடம்பெற்ற நாடக விழாவில் காளி எழுத்தாளர் என்ற மலையகத் தேயிலைப் பெண்கள் சம்பந்தமான நாட்டிய நாடகம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதில் சிவசேகரம், குறிஞ்சித் தென்னவன் ஆகியயோரது கவிதைகள் எடுத்தாளப்பட்டிருந்தன. திருமதி ஆனந்தராணி பாலேந்திரா இந்த நாட்டிய நாடகத்தை தயாரித்து வழங்கினார். பாரத தர்மம் நாடகம் அதிகாரப் போட்டியில் சாதாரண மக்களே பலியானார்கள் என்ற பொது மக்கள் கருத்தை வலியுறுத்துகிறது. சேர், அதிபர் வள்லாவ் ஹோவல் எழுதிய மன்னிக்கவும் நாடகம் ஒரு எழுத்தாளன் அதிகார அமைப்பின் அச்சுறுத்தப்படும் துன்பங்களை சுவையாகச் சொல்லிற்று.

**யாழ்ப் பல்கலைக்கழகப் பங்களிப்பு**

மேற்போந்த பங்களிப்புக்கள் முற்றாக இன்று 80,90 களில் அருகிப் போய்விட்ட போதும் யாழ் பல்கலைக்கழக வட்டம் என்றும் தமது நாடக அரங்க அறிவுசார் புலமையை ஒரே அளவினதான வீச்சுடன் ஒவ்வோர் ஆண்டும் வெளிக்காட்டிக் கொண்டேயிருந்தது. பாலசுந்தரத்தின் காத்தவராயன் ஓர் பல்சுவைப் படைப்பேயாகும். கடந்த தொண்ணூறு முற்பகுதியிலும் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து ஒன்பதிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கலாநிதி சி. மௌனகுரு மற்றும் குழந்தை ம. சண்முகம் போன்ற புலமைமிக்க நாடக விற்பன்னர்கள் கல்லூரிகள் வாயிலாகவும், பல்கலைக்கழக மாணவர்கள் மூலமாகவும் பல நாடகங்களை மேடையேற்றி வெற்றி கண்டிருக்கின்றனர்.

இவற்றில் 'மாதொருபாகர்', 'மண் சுமந்த மேனியர்' என்பன மிகச் சிறந்தவை என யாழ்ப்பாண இலக்கிய சங்கத்தின், கருத்தொலிக்கின்றது. யாழ் பல்கலைக்கழகம் எண்பத்தொன்பது கடைசிக் காற்பகுதியில் கவிஞர் மகாகவியின் புதியதொரு வீடு நாடகத்திற்காக கைலாசபதி அரங்கில் விழா எடுத்த போதும் மேற்கூறிய நாடகங்களும் மீண்டும் மேடையேறின. புதியதொரு வீடு மகாகவியின் பழையதோர் படைப்பே. வரிக்கவிதையெனும் புதுக் கவிதை வடிவிலான மகாகவியின் புதியதோர் வீடு முன்னர் மேடையேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 1970 களின் முதற் பகுதியில் கிழக்கு மாகாணத்திலும் கூட மேடையேற்றப்பட்ட போது இதனை ஏனைய இனத்தவர்களும் ரசித்துள்ளனர் என்பதற்கான தடங்களும் தென்பட்டன.

**தழுவல்கள்**

தமிழிலும் பலவேற்றுமொழி எழுத்தாளர்களின் தழுவல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. உதாரணமாக மாட்டின் விக்கிரமசிங்காவின் ''மாமா'' தயானந்த குணவர்த்தனாவின் ''இபிக்கட்ட வெஸ்லி'' சாண்ட்சின் சம்திங்டு ஹைட் நொட் அவர்களின் ''டயல் எம் போ'' மேடர் ஒஸ்காவயில்டின் ''சலோம்'', வங்காள மூலமான ஆங்கில கொஃபின், இப்பென்ஸ் அவர்களின் ''டோல்ஹவுஸ்'' என்பனவற்றை அவர் குறிப்பிடுறார்.

வேறுபட்ட இத்தொகைத் தொடரில் எல்லா வேற்று மூல மொழி எடுத்தாள்கைகளும் ஒரே அளவான வெற்றியையோ சீரான பொருட் சுவையையோ தமிழ் ரசிகர்களுக்குத் தந்திருக்கவில்லை. இந்த வகையில் கலப்பு எடுத்தாள்கையுடன் தமிழ் நாடக நடிகர் சுந்தரலிங்கம் அவர்கள் அபசுரம்தனை எழுதினார்கள். கே. சிவபாலன் அவர்கள் மாட்டின் விக்கிரமசிங்ஹாவின் மாமாவைத் தயாரிப்பதில் உதவியுள்ளார். மேலும் அன்டன் செக்கோவ் அவர்களின் த பெயர் எனும் நாடகத்தை இலங்கைச் சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்திற்காய் மொழி பெயர்த்து நெறியாள்கையையும் கையாண்டிருக்கின்றார். திரு. சிவபாலன் அவர்கள் தனது ஒரு கட்டுரையில் ஏற்கனவே இதே நாடகம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதி திருக்கந்தையா, டாக்டர் இந்திரபாலா ஆகியோராலும் எடுத்தாளப்பட்டிருக்கின்றதெனக் குறிப்பிட்டுள்ளார்.

1970 களைப் பொறுத்தவரை திரு. கே. எஸ். சிவகுமாரன் அவர்களின் ஆணித்தரமான கருத்தை இங்கு எடுத்தியம்பல் தக்கதே. 1971 ஆம் ஆண்டின் அவர் தம் நூல் பின்வருமாறு கருப்பொசிவைத் தருகின்றது. சிங்கள நாடக அரங்கத்தை நோக்கி இலங்கைத் தமிழ் நாடக அரங்கம் எவ்வளவோ காதை தூரம் முன்னேறிச் செல்ல வேண்டுமாயினும் குறைந்தது பன்னிரண்டு நாடகங்களேனும் நாடக அரங்க ரசிகர்களை அண்மைக் காலத்தில் கவர்ந்திழுக்காமலில்லை. பெரும்பாலான சிங்கள நாடகங்களில் வெற்றிகரமாகத் திகழ்ந்தவை ஏனைய மொழிகளிலிருந்து எடுத்தாளப்பட்டவையே. ஆனால் உண்மையில் நாடக அமைப்பில் ஓர் முன்னேற்ற அசைவினைத்தேட முயலுகையில் அது ஓர் புதிய முதல் மூல அசல் நாடகக் கருவினையே வேண்டி நிற்கும் என்பதே அதுவாகும்.

ஓர் அசல் நாடகக் கருவே ஓர் ஒழுங்கமைப்பை, சேதனக் கட்டமைப்பினை நாடகம் எழுதும் போதும் அதை அவர்கள் தயாரிக்கும் போதும் ஓர் புதிய அமைப்பினைத் தருவதாக அமைய முடியும் என்பது திண்ணம்.

இதே வேளை, 1971 இன் அசல் மூல நாடகங்களில் 'கோடை' 'புதியதொரு வீடு' 'வாடகைக்கு வீடு', 'சுமதி', 'சாணக்கியன்', 'அவனுக்கென்ன தூங்கிவிட்டான்', 'சதுரங்கன்', 'வேதாளம் சொன்ன கதை', 'கடூழியம்', 'கந்தன் கருணை', 'நெஞ்சில் நிறைந்தவள்' என்பவற்றைக் குறிப்பிடலாம்.

வடபால் நோக்கின் சொக்கன், பேராசிரியர் நந்தி, கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, அமரர் கலையரசு சொர்ணலிங்கம், லடீஸ் வீரமணி, நாடகமணி, செம்பியின் செல்வன் ஆகியோருடன் பேராதனை, கொழும்பு என்று மட்டுமல்லாது யாழ் உட்பட இவர்களுடன் இணைந்தோ, தொடர்பு கொண்டோ நாடக உலகிலும் பங்கு கொண்டவர்கள் குழந்தை, ம. சண்முகம், கலாநிதி சிவத்தம்பி, டாக்டர் அமரர் சு. வித்தியானந்தன், மற்றும் கலாநிதி மௌனகுரு என்போர் ஓரளவு பாரம்பரியமும் அரங்கப் புலமையும். சாஸ்த்திர ரீதியான (துறைசார்) கையாள்கையும் கொண்ட நாடகங்களையும் இவர்கள் தந்து கொண்டிருந்தனர். என்றால் மிகையாகாது.

1960 களின் கடைசியிலும் 70 களின் ஆரம்ப காலத்திலும் தலைநகரைப் பொறுத்தவரை தாசிசியஸ், சுந்தரலிங்கம், சிவபாலன், சச்சிதானந்தன், ஆர். பி. சபாரத்னம், நளினி செல்வநாயகம், ஈஸ்வரநிதி ராஜரத்னம், உதயகுமார், தியாகராஜா எனும் பட்டதாரி, சட்டக்கல்லூரி, பேராதனைப்பல்கலைக்கழக மாணவர்களும் கொண்ட நாடோடிகள் எனும் மேடை நாடகக் குழுவினரின் பங்களிப்பு வெள்ளிடை மலையாகத் தெரிகின்றது. 1969 ன் இறுதிப் பாகத்தில் இவர்கள் மகா கவியின் 'கோடை' சிவபாலனின் 'இவர்களுக்கு வேடிக்கை' போன்ற நாடகங்களை அரங்கேற்றினர். பின்னர் மகா கவியின் 'புதியதொரு வீடு' அவர்களது அடுத்த படைப்பாக முதன் முதலாகக் கொழும்பு நகரிலே பொரல்ல வை.எம்.பி.ஏ. மண்டபத்தில் மேடையேறியது. 1971ம் ஆண்டில் முதல் தடவையாக தலைநகரில் மேடையேற ஆதரவு நல்கியவர் திரு. பிறைட்டன் அரியரெட்ணமவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாடக அரங்கில் 1971 ம் ஆண்டு புதிய ராகமிசைத்த காலம் எனலாம். வங்காள தெருக் கூத்தின் முன்னோடியான ஆசானிடம் பயின்று திரு. அந்தனி ஜீவா அவர்கள் 'அக்னிப்பூக்கள்', 'முள்ளில்றோஜா', 'கவிதா' போன்ற சிறந்த மேடை நாடகங்களை தயாரித்து வெளியிட்ட காலம், மேலும் லடீஸ் வீரமணி, சுபைர் ஹமீத், ஆர்.சிவானந்தன், வி.சுந்தரலிங்கம் போன்றோரும் நல்ல பல மேடை நாடகங்களைத் தயாரித்தளித்து தமிழ் மேடை நாடகம் சிறப்புறு விளங்கிய ஒரு காலப்பகுதியெனலாம். தமிழ் மணி மானா மக்கீன் அவர்களின் பங்களிப்பும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே முதல் தசாப்த பகுதியில் தான் பேராதனை வளாகத்தில் வடமோடி நாட்டுக் கூத்துக்களை உண்மையில் மட்டக்களப்பு மன்னார்ப் பகுதிகளிலிருந்து தெரிந்த பாரம்பரியக்கலையுணர்வை அக்கால நவீன மேடை நாடக நியமங்கட்கேற்ப பரீட்சிக்க முயன்றார் முனைவர் சு. வித்தியானந்தன் அவர்கள். இதன் விளைவாக இந்தப் பாரம்பரிய நாட்டுக் கூத்துக்கள் ஒரு தேசிய நாடக அரங்கு தோன்றிடும் வகையில் சாஸ்த்திரிய தொழில்நுட்ப மரபு கூர்ப்படைந்துள்ளதெனலாம். முனைவர் சு. வித்தியானந்தனின் இம்முயற்சி, புதுயுக நோக்கு, பரீட்சிப்பு என்பவற்றின் பயன்பாட்டில் தன்னை அர்ப்பணித்தன் விளைவாக எம் சமகால தமிழ் நாடக உலகிற்கு கிடைத்த சமகால அறிஞர் தான் முனைவர் மௌனகுரு அவர்கள் என்பதும் மிகையாகாது.

இக்குறிப்பிட்ட தசாப்தங்களின் வெளியான மௌனகுருவின் 'சங்காரம்' 'ரகுநாதனின் 'கந்தன் கருணை' முருகையனின் 'கடூழியம்', மகாகவியின் 'புதியதொரு வீடு' என்பனவற்றை நல்ல சிறந்த தமிழ் அரங்கப் பரிட்சிப்புக்கள் என்று குறிப்பிடுகிறார் அமரர் முனைவர் கைலாசபதி அவர்கள். சில்லையூர் செல்வராசன் தொகுத்தளித்த செல்வராசாவின் 'ஞான சௌந்தரி' காவலூர் அண்ணாவியர் அருளப்புவின் மறுபிறப்பே ஆகும் என்பதும் நல்லதோர் உதாரணம்.

1960, 70 எனும் இரு தசாப்தங்களுக்கப்பால் தமிழ் நாடக அரங்கை ஆய்ந்திட ஏதும் தடயங்கள் அவ்வாய்வாளர்களுக்குக் கிடைக்ககூடியன அரிதினும் அரிதே.மீதமாகக் கிடைப்பன யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தலைநகரின் வெகு சில சினிமாப் பாணி பாசறைகள், இலங்கை வானொலி நாடகங்கள், மற்றும் தொலைக்காட்சி நாடகங்களே என ஆர்வலர்கள் அங்கலாய்ப்பது யதார்த்தம். மேலும் துறைசார் நாடகப்படைப்புகளுக்கு அப்பால் பெரும்பான்மையான கல்வித் துறை ஆய்வு நிலைகள் போல் அரங்க நாடக ஆய்விற்கும் எதிர்காலத்தில் ஆவணங்கள் தேவை எனும் தேடற்பசிக்கு பங்களிக்க வேண்டிய தேவையும் இங்கு தொக்கு நிற்கின்றது.

இன்றும் இப்பால் மூன்றாம் நான்காம் தசாப்தங்களைப் பொறுத்தவரையும் கூட கலாநிதி கைலாசபதி அவர்களின் ஒரு முக்கிய கருப்பொருளை முடிவுரையாக இங்கு கூறலாம் என நம்புகிறேன். இது அன்னாரின் சிந்தனைகளாக திருமதி கைலாசபதி அவர்கள் தொகுத்தவைகள், அதன் ''பொருட்பொசிவு'' யாதெனின், ''சமகாலத் தமிழ் நாடகங்கள் யாம் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் காணவில்லை என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்வார்கள் என அவர் உணர்ந்து கொண்டார். தமிழ்க் கவிதை, குறுங்கதைகள் அடைந்துள்ள தரத்தை நாடகங்கள் அடையவில்லை என்பது ஒரு நிச்சயமான உண்மை. தமிழ் சினிமாவும் தமிழ் பார்வையாளர்கள் தம் கர்சனை (ஆர்வ) க்குறைவும் இதற்குக் காரணங்களாகக் காட்டப்படுகின்றன. இவைகள் புறக் காரணிகளாக இருக்கலாம். ஆனால், அவரைப் பொறுத்தவரை குறைபாடுகள் எவை என்பதை ஒவ்வொருவரும் கண்டுபிடிக்க வேண்டும்.''

எனவே மொத்தத்தில் பரவலாக இலங்கையில் 1960, 70 தசாப்தங்களிதல் ஓரளவேனும் முயற்சியுடையதாய் விளங்கிப் பரீட்சைக்கப்பட்ட சிறந்த முதல் மூலகங்கள், எடுத்தாள்கைகள் கொண்ட தமிழ் நாடக அரங்கம் எண்பதுக்கிப்பால் பல்பல காரணிகளாலும் வரண்ட பூமியில், வசந்த காலம் கண்டு துளிர்க்கக்கூடிய வகையிலேனும் உயிர்ப்புடையதாயிருப்பதுடன் ஆய்வுத் தேடலுக்குரிய தடயங்கள் ஆக மட்டும் இருப்பதுடன் மேலும் புலம் பெயர்ந்து வீரியத்துடன் பிரசவமாவதும் இன்று கண்கூடு.

*செந்தமிழே நின்னடியின்*
*சீர்த்தியினைப் பணிவதுவாய் சிரந்தாளாத*
*விந்தைமிகு கலையழகு*
*விரிந்துபுகழ் வளர்கின்ற வன்னி மண்ணில்*
*தந்தமுது கலைஞர்களை*
*தாய், தந்தை, சோதரனை கொம்பன் யானை*
*தந்தம்நிகர் வன்னியரை*
*தன்மானம் காப்பவரை தலை பணிந்தேன்.*

**வ. ஞானமாணிக்கம்**
**கல்முனை.**

# தனிப்பாடல் இலக்கியம்

சைவப்புலவர்மணி, வித்துவான்
வ. செல்லையா,
வவுனியா.

ஒரு இனம் அதன் மொழியிலேயே தங்கியிருக்கிறது. வாழ்வோ அன்றித்தாழ்வோ அம்மொழியேயாம். மொழியோ அதன் இலக்கியத்தால் வளம் பெறுகிறது. வளமான இலக்கியத்தையுடைய மொழியும் வளமாகவேயிருக்கும். இதற்கு யாதொரு ஐயுறவுமில்லை. இதற்கு எடுத்துக்காட்டு அவசியமேயில்லை.

உலகில் உள்ள வளமான மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. எத்தனையோ மொழிகள் தோன்றியழிந்துள்ளன. சில உலக வழக்கு அழிந்து சிதைந்துள்ளன. இந்த அனர்த்தங்களில் தமிழ்மொழி சிக்கிக்கொள்ளவில்லை. காரணம் தமிழ் மொழிக்கு வளமான இக்கியமும், கட்டுக் கோப்பான இலக்கண நெறிமுறையும் உண்டு. இதை விடமேலாகத் தமிழ்மொழி, கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய பலமொழிகளையும் தன் உதரத்திலிருந்து பிரசவித்துச் சீரிளமைத்திறத்தோடு பலரும் போற்றத்திகழ்ந்து கொண்டிருக்கிறது. என்றும் மாறாத ''கன்னித்தமிழாய்'' மிளிர்கிறது. இந்நிலைக்குக்காரணம் இலக்கியவளமேயாகும்.

இலக்கியம் ஒரு கலை. ஒருமொழியின் வளத்தைக்காட்டும் ஒருவிழுமியம். இலக்கியம் ஒருபொழுது போக்குக்கலையன்று. அது ஓர் இனத்தின் வரலாற்றுப் பின்னணியாகும். ஓர் இனம் நாகரீக, ஒழுக்கப் பண்பாட்டுடன் இருந்ததென்பதைக்காட்டும் ஒரு கண்ணாடி. சுருக்கமாகச் சொன்னால் மனித இனத்தைப்பண்படுத்தி நெறிப்படுத்தும் சாதனம் என்றே கூறிவிடலாம்.

இலக்கியம் என்றதற்குப் பலரும் பலவிதமான வியாக்கியானங்களைச் செய்தாலும் அதன் உயிர்ப்பொருள் இலட்சியமாகும். இலக்கியமென்றால் இலட்சிய மென்பதே பொருள். இது ஒப்பமுடிந்த முடிவுமாகும்

ஒரு மொழியை வளம் படுத்தும் இலக்கணங்கூட அதன் இலக்கியத்துக்காகவே அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனை ''இலக்கியங்கண்டதற்கிலக்கணம் இயம்பலின்'' என்னும் இலக்கணச்சூத்திரதைக் கொண்டு அறியலாம். இலக்கியத்துக்காக இலக்கணமேயன்றி, இலக்கணத்துக்காக இலக்கியமன்று. இலக்கணத்தின் பயன்பாடு மொழித்திறத்தின் முட்டறுத்தலாகும். மொழித்திறன் என்பது இலக்கியத்தில் பயின்றுவரும் சொற்கூட்டங்கள் இவற்றினைச் சொல்விற்பனமென்று குமரகுருபரர் குறிப்பிடுகிறார்.

ஒருமொழியின் இலக்கியத்திறனையும் நயத்தையும் நோக்கும் போது அம்மொழிகளின் அறிஞர்களின் கருத்துக்களையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆங்கில அறிஞர் ஒருவரின் கருத்து இது. ஆங்கிலேயன் ஒருவன் இந்தியாவை இழக்க

விரும்பினாலும் சேக்ஸ்பியரை இழக்க விரும்பமாட்டான் என்பது சேக்ஸ்பியர் என்பது அன்னாரின் இலக்கியமாகும். இதிலிருந்து நாம் அறிவது இலக்கியம் உயிருக்கு நேராக நேசிக்கப்படுகிறதென்பதே.

பாரதியாரும் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங்காணோம்'' என்றும் வள்ளுவன்தன்னை உலகினுக்கேதந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்றுங் கூறுவதற்குக்காரணம் தமிழ் இலக்கிய வளமே யென்க. திருக்குறளும், திருவாசகமும் உலகமொழிகளிலே சென்று சேர்ந்துள்ளன. இவை தமிழ் மொழிதந்த சிறந்த இலக்கிய நூல்களன்றோ. நமக்கும் நமது மொழிக்கும் வளந்தந்த இலக்கியத்தையும் இலக்கிய நூல்களையும் ஓரளவிலாவது மனங்கொண்டு படித்துச் சிலவற்றையாவது பெயரளவில் தெரிந்து கொள்ள வேண்டாமோ.

தமிழ் இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள், சங்கமருவிய கால இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், புராண இதிகாசங்கள் தனிப்பாடல் இலக்கியங்கள், புதுக்கவிதை இலக்கியங்கள் என்றே விரிந்து கொண்டே செல்கின்றன. மொழிவளத்தால் இன்னும் பலப்பல இலக்கியங்களும் தோன்றி விரிவடைந்து செல்லும் என்பதும் ஒரு புதுமையன்றோ.

இலக்கியங்கள் அக்கால மக்களுக்கு விளங்கும் மொழி வளத்திலேயே ஆக்கப்படுகின்றன, அன்றும் இன்றும் இது ஒப்பமுடிந்தகருத்தேயாம். சங்கமிருந்து ஆராய்ந்ததமிழ் எங்கள் தமிழ் ஆதலினாலன்றோ ஔவையாரும் சங்கத்தமிழ் மூன்றும் தா என்று வேண்டி நின்றார்.

இலக்கியம் அகப்பொருள் இலக்கியம் புறப்பொருள் இலக்கியமென வகுக்கப்பட்டுப் போற்றப்படுகிறது அகப்பொருள் இலக்கியம் காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட இன்ப வாழ்வு பற்றிக் கூறுகிறது. புறப்பொருள் இலக்கியம் வீரம், கொடை, புகழ் என்பனவற்றிக் கூறுகின்றது. இதற்கு அகநானூறு,புறநானூறு என்ற நூல்களும் இன்னும் பிறவும் உள்ளன. இங்ஙனமான இலக்கியமரபு வேறெந்த மொழிகளுக்குமில்லையென்று பெருமையாகக்கூறலாம். இவ்வளமான இலக்கியங்களை நாமும் நன்குகற்று இன்னும் புதுக்கவிதைகள் புனைந்து பிற்சந்ததியினரும் பெருமையடையப்பாதுகாத்து வைத்திருக்க வேண்டுமன்றோ.

முன்னர் செய்யுளால் அமைந்த நூல்களே இலக்கியமாகக் கருதப்பட்டன. பின்னர் வசன நூல்களும் இலக்கியமாகக் கருதப்பட்டன. புராணங்களும் இதிகாசங்களும் பெருங்காப்பியங்களும் வசன நடை ஆக்கம் பெற்றன. இந்தவகையில் இந்தியத் தமிழ் இலக்கிய கர்த்தாக்களுடன் ஈழத்திலும் யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் வசன ஆக்கத்தில் சிறந்து விளங்கினார்கள். இதனால் ''வசன நடை கை வந்த வல்லாளன்'' என்று தமிழறிஞர்களால் ஆறுமுகநாவலர் அவர்கள் போற்றப்பட்டார்.

மேலும் இலக்கியத்துறைக்கு அணி செய்யப் பிற்காலத்தில் சிறுகதைகள், நாவல்கள் தோன்றின. இவை இன்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. இவற்றின் வளர்ச்சியால் இலக்கியத் தமிழ் வளம் மிக்குள்ளது பாராட்டத்தக்கதே. நாவல்கள் தொடர் நவீனம் என்றும் சிறுகதைகளைச் சிறுகதை இலக்கியம் என்றும் கொள்ளப்பட்டு அவற்றுக்குப் போட்டி நடாத்திப் பரிசில்கள் வழங்கிப் பாராட்டப்படுவதால் அது மேலும் வளர்ச்சி பெற்றுத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் தரும் என்பது உறுதி.

இதுவரை இலக்கியம் பற்றி பொதுவான கருத்துக்களை அறிந்தோம். இனித் தனிப்பாடல்கள் பற்றிச் சிறப்பாக ஆராய்வோம்.

புலவர் பெருமக்கள் ஆங்காங்கே அவ்வப்போது தம்முன் நிகழ்ந்த சம்பவங்களைத் தனிப்பாடல்களாகப் பாடியுள்ளனர். அவை பாடிச்சுவைக்க அன்றி நல்ல கருத்துக் கருவூலங்களாகவும் மிளிர்கின்றன. இங்ஙமான பாடல்கள் பண்டைக்கால முதல் பிற்காலங்களிலும் புலவர்களால் பாடப்பட்டு வந்துள்ளன. இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுத் தனிப்பாடல் திரட்டு முதலாம் பாகம், இரண்டாம் பாகமென்று நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இறையனார் முதல் நவாலி தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் வரை இப்பாடல்கள் தொடர்கின்றன. இறையனார் ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி'' என்று தொடங்கும் பாடலைத் தருமிக்குப் பாடிக் கொடுத்திருக்கிறார். தங்கத்தாத்தா தன் நோய் காலத்தில் அருமையாகப் பணியாற்றிய தன் மனைவியின் கைக்கு ''தாரமாகித் தாயாகினாள் கை'' என்று முடிவடையும்

பாடலைப் பாடியிருக்கிறார். சங்ககாலச் செய்யுள்கள் போல் தனிப்பாடல் செய்யுள்களும் காத்திரமாயுள்ளன. மக்கள் வாழ்க்கைக்கு உபகாரப்பட்டிருக்கின்றன. இங்கும் வீரம், காதல், , கொடை, புகழ் என்பவற்றோடு துவேஷம், பகை, நட்பு என்னும் பொருள்களில் பாடல் மிளிர்கின்றன. தனிப்பாடல்களும் இலக்கிய வளத்துக்குப் பெரிதும் உதவியுள்ளன. எம்போன்றார் இலக்கிய உலகில் பிரவேசிக்கத் தனிப்பாடல்கள் இலக்கியமே உபகாரப்பட்ட தென்றதை இங்கு குறிப்பிட்ட விரும்புகின்றேன்.

திருவள்ளுவர், ஔவை போன்ற பெரும் புலவர்கள் தனிப்பாடல் செய்யுள்கள் நிரம்பப் பாடியுள்ளார்கள். திருவள்ளுவர் தன் மனைவி இறந்த போது பாடிய பாடல் மிக முக்கியமானது.

''அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் தவறாத பாவாய் - அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழும் பேதையே போதியோ
என்தூங்கும் என் கண் இரா''

என்பதாகும்.

அன்றைய கால நிலையில் தாம்பத்திய வாழ்க்கை எப்படியிருந்த தென்பதை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது. கணவனை மனைவியோ, அன்றி மனைவியைக் கணவனோ இழந்து வாழ முடியாது என்பதனை அன்பு பண்போடு இணைத்து இப்பாடல் தெளிவாகக் காட்டுகிறது.

ஔவையார் ஒரு வீட்டுக்கு வருகிறார். அவ்வீட்டுத் தலைவன் வந்தவர் பெரும் புலவராச்சே என்று அன்போடு அவரை அழைத்துச் சென்று ஆசனம் கொடுத்து இருத்தி உபசரித்து விட்டு உள்ளே செல்கிறான். சென்றவன் விசயத்தை வெளிப்படுத்தாமல் மனைவியைப் பலவாறாகத் திருப்தி செய்கிறான். அவளின் அகம்,புறம் இருநிலைகளையுங் கணித்துக் கருத்தை வெளியிடுகிறான். என்ன முடிவு நேரில் பார்த்துக் கொண்டிருந்து ஔவையார் கூறுவதைப் பார்ப்போம்.

இருந்து முகந்திருத்தி ஈரொடு பேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்

என்று பாடலைப்பாடுகிறார். அந்நிலையில் ஔவையார் திருவள்ளுவர் கண்ணீர் சொரியப் பாடுகிறார். பாடலை இல்லத்தலைவனோ அழுதழுது ஓடுகிறான். இப்பாடலின் படி அன்பு பண்பு எங்கே நாடுமங்கேயென்று சிந்திக்கத் தக்கது இந்தக் கால நிலைவேறு' கணவன் மனைவி சமரசமாக இப்பொழுது நடக்கிறார்கள். வேலைகளைப் பங்கிட்டு உழைப்போடு களைப்பின்றி செய்து கொள்கிறார்கள். இதற்கும் இப்போது தனிப்பாடல்கள் தோன்றவேண்டும். அன்று அடிசிலுக்கு அவளே பொறுப்பு அதனால் அந்நிலை இன்று வேறு.

ஔவையார் மழையில் நனைந்து குளிரால் நடுங்கிப் பாரியின் மகளிர் இருந்த குடிசைக்கு வருகிறார். அவர்களோ தந்தையையும் நாட்டையும் இழந்து ஒரு குடிசையில் வசித்து வருகிறார்கள். ஔவையாரைக் கண்டதும் அவர்கள் பெரிதும் சந்தோசப்பட்டார்கள். அவரின் ஈரந்துவட்டி உடுப்பை மாற்றுவதற்கு தங்களிடமிருந்த நீலச் சிற்றாடை ஒன்றைக் கொடுத்தார்கள் அணிவதற்கு தந்தை கொடுத்து வந்தவன் அவனில்லை மைந்தர் இல்லையென்று ஈகையை மறுப்பரோ?

அதுதான் இல்லை. இக்கொடையை வரிசைப்படுத்தி ஔவை பாடும்பாடல் இது. பொருட் செறிவும் சுவையுமுடையது

அது.

பாரி பறித்த பறியும் பழையானூர்க்
காரி கொடுத்த களைக்கட்டும் - சேரமான்
வாராய் என அழைத்த வாய்மையும் இம் மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.

என்பதாகும்

பாரி ஔவையாருக்குப் பரிசுப் பொருட்களைக் கொடுத்து அனுப்பி விட்டு வழியில் அப்பொருட்களை அவரிடமிருந்து பறிப்பித்து விட்டான். அவன் அப்படிச் செய்வித்தது புலவரைப் பிரியமுடியாமையே என்பது பின்னர் ஔவையாருக்குத் தெரியவந்தது அதனால் பாரி பறித்த பறி அன்புக்குரிய தாயிற்று. காரியும் தன்னிடம் வந்த ஔவையாருக்குக் களைக்கட்டொன்றைக் கொடுத்துப் பூந்தோட்டத்தில் தன்னுடன்களை பிடுங்கச் செய்தான் அது அன்பு நிகழ்ச்சியாயது சேரமான் ஔவையார் தன்னிடம் வரும் போது எல்லாம் இன்முகங்காட்டி வரவேணும் வரவேணும் என்று கூறி அழைத்து உபசரிப்பார் அந்நிகழ்சியும் ஔவையாருக்குப் பெரிதும் உவப்பாயிருந்தது இவை போன்றே பாரிமகளிர் அன்போடு உபசரித்த சிற்றாடையும் மட்டிலா மகிழ்ச்சியை ஔவையாருக்குக் கொடுத்தது இந்நிகழ்ச்சியில் வைத்தே முன்னமூன்றையும் நிரைப்படுத்திக் காட்டுகின்றார் அவர். இலக்கிய உலகில் இப்பாடல் பெரிதும் போற்றப்படுகின்றது. இங்ஙனம் தனிப்பாடல்கள் பலவற்றை ஔவையார் பாடியுள்ளார் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையையும் சொல்லும். அவையாவும் கருத்துக்கினியன.

புலவர்களுக்கிடையே வித்துவக்காய்ச்சல் என்னும் நோய் மிகுதியாகக் காணப்படும் இந்த வகையில் ஒட்டக்கூத்தரையும் புகழேந்தியாரையும் இணைத்துப்பார்ப்பது புலமையை நயப்பதற்கு உகந்தது. ஒட்டக்கூத்தர் சோழ அரச சமஸ்தானப் புலவர் புகழேந்திப் புலவரோ பாண்டிய அரசர்களின் சமஸ்தானப் புலவர் இரு அரசரும் வீரம், கொடை, புகழ் என்ற ரீதியில் பகைவர்கள், அங்கமைந்த சமஸ்தான புலவர்களோ புலம்சிறப்பால் பகைமையுடைவர்கள் வெண்பாவில் புகழேந்தி என்றும், கோவை உலா அந்தாதிக் கொட்டக்கூத்தன் என்றும் சிறப்பித்து பேசப்படுபவர்கள் இவர்கள். இருவருமே புலமை மிக்கவர்கள்.

குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டு அரசு மீது படை எடுத்து வெற்றி கொண்டு மன்னனிடம் திறை பெற்றுச் செல்லுகிறான். வீரனுக்குப் பெண் கொடுப்பது அன்றைய அரச மரபு அதன் வழியில் பாண்டியன் சோழ அரசனுக்குத் தன் மகளை மணம் முடித்துக்கொடுக்கிறான் சோழன் திறைப் பொருள்களைக் கொண்டு பெண்ணை விட்டுச் செல்கிறான்.

பாண்டியன் தன் மகளைச் சோழனிடம் அனுப்பும் போது புகழேந்திப் புலவரையும் மகளுக்கு அறிவுரை வழங்க அனுப்புகிறான். இந்த வகையில் புகழேந்தி சீதனப் புலவர் ஆகிறார் அரசனிடம் இவர்கள் வந்து சேர்ந்ததும் அங்கு இருவருக்கும் கோலாகலமான வரவேற்பு நடைபெறுகிறது பாண்டியன் மகள் அரண்மனை அந்தப்புரத்துக்குரிய வளாகிறாள் புகழேந்தி புலமையால் அரசசபையை அலங்கரிக்கிறார் இங்குதான் வினை விளையாடுகிறது ஓட்டக்கூத்தருக்குப் பொறாமை உண்டாகிறது தவிப்புலவனாக இருந்து புகழ் பெற்றவர் ஒட்டக்கூத்தர். புகழேந்திப் புலவரால் பின் தள்ளப்பட்டு விடுவேனோ என்று ஒரு ஏக்கம் அவருக்கு. இதனால் மன்னனின் இசைவோடு புகழேந்தியை புறந்தள்ளச் செய்கிறார் ஒட்டக்கூத்தார் புகழேந்தியும் நகர்புறத்தே சென்று மக்களுக்குப் பாடும் புலமையைப் பயிற்றுகிறார் புகழேந்தியை அப்புறப்படுத்தியதால் அரண்மனையின் அந்தப்புரத்தில் சிக்கலுண்டாகிறது.

ஒரு நாள் குலோத்துங்க சோழன் முன்னிரவில் பவனி வருகிறான் தேவி அவனுடன் சேர்ந்து வரவில்லை வீட்டில் கதவடைப்பு நடைபெறுகிறது ஒட்டக்கூத்தரும் பவனியில் கலந்து சொள்ளுகிறார் பவனியைப் பார்க்க புகழேந்தியும் விரும்புகிறார் பவனி வரும் வழியில் உள்ள முந்திரிகைப் பந்தலின் கீழ் ஒரு சட்டி அவரின் தலையில் கவிழ்த்து அத்றகுப் பார்க்க கூடிய துவாரமிட்டு அவர் அங்கு கொண்டு வைக்கப்பட்டிருக்கிறார் பவனி வந்த யானை புலவர் அமர்ந்துள்ள முந்திரிகைப் பந்தலடியில் அமையாது நின்று விட்டது. பவனியில் வந்த மக்கள் அவ்வேளையில் சிரித்து நின்றனர் மன்னர் திகைத்து ஒட்டக்கூத்தரை நோக்கினார் மன்னர் கொண்ட ஐயத்தை விளக்க வேண்டியது புலவரின் கடமை. மன்னர் கொள்ளும் ஐயங்களைப் புலவர்கள் பாட்டின் மூலமே தெளிவுபடுத்துவார்கள். இப்போது

ஒட்டக்கூத்தருக்கு நாடுவழவுமில்லை பாடுவழவுமில்லை என்ன செய்வார் மன்னன் ஏங்கித் தவிக்கிறான் முற்றிரியைப் பந்தலிருந்து ஒரு குரல் எழுந்தது நானும் பாடலாமா? என்றது அந்தக் குரல் மன்னனின் உத்தரவுகிடைக்கிறது பாடலும் பிறக்கிறது.

அண்டமீது உலவும் அருந்ததியென்னும்
அருந்திறால் கற்பினாள் உன்னைக்
கண்டதால் ஊறுபட வொண்ணாது
கங்குலில் கவிகை
கொண்டது முறைதான் குலோதுங்காவெனவே
கூறுமிக் கவிதையின் பொருளாம்
மண்டனைப் புரப்போர் மாதரார் கற்பை
அளித்தலுங் கடமையாம் அன்றே

என்ற பாடலைப் புகழேந்தி பாடிமுடிக்க யானையும் பவனியைத் தொடர்ந்தது இப்பாடலைப் பாடியது புகழேந்தி என்று அறிந்து மன்னன் அழைத்து அவரை தன்னுடன் யானை மீது இருத்திக் கொண்டான். இத்தனிப்பாடல் சங்க இலக்கியங்களுடன் ஒப்பிடக் கூடியது ஒன்று. இப்பாடலில் இரவில் குடைபிடிப்பது தவறு என்ற கருத்தை மன்னர்க்கு எது புறநடை என்பது மறுத்துரைக்கப்படுகிறது பொருள் ஆழமும் சுவையும் நிறைந்த பாடல் இது இங்ஙனம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல நூற்றுக்கணக்கான பாடல்கள் எழுந்துள்ளன இவை தனிப்பாடல் திரட்டாகப் பாகம் பாகமாக வெளிவந்துள்ளன அத்தனிப்பாடல் இலக்கியத்தை நாமும் படித்துப் பயன் பெறுவோமாக.

*சமாதானத்திற்காக*
*சகலதையும்*
*இழக்கச்*
*சொல்கின்றனர்...!!*
*எமக்கு*
*இழப்பதற்கு*
*என்ன உள்ளது*
*உயிரைத் தவிர......?*

**செ. தமிழ்ச் செல்வன்,**
**புசல்லாவ.**

*மாங்கனி வடிவிலிந்த மரகதத் தீவினுக்கோர்*
*மேம்பால மமைப்பார்யார்? மேன்மையுறச் செய்வாரார்?*
*தேம்பியழும் தாய்மாரின் கண்ணீர் துடைப்பார் யார்?*
*வாழ்விழந்த கன்னியர்க்கு வழிகாட்ட வருவார் யார்?*

**கண. மகேஸ்வரன்,**
**மட்டக்களப்பு.**

# இதிகாச இலக்கியங்களில்
## மகளிர் மான்மியம்



**ஆரையூர் இளவல்**
ஆரையம் பதி

ஆன்மீக நெறி தழுவிய வீர காவியங்களையே இதிகாசம் எனக் கூறுவர்.

இதிகாசம் என்பதற்கு (இதி+ஹ+ஆஸம்) இதி, இப்படி, ஹ சத்தியமாக ஆஸம், நடந்தது. சத்தியமாக இப்படி நடந்தது என்றும் இலக்கியம் என்பதற்கு ''எடுத்துக்காட்டு'' என்றும் பொருள் கூறுவர்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளும் அவற்றிலுள்ள கிளைக்கதைகளும் பண்டைய வரலாற்றுச் சிறப்புடைய கதைகள் என்றும், அவை வெறும் புனை கதைகளல்லவென்றும் சத்தியமாக நடந்த கதைகள் என்றும் அறிகின்றோம்.

இராமர் இருந்தபோதே வால்மீகி இராமாயணத்தை எழுதினார். பஞ்சபாண்டவர்கள் இருந்தபோதே வியாசமுனிவர் கூட இருந்து பாரதத்தில் வரும் சம்பவங்களையெல்லாம் நேரில் பார்த்தார் என்றும் சொல்லப்படு கின்றது.

இராமாயணத்துக்கு முதல் நூல் வால்மீகி ராமாயணம்தான். எனினும் முதல் நூலைக் காட்டிலும் பெண்ணின் பெருமைக்கு ஏற்றம் கொடுத்துப் பாடியவர் கம்பர் பெருமான்.

தமிழரின் பண்பை, அவர் தம் கற்பொழுக்கத்தை இதிகாசத்தில் பூபடி அது என்றும் இளமையோடு பொலியச் செய்த பெருமை கம்பர் பெருமானுக்குண்டு.

இராமாயண காலத்தில் அயோத்தியில் வாழ்ந்த மகளிர் கற்பின் மாண்பை கம்பர் இப்படி வருணிக்கிறார்.

''பொற் பினின்றன பொலிவு பொய்யிலா
நிற் பினின்றன நீதி மாதரா
ரற் பினின்றன வறங்க ளனன்னவர்
கற் பினின்றன கால மாரியே''

நற்குணங்களும், உண்மை தவறாதிருக்க வேண்டும் என்னும் உறுதியுடையவர்களுமாகப் பெண்கள் இருந்தபடியால் அவர்களிடத்து அழகும் நீதி நியாயங்களும் செறிந்திருந்தன. ''அறத்துக்கே அன்பு சாக்பென்''என்பதால் ''அற்பினின்றன அறங்கள்'' என்றார். ''தெய்வம் தொழா அள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யென பெய்யுமழை'' என்றவாறு தேவரும் கற்புடைய மகளிர்க்கு குற்றேவல் புரிவராதலால்'' கற்பினின்றன காலமாரி''

பெண்கள் தம் கற்பின் திறத்தாலே அங்குமா தம்மும்மாரி பொழிந்தன என்றார்.

மேலும் அயோத்தி மாநகரிலுள்ள தாமரை பூத்த தடாகங்களையெல்லாம் அங்கு வாழ்ந்த மாந்தரின் கற்பின் மேன்மைக்கு எடுத்துக் காட்டாகத் தருகின்றார்.

''பண்டு வருங்குறி பகர்ந்து பாசறையிற்
பொருள் வயினிற் பிரிந்து போன
வண்டு தொடர் நறுந் தெரியலுயிரனைய
கொழு நர் வர மணித்தேரோடுங்
கண்டு மனங்களி சிறப்ப வொளி சிறந்து
மெலிவகலும் கற்பினார் போற்
புண்டரிக முகமலர வக மலர்ந்து
பொலிந்தன பூம் பொய்கை யெல்லாம்''

அரச பணியினால் அல்லது வேறு பணியினால் பொருள்படுவதற்காகத் தம்மைப் பிரிந்து சென்ற தம்முயிர்க் கணவர் தாங்கள் அணிந்திருக்கின்ற பூமாலைகளில் இருந்து தேனுண்ணும் பொருட்டு அவர்களைத் தொடர்ந்து வண்டுகள் பறந்து வர அவர்கள் மணித்தேர்களில் வருவதைக் கண்டு மன மகிழ்வால் தங்கணவர்களைப் பிரிந்திருந்தமையால் மெலிந்து போன தமது தோற்றம் மாறி பொலிவுடன் விளங்கும் கற்புடைய மகளிர் போல் சூரியனின் வரவு கண்ட தாமரைக் கொடிகளாகிய தலைவிமார் தமது மலர்களாகிய முகங்கள் மலர்ச்சி பெற அழகிய நீர்நிலைகளெல்லாம் மலர்ந்து சிரித்தன.

என்று உவமை நயங்காபடுகின்றார். கற்பின் கனலியாகிய சீதை தேவியைச் சிறையெடுத்தனால் சிறந்த சிவபக்தனான இராவணன் இராம பாணத்துக்கு இலக்காகின்றான்.

அசோக வனத்திலிருந்த சீதை பல்லக்கில் இராமனிடம் அழைத்து வரப்படுகின்றான். பல்லக்கிலிருந்து இறங்கித் தரையைப் பார்த்தவண்ணம் சீதாதேவி ராமரிடம் வருகின்றார். ''ஆரிய புத்திரனே!'' என்று சொல்லிவிம்மி விம்மி அழுகின்றாள். ''உன்னை அடைந்தது இப்போது எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. அபவாதம் என்கின்ற பகை இப்போது, உன்னை மூடி மறைத்திருக்கின்றது. இப்போது என்ன செய்ய பிரியப்படுகின்றாய்? நீ என்னை விட்டுத் தனியாகத்தான் இருக்க வேண்டும். கூடித்திரியனான ஒருவன் அயலான் இல்லத்தில் வெகுகாலம் இருந்த தன் மனைவியை எப்படித் திரும்பவும் அழைத்துக் கொள்வான்? உன்யோசனை என்ன?'' என்றான்.

சீதை ராமனைப் பார்த்தாள். அவன் கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது. ''தகாத வார்த்தைகள் பேசினீர்! இதயத்தைப் பிளங்கும் சொற்கள் இவை. பாமரர்கள் சொல்லக்கூடிய சொற்கள் இங்கே சக்கரவர்த்தி திருமகன் வாயிலிருந்து வந்தது. அரக்கன் என்னைப் பலாத்காரமாகப் பூமியோடு பெயர்த்தெடுத்துச் சென்றான் நாதனே! நான் எந்தக் குலத்தில் பிறந்தவள் என்பதை மறந்தீர். ஜனகராஜன் என் தந்தை' அவரால் பண்பாக வளர்க்கப்பட்ட பத்தினி நான். லக்ஷ்மணா! கட்டைகளைக் கொண்டு வருவாய்! தீவளர்ப்பாய்'' என்றாள்.

அப்போது ராமன் நடந்து கொண்ட விதத்தைப் பார்த்துச் கோபங் கொண்டிருந்த லக்ஷமணன் சீதையின் உத்தரவைக் கேட்டதும் ராமன் முகத்தைப் பார்த்தான்.

ராமன் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவன் மனம் இளகியதாகத் தெரியவில்லை. சீதை சொன்னபடியே லக்ஷமணன் தீ மூட்டினான். சீதாபிராட்டி தரையைப் பார்த்தவண்ணம் கணவனை வலம் செய்தாள் பின்பு ''தெய்வங்களே! உங்களை வணங்குகின்றேன். அக்கினியே! என் பரிசுத்தத்தை நீ அறிவாய். இதோ! உன்னுள் பிரவேசிக்கின்றேன்''. என்று சொல்லிக் கொழுந்துவிட்டெரியும் தீயிற் குதித்து விழுந்தாள்.

அப்போது அங்கே தேவர்கள் எல்லோரும் வந்து கூடி நின்றார்கள். பிரமன் பேசினான் ''நாராயணா! ராவணனைச் சங்காரம் செய்ய அவரித்த சர்வேசுவரனே! இவர் உம்முடைய பிராட்டி லக்ஷமியன்றோ'' என்றான் பிரமன். எல்லோரும் துதித்தவண்ணம் நின்றார்கள். அப்போது அங்கே ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

அக்கினிதேவன் எரியும் நெருப்பிலிருந்து கிளம்பி சீதையை அப்படியே வஸ்திரபூஷணாதாரியாக எடுத்து ராமனிடம் தந்தான்.

பிரமனைப் பார்த்து ராமன் சொன்னான், ''நான் தசரதன் மகன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் யார் எங்கிருந்து வந்தேன் என்பது உங்களுக்குத்தான் தெரியும். நீங்கள் தான் சொல்லவேண்டும்''. இவ்வாறு ராமன் பிரமனுக்குச் சொல்லிவிட்டுச் சீதையை அழைத்துக் கொண்டான்.

''சீதையே! உன் பழியற்ற புனித நிலை எனக்குத் தெரியாதா? இந்தப் பரீட்சையை நான் செய்தது மக்களின் திருப்திக்காகவே. மக்கள் சொல்லுவார்கள் அல்லவா ராமன் காமத்தால் மதியிழந்தான். உலக வழக்கத்துக்கு மாறுபட்டு நடந்துகொண்டான் என்று மக்கள் பேசுவார்களே என்று இப்படி உன்னைச் சோதனை செய்தேன்'' என்று ராமன் இருகரங்களையும் நீட்டி அவளை அழைத்துக் கொண்டான்.

சீதையின் மூலமாக மகளிர் மான்மியத்தை உலகறியச் செய்கின்றது இவ்வரலாறு.

இனி மகாபாரதத்தில் வரும் ஓர் காட்சியைக் காண்போம்.

பாண்டவர்கள் வனத்தில் வசித்த காலத்தில் ஒரு நாள் மார்க்கண்டேயர் தருமபுத்திரனுடன் கதைத்துக் கொண்டிருந்த போது தருமபுத்திரன் பெண்களின் மேலான குணங்களை புகழ்ந்து கொண்டிருந்தார். பெண்களின் கற்பையும் பொறுமையையும் விட உலகத்திற்கு வேறு என்ன பெருமை இருக்கின்றது கர்ப்பத்தைத் தங்கள் வயிற்றில் பத்துமாதம் காத்துத் தங்கள் உயிருக்கு வரும் ஆபத்துக்களையும் சொல்லொணா வேதனைகளையும் சுமந்து கொண்டு பெண்கள் குழந்தைகளைப் பெறுகின்றனர். அந்தக் குழந்தைகளை ஊண் உறக்கம் மறந்து அன்புடன் வளர்த்துக் குழந்தைகளின் நல்வாழ்வுக்காகச் சதா கவலைகளுடனும் பிரார்த்தனைகளுடனும் இருக்கின்றனர். கொடிய கணவரையடைந்த மனைவியர் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டாலும் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு கணவர்மாரிடம் பக்தியாகவே இருப்பதைப் பார்க்கின்றோம். இது எவ்வளவு அற்புதமான விசயம் என்றார். அதைக் கேட்ட மார்க்கண்டேயர் அவருக்கு ஒரு புண்ணிய கதையைச் சொல்லலானார்.

கௌசிகன் என்று ஓர் பிராமணன் இருந்தான். அவன் தபவலிமை மிக்கவன். ஒரு நாள் மரத்தடியில் இருந்து வேதம் ஓதிக்கொண்டிருந்தான். அப்போது அந்த மரத்தின் மேலிருந்து அவன் தலையில் பறவையின் எச்சம் விழுந்தது. மரக்கிளையில் ஒரு கொக்கு இருப்பதைப் பார்த்த பிராமணனுக்கு அதுதான் எச்சமிட்டது என்று அவனுக்குக் கோபம் உண்டாயிற்று. அவனுடைய கோபப் பார்வை பட்டதும் கொக்கு செத்துக் கீழே விழுந்தது.

ஒரு பாவமும் அறியாத பறவையைத் தனது கோபம் கொன்றுவிட்டதே என்று பிராமணன் துயரப்பட்டான். பிறகு வழக்கம் போல பிச்சை எடுக்கச் சென்றான்.

ஒர வீட்டின் வாயிலில் பிச்சைக்காக நின்றான். அப்போது அந்த வீட்டுக்காரன் மனைவி உள்ளே பாத்திரஞ் சுத்தஞ் செய்து கொண்டிருந்தாள். தன் வேலையை முடித்துவிட்டுத் தன்னைக் கவனிப்பான் என்று கௌசிகன் காத்துக் கொண்டிருந்தான், அப்போது அந்தப் பெண்ணின் கணவன் வெளியில் போயிருந்தவன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். வந்தவுடனே உள்ளே நுழைந்து பசியாக இருக்கின்றது என்றான், அதைக்கேட்ட மனைவி பிச்சைக்காக வெளியே காத்துக் கொண்டிருந்த பிராமணனைக் கவனிக்காமல் தண்ணீர் கொண்டு வந்து கணவனுடைய கால்களைச் சுத்தஞ்செய்து ஆசனத்தில் அமரச்செய்து அவனுக்கு ஆகாரம் கொண்டு வந்து வைத்த உபசரித்தாள்.

வாயிலில் பிராமணன் காத்துக் கொண்டிருந்தான். கணவன் சாப்பிட்டு முடிந்த பின் காத்திருந்த கௌசிகனுக்குப் பிச்சை எடுத்துக்கொண்டு வந்தார் ''தங்களை வெகு நேரம் காக்க வைத்தேன் மன்னிக்க வேண்டும்'' என்றார்.

கோபத்தினால் நெருப்பைப் போல் ஜொலித்துக் கொண்டிருந்த கௌசிகன் ''அம்மா! பல வீடுகளுக்குப் போக வேண்டியவனை இவ்வாறு அலட்சியம் பண்ணிக் காக்க வைத்தாய் இது தகாது'' என்றான்

பிராமணனை பார்த்து அப்பெண் கூறினாள் ''பிராமணோத்தமரே! பொறுத்துக் கொள்ள வேண்டும். என் புருஷனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். அதனால் நேரமாகிவிட்டது'' என்றான்.

''புருஷனைக் கவனிப்பது தருமமே. ஆனால் பிராமணர்களை அவமதிக்கக் கூடாது. நீ கர்வம் கொண்டவளாக இருக்கின்றாய்'' என்றான்.

''கோபிக்காதீர், கணவனை கவனித்துக் கொண்டிருந்த பெண்ணை ஏசக்கூடாது. நான் கொக்கல்ல. கணவனுக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருக்கும் பெண்ணை உம்முடைய கோபம் ஒன்றும் செய்ய இயலாது'' என்றான்.

கௌசிகன் அதிர்ச்சியடைந்தான், ''கொக்கைப்பற்றி இவளுக்கு எப்படித் தெரிந்தது'' என்று வியந்தான். அப்போது அப்பெண் மேலும் சொல்லலானாள் ''பெரியவரே! உமக்குத் தருமத்தின் ரகசியம் தெரியவில்லை மனிதனுக்குக் கோபம் சரீரத்துவகுள்ளேயிருக்கும் பெரும் பகையாகும். அதை நீர் அறியவில்லை. என் குற்றத்தை மன்னித்து நீர் மிதிலைக்குச் சென்று அவ்விடமிருக்கும் தருமவியாதனிடம் உபதேசம் பெறுவீராக'' என்றாள்.

பிராமணர் ஆச்சரியமடைந்தான் ''அம்மனி! உனக்கு மங்களம்! நீ என்னை நிந்திப்பது நன்மை என்றே கருதுகிறேன். நீ எல்லாப் பாக்கியமும் அடைவாயாக'' என்று அவளை வாழ்த்திவிட்டு மிதிலைக்குச் சென்றான்.

இராமாயண, மகாபாராத கதைகள் சொல்லும் வழக்கம். ஒவ்வொரு இந்துக் கோயில்களிலும் இருந்துள்ளன. அதற்காக தமிழ் மன்னர்கள் மானியம் கொடுத்து வந்திருப்பதாக வரலாறு மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இக்கதைகள் சமூகத்தில் அறநெறிகள் தழைத்தோங்குவதற்கும், பல மகான்கள் தோன்றுவதற்கும் காரணமாயிருந் துள்ளன.

*கஞ்சி குடித்திளைத்துங் கந்தை உடுத்தலுத்தும்*
*அஞ்சி அடிபணிந்தும் அல்லலுற்ற - இந்தியராம்*
*மாந்தர் சுதந்தரமாம் மாட்சியெய்தி வாழவைத்த*
*காந்தி கருணைக்கடல்!*

*சப்பாத்தாற் பல்லைத் தகர்த்த தருணத்துந்*
*துப்பாக்கியாற் கோட்சே சுட்டயர்ந்த - அப்போதுஞ்*
*சாந்த சொரூபனாய்த் தாக்கினர்க்குந் தண்ணளிசெய்*
*காந்தி கருணைக்கடல்!*

*அன்றமரர்க் காக அரண் ஆல காலத்தைத்*
*தின்று துயர்தீர்த்த செம்மைபோல் - என்றுமே*
*சாந்தி தழைத்திடவே சாவினையுந் தானேற்ற*
*காந்தி கருணைக்கடல்*

*கருணைக்க கடலான காந்திபெருமான்*
*உருவை உலகீர்! உளத்தில் - நிறுவி*
*அகிம்சை முதலாம் அவர்பண் புவகில்*
*முகிழ்க்க முயல்வோம் முனைந்து!*

அருனாசலம் சதானந்தன்.
வவுனியா

# ஒளவையாரின் குறும் பூ

அல்ஹாஜ் ஏ.என்.எம் ஷாஜஹான்



அரும்பாக வளரும் அருமைப் பிள்ளைகளுக்காக அழகான ஆத்திப் பூக்களைக் கோத்து அரவணிந்தோனின் அரும் பெயர் விளங்க 'ஆத்தி சூடி' எனும் அறிவுப்பூக் கோவையை தமிழன்னைக்கு ''அமுதினினிய சொற்கிழ வியான'' ஒளவைப் பாட்டி அணிவித்தமை பெரும்பேறாகும்.

பாலர்க்கு மட்டுமன்றி பாரிலுள்ள பல தரப்பட்ட யாவர்க்கும் பண்பான படிப்பினைகளை பகன்று நிற்பது ஆத்திசூடி.

இரண்டு மூன்று சொல்லைக் கொண்ட சின்னச் சின்ன செய்யுட்களிலே சிறந்த ஆழமான கருத்துக்களைப் புகுத்தி சிந்தனைக்கு விருந்தளித்த செந்தமிழ் மூதாட்டி தனக்காக நெல்லிக் கனியை விருந்தாகப் பெற்று நெடுங்காலம் வாழ்ந்த சிரஞ்சீவியாவார்.

வானமளாவிய விரிந்த வடிவம் வாமன குறு வடிவாகி வையகத்துக்கு வாழ்வளித்த வைகுந்த வாசனின் உவமையாகி துளை செய்து ஏழு கடலைப் புகுத்திய கடுகுக்கு ஒப்பாகி, குறுகத் தறித்த குறளாக - ஈரடி வெண்பாவாக விளங்கும் திருவள்ளுவதேவரின் திருக்குறளை நாம் சிறப்பித்து விதைந்து ரைக்கின்றோம்.

ஆனால் இரண்டு மூன்று சொல்லைக் கொண்ட ஒளவையாரின் ஆத்திசூடியை என்னவென்று உவமை நோக்கி உரைக்க முடியும். சிற்றெறும்புருவில் ஞானங்களை அடக்கிய பேருருவாக அதைக் கூறலாமல்லவா!

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூட்டல் எனும் நான்கு படி முறைகளில் ஞானத்தை வகைப்படுத்துவர். இந்நான்கு வகை ஞானத்தையும் நல்க வல்லது ஆத்திசூடியில் கோக்கப்பட்டுள்ள நறும் பூக்கள் என்பதில் ஐயமில்லை.

அன்று படித்தற்காகப் பள்ளியில் பாதத்தைப் பதித்த போது முதலாம் வகுப்பிலேயே ஆசிரியர்கள் பாலர்க்கு அள்ளி வழங்கிய இனிப்புருண்டைகள் ஆத்திசூடிச் செய்யுட்களே.

அறஞ்செயவிரும்பு எனத் தொடங்கி அகரவரிசையிலே அடுக்கடுக்காக மந்திரமாக செய்யுட்களை பாலர்கள் இனிப்பாகவன்றி கசப்பாகத்தான் சுவைத்தனர்.

நோய்களைக் களைய கசப்பான மருந்தை உட்கொள்ளாமலிருக்க முடியுமா! அக்கசப்பு மருந்துகளே பின்பு இன்பத்தைத் தருகின்றன. உளநோய்களுக்கு ஆத்திசூடி வில்லைகள் அற்புத மருந்து.

பிஞ்சு வயதிலே ஆசிரியருக்கு அஞ்சி நெட்டுருச் செய்து விழுங்கிய வில்லைகள் முற்றிய வயதிலே மீண்டும் அசைபோட வைத்து, அவற்றிலே ஆழ்ந்து - அடைந்து - புதைந்து கிடக்கும் அறிவூற்றுக்களை அள்ளிப் பருகுதற்கு உதவி செய்கின்றன.

ஆனால் இன்று புதிய கற்பித்தல் என்னும் கல்வித் தத்துவங்கள் இந்நிலைமையை மாற்றி மனனஞ் செய்யும் மனோ மகாசக்திக்கு வலை விரித்துள்ளன.

பெருமை பெற்ற ஆத்திசூடியிலுள்ள வாடாத குறும் பூக்களிலே எடுத்துக் காட்டாக ஒரு குறும்பூவை உங்கள் முன் மலரச் செய்து மணம் வீச முயற்சிக்கின்றேன்.

தமிழ் மொழியிலே சொல்லுக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கள் இலக்கணத்தில் சொல்லப்படுகின்றன. மற்றவை சொல்லுக்கு முதலில் இடம் பெறாதென்பது மரபு ஙகரம் மொழிக்கு முதலில் வரும் எழுத்தாக நன்னூல் கூறினும் ஆறுமுகநாவலர் ஐயா அவர்கள் விருத்தியுரையிலே ''......தனித்துவரும் தன்மையதன்றி, முடவன் கோலூன்றி வந்தாற் போலச் சுட்டு வினாவாகிய இடைச் சொற்களை முன்னிட்டு வருதலான்.......'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இங்கே ஔவையார் அவர்கள் கோலூன்றி வரும் முடவனாகக் கருதிய ஙகரத்தை மொழிக்கு முதலிலே கையாண்டு வீறு நடை போடும் குறையற்ற மனிதனாகவே படைத்து விட்டார்.

ஔவையார் ஆத்திசூடி செய்யுட்களை அகர வரிசைப்படி ஆக்க விரும்பினார். அகர வரிசையிலே பாடி வரும் போது ஙகரத்தை எங்ஙனம் சொல்லின் முதலெழுத்தாகப் பாவிக்க முடியும் என்ற சந்தேகத்துக்கிடமின்றி ஙகரத்தை முதலெழுத்தாகக் கொண்டு செய்யுளை அமைத்து ஒரு சாதனை புரிந்து விட்டார்.

செவ்வேளிடம் செந்தமிழ் பெற்ற செவ்வியர் அல்லவா எங்கள் பாட்டியார். அவரின் வாயிலிருந்து வெடித்துக் கிளம்பியது ''ஙப்போல் வளை'' என மெல்லின நாதம்.

இவ்வடியை ஆழமாகக் கேட்கும் போது, பின்பு சிந்திக்கும் போது, அதன் பின்பு தெளியும் போது ஞானத்தின் எல்லைக்கே நாம் போய் விடுவோம்.

தமிழ் மொழியிலே மொத்தமாக இருநூற்று நாற்பத்தேழு எழுத்துண்டு. அவற்றில் உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் தனித்தனி இணைந்து இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்தை உருவாக்குகின்றன. இவைகளில் சில தமிழ் மொழிக்குப் பயன்படுவதில்லை.

குறிப்பாக ஙகர வரிசையில் வரும் 'ங' என்ற எழுத்தைத் தவிர, 'ஙா' விலிருந்து 'ஙௌ' வரையிலுள்ள ஏனைய பதினொரு எழுத்தும் தமிழ் மொழி நடைக்கு உதவியாக இல்லாது பயனற்று நிற்கின்றது.

அதற்காக குறித்த பதினொரு எழுத்தும் தமிழ் அரிச்சுவடியிலிருந்து நீக்கப்படவில்லை. அவைகள் ஏதோ நற்பயன் 'ங' என்ற செல்வாக்குடைய எழுத்தோடு சேர்ந்த அதிட்டத்தினால் பிரயோசனமில்லாவிடினும் தமிழ் மொழி நிலைக்கும் கால மெல்லாம் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

உபயோகமில்லாத தம் மக்களையும் ஒதுக்கித்தள்ளாது தம்முன் அணைத்து ஆதரிப்பது தமிழ் மரபின் தலை

சிறந்த பண்பாக ஙகரம் காட்டிக் கொண்டிருகின்றது.

ஆதியில் தமிழ்மொழி ஒலி வடிவில் வழங்கி பின்பு வரி வடிவிற்கு மாறியபோது அரிச்சுவடியை ஆக்கிய அறிஞர்கள் உதவாத எழுத்துக்களை உதறித் தள்ளவில்லை.

ஒருமைப்பாடே அழகுக்கு அடி நாதமாகும். அலங்காரச் சித்திரங்கள் அவ்வாறே அமைந்து அழகளிக்கின்றன. அதனாலேதானோ என்னவோ முருகை இரசித்த மூதறிஞர்கள் தமிழின் அலங்காரத்தை - ஒருமைப்பாட்டை குலைக்க முயலவில்லை. அவ்வடிப்படையில் ஏனைய பதினேழு வரிசையின் ஒருமைப்பாடு மாறாமல் ஙகர வரிசையையும் வைத்து தமிழை அலங்கரித்து விட்டார்கள். அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களில் ஒன்றைக் கூட அகற்றி விட்டாலும் தமிழ் வரிவடிவின் அழகு, ஒழுங்கு கெட்டுவிடும். எனவே அரிச்சுவடி ஆக்கியோர் அவசியமற்ற அட்சரங்களையும் அடக்கி அலங்காரஞ் செய்ததோடு அகிலத்தாருக்கும் அழகிய அரிய எடுத்துக் காட்டையும் அமைத்து விட்டார்கள்.

இவற்றையெல்லாம் ஆய்ந்த எம் மூதாட்டியாருக்கு அழகான தத்துவங்களிலொன்று உதயமானதில் வியப்பில்லை. 'ஙப் போல் வளை' என்ற ஓங்கார ஓசையிட்டு ஒளித்துக்கிடந்த ஞானத்தை அள்ளித் தந்து விட்டார்.

ஙப்போல்வளை என்ற அடியின் பொருளை நோக்குவோம். ஙகரம் என்ற எழுத்தைப் போல உன் சுற்றத்தவரை ஆதரித்துத் தழுவிக் கொண்டிரு என்பதே மேலெழுந்த விளக்கமாகும். இன்னும் விரித்து நோக்கினால் தான் மட்டும் பிரயோசனமுள்ள எழுத்தாக இருந்து பிரயோசனமற்ற தன் இனத்தாராகிய ஏனைய எழுத்துக்களைக் கைவிடாமல் தழுவி ஙகரம் பாதுகாத்துக் கொண்டிருப்பதைப் போன்று நீயும் பயனுள்ள படைப்பாக இருப்பின் உன்னைச் சார்ந்துள்ள சுற்றத்தவர்களையும் ஆதரித்துத் தழுவி வாழச் செய் என்ற பொருள் விளங்கும்.

ஒரு குடும்பத்தில் பியோசனமான ஒருவர் இருந்து விட்டால் அவரின் பெயரைக் கொண்டு அவரின் முழுக் குடும்பமுமே பெருமைப்படுவதைப் பார்க்கிறோம். அத்தோடன்றி இன்னாரின் குடும்பம் எனக் கூறி அவரின் முழுப் பரம்பரையுமே சிறப்பதும் கண்கூடு.

ஒரு குடும்பத்தில் ஒருவராவது பிரபலமாகதவரையில் அக்குடும்பத்தின் பெயர், சிறப்பு மங்கிப்போவதை நாம் காண்கிறோம்.

அதுபோலவே ஙகரம் தமிழ்மொழிக்கு தனது பிரயோசனத்தை நல்கி, அதன் மூலம் தன்னைப் பின்பற்றி வருகின்ற சுற்றத்தவர்களின் பெயர்களையும் உலகில் ஒலிக்க வைக்கின்றதைப் பார்க்கிறோம். இது ஒரு தத்துவம்.

சுற்றம் என்றால் எது? கொள்ளலில் கொடுத்தலில் கூடியோர் சுற்றம் என்று அகத்தியம் சொல்லும். சுற்றியிருப்பவர் சுற்றத்தவர் ஆவர்.

சுற்றத்திற்கழகு சூழ விருத்தல்
சுற்றமற்றவரை சுக மற்றவர்
இனம் இனத்தைக் காக்கும்

என்பன போன்றவை அநுபவ மொழிகள்.

ஒவ்வொருவரும் தம் சுற்றத்தவரைத் தாங்கித்தழுவி நிற்றல் மனிதப் பண்பாகும்.

இனம், உறவு, கிளை, சுற்றம் என்பன ஒரு பொருட்சொற்களாகும்.
கிளை என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம்.

ஒரு முழு மரத்தை நோக்குங்கள் அது எவ்வளவு அழகாக அமைந்திருக்கின்றது! இலைகளும், பூக்களும், காய்களும், கவர்களும் சூழ்ந்த கிளைகளைக் கொண்டு அம்மரம் சோபிக்கின்றது. அம்மரத்தின் கிளைகளை வெட்டி விடுங்கள். அப்போது அது மரமாகவன்றி ஒரு மொட்டைத் தனிக்கம்பமாகத்தான் அலங்கோலமாகத் தோற்றமளிக் கும்; அதன் அழகு அகன்றுவிடும். கிளைகளுள்ள மரமே மரம்.

அதுபோலவே நகரத்தின் கிளைகளை சுற்றங்களை அகற்றி விட்டு நகரத்தை மட்டும் அரிச்சுவடியில் வைத்துப் பார்ப்பது தமிழன்னையின் எழிலைக்குலைத்து விடுமல்லவா!

அரிச்சுவடியைப் படிக்கும் பாலர்கள் அகரத்திலிருந்து ஆரம்பித்து எழுத்துக்களின் பெயர்களைச் சொல்லிக் கொண்டே சென்று ''ஙானா'' என்ற பெயரைச் சொல்லி ''ஙாவன்னா'' 'ஙீனா ஙீயன்னா' என்று ஏனைய பெயர்களையும் சொல்லாமல் விடுவதில்லை. ஙகரத்தின் பெருமையினால் ஙகரத்தின் பிரயோசனமற்ற கிளைகளும் பெயர் விளங்குகின்றன. அதன் மூலம் ஙகரம் என்ற மரத்துக்கு. தன் கிளைகள் அழகூட்டுகின்றன. அக்கிளைகள் பிரயோசனமற்றவை என்பதற்காக அவற்றைத் தறித்தெறிந்து விட்டு அழகு பார்க்கலாமா! அதனாலேதான் சுற்றத்தார் என்பதற்கு கிளையோர் என்ற பெயரும் உருவாகியது.

எறும்பு, காகம் போன்ற சிற்றறிவுயிர்களே தன் சுற்றம் தழுவி சூழவிருந்து உண்டு கூட்டாக வாழ்ந்து மகிழ்வதைக் காண்கின்றோம். கூட்டு வாழ்க்கையின் மகத்துவத்தை அவ்வுயிர்கள் எமக்கு சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன. ''ஙப்போல் வளை'' என்ற வாசகமும் கூட்டு வாழ்க்கையை வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே யுள'

என்பது திருவாக்கு காக்கையின் குணங்களைக் கூறவந்த அறிஞர்,

''காலை எழுந்திருத்தல் காணாமலே புணர்தல்
மாலை குளித்து மனை புகுதல் - சால
உற்றாரோடுண்ணல் உறவாடலிவ்வாறும்
''கற்றாயோ காக்கைக் குணம்''

எனக் கூறினர்.

''மிக்க வெஞ்சமரிடை வெருவியோடுநர்
ஒக்கல் துன்புறத் தனியிருந்து வாழ்குநர்
புக்கு வேட்டகத்தினிண்ணும் புன்மையோர்.
மக்களுட் பதடியென்றுரைக்கும் வையமே''

என்று நைடதம் நவிலும்.

ஆகவே ஒருவர் தனக்குள்ள செல்வத்தை, சம்பத்தை, செல்வாக்கை தன் சுற்றம், கிளைகளுக்கும் பிரயோசனமடையச் செய்வது ஒரு தமிழ்ப் பண்பாடு என்பதை 'ஙகரம்' எமக்குப் போதிக்கின்றது.

''தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கிறாள், தம்பி கோதானம் பண்ணுகிறான்'' என்றவாறு தம் சுற்றத்தாரைத் தரித்திரத்தில் தவிக்கவிட்டு தரும சத்திரம் கட்டும் மடமையுள்ள மமதைச் செல்வாக்கை ஙகரம் நமக்கு அறிவுறுத்தவில்லை.

எனவே 'ஙப்போல் வளை'.

# மொழி பெயர்ப்பு

## - பிரயோக மொழியியலின் சமூகவியற்கூறு

ராஜ ஸ்ரீகாந்தன்

சிந்திக்கும் திறன்வாய்ந்த உயிருருவான மனித இனத்தின் அதியற்புதமான கண்டுபிடிப்பே மொழியாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மனிதர்கள் தங்கள் கருத்துப் பரிமாற்ற ஊடகமாக வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மொழிகளை உருவாக்கிப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். உலக நாகரீகத்தின் தொட்டில்களான ஹரப்பா மொஹஞ்சதாரோ, யூபிரட்டீஸ் ரைக்கிறீஸ், நைல் நதிக்கரையோரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் பிரயோக மொழிகளின் ஆரம்பகாலப் பதிவுகளை அறிந்துகொள்வதற்குப் பெருந்துணை புரிந்தன. மனித இனத்தின் இயல்பான இடப்பெயர்ச்சிகளும் பிரயாணங்களும் நாகரீக வளர்ச்சிகளும் இன்னபிற காரணிகளும் வெவ்வேறு மொழிகளைப் பேசிய மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கான தேவைப் பாடுகளை ஏற்படுத்தின. இக்காலப்பகுதியிலேயே மொழிபெயர்ப்பு ஜனனித்தது.

காலவோட்டத்தின் மாற்றங்களை ஏற்கமறுத்த,,நெகிழ்ச்சியற்ற புராதன மொழிகளான லற்றின், கிறீக், உறிப்றூ, சமஸ்கிருதம், பாளி போன்றவை வழக்கொழிந்து போயின. இருப்பினும் இம்மொழிகள் வழி மனித குலத்திற்குக் கிடைத்த பொக்கிஷங்களையும் ஏனைய பெறுமானங்களையும் இவற்றின் அயல் மொழிகள் பல உள்வாங்கிக்கொண்டன. வழக்கொழிந்துபோன புராதன ஆரிய மொழியான சமஸ்கிருதத்திலிருந்து நல்ல பல பெறுமானங்களை புராதன திராவிட மொழியான தமிழ் சுவீகரித்துக்கொண்டு இன்றும் இளமையுடனும் செழுமையுடனும் திகழ்வது இதற்கு நல்லதொரு சான்றாகும். இவ்வாறே லத்தீன், கிறீக் ஆகிய புராதன மொழிகளிலிருந்து பல பெறுமானங்களை ஆங்கிலம் சுவீகரித்துக்கொண்டதனையும் சான்றாகக் கூறலாம். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக இருந்தது மொழிபெயர்ப் பேயாகும்.

### மொழிபெயர்ப்பு

ஒரு மொழியில் கூறப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் பிறிதொரு மொழிக்கு மாற்றியமைக்கும் பிரயோக மொழியியற் செயற்பாடே மொழி பெயர்ப்பாகும். இதன்போது மூல மொழியிற் காணப்படும் பொருள், சுவை, தன்மை போன்றவை மாறாதிருக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பில் சிறப்பாகக் கவனிக்கப்படவேண்டியது மொழியினதும் மொழி நடையினதும் தன்மைகள் என்று ஒரு சாரார் வலியுறுத்திவருகின்றனர். ஆனால் இதற்கு மாறாக, கருத்துக்களின் தன்மைகளே சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டுமென்று பிறிதொரு சாரார் வலியுறுத்துகின்றனர். ஆனால் பொதுவாக, மொழிபெயர்ப்பு என்றால் மூல

மொழியிலுள்ள சொற்களை பிறிதொரு மொழியிலுள்ள சொற்களாக மாற்றுவது என்ற கருத்தே மிகப்பரவலாக நிலவிவருகிறது. இது சரியானதாக இருந்தால் இருமொழி அகராதியொன்றை வைத்துக்கொண்டு எல்லோருமே மொழிபெயர்ப்பாளர்களாகி விடலாம்.

இரு மொழி அகராதியில் ஒரு மொழியின் சொற்களும் அதற்கு இணையான மாற்றுமொழிச் சொற்களும் தரப்பட்டிருக்கும். ஆனால் அச்சொற்களின் பின்னணியை, தன்மைகளை வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு வசன அமைப்புக்களில் அவை புலப்படுத்தும் அர்த்தங்களை இருமொழி அகராதி எடுத்துக்கூறாது.

உலகிலுள்ள எல்லா மொழிகளும் அவற்றைப் பேசும் மக்களின் கலாசாரக் கூறுகளையும், அம்மக்களின் வாழிடப் பிரதேசங்களின் தன்மைகளையும் உட்செறிவாகக் கொண்டுள்ளன. எனவே தாம் கையாளும் மொழிகளின் இந்த அம்சங்களையும் மொழிபெயர்ப்பாளர்கள் அறிந்துகொள்வது அத்தியாவசியமாக உள்ளது.

ஒத்த கலாசாரத்தையும் ஒரே வாழிடப் பிரதேசங்களையும் கொண்டுள்ள மொழிகளுக்கிடையில் செய்யப்படும் மொழிபெயர்ப்புகள் முற்றிலும் இயல்பானவையாகவும் புரிந்துகொள்ள இலகுவானவையாகவும் உள்ளன. இந்திய மொழிகளுக்கிடையிலான மொழிபெயர்ப்புகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். கா.ஸ்ரீ-ஸ்ரீ.யின் தமிழாக்கத்தில் வி.ஸ. காண்டேகரின் நாவல்களை வாசிக்கும் போது நாம் பிறமொழி நாவலொன்றைப் படிக்கிறோமென்ற உணர்வு பெரும்பாலும் ஏற்படுவதில்லை. ஆனால் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களில் ஒன்றாகிய மார்க்ஸிம் கோர்க்கியின் ''தாய்'' நாவலை வாசிக்கும்போது பிறமொழி நாவலொன்றைப் படிக்கின்றொமென்ற உணர்வு வரிக்குவரி ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாதுள்ளது. வேறுபட்ட கலாசாரங்களையும் வாழிடங்களையும் கொண்ட மக்கள் பேசும் மொழிகளுக்கிடையில் மொழிபெயர்ப்புகளைச் செய்யும் போது இந்நிலை ஏற்படவே செய்யும்.

### மொழிபெயர்ப்பின் பயன்பாடுகள்

மொழிபெயர்ப்பால் ஒரு மொழியிலுள்ள செய்திகளும் கருத்துக்களும் வேறு மொழிகளுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. இதன் மூலம் மொழிப் பயன்பாடும் சமுதாயப் பயன்பாடும் அதிகமாகின்றது. அறிவு வளர்ச்சிக்கும் வெவ்வேறு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுகள் வலுப்படுவதற்கும் மொழிபெயர்ப்புகள் பெரிதும் துணைபுரிகின்றன.

தாய்மொழி அறிவினை மட்டுமே கொண்டுள்ள ஒருவர் பிறமொழிகளில் படைக்கப்பட்ட உலக மகா காவியங்களையும் ஏனைய கலை, இலக்கிய சிருஷ்டிகளையும் தனது மொழியிற் படித்து மகிழ்வதற்கு மொழிபெயர்ப்புகள் மட்டுமே வழிசமைத்துக்கொடுத்துள்ளன.

''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்''

என்று புதுக்கவிஞர் பாரதி பாட்டிசைத்துச் சென்றமை இங்கு மனங்கொள்ளத் தக்கது.

### மொழிபெயர்ப்பின் வளர்ச்சிப் போக்குகள்

பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களின் ராஜ்யத்துவமும் அதிகாரத்துவமுமே அம்மொழிகளின் வளர்ச்சிக்கும் பரம்பலுக்கும் பிரதான காரணிகளாக இருந்துள்ளமையை வரலாறு நமக்குப் புலப்படுத்தியுள்ளது. பல்வேறு இனங்களின் பெருந்தொகையிலான புலப்பெயர்ப்புகளை மொழிப்பரம்பலுக்கும் மொழி வளர்ச்சிக்கும் நுண்துணைக்காரணிகளாகக் குறிப்பிடலாம். இரண்டாவது உலக மாக யுத்த காலத்திலிருந்து இதைவிட நீண்டகாலம் நீடித்துச் செல்லும் இலங்கையின் இனப்பிரச்சினைப் போராட்டம் வரை இதற்குச் சான்றாதாரங்கள் உள்ளன. இருப்பினும் இதனை நிரந்தரமான, ஆரோக்கியமான வளர்ச்சிப் போக்காகக் கொள்ளலாமா என்பது ஆய்விற்குரியதாகும்.

பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அவர்களின் மொழியாகிய ஆங்கிலத்தை அகில உலக தொடர்பாடல் மொழி அந்தஸ்த்திற்கு உயர்த்தியது. ஆங்கில மொழியின் நெகிழ்திறனும் பிறமொழிச் சொற்களை இலகுவாகத் தன்வயமாக்கிக்கொள்ளும் தன்மையும் இதற்குத் துணைகளாக நின்றன.

ஆங்கிலேயர்கள் தமது குடியேற்றநாடுகளில் சிறந்த பரிபாலனத்தை மேற்கொள்வதற்காகவும் தமது மதமாகிய கிறீஸ்த்தவத்தினை இந்நாடுகளில் பரப்புவதற்காகவும் இந்நாடுகளின் சுதேச மொழிகளைப் பயின்றார்கள். ஆங்கிலேயர்கள் வழங்கிய அற்ப சலுகைகளுக்காகவும் தமது சொந்த மதங்கள் தமக்கிழைத்த கொடுமைகளுக்காவும் (உம்: சைவசமயம்) குடியேற்ற நாடுகளின் சுதேசிகள் சிலர் கிறீஸ்த்தவ சமயத்தைத் தழுவினார்கள். உத்தியோக மோகங்கொண்ட வேறுசிலரும் தமது கல்வியறிவை விருத்திசெய்யத் தலைப்பட்ட இன்னுஞ் சிலரும் ஆங்கில மொழியை விருப்புடன் கற்கத் தொடங்கினார்கள். இதேபோன்று ஆங்கிலேய மதகுருமார்கள் மதப் பிரச்சார நோக்கத்திற்காக குடியேற்ற நாடுகளின் சுதேச மொழிகளை ஆர்வத்துடன் கற்றறிந்தார்கள். கிறீஸ்த்தவ போதனைகளை இச்சுதேச மொழிகளில் மொழிபெயர்த்து துண்டுப்பிரசுரங்களாக வெளியிட்டார்கள்.

இக்காலகட்டத்திலேயே மொழிபெயர்ப்புகள் மிகப்பரவலாக வளர்ச்சியடைந்தன. இன்று உலகின் மிக அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் கிறீஸ்த்தவ திருமறையாகிய ''விவிலிய'' (பைபிள்) நூலேயாகுமென்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

### மொழிபெயர்ப்பின் புதிய தரிசனம்

அதிகாரத்தின் மொழியாகக் கோலோச்சிய ஆங்கிலம் ''அறிவின் மொழியாகும்,'' என்ற மாயையினை மாபெரும் ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சி 1917 ஆம் ஆண்டில் தகர்த்தெறிந்தது. விளாதிமிர் இலியெச் லெனினால் தோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகாலம் மட்டுமே ஜீவிதம் பெற்று, மிகையில் கொர்பச்சோவின் ''பெரஸ்ரொய்கா'' (மறுகட்டமைப்பு) ''கிளாஸ்நொஸ்ற்'' (பகிரங்கத்துவம்) ஆகிய சித்தாந்தங்களினால் சிதைக்கப்பட்ட சோவியத் ஒன்றிய நாடு பிரமிக்கத்தக்க சாத னைகள் பலவற்றை மனிதகுலத்திற்குத் தந்தது. அறிவின் மொழியாக உருக்காட்டப்பட்ட ஆங்கிலத்தின் அரிச்சுவடியே அறியாதசோவியத் விஞ்ஞானிகள் மிகக்குறுகிய காலத்தில் அறிவியலின் உச்சங்களைத் தொட்டார்கள்.

''சுயமொழிப்பாட போதனைகள் ஒரு மனிதனின் அறிவை அதிவிரைவில் விருத்திசெய்கின்றன. மொழியியலாளர். பிறமொழிகளைக் கற்று அவற்றிலுள்ள நல்லவற்றை, நமக்குத் தேவையானவற்றை மொழிபெயர்த்து சுயமொழிகளை விருத்திசெய்யும் பணியை இடையறாத் தொடர்ச்சியுடன் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சோவியத் பிரஜையும் தனது சுயமொழியினையும், சோவியத் நாட்டின் உத்தியோக மொழியினையும் விருப்பத்திற்குரிய பிறிதொரு மொழியினையும் கற்றறிந்திருப்பது கட்டாயமாகும். மும்மொழி அறிவிற்கு மேலதிகமாக வேறு மொழிகளையும் கற்க விரும்பும் யாவருக்கும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற விளாதிமிர் இலியிச் லெனின் சோவியத்தின் மொழிக்கொள்கையினைப் பிரகடனஞ் செய்யும் போது ஆணையிட்டார்.

''அழிவென்பது ஆக்கத்திற்கே'' என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டுள்ள ஜப்பான் தனது சுயமொழிப் போதனைகளால் உருவாக்கிய விஞ்ஞானிகள் மூலமாக இன்று உலகினையே ஆட்டிவைக்கும் எலக்ரோனிக்ஸ் விஞ்ஞானத்தில் உச்ச நிலையை வகிக்கிறது. மோட்டார் வாகன உற்பத்தியிலும் கனரக நிர்மாணத் தொழிற்றுறையிலும் தன் மீது அணுகுண்டு பொழிந்த அமெரிக்காவையே அடக்கிவைத்திருக்கிறது.

மொழிபெயர்ப்புகள் மூலம் வலுவூட்டப்பட்ட சுயமொழிப்போதனைகளின் பலாபலன்கள் பிரமிப்பூட்டுகின்ற அதே நேரத்தில் நமது நாட்டில் குறுகிய அரசியல் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட சுயமொழிப் போதனைகளின் விளைவுகள் இன்றும் இதயத்தை நோகவைக்கின்றன.

சோவியத்தின் மொழிக்கொள்கைப் பிரகடனத்தைத் தொடர்ந்து எழுத்து வடிவமற்ற சுமார் 25 சோவியத் மொழிகளுக்கு எழுத்துவடிவம் வழங்கப்பட்டது. மொழி பெயர்ப்புச் செயற்பாடுகள் மிகப் பிரமாண்டமான, விசாலமான அளவில் மேற்கொள்ளப்பட்டன. உலகின் மூலைமுடுக்குகளிலிருந்த மொழிகளையெல்லாம் கற்றறிவதற்கும் அவற்றிலுள்ள சிறந்த ஆக்கங்களை உலக மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. உயர்கல்வி நிலையங்கள் தோறும் மொழியியல் ஆய்வுகூடங்கள் தோற்றுவிக்கப் பட்டன.

நமது கே.கணேஷ், சுபைர் இளங்கீரன், கே.டானியல், அகஸ்தியர், டொமினிக் ஜீவா, கே.கணேசலிங்கம் போன்ற எழுத்தாளர்கள் உட்பட உலகின் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பலரின் ஆதர்சப் படைப்பாளியாக மார்க்ஸிம் கோர்க்கி திகழ்வதற்கும் சோவியத் நாட்டின் உக்ரேன் குடியரசிற் பிறந்த விதாலி பூர்னிக்கா பாரதியின் பாடல்களை ருஷ்ய மொழியிற் படித்த பின்னர் தமிழ்கற்று தமிழ்மொழியிற் கலாநிதிப்பட்டம் பெற்றுத் தமிழாய்வுகளைச் செய்தமைக்கும், தமிழ்க்கவிஞன் பாரதியை உலக மகா கவிஞனாக்கி சோவியத் நாட்டில் நூற்றாண்டு விழா எடுத்து ''மகாகவி பாரதி'' என்ற ஆய்வு நூலினைத் தமிழிலும் ஏனைய பல சோவியத் மொழிகளிலும் வெளியிட்டமைக்கும் மொழி பெயர்ப்புச் செயற்பாடுகளே ஆதாரமாக உள்ளன.

உலகின் சிறிய தீவுகளில் ஒன்றான இலங்கையில் வாழும் ஓர் இனத்தவரால் மட்டும் பேசப்படும் மொழியாகிய சிங்களமொழியிற்கூட பெருமளவு சோவியத் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டமையையும் மாட்டின் விக்கிரம சிங்ஹ, குணசேன வித்தான உட்பட பல சிங்கள எழுத்தாளர்களின் சிருஷ்டிகள் சோவியத் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமையையும் நோக்கும்போது ஏனைய மொழிகளில் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்புகளின் விஸ்த்தாரத்தினை இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

உலக நாடுகளில் இலங்கையிற்தான் முதன்முறையாக பல்கலைக்கழகம் வரை தமிழ் போதனாமொழியாக் கப்பட்டது. ஆனால் இதற்கு முன்னரே சோவியத் நாட்டிலிருந்து பாலர் முதல் பட்டதாரிகள் வரை உபயோகிப்பதற்கேற்ற அறிவியல், அரசறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல், இலத்துரோணிக்கியல் போன்ற பல்துறை நூல்கள் பொருத்தமான கலைச்சொற்களுடன் தமிழில் வெளியிடப்பட்டிருந்தன. இம்மொழிபெயர்ப்பு நூல்கள் யாவும் மிகச் சிறந்தமுறையில் அச்சிடப்பட்டு மிகமிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன.

பிரமாண்டமான அளவில் மொழிபெயர்ப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட, மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்ட பொற்காலமொன்று அஸ்த்தமித்து விட்டது.

இன்றைய சந்தைப்பொருளாதார உலகில் இலக்கிய சிருஷ்டிகள்கூட வர்த்தக வாய்ப்பாடுகளிற் பொருத்தப்பட்டு நுகர்பொருளாக்கப்பட்டுவருகின்றன. ரூபா சதங்களிலும் ஸ்ரேலிங் பவுண்களிலும் டொலர்களிலும் லாபந்தரும் முயற்சிகளில் மட்டுந்தான் சந்தைப் பொருளாதார உலகினர் அக்கறைகொள்ளுவார்கள். மானுட விழுமியங்களும் பெறுமானங்களும் சந்தைப்பொருளாதாரப் பண்டங்களல்ல.

மொழிபெயர்ப்பின் பொற்காலமொன்று மீண்டும் உதயமாகட்டும்! மொழிபெயர்ப்புகள் மானுட இனத்தவர்களுக்கிடையில் புரிந்துணர்வுகளை மேம்படுத்தட்டும்! மனிதகுலம் சிறந்தோங்கட்டும்!

# “குறள் கூறும் இல்வாழ்வானின் பண்புகள்”

**சி.என். துரைராஜா,**
திருகோணமலை

தெய்வத்துக்கென எத்தனையோ அருங்குணங்கள் சொல்லப்படுகின்றன - உலகில் அற நெறியில் நின்று வாழ்கின்றவன், வானத்தில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய்வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என வான்புகழ் வள்ளுவன் குறள் வழியில் கூறுகின்றார்.

மனித வாழ்க்கையில் மிக ஏற்றிப் போற்றிப் புகழப்படுவது இல்வாழ்க்கை வாழ்வின் தத்துவமாக எமக்கு வழிகாட்டுவது அறம். அறத்தின் பால் ஒருவன் ஒழுகுவானேயானால் அவன் தெய்வ நிலையைப் பெறுகின்றான்.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என மனிதப் பண்பைத் தெட்ட தெளிவாக கூறுகின்றார் பொய்யாமொழிப் புலவர் வாழ்வின் பண்புகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

மனிதன் இந்த மண்ணில் குழந்தை வடிவில் பிறக்கின்றான் அவன் மனிதவடிவ மெடுப்பதே அரிது அரிது மானிடராகப் பிறப்பதே அரிது என ஔவை மூதாட்டி கூறுகின்றார். குழந்தையின் மழலை கொச்சை மொழியை,

''குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்''

என வழங்குகின்றார் பெரு நாவலர். அவர் மழலையை வளரவைத்து கல்வி கற்கும் போது

''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக''

என வலியுறுத்தி கூறுகின்றார். ஒருவன் கல்வி கற்பதன் பயன் தான் கற்ற கல்வியை வாழ்க்கையின் போது நடைமுறையில் கைக்கொள்ளல் வேண்டும். கல்வியில் எந்தவித பழுதும் இருத்தல் ஆகாது. கற்றறிந்தவன் அறிவு பூர்வமாக விளங்கும் இறைவனை தொழாமல் இருப்பானேயானால் அவன் கற்ற கல்வியில் என்ன பயன் என வினவுகின்றார் குறள் மொழியால்.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்''

எனும் குறள் மூலமாக கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் மனிதன் தன் வாழ்வில் காலடி எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் மிக கண்ணும் கருத்துமாக நின்று நிதானித்து செயல்பட வேண்டியுள்ளது. கல்வியின் பயனை மிக நுண்ணியமாக.

''கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்''

செல்வச் செளிப்பில் இமயம் என விளங்கினாலும் ஒருவன் கல்வி கற்காதவனாக இருந்தால் அவள் தனது முகத்தில் இரண்டு புண்ணுடையவனெனவும் கூறுகின்றார். முதல்பாவலர் குறள் மூலமாக. இல்வாழ்க்கையின் பண்புகளோ பலப்பல.

''ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி''

நம் வாழ்வின் இலட்சியங்களை வகுத்துக்காட்டும் போது ஒருவனின் குற்றங்கள் எதுவானாலும் தாயானவள் பொறுத்துக் கொள்வாளாம். ஆனால் தனது மகன் கள்ளுண்டு கொண்டான் என கண்ணூடாக காணும் போது அவள் எவ்வளவு துன்பம் எய்துகின்றாள் என்பதையும், யதார்த்தமாக தெளிவுபடுத்துகின்றார். மனிதமேம்பாட்டின் தத்துவங்களை ''வாள்போல் பகைவரை அஞ்சற்க'', ''உடுக்கை இழந்தவன் கைபோல்'' ''சொல்லுதல் யாவர்க்கும் எளிது'' என உட்பகை, நட்பு, வினைத்திட்டம் என்றும், ''எதிலார் குற்றம் போல்'', ''அற்றார் அழி பசி தீர்த்தல்'' ''அகழ்வாரைத்தாங்கும் நிலம் போல்'' என புறங்கூறாமை, ஈகை, பொறையுடமை வாயிலாக ஒருவருடன் நாம் பகை கொண்டால் அப்பகைவனை கண்டு அஞ்சவேண்டியதில்லை. ஆனால் உறவினரைப்போல் இருந்து உட்பகை கொண்டவரை நாம் நம்பக்கூடாது எனவும், எமக்கு துன்பகாலத்தில் ஏற்படும் கஷ்ட நிலையின் வேளை தான் ஒரு உண்மையான நட்பை அறிய முடியும் எனவும் ஒருவன் வாய் சொல்லால் எதையும் சொல்லிவிடலாம், அப்படி சொல்லியபடி செய்வது என்பது தான் மிக மிக அரிதானதாம். குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.

''எதிலார் குற்றம் போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

அயலவரின் குற்றங்களை நாம் எப்படி சீர்தூக்கிப் பார்க்கின்றோமோ அவ்வாறே எமது குற்றங்களையும் சீர் தூக்கிப் பார்ப்போமே யானால் எம் வாழ்வில் துன்பம் என்பது கிட்டவும் நெருங்காது. துன்பத்தின் சுமையைச் சொல்லும் வள்ளுவப் பெருமான் பசிப் பிணியையும் இல்வாழ்க்கைக்கு உதாரணம் காட்டுகின்ற பண்பை நாம் நோக்கினால்

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என ஒருவன் பசிப்பிணியால் வாடி வதங்கி நிற்கின்ற வேளையில் அவனின் பசிப் பிணியைப் போக்கும் பண்பே பணம் படைத்தவன் தன் பிற்கால வாழ்வுக்கு சேர்த்து வைக்கும் சொத்தாகும். எவ்வளவுதான் நாம் செய்தாலும், நாம் பொறுமை இல்லாத மனிதனாக வாழ்வோமானால் எமக்கு நன்மைகள் கிட்டா.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

பொறுமையில் பெரிதாக கருதப்படுவது பூமாதேவியாம், அப்பூமாதேவி தன்னை எவ்வளவு தான் அகழ்ந்தாலும் பொறுத்துக் கொள்வது போல் எம்மை எவ்வளவு தான் எவர் இகழ்ந்தாலும் அதைப் பொறுத்தல் இல்வாழ்வின் பண்புகளில் ஒன்று என கூறுகின்றது. வாழ்வின் நற்பயன்கள் மேலும் விளங்க நாவினால் சுட்டபுண், என் நன்றி கொன்றார்க்கும் என விபரிக்கின்றார். இல்வாழ்வான் அறத்தின் கண் ஒழுகி பொருள் சேர்க்கும் போதும், அறவழியில் பொருள் சேர்த்தும், அப்பொருளை மற்றவர்களுடன் பகுத்து வாழ்தல் மற்றையோரின் போற்றுதலுக்கும் வாழ்த்துதலுக்கும் உரியவராகி விடுகின்றார். தான் மட்டும் அறநெறியில் வாழாமல் மற்றையோரையும் அறநெறியில் வாழ வழிகாட்டி வாழ்வானேயானால் தவம் செய்வதிலும் பார்க்க வலிமை மிக்க தெனலாம்.

# ஈழத்து தமிழ் நாடக அரங்க வளர்ச்சியும் நாடக முறைமைகளும்

கந்தையா ஸ்ரீகணேசன்



அறிமுகம் :- மரபு வழிக்கூத்துக்கள்

வரலாற்றின் தொடர்ச்சியாக மரபு வழிப்பட்ட கூத்துக்கள் கால தேச வர்த்தமானங்களுடன் தன் உருவை மாற்றியமைக்க வேண்டி ஏற்பட்டது. பிரித்தானியாரின் வருகையுடன் கோயிலுடனும் மக்கள் வாழ்க்கையுடனும் பின்னிப்பி ணைந்திருந்த கூத்துக்கள் சற்று மாற்றம் காணவேண்டியி ருந்தன. வடக்கே யாழ்ப்பாணத்திலிருந்து. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என்று பரந்து திருகோணமலை, மட்டக்களப்பு என விரிந்து பரந்த தமிழ்ப்பிரதேசங்களில் மரபுவழிப்பட்ட ஆட்டக்கூத்துக்கள் புராண இதிகாச கதைக ளுடன் அரங்கேறி வந்தன. உடுக்கு, சல்லரி, மத்தளம், தாளம் எனும் வாத்திய கருவிகளுடன் அண்ணாவியார் தலைமை யில் பயிற்சி பெற்று சலங்கைகட்டி, வெள்ளுடுப்பு உடுத்து விடிய விடிய சுற்றத்தவர், ஊரவர் முன்னிலையில் ஆடி மறுநாள் விடிய வீடு வீடாக சென்று ஆடி, உபகாரம் பெற்று நடத்தப்பட்டன கூத்துக்கள். ஒரு வகையில் சமயச் சடங்கிலி ருந்தும் விடுபடமுடியாத ஆனால் நாடக மயப்படுத்தப்பட்ட வடிவமாக அவை காட்சியளித்தன. வடமோடி, தென்மோடி, கோவலன் கூத்து, வடபாங்கு, தென்பாங்கு, வசந்தன் கூத்து, காத்தான் கூத்து, என பல மோடிகளாக காணப்பட்ட கூத்து வடிவங்கள் கத்தோலிக்கரின் வகையுடன் கத்தோலிக்க கதைகளையும் உள்ளடக்கமாக பெற்றன. ஆட்டங்கள் தவிர்க்கப்பட்டன. எனினும் புராண இதிகாச கூத்துக்கள் இன்றும் ஆட்டக் கூத்துக்களாகவே உள்ளன. இவற்றுள் பகுதிச்சடங்காக ஆடப்பட்ட காத்தான் கூத்தும் ஆட்டக் கோலங்களுடன் கூடிய வசந்தன் கூத்தும் நாட்டுக்கூத்து வடிவங்கள் பெற்ற நாடக உருவை கொண்டிருக்கவில்லை.

**இசை நாடகம்**

இதேவேளையில் பதினெட்டாம் நூற்றாண்டில் மகாராஷ் டிரம் வழியாக தமிழுக்குள் நுழைந்த பார்ஸி மரபு நாடகம் தமிழ் நாட்டில் கர்நாடக சங்கீதத்தையும் தெருக்கூத்து நாட்டார்கதைகளையும் உள்வாங்கி ஒரு புது நாடக வடிவமாக உருப்பெற்றது. இந்த விலாச வகை நாடகங்கள் தெருக்கூத்து ஆட்டங்களை உள்வாங்கவில்லை. இந்தியாவில் சங்கரதாஸ் சுவாமிகளும் ஈழத்தில் அவரை அடியொற்றி வைரமுத்துவும் உருவாக்கிய இவ்வடிவம் இசை நாடகம் எனும் பெயருடன் மிளிர்ந்தது. இது பற்றிய ஆய்வுகள் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோரால் முன்வைக்கப்பட்டன.

## மேற்குலக வடிவங்கள்

தமிழ் நாடக அரங்கிற்கு மேற்குலகு அளித்த நாடக வடிவங்களாக 19ம் நூற்றாண்டில் மனோரதிய நாடக வடிவமும் இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியில் யதார்த்த நாடக வடிவமும் காணப்படுகினறன மனோரதிய பாணியில் ஷேக்ஸ்பியர் மற்றும் சமஸ்கிருத நாடகங்களை பம்மல் சம்மந்த முதலியர் படித்த, மத்தியதர பார்வையாளர்களுக்காக மேடையேற்றினார். இந்த நாடக கலை வடிவம் ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கத்தினால் சிறப்புடன் வளர்த்தெடுக்கப்பட்டது. யதார்த்த மோடியில் மக்கள் பிரச்சனைகளை ஈழத் தமிழ் அரங்கிற்கு கொண்டு வந்தவர் பேராசிரியர் கணபதிபிள்ளை. உள்ளதை உள்ளபடி விபரிக்கும் இவ்வரங்கு அச்சொட்டான காட்சியமைப்புக்களை கோரி நின்றது. சமூகப் பிரக்ஞைனைகளுடன் கூடிய கருக்கள் மக்கள் அரசியலையும் பேசின. 'தவறான எண்ணம்', 'பொருளோபொருள்' என்பன ஒரு சில.

## தமிழ்த்தேசிய நாடக அரங்கு

ஈழத்தில் ஐம்பதுகளின் பின்னர் ஏற்பட்ட தேசிய எழுச்சி காரணமாக பேராசிரியர் சரச்சந்திரவினால் மரபுகளின் ஊற்றின் அடியாக சிங்கள நாடக அரங்கு புத்தூக்கம் பெற்றது. இதன் தாக்கம் அறுபதுகளில் தமிழ் நாடக அரங்கில் எதிரோலித்தது. பேராசிரியர் வித்தியானந்தன் மரபுவழிபட்ட வடமோடி, தென்மோடி கூத்துக்களை நகரபார்வையாளர்களுக்காக படச்சட்ட மேடையில் குறுகிய நேரத்துக்கு என தயாரித்து அளித்தார். ஆனால் அறுபதுகளின் பிற்கூற்றில் கூர்மையடைந்த சாதிப் போராட்டம், தொழிலாளர் பிரச்சனை போன்ற சமூகப்பிரச்சனைகளை, உள்ளடக்கமாகக் கொண்டு ஏ. என் ரகுநாதனின் 'கந்தன் கருணை', மௌனகுருவின் 'சங்காரம்' என்பன முறையே காத்தான் கூத்து பாணியிலும் வடிமோடியமைப்பிலும் தயாரிக்கப்பட்டன. எனினும் நாட்டார் கூத்துக்களின் கலைவிதிகள் புதிய உள்ளடக்கங்களை பேசுவதற்கு கலைத்துவரீதியில் அதிகம் வெற்றியைத் தராததால் எழுபதுகளில் கூத்தின் மூலங்களை சமகாலக்கருவுக்கு ஏற்றவிதமாக அளவுடன் கலந்து புதிய நாடக முறைமைகளை தோற்றுவித்தனர் நாடகவியலாளர்கள். அந்தவகையில் நா. சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு', தாசீசியஸின் 'பொறுத்தது போதும்' என்பன உருவாகின. இதே காலகட்டத்தில் மேற்குலக அபத்த வகை நாடகங்களும் குறியீட்டு யாதார்த்த நாடங்களும் மொழிமாற்றம் செய்யப்பட்டு தமிழ் அரங்கிற்கு பாலேந்திராவினால் அளிக்கப்பட்டன. இதன் மறுதாக்கமாக மக்கள் பிரச்சனைகளை கூர்மையாக அலசும் தன்மை தமிழ் நாடகவியலாளர் மத்தியில் ஏற்பட்டது.

எண்பதுகளில் முனைப்படைந்த தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் அவலங்களை அரங்கினூடு பார்க்கும் தேவையை கலைஞர்களுக்கு வழங்கியது. எழுபதுகளின் இறுதியில் மரபினடியில் முகிழ்த்த தமிழ் தேசிய அரங்கு எண்பதுகளின் நடுப்பகுதியில் தமிழர் தேசிய பிரச்சினையின் கருவுடன் இணைந்து குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'மண் சுமந்த மேனியர்' ஆக தமிழ் அரங்கிற்கு ஒரு புதிய பரிணாமத்தை வழங்கியது. மரபு ஊற்றுக்கள், தமிழ் இலக்கிய வீச்சுக்கள், மேற்குலக நாடக முறமைமைகள் என்பன தமிழர் தம் பிரச்சினையுடன் இணைந்து தமிழர் தேசிய நாடக மரபை உருவாக்கி நின்றன. இதன் தொடர்ச்சியாக 'மண் சுமந்த மேனியரை' நெறியாளுகை செய்த சிதம்பரநாதன் தொண்ணூறுகளில் முற்றுமையிடப்பட்ட நாட்களின் அரங்க வடிவமாக உலகலாவிய தரத்தில் ''உயிர்த்த மனிதர் கூத்து'' எனும் நாடகத்தை முருகையனின் எழுத்துப் பலத்தினூடு அளிக்கை செய்தார். அவசர கால நிலைமையில் அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து அதிகார மரத்தை ஒன்றுபட்டு இழுத்து விழுத்தும் குறியீட்டினூடாக 'மண் சுமந்த மேனியர்' படைக்கப்பட்டது. ஆனால் 'உயிர்த்த மனிதர் கூத்து' மேலும் ஒரு படி கலையாக்கத்தில் உயர்ந்து அரசியல் அதிகாரத்தின் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழும் மக்களை குறியீடுகள், முகமூடிகள் ஊடாக காட்சிப்படுத்தியது. இவ்வரங்குகளினூடாக பிறேக்ரின் காவிய அரங்கு தூரப்படுத்தல் உத்தியும் ஏகொஸ்ரா போலின் அடக்கப்பட்டவர் அரங்க மோடியும் (Theatre for the oppressed) வறுமை அரங்கின் (Poor theatre) தன்மைகளும் தளை நீக்கத்துக்கான. விடுதலைக்கான அரங்கின் (Theatre for liberation) அம்சங்களும் தமிழ் நாடக அரங்கு வளம்பெற உதவின என்றால் மிகையாகாது.

முற்றுகையிடப்பட்ட நாட்களின் நீட்சி அதிகரிக்க போரின் உக்கிரமும் அதிகரிக்க மக்கள் கொண்ட துயர்களை உளவியல் தாக்கங்களை வரலாற்று கண்கொண்டு எழுதி தயாரிக்கப்பட்டது குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'அன்னையிட்ட தீ'. காலவோட்டத்துடன் மக்களுக்கென படைக்கப்படும், மக்கள் பிரச்சினைகளை அலசும் ஒரு

வெற்றிகரமான படைப்பு தனது வடிவத்தினையும் கலைத்துவரீதியில் ஊடாட்டமடைந்து அமைத்துக் கொள்ளும் இந்த வகையில், அடிப்படையில் யதார்த்தமோடி அமைப்பை கொண்ட 'அன்னையிட்ட தீ' மேடையின் பல்வகைப்பயன்பாடு காரணமாக ஒரு புதிய யதார்த்தமோடியில் (Neo-realism) அன்ரோயின் ஆற்ருவாட் (Antoin Artuard) அளித்த Cruel theatre அமைப்பையும் இணைந்து உருவாகியது. இது ஒரு வகையில் இன்று பரவலாக கூறப்படும் Modified realism ஆகலாம். இந்த வடிவத்தின் தேவையை குழந்தை ம. சண்முகலிங்கத்தின் இன்னொரு நாடகமான 'எந்தையும் தாயும்' உறுப்படுத்தியது. இந் நாடகம் போரின் உக்கிரம் தாங்காது ஊரை விட்டு உலக நாடுகளுக்கு பிள்ளைகள் சென்றுவிட ஊரில் தனிமையில் அந்தரிக்கும் தாய் தந்தையரை சித்தரித்தது. யதார்த்தமோடியில் அமைக்கப்பட்டாலும் மோடிப்படுத்தப்பட்ட பாணியிலும் காட்சிகள் அமைக்கப்பட்டன. இவ்வகையில் Modified realism தனது தேவையை மீண்டும் பறைசாற்றியது.


## இன்றைய அரங்கு

இன்று எழுப்பப்படும் முக்கிய பிரச்சனை எவ்வகை அரங்கும் சமகால மக்களுடைய பிரச்சனைகளை தாக்கமாக வெளிப்படுத்தும் என்பதாகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளையூடு தமிழ் அரங்கு கண்டுகொண்ட யதார்த்தமோடி பேராசிரியர் வித்தியானந்தனின் கூத்துகளின் நவீனமயப்பாட்டுடன் மோடிப்படுத்தப்பட்ட அரங்கு வடிவாக பரிணாமம் பெற்றது. இவ்வரங்கு நாட்டார் மூலங்களில் புடம் போடப்பட்டு மக்களின் அரசியலை தாக்கமாக உணர்த்தியது. இதன் உச்ச வளர்ச்சியில் குறியீட்டு தன்மைகள் இணைந்து கொண்டன. இன்று ஒரு அரசியல் பிரச்சனையை தாக்கமாக வெளிப்படுத்த குறியீடுகளுடன் கூடிய மோடிப்படுத்தப்பட்டவரங்கே வாய்ப்பானது. இவ்வரங்கின் வளர்ச்சியே போராட்டம் நடைபெறும் நாடுகளில் பயன்படுத்தப்படும் விவாத அரங்காகும் (Forum theatre). இது சிதம்பரநாதனின் 'மானுடம் சுடரும் ஓர் விடுதலை', 'பொய்க்கால்' ஆகிய நாடகங்களில் வெளிப்பட்டது. மேலும் சமீபத்தில் மேடையேற்றப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை நாடகங்களும் தாக்கமாக மக்கள் பிரச்சனைகளை வெளிப்படுத்த மோடிப்படுத்தப்பட்ட குறியீட்டு அரங்கே சாதகமானது என்று இயம்பி நின்றன. மேடையேறிய யதார்த்த நாடகம் ஒன்று (மரக்காலை) மோடிப்படுத்தலுடன் கூடிய காட்சிகளையே தன்னகத்தே கொண்டு இருந்தது. மற்றொரு அச்சொட்டான யதார்த்தமோடி நாடகம் (குடும்பம்) வெற்றிகரமாக படைக்கப்பட்ட போதும் அதன் வீச்சு மற்றய இரு மோடிப்படுத்தப்பட்ட குறியீட்டு நாடகங்களின் வீச்சுடன் நேர் நிற்க முடியவில்லை என்பது தெற்றன புலப்பட்டது 'மனிதச்சிக்கல்', 'அக்னிகுஞ்சு'. எனவே ''மீண்டும் யதார்த்தத்துக்கு செல்வோம்'' என்பது ஒரு அர்த்தமற்றவாதம். ஆனால் அதேவேளையில் வெறும் குறியீடுகளாகவே நாடகத்தை படைத்தல் என்பதும் சாத்தியமற்றது. பாத்திர வார்ப்பு, பாத்திர வளர்ச்சி, கதைச்சூழ்வு, குறியீட்டு படிமங்கள் என்பன கருவுடன் பொருத்தமாக பின்னப்பட்டு, மோடிப்படுத்தப்பட்ட காட்சிகள் பண்பாட்டில் எழுந்த நாட்டார் மூலங்களுடன் அழகுற இணைக்கப்படும் போது, நாடக எழுத்துருவும் ஆற்றுகையும் ஒரே வேளையில் வெற்றியடையும் தன்மைகளை காணலாம். இது மக்கள் பிரச்சினைகளை தம் படைப்புகளூடு பேசி நின்ற குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ''மண்சுமந்த மேனியர்'', ''அன்னையிட்ட தீ'' ''எந்தையும் தாயும்'' ஆகியவற்றில் நாம் காணலாம்.

# யுகக் கவியின் ஆத்மதாகம்

திருமதி. மஞ்சுளா ராஜபால், வவுனியா

தமிழை விரும்பிக் கற்கும் திறன் தமிழோடு இசைந்த பிணைப்பின் வழிப்பட்டதாகும். தமிழ் என்னும் மூன்று எழுத்துக்களுக்குள்ளும் பொதிந்து கிடக்கும் ஆழமான மிக நுண்ணிய வாழ்வியற் தகவுகளை உய்த்து உணர்தலே மென்மையானதாகும். அள்ள, அள்ள குறையாத உலகாயுதத் தத்துவங்களின் நிலைக் களனாக விளங்கும் சிறப்பு தமிழிற்கே உரிய சிறப்பியல்பாகும். இத்தகு நற்றமிழைத் தன் சிந்தனையிற் குழைத்தெடுத்து நர்த்தனமாட வைத்த பெருமைக்குரியவர் மகாகவி பாரதியார் ஆவார்.



தமிழை நினைத்தால் எம் நினைவில் வருவதும், கவி பாரதியின் கவித்துளிகளன்றோ. பாரதியின் கவிதைகளை எண்ணுந்தோறும் தமிழ், தமிழ் என்னும் ஜீவ தாகம் எம்முன் ஊற்றெடுப்பதை உணராதவர் தமிழ் அமுதத்தின் பெருமையை அறியாதவரன்றோ. எம் நெஞ்சிற் பிரவகிக்கும், தமிழையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு உயிர்ப்புடைய கவிபாடிய பெருமை மகாகவிக்கு மட்டுமே உரியதொன்றாகும்.

மகாகவியின் கவிதைகளின் ஈர்ப்பினால் தமிழை நேசித்த நெஞ்சங்கள் ஆயிரம் ஆயிரமன் றோ. கவிதைப் பெரும் சோதியின் ஒரு சிறு பொறி காலத்தின் ஓட்டத்தில் இத்தகு வியப்பி னைப் படைக்கு ஊன்றுகோலாகியதில் சமூகத்தில் அதன் தாக்க விளைவுகளின் பயன்பாட்டைக் காணமுடிகின்றது. பேச்சிலும், மூச்சிலும் உண் மையான உயிர்த்துடிப்பைத் தமிழ் பேசும் உள்ளங்களில் வளர்த்து வழிப்படுத்திய பெருமை கவி பாரதியின் கவிதைகளின் சிறப்பிற்கு நற்சான் றாகும்.

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்

தல்'' இது மகாகவியின் பாடல் வரிகள். பாருங்கள் எவ்வளவு ஆணித்தரமான வார்த்தைகள். பேச்சும் செயலும் ஒன்றுபட்டு வாழும் மாண்பு மகாகவியின் கவிதைகளில் ஊடுருவியிருப்பதைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் உணர்வர்.

பாமரனும் புரிந்துகொள்ளும் எளிய தமிழ் நடைப்பாங்கு மகா கவிக்குக் கைவந்த கலையாகும். இன்றும், என்றும் தம் நிலை மறந்து உறங்கும் மனித உள்ளங்களைத் தட்டி எழுப்பும் வாழ் தகவு உடையனவாகும், அவர்தம் கவிதைகள். மகாகவி தீர்க்க தரிசனத்துடன் எழுதிய கவிதா நிகழ்வுகள் எம்மை அறியாமலேயே எமது திறன்களையும், மனப் பாங்குகளையும் வழிப்படுத்தி மனித விழுமியங்கள் சிறக்க வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாகப் பிரகாசிக்கின்றன. உண்மைக் கவிஞனின் நிதர்சனமான உளப்பாங்கினை இங்கு தான் உணரமுடிகின்றது.

இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று பாடிவிட்டார் நம் சிந்தனைக் கவிஞர். இன்று அவரது சிந்தனைக் கருவூலங்கள் தூக்கத்திலும் எம்மைச் சோரவிடாது இருக்குமாற்றைச் சொல்லவா முடியும்? சிந்தனைச் சிற்பியின் ஆத்மதாகம் அவர்தம் கவிதைகளினூடாக வெளிப்படும் உணர்வலைகள் எம்மை ஊடுருவிப் புத்துணர்வை அளிப்பதனை எப்படி விளக்க முடியும்? இங்கேதான் உண்மையான சமூக உணர்வுகளின் ஆக்கிரமிப்பினைக் கொண்ட கவிஞனின் ஆத்மாவின் அந்தரிப்புக்கள் புலனாகின்றது. உயிர் வாழும் கவிதைகளின் செயல்வடிவம் தெரிகின்றது. யுகக் கவிஞனின் சமுகப் பிரக்ஞையை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

''ஊனுடலை வருத்தாதீர், உணவு இயற்கை கொடுக்கும், உங்களிற்குத் தொழில் இங்கே அன்பு செய்தல்'' என எவ்வளவு சுலபமாகச் சொல்லி விடுகின்றார். ''பாட்டினில் அன்பு செய்'' என்று எம்மை வழிப்படுத்தி உண்மை அன்பிற்கே புது அர்த்தம் வகுத்த படைப்பாளியாவார்.

''அன்பு செய்'' அன்புதான் உனக்குத் தொழில் என்றும், உயிரும், உள்ளமும் சேர்ந்த நுண்ணிய பிணைப்பலைகள் தான் உண்மையன்பாகும். அந்த அன்பு விலைமதிப்பில்லாதது. விலைகொடுத்து வாங்க முடியாதது. அத்தகைய அன்பைத் தொழிலாகக் கொள்ளும் போது எம் வாழ்வின் யதார்த்த உண்மைகளை உணர்ந்துகொள்ள முடியுமன்றோ. அன்பினாற்றான் அன்பைப் பிறக்கவைக்க முடியும் என அறுதியிட்டுக் கூறும் நெஞ்சுருக்கம் எம்மை வியக்கவைக்கும் வழிகாட்டலன்றோ.

உண்மையான மனித வாழ்வில் அச்சம் என்ற சொல்லிற்கே இடமில்லை என மிகவும் ஆணித்தரமான கவிஞனின் கூற்று எம்மவர்க்குச் சிறந்ததோர் தூண்டியாகும். ''நடுங்குதல் இல்லை, நாணுதல் இல்லை, பாவமில்லை பதுங்குதல் இல்லை, எது நேரினும் இடர்ப்பட மாட்டோம்.'' என அச்சமின்மையானது மனித விழுமியங்களின் வழிபட்டாத அமைய வேண்டும், அப்படியாக அமையும் போதுதான் மனிதம் உயர் நிலையை அடையமுடியும் என எம்மை உணரவைத்தவர் மகாகவி என்றால் மிகை ஆகாது.

அச்சம் ஒருவரிடத்தில் உறைந்திருக்கும் வரை அவரால் முழுமையான அறிவின் விளிம்புகளை அறியமுடிவதில்லை. அறிவு, அச்சமற்றதாக அமைய வேண்டும் என வலியுறுத்துவதை அவர்தம் பாடல்கள் நிலை நிறுத்திக் காட்டுவதை அவதானிக்கமுடிகின்றது. ''வையமெல்லாங் காக்கும் மகா சக்தி நல்லறிவை ஐயமறப் பற்றல் அறிவு'' எனவும் மனமும், இந்தியங்களும், உடம்பும் அறிவிற்கு அடங்கி வாழ வேண்டும். அத்தகைய அறிவு ஒளியைத் தவறவிடாதே என்றெல்லாம் புத்தூக்கச் சிந்தனைகளைப் பதிக்கும் கவித்திறன் மகா கவிக்கேயுரிய தீர்க்கமான வழி காட்டலாகும்.

மனித இரக்கமானது எத்தகைய மானிட நேயத்தைக் கட்டிக் காக்கும் அத்திவாரமாக இருக்கின்றது என்பதனை நோக்கும் போது இன்று நாம் போகும் பாதையைத் திரும்பிப் பார்த்துச் சீர்செய்யவும் அருமருந்தாக அமைவதினைக் காணலாம். இன்றைய மனித வாழ்வில் இரக்கத்தின் ஈரக் கசிவுகள் கூட வற்றிப்போகும் நிலையை அன்று நம் கவிஞன் தீர்க்க தரிசனத்துடன் இவ்வாறு கூறியுள்ளார் போலும்.

''நாட்டை நினைப்பாரோ எந்த நாள் இனிப்போய் அதைக் காண்பதென்னே எனவும், அவர் விம்மி, விம்மி அழும் குரல் கேட்டிருப்பாய் காற்றே, துன்பக் கேணியில் எங்கள் பெண்கள் அழுத குரல்.'' எனப் பாடியுள்ளாரோ மகாகவிய வர்கள். அனாதவரான உள்ளங்களிடத்தே ஏற்படும் துயரத்தின் உச்ச நிலையையும், அதன் உயிர்த்துடிப்பையும்,

நரம்புகள் சில்லிடக் கூறும் இயல்பு இன்றும் எம்மைச் சிலிர்க்கவைப்பதை உணரமுடிகின்றதல்லவா?.

''எத்தித் திருடும் அந்தக் காக்கை அதற்கு இரக்கப்பட வேண்டுமடி பாப்பா'' என்று அவர் பாடும் போது அவர் காட்டும் மனப்பாங்கு விருத்தியினைப் பார்க்கலாம். ''காகம்'' என்று நாம் நினைவில் தன்னும் நினைக்க மறுக்கும் ஒரு பிராணிக்காக ''இரக்கப்படும்'' என்று கூறும் இயல்பு எம்மில் யாருக்கு வரும்? பரந்துபட்ட பக்குவமான மன நிலையினைச் சிறு குழந்தையின் மனதிலே ஆழப்பதித்து விருத்திசெய்யும் உளப்பாங்கினை இனிமேலாவது எம்மாற் புரிந்துகொள்ள முடியுமா என்பது விடைதெரியாத வினாவாகி விடுமா?

அடிமை வாழ்வு, பொய் முகங்கள், சமுகச் சிக்கல்கள், ஏற்றத் தாழ்வுகள், புரையோடிக் கிடக்கும் சாதிக்கொடுமைகள், பெண் அடிமை நிலை, மூட நம்பிக்கைகள், வரட்டுக் கௌரவங்கள் இவை யாவும் சமுகத்தை நெருக்கிப்பிடிக்கும் கிடுக்கியாகவிருக்கும் அவலத்தினை காட்டாற்று வெள்ளத்தின் சீற்றமாய், எரிமலையின் குமுறலாய்க் கொட்டுகின்றார் மகாகவி. இச்சமூக அவலங்களின் அமுக்கம் அவர்தம் கவிதைப் பெருங்கடலிற் பொங்கியெழுவதை உணரும் நிலை எப்போது தோன்றும்? மனிதத்தின் உண்மையான இயல்புகளை, இயற்கையின் மகிழ்வுகளை, மனித நேயத்தைச் சக்கையாக மாற்றும் ஆக்கிரமிப்பினைக் கண்டு வெகுண்டெழும் மனிதாபிமான நெஞ்சம் மகாகவி பாரதிக்கே உரித்தான ஒன்றாகும்.

''நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்.'' என அவர்தம் நெஞ்சைத் தொட்டு எமது நெஞ்சங்களைச் சுய நிலைக்குக் கொண்டு வந்த கவிதைக் கணைகள் கொஞ்சநஞ்சமல்ல எனலாம். ''சாதிகள் இல்லையடி பாப்பா, நீதியும், உயர்ந்த மதி அறிவும் உள்ளோரே மேலோர், காக்கை, குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்.'' எனப் பலவாறான உதாரணங்கள் மூலம் சமூகத்திற் புரையோடியிருக்கும் சாதிக்கொடுமைகளின் தாக்கவிளைவுகளை உணர்ந்து வாழ வழிகாட்டிய பெருமை மகாகவிக்கேயுரிய தாகும்.

''ஆயிரம் உண்டு இங்கு சாதியெனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி'' என எங்களுக்குள்ளேயே இவ்வளவு ஆயிரம் சாதியும், பிளவுகளும் எம் ஒற்றுமையைக் குலைக்கும் சக்திகளாக இருக்கும் போது அன்னியர் எம்மை ஆழ்வதில் ஒன்றும் அநீதியில்லையென்று சாட்டையடியாகக் கூறுகின்றார்.

இவ்வாறாக மகாகவி அன்று சொன்ன கூற்று இன்று எம் முன்னால் வளர்ந்து நிற்கும் எம் இனத்தின் விடிவுக்கான தேடலுக்கும் பொருந்தும் தகவினை எண்ணி வியக்காமல் இருக்க முடியுமா? இவை மகாகவியின் தீட்சணியமான தூரநோக்கிற்கும் ஆற்றொணா ஆத்ம தாகத்தின் தேடலுக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டுக்களாகும்.

பெண்ணைத் தாயாக, சிநேகிதியாக, குழந்தையாக, சேவகியாக, காதலியாக, உலக மகா சக்தியாக, அனைத்திற் கும் ஆதி காரணியாய் ஊற்றாகக் காட்டுவதில் கவி பாரதியை வெல்ல யாருமிலர். அத்தகைய பெண்ணின் நிலைகண்டு இனிமேலும் வரப்போகும் நிலையறிந்து கவிஞரது கவிதைகளிற் பெண்மை போற்றப்படுவதை அவதானிக்கலாம். பெண், தாய், மனித ஊற்றுக்கண், பெருமைக்குரிய பேறுகள் பல பெற்றுயர்ந்தவள் என நிலைப்படுத்துகின்றார். ''பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் ஈசன் ஆனால் மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்.'' என நேரடியாகவே பெண்ணின் நிலை எப்போதுமே கேள்விக்குரியதொன்றாகவே இருக்கும் நிலையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

''மாட்டையடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்து வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார்.'' ''அதை வெட்டி விட்டோம் என்று கும்மியடி.'' எனக் கூறுமாற்றைப் பார்க்கலாம். பெண்ணே நீ உன்னை, உன் நிலையை உணர்ந்து கொள். பின்பு அந்த நிலையறிந்து உன்னை உயர்த்திக்கொள். என்றெல்லாம் பெண்மையை முன்னிலைப்படுத்தும் மன இயல்பைக் காணலாம்.

''பாயும் ஒளி நீயெனக்கு, நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், உன் பெண்மைக்குக் காவலாகக் கொண்டு செயற்படு'' என நல்வழிப்படுத்துகின்றார் மகாகவி. ''பட்டங்கள் ஆழ்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடாத்த வந்தோம்'' எனவும், பெண்ணால் முடியாத காரியம் எதுவுமில்லை என்றும் உச்ச நிலையை நிற்சயப் படுத்துகின்றார். ''மாதர் அறங்கள் பழமையைப் போலவே மாட்சிபெற்று வாழ்வமடி'' எனப் பெண்மையை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதன் விடிவிற்கு வழிகாட்டும் விடிவிளக்காகின்றார் மகாகவியவர்கள்.

''போற்றி தாயென்று பொற்குழல் ஊதடா, போற்றி தாயென்று தாளங்கள் தட்டடா'' எனப் பலவழிகளிலும் பெண்மையை முதன்மைப்படுத்தும் சிறப்புத் தகவு கவி பாரதிக்கேயுரிய சிறப்பம்சமாகும். பாரதி காட்டும் பெண்மையின் உச்ச விளைவுகள் இன்றைய முன்னிலை வளர்ச்சிகளின் விளிம்புகள் சமுகத்தின் உயர்விற்கு வித்திடும் சிறப்பினைக் காணமுடிகின்றது.

மனித வாழ்வின் பூரணத்துவத்துக்கு மெஞ்ஞான விளக்கமும், தேட்லும், நாடலும் அவசியம். அத்தகைய மெய்யறிவானது இந்த உலகம், உயிர், பிரபஞ்சம், இறைவன் எல்லாம் ஒன்றே என்ற உண்மையான உளப்பாங்கினை வளப்படுத்தும் ஆற்றை கவிஞனின் பாடல்களில் மிகத்தெளிவாக அவதானிக்கலாம்.

ஆன்மா அழிவில்லாதது, சினத்தை வென்றுவிடு, மரணம் உனக்கில்லை, உன் ஆன்மா உன் செயலின் வழி வாழும், அது மக்களை நல்வழிப்படுத்தும் என ஆன்மீகப் பாதையானது மனித வாழ்வின் விடிவிற்கு வழிகாட்டும் இயல்பை மகாகவி தன் பாடல்களில் மிகக் கவி நயத்துடன் காட்டும் சிறப்புத் தனித்தன்மை வாய்ந்ததொன்றாகும்.

மகாகவி பாரதிகொண்ட சமுகப் பிரக்ஞை அவரின் ஆத்மாவின் அந்தரிப்பாக இருந்தமை ஒரு உணர்வு பூர்வமான நிகழ்வாகும். அவர்தம் இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழும் சத்தியமான கரிசனமும், வேதனையும் கவிஞனின் பாடல்களிற் சோகமாக இழையோடுவதை உணரமுடிகின்றது. என்ன செய்ய முடியும் என்னும் ஆற்றாமை அவர்தம் பாடல்களில் பிணைந்து அள்ளுந்தோறும் எம் நெஞ்சை நெக்குருகவைக்கும் செயலினை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

''தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னம் சிறிய கதைகள் பேசி வீணே வாழ்நாளைப் போக்குகின்றார்களே, இத்தகைய வேடிக்கை மனிதரைப்போல் நான் வீழ்வேனென்று நினைத்தாயோ'' எனத் தன்னைத்தானே இச்சமுக நிலைகண்டு நொந்துகொள்ளும் உண்மைத்துடிப்பின் உயிரோட்டம், சாகாவரம் பெற்ற அமுத ஊற்றுக்கள் அன்றோ.

இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல அவர்தம் கவிதைகள் இனிவரும் யுகங்களிற்கும் பொருந்திவாழும், வாழ வழி காட்டும் என்பதே சாலப் பொருந்தும் அன்றோ. மனிதன் உள்ளவரை பாரதி தமிழின் மேற் கொண்ட மாறாத அன்பு, ஈடுபாடு, காதல் என்பவை பலமான அத்திவாரங்களாக அமையும். அந்தளவிற்குத் தமிழின் மீது கவி பாரதிக்குள்ள பற்று வைரமுடையதாக இருந்தது.

''சொல்லில் உயர்வு, தமிழ்ச்சொல்லே, அதைத் தொழுது படித்திடடி பாப்பா, சேமமுற வேண்டுமெனிற் றெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வீர்.'' எனவும் தமிழின் மேல் இவர் கொண்ட தணியாத காதல் வெளிப்படுவதை உணரமுடிகின்றது. இத்தணியாத தாகமானது தீராத நிலை என்றும் தொடரவேண்டும். ''வானம் அறிந்து அனைத்து வளர்மொழி வாழியவே.'' என மேன்மேலும் இந்நிலை தொடரவேண்டிப் பாடுகின்றார். இத்தகு நிலைப்பாட்டிற்றான் தமிழின் தனித்துவம் பேணப்பட்டுத் தொடரும் என வழிகாட்டும் நுட்பத்தினை எம்மால் உணரக் கூடிய தீர்க்கதரிசினி யாக மகாகவி விளங்குவது எடுத்துக்காட்டாகும்.

சமூகத்தின் புரையோடிப்போன தாக்கங்களும், அதன் விளைவுகளும் கவிஞனின் கவிதை வரிகளைச் சொல்லொணா இரசம் கொட்ட வைக்கின்ற ஆழத்தை உணரலாம். சோகமாக, ஆவேசமாக, கழிவிரக்கமாக, ஆணித்தரமாக, தூண்டியாக, வசப்படுத்தலாக, வார்த்தைகளில் வடிக்கமுடியத மனக் குமுறல்களின் வெளிப்பாடாக, ''ஆத்மதாகமாக'' அமைவதை உணராதவர் யாருமிலர். யுகக் கவிஞனின் ஆத்ம தாகம் எமது ஆத்மாவினைத் தன்வசம் சுண்டியிழுப்பதனை என்னவென்று உரைப்பது?

யுகக் கவிஞனின் ஆத்மதாகம் முடிவில்லாத் தீர்க்கதரிசனம் கொண்டு அமுதாம் சுவை தரும் தமிழை நேசிக்கும் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் நெஞ்சினையும் தைக்கும் உணர்வு இழையாக அமைகின்றது, வாழும் நெறியாக விளங்குகின்றது. இத்தொடரிழையானது இனிவரும் சமுகத்தினையும் இணைத்து வலுப்படுத்தும் பாலமாக அமையும் சிறப்பே மகாகவியின் கவிதைச் சிறப்பாகும். இனிவரும் யுகங்கள் தோறும் மகாகவி பாரதியின் பாடல்கள் தீர்க்கதரிசனத்தடன் வாழும், எம்மை வாழ வைக்கும் என்பதில் ஐயமேதும் இல்லையெனலாம்.

# வட இலங்கை

## மகிடிக்கூத்து - ஓர் ஆய்வு

கலாநிதி
காரை செ. சுந்தரம்பிள்ளை

1. இலங்கைத் தமிழ் மக்களிடையே ஆடப்பட்டுவந்த மரபுவழிக் கலைவடிவங்களுள் ஒன்று மகிடிக்கூத்தாகும். இக்கூத்து வட இலங்கையிலும் கிழக்கிலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசத்திலும் நீண்டகாலமாக ஆடப்பட்டு வந்திருக்கிறது. இக்கட்டுரையில் வட இலங்கை மகிடிக்கூத்து ஆராயப்படவுள்ளது.

### 2. மகிடி என்பது யாது?

மந்திரத்தாற் பொருளை மறைத்தலும், அதனைக் கண்டெடுத்தலுமாகிய விவாதத்தில் மாந்திரீகர்களுக்குள் நிகழும் போட்டி எனவும், வெளிக்காணாமற் புதைத்தும் புதைத்ததைக் கண்டெடுத்தும் ஆடும் விளையாட்டுவகை எனவும் ''மகிடி'' எனும் சொல்லுக்குப் பொருள் கொள்வர்.

மட்டக்களப்பில், வேடிக்கை, சச்சரவு, வாத்தியம் ஆதிய கருத்துக்களில் மகிடி என்னும் சொல் வழங்குகிறது என்பர். மௌனகுரு (1983:176) யாழ்ப்பாணத்தில் ஒருவரை ஒருவர் தன்பாற் கவர்ந்து வைத்திருத்தல், தந்திரத்தைத் தந்திரத்தால் வெல்லுதல், ஏமாற்றுதல் ஆகிய பொருளில் கையாளப்படுகிறது. ''என்ன மகிடி காட்டுறாய்'' அல்லது ''என்னமோடி காட்டுறாய்'' ''அவன் மகிடிவிட்டான்'' ''மகிடியாடுறாயோ மகிடி'' ஆதிய சொற்பிரயோகங்களை இன்றும் யாழ்ப்பாணத்துப் பேச்சுமொழியிற் காணலாம். இவையும் மேற்படி பொருளை உறுதிசெய்கின்றன.

மகிடிக்கூத்தில் பந்தயம் பிடித்தலும் அதை மந்திரங்களின் துணைகொண்டு நிறைவேற்ற முயலுதலுமே முக்கியமாக இடம் பெறுகின்றன. அத்துடன் குறவர்கள் வருவதும் மகுடி ஊதிப்பாம்பாட்டுவதும் ஆகிய வேடிக்கைச் செயல்களும் இடம்பெறுகின்றன. எனவே மகிடிக் கூத்திலே மகிடியென்னுஞ் சொல் மேலே குறிப்பிட்ட அத்தனை பொருள்களையும் குறித்து வருகின்றதென்பதே பொருத்தமாகும்.

வட இலங்கையில் ஆடப்படும் மகிடிக் கூத்துப் பிராமணப் புரோகிதர்களுக்கும் முஸ்லிம் வியாபாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு ஒன்றையே கருவாகக் கொண்டு ஆடப்படுகிறது. தமிழர்கள் ஆடும்போது பிராமணர்கள் வெற்றிபெறு வதாகக் கதை அமையும். முஸ்லீம்கள் ஆடும்போது பிராமணர்கள் தோல்வியடை வதாகக் கதை நிறைவு பெறும். முஸ்லீம்களுள் முல்லைத்தீவுப் பகுதி முஸ்லீம்களே இக்கூத்தை நிகழ்த்தி வந்துள்ளனர். வட பகுதியில் வேறு இடங்களில் இவர்கள் ஆடியதாகத் தெரியவில்லை (தகவல் மிஸ்கின்பாவா)

முல்லைத்தீவிலே தமிழர்கள் ஆடும்போது முஸ்லீம்களும், முஸ்லீம்கள் ஆடும்போது தமிழர்களும் இக்கூத்தைப் பார்த்து மகிழ்வதுண்டு. கதை ஒரு தகராற்றை அடிப்படையாகக் கொண்டதாக விருந்தாலும் இருசாராரும் இக்கூத்தை ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாக ஏற்று ஒற்றுமையாகக் கண்டுகளிப்பது முக்கியமான விடயமாகும்.

## 3. மகிடிவகைகள்

வட இலங்கையில் ஆடப்படும் மகிடிக்கூத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்:-

பிராமணர்களுக்கும் முஸ்லீம் வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட தகராற்றை அடிப்படையாகக் கொண்ட மகிடிக்கூத்து ஒருவகை.

பிராமணர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் ஏற்பட்ட தகராற்றை அடிப்படையாகக் கொண்ட மகிடிக்கூத்து மற்றொருவகை. பிராமணர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் ஏற்பட்ட தகராற்றை அடிப்படையாகக் கொண்ட கூத்தை, அது ஆடப்படும் முறைமையைக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை வருமாறு

i) கதையமைப்புக் குறைந்த கேளிக்கைக் கூத்து

ii) கதை தழுவிய கூத்து. இதில் இலங்கையில் வியாபாரஞ் செய்ய வந்த முஸ்லீம்கள் தமிழ்ப் பெண்களைத் திருமணஞ் செய்தபோது பிராமணர்கள் அதைத்தடுக்க எடுத்த முயற்சி ஆடிக்காட்டப்படுகிறது.

iii) முழுமையான கதையையுடையதும், கூத்து வடிவையுடையதுமான மூன்றாவது வகையான இக்கூத்தில், பல்வேறு வகைப்பட்ட பாத்திரங்கள், இடம் பெறுகின்றன. பல்சுவையும் நிரம்பப்பெற்ற மகிடிக் கூத்து இதுவாகும்.

மேலே குறிப்பிட்டமூன்றாவதுவகைக் கூத்தில் அனைத்து மகிடிக்கூத்துகளின் அம்சங்களும் பொருந்தியிருக்கின்ற காரணத்தால் அதனை மட்டும் இங்கு ஆய்வுக்கெடுத்து நோக்குவோம்.

## 4. இக்கூத்தின் கதை

கீழைக்கரையிலிருந்து பெரிய மரைக்காயரும், சின்ன மரைக்காயரும் வியாபாரஞ் செய்வதற்காகத் தோணியில் இலங்கைக்கு வருவர். இவர்களுடன் பிள்ளைமுத்து என்னும் இளைஞனும் வேறு சில முஸ்லீம்களும் சேர்ந்து வருவர்.

முல்லைத்தீவுக் கடற்கரையில் இறங்கிய இவர்கள் ஊரூராகச் சென்று வியாபாரஞ் செய்வர். அப்பொழுது சில குறவர்களின் நட்பைப் பெறுவர். குறவர்களிடமிருந்து தேன், மான்தோல், சந்தனக் கட்டை நோவெண்ணெய் முதலியனவற்றைப் பெற்று அவற்றுக்குப் பதிலாகப் பாசிமணி, கண்ணாடி வளையல்கள், துணிவகைகள் என்பனவற்றைப் பண்டமாற்றாகக் கொடுப்பர்.

முள்ளியவளையிலுள்ள கோயிலில் திருவிழாவொன்று நடப்பதாகவும் அங்கேபோனால் வியாபாரஞ் செய்யலாமென்றும் குறவர்கள் மூலம் முஸ்லிங்கள் அறிவர். எனவே குறவர்களையும் தங்களுடன் அழைத்துக் கொண்டு கோயிலுக்குப்போய் கோயில் வீதியருகில் வியாபாரஞ் செய்யத் தொடங்குவர்.

புதிய வியாபாரிகளைக் கண்ட பிராமணர்கள் தமது உத்தரவைப் பெறாமல் எப்படி வியாபாரஞ் செய்ய முடியுமென முஸ்லீம்களை விரட்டுவர். அதற்கு முஸ்லீம்கள் தங்களுக்கு இந்நடைமுறை தெரியாதெனவும் அதற்காக வருந்துவதாகவும் கூறி வியாபாரஞ் செய்ய அனுமதி கேட்பர், பிராமணர்கள் அனுமதி வழங்குவர்.

கோயில் திருவிழா நடைபெறும்போது வியாபாரஞ் செய்து கொண்டிருந்த முஸ்லீம்களிடம் குத்துவிளக்கு, தாம்பாளம், மணி முதலிய வெண்கலப் பொருள்களைப் பிராமணர்கள் வாங்குவர். அப்பொழுது பெரிய மரைக்காயர் தங்களிடம் நல்ல கருவாடு இருப்பதாகவும் அதை விலை கொடுத்து வாங்கும்படியும் பிராமணர்களைக் கேட்பர். அதனால் ஆத்திரமடைந்த பிராமணர்கள் உடனடியாக முஸ்லீம்களை முல்லைத்தீவைவிட்டு ஓடும்படி கட்டளையிடுவர். இதனால் ஆத்திரமும் அவமானமுமடைந்த முஸ்லீம்கள் தங்களை யாராலும் விரட்ட முடியாதென்றும் அவ்வாறு முயற்சி யெடுப்பவர்களை மந்திர பலத்தினால் அழிக்குமாற்றல் தமக்குண்டென்றும் கூறுவர். ''உங்களுடைய மந்திர பலத்தை விட எங்களுடைய மந்திரபலம் கொஞ்சமும் குறைந்ததல்ல'' எனப் பிராமணர்களும் எடுத்துரைப்பர்.

இருசாராருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் மந்திரப் போட்டியொன்றுக்கு வழிவகுக்கும். பிராமணர்கள் வைக்கும் ஆறு கும்பங்களை எடுப்பதோடு கொடிமரத்திற் கட்டி வைக்கப்பட்டிருக்கும் பண முடிப்பையும் எடுத்தால் முஸ்லீம்கள் வென்றவர்களாகக் கருதப்படுவார்கள் எனவும், முஸ்லீம்கள் வென்றால் பிராமணர்கள் நாட்டை விட்டோடிவிட வேண்டும் எனவும் முடிவு செய்யப்படும்.

சாம்பானை அழைத்துப் பறை அறைந்து ஊரெல்லாம் இச்செய்தி அறிவிக்கப்படும். சாம்பான் சாம்பாத்தியைப் பிரிந்து தேடும் காட்சியும் இக்கூத்தில் இடம்பெறும். போட்டி தொடங்கியதும் பெரிய மரைக்காயர் பேய்க்குஞ்சுகளை அழைத்துக் கும்பங்களை எடுக்கச் சொல்வர். முத்துக் கறுப்பன், முத்து வீரன் எனும் பேய்க்குஞ்சுகள் எவ்வளவோ முயன்றும் கும்பங்களை எடுக்க வியலாது திண்டாட, புரோகிதர்

பேய்க்குஞ்சுகளைக் கொடிமரத்துடன் கட்டிவிடுவார்.

பெரிய மரைக்காயர் பத்ததியை (ஏட்டை) எடுத்து ஓதுவர். பேய்க் குஞ்சுகள் கட்டிலிலிருந்து விடுபடும், மரைக்காயர் பேய்க்குஞ்சுகளை அழைத்துத் தமது கையைப் பிளந்து இரத்தம் குடிக்கக் கொடுப்பர். பின்னர் பத்ததியை ஓதி மீண்டும் கும்பங்களை எடுக்க அனுப்பவர்.

பேய்க்குஞ்சுகள் ஒவ்வொரு கும்பமாக எடுக்கும், முஸ்லீம்கள் பக்கத்தினர் ஆரவாரஞ் செய்வர். பிராமணப் புரோகிதர் தீவிரமாக யோசிப்பர். இறுதியில் மண்ணில் வேப்பிலையால் நீரைத் தெளித்துக் காளிக்குரிய சக்கரத்தைக் கீறி மந்திரத்தைச் செபிப்பர். அப்பொழுது அங்கே நின்ற சாம்பாத்திமேல், காளி உக்கிரமாக வெளிப்பட்டு ஆடும். பேய்க்குஞ்சுகளை, அவள் தலைமயிரிற் பிடித்து இழுத்துக் கும்பங்களை வைத்துவிட்டு ஓடும்படி கட்டளையிடுவாள். பேய்க்குஞ்சுகள் தப்பினோம் பிழைத்தோமெனக் கும்பத்தைவைத்துவிட்டு ஓடிவிடும். இதைக்கண்ட முஸ்லிம் வியாபாரிகளும் மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடுவர். பிராமணர்கள் வெற்றிவிழாக் கொண்டாடுவர். முஸ்லிம்கள் ஆடும் மகிடியில் பிராமணர்கள் தோல்வியுற்று ஓடுவதாகக் காட்டப்படும் (தகவல் அ.சு.வேலுப்பிள்ளை)

## 5. ஆடுகளம்

பெரிய வெளியொன்றில் ஏறத்தாழ நூறுயார் நீளமும் முப்பது யார் அகலமுமுள்ள நீள்சதுரப் பரப்பைத் தடிகள் நட்டுக் கயிற்றினால் வேலிபோலமைத்து ஆடுகளமாகத் தயார் செய்வர். நீள்சதுரம் பொதுவாகக் கிழக்கு மேற்காகவே இருக்க வேண்டும். மேற்குப் புறத்திற் சிறிதொரு பந்தலிட்டு வெள்ளை கட்டுவர். பந்தலுள்ளே கும்பம் வைப்பர். இதுவே இந்துக்கோயிலாகும். கிழக்குப்புறத்தில் இன்னொரு பந்தலிட்டு வெள்ளை கட்டுவர். இதுவே முஸ்லீங்களின் களஞ்சியசாலையாகும்.

கோயிலுக்கு முன் கொடிமரம் நாட்டப்படும் இக்கொடிமரத்தைச் சுற்றி ஆறு கும்பங்கள் வைக்கப்பட்டிருக்கும். கோயிலாகவுள்ள பந்தலில், மாவிலைகள், மாலைகள், தோரணங்கள் என்பனவும் கட்டப்படும். முஸ்லீங்களின் பந்தலருகே தோணியொன்று வைக்கப்படும். மூங்கிலாலும் வெள்ளைத் துணியாலும் இது அழகுற அமைக்கப்பட்டிருக்கும். தோணியின் கீழ்ப்புறம் மூடப்படுவதில்லை. களஞ்சியசாலையிற் சில விற்பனைப் பொருள்களும், சாக்கு மூடைகளும் வைக்கப்படும். பந்தலின் உச்சியில் ஒரு கொடிச்சீலை பறக்கவிடப்படும். இதிற் பிறையும் நட்சத்திரமும் வரையப்பெற்றிருக்கும்.

## 6. ஒப்பனை

ஒப்பனை செய்வதில் மகிடிக்கூத்தர்கள் மிகுந்த கவனஞ் செலுத்துகிறார்கள். பிராமணப் புரோகிதர்களாக நடிப்போர் பட்டுவேட்டி உடுத்து, அரையில் அகன்ற கரையுள்ள சால்வையைக் கட்டிக்கொள்வர். கழுத்தில் உருத்திராக்க மாலையும் தோளில் பூணூலும் அணிவர். விபூதி தரித்து சந்தணத்தாற் பொட்டுமிட்டுக் கொள்வர். கையில் ஏடும். மந்திரக்கோலும் தலைமைப்புரோகிதர் வைத்திருப்பர்.

பெரியமரைக்காயரும் சின்னமரைக்காயரும் லுங்கி (சாரம்) அணிந்து மேலே சட்டைபோட்டு அதன்மேல் கோட்டு (Coat) அணிவர். தலையில் முஸ்லிங்களுக்குரிய தொப்பியணிவர். சிறுதாடி மீசை என்பன வைத்துக்கொள்வர். பிள்ளை முத்து எனும் முஸ்லிம் இளைஞன் அழகிய லுங்கியின் மேல் முழந்தாள் வரைக்கும் நீளமான சர்வாணி போன்ற வேலைப்பாட்டுடன் கூடிய சட்டையணிவான். பட்டுத்துணியொன்றைச் சால்வைபோல அணிந்து கொள்வான். கழுத்திலும் கையிலும் முறையே சங்கிலி, காப்பு என்பனவற்றைப் போட்டுக் கொள்வான். தலையில் வேலைப்பாட்டுடன் கூடிய அழகிய வட்டத்தொப்பி வைத்துக் கொள்வான்.

பேய்க்குஞ்சுகள் கரிய தோற்றமுடையவை. கரிய துணியாலாகிய உடைகளணிந்து முகம்முழுவதும் கரிய வண்ணம் தீட்டிக் கொள்கின்றனர். முதலில் முத்துவெள்ளையைப் பூசி, அதன் பின்னர் கரியவண்ணத்தைப் பூசுவது வழக்கம். வாய்,புருவம் ஆகிய இடங்களில் வெள்ளை வண்ணம் தீட்டிக் கொள்கிறார்கள். உதட்டில் சிவந்த வண்ணம் பூசுவர். பேய்க்குஞ்சுகளின் தலைவனுக்குக் கோரைப் பற்கள் பெரிதாக வைக்கப்படும்.

குறவர்களுக்கு, இன்று ஈழத்திற் காணப்படும்குறவர்கள் போலவே வேட்டி உடுத்து சட்டை போட்டுச் சால்வையால் தலைப்பாகை வைத்துக் கொள்கின்றனர். பெரிதாக சந்தணப்பொட்டுவைத்து அதன்மேற் குங்குமப் பொட்டுமணிவர். குறவர்கள் கையிற் பாசிமணி, சங்குமணி, மகுடி, பாம்புப் பெட்டி என்பனவற்றை வைத்திருப்பர்.

சாம்பான் அரைக்காற்சட்டையணிந்து, திறந்த கரிய மேனியுடனும் கறுத்த ஆட்டுக்கடா மீசையுடனும் காணப்படுவான். கழுத்திற் பெரிய பறையும் கைகளில் பறையறையும் சிறு தடிகளும் வைத்திருப்பான். சாம்பாத்தி சக்கிலிக்கொண்டையணிந்து புடவையை சட்டையணியாமல் மார்பின்மேற் கட்டிக் கொள்வாள். இக்கூத்தில் ஆண்களே பெண்வேடமிட்டு நடிப்பர்.

## 7. ஆடப்படும் காலமும் நேரமும்

மகிடிக் கூத்தைப் பண்டிகைக் காலங்களிலேயே ஆடுவது வழக்கம். பெரும்பாலும் தைப்பொங்கல் வருடப்பிறப்பு ஆகிய பண்டிகைக் காலங்களிலும் கோயில் திருவிழாக் காலங்களிலும் இந்துக்கள் ஆடுவர். முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் இடம்பெறும் கந்தூரியையடுத்து இதனை ஆடுவதாகக் கூறுகிறார்கள் (தகவல் எம்.எம். மிஸ்கின் பாவா) இக்கூத்துப் பெரும்பாலும் முஸ்லிங்களால் பகலிலும் இந்துக்களால் இரவிலும் ஆடப்படுவது வழக்கம் (தகவல்: செல்லத்துரை) இது நாட்டுக் கூத்துப்போல நீளமானதல்ல. மூன்று மணித்தியாலங்களுக்கு மேற்படாமலே இக்கூத்து ஆடப்பட்டதாகத் தெரிகிறது.

## 8. ஆடுவோர் - (கூத்தர்கள்)

மகிடிக்கூத்தை ஆடுவோர் பெரும்பாலும் விவசாயம் செய்யும் தொழிலாளிகளாவர். இவர்கள், சமய நம்பிக்கையுடன் ஆடும் கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்துப் போலன்றி, இதனை ஒரு பொழுதுபோக்குக்குரிய கூத்தாகவே ஆடிவருகின்றனர். மிகவும் அண்மைக்காலம் வரை ஆடிவரப்பட்ட இக்கூத்து நாட்டின் போர்க்காலச் சூழலினால் ஏற்பட்ட புலம்பெயர்வு, அமைதியின்மை என்பன காரணமாக ஆடப்படுதல் அருகிவரத் தொடங்கிவிட்டது.

## 9. பார்வையாளர்கள்

கிராமப்புறத்தில் வாழும் அனைவரையும் கவரும் பொழுது போக்குக்குரிய கலைவடிவமாக இது உள்ளது. குழந்தைகள் முதல் முதியோர் வரை இக்கூத்தினை விரும்பிப்பார்த்துச் சுவைப்பர். விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட இவர்களிடையே நகரப்புற நாகரீகத்தின் பாதிப்பு மிகவும் குறைவு. அதனால் சினிமா முதலிய கலைவடிவங்களின் பாதிப்பும் தொடக்ககாலத்தில் இருக்கவில்லை. அத்துடன் சாதி சமய வேறுபாடின்றியும் இக்கூத்து எல்லோராலும் ஆடப்பட்டும் பார்க்கப்பட்டும் வந்தது. சினிமாவின் வருகையின் பின்னர் இக்கூத்து ஆடப்படுதல் குறைந்துவிட்டதென்பர் செல்லத்துரை.

## 10. அளிக்கை முறை

ஆடல், பாடல், உரையாடல் ஆகிய மூன்றும் இணைந்தபடியே மகிடிக்கூத்து களரியேற்றப்படுகிறது. ஆடவும், பாடவும் முடியாதவர்கள் இக்கூத்திற் பங்குகொள்ள முடியாது. நாட்டுக் கூத்திற்போல இதிற் பக்கப்பாட்டுப் பாடுவோர் இருப்பினும், பெரிதும் நடிகர்களே பாடியாடுவர். இடைக்கிடை உரையாடல்களும் இடம்பெறும்.

## 11. ஆடல்

இக்கூத்திற் பிராமணப்புரோகிதர்கள் பெரிதாக ஆடுவதில்லை. ஆனால் இவர்களுடைய ஊழியர்களாகப் பணிபுரிவோர் ஆடுவர். பேய்க்குஞ்சுகளின் ஆட்டமும், சாம்பாத்தி காளி உருக்கொண்டு ஆடும் ஆட்டமும் துரிதமாகவும் பயங்கரமாகவும், உக்கிரமாகவும் இருக்கும். சாம்பாத்தியும் சாம்பானும் ஆடும் ஆட்டம் தனித்துவமானது. நகைச்சுவையுடன்கூடியது.

முஸ்லிங்கள் கப்பலில் பயணம் செய்வது, நங்கூரம் பாய்ச்சுவது, கரையில் இறங்குவது அனைத்தும் ஆட்டமும் அபிநயமும் நிறைந்தவை. கும்பத்தைப் பேய்க்குஞ்சுகள் எடுக்கச் செல்வதும் உலக்கையுடன் கட்டப்பட்டுச் சுற்றிச் சுற்றியாடுவதும் பார்ப்போரைக் கவரும் அற்புதமான ஆட்டங்களென்பர். (காரைநகர் சி. நாகமுத்து).

பாம்பாட்டும் குறவர்களும் சாத்திரம் சொல்லும் குறத்தியரும் ஆடும் ஆட்டம் நளினமானவை. மகிடி இசைக்கேற்ப இவர்கள் ஆடிக்காட்டுவர்.

## 12. தாளக்கட்டு

ஒவ்வொரு பாத்திரத்துக்குமென தாளக்கட்டுகள் சிறப்பாக உண்டு. அவை சிலமயம் தருக்களாக அல்லது சொற்பதங்களாகச் சொல்லப்படும். அவை வருமாறு;

**பிராமணர் வருகை:**

தந்தன தனதானா தந்தானே
தந்தன தனதானா தந்தானே
தந்தன தனதானா.

**பெரிய மரைக்காயரும் சின்ன மரைக்காயரும் வருகை.**

தனதன்ன தானின தன்னன்ன னானே
தனதன்ன தானின தன்னன்ன னானே

**பிள்ளைமுத்து வருகை.**

தந்தனத் தனத்தன தானினந் தானே
தந்தனத் தனத்தன தானினத் தானே

**பேய்க்குஞ்சுகள் வருகை.**

தக்கு தாகுதா தாகுதாகு தெய்
தக்கு தாகுதா தாகுதாகு தெய்

**சாம்பான் வருகை**

தந்தனத்தனத்தன னா தந்தானே
தந்தனத்தனத்தன தானினனா - தன
தானினனா

**சாம்பாந்தி வருகை**

தந்தத் தனத்தன தானதான
தந்தத் தனத்தன தானதான

**பறங்கித்துரையும் மனைவியும்**

தந்தத்தன தான தான - தன
தந்தத்தன தான தான

**குறவன் குறத்தி வருகை**

தகண தகணக ஜொம் தொம்
தகண தகணக ஜொம் தொம்



மேற்படி தாளக்கட்டுகளைச் சிலசமயம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மாற்றியும் கையாளுவதுண்டென்பர் ஆராச்சி முருகேசு.

## 13. பாடல்கள்

மகிடிக் கூத்துக்குரிய பாடல்கள், நாட்டுக்கூத்துக்குரிய மெட்டுக்களில், ஏனைய கூத்துக்களில் அமைவதுபோலவே பெரிதும் அமைந்துள்ளன. அவை உள்ளூர் அண்ணாவிமாரால் யாக்கப்பெற்றவை. சில, பல்வேறு தமிழ் இலக்கியங்களிலிருந்தும் பெறப்பட்டன. உதாரணமாக தேவார திருவாசகப் பாடல்களையும் குறவஞ்சி நூல்களிலிருந்து பெற்ற பாடல்களையும் குறிப்பிடலாம்.

முஸ்லிம் வியாபாரிகள் கப்பலில் வரும்போது பாடும் பாடல் வருமாறு:

''ஏலையேலோ தத்தெய்தாம் ஏலையே லோ
தத்தெய்தாம் ஏலையே லோ
மலையாள தேசத்து மந்திரம் செய்வோம்
மகிடி மாயம் எனும் தந்திரம் செய்வோம்
ஏலையே லோ தத்தெய்தாம் ஏலையே லோ
தத்தெய்தாம் ஏலையே லோ''

மேற்படி பாடலைப்பாடிய பின்னர் பாய் இறக்கி நங்கூரம் பாய்ச்சும்போது பாடும் பாடலடிகள் வருமாறு:

கீழைக்கரையில் சரக்கினை ஏத்திக்
கிழக்குக் கடலைக் கிழிந்துமே போது
வாளை சுறா கயல் பாயுது காக்கா
வடிவாகச் சுக்கானைப் பிடியடா நாணா
நந்திக் கட க்கரை (கடற்கரை) அந்தோ தெரியுது
நங்கூரம் பா (ய்) ச்சும் இடம் வந்து சே (ர்) ந்தது
பாயை இறக்கோணும் சின்ன மரிக்கார்
நங்கூரம் பாச்சோணும் காத நயினா.

கரையில் இறங்கியபின்னர் இவர்கள் லாலி ஆடுவர். லாலி ஆடுதல் என்பது பாட்டுப் பாடிய வண்ணமும் ஆடிய வண்ணமும் சாகச விளையாட்டுகளைக் காட்டுதலாகும். (வாளின் மேல் நடத்தல், வாழைப்பழம், தேங்காய் என்பனவற்றைத் தலைமேல் வைத்து வெட்டுதல், உடைத்தல் ஆதியன செய்தல்) அப்போது பறை, ரபான் ஆகிய வாத்தியங்களுக்கேற்பப் பின்வரும் பாடலைப் பாடுவர்.

''அல்லாவோ அக்பர் அல்லவோ அக்பர்
அல்லாவோ அக்பர் அல்லாவோ அக்பர்
ஆயிரம் பேரைப் படைச்சவனே லா இலாஹ் இல் அல்லாஹ்
அருபியான அல்லாவே லா இலாஹ் இல் அல்லாஹ்''

குறவன் குறத்தி பாடும் பாடல்கள் குறவஞ்சி முதலிய நூல்களிலிருந்து பெறப்பட்டன. இவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். தொடக்க காலத்தில் பாடிய பாடல்வரிகள் இவை என பின்வரும் பாடல்வரிகளை ஆராச்சி முருகேசு கூறுகிறார்.

''பாம்புப் புடாரங்கள் நாங்கள்
பறநாகமும் எங்களின் புள்ளை
பச்சையும் குத்துவோம் மூலிகை விப்போம்
பச்சைக் கிளிவள்ளி வேலர் எம்தெய்வம்.''

முஸ்லிங்கள் பிராமணருடன் வாக்குவாதம் செய்யும்போது பாடும் பாடலடிகள் பின்வருமாறு

''கீழைக்கரைச் முசுலிங்கள் நாம்
கிண்டல் செய்யவேண்டாம் ஐயர்
ஆளைப் பலியெடுப்போம் ஐயர்
ஆணவமே வேண்டாம் ஐயர்''

இதற்கு ஆத்திரத்துடன் பிராமணத்தலைமைப்புரோகிதர் பாடும் பாடலடிகள்.

''அத்தனைக்கும் வீரமா மோடா - எமை எதிர்க்க
அத்தனைக்கும் வீரமாமோடா
அத்தனைக்கும் வீரமாமோ
பித்தரே நீரோடி விடும்
இத்தரையில் நின்றீ ரென்றால்
சத்தியமாய்க் கொன்றிடுவோம்''

சாம்பான்பாடும் நகைச்சுவைப்பாடல்கள் வருமாறு:

''வெள்ளைக் குதிரை காலில் தடக்க
விழுந்தெழும்பி வெறிக்கப் பா க்கும் (பார்க்கும்)
கள்ளச் சாம்புவ ராசன் நானும்
வந்தேன் இந்தச் சபையினிலே''

''கள்ளுக் குடிப்பேன் கருவாடு தின்பேன்
கண்டபடி நான் சண்டை பிடிப்பேன்
கள்ளப் பொண்டாட்டியும் வைச்சிருப்பேன் நான்
கட்டின பொண்டிலைக் கலைச்சும் விடுவேன்''

பின்வரும் செய்தியை இவன் பாடலாகவே கூறுவான்.

''ஆவணி மாதம் ஆட்டோட்டாம் தேதி
ஆடு முட்டையிட கோழி குட்டி போடும்
சுப முகூத்தத்தில் எங்களூர் ஐயருக்கும்
கீழைக்கரை பெரிய மரைக்காயருக்கும் ஒரு
மகிடிப் போட்டி நடக்கவுள்ளது. எல்லோரும்
வந்து பாத்து நீதி வழங்கவேணும்.''

சாம்பாத்தி பாடும் பாடல் அவளுடைய ஒழுக்கமற்ற வாழ்வையும் சாம்பானின் ஒழுக்கமற்ற வாழ்வையும் சுட்டுவதாகவுள்ளது. இப்பாடல் பொருள் நகைச்சுவைக்காகச் சேர்க்கப்பட்டதாகவே கொள்ள வேண்டும்.

''பட்டுச் சேலைக்கு ஆசைப்பட்டொரு
பட்டாணிப் பையனை வைச்சிருந்தேன்-இந்தப்
பாழ்ப டுவானை நான் தேடித்திரிந்ததால்
பட்டாணிப் பையனைக் கையை விட்டேன்.''

''பச்சையரிசிக்கு ஆசைப்பட்டு ஒரு
பார்ப்பாரப் பையனை வைச்சிருந்தேன் - இந்தப்
பஞ்சப் பயலை நான் தேடியலைஞ்சதில்
பார்ப்பாரப் பையனைக் கையை விட்டேன்''

பட்டணம் காப்புக்கு ஆசைப்பட்டு ஒரு
தட்டாரப் பையனை வைச்சிருந்தேன் - இந்தத்
தட்டுவாணியை நான் தேடித்திரிந்ததில்
தட்டாரப் பையனைக் கையை விட்டேன்.

(தகவல்: வி. வல்லிபுரம்)

பேய்க்குஞ்சுகளை மந்திரம் சொல்லி அனுப்பும்போது பெரிய மரைக்காயர் பாடும்பாடல்.

பதுமலாகு தாப்பிடு மகனே
பதுங்குடா முத்துக் கறுப்பா

பதுங்கு பதுங்கு பதுங்குடா குஞ்சு
பாப்பான் கும்பம் வைக்கப் போறான்

பாப்பான் கும்பத்தைப் பறிச்சு வாடா
பாப்பான் தலையை முறிச்சு வாடா

(பதுமலாகு)

பிராமணப்புரோகிதர் பேய்க்குஞ்சுகளை உசார்ப்படுத்தி அனுப்பும்போது மேலே குறிப்பிட்ட பாடலை வேறுவிதமாக மாற்றிப்பாடுவார்.

''துள்ளு துள்ளு துள்ளடா குஞ்சு
துலுக்க னுயிரைக் கிள்ளடா குஞ்சு''

மகிடிக் கூத்தின்போது பக்கவாத்தியங்களாக பறை, ரபான், உடுக்கு கைத்தாளம் என்பனவற்றையே பயன்படுத்துவர். சுருதிக்காக துருத்தி எனும் வாத்தியத்தையும் பயன்படுத்தினர். யாழ்ப்பாணத்திற் சில இடங்களில் முகவீணையும் கையாளப்பட்டது (ஆராச்சி முருகேசு)

## 14. யாழ்ப்பாணக்கூத்தும் மட்டக்களப்புக் கூத்தும்

மட்டக்களப்பிலாடப்படும் மகிடிக் கூத்துக்கும், யாழ்ப்பாணத்திலாடப்படும் மகிடிக்கூத்துக்கும் நிறைய ஒற்றுமையுண்டு. மட்டக்களப்பில் மலையாளிகளின் குடியேற்றத்தைப் பிராமணர்கள் தடுத்து நிறுத்த எடுக்கும் முயற்சியே மகிடியில் ஆடிக்கட்டப்படுகிறது. இதுவே வேறுபாடாகும். ஆடல் பாடல் என்பனவற்றிலும் பிரதேச வேறுபாடு காரணமாகச் சிற்சில வேறுபாடுகளே உண்டு.

## 15. மகிடிக் கூத்தும் குழுமவரவும்

மகிடிக் கூத்துக்களை ஆராயும்பொழுது அவை குழுமவரவு பற்றியனவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்தின் நிலையான குழுமமும் (குடியும்) அவ்வப் பிரதேசத்தின் வந்தேறு குழுமமும் சம்பந்தப்பட்டதாகவே இக்கதைகள் யாவும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. வட இலங்கையிலாடப்பட்ட மகிடிக்கூத்துக்களிலிருந்து நிலையாக வாழ்ந்த பிராமணக்குடிகள் வந்தேறுகுடிகளான முஸ்லிங்களையும்

கத்தோலிக்க பறங்கியர்களையும் எதிர்த்துள்ளனர். மட்டக்களப்பில் குடியேறுவதற்கு வந்த மலையாளிகளைப் பிராமணர்களும் இந்துக்களும் எதிர்த்துள்ளனர்.

சிங்களமக்கள் மத்தியிற் ஆடப்படும் ''சொக்கறி'' எனும் கூத்தும் குழும வரவு பற்றியதாகவேயுள்ளது. ''சொற்களி'' எனும் சொல்லே சொக்கறியாகியது என்னும் கருத்தும் இதற்குச் சொல்லப்படுகிறது. இக்கதை, இந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறி வாழ முயன்ற ''ஆண்டி குரு'' ''சொக்கறி'' ஆகிய இருவருடைய கதையைக் கூறுகிறது. இதுவும் மகிடியை யொத்த கூத்தெனக் கருதமுடிகிறது. ஆனால் இதில் மந்திரப்போட்டி காணப்படவில்லை. எனவே இதுவரை ஆராய்ந்தனவற்றிலிருந்து மகிடி ஈழத்தமிழரிடையே காணப்படும் தனித்துவமான கலைவடிவமெனவும் இது குழுமரவு பற்றிய கூத்தெனவும் பெறப்படுகிறது. அத்துடன் ஈழத்தமிழ் மக்களுடைய நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கு ஊற்றுக்காலாகவும் இது அமைந்துள்ளது.

**செவ்வி காணப்பட்டோர்**

| | | |
|---|---|---|
| 01. | எஸ். செல்லத்துரை | முள்ளியவளை - முல்லைத்தீவு |
| 02. | வி. வல்லிபுரம் | முள்ளியவளை - முல்லைத்தீவு |
| 03. | அ.சு. வேலுப்பிள்ளை | முல்லைத்தீவு |
| 04. | மு. நாகர் | காரைநகர், |
| 05 | முல்லைமணி - சுப்ரமணியம் | முள்ளியவளை |
| 06. | சி. நாகமுத்து | காரைநகர் |
| 07. | எஸ். ஆபிரகாம் | பாஷையூர், யாழ்ப்பாணம் |
| 08. | ஆராச்சி முருகேசு | வன்விளாங்குளம், செட்டிகுளம் |
| 09. | செ. நல்லதம்பி | உடையார்கட்டு, வன்னி. |
| 10. | எம்.எம். மிஸ்கின் பாவா | முல்லைத்தீவு. |
| 11. | முத்துக்காக்கா | பெரியகடை, யாழ்ப்பாணம். |

**ஆய்வுக்கட்டுரை**

| | |
|---|---|
| கலாநிதி சி. மௌனகுரு | கிழக்கிலங்கை மரபுவழி நாடகங்கள். யாழ் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்ட்ட கலாநிதிப் பட்டத்துக்குரிய ஆய்வுக்கட்டுரை (1983) |

சின்ன தோணி போல வானில்
பிறை நிலவு நவழுது
கண்ணைச் சிமிட்டி நட்சத் திரங்கள்
மெல்ல மெல்ல அழைக்குது

தென்னங் கீற்று மெல்ல ஆடி
சின்னக் கிளியை எழுப்புது
வண்ணக் கனவு கலைந்த தென்று
காகம் ஒன்று கரையுது

சின்ன விளக்கில் சின்னத் தம்பி
என்ன அங்கே படிக்கிறான்?
சிந்தை தனை எங்கோ விட்டுக்
கண்ணை மட்டும் பதிக்கிறான்

என்ன உலகில் நிகழ்ந்த போதும்
இனிய தம்பி படியடா
உன்னை உலகம் வாழ்த்தும் நாளை
எடுத்து வை நல் அடியடா

சத்தியசீலன் கௌசலா
- வவுனியா

# ஒரு காவியப் பெண்ணின் தியாகம்

செல்வி க. நிறைமதி B.A,
வவுனியா

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்'' என்ற வள்ளுவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் கம்பர். ''கம்பநாடன் கவிதையிற் போற் கற்றோர்க்கு இதயம் கனியாதே'' என்ற புகழாரத்திற்கு உரியவனும் கம்பநாடனே! அருந்தமிழாள் இவன் கரத்தில் அழகு நடை பயின்றாள். இராம கதையை இரசித்துப் பாடியவன் கம்பன். ஆனாலும் இந்த வம்பன் ஆங்காங்கே பலதைத்தொடமால் விட்டான். இராமனது பாலபருவத்து அழகைக்கூட அத்தனை வருணிக்க வில்லையாம் கம்பர். காரணத்தைப் பலரும் பலவாறு கூறுவர். ஆனால் காரணமே சொல்ல முடியாத பல இடங்களும் உண்டு தான்.

எந்த வகைக் காவியத்திலும் நாயக நாயகியரை உயர்த்திப் பாடுவதே வழக்கம். அவர்கள் நலத்திற்காய்ப் பல்லவி பாடியோரை சமூகம் மறந்து விடுகிறது. போரிலே வெற்றிவாகை சூடியவன் வெற்றியைக் கொண்டாடுவானேயன்றி களப்பலியானவனைக் கருதுவானா? காவியத்தின் வெற்றிக்காகவும் முதல்வர்களை முதனிலைப் படுத்துவதற் காகவும் தம்மைத் தியாகம் செய்தோர் பலர். சில பாத்திரங்கள் தியாகத்திரு விளக்காகவே தீட்டப்பட்டு விடுகின்றன. கற்றோரும் மற்றோரும் அவற்றைக் கருத்தில் கொள்ளார். காலத்தின் சோதனைக்கு உட்படும் தகுதி கூட அவற்றுக்கு வழங்கப்படவில்லை.

இராமாயணத்திலே ''தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தோன்றிய தமியள்'' கைகேயியின் சூடான வரங்களால் வனமேவப்படுகையில்,

''மன்னவன் ப்ணியன்றாகில் நும்பணி மறுப்பனோ என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனே பெற்றதன்றோ''

என மும்மடங்கு பொலிந்த முகத்தினனாகி, வனம் புகப்புகுந்தான் அந்த இராகவன். அவன், கண்ணுங்கண்ணுங் கலந்து, ஓரிரு கணத்திலேயே காதல் வயப்பட்டு, கைத்தலம் பற்றிய மைத்தடங் கண்ணாள் ஜானகியும் ''அண்ணல் இருக்குமிடமே அடியவளுக்கு அயோத்தி'' என்று புறப்பட்டாள். இராகவனும் தடுத்திலன். தன் காற்றடம் தொடர கரம் நீட்டினான்.

இங்கேயெல்லாம் எந்த நெருடலும் இல்லை. இலக்கு வணனும் புறப்பட்டானே...! அங்கேதான் ஒரு சிக்கல்

''மகனே இவன் பின் செல்

தம்பி என்னும் படியன்று; அடியாரின் ஏவல் செய்தி

மன்னு நகர்க்கு இவன் வந்திடில் வா....

அன்றேல் முன்னம் நீ முடி!'' என்று ஆணையிட்டாள் அன்னை

**சுமித்திரை**

அன்னையின் ஆணையை சிரமேற் கொள்ள வேண்டியவன் தான் நல்ல புத்திரன். உண்மை! ஆனால் அந்தப் புதல்வனுக்கென்று எந்த பொறுப்புகளும் இல்லையா? அவனால் மதிக்கப்பட வேண்டியவர்கள் அன்னையும் அண்ணலும் அண்ணியும் தானா?

அவனால் மங்கல நாண் சூட்டப்பட்டு மனைவியாக்கப்பட்டவளுக்கு எந்த உணர்வுகளும் இருக்கலாகாதா? மணாளனே மங்கையின் பாக்கியம். அந்த மணாளனுக்கு மனைவி என்பவள் மூன்றாம் பட்சமான பொருளென்றால், அவளுக்கு வேறு யார் மகத்துவம் தருவார்கள்? ஒரு கணமேனும் அவளது உள்ளத்தை ஊன்றிப்பார்த்தவர்கள் யார்? இலக்குவணனுக்குப் பத்தினியான ஊர்மிளையின் பக்கத்தைக் கம்பன் ஏன் ஆழப்படுத்தவில்லை? அமிழ்ந்து பார்க்கவில்லை? அது அவசியமற்ற பக்கமென கருதப்பட்டதா?

ஊர்மிளை மட்டும் பெண்ணில்லையா? எந்த இடத்திலும் இலக்கு வணன் ஒரு அரக்கியை மணந்ததாகக் கம்பர் காட்டவில்லையே! ஜானகிக்கு இருக்கும் பெண்மையுணர்வு, பதிபக்தி ஊர்மிளைக்கு மட்டும் இருந்திருக்காதா? அது பற்றி சிறிதளவானது கம்பர் காட்டியிருக்கக்கூடாதா?

ஒரு வேளை ஊர்மிளையும் சீதையைப் போலவே வனம்புகும் விருப்புள்ளவளாக, உடன் புறப்பட்டபோது இலக்குவணன் அவளைத் தடுத்திருப்பான் போலும். தனது சேவைகளுக்கு அவள் தடையாயிருப்பாள் என கருதியிருக்கக்கூடும். அண்ணனுக்கும் அண்ணிக்கும் சேவை செய்வதை பிறவி இலட்சியமாகக் கொண்டவனல்லவா அவன்? ஆக ஊர்மிளையால் தனது கவனம் கலைக்கப்படலாம் என்று கருதி, அவளைத் தனது நினைவுடனேயே, ஒன்றல்ல..இரண்டல்ல பதினான்கு ஆண்டுகள் வாழச் சொன்னானோ இலக்குவணன்? அப்படித் தான் இருக்க வேண்டும்!

வனத்திலே இராமனும் சீதையும் சேர்ந்து வாழ்ந்த போது, இலக்கு வணன் பற்றிச் சிந்திக்காமல், அவனை ஒரு காவற்காரனாகக் கம்பர் ஆக்கிவிட்டார். இராவணனது சிறையிலே சீதை இருக்கையிலே

'அரிய மஞ்சினொடு அஞ்சனமை முதலிய

கரிய காண்டலும்....'

இராகவன் நினைப்பு அவளை வாட்டியதாகவும்,

'அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும்

விருந்து கண்டபோது என்னுறுமோ...'

என்று விம்மியதாகவும் எழுதினானே கம்பன்! அந்த வேளையிலெல்லாம் இன்னொரு பெண்மயிலும் கணவனைப் பிரிந்து வாழ்கிறாளே என்பதைக் கம்பர் ஏன் கருதவில்லை?

உண்மையில் வனவாசமும் சந்நியாசமும் அனுபவித்தது யார்? வனத்திலே இருந்தாலும் இராமனும் சீதையும் சுய உணர்வுகளுக்கு வடிகால் தேடியேயிருந்தனர். அரண்மனை அகன்ற காடான போதும் இல்லறம் நல்லறமாகவே தொடர்ந்தது. அப்பாலும் சீதை சிறையான பின்னரும் சீதையைச் சுற்றி எண்ணங்களைப் பின்னி அவளை விடுவிக்கும் நோக்கத்திலேயே திரிந்தார்கள்.

ஆனால் ஊர்மிளை? கணவனில்லாத சுவர்க்கமும் நரகம் என்பதற்கு உதாரணமாகத்தானே வாழ்ந்திருப்பாள்? இல்லறத்தில் இருந்தாலும் ஊர்மிளை ஒரு துறவி போல வாழ்ந்தாளாம். ஆன்மீக நெறியிலே தன்னை இட்டுக்

கொண்டாளாம் நல்லாடை நகை துறந்து மிகச் சாதாரணமாக வாழ்ந்தாளாம் என ஒரு வானொலி நாடகம் இயம்பியது. அப்படியானால் இவள் வனத்திற்கு வந்தே தீருவேன் என்று அடம்பிடித்திருந்தால் இலக்குவணன் யமனாகக் கூட மாறியிருப்பானோ?

கம்பர் பரதனதும் சத்துருக்கனதும் மனைவியர் பற்றியும் கூட குறிப்பிட வில்லையே! அப்படியிருக்க ஊர்மிளைபற்றி மட்டும் கம்பர் உருகவில்லையே என்று கேட்பது நியாயம் தானா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். ஊர்மிளைக்கும் அவர்களுக்கும் இடையிலே ஒரு வேறுபாடு உள்ளது. அவர்கள் கணவனைப் பிரிந்து வாழும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகவில்லை. ஊர்மிளைக்குத்தான் அந்த அபாக்கியமான நிலைமை. இராமன் சீதையின் புகழுக்காகத் தேய்ந்த சந்தனங்களுள் இவளும் ஒருத்தியாக இருக்க, கம்பர் எதற்காக ஊர்மிளை பற்றி எண்ணமறந்தார்? எண்ணம் மறந்தார்? இவளது துன்பம் பெரிதில்லை என்பது கம்பரின் எண்ணமா?

ஊர்மிளைக்கு இலக்குவணன் கொடுத்த இடம் என்ன? அவளுக்குக் கிடைத்த சுகந்தான் என்ன? ஊருக்கும் பேருக்குமா திருமணம்? இராமனுக்குத் தன்னை அர்ப்பணித்த வகை பிறர்நலம் பேணும் பெருந்தகையாயிருந்த இலக்குவணன், ஊர்மிளையளவில் ஒரு சுயநலக்காரனல்லவா? கணவனது நினைப்புடனேயே ஒரு பெண்ணால் வாழ்ந்து விட முடியும். அவனது நினைப்பை நெஞ்சில் சுமந்து அவனுக்காகவே அழிந்து போகவும் அவளால் முடியும். புற உணர்வுகளைத்தள்ளி, மணவாழ்க்கையை மன வாழ்வேயானாலும் ஏற்றுக் கொள்ளமுடியும் பெண்ணால். ஆனால் அந்த கணவனுக்கு என்று மனைவி நிமித்தமான கடமை ஒன்று இல்லையா? தன் கரம் பற்றியவனுக்கு தன்னையே கொடுத்த ஊர்மிளை பெற்ற உரிமை என்ன?

குற்றத்திற்குரியவன் இலக்குவணனா? சொல்லாது விட்ட கவிச்சக்கர வர்த்தியா? மெழுகுதிரி எரிகையிலே, திரி எரிவதற்கு மெழுகு தான் எண்ணெயாகிறது சரி. ஆனால் திரியில்லாத மெழுகு உருகுமேயன்றி எரியாது. ஆனால் மெழுகு பற்றியே உருகிப் போகும் உலகம், தன்னையே அழித்து ஒளிவழங்கும் திரிபற்றி யார் பேசுகிறார்கள்?

ஐயா கம்பரே என்னையா காரணம்? ஊர்மிளை மீது உமக்கென்னையா கோபம்? இலக்கியக் கடலில் அமிழ்ந்து முத்தெடுப்பவர்களுக்கு இது சிக்கலே இல்லாத முடிச்சாகத் தோன்றலாம். காரணமும் அவசியமுமற்றதான பிரச்சனையாகத் தோன்றலாம். பலர்வாழ சிலர் மாழவும் மறையவும் வேண்டிய உலக நியதியை கம்பர் சொல்லாது சொன்னாரா? இது செயலின்மையில் செயலா? எதுவானாலும் சீதை, கண்ணகி, சாவித்திரி, நளாயினி, நல்லதங்காள் வரிசையில் நாமாவது ஊர்மிளையையும் சேர்த்து விடுவோம்.

# கவிபாட நேரமுண்டோ?

*வீடுகள் அழிந்த கோலம்*
*விளைபயிர்கள் அனைத்தும் நாசம்!*
*காடுகள் போல ஊர்கள்*
*காட்சிழைக் காணும் நேரம்!*
*வாடுதல் விட்டு இந்த*
*வையகம் தன்னைப் பற்றி*
*பாடுதல் முடியாதொன்று*
*கவி பாட நேரமுண்டோ?*

*உறவினில் பாதிப் பங்கு*
*உயிரிழப்ந்திட்ட வேளை!*
*சிறப்புகள் யாவும் குன்றி*
*சீரழிவுற்ற காலம்!*
*மறைவினில் தப்பியோடி*
*மனிதர்கள் ஒதுங்கும் நேரம்!*
*குறையினை மறந்து நாம்*
*கவி பாடிட நேரமுண்டோ?*

*தம்பியை இழந்த அண்ணன்!*
*தமக்கையை இழந்த தங்கை!*
*வெம்பியே தலைவன் சாக*
*வீரிட்டு மனைவி ஓலம்!*
*வம்பவர் ஆதிக்கத்தால்*
*வந்திடும் மக்கள் வெள்ளம்*
*அம்மம்மா பார்த்த பின்னும்*
*கவி பாடிட நேரமுண்டோ!*

சபாரெத்தினம் இந்திரசிறி
- திருமலை

# பழைமையும் புதுமையும்

கலாசூரி
வெற்றிவேல் விநாயகமூர்த்தி

தேனினுமினிய செந்தமிழ் மொழியை இன்னுமின்னும் புகழ்ந்து பாராட்டிக் கொண்டேயிருக்கலாம். தமிழராகிய நாம் பல மொழிகளை அறிந்த பின்னே பாராட்டுவது பொருத்தமுறலாம். எனினும் பல மொழியறிந்த பிற மொழியாளர், பாராட்டுவதே மிகப்பொருத்தமுறும். அந்த வகையிலும் இந்தக்காலத்தில் எந்தமிழ்மொழி பாராட்டப்படு வதறிந்து பெருமைப்படுவோம்; பெருமகிழ்ச்சியுறுவோம்!

அண்மைக்காலத்தே வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியார் பல மொழிகளை அறிந்திருந்த படியாலே

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாது தெங்கும் காணோம்''

எனப்பாடிப் போற்றினார். ஆனால் தமிழ்மொழியை மட்டுமேனும் நன்கறியாதிருக் கும் நிலையில் தமிழ்மொழி விமரிசனத்தில் ஈடுபடுவது தகாத செயலல்லவா. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் புகழோடு நிலவும் இலக்கிய இதிகாசங்களில் குற்றங்குறை உண்டு எனக்கூறிப் புறக்கணிக்கலாமா? காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களும் செயல்க ளும் இருந்தால் தகுந்த முறையில் தமிழ்ச் சான்றோர் ஆவன செய்யத்தான் வேண்டும். ஆனால் எடுத்ததற்கெல்லாம்.

''அரைத்த மாவை அரைத்தலும்''

''குத்திய அரிசியைக் குத்தலும்'' என்றெல்லாம் கூறிக்கொண்டு தேவையானவற் றையும் புறக்கணிக்கலாமா? கலாசார விழாக்கள் களைகட்டி வருகின்ற இக்காலவோட் டத்திலும் பழந்தமிழ் இலக்கியத்தைப் புறக்கணிக்கலாமா? காலத்துக்கேற்ற கருமங்களைக் கொள்ள வேண்டாமா?

''........நாமமது தமிழரெனச் சொல்லியிங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ சொல்லீர்! தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டும்''.

என்று அறைகூவலும் விட்டாரல்லவா அதே பாரதியார்! எனவேதான் பழமையோடு புதுமையினையும் வரவேற்றுச் செந்தமிழை வளர்ப்போம். புதுமையிலும் பொருத்தமான வற்றையே ஏற்போம்! உதாரணமாகச் சில உதாரணங்கள். இலக்கண முறையில்லாவிடி னும் சரி, பிறமொழிச் சொல்லாயினும் சரி, விளக்கமுறப் பொருள்காட்டிப் பழக்க

முற்றுவரும் சொற்களைப் பயன்படுத்துவோம்.

சைக்கிள், பொலிஸ், றேடியோ, றப்பர், ரஷியா, லண்டன், ருக்மணி, பரீட்சை, டாக்டர், எஞ்சினியர் போன்றவைகளைத் திசைச் சொற்கள் என்றவகையில் சேர்க்கலாந்தானே. மேலும் வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும் அறியாமல் படித்தவர்களும் பத்திரிகையாளர்களும் பிழைவிடுகின்றோம். உதாரணமாக ஒன்றிரண்டு வாழைபழம், கலிதொகை, நாய்குட்டி, தமிழ்பாடம், கலாச்சாரம், காளிக்கோயில், பாதக்கமலம், மெய்க்காவலர் இன்னும் புணர்ச்சிச் சொற்களிலும் உடப்படுமெய்ச் சொற்களிலும் படிப்பிக்கும் ஆசிரியர்கள் கூடப்பிழைவிடும் நிலை நீடிக்காதிருக்க வேண்டும். இவற்றோடு பழமையென்று தள்ளுவதும், புதுமையென்று வரவேற்பதும் சிந்தனையில் இடம்பிடிக்க வேண்டியன. முன்பு ஒரு கலாசார வெளியீட்டு மலரிலே சிலப்பதிகாரத்தைச் சாடுவது போன்ற ஒரு நவீன கவிதையொன்று கண்டேன். அதனால் தொடர்ந்து சுருக்கமாகச் சில எடுத்துக்காட்டுக்ளைக் காட்டி தேவையெனக் கண்டதை உரைக்கின்றேன்.

''அரைத்த மாவை அரைத்தாலும்'' அதிலும் பயன்காண்கின்றோமே. மேலும் மேலும் சில அறிவுரைகளைக் கண்டறிகின்றோமே!

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தெழுந்த ''சிலப்பதிகாரம் முற்காலத்துக்கும் பிற்காலத்துக்கும் நடுவண்நின்று தமிழின் கலங்கரை விளக்கமாய் இருமருங்கும் பேரொளிவீசி நலம் புலப்படுத்தும் பெருமையுடையதாம்'' என்று 1942 ஆம் ஆண்டில் வெளியாக்கிய மூலமும் உரையுமான சிலப்பதிகாரத்திலே பாகனேரி பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் கூறியுள்ளார்கள். அத்தோடு தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் எனும் பழைய செந்தமிழ் நூல்கள் மூன்றையும் குறிப்பிட்டு தொல்காப்பிய இலக்கணமும் திருக்குறளின் அறமும் சேர்ந்திணைந்த செந்தமிழ்க் காப்பியமே சிலப்பதிகாரம் என்றும் கூறியுள்ளார்கள்.

இப்பெருங்காப்பியத்துக்கு அரும்பதவுரை ஒன்றும், அடியார்க்கு நல்லாருரை ஒன்றும் இதற்கு முன்பு உண்டெனினும், அதனையடுத்து டாக்டர் உ. வே. சாமிநாதஐயரவர்கள் மேலும் திருத்தமாகப் பதிப்பித்தும் மற்றுமொரு சிறந்த பதிப்பு வேண்டப்படுவதாயிற்று; என்றே அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராயிருந்த, பல புலமைவாய்ந்த நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களால் நூல் முழுமைக்கும் உரையெழுதுவித்துப் பதிப்பித்துள்ளமை இக்காலத்தவராகிய எம்மவர்க்கு வாய்ப்பாகிவிட்டது. இருந்தும் இன்னும் சில காலத்தால் மேலான விளக்கவுரைகளோடு வெளிவந்து மதிப்பு கூடிக்கொண்டேயிருக்குந் தன்மையதுதானே சிலப்பதிகாரம். எம்போன்றோர்க்கு பருவத்துக்குப் பருவம் சிந்னைக்கு வேலை கொடுக்கும் நிலையிலும் சிலப்பதிகாரம் இருந்து கொண்டிருப்பதை நோக்கத்தான் வேண்டும்.

இளமையிலிருந்தே கண்ணகை கதையறிந்து சிலப்பதிகாரத்திலே கொண்ட சிறந்த பற்றுக் காரணத்தால் சென்ற 1993 ஆம் ஆண்டு ''கண்ணகையும் தன்னகையும்'' என்றவொரு சிறுநூலையும் ஆக்கி ''வாழ்வுக்குதவும் வாழும் இலக்கியம்'' என்ற தொடரிலே தலைப்புக் கொடுத்து;

''சிலம்புக் கதையில் சிலவற்றை
அலம்பு கின்றேன் என்பார்கள்
அலம்பு கின்றேன் என்றாலும்
வலம்புரிச் சங்கு முத்தாகும்'' எனச் சில பாடலடிகளையும் பாடி, வித்துவான் பண்டித வி. சீ. கந்தையா (B.O.L) சிந்தாமணி, தினபதி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்களது பாராட்டுரையுடன் வெளியிட்டேன். அதனால் பலராலும் பாராட்டப்பட்டேன். எனினும்,

''பண்டு தான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென
வினை விளை காலம் ஆதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் தேரானாகிக்

கன்றிய காவலர்க் கூஉய்அக் கள்வனைக்

கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு (பதிகம் 25 - 30)

என்ற சிலப்பதிகாரப் பாடலடிகள் சிந்தனையில் இடம்பிடித்து. ''அரைத்த மாவையே அரைப்பது'' போல மேலும் மேலும் படித்தாய்ந்து உணரத் தூண்டுகின்றன.

''அக்கள்வனைக் கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு'' இதுதான் பாண்டியன் கட்டளையா? அல்லது கொலைக்களக் கதையில் காட்டிய பாடலடிதான் கட்டளையா? பதிகம் இளங்கோவால் பாடப்பட்டதா? இல்லையேல் பதிகம் என்று பிறரால் பாடப்பட்டதா?

நான்காம் ஐந்தாம் வகுப்புகள் நாம் படிக்கின்ற காலத்திலே ''கொண்டுவா'' என்ற சொல்லே திரிவுபட்டு ''கொன்றுவா'' என்று வினைப்பயனாகக் கூறிவிட்டதாக ஆசிரியர் கூறக்கேட்டுள்ளோம். ஆனால் நான் ஆசிரியனாக, நூல் ஆசிரியனாகவெல்லாம் ஆகிவிட்ட இவ்வேளையிலும் இந்த ஐயப்பாடு தீர்ந்தபாடாயில்லை.

அடியார்க்கு நல்லார் அவர்களும் உரையிலே ''அக்கள்வனைக் கொல்லச் சிலம்புடன் கொணர்க ஈங்கு'' என்பதாகவே பொருள் கூறியுள்ளமை பொருத்தமற்றதென்றே இப்பதிப்பின் பதிப்புரையிலே விளக்கமுடன் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், பண்டிதவித்துவான்களின் உறவாடலின் போதும் இதுபற்றிய சர்ச்சை ஏற்பட்டதுண்டு. எவ்வாறேனும் நான் உணர்ந்து கொண்ட அளவில் பாண்டியனிடம் முழுக்குற்றச்சுமையைச் சுமத்தமுடியாதுள்ளது எனாபதாகும். பதிகக்கூற்றுப்படியோடு மேலதிக விளக்கங் கொடுக்கும் கதையின் பாடலடிகளும் இதனை நன்கு விளக்க முறச்செய்கின்றன.

''கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனென
வினை விளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகி
ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு'' (16 145 - 153)

இங்கு காட்டப்பட்டுள்ள கொலைக்களப் பாடலடிகள் நன்கு விளக்கப் பாண்டியனைக் குற்றவாளியாகக் காணமுடியாதிருக்கின்றதைத் தெளிவுறக்காட்டுகின்றன.

''என் தாழ்பூங்கோதை தன் காற்சிலம்பு, கன்றிய கள்வன் கையதாகில்'' அஃதாவது இராணியின் சிலம்பைக் களவாடிய கள்வனது கையிலே இருக்குமானால்

''கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு'', அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக. இதுதானே பாண்டிய மன்னனது கட்டளை. அதுவும் ஊடல் கூடல் உணர்ச்சி கலந்த நேரம். மன்னன் கட்டளை அநீதியானதல்ல. கூறிய இடத்தாலும், கூறிய வகையாலும் குற்றங்காணலாமா? இவைபற்றியெல்லாம் சிறிது ஆராய்ச்சியுறவே ''கண்ணகையும் தன்னகையும்'' எனும் நூலை வெளியாக்கியுள்ளேன்.

# சங்க இலக்கியம் ஒரு துளி

சட்டம்பியார்

பொதுவாக உலகில் உள்ள மொழிகளில் முதலில் தோன்றுவது, நாவல் என்றும், பின்னர் சிறுகதை என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆனால் தமிழ் மொழியிலே முதலில் தோன்றிய நாவல்கள் இல்லை. கம்பராமாயணம், மகாபாரதம் போன்றன வட மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. பெரியபுராணம் தமிழ் நூலென்றாலும் அது காலத்தாற் பிந்தியது.

சங்க காலத்தில் தோன்றிய அகநானூறு, புறநானூறு என்பனவெல்லாம் சிறுகதைகளின் தொகுப்பே. ஆகவே தமிழில் சங்க இலக்கியம் முழுவதும் சிறுகதைகளின் தொகுப்பே. அவற்றிற்கு முன் நெடுங்கதைகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகையால் மொழிகளுள் முதலில் தோன்றுவது நாவல் இலக்கியம் என்ற முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

தமிழ் மொழியில் மட்டுந்தான் பொருளிலக்கணம் என்று ஒன்று உண்டு. மற்ற மொழிகளுள் அவ்விதம் இல்லை. இலக்கணம் என்றவுடன் முதலில் நாங்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். 'அசுவ இலக்கணம்' என்று ஒன்று உண்டு. அது குதிரையைப் பற்றி, அவற்றின் குணம், பலம், முதலியவற்றை அறிந்து கொள்வதற்காக எற்பட்ட நூல், அதைப் பார்த்துக் குதிரை ஒன்றைச் செய்வதற்காக ஏற்பட்டதன்று. அதே போலத்தான் எல்லா இலக்கண நூல்களும், இலக்கியங்களின் பொருளை இலகுவாக அறிந்து கொள்வதற்காக உபயோகப்படும்.

பொருள் இலக்கணத்தைத் திணை என்றும், துறை என்றும் பிரித்திருக்கிறார்கள். ஒரு செய்யுள் என்ன திணை என்றும், என்ன துறை என்றும் தெரிந்து விட்டால், அச்செய்யுளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது, என்று அதைப் படிக்கின்றவனுக்குச் சுருக்கமாகத் தெரிந்து விடும். இதற்காகவே பொருளிலக்கணம் உபயோகப்படுகிறது.

உதாரணமாக ஒரு சங்கச் செய்யுளைப் பார்ப்போம். குறுந்தொகை என்ற நூலில், குறிஞ்சித் திணையில் 'செவிலி நற்றாய்க்கு உரைத்தது' என்ற துறையில் வந்தது. சங்கச் செய்யுள்கள் எல்லாம் ஒவ்வொரு சிறுகதைகளென்று முதலிலே குறிப்பிட்டேன். இதோ! அச்சிறுகதை.

ஒரு பெண் தனிக் குடித்தனம் நடத்த தனது கணவனுடன் சென்று விட்டாள். சில நாட்களின் பின் நற்றாய் தனது மகள் எப்படிக் குடித்தனம் நடத்துகிறாள்; என்று பார்த்து வரும்படி செவிலித்தாயை ஏவுகிறாள். அப்பெண் தாயுடன் இருக்கும் பொழுது சமையலறைப் பக்கம் போகாது செல்லமாக வளர்ந்தவள். நற்றாய் என்றாள் பெற்ற தாய், செவிலிதாய் என்றால் வளர்த்ததாய் - ஆயா.

நற்றாய் கேட்டபடி செவிலித்தாய், தங்களின் பெண்ணின் தனிக்குடித்தன வாழ்க்கையைப் பார்த்து வந்து நற்றாய்க்குக் கூறுகிறாள். இது கதைக்கு முன்னுரை. திணையும் துறையும் கூற முன்னுரை கூறப்பட்டமைக்குச் சமன்.

செவிலித்தாய் சென்ற சமயம் அவர்கள் பெண் சமையலில் ஈடுபட்டிருந்தாள். செவிலித்தாய் அவள் சமையல் செய்யும் பக்குவத்தைப் பார்த்துக் கொண்டு ஒரு பக்கமாக இருந்தாள். அப்பெண் தனது கணவனுக்கு மோர்க்குழம்பு வைத்தாள். கட்டித்தயிரை ஒரு சட்டியிலிட்டுக் கையால் பிசைந்து கொண்டிருக்கிறாள். மற்றக் கையால் அடுப்பிலே மசாலைச் சாமான்களைப் போட்டு அகப்பையால் கிளறிக் கொண்டிருக்கிறாள். அடுப்பில் கிளறுகிற தாளிதம் சரியான பதத்திற்கு வந்ததும், பிசைந்த தயிரை அதில் கொட்டிக்கிறள வேண்டும். இதில் பிரதான விஷயம் தக்க தருணத்தில் தயிரை அதிலே கொட்டுவதுதான். முந்தினால், பிந்தினால் அதன் ருசி கெட்டுவிடும்.

இத்தருணத்தில் அவளின் மார்புச் சேலை நழுவுகிறது. வழுகிய சேலையை எந்தக் கையால் எடுத்துச் செருகுவது என்ற பிரச்சினை. ஒரு கை தயிர்க்கை, அதை உபயோகித்தால் அவளுடைய பட்டுச்சேலை பழுதடையும். தாளித்த கையை எடுத்தால் தாளிதம் பழுதாகிவிடும். அவள் பட்டுச்சேலை பழுதடைந்தாலும் பரவாயில்லை குழம்பு பழுதாகக் கூடாதென்ற கருத்தில் தயிர்க்கையாலேயே சேலையை எடுத்துச் சீர் செய்தாள்.

இவ்விதம் அவள் செய்த மோர்க்குழம்பைக் கணவனுக்குப் பரிமாறும் பொழுது அவன் 'மிகவும் நல்லாயிருக்கிறது' என்று சொல்லிச் சொல்லிச் சாப்பிடுகிறான். கணவன் 'நல்லாயிருக்கிறது' என்று கூறிச் சாப்பிட்ட பொழுது அவள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்த பொழுதிலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அவள் மகிழ்ச்சியைக் காட்டினால், அவன் அழகை இரசிப்பதில் உண்பதை மறந்து விடுவான். அதனால் ''என்ன நீங்கள் இன்று சாப்பிடுவது போதாது'' என்பது போலச் சிணுங்கிக் காட்டினாள். ஆனால் அவளுடைய மகிழ்ச்சி உள்ளத்தில் பொங்கிப் பிரவாகிப்பதைக் கூர்ந்து பார்த்தால் தெரியும்.

நீண்ட கதைகளென்றால் என்ன, சிறு கதைகளென்றால் என்ன? இலங்கியங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு உயிர் நிலையம் உண்டு. அரிச்சந்திர புராணத்தில் 'கதி இழக்கினும் கட்டுரை இழக்கலேன்' என்பது உயிர்நிலையம். இராமாயணத்தில் 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்பது உயிர் நிலையம். அது போல நான் மேலே குறிப்பிட்ட சிறுகதையாகிய சங்கச் செய்யுளுக்கு 'நுண்ணிதின் மகிழ்ந்தற்றுண்ணுதல் முகனே' என்பது உயிர்நிலையம். இக்காட்சியின் உயிர் நிலையத்தைப் பல உரைகாரர்கள் எடுத்துக் காட்டத் தவறி விட்டனர். அதனால் இச் செய்யுளை விளக்கினேன். அச் செய்யுள்;

'முளிதயிர் பிசைந்த காந்தன் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கன் குய்ப்புகை கழுமத்
தான் துழந்து அட்ட தீப்புளிப் பாகர்
இனி எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தற் றுண்ணுதல் முகவே''

# நகர்வின் தாகம்

க. கந்தசாமி,
திட்டமிடல் பணிப்பாளர், கல்வி அமைச்சு.

''நாம் எல்லோரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும், 31.10.95 காலை விடியுமுன் கைதடிப் பாலத்திற்கு அப்பால் நிற்க வேண்டும் ''என்ற செய்தி உறுதியாகிறது'', ரவுனில் சனம் சரியத் தொடங்கிவிட்டது. நாமும் வீட்டை விட்டு வெளியேற வேண்டுமென முடிவாக்கினோம். மாலை 7.30 மணியளவில் வள்ளுவன் வந்து ''இரவே போகட்டாம் ஆமி எந்நேரமும் வரலாம்'' சிறி சொன்னது என்று விட்டு உடனே திரும்புகிறான். எதிர்பாராத ஒரு முடிவு என்ன செய்வது? மணியண்ணன் வீட்டே போகிறேன். அவர்களும் இதைப்பற்றியே கதைத்துக் கொள்கிறார்கள். அவசரப்பட வேண்டாம். விடியற்புறமும் போகலாம். ஆயத்தம் செய்யுங்கள்'' என்று சொல்லிவிட்டு வருகிறேன். ஈசுவிற்கும் விபரம் சொல்கிறேன் வேணு ''கெதியாய்ப் போவோம் என்கிறார்''.

என்னத்தை எடுப்பது? எதை விடுவது? யூரியா பாக்கில் உடைகளைப் போடுகிறேன். ஈசு நிதானமாக உடுப்புகளைத் தெரிந்து தருகிறாள். லாச்சிக்குள் இருந்தவற்றை சீலைப்பைக்குள் கொட்டுகிறேன். சட்டி, முட்டி சில சாக்கில் கட்டுகிறேன். 8.00 மணி ஆகிறது. கராச் பக்கம் போகிறேன். முக்கியமானவற்றை எடுத்துக் கட்டிவிட்டேன்.

''நீங்கள் றெடியோ? நாங்கள் றெடி'' என்கிறார் மணியண்ணன். அப்பப்பா ''நான் றெடியில்லை'' அவசரப்படுகிறேன். ஈசு கெட்டிக்காரிதான்' பதறாமல் எல்லாம் செய்கிறாள். சாவிகள் ஓட்டோச்சாவி, ஸ்கூட்டர் சாவி, சைக்கிள் சாவி எல்லாவற்றையும் கேட்கக் கேட்க ஒழுங்காகத் தேடித் தருகிறாள். ஓட்டோவை வெளியே விட்டோம். ஸ்கூட்டரை உருட்டி அதன் பின்னால் விட்டோம். வேணுவின் மோட்டார் சைக்கிள் அடுத்து நிற்கிறது. மணியண்ணன் வீட்டு முன்னால் மாட்டு வண்டி; அதன் பின் பால் மாடுகள் இரண்டு; அடுத்து நான்கு பேர் சைக்கிளில் சாந்தி, உமா, ரஞ்சி, சிவா கடைசியாக இன்னுமோர் மோட்டார் சைக்கிள். எல்லாம் பயணம் போக றெடி. ஆட்டோவில் மணியம் அன்ரி, ரஞ்சியின் அச்சுதன் ஈசு ஏறி இருக்கிறார்கள். நான் சாரதியாக இருக்கிறேன். கேட்பூட்டியாச்சு' பயணம் ஸ்ராட்டாச்சு. நேரம் 8.30 மணி. சிரித்தே செல்கிறோம். பலாலி றோட்டில் ஏறுகிறோம். வரிசை வரிசையாகச் சனம்; வேகமாகப் போகமுடியாது. எனது ஆட்டோ நின்று விட்டது. வேணுவைக் கூப்பிடுகிறேன். வேணு ஸ்ராட் பண்ணித் தருகிறார். பின்னரும் அது நிற்கிறது. ''அங்கிள் நான் ஆட்டோவைக்கொண்டு வாரேன் நீங்கள் எனது மோட்டார் சைக்கிளில் போங்கோ என்கிறார்'' மோட்டார் சைக்கிளையும் பொருட்களையும் ஏற்கிறேன். பாரம் கூட' பலன்ஸ் பண்ணுவது கஸ்ரம்தான் என்றாலும் நம்பிக்கையோடு ஓடுகிறேன். ''எல்லாம் கைதடியில் காண்போம்'' என்று கூறிப் போகிறோம். நல்லூர் கோவிலடியில் மோட்டார் சைக்கிள் ஒருவகையான சப்தம்

தருகிறது. சோக்கை ஓஃப் பண்ணுகிறேன். சைக்கிள் எஞ்சின் நிற்கிறது. அடிக்கிறேன் ஸ்ராட் ஆகிறது. ஓடுது, நிற்குது. எனக்கு யோசனை அடிக்குது. ''வேணு வேணு'' என்று கூப்புடுகிறேன். அவர் போய்க் கொண்டே இருக்கிறார். செம்மணியில் பிடிக்கலாம். நின்று நின்றாவது ஓடுவோம் என எண்ணி ஓடுகிறேன். நல்லூர் முடக்கு தாண்டி விட்டது. வேணுவைக் காணவில்லை சன நெருக்கடி கூடிவிட்டது. அசையவும் முடியாது.

மோட்டார்ச் சைக்கிளை மெக்கானிக்கிடம் காட்டிச் செல்வோம் என்று சுதாவீடு செல்கிறேன். 'நாலு மணிக்கு நாவற்குழிக்குப் போனவர் என்றும் இன்னும் வரவில்லை. எல்லாரும் போகுதுகள் நாங்கள் நிற்கிறம்'' என்கிறார் சுதாவின் மனைவி. ''பயப்பிடாதையுங்கோ அவர் வருவார், இதையும் ஒருக்கால் பார்த்துவிட்டு எல்லோரும் ஒன்றாகப் போவம்'' என்று சொல்லி இறங்குகிறேன். சைக்கிள் சரிந்து விட்டது. ஓடி வந்து சைக்கிளைப் பிடிக்கிறார் அவர் தாய். சைட் ஸ்ராண்டில் நிற்பாட்டி விட்டு தேநீர் தாருங்கோ என்று கேட்டு வாங்கிக் குடிக்கிறேன்.

நேரம் மாலை 10.00 மணி ஆகிறது. சன இரைச்சல் கூடுகிறது. நெருக்கம் மோசமாகிறது. ஷெல் அடிச் சத்தம் கிட்டக் கேட்கிறது. றோட்டில் போகலாம் வரமுடியாது. சுதா வந்தபாடில்லை. சுதாவின் மகள் பயத்தில் அழுகிறாள். அவர் குடும்பமே ஆமியிடம் அம்பிடப் போகிறது என்று பதறுகிறது.

பக்கத்துக் கராச்சில் யாரும் நின்றால் சைக்கிளைத் திருத்திவிப்போம் என்று அங்கு செல்கிறேன். அண்ணர் ஒருத்தர் இருந்தார். ''சுகன் எங்கோ போய் விட்டான் வரட்டும் பார்ப்போம்'' என்றார். அவன் வரவைக் காத்து நிற்கிறேன். மனம் வீட்டை நோக்கியே ஓடுகிறது. ஞானேஸ்வரன் வைத்த ஆறு பெட்டிகளில் ஒன்றுமே எடுத்துவரவில்லை. இதனால் மனம் குறுகுறுக்கிறது. மாஸ்ரர் ஒருவர் வந்தார். அவரின் சைக்கிளில் வீட்டிற்குச் சென்றேன். வீட்டு வாசலில் ஒரு பெரிய பெட்டி நிரம்ப அலுமினியம், எவர் சில்வர் பாத்திரங்கள் இருந்தன. யாருடையது? ஞானேஸ்வரன் தான் வந்து வைத்திருக்க வேண்டும் என்று எண்ணி அதையும் எடுத்து உள்ளே வைத்துவிட்டு அவரின் பாக்குகளில் இரண்டை எடுத்துக் கொண்டு வருகிறேன். ஏனையவற்றைப் படிக்கட்டின் கீழ் தூக்கி வைக்கிறோம். மீண்டும் சுதா வீடு வருகிறோம். சுதா வரவில்லை. மனைவி பெரும் குரல் விட்டு அழுகிறாள். சுகன் வந்து சைக்கிளைத் திருத்துகிறார். 'எண்ணை அடைப்புத்தான் சேர். கவனமாகப் போங்கோ இனிமேல் நிற்காது' என்கிறார். நன்றியுடன் வெளிக்கிடுகிறேன். முத்திரைச் சந்தியில் பெருங் கூட்டம், போக முடியாது றோட் புளொக்காகி விட்டது. திரும்பி அரியாலை, நோக்கிப் போகிறேன். சனம் அவ்வளவு இல்லை. கனகரட்ணம் ம.வி. தாண்டி சிவியார் சந்தி வருகிறேன். போக்கில்லை றோட்டு புளொக்காகி விட்டது. சன நெரிசலிலே நெரிகிறேன். மழை தூமிக்கிறது. தொப்பியைப் போடுகிறேன். சனம் மெல்ல மெல்ல அசைகிறது. சற்றுப் பின்னர் இரவு 11.30 இருக்கும். அசையவே முடியவில்லை. ''அண்ணை எஞ்சினை ஓஃப் பண்ணு புகை கண்ணை எரிக்குது'' என்று சப்தம் போடுகிறார்கள். எஞ்சினை ஒஃப் பண்ணி விட்டு சைக்கிளை காலால் உதைந்து தள்ளுகிறேன். அடி வயறு நோகிறது. மீண்டும் எஞ்சினை ஸ்ராட் பண்ணுகிறேன். ''நிற்பாட்டுங்கோ மனிதத்தன்மை இல்லையோ'' என்கிறார்கள்.

நிற்பாட்டி இனிமேல் ஸ்ராட் பண்ணுவதில்லை என்று தீர்மானிக்கிறேன். சைக்கிளோ பெரிது வேணுவின் சூட்கேஸ் இரண்டும் பாரமானவை. கான்டிலில் இன்னொரு பாக். இவற்றுடன் தள்ளாடுகிறேன். கட்டி இருந்த குடையும் களவு போய்விட்டது. சுற்றுமுற்றும் பார்க்கிறேன். குடை இல்லை. கவலைத்தான், போகட்டும் என்று பொருட்படுத்தாது சைக்கிளை வலிக்கிறேன்.

''ஐயோ போங்கோ போங்கோ'' என்று பின்னால் சத்தம். 'கீதா-ஓம் !' 'சாரதா-ஓம்!' 'தம்பி-ஓம்!' ''அப்பா எங்கே?'' ''நான் இங்கே நிற்கிறேன்'' என்று ஒரு குடும்பச் சத்தம். பத்து பதினைந்து நிமிடங்களுக்கு ஒருக்கால் இந்த குடும்ப வரவு கூப்பிடப்படும்.

''ஐயோ அப்பா, ஐயோ அப்பா'' என்று இரண்டு குழந்தைகள் சத்தம் போடுகின்றனர். ''அப்பா சுகமாக வாறார் பயப்படாதையுங்கோ'' என்று தகப்பனாரை ஏற்றி வந்தவர் கூறுகிறார். கடும் வருத்தக்காரன் இவர் சாய்மனைக் கதிரையில் இருத்தி சைக்கிளில் கட்டி தள்ளிக் கொண்டு வருகிறார்கள். சன நெருக்கடியில் அவர் மறைய குழந்தைகள் கத்தத் தொடங்குவார்கள்.

தடி வைத்து சூட்கேஸை சாய்மனையாகக் கட்டி வயது வந்தவர்களை இருத்தி உருட்டி வந்த சைக்கிள்களில்


மயங்கி விழுந்தவர்களும் உண்டு. மயங்கியவர்களை ''களை தெளிய வாருங்கோ'' என்று றோட்டோரத்தில் விட்டு வந்தவர்களும் உண்டு.

''ஐயோ அம்மா கைவலிக்கிறது'' - ''புத்தகங்களைக் கொண்டு வர வேண்டாம் என்றேன் கேட்டியே?''

''அம்மா தொண்டை காயுது தண்ணி'' - ''கொஞ்சம் பொறு அண்ணை வரட்டும்''

''அப்பா வயலினைப் பிடியுங்கோ என்னால் கொண்டு வர முடியாது'' - ''உது வேண்டாம் என்றேன் கேட்டியே'' என்று பாடசாலை சிறுவர். பெற்றோர் கதைவழி பல. அவர்கள் களையில் அழுது கொண்டே வருகிறார்கள்.

என் முன்னால் ஒரு எழுபது வயதுப் பெண். வயதான தன் கணவன் தோள் மேல் கைபோட்டபடியே இழுபட்டுப் போகிறார். கணவன் களைத்து விட்டார். மெல்ல மெல்ல நடக்கிறார். பொம்மா இரைச்சல் கேட்டு விழுந்தே விட்டார். மனைவியால் தூக்க முடியவில்லை. பக்கத்தில் நின்றவர் தூக்கி விடுகிறார். சொக்கில் தடவி ''பயப்பிடாதையுங்கோ மெல்ல நடவுங்கோ'' என்று கிழவி சொல்கிறார். பார்க்க எனக்கோ மேல் சிலிர்க்கிறது. ''நில்லுங்கோ தேநீர் குடியுங்கோ'' என்று ஆதரவு கொடுக்கிறேன். குடித்ததும் தெம்புடன் நடக்கிறார் தோமஸ். மோட்டார் சைக்கிளை கொஞ்சம் விரைவாக உருட்ட இடம் வருகிறது, உருட்டுகி றேன். என் முன்னால் தொப்பென்று ஒரு பெண் மயங்கி விழுகிறார். பக்கத்தில் நின்றவர் தூக்குகிறார். ''ஐயோ, அம்மா அம்மா'' என்கிறாள். அவர் மகள். தாய்க்குப் பேச்சு மில்லை, மூச்சுமில்லை. ஒதுங்கி சனம் போகுது. பெருமூச்சு டன் நானும் போகிறேன்.



''மோகன் - ஓம்' 'யோகன்-ஓம்' 'மோகனா-ஓம்' 'சோபனா-ஓம்' அப்பா எங்கே? ''இங்கே நிற்கிறேன்'' 'சாந்தி-ஓம்' இன்னொரு தாய் பெயர் கூப்பிடுகிறார். வரவு உறுதி, குடும்பம் மெல்ல மெல்ல நகருகிறது. ஆளையாள் பார்க்கமுடியாது. குரல் மட்டும் கொடுக்கலாம். இப்படிப் பல குடும்ப இடாப்பு கூப்பிடப்படுகிறது. நேரம் அதிகாலை 2.00 மணி. விடியற்புறம் அரியாலை குளத்தடியில் நிற்கிறோம். லொறிகள், லான்மாஸ்டர், கார் எல்லாம் புகைத்தபடி றோட்டை மூடி நிற்கின்றன. ஒரு மணித்தியாலம் எந்த அசைவுமில்லை. அசையாத நேரம் ஓலம் தான் கூட. ஏதோ ஒருவருக்கு ஒருவர் துணை நிற்கிறார்கள். நானோ தட்டத்தனியே. 'கும்' இருட்டு முகம்பார்த்து ஆட்களை அறிந்து கொள்ளவும் முடியவில்லை. களை எடுக்கிறது. தலை சுத்துகிறது. என்ன செய்வதென்று கான்டிலில் தலையை வைக்கிறேன். கண்ணை மூடுகிறேன். உலகமே சுழல்கிறது. தொண்டை வரள்கிறது. இருமலை வருவித்து உமிழ்கிறேன். 'போங்கோ, போங்கோ' சனம் நகர்கிறது, நானும் நகருகி றேன். சரிந்து விழ முடியாது. அக்கம், பக்கம், பின், முன் எல்லாம் சனம்.

களைத்த சனம் ஓரமாக ஒதுங்கி ''நாளை போவோம்'' என்று விலகுகிறார்கள். நித்திரைத் தூக்கத்தில் சைக்கிளோடு சைக்கிள்கள் கொழுவுப்படுகின்றன. லைன் மாறி தூங்கி விழுகிறார்கள். இதற்கிடையே சனத்துக்குள் சில சண்டைகள். ஆனால் கைகலப்பு ஏதும் எழவில்லை.

எனக்குமோ நித்திரை சுழட்டுகிறது. பாக்கில் இருந்த பேரிச்சம்பழம் ஞாபகம் வருகிறது. எடுத்து வாய்க்குள் போட்டு உமிழ்கிறேன். ஆ! என்ன ஆறுதல். கால் இரண்டும் நன்றாக உளைகின்றன. தூக்கி வைக்க முடியவில்லை. ஒரு கணம் ''என்ன செய்யப் போகிறேன்'' என்று யோசிக்கிறேன். மார்பு அடைக்கிறது. போய்ச்சேர மாட்டேன் என்று முடிவாக்குகிறேன். மெல்ல மெல்ல ஓரத்துக்கு சைக்கிளை உருட்டி எடுத்து விட்டேன். குறுக்கொழுங்கைக்குத் திருபபினேன். எட்வேட்டர் வீட்டை போவதற்கு சைக்கிளை ஸ்ராட் பண்ணுகிறேன்.

நேரம் காலை 6.00 மணி ஆகிறது. தேநீர் சீனியுடன் குடிக்க வேண்டும் என்று அவாப்படுகிறேன். அங்கு வீடு நிரம்ப ஆக்கள். முகம் கழுவ முடியாது, தேநீரும் குடிக்க முடியாது. வாய்க்கவில்லை என்று நினைத்துக் கொண்டு, சூட்கேஸ்களை இறக்கிக் கட்டுகிறேன். காண்டிலில் பாக்கை வைத்து இளைக்கயிறால் கட்டுகிறேன். மீண்டும் கண்டி றோட்டை அடைய வருகிறேன். வயல் தண்ணீரில் முகத்தை கழுவுகிறேன். விடிந்து விட்டது. யேசுவின் சொரூபத் துக்கு அண்மித்து நிற்கிறேன்.

மழைத் தூறல் மெல்ல விழுகிறது. ஏதோ களை தீர்ந்த மாதிரி. றோட்டில் ஏறி சைக்கிளை வலித்துச் செல்கிறேன். லீவு வரவர முந்திப் போகிறேன். ஒரு 200 யார் சென்றிருப்பேன். வாகனங்கள் போகுது, ஆட்கள் போக இடமில்லை. பலர் வயல் வரம்பு வழியாகப் போகிறார்கள். சில மோட்டார் சைக்கிள்களும் போகுது. அப்படிப் போனால் கெதியாகப் போய்விடலாம் என்ற எண்ணம், மனம் என்னையும் தூண்டுகிறது. 'பாரத்தைத் தள்ள மாட்டேன்' என்று தயங்குகிறேன் ''நீங்கள் உதுக்குள்ளாலை போகமாட்டீர்கள்'' என்று என்னைப் பார்த்து ஒருவர் சொல்கிறார். றோட்டில் போவம் என்று முடிவாக்கி நிற்கிறேன். 8.30 காலை. கடும் வெயில், முகம் எரியுது, மழைமேகம் கொடூர சூரியன். உமிழ ஒன்றும் இல்லை. உமிழ் நீர் மட்டும் தான். அது ஊறித்தந்தது. உமிழ் நீர் அருமை அப்பாடா இன்றுதான் உச்சமாக உணருகிறேன். ஓடும் வாகனத்துக்குப் பின்னால் கொஞ்சத் தூரம் ஓடுகிறேன். 50 யார் வரும். மீண்டும் புளொக். வாகனவரிசையை விட்டு சனக் கூட்டத்தில் சேருகிறேன். மெல்ல நகருகிறேன்.

பக்கத்தில் வந்தவர் கைவைத்து சைக்கிளைத் தள்ளித்தந்தார். மழை பெய்கிறது. தொப்பியைக் கழட்டினேன். நாக்கை வெளியே நீட்டி மழைத்துளி கொஞ்சம் விழுங்கினேன். தண்ணீர் விடாயோ அடங்கவில்லை. நனைந்த சேட்டை சூப்பி விழுங்குகிறேன். களை ஓரளவு தீருகிறது. மெல்ல நகருகிறோம். மீண்டும் மழை வெய்யில் அகோரமாகிறது. மேல் புழுங்குகிறது, தாகம் எழும்புகிறது, சுற்றிப் பார்க்கிறேன். பழகிய முகங்கள் சில தெரிகின்றன. ''தண்ணீர் வேண்டுமா சேர்'' என்கிறார் ஒருவர். எனக்கு கண்ணீரே வருகிறது. ஒரு குழந்தைக்காகக் கொண்டு வந்த தண்ணீர் அது. கை நீள்கிறது என்றாலும் மனம் குறுகிறது. தாகமோ தாங்க முடியவில்லை. கை நீட்டி வாங்கி வாயை நனைத்துக் கொண்டேன். பிள்ளையோ என்னைப் பார்த்துச் சிரிக்குது. தாயோ பதிலுபகாரம் செய்த மாதிரி முகம் காட்டுகிறார். எப்போ செய்த உதவி இன்று தாக சாந்தியாகிறது.

எனக்கோ தாகம் தணியவில்லை. வேர்வை சொரிகிறது. நெஞ்சம் எரிகிறது. மேகம் கறுக்கிறது. மழை இருள் மீண்டும் பரவுகிறது. மீண்டும் மழை பொழியத் தொடங்குகிறது. ஒரு புதினமான நாள் இன்று, தாகத்திற்குத் தண்ணீர் வேண்டும் வேளை மழையே குடி நீராகிறது. மழைபெய்யப் பெய்ய, குடையில் ஏந்திக் குடிக்கிறார்கள். சட்டியில் பிடித்துக் குடிக்கிறார்கள். கையில் ஏந்திக் குடிக்கிறார்கள். எல்லோருக்கும் முகம் மலர்கின்றது, களை தீர்கின்றது, உசார் எழுகின்றது.

மழை நின்று விட்டது. ''ஐயோ என்ரை பிள்ளை'' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்கிறது. எல்லோரும் திரும்பிப் பார்க்கிறார்கள். மழை படாது சீலையால் சுற்றி வைத்த பத்து நாள் குழந்தையின் மூச்சு அடங்கிப் போச்சுது. தகப்பனார் செய்வதறியாது தவிக்கிறார். ''அம்மா பிள்ளையோடு லொறிக்குள் ஏறு'' என்கிறார் ஒருவர். லொறிக்காரனும் இடம் கொடுக்கிறான். ''சுற்றைக் கழட்டி பிள்ளையின் மூக்கில் வாயை வைத்து உறிஞ்சு'' என்கிறார் இன்னொருவர். உடனே அப்படிச் செய்கிறார் தாய். நல்ல காலம் பிள்ளைக்கு மூச்சு வந்துவிட்டது. தாய்க்கும் லொறியில் லொறி சீற் ஆனால் அசைய முடியாது.

மோட்டார் சயிக்கிளைத் தள்ளுகிறேன். காற்சட்டையின் பின்புறம் ஈரலிக்கிறது. தண்ணீர் என்று கையால் துடைக்கிறேன். ஒரு விதமான உணர்வு கைவிரலைப் பார்க்கிறேன். விரலில் இரத்தம். கையால் தடவிப் பார்க்கிறேன். மூலம் வெளியே வந்த மாதிரி இருக்கிறது. கனநேரம் முக்கி முக்கித் தள்ளினபடியால் மூலம் உரஞ்சுப்பட்டு விட்டது. அதனால் வீங்கி விட்டது என்று விளங்குகிறேன். கையால் மூலத்தை தடவிப் பார்க்கிறேன். ஏதோ வித்தியாசம் இருக்கிறதை உணருகிறேன். வீட்டே போய்ப் பார்ப்போம் என முடிவாக்கி கான்டிலைப் பிடிக்கிறேன். மீண்டும் வலிக்கிறேன். 2 யார் தூரம் முன்னேறி விட்டேன். 'விழிவிடு வழிவிடு' ''குண்டு போடப் போகிறான்'' ''வாகனங்கள் போகட்டும்'' என்ற கோசம் எழும்புகிறது. ''காயக்காறர், வருத்தக்காரர், இடம் விடு, இடம் விடு'' என்ற கட்டளைகள் பிறக்கிறது. வாகனங்கள் இரைச்சலோடு வருகின்றன. ஆளையாள் இடித்துத் தள்ளுகிறார்கள். றோட்டோரம் ஒதுங்குகிறார்கள்.

''மோட்டார் சயிக்கிளை எடு வழிவிடு'' உரப்பிக் கொண்டு ஒருவர் வருகிறார். எனது சைக்கிளைத் தள்ளுகிறார். சைக்கிள் சரிகிறது. பின்னே தூக்கிய மண்ணெண்ணைக் 'கான்' நெரிகிறது. எண்ணை ஓடுகிறது. என்னால் தூக்க முடியவில்லை, ''என்ன தம்பி இது'' - ''சொறி சேர்'' என்று தூக்கி ஓரமாகத் தள்ளி விடுகிறார் இன்னொரு தம்பி. அவசர வாகனங்கள் போகின்றன. மணித்தியாலம் ஒன்று ஓடி விட்டது, நின்ற நிலைதான்.

இளவெய்யில் கொதிவெய்யில் எல்லா வெய்யிலும் கணடு விட்டோம். நேரம் கிட்டத்தட்ட 11.30 மணி. பசியோ தோற்றவில்லை. உடம்பு சோர்கிறது. கால் தளர்கிறது. முன்னேற இயலாது தலையைக் கான்டிலில் வைக்கிறேன். ஏதோ உலகம் சுற்றுகிறது. இன்னும் சொற்ப தூரம்தான் போக வேண்டும். றோட்டோ ஏற்றம். சைக்கிளைத் தள்ள முடியவில்லை. உதவிக்கு வர யாரும் இல்லை. தனிமையை நினைக்க கண் கலங்குகிறது. ''போ போ'' என்கிறார்கள். முயன்று தள்ளுகிறேன். சைக்கிளோ உருளாதாம் ''அண்ணை ஒரு கை போட்டுத் தள்ளிவிடுங்கோ'' என்கிறேன் ''என்னையா உங்களுக்கும் இக்கதியோ'' என்று சொல்லி தள்ளிவிடுகிறார் ஒருவர். மெல்ல மெல்ல உருளுகிறது. ஏற்றம் பெரிது - லட்சம் சனம் - யார் உதவப் போகிறார்கள் - ஒருவரும் தெரிந்தவராக இல்லை. தூரத்தில் வள்ளுவன் நிற்பதைக் காண்கிறேன். ஆ! பெரிய சந்தோசம். அவரை கூப்பிடுகிறேன். என் குரல் கேட்டதும் திகைத்துப் போனான். ''சேர் என்ன பின்னுக்கு இரத்தமாக இருக்கு'' என்று கேட்கிறார். என்ன தெரியாது சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்து பாலத்தில் ஸ்ராட் பண்ணித்தா களைத்துப் போனேன் என்கிறேன்.

தைதடிப் பாலம் கழிந்தது. வள்ளுவன் நீதான் என் பயணத்தைத் தொடக்கியதும் முடித்ததும் என்று கூற, சிரித்தான். எனக்குமோ களையெல்லாம் தீர்ந்து தாகம் தாயகமாக மீண்டும் வருகிறது.

# நன்றி

மருதநிலா தமிலொளி பரப்ப அழகு தமிழில்
வாழ்த்துச் செய்திகளை வழங்கிய வடக்கு -
கிழக்கு ஆளுனர், பிரதி அமைச்சர், வன்னிப்
பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதம செயலாளர்,
கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின்
செயலாளர், நகரபிதா, அரசாங்க அதிபர்,
ஆகியோருக்கும்

நிலா அழகுற ஆக்கங்களை எழுதிய அறிஞர்-
கள், எழுத்தாளர்கள், கவிஞர்களுக்கும்,

அட்டையை அழகாக வரைந்து தந்த
ஓவியர் திலகம் ச. ஞானகுருபரன் அவர்கட்கும்,
உள் ஓவியம் வரைந்த எம். கே. எம். ஷகீப்
அவர்கட்கும்,

மருதநிலாவை நூலாக்கி உங்கள் கரங்களு-
க்கு கொண்டு வந்த கார்த்திகேயன்
பிறைவேற் லிமிட்டெட்டுக்கும் அதன் உத்தி-
யோகஸ்தர்களுக்கும் குறிப்பாக திரு. ந. குருபரன்
அவர்களுக்கும்,

இதயம் நிறைந்த நன்றிகள்

- மலர்க் குழு -

## குறிப்பு

